# T. N. L. A. Debates

OFFICIAL REPORT

VOL: XXXIX NO: 4 and 5

January 29th and 31

1983

D
V211,31 N83
N83.39.4 & 5
135973

D
V211,31 N83
N83-39-4 ஃ5
தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
135973
சென்னை-600 008.

## உள்ளடக்கம்

29—1—1983.


| | |
|---|---|
| | பக்கங்கள் |
| (1) வினாக்கள்—விடைகள் : | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 301—338 |
| (2) அறிவிப்பு : | |
| கைது செய்யப்பெற்ற உறுப்பினர்கள் விடுதலை | 338 |
| (3) கவன ஈர்ப்பு : | |
| திரைப்படங்கள் ஏற்றுமதி பாதிப்பு | 339 |
| (4) தகவல் கோரல் : | |
| (அ) முன் அனுமதியின்றி எழுப்பப்பெறும் பிரச்சினைகள் | 338—340 |
| (ஆ) அரசு சட்ட முன்வடிவுகள் உத்திரவுகள் தமிழிலே வெளியிடாதது | 340 |
| ) ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் தொடர்ச்சி | |
| திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் | 340—346 |
| திரு. மி. வின்சென்ட் | 346—352 |
| மாண்புமிகு திரு. இராஜா முகமது | 353—356 |
| திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் | 357—362 |
| திரு. ப. வெங்கட சுப்பிரமணியம் | 362—366 |
| திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டைமான் | 367—371 |
| டாகடர் கே. பி. இராமலிங்கம் | 372—375 |
| மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு | 375—381 |
| திரு. கே. ஆர். சுந்தரம் | 384—391 |
| திரு. வெ. அரங்கராசன் | 391—394 |
| திரு. பொ. உத்திராபதி | 394—399 |
| திரு. கோவைத்தம்பி | 399—403 |
| திரு. எஸ். ஆண்டித்தேவர் | 403—410 |
| திரு. த. மாரிமுத்து | 410—417 |
| திரு. ஏ. எம். சேதுராமன் | 416—418 |
| பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள் | 418 |


128-278—1

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சனிக்கிழமை, 1983, சனவரி 29.

தை 16, துந்துபி—திருவள்ளுவர் ஆண்டு 2014

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்

தந்நோய்போல் போற்றாக் கடை.''

பிற உயிருக்கு உண்டான துன்பத்தைத் தமக்கு நேர்ந்த துன்பம்போல் எண்ணி அந்த உயிரைக் காப்பாற்றாவிட்டால், ஒருவர் பெற்றுள்ள அறிவினால் உண்டாகக் கூடிய பயன் ஒன்றும் இல்லை.

(1) வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

சண்முக நதி நீர் மின்திட்டம்.

* வினா எண் 41—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி சண்முக நதி நீர் மின் திட்டம் தற்பொழுது எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) அதற்கு மதிப்பிடப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) அது எத்தனை மெகாவாட் சக்தி உள்ளது ?

(ஈ) மைய அரசு அதற்கு அனுமதி கொடுத்து விட்டதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) மற்றும் (ஈ): இத்திட்டத்திற்கான ஒப்புதலை மத்திய அரசு இன்னமும் கொடுக்கவில்லை. ஆனாலும், தமிழ்நாடு அரசின் ஒப்புதலுடன் இத்திட்டத்திற்கான ஆரம்ப வேலைகள், மின் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஆ) 1978-79 ஆம் ஆண்டு மதிப்பீட்டின்படி ரூ. 2051 லட்சங்களாகும்.

(இ) 30 மெகாவாட் உற்பத்தித் திறன்.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1978-79 ஆம் ஆண்டு மதிப்பீட்டின்படி 20 கோடியே 51 இலட்சம் ரூபாய்த் திட்டம் என்று சொன்னார்கள். 1978–79 ஆம் ஆண்டிலிருந்து மத்திய அரசு இதற்கு அனுமதி கொடுக்காததன் காரணம் என்ன என்பதை அரசு அறிவிக்குமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, 1978–79 ஆம் ஆண்டிலிருந்து அல்ல; இந்தத் திட்டம் 1972 இல் அனுப்பப்பெற்றது. தொழில் நுட்ப ரீதியாக சாத்தியக்கூறுகள் இருந்தாலும் சண்முக நதி என்பது காவிரியாற்றுப் படுகையில் வருகின்ற ஒரு துணைநதி என்பதால் இன்னும் அனுமதி கிடைக்கப் பெறவில்லை.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த சண்முக நதி நீர்மின் திட்டம் மிகவும் முக்கியமான திட்டம். இன்றைக்கு நமக்கு ஏற்பட்டிருக்கின்ற மின்சார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு இது உதவியாக இருக்கும். அதோடு மேற்கு நோக்கிப் பாயும் நதிகள் சம்பந்தப்பட்ட பிரச்னையில் இது அடங்கியிருப்பதாகச் சொன்னார்கள். அப்படியிருந்தும் இந்த வேலைகளை நாம் ஆரம்பித்திருப்பது நல்ல அம்சம்தான். இதுபோலத் தமிழ்நாட்டில் எத்தனை நீர் மின் திட்டங்கள் மத்திய அரசின் அனுமதி கிடைக்காமல் இருந்து வருகின்றன என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, எத்தனை திட்டங்கள் என்ற விவரத்திற்குத் தனிக் கேள்வி போட வேண்டும். ஆனால் இது மேற்கு நோக்கிப்பாய்கின்ற ஆறுகளோடு சம்பந்தப்பட்டது அல்ல. இத் திட்டம் காவிரியாற்றுப் பள்ளத் தாக்கில் உள்ளதால் கேரளம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களின் ஒப்புதலை மத்திய மின் அதிகார மன்றம் கோரியுள்ளது. நாம் சொல்வது, சண்முக நதி முழுக்க முழுக்கத் தமிழகத்தில் இருக்கிறது. கேரளம், கர்நாடகம் ஆகிய மாநிலங்கள் இந்தத் தண்ணீரைப் பயன்படுத்துவதற்கான வழி இல்லை. போகின்ற தண்ணீரை அணை கட்டி மின் உற்பத்தி செய்வதில் என்ன தவறு என்று எழுதியிருக்கிறோம். அதற்கும் இன்னும் அனுமதி வரவில்லை.

**திரு. என். வரதராஜன் :** பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டிலே மின் பற்றாக்குறை ஒரு அதிர்ச்சி வைத்தியம் மாதிரி தமிழ்நாட்டு மக்களுக்குக் கிடைத்திருக்கிறது. 1970, 1972-இலிருந்து சிறிய திட்டங்களைக் கூட மத்திய அரசு ஏற்க மறுக்கிறது. ஆகவே, இன்றைக்காவது மாநில அரசு ஹொகேனக்கல்லிலிருந்து சண்முக நதித் திட்டம் வரையில் எந்தெந்தத் திட்டங்களைச் சமர்ப்பித்திருக்கிறோம் என்பதை மக்களுக்கு அறிவிக்க முன்வருமா ? ஏற்கனவே நிறுத்தப்பட்ட சமயநல்லூர் மின் திட்டத்தை மீண்டும் புதுப்பிக்க முன்வருமா ?



**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, இது மிகவும் பெரிய கேள்வி. ஆகையினாலே இதற்காகத் தனிக் கேள்வி போட்டால் தான் விவரமாகப் பதில் தர இயலும். மின்சாரப் பற்றாக்குறை நமக்குப் பெரிய அதிர்ச்சி வைத்தியம் என்று சொன்னார்கள். அதிர்ச்சிதான் கிடைத்திருக்கிறதே தவிர இன்னும் வைத்தியம் கிடைக்கவில்லை.

## மின்துறை ஊழியர்களுக்கு பதவி உயர்வு அளிப்பது குறித்து

## நீதிபதி W. S. கிருஷ்ணசாமி நாயுடு கமிஷன் அளித்த பரிந்துரை.

* வினா எண் 42.—**திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீதிபதி W. S. கிருஷ்ணசாமி நாயுடு கமிஷன் தீர்ப்பின் அடிப்படையில் 124 மின்துறை ஊழியர்களுக்கு பதவி உயர்வு அளிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மின்துறை ஊழியர்களுக்கு பதவி உயர்வு கொடுப்பது பற்றி நீதிபதி டபிள்யு. எஸ். கிருஷ்ணசாமி நாயுடு கமிஷனின் பரிந்துரை மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று கோரி மின்வாரிய ஊழியரான திரு. ராபின்சன் என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்துள்ள ரிட் மனுவின் மீது நீதிமன்றத்தின் தீர்ப்பு இன்னும் வழங்கப்படவில்லை. நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய பின் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் அண்மையில் 21—1—8 அன்று இது விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது, ஆகையினாலே இதன்மீது மின் வாரியம் உரிய நடவடிக்கை எடுக்கும்.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தற்காலிக ஊழியர்களை நிரந்தரம் ஆக்குவதில் தமிழ்நாடு மின்சார அணைக்கட்டுத் தொழிலாளர் சங்கமும், தமிழ்நாடு மின்கழகத் தொழிலாளர் முன்னேற்ற சங்கமும் செய்த நிர்ப்பந்தத்தின் அடிப்படையில் அந்த வாரியத்தினுடைய ஆணைகளுக்கு முற்றிலும் முரணாக பதவி உயர்வு கொடுக்கப்பட்டது என்று தீர்ப்பிலே சொல்லி இருக்கிறார்கள். ஆகவே இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் அந்தப் பதவி உயர்வு பெறத் தவறியவர்களுக்கு பதவி உயர்வு கொடுக்கிற போது அன்றைய தேதியிலே இருந்து சம்பளம் கிடைப்பதற்கு வாரியம் பரிசீலிக்குமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முறைகேடு நடந்திருக்கின்றது என்பதுதான் கிருஷ்ணசாமி நாயுடு கமிஷன் அளித்துள்ள தீர்ப்பு. அதை எதிர்த்துதான் மேல் முறையீடு உயர்நீதி மன்றத்தில் செய்தார்கள். உயர்நீதி மன்றமும் அதைத் தள்ளுபடி செய்துவிட்டது. ஆகையினாலே இந்த முறைகேட்டை நிவர்த்திப்போம். ஆனால் அந்த நாளிலிருந்து சம்பளம் கொடுப்பது என்பது மின் வாரியத்தைப்பற்றி நன்றாக தெரிந்துள்ள நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் நிச்சயமாக பரிந்துரைக்கமாட்டார் என்று நம்புகிறேன்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி தினக்கூலிகளை நிரந்தரமாக்குவதற்காக வாரியம் 4-1-1972லே பிறப்பித்த ஆணையின்படி தமிழகம் முழுவதும் ஏறத்தாழ 9 ஆயிரம் பேர்கள் நிரந்தரமாக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்திலே நடந்த தவறைப்போல இந்த 9 ஆயிரம் பேர்களை நிரந்தரப் பணியாளர்களாக ஆக்குவதிலே, மற்ற பகுதிகளிலே ஏற்பட்டிருக்கிறதா என்பதை வாரியம் விரிவாக ஆய்ந்து முடிவெடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, எவ்வளவு பேர்கள் இத்தகைய உத்தரவின் மூலம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற விவரம் தற்போது என்னிடத்திலே இல்லை. இருந்தாலும் வளைந்த செங்கோலை நிமிர்த்துவதற்கு மின்வாரியம் வழி செய்யும்.

திரு. எஸ். இளையபெருமாள் ; தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது தவறுகள் நடந்திருக்கின்றன என்று சொன்னார்கள். இந்தத் தவறுக்குக் காரணமான அதிகாரிகள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அந்த அதிகாரிகள் எல்லாம் இன்னும் மின்வாரியத்தில் பணியாற்றுகிறார்களா அல்லது ஓய்வு பெற்றுவிட்டார்களா என்பது தெரியவில்லை. இருந்தாலும் அது பரிசீலிக்கப்படும்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அந்த மேல் ஆளியாறு மின் திட்டத்தில் தொழிலாளர்களை மின்திட்டம் முடிந்த உடனே வீட்டுக்கு அனுப்பும்படியான காரியத்தை அந்தக் காலத்திலே இருந்த அமைச்சர் அவர்களுக்கு எடுத்துக் காட்டி, எந்தவிதமான ரிட்ரென்ச்மென்டும் இல்லாமல் வேலை கொடுக்கவேண்டும் என்று கேட்டு, தற்போது தமிழகம் முழுவதும் அவர்களுக்கு வேலை கொடுக்கவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அது நல்ல ஏற்பாடு. அதன்படி கொடுத்திருக்கும்படியான லிஸ்ட்டிலே தவறு செய்திருப்பது தமிழ்நாடு மின்சார அணைக்கட்டுத்





தொழிலாளர் சங்கம் அல்ல. அது அதில் நியாயம் பண்ண வேண்டும் என்றுதான் கேட்டது. திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் குறிப்பிட்டது சரியல்ல. ஆகவே அந்தத், தொழிலாளர்கள் இன்றைக்கும் வேலை இல்லாமல்—மின்வாரியத் தலைவரின் தவறினாலே—இருந்து கொண்டிருக்கிறார்கள். அதை நிவர்த்திக்க அரசு முன்வருமா என்பதுதான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்; தலைவர் அவர்களே, தன்னிலை விளக்கத்திற்கு நன்றி.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, மின்வாரியம் செய்து இருக்கும்படியான தவறுக்கு, அந்த தவறைத் திருத்தும் பணியைச் செய்யாமல் இருப்பதை அரசு முன் வந்து செயல்படுத்துமா என்பதுதான் கேள்வி.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அவர் ஒரு சங்கத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். அதற்கு அவர் விளக்கம் சொன்னார். ஆகையினாலே மன்றத்திற்கு வேண்டிய தகவல் கிடைத்து விட்டது என்பதால்தான் தன்னிலை விளக்கத்திற்கு நன்றி என்று சொன்னேனே தவிர வேறல்ல. குறைபாடுகள் இருந்தால் நான் ஏற்கனவே சொன்னதைப்போல அவை நிவர்த்தி செய்யப்படும்.

## தூத்துக்குடியிலுள்ள டான்சி நிறுவனம்.

* வினா எண் 43—திரு. மு. அப்பாதுரை, திரு. ப. வெங்கட்டசுப்பிரமணியம்—மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியிலுள்ள டான்சி நிறுவனத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மதிப்பு எவ்வளவு?

(ஆ) அதனால் அரசுக்குக் கிடைத்த லாபம் எவ்வளவு?
(இ) அங்கு எவ்வளவு பேர் பணிபுரிகிறார்கள்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தூத்துக்குடி டான்சி நிறுவனத்தில்—

| | |
|---|---|
| (அ) உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மதிப்பு | 1979-80—ல் ரூ. 18.33 இலட்சம் |
| | 1980—81—ல் ரூ. 20.26 இலட்சம் |
| | 1981-8 —ல் ரூ. 26.57 இலட்சம் |

(அ) அடைந்த இலாபம்: 1979-80—ல் ரூ. . 0.73 இலட்சம்
1980-81—ல் ரூ. 2.85 இலட்சம்
1981-82—ல் ரூ. 1.28 இலட்சம்
(நேராயம்)

(இ) 52 பேர்கள் பணிபுரிகிறார்கள்.

(முற்பகல் 9—10)

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த டான்சி நிறுவனத்தை மேலும் விரிவுபடுத்த ஏதாவது அரசிடம் திட்டம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட திட்டம் இல்லை,

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, டான்சி நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்கள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றதா? அப்படி ஏற்றுமதி செய்யப்பட்டதனால் நமக்கு கிடைத்த அந்நியச் செலாவணி எவ்வளவு என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவில்லை. உள்நாட்டின் தேவைகளுக்குத்தான் உற்பத்தி செய்யப்படுகின்றன.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த டான்சியிலே உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்கள் கொஞ்சம் விலை அதிகமாக இருக்கிறது எனச் சொல்லுகிறார்கள். விலையைக் குறைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்யுமா? மேலும் இதற்குத் தேவையான மூலப்பொருள்கள் தனியார்களிடமிருந்துதான் வாங்கப்படுகிறதா? அது எப்படி கொள்முதல் செய்யப்படுகிறது? அந்த அடக்கவிலையைக் குறைத்து, லாபத்தைக் குறைத்து தரமான பொருள்கள் குறைந்த விலையில் பொதுமக்களுக்குக் கிடைப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் எடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி; பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது டான்சி நிறுவனம் லாபத்தில்தான் இயங்கிக்கொண்டு வருகிறது. அடக்க விலையைக் குறைப்பதற்கு முயற்சிகளை எடுக்கும்.



திரு. கே. ஆர். சுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, டான்சி நிறுவனத்தில் செய்யப்படுகின்ற பொருள்களை அரசின் பல்வேறு இலாக்காக்களில் வாங்காமல், தனியாரிடத்திலே வாங்குவதால் டான்சியின் விற்பனை பாதிக்கப்படுவதாகச் சொல்லுகிறார்களே அதுபற்றி அரசுக்குத் தெரியுமா? மற்ற அரசு நிறுவனங்களும் தங்களுக்குத் தேவையான பொருள்களை டான்சி நிறுவனத்திலிருந்து வாங்குவதற்கான முயற்சிகளை எடுக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி; தலைவர் அவர்களே, மற்ற அரசு நிறுவனங்களும் டான்சியிலே செய்யப்படுகின்ற பொருள்களைத்தான் வாங்குகிறார்கள். இதுபற்றி ஏதாவது குறிப்பிட்ட தகவல் கொடுத்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டான்சி நிறுவனத்தில் மக்களுக்கு மிகமிகத் தேவையான, அதாவது போர்வெல்லுக்குத் தேவைப்படுகின்ற பைப்புகள் அதிகமாகத் தேவைப்படுகின்றதால், டான்சி நிறுவனம் குறித்த காலத்தில் செய்துதரமுடியாத நிலை ஏற்படுகிறது. அதற்கு ஏதாவது துரிதப்படுத்துவதற்கு டான்சி நிறுவனம் முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தகவல் என்னிடத்திலே இல்லை. அப்படி தகவல் இருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசுக்குத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

தூத்துக்குடி-கொழும்பு இடையே பயணிகள் கப்பல் விடும் திட்டம்
*வினா எண் 56—

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி-கொழும்பு இடையே மீண்டும் பயணிகளுக்கான கப்பல் சர்வீசை துவக்க வேண்டுமென மாநில அரசு மத்திய அரசை கேட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

(இ) மத்திய அரசு எப்பொழுது துவக்கப்படுமென தெரிவித்துள்ளது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) ஆம்,

(ஆ) 1982 ஜனவரியில் இந்தியக் கப்பல் போக்குவரத்துக் கழகம் மூலமாக தூத்துக்குடிக்கும் கொழும்புவிற்குமிடையே பயணிகள் மற்றும் சரக்குக் கப்பல் போக்குவரத்தை நடத்துமாறு இவ்வரசு மைய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. இது லாபகரமாக இருக்காது என்றும் எனினும் இந்தியக் கப்பல் போக்குவரத்துக் கழகத்துடன் இதுபற்றி கலந்தாலோசித்து வருவதாகவும் மைய அரசு பதிலளித்துள்ளது.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது தமிழகத்திலிருந்து இலங்கைக்கும், அல்லது இலங்கையிலிருந்து தமிழகத்திற்கும் வருவதற்கு மக்கள் மிகவும் அவதிப்படுவதாக பல்வேறு இடங்களிலே பத்திரிகைகளிலேகூட செய்திகள் வருகின்றன. இப்படிப்பட்ட ஒரு அத்தியாவசியமான சர்வீசுக்கு லாபத்தை நோக்கமாகக் கருதாமல், உடனடியாக இந்த போக்குவரத்துக் கப்பலை விட மத்திய அரசுக்கு மறுபடியும் நம்முடைய அரசு வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அந்த அடிப்படையிலேதான் நாம் கடிதம் எழுதினோம். அவர்களுக்கு இதிலே லாபமாக இருக்காது, இருந்தாலும் கூட அந்த கப்பல் போக்குவரத்துக் கழகத்தோடு நாங்கள் பேசுகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். நாம் கேட்டுக்கொண்டபடி கூட மத்திய அரசாங்கம் எப்படி நஷ்டம் ஏற்படுமானால் அதை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கூடநாம் சொல்லியிருக்கிறோம். அந்த நிலைமைகளைப் புரிந்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டு வருகிறோம்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, ஏற்படுகின்ற நஷ்டத்தை கூட மாநில அரசு ஏற்றுக்கொள்கிறோம் என்று உறுதி அளிக்கின்றபோது, அதை நடத்துவதிலே மத்திய அரசுக்கு என்ன தயக்கம் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, மாநில அரசு ஏற்றுக்கொள்வதாக இல்லை. மத்திய அரசுதான் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நாம் கேட்டோம். மாநில அரசு ஏற்றுக்கொள்ளும் அளவில் நிதி நிலைமை தற்போது இல்லை.

லாபகரமாக இயங்காத பேருந்துகளைக் குறைக்கும் திட்டம்

*வினா எண் 57—

திரு. கே. நாராயணசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா



லாபகரமாக இயங்காத பேருந்துகளை குறைத்து போக்குவரத்து கழகங்களின் மொத்த இழப்பையும் குறைக்கும் நடவடிக்கை அரசின் பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: போக்குவரத்துக் கழகங்கள் நிறுவப்பட்டதின் நோக்கங்களில் ஒன்று பொது மக்களுக்குப் போதுமான அளவிற்கு, சிறந்த அளவில், குறைந்த கட்டணத்தில் போக்குவரத்து வசதியளிப்பதாகும். ஆகவே போக்குவரத்துக் கழகங்கள் எல்லா வழித்தடங்களிலும் லாபம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு இயக்கப்படுவதில்லை. எனினும் லாபகரமாக இயங்காத பேருந்துகளில் வழித்தடங்களை நீட்டியோ, அல்லது அவ்வழித் தடங்களை மாற்றியமைத்தோ, அவை லாபகரமாக இயங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் அவ்வப்பொழுது இம்மாநில போக்குவரத்துக் கழகங்களால் எடுக்கப்பட்டு வருகின்றன. தேவைக்கு அதிகமாக ஓடிக்கொண்டிருக்குமேயானால் அவற்றை நிறுத்துவது சம்பந்தமாக பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளைப் பொறுத்த வரையில், நம்முடைய அரசுப் போக்குவரத்துப் பேருந்துகள் புறப்படும் நேரத்திற்கு 5,10 நிமிடம் முன்னதாக தனியார் பேருந்துகள் புறப்பட்டு விடுவதால், சில தடங்களில் நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, அந்த நிலைமையை மாற்றியமைத்து, லாபகரமாக அந்தத் தடங்களிலும் பேருந்துகள் ஓடுவதற்கு அரசு நடவடிக்கைகள் எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு போக்குவரத்துக் கழகமும் தற்போது இதில் தனிக்கவனம் செலுத்தி வருகிறது. இந்த நிலைமைகளைத் தவிர்க்க இப்போது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அன்-எகனாமிக் ரூட் சம்பந்தமாக அரசு ஏதேனும் கொள்கை வைத்து இருக்கிறதா? ஒரு போக்குவரத்துக் கழகத்தில் இத்தனை சதவிகிதம் அன்-எகனாமிக் ரூட் இருக்கலாம் என்ற கொள்கை கடைபிடிக்கப்பட்டுவருகிறதா? அன்-எகனாமிக்ரூட்என்பது தவிர்க்கப்பட முடியாததுஎன்பதால்இது சம்பந்தமாகஒருகொள்கையைஉருவாக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே 40 சதவீதம்இருக்கலாம் என்ற நிலைமை வைத்து இருக்கிறோம். பொது மக்களுக்கு வசதி செய்து தரவேண்டும் என்ற நோக்கத்தைத் தவிர வேறு விதமான கொள்கை அதற்குத் தேவை இல்லை.

திரு. மு. ஜான் வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, சில போக்குவரத்துக் கழக பேருந்துகளுக்கு நேரம் மாற்றிக் கொடுக்கப்படவில்லை என்பதால் அங்கே நஷ்டம் ஏற்படுவதாகச் சொல்கிறார்கள். தற்போது ஓடுகின்ற சில ரூட்களிலே கூட புதிதாக சில கிராமங்களுக்குப் பயன் அளிக்கின்ற வகையில் விஸ்தரிப்பு செய்து பேருந்துகள் விட வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆகவே, அப்படிப் பயன் தருகின்ற வகையில் இந்தப் பேருந்துகள் விடப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: அதைத்தான் அரசு செய்துகொண்டு இருக்கிறது.

திரு. சி. கோபால்: தலைவர் அவர்களே, அரசுப்பேருந்துகள் நஷ்டத்தில் ஓடுவதற்குக் காரணம், சில இடங்களில் தனியார் துறை பேருந்துகளுக்கு முன்னால் செல்கிற அரசுப் பேருந்துகளில் இருக்கின்ற டிரைவர்கள், கண்டக்டர்கள் நடத்தையால் ஏற்படுகின்ற குறைபாடு என்கின்ற வகையில் அரசுக்கு இதுவரையில் தகவல் வந்துள்ளதா? வந்து இருந்தால், அதன் மீது அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, டிரைவர்கள், கண்டக்டர்கள் செய்கையால் நஷ்டம் ஏற்படுகின்றது என்பது முற்றிலும் உண்மை என்று நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆங்காங்கு சில ஓட்டுநர்கள், நடத்துனர்கள் சில இடங்களில் இப்படி இருக்கலாம். அதைவைத்துக்கொண்டு முழுக்க முழுக்க அந்தத் தொழிலாளர்கள்தான் இதற்குப் பொறுப்பு என்று சொல்லிவிட முடியாது. அப்படி இருப்பவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறது.

திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லாபகரமாக இயங்காத பேருந்துகளை ஸ்டாப்பேஜ் என்று திடீரென்று நிறுத்தி விடுவதால் பொதுமக்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, லாபத்தை எதிர்நோக்காமல், பொது மக்களின் நலன் கருதி அந்தப் பேருந்துகளை விடுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே பதில் சொல்கிறபோது இதைச் சொல்லியிருக்கிறேன். எங்கெங்கே தேவையிருக்கிறதோ அங்கே வண்டியை நிறுத்துவது இல்லை. தேவைக்கு அதிகமாக இருக்கும் வண்டிகளை நிறுத்துவது பற்றித்தான் அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்குத் தேவையாக இருக்கக்கூடிய அன்சர்வ்டு ஏரியா போன்ற வழித்தடங்களில் கூட பல்லாண்டுகாலமாக ஓடிக்கொண்டு இருந்த பேருந்துகளை நிறுத்தி இருக்கிறார்கள். எந்தெந்த இடங்களில் என்பதைக்கூட என்னால் அமைச்சர் அவர்களுக்கு விளக்கமாகத் தரமுடியும். அப்படிப்பட்ட வழித்தடங்களில் போக்குவரத்துப் பேருந்துகளை நிறுத்தக்கூடாது என்று எல்லாப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் அமைச்சர் அவர்கள் அறிவிப்புக் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஏற்கனவே இதைப்பற்றிப்பேசும்போது நான் சொல்லியிருக்கிறேன். எங்கெங்கே வண்டிகள் நிறுத்தப்பட்டால் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுமோ அங்கே வண்டிகளை நிறுத்தக்கூடாது என்று உத்தரவிட்டு இருக்கிறோம். அதையும் மீறி எங்கேயாவது நிறுத்தப்பட்டு இருக்குமானால் அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதைப்பற்றி நடவடிக்கை எடுக்கலாம், கவனிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்கள் நஷ்டத்தில் இயங்குவதற்குக் காரணம் தனியார் நிறுவனம் ஓட்டுகின்ற பேருந்துகளால் வருகிறது என்பதை அரசு புரிந்து இருந்தாலும் அதைத் தவிர்ப்பது அரசின் கடமை என்பதை உணரவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? தனியார் பேருந்துகள் பராமரிப்பு நல்ல முறையில் இருந்து, அரசுப் பேருந்து பராமரிப்பு நல்ல முறையில் இல்லையென்பதால் நஷ்டம் ஏற்படுகிறது என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: போக்குவரத்துத்துறை பேருந்துகள் தனியார் துறையைவிட மிகச் சிறப்பாக பராமரிக்கப் படுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்களா என்று நான் திருப்பிக் கேட்க ஆசைப்படுகிறேன். வேறு மாநிலத்தில் இருந்து இங்கே வருபவர்கள் அதைத்தான் சொல்லி விட்டுப் போய்க்கொண்டு இருக்கிறார்கள். அதனால் மட்டும் நஷ்டம் ஏற்படுகிறது என்று சொல்லிவிட முடியாது. நஷ்டத்திற்குக் காரணம் பல்வேறு பொருள்களின் விலையேற்றமே என்பதை நான் உறுப்பினர்களுக்கு விளக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

(முற்பகல் 9-20)

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, இலாபம் நோக்கம் அல்ல என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். நான் கேட்க விரும்புவது— தேவையை மையமாகக் கொண்டு போக்குவரத்து கழகங்கள் செயல்படுமா என்பது. என்னுடைய தொகுதியான திண்டுக்கல்லிலிருந்து சென்னைக்கு வர சரியாக பஸ் கிடைப்பதில்லை....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி பொதுவானது, நீங்கள் உங்கள் தொகுதிக்குப் போய்விடாதீர்கள். திண்டுக்கல்லுக்குப் போய்விட்டால் சென்னைக்கு வருவது எப்போது? (சிரிப்பு)

திரு. என். வரதராஜன்: பல தடங்களில் 5 பேர், 10 பேர்களோடு பஸ் ஓடிக்கொண்டிருக்கிறது. சில தடங்களில் அதிகமான பேர்களுக்கு பஸ் கிடைக்காமல் இருக்கிறது. ஆகையால் மாவட்ட அளவில் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களையும், சட்டமன்ற மேலவை உறுப்பினர்களையும் கொண்ட குழுக்களை அமைத்து, அந்தக் குழுவின் மூலம் சரியாக ஆய்வு செய்து, அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி; தலைவரவர்களே, இலாபம் நோக்கம் இல்லை என்று சொன்னவுடனே அது பொது நோக்கம் அல்லது தேவையின் அடிப்படையில் இயக்கப்படுகிறது என்று பொருள். சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டு குழு அமைத்து ஆய்வு நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். இப்போதே சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுக்கின்ற கோரிக்கைகளை எல்லாம் பரிசீலித்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆகவே, தனிக் குழு தேவையில்லை. எல்லோரும் கொடுக்கின்ற கோரிக்கைகளை வாங்கி பரிசீலித்தாலே சரியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

### பேருந்துகளில் தீயணைப்புக் கருவிகள் பொருத்தும் திட்டம்.

*வினா எண். 58—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேருந்துகளில் தீயணைப்புக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில் அதை இயக்க ஓட்டுநர், நடத்துநருக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் அனைத்துப் பேருந்துகளிலும், மற்றும் பாண்டியன், சேரன், கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகங்களில் உள்ள பெரும்பாலான பேருந்துகளிலும் தீயணைப்பு கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. மற்றப் போக்குவரத்துக் கழகங்களும் தங்கள் பேருந்துகளில் தீயணைப்பு கருவிகளை பொருத்துவதற்கான ஏற்பாடுகளை செய்துவருகின்றன.

(ஆ) மேற்கூறிய போக்குவரத்துக் கழகங்களில் உள்ள ஓட்டுநர், நடத்துநர்களுக்கு தீயணைப்புக் கருவிகளை இயக்க பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது



திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவிக்கின்ற நேரத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் தீ அணைப்புக் கருவிகள் பொருத்தப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்கள். அதிலே ஓட்டுநர்களுக்கு சரியான பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, அந்தப் பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது.

### வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த தின விழா.

*வினா எண் 44—திரு. க. பாரமலை: மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் பாஞ்சாலங்குறிச்சி வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவுக் கட்டிடத்தில் ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதம் 3ந் தேதியன்று வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த தினவிழா அரசு விழாவாக நடத்தப்பட்டு அவ்விழா 1976 ஆம் ஆண்டிலிருந்து நடத்தப்படவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அந்த விழாவை தொடர்ந்து நடத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) 1974, 1975 ஆம் ஆண்டுகளில் நடைபெற்றது. 1976 ஆம் ஆண்டிலிருந்து 1980 வரை நடைபெறவில்லை.

(ஆ) அதன் பின்னர் 1981 ஆம் ஆண்டில் மே திங்கள் 8, 9 ஆகிய தேதிகளிலும் 1982-ல் மே திங்கள் 14, 15 தேதிகளிலும் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. ஆண்டுதோறும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் அந்தப் பகுதிக்குச் சென்றிருந்தபோது இந்தக் கருத்தை சொன்னார்கள். இந்த விழா தொடர்ந்து நடைபெறும் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். (பதில் இல்லை)

### விளாத்திகுளம் தாலுகா நயினார் சத்திரம் விநாயகர் கோவிலுக்குச் சொந்தமான நிலம்.

*வினா எண் 45—திரு. ப. நெடுமாறன்: திரு. க. பாரமலை: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1983 சனவரி 29

(அ) நெல்லை மாவட்டம் விளாத்திகுளம் தாலுகா, நயினார் சத்திரம் விநாயகர் கோவிலுக்குச் சொந்தமானதும் கல்லூரணி கிராமத்தில் உள்ளதுமான சுமார் 573 ஏக்கர் நிலம் தனிப்பட்ட உப்பள உரிமையாளர் ஒருவருக்கு விற்கப்பட்டதை இந்த அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அதை மீட்டு அரசே உப்பளம் நடத்தும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) ஆம்.

(ஆ) மேற்படி நிலத்தை மீட்க தக்க மேல் நடவடிக்கை எடுப்பது பற்றி பரிசீலனையில் உள்ளது. மேற்படி நிலங்களில் அரசே உப்பளம் நடத்தும் உத்தேசம் எதுவுமில்லை.

திரு. ப. நெடுமாறன்: தலைவரவர்களே, இந்த நிலத்தை வாங்கியவர் உப்பளம் வைத்து நடத்துவதற்காக இதைப் பெற்றிருக்கிறார். கடந்த 15 ஆண்டுக் காலத்தில் கிட்டத்தட்ட இரண்டரை கோடி ரூபாய்க்கு மேல் அவர் சம்பாதித்து இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இவ்வளவு விலை உயர்ந்த, வருமானம் உள்ள நிலத்தை தமிழ்நாடு சால்ட் கார்ப்பரேஷன் எடுத்து, அதை ஏற்று நடத்தினால் அரசாங்கத்திற்கு வருமானமும் உண்டு; அதன் மூலம் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலையும் கிடைக்கும். ஆகவே இந்த நிலத்தை மீண்டும் பெற்று, தமிழ்நாடு சால்ட் கார்ப்பரேஷன் மூலம் உப்பளம் நடத்த அரசு உத்தேசித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, இந்த நிலம் ஒரு அறக்கட்டளைக்கும் ஒரு ஆலயத்திற்கும் இணைந்த சொத்து என்று முன்னாலே நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அது அறநிலையத் துறைக்கு இருக்கின்ற விதிகளின் கீழ் கொண்டுவரப்படவில்லை; தனியரர் நிர்வாகத்தில் இருந்து, அவர்களுக்குள்ளே இந்த பரிமாற்றம் நடந்து கொண்டிருக்கிறது. இப்போதுதான் ஒரு ஆய்வாளரை அங்கே அனுப்பி, பரிசீலித்ததில் இந்து சமய அறநிலையச் சட்டத்தின்படி நாம் நேரடியாக நடவடிக்கை எடுக்க முடியாது என்பது தெரியவந்தது. ஆகவே, வருவாய்த் துறையில் இருக்கின்ற 1817-ஆம் ஆண்டின் ''எண்டோமென்ட்ஸ் அன்ட் எஸ்ச்சீட்ஸ் ரெகுலேஷன் ஆக்ட்''டின்படி இதை பரிசீலனை செய்து, அந்த ஆலயத்திற்கு எவ்வளவு சொத்து இருக்கிறது என்பதை எல்லாம் பார்த்து, அறநிலையத் துறையின் மூலம் அதை பெற முடியுமா என்பதைத் தீவிரமாக அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.



1983 சனவரி 29]

திரு. ப. நெடுமாறன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு பூராவும் இருக்கக்கூடிய ஆலயங்கள், மடங்கள் இவைகளில் இதுபோன்ற நிலங்களில் எவ்வளவு முறைகேடுகள் நடைபெற்றிருக்கின்றன, ஆலயங்களில் சொத்துக்கள் எவ்வளவு இது போன்று முறைகேடாக விற்கப்பட்டிருக்கின்றன, அல்லது வேறு விதமாக அவைகள் எப்படி இருக்கின்றன என்பதைப்பற்றியெல்லாம் ஆராய்வதற்கு அரசாங்கம் ஒரு கமிஷனை நியமித்து அதனுடைய ஒரு அறிக்கையை இந்த அவையில் வைக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தமிழகம் முழுவதும் இதுபோன்று அறநிலைய விதிகளுக்கு உட்படாத சொத்துக்களை பரம்பரை அறங்காவலர்கள் என்ற பெயரால் அனுபவித்து கொண்டு வருவதும் சொத்துக்களை குறைந்த வாடகையில் அல்லது குத்தகைக்கு நீண்ட காலமாக அனுபவித்துக் கொண்டு வருவதும் தமிழ்நாட்டில் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு வருகிறது. இவைகளையெல்லாம் தீவிரமாகப் பரிசீலித்து தக்க சட்டத்தின் மூலம் மீண்டும் இதையெல்லாம் ஆலயங்களுக்குக் கொண்டுவருவதற்கும் தவறான நிர்வாகத்திலிருந்து மீட்பதற்கும் நடவடிக்கை எடுப்பது பற்றி அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. க. பாரமலை: இந்த மாவட்டத்தில் 573 ஏக்கர் ஒரு தனி நபருக்கு அந்தக் கோவில் நிர்வாகிகள் விற்றிருக்கிறார்கள். இதிலே அதிகாரிகள் திட்டமிட்டு இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக தகவல் இருக்கிறது. நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களை குறிவைத்து தாக்குவதற்கு முயற்சித்த ஒரு நபர் கிராம அதிகாரியாக இருந்த காலத்தில்தான் இந்த பரிமாற்றங்கள் நடைபெற்றிருக்கின்றன. இதைத் தொடர்ந்து அந்த மாவட்டத்திலுள்ள அண்ணா திராவிட முன்னேற்றக்கழக சார்பில் மேலவைக்கு ஆசிரியர் தொகுதியில் போட்டியிட்ட நண்பர் ஒருவர் இது சம்பந்தமாக பல்வேறு சந்தர்ப்பங்களில் அரசாங்கத்திற்கு தகவல் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே நான் கேட்டுக்கொள்வது என்னவெனில், அறநிலையத் துறையின் கீழ் இது வரவில்லையென்றாலும் இப்படி இந்து அறநிலையங்களில் நடைபெறுகின்ற ஊழல்களைக் களைவதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது என்ற முறையில் இதன்பேரில் உடனடியாக நடவடிக்கை எடுத்து இந்த நிலத்தைக் கைப்பற்றுவதற்கும் அதோடு நாம் சட்டம் இயற்றியிருக்கிறோம், அதாவது அங்கீகாரமற்ற ஆக்கிரமிப்பு செய்பவர்கள் மீது சட்டபூர்வமான முறையில் நடவடிக்கை எடுத்து தண்டனை கொடுப்பதற்கு நாம் நடவடிக்கைகள் எடுத்திருக்கிறோம், இப்படிப்பட்ட பரிமாற்றங்களை ரத்து செய்து அந்த நபர்களை இப்படிப்பட்ட அங்கீகாரமற்ற ஆக்கிரமிப்பு செய்பவர்கள் என்று கருதி அவர்கள் மீது நவடிக்கைகள் எடுத்து நிலத்தை கைப்பற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரையில் ஒரு மிகப் பெரிய பரப்பளவுள்ள நிலத்தை கைமாற்றம் செய்திருக்கிறார்கள். அதிலே இந்த அரசு தலையிட முடியாதபடி சட்டச் சிக்கல் மூலம் சட்டப் பாதுகாப்பையும் தேடிக்கொண்டிருக்கிறார்கள். இதில் அறநிலையத் துறையும் நுழைய முடியாது, வருவாய்த் துறையும் நுழைய முடியாது. அதன் விளைவாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் அன்றையதினம் கிராமக் கர்ணங்களாக இருந்தவர்களின் துணையோடு இந்தக் காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஆகவே இது ஒரு மிகப்பெரிய ஒழுங்கீனம் என்று நாம் உணர்ந்தாலும் இதிலே உடனடியாகத் தலையிடுவதற்கு அறநிலையத் துறைக்கும் சட்டம் இடம் கொடுக்கவில்லை, வருவாய் துறைச் சட்டமும் இடம் கொடுக்கவில்லை என்று அவர்கள் சட்டத்தின் மூலமாகவே தடுத்திருக்கிறார்கள். ஆகவே இப்போது வருவாய்த்துறையில் இருக்கிற சட்டப்படி, அறநிலையத்துறை மூலம் இருக்கிற சட்டத்தின்படி நடவடிக்கைகள் எடுக்க முடியுமா என்பதைப் பற்றி நாம் தீவிரமாக பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. செ. சிவசாமி; நமது மாநிலத்தில் நிலச்சீர்திருத்தச் சட்டம் இருக்கும்போது 573 ஏக்கர் ஒரு நபருக்கு எப்படிக் கொடுக்கப்பட்டது என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இது புன்செய் நிலமாக தரிசு நிலமாக ஆவணங்களில் பதிவு செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

[முற்பகல் 9-30]

திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறநிலையச் சொத்துக்களை எடுப்பதிலே சட்டச் சிக்கல்கள் இருப்பதாக பல்வேறு சந்தர்ப்பங்களிலே நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எத்தனையோ சட்டங்களை ஆர்டினன்ஸாக, அவசரச் சட்டமாக நாம் கொண்டுவருகிறோம். அதே போன்று இந்த சட்டச் சிக்கலைத் தீர்ப்பதற்கு அரசு ஒரு சட்டத் திருத்தத்தை கொண்டு வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு ஆண்டுகாலமாக இந்த அறநிலையத் துறையில் நீண்டகாலமாக ஆதிக்கம் செலுத்தி வருகின்ற, அனுபவித்து வருகின்றவர்களை மாற்றுவதற்கு சட்டத் திருத்தம் கொண்டு வரவேண்டுமென்று நடவடிக்கை சட்டத் துறையினால் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. இதை ஒரு ஒருங்கிணைந்த



சட்டமாக, காம்பிரஹென்சிவ் ஆக்டாக கொண்டு வரவேண்டுமென்பதற்காகத்தான் இதற்கு நாம் அதிக நாட்களை எடுத்துக் கொண்டிருக்கிறோம். இப்போது இப்படிப்பட்ட மிக முக்கியமான அந்த விதிகளைத் திருத்தி, உடனடியாக சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரவேண்டும். ஆகவே, இந்த சட்ட திருத்தத்தைக் கொண்டு வருகிறபோது, மத்திய அரசினுடைய ஒப்புதலை முன்னதாகப் பெறவேண்டியிருக்கிறது மத்திய அரசுக்கு அனுப்புகிறபோது, அதன் பலனை அனுபவித்துக் கொண்டு வருகிறவர்கள், மிகுந்த ஜாக்கிரதையாக, எச்சரிக்கையாக இருந்து, அங்கேயிருந்து அதை வரவிடாமல் செய்து விடுகிறார்கள். இந்த இரண்டு அவைகளினாலே நிறைவேற்றப்பட்ட, மத்திய அரசுக்கு ஒருசட்டம் அனுப்பப்பட்டு, மத்திய அரசிடம் பாதுகாப்பாக இன்னும் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவேதான் அறநிலையத் துறையிலே தீவிர சீர்திருத்தங்களைச் செய்யவேண்டுமென்ற மாண்புமிகு உறுப்பினர்களுடைய உணர்வுகளை அடிப்படையாக வைத்து, இப்படிக் கொள்ளை என்று சொல்லத்தக்க அளவில் நடைபெறும் அநியாயங்களை, அக்கிரமங்களைத் தடுக்கவேண்டுமென்று முயற்சிகளை மேற்கொள்ளுகின்றபோதெல்லாம், எப்படியோ சட்டத்தின்மூலம் பாதுகாப்பைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். என்றாலும், இந்தச் சொத்துக்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறவர்களிடமிருந்து மிக விரைவிலே இவைகளை மீட்பதற்கு தனியாக ஒரு திருத்தத்தை விரைவிலே கொண்டு வரவேண்டுமென்று அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விநாயகர் கோவிலுக்குச் சொந்தமான 573 ஏக்கர் நிலம் எந்த ஆண்டு, எந்த தேதியில் உப்பார உரிமையாளருக்கு விற்கப்பட்டது? ஏக்கர் என்ன விலையில் விற்கப்பட்டது? அதை விற்றவர் யார், அதை வாங்கிய உரிமையாளர் யார் என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, 573·28 ஏக்கர் ஒரு கோவிலுக்கு மாத்திரம் சொந்தமல்ல. விநாயகர் கோவிலுக்கும், ஒரு கட்டளைக்கும் சொந்தமாக, இணைந்த பட்டாவாக மிகுந்த ஜாக்கிரதையாக செய்து வைத்திருக்கிறார்கள். இப்படி ஜாக்கிரதையாக செய்து விட்ட காரணத்தினால், எது கோவிலுக்கு உரியது, எது கட்டளைக்கு உரியது என்பது தெரியவில்லை. கட்டளை எப்படி நடந்து கொண்டிருக்கிறது என்றால், ஒரு இந்து மதத்திற்கு மட்டும் என்றில்லாமல், எல்லோருக்கும் நன்மை செய்வது என்கின்ற அடிப்படையிலே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆகவே, இந்து மதம் அதற்குள் வராத காரணத்தினால், இந்து அறநிலையச் சட்டம் அதிலே நுழைய சாத்தியமில்லை. இந்தச் சூழ்நிலையில் அதிலே மூன்று பரம்பரை அறங்காவலர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். பரம்பரை அறங்காவலர்களாக இருக்கின்றவர்கள், ரூ. 1000 ஆண்டுக்கும், ரூ. 500 ஆண்டுக்கும் என்று குத்தகைக்கு விட்டு, வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த ரூ. 1000, ரூ; 500 போதவில்லை, அந்தத் தொகையை வைத்து கட்டளையை நடத்த முடியவில்லை என்பதால் திரு. கே. எஸ். சண்முகவேல் நாடார்—அவர் ஒரு கம்பெனியை வைத்திருக்கிறார்—அந்த கம்பெனிக்கு இதை ரூ. 70,000-க்கு விற்றிருக்கிறார்கள். இந்த ரூ. 70,000க்கு இதை விற்று விட்டாலும், அதைப் பணமாக வாங்கவில்லை. அவரிடமிருந்து 12.48 ஏக்கர் நஞ்சையும், 15.56 ஏக்கர் புஞ்சையும் அதற்கு கைம்மாறாக வாங்கியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு அதிலே ரூ. 2,000 வருமானம் வந்திருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அதற்குப் பிறகு, திரு. சண்முகவேல் நாடாரின் மகன் திரு. கணபதி நாடார் என்பவர் கொஞ்சம் பெரிய மனது வைத்து, 200 ஏக்கர் புஞ்சை நிலங்களை இந்த அறக்கட்டளைக்கு ஆலயத்திற்குத் திருப்பிக் கொடுத்திருக்கிறார். இப்போது இந்த ஆலயத்திற்கு 227.84 ஏக்கர் புஞ்சை நிலம் இருக்கிறது. மொத்தம் 500 சொச்சம் ஏக்கர்களிலே, 200 சொச்சம் ஏக்கர் நிலம் திரும்ப வந்திருக்கிறது. இருந்தாலும், இந்த முறைகேடுகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு நமக்கு அதிகாரம் இல்லை என்று அவர்கள் தடுத்து விட்டார்கள். ஆகவே, வருவாய்த் துறையிலே நீண்டகாலத்திற்கு முன்னாலே ஒரு ஆக்ட் இருக்கிறது—என்டோமென்ஸ் அண்டு எஸ்ச்சிட்ஸ் ரெகுலேஷன் ஆக்ட், 1817 என்றிருக்கிறது. அதன்மூலம் வருவாய்த் துறை நடவடிக்கைகள் மேற்கொண்டு, மொத்தமாக வாரிசு அற்ற சொத்துகளை எடுப்பது என்ற நிலையில், இதை எடுத்துக் கொள்ள முடியுமா என்பதையும் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து அறநிலையச் சொத்துக்களை முந்திய அரசு ஏதாவது ஒழுங்குபடுத்துகின்ற வகையிலே, ஊழலற்ற முறையிலே சரி செய்யவேண்டுமென்று நடவடிக்கை எடுத்திருக்கிறதா? அந்த நிலையிலே சட்டமாக உருவாக்கி, மத்திய அரசிற்கு அனுப்பி, திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறதா? அல்லது முதன்முதலாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள்தான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு காலமாக எந்த அரசுமே இந்த அறநிலையத் துறையிலே இருக்கின்ற சொத்துக்களை எப்படி பாதுகாப்பது என்பதிலே அதிக அளவிற்கு கவனம் செலுத்த வில்லை. அதற்கு அடிப்படை காரணம், ஆண்டவன் விஷயத்திலே அதிகம் ஈடுபட வேண்டாம் என்கிற அடிப்படை உணர்வாக இருக்கலாம்.



தமிழ்நாடு திரையரங்குக் கழகம் மூலம் வழங்கப்பட்ட கடன் தொகை.

*வினா எண். 46—திரு. ஏ. தங்கராசு: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தியேட்டர் பைனான்ஸ் கார்ப்பரேஷன் (Tamilnadu Theatre Finance Corporation) மூலம் இதுவரை வழங்கப் பட்ட கடன் தொகை எவ்வளவு?

(ஆ) இதன் மூலம் பயன்பெற்ற தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் எவ்வளவு பேர்கள்?

(இ) தற்சமயம் புது லைசன்ஸ் வழங்குவதை அரசு நிறுத்தி யுள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) தமிழ்நாடு திரையரங்குக் கழகம், கிராமப் பகுதிகளில் திரை அரங்குகளை கட்டுவதற்கு 80 நபர்களுக்கு டிசம்பர் 82 முடிய ரூ. 88.00 இலட்சம் கடன் வழங்கியுள்ளது.

(ஆ) இக்கடன் திட்டத்தின் மூலம் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 3 பேர்களும் பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்த 56 பேர்களும் பயன் பெற்றுள்ளனர்.

(இ) தமிழ்நாடு திரையரங்குக் கழகம் தனியார்க்கு அளிக்கும் நிதி உதவி திட்டத்தை தொடர்வது குறித்த செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதால் அரசு கொள்கை முடிவு எடுக்கும் வரை திரையரங்குக் கட்டுவதற்காக நிதி உதவி அளிப்பதை தமிழ்நாடு திரையரங்குக் கழகம் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தமிழ்நாடு தியேட்டர் பைனான்ஸ் கார்ப்பொரேஷனிடம் இருந்து வாங்கிய கடனை திரும்பிப் பெறுவதிலே பல சிக்கல்கள் ஏற்பட்டு வழக்கு மன்றத்திற்கு சென்றிருப்பதாக தெரிகிறது. அந்தகக் கடன்கள் திரும்பப் பெறப்பட்டதா? அந்த வழக்குகள் எந்த நிலையில் இருக்கின்றன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, இந்த தியேட்டர் கார்ப்பொரேஷன் மூலம் வழங்கப்பட்ட கடன் களிலிருந்து திரை அரங்குகளையெல்லாம் கட்டி முடித்து அவைகளெல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற சூழ்நிலையில் கூட, அந்தக் கடன்களை திரும்ப வசூலிப்பதில் ஏற்பட்ட சிக்கல்களை ஒட்டித்தான் கடன் வழங்குவது நிறுத்திவைக்கப்

பட்டிருக்கிறது. ரெவின்யூ ரக்கவரி ஆக்டின் கீழ் வசூலிக்கலாம் என்று முயற்சி எடுப்பதற்குள், அவர்கள் வெகு சாமர்த்தியமாக உயர்நீதிமன்றத்திற்குச் சென்று, அதையொட்டி தடை ஆணை வாங்கி விட்டார்கள். அதற்குப் பிறகு சிவில் வழக்குகள் போடப் பட்டு, இப்போது 3, 4 வழக்குகளில் இந்தக் கார்ப்பொரேஷனுக்கு சாதகமாகத் தீர்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதையொட்டி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. ப. பு. ஜனார்த்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தியேட்டர் கார்ப்பொரேஷன் மூலம் கடந்த 1½ ஆண்டுகளுக்கு மேலாக லைசன்சு பெற்றவர்களில் பாதிப் பேருக்கு கடன்கள்வழங்கப்பட்டு பலபேருக்கு மேற்கொண்டு கொடுக்காமல் அப்படியே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு காரணம் ஏற்கெனவே கடன் கொடுத்தவர்களில் 80 பேர்கள் வழக்கு மன்றத்திற்குச் சென்று தடை ஆணை வாங்கியிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தனி ஐ.ஏ.எஸ். அதிகாரி தலைவராக இருந்துக் கொண்டு தற்போது நிர்வாகம் நடந்துக் கொண்டிருக்கிறது. இனிமேலாவது நல்ல முறையில் நடத்து வதற்கு, இனியும் தொடர்ந்து கடன் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நல்ல எண்ணத்தோடு, பொதுமக்களுக்கு, கிராமப்புறத்து மக்களுக்கு வசதிசெய்து கொடுக்க வேண்டும்என்ற அடிப்படையில் இந்த திட்டம் உருவாக்கப்பட்டது, கழகம் அமைக்கப்பட்டது. ஆனால் கடன் வாங்கியவர்களுக்கு அந்த உணர்வு இல்லாத காரணத்தால், நாம் போட்டிருக்கிற முதலே மூழ்கி விடுகிற சூழ்நிலை வந்ததற்குப் பிறகு மீண்டும் அதை நட்டத்தோடு நடத்திக்கொண்டு இருப்பது சரியாகாது என்றுதான், கடன் வழங்குவதை தற்காலிகமாக நிறுத்தி வைத்திருக்கிறோம். கடன் வாங்கியவர்கள் எல்லாம் கடனைத் திருப்பித் தரவேண்டும் என்ற உணர்வை மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் எடுத்துச் சொல்லி, அவைகளை எல்லாம் பெறுவதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தால், இதை மீண்டும் சிறப்பாக நடத்துவதற்கு வசதியாக இருக்கும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, 88லட்சத்திற்கும் அதிகமாக கடன்கொடுத்திருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். அதிலே கடனை பெறுவதற்கு முன்பாக பலபேர்கள் அதற்குத் தேவையான சர்டிபிகேட்டுகள் வழங்கி யிருப்பார்கள். அந்த சர்டிபிகேட்டுகளிலே பல மோசடிகள் நடைபெற்றிருப்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா குறிப்பாக அம்பை வட்டாரத்தில் அப்படி மோசடி ஏற்பட்டதா?? அந்த மோசடி. சர்டிபிகேட்டுகளை கொடுத்தவர்களின் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா?



மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல சர்டிபிகேட்டுகள். பல பொறுப்பு பத்திரங்கள் போன்றவைகளையெல்லாம் பெற்றுக் கொண்டுதான் கடனை வழங்கியிருக்கிறோம். கடனை வாங்குகிற வரையில் எதையும் எழுதிக் கொடுக்க தயாராக இருக்கிறார்கள். வாங்கி யதற்குப் பிறகு— ''கடனை வாங்கி உடம்பை தேற்று, கடனை கொடுத்தவன் வந்து கேட்டால் முழங்கை காட்டு'' என்று தமிழ்நாட்டிலே ஒரு பழமொழி உண்டு-அதுபோல் கேட்கும் போது நழுவப் பார்க்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைத்போல ஒன்றிரண்டு சம்பவங்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அவைகள் மீதும் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.

திரு. சி. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பைனான்ஸ் கார்ப்பொரேஷன் மூலமாக கடன் வாங்கியவர்களில், ஏற்கெனவே பல தியேட்டர்கள் வைத்துக் கொண்டிருப்பவர்கள் இடம் பெற்றிருக்கிறார்களா? இனிமேல் கடன் வழங்குகிறபோது இப்படி பல தியேட்டர்களை வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு' கடன் வழங்குவதை மறுக்க ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, தியேட்டர்களை நடத்திக் கொண்டிருப்பவர்களுக்கு கடன் வழங்க வேண்டும் என்று விதியிலே இல்லை. அப்படி ஒருவேளை அவர்கள் கடன் வாங்கியிருந்தால் முன்னாலேயே இருக்கின்ற தியேட்டர்கள் அவர்கள் பெயரிலே இருக்காது.

## பழவகைகள் அதிக மகசூல் தர வேளாண்மைத் துறை மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு.

*வினா எண் 47 - திரு. இல. பலராமன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ''மா'' ''கொய்யா'' போன்ற பயன்தரும் பழவகைகள் அதிக மகசூல் தர வேளாண்மைத்துறை மூலம் ஆய்வு மேற் கொள்ளப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை புதிய ரகங்கள் கண்டுபிடிக்கப் பட்டன?

(இ) இவைகள் எந்தெந்த மவட்டங்களுக்கு ஏற்றவை?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** (அ) ஆம். பழ வகைகள் அதிக மகசூல் தர தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் மூலம் ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுகிறது.

(ஆ) மற்றும் (இ): கீழ்க்கண்ட புதிய ரகங்கள் கண்டுபிடிக்கப் பட்டு வெளியிடப்பட்டுள்ளன:

| | | |
|---|---|---|
| மா .. | பெரியகுளம் 1 .. | தென்மாவட்டங்களுக்கு ஏற்ற இரகம். |
| சப்போட்டா .. | கோ 1 மற்றும் 2 .. | தமிழ்நாட்டில் உள்ள எல்லா சமவெளிபிரதேசங்களுக்கும் ஏற்ற இரகங்கள் ஆகும். |
| | பெரியகுளம் 1 .. | தென்மாவட்டங்களுக்கு ஏற்ற இரகம். |
| பப்பாளி .. | கோ 1 மற்றும் 2 .. | தமிழ்நாட்டில் உள்ள எல்லா சமவெளி பிரதேசங்களுக்கும் ஏற்ற இரகங்கள் ஆகும். |

**திரு. இல. பலராமன்:** தலைவர் அவர்களே, இந்தப் புதிய கன்றுகளை அரசு என்ன விலைக்கு விநியோகிக்கின்றது? அவ்வாறு விநியோகிக்கப்பட்ட அளவு எவ்வளவு? வறட்சியான பகுதிகளில் விவசாய மேம்பாட்டுக்கு உதவுகின்ற வகையிலே அதிகமாக நடுவதற்கான ஆக்கபூர்வமான பணிகளை அரசு மேற்கொண்டிருக் கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** இவற்றைப் பற்றிய குறிப்புகள் இல்லை. ஆனால் புதிய ரகங்கள் மூலம் பழ விருத்தி அதிகமாகி இருக்கின்றது என்ற குறிப்பு இருக்கின்றது.

**திரு. என். பழனிவேல்:** தலைவரவர்களே, இந்தப் பழ உற்பத்தியினைப் பொறுத்தவரையிலே புதிய ரகங்களைக் கண்டு பிடித்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இந்தப் பழ உற்பத்தி ரகங்களை நடுவதற்காக ஆங்காங்கே இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு இலவசமாக கொடுத்தால் மரங்களும் வருளம், பழங்களும் உற்பத்தியாகும். ஆகவே பெருமளவில் இலவசமாக சப்ளைசெய்ய ஏற்பாடு செய்யப்படுமா?



**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, இலவசமாகக் கிடைக்கும் என்றால் அதிக அக்கறை வராது. விலைக்குக் கிடைத்தால்தான் அக்கறை வரும்.

**திரு. டி. மணி:** தலைவர் அவர்களே, இந்த மா, கொய்யா, பலா போன்ற பழ வகைகளைத் தருகின்ற கன்றுகளை எல்லா இடங்களிலும் கிடைக்கக்கூடிய அளவிலே விநியோகிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா? இதிலே விசேஷமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் மங்குஸ்தான் என்பது ஒரு விசேஷமான பழம். அந்தக் கன்றுகளை விஸ்தரிப்பதற்கான ஆக்கப்பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, எல்லா பழ வகைகளும் மாநிலத்தின் எல்லாப் பகுதிகளிலும் வராது. எனவே, அந்தந்தப் பகுதிக்கு ஏற்ற வகையிலேதான் விநியோகம் செய்யமுடியும்.

**திரு. இல. பலராமன்:** தலைவர் அவர்களே, வடாற்காடு, தர்மபுரி, சேலம் போன்ற இடங்களில் ஏற்றுமதிக்குத் தகுதி வாய்ந்த மா வகைகள் அதிகமாக இருப்பதால் அங்கே அவற்றை அதிகமாக உற்பத்தி செய்யக்கூடிய சாத்தியக்கூறு இருப்பதால் புதிய ரகங்களை அங்கே அதிகமாக விநியோகிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றது? மேலும், அந்தக் கன்றுகளை மலிவான விலையில் தருவதற்கு அரசு முயற்சி எடுத்திருக்கின்றதா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவரவர்களே, அந்த வகையில் தோட்டக்கலைத் துறை முயற்சி மேற்கொண்டிருப்பதாக குறிப்பு இருக்கின்றது.

## பெருந்துறை வட்டத்தில் கம்பளிப்புழு நிலக்கடலைப் பயிரை நாசம் செய்வதைத் தடுக்கும் திட்டம்.

*வினா எண் 48—திரு தி. கா நல்லப்பன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பெருந்துறை வட்டத்தில் வருடா வருடம் ஆவணி, புரட்டாசி மாதங்களில் வேர்க்கடலை செடியில் கம்பளிப்புழு விழுந்து பயிர்களை நாசம் செய்வது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இந்த ஆண்டு அதைத்தடுக்க அரசு ஆரம்பத்திலேயே நடவடிக்கை எடுக்க முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** (அ) ஆம்.

(ஆ) சிவப்பு கம்பளிப்புழு நிலக்கடலைப் பயிரை தாக்கு வதைத் தடுக்க, வருமுன் காப்பாக ஒட்டுமொத்த பயிர் பாது காப்பு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, இந்த நிலக் கடலைப் புழுவைப் பொறுத்தவரையில் என்னதான் நடவடிக்கை எடுத்தாலும் அது வருடா வருடம் கோடிக்கணக்கான ரூபாய் பெறுமானம் உள்ள நிலக்கடலையைத் தின்றுகொண்டுதான் இருக்கிறது. எனவே, அந்தப் புழுவைப் பொறுத்தவரையில் அது பட்டுப்பூச்சி போன்ற பறக்கின்ற காலத்திலேயே அதைக் கொல்வதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அந்த வகையிலேதான் முயற்சி மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அது வருடா வருடம் வருகின்றது. வருடா வருடம் நடவடிக்கையும் நாம் எடுக்கிறோம்.

திரு. எஸ். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, வேர்க் கடலைப் புழுவினால் மதுரை மாவட்டத்திலே குறிப்பாக திருமங்கலம், உசிலம்பட்டி தாலுக்காக்களிலே பல்லாயிரக் கணக்கான நிலங்கள் பாதிக்கப்பட்டு வேளாண்மைத் தொழில் செய்பவர்கள் பெருத்த நட்டமடைகிறார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது ஒவ்வொரு ஆண்டும் வருகின்றது ஒவ்வொரு ஆண்டும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று சொன்னார்கள். இதிலே இன்னும் கொஞ்சம் ஆழமாக நடவடிக்கை எடுத்து அறவே இந்தப் புழுவினை ஒழிக்க நடவடிக்கையினை வேளாண்மைத்துறை மேற்கொண்டிருக்கின்றதா? இதுவரை இல்லாவிட்டாலும் இனிமேலாவது முறைப்படியாக நடவடிக்கை எடுத்து அந்த வேளாண் மக்களின் துயரினைத் துடைக்க ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அது குறித்து ஆராய்ச்சி ஒரு பக்கம் மேற்கொள்ளப்படுகின்றது என்றாலும் 1982–83-ல் சிவப்பு கம்பளிப் புழுக்கள் விழாமல் தடுப்பதற்காக 6,000 ஹெக்டேர் நிலப்பரப்பில் ஒட்டுமொத்த பயிர்பாதுகாப்பு நடவடிக்கை எடுக்க திட்டமிடப்பட்டிருக்கின்றது.

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, வேளாண்மை சம்பந்தப்பட்ட அந்த அதிகாரிகளிடம் இது சம்பந்தமாக அணுகுகின்றபோது அவர்கள் காட்டுக்குள்ளே பெட்ரோமாக்ஸ் லைட் வைத்து அதன் மூலம் பார்க்கின்றபோது அது தண்ணீரிலே விழுந்து தானாகவே இறக்கும் என்றுதான் சொல்கிறார்களே தவிர இதுவரை முறையான மருந்து கண்டுபிடிக்கப்பட்டதாகச் சொல்லவில்லை. எனவே அதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றதா?





மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : அந்த வகையிலே ஒட்டுமொத்தமாக பயிர் பாதுகாப்பு நடவடிக்கை என்று மேற்கொண்டிருக்கிறோம். 1982–83-ல் பருந்துறைப் பகுதியைப் பொறுத்தவரை 500 ஏக்கருக்கு நாம் நடவடிக்கை எடுக்க இருக்கிறோம். அதில் மானியம் ரூ. 20 ஆயிரம், கடன் ரூ. 20 ஆயிரம் தர இருக்கிறோம்.

**சென்னை நகரில் நடை பாதையில் கட்டப்பட்டுள்ள கோயில்கள்.**

*வினா எண். 49—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் அண்மைக்காலத்தில் நடை பாதைக் கோயில்கள் ஏராளமாகப் புதிதாகக் கட்டப்பட்டுள்ளது அரசின் கவனத்துக்கு வந்ததா?

(ஆ) ஆம் எனில் இதன்மேல் அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) 7 கோயில்கள் நடை பாதையில் கட்டப்பட்டுள்ளன. அவைகளை நீக்க மாநகராட்சி தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் மக்கள் தொகை பெருகிக் கொண்டு வருகிறது. அதனால் எல்லாச் சாலைகளிலும் போக்குவரத்து நெரிச்சல் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் இப்படிப்பட்ட நடைபாதை கோயில்கள் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டு வருகிறது. இந்த நடைப்பாதை கோயில்கள் ஏற்படுவதைத் தடுக்க அல்லது வேறு இடங்களில் மாற்றுவதற்கு ஏதாவது அரசிடம் திட்டம் உள்ளதா? அதேபோல் போக்குவரத்து நெரிச்சல் உள்ள இடங்களில் எங்கு பார்த்தாலும் எல்லா சாலைச் சந்திப்புகளிலும் அரசியல் கட்சிகளின் கொடிக் கம்பங்கள் அமைக்கப்படுகின்றன. அதனால் போக்குவரத்து நெரிச்சல் ஏற்படுகிறது. அதையும் கவனித்து போக்குவரத்து நெரிச்சல் ஏற்படாத வகையில் அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க உள்ளதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நடை பாதை கோயில்களுக்கு மாற்று வழிமுறைகள் அல்லது வேறு இடங்களில் ஏற்படுத்தும் திட்டம் மாநகராட்சியின் பரிசீலனையில் இல்லை. பொதுமக்களுக்கும், போக்குவரத்துக்கும் இடையூறு இல்லாமல் கோயில்கள் இருக்கவேண்டும் என்பதுதான் அரசின் எண்ணம். இந்த அரசைப் பொறுத்தவரையில் கோயில்கள் இருக்கக்கூடாது என்பது அல்ல. கோயில்கள் கொடியவர்களின் கூடாரமாக மாறிவிடக்கூடாது என்பதுதான் நம்முடைய

எண்ணம் எல்லாம். சமூகவிரோதிகள் நடமாடும் இடமாக கோயில்கள் அமைந்துவிடக்கூடாது என்பதுதான் அரசின் எண்ணம். கோயில்கள் கட்டப்படவேண்டும் என்றால் மாநகராட்சிக்கு விண்ணப்பம் அனுப்பினால் அது பரிசீலிக்கப்படும்.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே, கோயில்கள் கொடியவர்களின் கூடாரமாக இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வடபழனி கோயிலில் நடைப்பெற்ற அக்கிரமங்களை எக்ஸ்பிரஸ் பத்திரிக்கை போன்ற பத்திரிக்கைகளில் கடுமையாக தாக்கியிருப்பது............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நடை பாதை கோயில்களைப் பற்றி. அத்தோடு நிறுத்திக்கொள்ளுங்கள்.

திரு. து. புருஷோத்தமன் : இந்த யோசனையை அமைச்சர் அவர்களுக்கு சொல்லியிருந்தால் உள்ளபடியே நன்றாக இருந்து இருக்கும். மின்சார தட்டுப்பாடு இருக்கிற இந்த நேரத்தில் அப்படிப்பட்ட நடை பாதை கோயில்களில் ஆடி மாத விழா மற்றும் பல விழாக்களின் போது அலங்கார விளக்குகளைப் போடுகிறார்கள். அதனால் மின்சார தட்டுப்பாடு ஏற்படுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. ஆகவே கோயில்களில் மின்சாரம் இப்படி பயன்படுத்துவதை தடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா? நடை பாதை கோயில்களை போக்குவரத்து நெரிசல் இல்லாத இடங்களுக்கு மாற்றுவதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, நான் சொன்னது பால் போக்குவரத்துக்கும், பொதுமக்களுக்கும் இடைஞ்சலாக இருக்கக்கூடிய கோயில்களை அப்புறப்படுத்துக் கொண்டு இருக்கிறோம். இதுவரை மாநகராட்சியைப் பொறுத்தவரை வடசென்னையில் 302 நடை பாதை கோயில்கள் இருக்கின்றன. தென்சென்னையில் 164 கோயில்கள் இருக்கின்றன. அண்மையில் 7 கோயில்கள் கட்டப்பட்டன. அதில் 4 கோயில்கள் இடிக்கப்பட்டன. இடிக்கப்பட்ட கோயில்களில் ஒன்று மீண்டும் கட்டப்பட்டிருக்கிறது. 2 கோயில்களை இடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதில் 1 கோயிலை இடிக்கக்கூடாது என்று கோர்ட்டுக்கு சென்றிருக்கிறார்கள். தடை வாங்கியிருக்கிறார்கள். ஆகவே அருமை நண்பர் புருஷோத்தமன் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். அரசியல் கட்சிகள் யாராக இருந்தாலும், நடைப்பாதை கோயில்கள் ஏற்படுவதில் அது பொதுமக்களுக்கும், போக்குவரத்துக்கும் இடைஞ்சல் ஏற்படாத வகையில் இருக்க வேண்டும் என்பதை மனதில் கொண்டு ஒத்துழைப்பு



கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக எந்தக் கட்சியாக இருந்தாலும் அனைத்திந்திய அண்ணா தி.மு.க., தி.மு.க., இந்திரா காங்கிரஸ் போன்ற எந்தக் கட்சியாக இருந்தாலும் கொடிக்கம்பங்களை ஏற்படுத்தும்போது அது பொது மக்களுக்கும், போக்குவரத்துக்கும் இடைஞ்சல் ஏற்படாத வகையில் அவர்கள் இந்த மாநகராட்சிக்கு ஒத்துழைப்பு கொடுத்தால் இன்னும் நன்றாக இருக்கும்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறும்போது கோயில்கள் இருக்கக்கூடாது என்பது அல்ல இந்த அரசின் கொள்கை என்று சொன்னார்கள். கோயில்கள் இருக்கட்டும். இந்தப் பிரச்சனை சென்னையில் மட்டும் இல்லை, பல இடங்களில் பொதுமக்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தும் வகையில் மக்களுடைய சமுகமான வாழ்க்கையை பாதித்து வருகிறது. கோயில்களை அவரவர்கள் சொந்த இடங்களில், வேண்டுமானால் கட்டிக்கொண்டு போகட்டும். பொது இடங்களில், அரசு புறம்போக்கு நிலங்கள் ஆகியவற்றில் யாரும் கோயில்கள் கட்டக்கூடாது என்று கடுமையான உத்திரவை அரசு போடுமா என்பதை நான் சீரியஸாக கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, ஏற்கெனவே அதற்கான விதிமுறைகள் இருக்கின்றன. சட்ட நடவடிக்கைகளை நாம் எடுக்க முடியும். அதற்கு ஏற்றவாறு சட்டங்கள் இருக்கின்றன. ஆனால் சட்டத்தை மீறுகிறவர்களை எத்தனை நாளுக்கு நாம் தடுக்க முடியும்? கூடுமான அளவுக்கு நாம் தடுத்து வருகிறோம். அதையும் மீறி ஆக்கிரமிப்புகள் செய்கின்ற நேரத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தவிர்க்கப்படவேண்டிய இடங்களில் தவிர்க்கப்படுகிறது. தவிர்க்க முடியாத அந்த வகையில் ஒரு சில கோயில்கள் வந்துவிடுகின்றன, ஆகவேதான் அரசியல் கட்சிகளும் பொதுமக்களும் இதற்கு முழு ஒத்துழைப்பு கொடுத்தால்தான் இந்த நிலைமைகளை எல்லாம் சீராக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9–50)

திரு. என். ரெட்டப்பா : தலைவர் அவர்களே, சென்னை நகரில் மட்டுமல்லாமல் பல நகராட்சி, பெரு நகராட்சி பகுதிகளிலே நடைபாதை கோயில்கள் என்று மட்டுமல்லாமல், நடைபாதையின் நடுவிலேகூட கோயில்கள் ஏராளமாக புதிதாக அல்ல—எல்லாம் பழையதாகவேகட்டப்பட்டு அவை இன்னும் இருந்து கொண்டு இருப்பதை அரசு அறியுமா? அவைகளை அகற்ற ஆவன செய்ய அண்ணாவின் வழிவந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மூலக்கேள்வி மாநகராட்சியைப் பொறுத்தது. நகராட்சிகளைப் பற்றித் தனிக் கேள்வி போட்டால் கண்டிப்பாகப் பதில் சொல்லப்படும்.

நகராட்சியிலுள்ள பொதுச் சுகாதாரத்துறையினையும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் கீழ்கொண்டுவரும் திட்டம்.

*வினா எண் 50—திரு. ஆர். ரங்கசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகராட்சியிலுள்ள மற்றதுறைகளை நகராட்சி நிர்வாகத்துடன் இணைத்ததுபோல், நகராட்சியிலுள்ள பொது சுகாதாரத் துறையினையும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் கீழ் கொண்டு வரும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஆம்.

வருஷநாட்டையும்—வத்திராயிருப்பையும் இணைக்கும் வகையில் சாலை அமைக்கும் திட்டம்.

*வினா எண் 51—திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியகுளம் வட்டத்திலுள்ள வருஷநாட்டையும் ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டத்திலுள்ள வத்திராயிருப்பையும் இணைக்கின்ற வகையில் சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இப்பணியை 1982–83 ஆம் ஆண்டு மலைச் சாலைகள் திட்டத்தில் மேற்கொள்ள பரிசீலனை செய்யப்பட்டது. போதிய நிதி ஒதுக்கீடு இல்லாததன் காரணமாக இப்பணியை இவ்வாண்டில் மேற்கொள்ள இயலவில்லை.

பேரூராட்சிகளின் நிர்வாகப் பொறுப்பைக் கவனித்து வரும் மண்டல இயக்குநர்கள்.

*வினா எண் 52—திரு. செ. செம்மலை : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூராட்சிகளின் நிர்வாகப் பொறுப்பை கவனித்து வரும் மண்டல இயக்குநர்களின் எல்லை குறைந்தது இரண்டு மாவட்டங்களாக இருப்பதால் பேரூராட்சிகளின் அலுவல்களைத் திறம்பட கண்காணிக்க முடிவதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு அலுவலரை நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) பேரூராட்சிகளின் நிர்வாகப் பொறுப்பைக் கவனிக்க ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு அலுவலர்' கோட்ட வளர்ச்சி அலுவலர் நிலையில் நியமிக்கப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு தலைவர் அவர்களே, பேரூராட்சிகளுக்கும் தன்னிறைவுத் திட்டம் நீட்டிக்கப்படுகிற நிலையில் அந்தப் பணிகளைச் செய்யவும் திட்ட மதிப்பீடுகளைத் தயார் செய்யவும் ஒன்றியப் பொறியாளர்களையே நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. அதனால் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே பேரூராட்சிகளுக்கு தனியாக பொறியாளர்களை நியமிக்க அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, அது பரிசீலனையில் உள்ளது.

திரு. ஏ. எம். சேதுராமன் : தமிழகத்திலே இதுவரை தனி அதிகாரிகள் எத்தனை பேர்கள் நகராட்சியின் நிர்வாகத்திற்காக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்? அந்த அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டு இருக்கின்ற அதிகாரங்கள் அவைகளை முன்னேற்றுவதற்கு எவ்வளவு உதவியாக இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, 15 பேர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்களுக்கு உள்ள அதிகார வரம்புகள் 8 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு இருக்கின்றன. அவைகளையெல்லாம் படித்தால் அதிக நேரமாகிவிடும். ஆகவே தனியாக வந்தால் அவர்களிடம் தெரிவிக்கலாம்.

மாணவர் இல்லங்களிலுள்ள மாணவர்களை மருத்துவ சோதனை செய்யும் திட்டம்.

*வினா எண். 53—திரு. சி. கோபால் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசின் சார்பில் நடத்தப்படும் மாணவர் இல்லங்களில் உள்ள மாணவர்களை மாதத்திற்கு ஒரு முறை சோதனை செய்ய ஆங்காங்கே உள்ள அரசு மருத்துவர்கள் பணிக்கப்படுவார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : ஆதி திராவிட நலத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள மாணவர் இல்லங்களிலுள்ள மாணவர்களை அந்தந்த இடங்களில் உள்ள மருத்துவமனை அல்லது ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அதிகாரிகள் மாதம்

ஒரு முறை மாணவர்களை சோதனை செய்து வருகின்றனர். மற்ற மாணவர் இல்லங்களில் உள்ள மாணவர்களை மருத்துவர்களால் சோதனை செய்யும் திட்டம் இத்துறையில் இல்லை.

திரு. சி. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிற போது ஆதி திராவிட நலத்துறையின் சார்பிலே இயங்குகின்ற இல்லங்களுக்கு மட்டும் என்று சொன்னார்கள். கிராமப்புறங்களில் பல இடங்களில் பிற்பட்ட நலத்துறையின் சார்பிலே நடைபெறுகிற இல்லங்களுக்கும் மாதத்திற்கு ஒருமுறை அங்கே இருக்கிற மாணவர்களை பரிசோதிக்க வேண்டுமென்று அரசு உத்தரவிடமுன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கனவே ஒரு அரசாணை இருக்கிறது. ஜி. ஓ. எண். 1814. அந்த அரசாணையின் படி the Government empowers the Superintendents. Principals and Deans of the Colleges and Hospisals to grant permission t Medical officers working under h ir control to Supervise — என்று இருக்கிறது. ஆகவே அதை பயன்படுத்திக் கொண்டு இந்த வேலையில் ஈடுபடலாம். அதுமட்டுமல்லாமல் ஸ்பெஷல் ஸ்கூல் இன்ஸ்பெக்ஷன் ஸ்கீம் என்று 153 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும், 33 முனிசிபாலிட்டீஸ் எல்லைக்குள் 7 லட்சம் மாணவ, மாணவியர்களை பரிசோதனை செய்யக்கூடிய ஒரு திட்டம் இந்த ஆண்டு கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே அந்தத் திட்டத்தின் கீழே எல்லா மாணவர்களும் பயன் அடையக்கூடிய நிலைமை இருப்பதால் மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிற கருத்து தற்போது பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாறு காணாத வகையில் கடந்த ஆண்டு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு ஏறத்தாழ 1,400 மருத்துவர்களை நியமிக்க உத்தரவிட்டிருப்பதாக நாம் அறிகிறோம். அதே வகையில் மேலும் 1,000 மருத்துவர்களுக்கு புதியதாக வேலை வாய்ப்பினை உருவாக்கித் தருகிற திட்டம் பரிசீலனையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த நிலையில் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை கல்லூரி, பள்ளிகளில் படிக்கிற மாணவர்களின் இல்லங்களுக்கு கட்டாயமாக அரசு மருத்துவர்கள் சென்று மாணவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிற நிலைமையினை அறிய அரசு உத்தரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நல்ல யோசனை; பரிசீலிக்கப்படும்.



## தமிழ்நாட்டில் லாப்ராஸ்கோப் என்ற நவீன கருவியைப் பயன்படுத்தி கருத்தடை அறுவை சிகிச்சை செய்யும் திட்டம்.

*வினா எண். 54—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் லாப்ராஸ்கோப் என்ற நவீன முறையில் கருத்தடை ஆபரேஷன் செய்ய அரசு பரிசீலனை செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது முதல் செயலுக்கு வரும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் லாப்ராஸ்கோப் என்ற நவீன கருத்தடை அறுவை சிகிச்சைக் கருவியைப் பயன்படுத்தி மே திங்கள் 1980 முதல் ராயபுரத்தில் அமைந்துள்ள ராஜா சர் ராமசாமி முதலியார் மருத்துவமனையிலும் மார்ச்சு மாதம் 1981-லிருந்து எழும்பூரில் அமைந்துள்ள மகப்பேறு மற்றும் தாய்சேய் நல மருத்துவமனையிலும் மற்றும் மே மாதம் 1981-லிருந்து மதுரை ராஜாஜி மருத்துவமனையிலும் மகளிர்க்கான குடும்பநல அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் திருவல்லிக்கேணியில் கஸ்தூரிபாய் மெமோரியல் மருத்துவமனையில் டாக்டர் கண்ணம்மாள் என்பவர் தன் கருவைக் கலைப்பதற்கு முயற்சி செய்து அந்த இடத்திலேயே இறந்து போயிருக்கிறார். அந்த அறுவை சிகிச்சையின்போது லாப்ராஸ்கோப் கருவி உபயோகிக்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது சென்னையிலும், மதுரையிலும் மட்டும் தான் அந்த லாப்ராஸ்கோப் முறையில் கருத்தடை ஆபரேஷன் நடந்து வருவதாகத் தெரிவித்தார்கள். அண்மையில் கோவில்பட்டியில் இந்த முறையில் ஆபரேஷன் நடைபெற்று ஒரு பெண்மணி ஒரு மணி நேரத்திலேயே இறந்து விட்டதாக அரசாங்கத்திற்கு மனு அனுப்பியிருக்கிறார்கள். ஆபத்தான முறையாக இருக்கிறதே, இறந்தவருக்கு நஷ்டயீடு அளிக்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களக்கு என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இதுவரையில் சென்ற ஆண்டு 4 ஆயிரம் பேர்கள் லாப்ராஸ்கோப் மூலம் அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு டிசம்பர் மாதம் வரையில் 14 ஆயிரம் பேர்களுக்கு இந்த அறுவை சிகிச்சை நடைபெற்றிருக்கிறது.

(முற்பகல் 10·00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் அனுமதியுடன் வினாக்கள் விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி சொல்லக்கூடிய பிரச்னையில் வேறு ஒரு காரணத்திற்காக இறந்ததாகத்தான் நமக்கு தகவல் வந்திருக்கிறது. என்ன காரணத்தால் இறந்திருந்தாலும், உடனடியாகத் தக்க நிவாரணப் பணம் கொடுக்கச் சொல்லியிருக்கிறோம். இறந்தது லாப்ராஸ்கோப் பயன்படுத்தியதனால் அல்ல. லாப்ராஸ்கோப் என்ற முறை வெகு எளிதாக எந்தவிதமான பிரச்னையும் இல்லாமல், தழும்பு கூட காணப்படாத அளவுக்கு, வெகு சுலபமாக செய்யக்கூடிய அறுவை சிகிச்சையாகும். மற்ற மாநிலங்களிலே ரொம்பவும் முன்னேறி இருக்கிறார்கள். நாம் கொஞ்சம் எச்சரிக்கையாக அதைச் செய்து கொண்டிருக்கிறோம்.

**திரு. ஆ. வெள்ளைச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லாப்ராஸ்கோப் முறை மற்ற முறைகளைக் காட்டிலும் எந்த அளவு மாறுபட்டது, எந்த அளவுக்குச் சிறப்புடையது என்பதை அறிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெகு சுலபமாக காலையிலே ஆபரேஷன் செய்து கொண்டு — வயிற்றுக்குள்ளே அப்டாமின் — காற்று அனுப்பி 'பிஷ்' செய்துவிட்டு, உடனடியாக, டியூப் ரப்பர் பேன்ட் மூலமாக, அதை 'அக்ரூஷன்' என்று சொல்வார்கள். அப்படிச் செய்யக்கூடிய ஆப்பரேஷனாக இருக்கிறது. — அப்படிச் சுலபமாக செய்து கொண்டு, அன்று மாலையிலே கூட அவர்கள் இல்லத்திற்குத் திரும்பி தன்னுடைய பணிகளிலே ஈடுபடலாம் என்ற அளவுக்குச் சுலபமாக செய்யக்கூடிய ஒரு அறுவை சிகிச்சை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, நான் கேட்ட ஒரு கேள்விக்கு — நடைபாதையிலே உள்ளதுபற்றி கேட்டதற்கு, அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நடைபாதை முடிந்து ரெயில் பாதைக்கே வந்தாயிற்று. நடைபாதை முடிந்து ரொம்ப நேரமாயிற்று. இது லாப்ராஸ்கோப் என்ற ஒரு முறை பற்றிய கேள்வி. நல்வாழ்வுத்துறை அமைச்சர் சம்பந்தப்பட்டது.





**திரு. பு. பொ. ஆனூர் ஜெந்கசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த லாப்ராஸ்கோப் மூலமாகச் செய்யப்படுகிற அறுவை சிகிச்சைகள் மிகப் பயனுள்ளதாக அமைந்துவிட்ட காரணத்தினால், நல்ல விளம்பரம் அமைந்துவிட்ட காரணத்தினால், மருத்துவ மனைகளுக்கு ஏராளமான ஆண்களும் பெண்களும் அந்த அறுவை சிகிச்சைக்குச் செல்கிற காரணத்தால், அவர்களுக்கு உரிய முறையில் சிகிச்சை செய்ய முடியாமல் பாதி பேர் திரும்ப வந்துவிடுகிறார்கள். ஆகவே, போதுமான அளவு எல்லா மருத்துவ மனைகளுக்கும் அந்த லாப்ராஸ்கோப் கருவிகளை வழங்கவும் அதற்காக நல்ல பயிற்சி தரவும் அரசு முன்வருமா என்பதையும், அதேபோல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அத்தனையிலும் இந்த அறுவை சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய கேள்வி நல்ல கேள்வி. செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலே இந்தப் பிரச்னை எழுப்பப்பட்டது. இப்பொழுது மகிழ்ச்சி தரக்கூடிய செய்தி என்னவென்றால், 30 லாப்ராஸ்கோப் கருவிகளை, 4, 5 நாட்களுக்கு முன்புதான் இறக்குமதி செய்து அவைகளைப் பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறோம். அது மட்டுமல்லாமல், அண்மையில் மத்திய அரசாங்க அடிஷனல் செக்கரட்டரி ஆப் ஹெல்த் திரு. பிஜ்ஜால் இங்கே வந்திருந்தார்கள். அவர்களோடு வாதாடி, அவரிடத்திலே 6 லாப்ராஸ்கோப் கருவிகளை வாங்கி இருக்கிறோம். ஆகவே, செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலேகூட நிரந்தரமாக இரண்டு லாப்ராஸ்கோப் கருவிகள் வைத்து, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் கருத்தின் அடிப்படையிலேயே பயன்படுத்த நாம் தயாராக இருக்கிறோம்.

ஆரம்ப சுகாதார நிலையங்களில் படிப்படியாகத்தான் நாம் செய்யவேண்டும். எச்சரிக்கையாக அங்கே பயன்படுத்த வேண்டும். இப்பொழுது பிரிட்டிஷ் எய்டட் தியேட்டர்கள் 30 இருக்கின்றன. முதலிலே நாம் அங்கே ஆரம்பிக்கத் தயாராக இருக்கிறோம்.

**திரு. ப. பொன்னுரங்கம் :** தலைவர் அவர்களே, இந்த லாப்ராஸ்கோப் மூலமாகச் சிகிச்சை பெறுகின்றவர்கள் மீண்டும் கருத்தரிக்க முடியும், அதாவது இரண்டு ரிங்ஸ் எடுத்துவிட்டால், மீண்டும் கருத்தரிக்க முடியும் என்பது உண்மையா ? அப்படியென்றால், மீண்டும் கருத்தரிக்க வாய்ப்பிருக்கும் என்ற வகையில் அந்த அறுவை சிகிச்சை செய்ய முடியும் என்பது உண்மையா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையிலே ஏறத்தாழ 1—½ ஆண்டுகளாக நாம் பயன்படுத்தி வருகிறோம். ஆகவே, இந்தப் பிரச்னை சில மாதங்களுக்குப் பிறகோ, சில ஆண்டுகளுக்குப் பிறகோ எழுந்தால், பரிசீலிக்கப்படும்.

### குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தை அமுல்படுத்துவதில் தமிழகம் வகிக்கும் இடம்.

*வினா எண். 55—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தை அமுல்படுத்துவதில் தமிழகம் இந்தியாவில் எத்தனையாவது இடத்தை வகிக்கிறது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: குடும்பநலத் திட்டத் துவக்கக் காலம் (1956 வருடம்) முதல், 1981 ஆம் ஆண்டு நவம்பர் வரையில், குடும்பநலத் திட்டத்தின்கீழ், அறுவைச் சிகிச்சை அனுசரிப்பவரின் விகிதத்தின் அடிப்படையில் தமிழ்நாடு மூன்றாம் இடத்தை வகிக்கிறது.

### வயது முதிர்ந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம்.

*வினா எண். 59— திரு. கு. ரமணி: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வயது முதிர்ந்து செயல்பட முடியாமல் போகிற விவசாயத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் கொடுக்க அரசு தீர்மானித்துள்ளதை நடைமுறையாக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

(ஆ) அந்த ஓய்வூதியம் பெற என்னென்ன தகுதிகள் தேவை?

(இ) இப்படிப்பட்ட விவசாயத் தொழிலாளர்களின் பெயர்களை கிராமங்களில் பதிவு செய்ய என்ன ஏற்பாடுள்ளது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) வயது முதிர்ந்து செயல்பட முடியாமல் போகிற விவசாயத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் கொடுக்க அரசு தீர்மானித்துள்ளதை நடைமுறையாக்கும் வகையில், 1981–82-ம் ஆண்டில் முப்பதாயிரம் நபர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்க 98·46 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது.

(ஆ) இந்த அரசு ஓய்வூதியம் பெறும் நபர்கள், 60 வயதுக்கு குறையாதவர்களாகவும் விவசாயத் தொழிலாளர்களாகவும் வேறு வேலை ஏதும் செய்ய முடியாதவர்களாகவும், தம்மை காப்பாற்ற எவரும் இல்லாதவர்களாகவும், ஆதரவற்றவராகவும் இருத்தல் வேண்டும்.



(இ) இத்திட்டம் எல்லாக் கிராமங்களிலும் நன்கு விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. தகுதி உள்ள நபர்கள் தங்களுடைய விண்ணப்பத்தை வட்டாட்சியருக்கு அனுப்ப வேண்டும்.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, கிராமங்களில் இருக்கின்ற பல்லாயிரக்கணக்கான தாழ்த்தப்பட்ட, ஏழை எளிய விவசாயத் தொழிலாளர்களுக்கு இந்தத் திட்டத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளவேகூட முடியாமல் இருக்கிறது. அவர்கள் படிப்பு அற்றவர்கள். ஆகவே, இதைப்பற்றி அவர்களுக்குத் தெரிய வைக்கும் வகையில் ஒவ்வொரு பஞ்சாயத்து வாரியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? என்னமுறையில் விளம்பரப்படுத்தித் தெரியப்படுத்தப்பட்டுள்ளது? அந்த வகையில் எவ்வளவு விவசாயக் கூலித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்று அறிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் ஏற்கனவே பதிலில் கூறியிருக்கிறேன். விளம்பரம் செய்யப்பட்டு அதன் மூலமாக வட்டாட்சியர் அலுவலகத்தில் முதியோர் உதவித் தொகை பெறுவதற்கான மனுக்கள் கொடுக்கப்படுகின்றன. அதை வாங்கி நல்லமுறையில், தகுதி உள்ளவர்கள் அதை நிரப்பி பிறகு வட்டாட்சியருக்கு அனுப்பினால் அவர்கள் ஓய்வூதியம் பெறுவார்கள்.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, வட்டாட்சியர் அலுவலகம் என்று நமது அமைச்சரவர்கள் குறிப்பிடுகிறார்கள். இந்த விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு அந்த அலுவலகங்கள் எங்கு இருக்கின்றன என்று தேடிப் போய்த் தங்கள் பெயர்களைப் பதிவு செய்வது என்பது சாதாரண நடைமுறையில் மிகவும் கஷ்டமான காரியம். எனவே, அதற்குப் பதிலாக அவர்கள் இருக்கின்ற ஒவ்வொரு பஞ்சாயத்துக் காரியாலத்திலேயும் அதற்கென்று தனி இடம் ஏற்படுத்தி அங்கே அவர்கள் வந்து நிரந்தரமாகத் தாங்கள் வேலையற்றவர்கள் என்றும், குறிப்பிட்ட தகுதி உடையவர்கள் என்றும் இருப்பவர்கள் வந்து பதிவு செய்கின்ற நடைமுறையை அரசு கொண்டு வருமா? இதுவரையில் அப்படித் தமிழகத்தில் பதிவு செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பஞ்சாயத்துவாரியாக அவர்களுக்கு இது வரைக்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அவர்கள் ஒவ்வொரு வட்டாட்சியருக்கும்தான் மனுக்கொடுத்து அதன் மூலம் உதவித் தொகை பெற்று வருகிறார்கள். அந்த அடிப்படையிலேதான் இந்த அரசு செயல்பட்டு வருகிறது. மொத்தம் உதவித் தொகை பெறுகின்றவர்கள் 1,99,158 பேர்கள். அவர்களில் ஆதரவற்ற விவசாயத் தொழிலாளர்கள் 30,000 நபர்கள் உதவித் தொகை பெறுகிறார்கள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முதியோர் உதவித் தொகை பெறுவதற்கு தாசில்தாருக்கு மனு கொடுக்கப்பட்டு, டாக்டர் சர்டிபிகேட் வாங்கிக் கொடுக்கப்பட்டு, அனாதை என்று சர்ட்டிபிகேட் வாங்கிக் கொடுக்கப்பட்டு இருந்தும் இன்னும் பல்லாயிரக் கணக்கான நபர்கள் இந்த உதவித் தொகையைப் பெறாமல் இருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்டால் வேகன்சி இல்லை, யாராவது இறந்தால்தான் கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள். ஆகவே இதையெல்லாம் பரிசீலனை செய்து எத்தனை மனுக்கள் இருக்கின்றனவோ அத்தனை பேர்களுக்கும் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் ஒருவர் இறந்த பிறகு அவருடைய இடத்தை நிரப்ப மற்றொரு தகுதி வாய்ந்த முதியோருக்கு உதவித்தொகை வழங்கப்பட்டு வந்தது. அது வழக்கமாக இருந்து வந்தது. ஆனால் இப்பொழுது நாங்கள் — இந்த அரசு பதவியேற்றதற்குப் பிறகு அப்படியுள்ள அந்த முறையைக் கடைப்பிடிக்காமல் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எவ்வளவு பேர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற முறையை வரையறுத்து அதன் மூலமாக நாங்கள் முதியோர் உதவித்தொகை கொடுத்து வருகிறோம்.

(முற்பகல் 10-10)

திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் சொல்வதைப்போல இல்லாமல் இறந்தவர்களால் ஏற்படுகின்ற காலியிடத்திற்கு மட்டும் புதியவர்கள் பெறுகின்ற பழக்கம் நடைமுறையில் இருந்து வருவதாக ரெவின்யு அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள். இதைப்பற்றி மீண்டும் இலாகாவிலே விசாரித்து நல்ல பதிலைக் கொடுக்க அரசு முன் வருமா?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** தலைவரவர்களே, அப்படிப்பட்ட முறையை அரசு கையாளவில்லை. ஒரு வருடத்திற்கு 30 ஆயிரம் பேர்கள், 20 ஆயிரம் பேர்கள் என்று வரையறுத்து அதன் மூலம் கொடுத்து வருகின்றோம். இந்த 1982 ஆம் ஆண்டுக்கு 10 ஆயிரம் பேர்களுக்குக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டு வருகிறோம்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விவசாயத் தொழிலாளர்களுக்கு, முதியோர்களுக்கு 30 ஆயிரம் பேர்களுக்குக் கொடுப்பதாகச் சொன்னார்கள். நான் கேட்பதெல்லாம், இன்றைக்கும் தாசில்தார் அவர்கள் கொடுக்கின்றபோது, கோட்டா அடிப்படையில்தான் கொடுக்க முடியும் என்று சொல்லுகிறார்கள். நான் சொல்ல விரும்புவது 60 வயது



முடிந்த எல்லா விவசாயத் தொழிலாளர்களுக்கும் கொடுக்க வேண்டும். வருடத்திற்கு 4 மாதங்கள்தான் அவர்களுக்கு வேலை இருக்கும், மற்ற நாட்களில் அவர்களுக்கு வேலை இல்லை. எனவே 60 வயது முடிந்த அனைவரும் பென்ஷன் வாங்கத் தகுதி பெற்றவர்கள் என்று கருதி, அனைவருக்கும் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அனைவருக்கும் உதவித் தொகை கொடுக்க வேண்டும் என்றால், நம்முடைய நிதி நிலையையும் பார்க்க வேண்டும். ஒவ்வொரு முதியோருக்கும் ஆண்டுக்கு 860.50 ரூபாய் கொடுக்கிறோம். நபர் ஒன்றுக்கு ஒரு வருஷத்திற்கு உதவித் தொகை ரூ. 420.00, ஆண்டுக்கு இரு முறை வேட்டி, புடவை ரூ. 60.00; வாரம் அரை கிலோ அரிசி ரூ. 52.00; ரூ. 0.90 பைசா வீதம் மதிய உணவிற்காக ரூ. 328.50. எனவே அரசின் மூலமாக கிடைக்கும் உதவித் தொகை ரூ. 860.50. ஆகவே இந்த அடிப்படையை வைத்துக்கொண்டு நாம் நிதிநிலைமையை வரையறுத்து அதற்கேற்றவாறு கொடுத்துக் கொண்டு வருகிறோம்.

திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஓய்வு ஊதியம் பெறுவதற்காகத் தகுதி பெற்றவர்களின் பட்டியலைச் சேகரிக்க அந்தந்த வட்டாரத்தில் உள்ள கிராம சேவக்குக்குத் தாக்கீது அனுப்பி, அவர்கள் மூலம் பட்டியலைத் தயாரித்து அரசுக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** தலைவர் அவர்களே அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

**கால்நடைத் துறையிலுள்ள நோய்த்தடுப்பு புலனாய்வுப் பிரிவு**

* **வினா எண். 60—திரு. எம். கே. ராஜமாணிக்கம் :** மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடைத் துறையில் நோய்த்தடுப்பு புலனாய்வு பிரிவு இயங்குகிறதா?

(ஆ) அவர்களுக்குப் பணி வரையறுக்கப்பட்டுள்ளதா?

(இ) நோய்த் தடுப்புப் பணியை வேறு யார் யார் கவனிக்கிறார்கள்?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** (அ) ஆம்.
(ஆ) ஆம்.

(இ) நோய் வளர்ச்சி பற்றி அறிந்தவுடன் அருகில் உள்ள கால்நடை மருத்துவமனை கால்நடை உதவி மருத்துவர் அந்த கிராமத்திற்குச் சென்று நோய் தன்மை பற்றி அறிந்து நோயுற்ற

கால்நடைகளுக்குச் சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்யப்படுகிறது தேவையான தடுப்பு மருந்து இராணிப்பேட்டை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் தயாரிக்கப்பட்டு பெறப்படுகிறது. நோய்த் தன்மை அறிந்தவுடன் கால்நடை உதவி மருத்துவர், தடுப்பூசியாளர்கள் கால்நடை உதவியாளர்கள் ஆகியோர்கள் மூலம் நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. வெக்கை நோயினை பரவாமல் தடுக்கவும் வெக்கை நோய் தடுப்பு திட்டத்தின் கீழ் 17 மாவட்டக்குழு, 10 விடுப்புக் குழு, 10 சோதனைச் சாவடிகள் முதலியன கால்நடை உதவி மருத்துவர் தலைமையின் கீழ் பணிபுரியும் தடுப்பூசியாளர்கள் மூலம் இயங்கி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்பு.

### கைது செய்யப்பெற்ற உறுப்பினர்கள் விடுதலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னை நகரக் காவல் ஆணையாளரிடமிருந்து கீழ்க்கண்ட செய்திகள் வரப்பெற்றுள்ளன என்பதைப் பேரவைக்குத் தெரிவிக்கிறேன்.

"I have the honour to inform you that Thiru P. Ponnurangam MLA who was arrested at 9.45 hours today (28-1-1983) in X Station was released in the evening.

I have the honour to inform you that Thiru A. Selvarajan, MLA who was arrested at 10.15 hours today (28-1-1983) in X Station was released in the evening.

I have the honour to inform you that Thiru N.V.N. Somu, MLA who was arrested at 9.30 hours today (28-1-1983) in X Station was released in the evening.

I have the honour to inform you that Thiru A. Rehmankhan MLA who was arrested at 10.15 hours today (28-1-1983) was released in the evening.

I have the honour to inform you that Thiru D. Purushothaman, MLA who was arrested at 10.00 hours today (28-1-1983) in X Station was released in the evening".



## 3. கவன ஈர்ப்பு.

### திரைப்படங்கள் ஏற்றுமதி பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 54-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கவன ஈர்ப்பு ஒன்றினை திரு. இரா. தாமரைக்கனி அவர்கள் அறிவிக்கை கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் வராத காரணத்தால், இதை திரு. வேடசந்தூர் பாலசுப்பிரமணியன் அவர்கள் மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவரவர்களே, 'இந்திய தேசிய திரைப்பட அபிவிருத்திக் கழகம் சமீபத்தில் திரைப்படங்களுக்கான விலையை உயர்த்தி விட்டதால், இலங்கைக்கு ஏற்றுமதியாக வேண்டிய 36 திரைப்படங்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டதால் தமிழக படத்தயாரிப்பாளர்கள், திரைப்படக் கலைஞர்கள், தொழிலாளர்களிடையே நிலவும் கவலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, இந்திய தேசிய திரைப்பட அபிவிருத்திக் கழகம் ஒரு மத்திய அரசு நிறுவனமாகும். இலங்கை அரசு அமைத்துள்ள திரைப்பட நிறுவனத்திற்கு தமிழ்ப்படங்கள் இந்திய தேசிய திரைப்பட அபிவிருத்திக் கழகத்தின் மூலமாக விற்கப்படுகின்றன. இந்திய தேசிய திரைப்பட அபிவிருத்திக் கழகம், திரைப்பட ஏற்றுமதியில் ஒரு முகவராகத்தான் செயல்படுவதாக தெரிகின்றது. கவன ஈர்ப்பு அறிவிப்பில் சொன்ன பொருள் குறித்து குறிப்பிட்ட வகையில் அரசுக்கு முறையீடு வருமேயானால், சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு ஆவன செய்யப்படும்.

## 4. தகவல் கோரல்.

### (அ) முன் அனுமதியின்றி எழுப்பப்பெறும் பிரச்சினைகள்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, ராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகாசியில் மிகவும் பதட்டமான நிலை இருந்து கொண்டிருக்கிறது. அங்கே எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய உரிமைகளைக் காப்பாற்றுவதற்காக உண்ணாவிரதப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் உண்ணும் போராட்டம் நடத்துகிற........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்குப் பதில் வேண்டுமானால் அவசரத் தீர்மானம் மூலமாக, 54-வது விதியின் கீழ் கொண்டு வாருங்கள்.

திரு. கு. பா. பழனியப்பன் : தலைவரவர்களே, நாகர்கோவில் வழக்கறிஞர்கள் சங்கத்தின் சார்பாக 2 நாட்களாக, அங்கே போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலில் நோட்டீஸ் கொடுங்கள். வரிசையாக வரும். போராட்டம் எதுவாக இருந்தாலும் நோட்டிஸ் கொடுங்கள்.

(இ) அரசு சட்டமுன்வடிவுகள், உத்திரவுகள் தமிழிலே வெளியிடாமல் இருத்தல்.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான செய்தி, இம்பார்ட்டன்ட் மேட்டர்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம்பார்ட்டன்ட் மேட்டராக இருந்தால் என்னுடைய அறைக்கு வாருங்கள். பேசுவோம். திடீரென்று சபையிலே இம்ப்பார்ட்டன்ட் மேட்டர் என்று சொல்லக்கூடாது (குறுக்கீடு).

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, இது மிக முக்கியமானது. இந்த அரசாங்கத்தின் சட்டமுன்வடிவுகள், உத்தரவுகள் எல்லாம், அனைத்தும் ஆங்கிலத்திலே வந்து கொண்டிருக்கின்றன. தமிழிலே வெளியிடுவது இல்லை, உத்தரவுகள் எல்லாம் ஆங்கிலத்திலே வருகின்றன. இதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்த உத்தரவு தமிழில் வரவில்லை என்று சொல்லுங்கள். அதற்கான தமிழ் விளக்கத்தை நான் தர ஏற்பாடு செய்கிறேன்.

5. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் தொடர்ச்சி.

*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நம்முடைய கவர்னர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்த அறிக்கையை நான் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு ஒருசில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். நம்முடைய ஆளுநர் அவர்கள் முதன்முதலாகத் தமிழிலேயே அவர்களுடைய உரையை நிகழ்த்தியது நாம் அனைவரும் பெருமை படக்கூடிய ஒரு விஷயம். அந்த அடிப்படையிலே மொழிப் பிரச்னையை எடுத்துக்கொண்டாலும், அகில இந்திய அளவில் நம்முடைய அகில உலக மேதை, ஆசியாவின் ஜோதி பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்தி பேசாத மக்கள் விரும்புகின்ற வரை ஆங்கிலம் நீடிக்கும், அங்கே இந்தி திணிக்கப்படாது என்று சொன்னார்கள். அதைத்தான் நாம் வற்புறுத்திக் கொண்டு வருகிறோம். அந்த அடிப்படையில் நம்முடைய அரசு



(முற்பகல் 10-20)

யாராவது விரும்பி ஒரு மொழியைப் படித்தால்—நானே என்னுடைய மகனை, என்னுடைய குழந்தைகளை இந்தி, தமிழ், ஆங்கிலம் படிக்கவைக்க வேண்டும் என்று விரும்பி படிக்க வைத்தால் அதைத் தடை செய்யக்கூடாது. ஏனென்றால், 'திரை கடல் ஓடியும் திரவியம் தேடு' என்று முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைப்போல இன்றைக்குத் தமிழ்நாட்டு மாணவர்கள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். பாஸ் செய்துவிட்டு வடமாநிலங்களில் வேலைக்குச் சென்றால் அல்லது ரயில்வேயில் வேலைக்குச் சென்றால், அவர்களுக்குக் கண்டிப்பாக இந்தி, ஆங்கிலம் தெரிந்து இருக்கவேண்டும். ஆகவே, அந்த அடிப்படையில் யாராவது விரும்பிப் படித்தால் அதற்கு எந்தக் காலத்திலும், எந்த நேரத்திலும் தடையில்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது தமிழக அரசின் கடமை, தமிழ் மக்களின் கடமை என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழகத்தில் வறட்சி நிலைமை மிக மோசமாக இருக்கிறது இன்னும் ஒரு மாத காலம் அல்லது இரண்டு மாத காலத்திற்குள் மழை பொழியவில்லை என்று சொன்னால், நிச்சயமாகக் குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லாமல் போய்விடுமோ என்று அஞ்சும் நிலைமை இருக்கிறது. மாநில அரசு வறட்சி நிவாரணப் பணிகளுக்காகத் திட்டம் போட்டு 190 கோடி ரூபாய் மத்திய அரசிடம் கேட்டு இருக்கிறது. அந்தத் தொகை போதாது. கிட்டத்தட்ட ஒரு மாவட்டத்திற்கு—நேற்று வடாற்காடு மாவட்ட கலெக்டர் சொல்லியிருக்கிறார் 50 கோடி ரூபாய் வேண்டும் என்று 50 கோடி அளவிற்குத் தேவைப்படுவதால், கிட்டத்தட்ட 300 கோடி ரூபாய் அளவிற்கு நமக்குத் தேவைப்படும். ஆகவே, அந்த அளவிற்குத் தொகை அளிக்கவேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்திக் கேட்கவேண்டும். அவர்களும் அதை சாங்ஷன் செய்யவேண்டும். அந்த அடிப்படையில் அந்தப் பணிகள் செய்யப்பட்டால் அது சாலச்சிறந்ததாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

அதைப்போலவே, வறட்சி நிலைமை இருப்பதால், குடிநீர்ப் பிரச்னை ஆங்காங்கு இருக்கிறது. கண்மாய்களில் தண்ணீர் இல்லை. கிணறுகளில் இருந்துகூட தண்ணீர் கிடைக்குமா என்று அஞ்சும்படியான நிலைமை கிராமங்களில் இருக்கின்றன. ஆகவே, குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்கும் வகையில், ஒரு போர்க்கால நடவடிக்கை என்ற அடிப்படையில், எங்கெங்கே தண்ணீர் தட்டுப்பாடு இருக்கும் என்று அரசு கருதுகிறதோ அங்கேயெல்லாம் இப்போது போர் வெல்ஸ் ஏற்படுத்தி, நூறு அடி, 120 அடி ஆழம் வெட்டியாவது குடிநீர் வசதி அளிக்க அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் ஏராளமான கண்மாய்கள் இருக்கின்றன. அவைகளில் தண்ணீர் இல்லை. இராமநாதபுரம் பெரிய மாவட்டம். அந்த மாவட்டத்தில் 7,300 கண்மாய்கள் இருக்கின்றன. அவற்றில் 5,000 கண்மாய்களில் தண்ணீர் இல்லை. வற்றிப் போய் இருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட கண்மாய்களில் எல்லாம் பெரிய பெரிய அளவில் சமூகக் கிணறுகளை வெட்டித் தரவேண்டும். குறிப்பாக, திருப்புவனம், நரிக்குடி போன்ற இடங்களில் கிணறுகள் வெட்டப்படவேண்டும். ஏற்கனவே அந்த வேலைகள் அங்கே செய்யப்பட்டு வந்தன. மத்திய அரசின் உதவியோடு செய்யும் அந்த வேலையை மார்ச்சு மாதத்தோடு நிறுத்த வேண்டுமென்று சொன்னதாக தெரிகின்றது. அரசு தன்னுடைய நிதியில் இருந்து அந்தப் பணியைச் செய்து முடிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த வறட்சி நிவாரணப்பணியின்கீழ் கண்மாய்களை ஆழப்படுத்தவும், கரைகளை உயர்த்தவும் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் ஐ.ஆர்.டி.பி. மூலமாக 20 அம்சத்திட்டத்தின் அடிப்படையில் பால் மாடுகள் வாங்கிக் கொடுக்கிறோம். அந்த மாடுகளுக்கு தற்போது குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை; புல் கிடைக்கவில்லை. ஆகவே, அமைச்சர் அவர்கள் இதிலே தனிக் கவனம் செலுத்தி, எங்கேயெல்லாம் கண்மாய்கள் காய்ந்து இருக்கின்றனவோ அங்கேயெல்லாம் பெரிய கிணறுகளைத் தோண்டி, அதன் மூலமாக ஆழ்கிணறு போட்டு தண்ணீர் வரவழைத்து அந்தத் தண்ணீரை ஆடுமாடுகளுக்குக் கொடுக்க வேண்டும். அங்கே புல் வளர்க்க வேண்டும். இத்தகைய நடவடிக்கைகளை அரசு முனைப்பாக எடுக்கவேண்டும். ஆகவே இதற்காகத் தனி ஒரு திட்டம் தீட்டி, இந்தப் பணிகளைச் செய்ய வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அப்படிக் கிடைக்கிற புல் ஒரு கிலோ 20 அல்லது 30 பைசா என்று விற்க வேண்டும். இ த வனத்துறை மூலமாக தனி அதிகாரி ஒருவரைப் போட்டு செய்வது சாலச்சிறந்ததாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

மத்திய அரசின் உதவியோடு கிட்டத்தட்ட 10 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள், டியுப் வெல் கார்ப்பரேஷனுக்கு என்று பத்திரிகையின் வாயிலாகப் பார்த்தேன். எங்கெல்லாம் அரிசனங்கள் இருக்கிறார்களோ அவர்களுக்கு இது பயன்படுகிற வகையில் செலவு செய்யவேண்டும். இத் திட்டத்தின்கீழ் பெனி-பிஷரீஸ் 10 பேர் இருந்தால், அவர்களிடத்தில் நிலம் இருந்தால், 10 ஏக்கர் நிலம் இருக்கிறது என்று சொன்னால் அந்த நிலத்தை அந்த வட்டார வளர்ச்சி அதிகாரி பொறுப்பில் எடுத்துக் கொண்டு, அதற்குக் கணக்கு வைத்துக்கொண்டு, அந்தப் பணத்தை அந்த நிலங்களுக்குச் செலவு செய்யவேண்டும். அந்த வகையில் இந்த முழுத்தொகையும் செலவு செய்யப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அதுமட்டுமல்ல. 1979-ல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு பல கண்மாய்கள் உடைந்து இருக்கின்றன. அதை எல்லாம் கூட உடனடியாக வறட்சிப் பணி வேலையாக எண்ணி செப்பனிட்டு சீர்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் இந்த பெரியார் பாசனப் பகுதிகளில் மிகுந்த வறட்சி ஏற்பட்டிருக்கிறது. அங்கே சில இடங்களில் கிணற்றுப் பாசனம் செய்யக்கூடிய அளவுக்குத்தான் தண்ணீர் இருக்கிறது. பாக்கியுள்ள எல்லாப் பகுதிகளும் வறண்ட பகுதியாக இருக்கிறது; மக்கள் வறட்சியால் வாடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் கடன் நிவாரணம் செய்ய வேண்டும்; வரி வஜா செய்து கொடுக்க வேண்டும்; அந்த வகையிலே அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, தமிழ்நாட்டிலே மின்சாரம் எவ்வளவு குறைவாக இருந்தாலும் மாண்புமிகு அமைச்சரவர்கள் அதை ஓரளவுக்கு சீர்படுத்தி, விவசாயத்திற்கு ஒரு நாளைக்கு 6 மணி நேரம் மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதற்காக இந்த அரசுக்கு விவசாயிகள் சார்பிலே நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு கேள்வி நேரத்தின்போதுகூட அமைச்சரவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அதாவது மின்சாரக் கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்று சொன்னார்கள். அதை நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை; தடுக்கவில்லை. ஆனால் சிறு விவசாயிகளுக்கு யூனிட்டுக்கு 12 பைசா என்று இருப்பதை கண்டிப்பாக உயர்த்தக்கூடாது. பெரிய விவசாயிகளுக்கு கட்டணத்தை உயர்த்துவதை நலங்கள் தடுக்கமாட்டோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, நமக்கு மின்சாரம் தட்டுப்பாடாக இருக்கிறது. ஆனால் ஆடம்பரங்களுக்கும் பல விழாக்களுக்கும் நிறைய மின்சாரம் செலவு செய்யப்படுகிறது. டெல்லியை எடுத்துக்கொண்டால் அங்கே இரவு 8 மணிக்கு மேல் அத்தகைய லைட்டுகள் அணைக்கப்படுகின்றன. அந்த நிலைமையை இங்கேயும் உருவாக்கினால் ஓரளவுக்கு மின்சாரம் மிச்சப்படும். அதைத் தொழில் துறைக்கும் விவசாயக் காரியங்களுக்கு ஒதுக்குவதில் மாண்புமிகு அமைச்சரவர்கள் சற்றுக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு மதிய உணவுத் திட்டம் பெருமளவில் செயல்படுத்தப்படுகிறது. உண்மையிலேயே அது வரவேற்கத்தக்கது. பண்டித நேருவின் ஒப்பற்ற வாரிசாக இருந்த தலைவர் காமராஜ் அவர்கள் மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அவர்கள் கொண்டு வந்தபோது ஒரு குழந்தைக்கு

15 பைசா என்ற அளவுக்கு செலவிடப்பட்டது. அந்தத் திட்டத்தை இப்போது மிகப் பெரிய அளவிலே நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள். இதை நாங்கள் பாராட்டுகிறோம்.

அது மட்டுமல்ல. மாண்புமிகு அமைச்சர் கோமதி அவர்கள் சொல்லியிருப்பதைப்போல நல்லமுறையிலே இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி, குறைபாடு இல்லாமல் அமைச்சர்கள் கண்காணித்து வரவேண்டும். இந்த மதிய உணவுத் திட்டத்திற்கு காய்கறி கிடைப்பதில் கஷ்டமாக இருக்கிறது; அதனால் அவதிப்படுகிறார்கள். நாளுக்கு நாள் விலைவாசி வேறு ஏறிக்கொண்டிருக்கிறது. ஆகவே, தரிசு நிலங்கள், புறம் போக்கு நிலங்கள், பஞ்சாயத்துக்களிலும், யூனியன்களிலும் எங்கெங்கே இருக்கிறதோ அங்கே எல்லாம் அந்த நிலங்களைப் பயன்படுத்தி காய்கறி உற்பத்திச் செய்து அந்தந்த பள்ளிகளுக்குக் கொடுத்தால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், முதியோர் உதவிப்பணம் பெறுகிறவர்களுக்கு மதிய உணவு வழங்கப்படுவதாக அமைச்சர் கோமதி அவர்கள் சொன்னார்கள். இந்த உதவியை அவர்களுக்குச் செய்வது ஒருபுறமிருந்தாலும் அது திருப்திகரமாக இல்லை. ஒரு ஊரிலே 10 பேர் இருந்தால் அவர்களில் இரண்டு பேர்களுக்குத் தான் உதவிப் பணம் கிடைக்கிறது; மீதிப் பேர்களுக்குக் கிடைக்கவில்லை. அவர்களுக்கு ஆண்டுக்கு இரண்டு முறை துணியும் கொடுக்கிறார்கள். அவர்களுக்கு வழங்கப்படும் இந்த மதிய உணவுத் திட்டத்திற்கு 6.5 கோடி ரூபாய் செலவு என்று அரசாங்கம் அறிவித்திருக்கிறது. அதை நாங்கள் வரவேற்கிறோம். அதே நேரத்தில் 2 பேர்களுக்குக் கொடுத்து விட்டு மீதி 8 பேர்கள் அநாதிகளாக, பராரிகளாக, பஞ்சைகளாக விடப்பட்டிருக்கிறார்கள்; அவர்களுக்கும் கொடுத்து, அவர்களையும் காப்பாற்றினால் அது சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதியோர் உதவி கேட்டு எத்தனை மனுக்கள் வந்திருக்கிறதோ அத்தனை மனுக்களுக்கும் சாங்ஷன் செய்யப்பட்டு, அவர்களுக்கு எல்லாம் உதவி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக தன்னிறைவுத் திட்டம். இந்த தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாகப் பல வேலைகளைச் செய்திருக்கிறோம். ரோடுகள் போட்டிருக்கிறோம். கட்டிடங்கள் கட்டியிருக்கிறோம். கேள்வி நேரத்தில்கூட அமைச்சரவர்கள் இது பற்றிச் சொன்னார்கள். அப்படிப்பட்ட பணிகளை மராமத்து செய்வதென்றால் 'காமன் குட் ஃபண்டிலிருந்து' செய்யலாம் என்று சொன்னார்கள். கட்டிடம் இடிந்துவிட்டால் உடனடியாக அது பழுதுபார்க்கப்பட வேண்டும்; அல்லது கட்டப்பட வேண்டும். அதற்கு அந்த பஞ்சாயத்து யூனியனிலே பணம் இல்லை. ஆகவே அப்படிப்பட்ட பணிகளுக்கு எல்லாம் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் மராமத்து பணிக்கென்று பணம் ஒதுக்கீடு செய்து கொடுப்பது சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



இன்னொரு முக்கியமான பிரச்சனையையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அரிசனங்களுக்கு எவ்வளவோ செய்கிறோம் என்று சொன்னாலும் அது அந்த மக்களுக்குச் சரியாகக் கிடைக்கவில்லை. அரிசனங்களுக்கு அதைச் செய்தோம், இதைச் செய்தோம் என்று சொல்கிறீர்கள். ஆனால் இன்றைக்கு நடைமுறையில் எப்படி இருக்கிறது? 18 சதவீதம் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்திருக்கிறோம். ஆனால் ஒவ்வொரு இலாகாவிலும் இந்த 18 சதவீதத்தைப் பூர்த்தி செய்திருக்கிறார்களா என்றால் இல்லை. எங்களுடைய ஆட்சிக் காலத்திலும் பூர்த்தி செய்யப்படவில்லை; ஒத்துக் கொள்கிறேன். காங்கிரஸ் காலத்திலே 18 சதவீதம் உத்தியோகத்தில் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. ஆனால் உங்கள் காலத்திலே கண்டிப்பாக இந்த 18 சதவீதமும் பூர்த்தி செய்யப்பட்டு அந்த மக்களை வாழவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, நான் பலமுறை இந்த மன்றத்திலே கூறியிருக்கிறேன். அரிசனங்களுக்கு வீடு கட்டுவதற்குப் பணம் கொடுக்கிறார்கள். அதை 5,000 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டும்.

(முற்பகல் 10-30)

அத்தோடு கடைசியாக நம்முடைய மதிப்பிற்குரிய பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள், தமிழகத்திற்கு எந்த விதமான தொழில் வளர்ச்சிக்கும் அனுமதி அளிக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். அப்படி இல்லை. அவர்கள் தமிழகத்தை நிச்சயமாகப் புறக்கணிக்க மாட்டார்கள். அவர்களை எந்த முறையில் அணுக வேண்டுமோ அந்த முறைப்படி அணுகி தேவையான காரியங்களை ஆற்றி தமிழகத்திற்கு தொழில் வளர்ச்சிகளை, புதிய தொழிற்சாலைகளைக் கொண்டுவர இந்த அரசினர் ஆவன செய்ய வேண்டும். அதை விட்டு விட்டு, நம்முடைய பிரதம அமைச்சர் மதிப்பிற்குரிய திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் நாடு முழுவதும் 87 ஜில்லாக்களை தொழில் துவங்குவதற்காகத் தேர்ந்து எடுத்துவிட்டு தமிழகத்தை புறக்கணிக்கிறார்கள் என்று சொல்வது வருந்தக்கூடிய ஒன்று.

கரும்புக்கு விலை உயர்வு இல்லை, நெல்லுக்கு விலை உயர்வு இல்லை, உரத்தின் விலையை இன்னும் குறைத்துக் கொடுக்கவில்லை என்றெல்லாம் சொல்லப்படுகிறது. தமிழகத்து மக்கள் அவர்களுடைய குழந்தைகள் போல. ஆகையால் நல்ல முறையில் அவர்களை அணுகி நல்ல முறையில் சரியாக பிரச்னைகளை எடுத்துச் சொல்லி கேளுங்கள், அவர்கள் உண்மையிலேயே தேவையானவற்றைச் செய்வார்கள். தமிழகத்து மக்களுக்குத் தேவையானவற்றை செய்து கொடுத்து, தமிழகத்தில் ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்றும், நான் இந்த உரையின் மூலமாக அவர்களுக்கு வேண்டுகோள்

விடுக்கிறேன். அப்படி இந்த தேவைகள் பூர்த்தி செய்யப்படுமானால், தமிழகத்து மக்கள் அவர்களுக்கு என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருப்பார்கள்.. (மணியடிக்கப் பெற்றது)

கடைசியாக ஒன்றை மட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன். அதாவது கள்ளச்சாராயம் காய்ச்சுவதைப் பற்றி. இந்த சாராய வியாபாரத்தினால் அரசாங்கத்திற்கு வருமானம் வருகிறது இல்லையென்று சொல்லவில்லை.—எங்களுக்கு இந்தக் கொள்கையில் இருந்து புறம்பான எண்ணம் இருந்தாலும் கூட—கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களை பிடித்துக் கொடுத்தால், போலீசார் பிடித்துக் கொண்டு போய், ஒன்றிரண்டு நாட்கள் வைத்திருந்துவிட்டு, திரும்பவும் விட்டு விடுகிறார்கள். இதனால் என்ன பயன்? அவர்களை கடுமையாக தண்டிக்க வேண்டும். அது மட்டும் அல்ல, கிராமங்களிலே பெண்கள் வீதிகளிலே போக முடியாத அளவு நிலைமை இருக்கிறது. நடு வீதிகளிலே குடித்து விட்டு அவர்கள் பேசக்கூடிய பேச்சுக்கள் இருக்கிறதே, அவைகளை பெண்கள் காது கொண்டு கேட்க சகிக்காத வார்த்தைகள் என்று தான் சொல்ல வேண்டும். எனவே பெண்கள் இப்படிப்பட்ட ஈனமான வார்த்தைகளை கேட்காத அளவுக்கு, அவர்களுக்கு மரியாதை கொடுக்கும் அளவுக்கு இவைகளை சட்டம் கொண்டு தடுத்து சீர்திருத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதைச் சொல்வதற்கு நேரம் கொடுத்தமைக்காக, உதவி சபா நாயகர் அவர்களுக்கு தனிப்பட்ட முறையிலே நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

* திரு. மி. வின்செண்ட்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் பேசுவதற்கு வாய்ப்பினை தந்தமைக்கு நான் முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1977லேயிருந்து 1982 வரை ஆற்றிய ஆளுநர் உரைகள் முத்துக்கள் என்றால் இந்த ஆளுநர் உரை முத்துக்கள் விட பிரகாசிக்கும் முழு நிலா என்று நான் முதன் முதல் குறிப்பிட ஆசைப்படுகிறேன். ஆளுநர் உரையில் தொடர்ந்து பேசுவதற்கு முன்னால், குமரி மாவட்டத்தில் 30 ஆண்டுக் காலமாக இல்லாத அளவுக்கு சுமார் 75 ஆயிரம் நஞ்சை நிலங்களில், 35 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நஞ்சை நிலங்கள் இன்றைய தினம் வறண்டு காய்ந்திருக்கிறது என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அதனால் குமரி மாவட்டத்தை. இந்த அரசு வறட்சிப் பிரதேசமாக அறிவிக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் வேண்டுகோள் விடுக்கிறேன்.

நாகர்கோவில் நகரத்தைப் பொறுத்தமட்டில் குடிதண்ணீர் வழங்குகிற முக்கடல் அணையில் சுமார் 10 அடிதான் தண்ணீர் இருக்கிறது. இது மார்ச் மாதம் 10 அல்லது 15 தேதி வரையில் தான் போதும். இன்றைய தினம் அங்கேயுள்ள விவசாயிகளுக்கு பம்புகள் மூலம் சிற்றாறு அணையிலிருந்து பம்ப் பண்ணி





கொடுக்கப்படுகிறது. அந்தத் தண்ணீரை அனந்தன் சாலை வழி கொண்டு வந்து ஃபீடர் மூலம் அங்கேயிருந்து ஃபில்டர் ஹவுசுக்கு அனுப்பி, வருங்காலத்தில நாகர்கோவில் பகுதியில் ஏற்படவிருக்கிற தண்ணீர் பிரச்னையை தீர்ப்பதற்கு, அரசு போர்க் கால நடவடிக்கைகளைப் போல நடவடிக்கைகளைக் கையாண்டு அந்தப்பகுதி மக்களுக்கு உதவிட வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் வேண்டுகோளாக வைக்கிறேன்.

சுதந்திரம் பெற்று சுமார் 35 ஆண்டுகள் ஆகியும் பல கோடிக்கணக்கான திட்டங்கள் வந்தாலும் கூட, அந்த திட்டங்கள் முழு அளவில் ஏழைகளின் நலன்களுக்காக அமைக்கப்பட்டிருக்கிறதா, அவர்களுக்கு பயன் பட்டிருக்கிறதா என்றால் அப்படி அமையவில்லை. ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் இன்று 112 கோடி ரூபாய் செலவில் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்திருப்பதை பார்க்கும்போது, அந்த திட்டத்தின் முழு பலன்களும் ஏழைகளே அனுபவிக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும் போதும், 'ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்'' என்று அறிஞர் அண்ணா அவர்கள் கண்ட கனவினை புரட்சித் தலைவர் அவர்கள் நிறைவேற்றிக் காட்டி விட்டார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

65 லட்சத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் இன்றையதினம் பசியாறி புரட்சித் தலைவர் அவர்களின் அரசை வாழ்த்தி ஆசி வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். இதன் மூலம் ஒரு லட்சத்து 75 ஆயிரம் பேர்களுக்கும் மேலாக வேலை வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள் என்றால்—இதன் பயனை சிறப்பாக நாம் பேச கடமைப்பட்டவர்கள் அல்லவா? அதுவும் வேலை வாய்ப்பைப் பெற்றவர்கள் யார்? விதவைகள், அநாதைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் — இப்படிப்பட்ட நாதியற்றவர்கள் இன்றைய தினம் இந்த வேலை வாய்ப்பை பெற்றிருக்கிறார்கள்—புரட்சித் தலைவர் அவர்களை வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். தாலி அறுத்தவர்களுக்கு இட்லி சுட்டு விற்பது கூட தாசில்தார் உத்தியோகம் தான் என்று நமது கலைஞர் அவர்கள் பராசக்தியில் சொல்லியிருப்பது எனக்கு ஞாபகம் இருக்கிறது.

ஏழாண்டு காலமாக கலைஞர் அவர்கள் ஆட்சிப் பீடத்தில் இருந்த நேரத்தில் கூட அவர்களால் செய்து முடிக்கப்படாவிட்டாலும் அந்த விதவைகளுக்கெல்லாம் இன்று அரசாங்க வேலை கொடுத்திருக்கிறார்கள் புரட்சித் தலைவர் அவர்கள். ஆதலால் கலைஞர் அவர்கள் வருவார் புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பார் என்று நான் இந்த நேரத்தில் நம்புகிறேன்.

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழுங்கு என்பதற்கேற்ப ஆட்சி நடத்துகிறார் புரட்சித் தலைவர். உலகத் தமிழ் மாநாட்டை புரட்சித் தலைவர் அவர்கள் நடத்திக் காட்டினார்கள். 63 ஆண்டுகாலமாக தமிழ் மக்களின் கனவான தமிழ் பல்கலைக் கழகத்தை உருவாக்கிக் காட்டினார் புரட்சித் தலைவர். பாரதியார், பாரதிதாசன் ஆகியோரின் பெயரில் பல்கலைக் கழகங்கள் உருவாக்கப்பட்டன. பாரதியாருக்கு நூற்றாண்டு விழா ஓராண்டு காலம் கொண்டாடப் பட்டது. அந்த ஆண்டு தேசிய ஒருமைப்பாட்டு ஆண்டாக அறிவிக்கப்பட்டது ஏன்? இந்திய நாட்டு மக்கள் அனைவரும் ஓர் குலம், ஓர் இனம், ஓர் நிறை, ஓர் வழி என்றான் பாரதி. அந்த பாரதியின் நூற்றாண்டு விழாவிலே தேசிய ஒருமைப் பாட்டுக்கு ஏற்பட்ட பங்கத்தை நான் இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பண்டித நேருவும், பிரதமர் இந்திரா காந்தி அம்மையாரும் இந்தி பேசாத மக்கள் மீது இந்தி திணிக்கப்படமாட்டாது என்ற உறுதியைத் தந்திருக்கிறார்கள். ஆனால் இரயில்வே பணி யாளர்கள் ஆண்டுச் சம்பள உயர்வுக்கு இந்தியில் தேர்வு பெற வேண்டும் என்று இன்றைய தினம் மத்திய அரசு ஆணை பிறப்பித்திருப்பது என்பது உண்மையிலேயே தேசிய ஒருமைப் பாட்டிற்கு உறுதுணையாக இருக்காது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இரயில்வே துறையில் தமிழ்நாட்டில் பணிபுரியும் தமிழ் தெரியாத இந்திக்காரனுக்கு ஊதிய உயர்வு உண்டு என்றால் இந்தி தெரியாத தமிழனுக்கு மட்டும் ஊதிய உயர்வு கிடையாதா என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். இந்திய நாட்டு மக்கள் அனைவரும் இந்திய மக்களா அல்லது இந்தி மக்களா? இந்திக்காரனுக்கு இருக்கும் உரிமை தமிழனுக்கு இல்லையா? எனவே தமிழனின் உணர்வினை மத்திய அரசு உணர வேண்டும். தமிழை வளர்ப்பதும், காப்பதும் தமிழன் உரிமை. நான் ஒன்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். மொழிவாரி மாநிலம் இருக்கலாம். ஆனால் மொழி உணர்ச்சி இருக்கக்கூடாதா? தமிழ் மொழியில் ஒற்றுமை வராவிட்டால் இந்தியாவில் மட்டும் ஒற்றுமை வந்துவிடுமா? எனவே இந்தியைத் திணிக்க முற்படுவது தேசிய ஒருமைப்பாட்டைக் குலைக்கும் என்பதை அவர்கள் உணரவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியாவில் தமிழகம் ஒரு பகுதி என்பது உண்மையானால் மத்திய அரசு தமிழன் மீது இந்தியைத் திணிக்கக்கூடாது என்று அறைகூவல் விடுகிறேன். 14 தேசிய மொழிகள் இருக்கும்போது இந்தி மொழி வளர்ச்சிக்கு மட்டும் மத்திய அரசு பணம் ஒதுக்குவது நியாயம்தானா? இந்தி மொழி யின் வளர்ச்சிக்காக நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாடு சென்றபோது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அதிலே கலந்து கொள்ளவில்லை. அதிலே கலந்து கொண்ட தி.மு.க. உறுப்பினர்கள் கண்ணீர் சிந்தி குலங்கள் செய்த தவறுகளை உணர வேண்டும். தமிழுக்கு ஒரு தாற ஏற்பட்டால் மார்பில் விழுப்புண் ஏந்தி புறநானூற்று



வீரனாக் உயிர் தியாகம் செய்வோம் என்று எச்சரிக்கிறேன். அரசியல் சாசனம் மதச்சார்பற்றதன்மை உடையது. அதே போல் மொழியிலும் சார்பற்ற தன்மை உருவாக வேண்டும். Secularism among competing languages என்ற நிலை உருவாக வேண்டும். எனவே மொழிகளில் ஒரு மொழி சாராமை என்ற பொதுவான நிலைமை இருக்க வேண்டும் என்ற நிலை உண்டா னால் தான் தேசிய ஒருமைப்பாடு வளரும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். தமிழ்நாடு புறக்கணிக்கப்படுகின்றது. இதைச் சொன்னால் தமிழ்நாட்டிலுள்ள தமிழ் மறவர்களான இந்திரா காங்கிரஸ் நண்பர்கள் கோபப்படக்கூடாது என்பதை இந்த நேரத்தில் சொல்லி சில ஆதாரங்களை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

1981-82 லே மத்திய அரசு தனது திட்டங்களின் மூலம் செலவு செய்த பணம் நபர் ஒன்றுக்கு 41 ரூபாய் 80 காசு. ஆனால் தமிழ்நாட்டிற்கு இந்தியாவின் எல்லா மாநிலங்களை யும்விட குறைவாக நபர் ஒன்றுக்கு 34 ரூபாய்தான் செலவழிக்கப் பட்டிருக்கின்றது. 1981-82-லே நபர் ஒன்றுக்கு மத்திய அரசு செலவழித்த ரூபாய் 49 ரூபாய் 20 காசு. ஆனால் தமிழ் நாட்டிலே 29 ரூபாய் 20 காசுதான் செலவழிக்கப்பட்டது. தேசிய ஒருமைப்பாட்டின் வேறுபாடு புரிகிறதா? பாகுபாட்டை உணர முடிகிறதா என்பதை இந்த நேரத்தில் நான் கேட்கிறேன்.

தொழில்கள் துவங்க வழங்குகின்ற உரிமைகளைப் பொறுத்த வரையில் 1981-ல் இந்தியா முழுமையும் 476 வழங்கப்பட்டன. ஆனால் தென்னாட்டிற்கு 109. குஜராத்திற்கு மட்டும் 114. மகாராஷ்டிராவிற்கு 78. எனவே தேசிய ஒருமைப்பாட்டில் வேறுபாடு இருப்பதை நண்பர்கள் புரிந்து சொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து 1981 ஆம் ஆண்டு ஒவ்வொரு மாநிலத்திற்கும் தொழில் வளர்ச்சிக்காக செய்த மதிப்பீட்டினைப் பற்றி நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். தொழிற் வளர்ச்சி யில் மேற்கு ஜெர்மனி என்று சொல்லப்படுகின்ற மகாராஷ்டி ராவிற்கு 730 கோடி ரூபாய். ஆனால் தமிழ்நாட்டிற்கு 61 கோடி ரூபாய். நெஞ்சு பொறுக்குதா? இதுதான் தேசிய ஒருமைப் பாடா என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10-40)

இந்திய தொழில் வளர்ச்சிக்கு சிவராமன் கமிட்டியை மத்திய அரசு நிறுவியது. Zero level development சீரமைப்பு என்ற முறையில் 87 மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்தார்கள். அவர்கள் தேர்ந்தெடுத்தது யூ.பி.க்கு 23 மாவட்டங்கள், பீகாருக்கு 13

மாவட்டங்கள், ராஜஸ்தானுக்கு 14 மாவட்டங்கள், மற்றவை மத்திய பிரதேசம் போன்ற வடநாட்டு மாவட்டங்கள். ஆனால் தமிழ்நாட்டுக்கு ஒன்றும் இல்லை. தேசிய ஒருமைப்பாடு வளருமா? தமிழன் அறிவாளி என்றால் அறிவுக்குத் தண்டனையா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப் : மிஸ்டர் டெபுட்டி ஸ்பீக்கர் சார், இது விஷயமாக 2, 3 நாட்களுக்கு முன்னால் தீர்க்கமாக பேசப்பட்டது. மத்திய அரசு டிபார்ட்மெண்டில் தொழில் துறை பின்தங்கியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அங்கே போடுகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இங்கே போடுகிற தொழிற்சாலைகளை அங்கே தான் போடுவோம் என்று சொல்லியிருக்கிறார்களா? இங்கே கொடுக்கமாட்டேன் என்று சொல்லியிருக்கிறார்களா? இது தெரியாமல் உறுப்பினர் அவர்கள் பேசி வருவது சரியா? என்பதை தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

திரு. மி. வின்சென்ட் : துணைத் தலைவர் அவர்களே, நமது சமுதாய அமைப்பின்படி தொழில்கள் பெரும்பாலும் கடன் வாங்கி நடத்தப்படுகிறது. கடன் கொடுப்பவர்கள் யார். மத்திய அரசுக்கு சொந்தமான தேசீய வங்கிகள். இன்டஸ்டிரியல் டெவலப்மெண்டு பங்க் ஆப் இந்தியா, நெஷனல் பங்க், எக்ஸ்போர்ட் அண்டு இம்போர்ட் பங்க், மற்றும் லைசன்ஸ் அதிகாரங்கள் மத்திய அரசிடம் உள்ளது. இன்கம்டாக்ஸ் மத்திய அரசிடம் உள்ளது. எக்ஸைஸ் மத்திய அரசிடம் உள்ளது. இத்தனை அதிகார நிலையும் மத்திய மந்திரியிடம் உள்ளது. எந்த தொழில் அதிபர் பேசினார் என்று சர்ச்சைக்குரிய பெயரைக் கேட்பது சரிதானா என்று இந்திரா காங்கிரஸ் நண்பர்களை நான் சிந்திக்க கேட்கிறேன். சிந்தனையின் சுரங்கங்கள் அண்ணா தி. மு. க. நண்பர்கள். அவர்கள் அதை சொல்லமாட்டார்கள். ஏன் என்றால் தமிழ்நாட்டில் தொழில் வளர்ந்திட வேண்டும் என்ற நல்ல எண்ணம் படைத்தவர்கள் நாங்கள். தேசீய ஒருமைப்பாடு வளர்ச்சி தமிழ்நாட்டில் தொழில்கள் அமைத்தால் வளராதா? உத்திரப் பிரதேசத்தில் அமைத்தால்தான் வளருமா? என்பதை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இந்துஸ்தான் புகைப்பட சுருள்கள் என்ற நிறுவனத்தைச் சேர்ந்த கலர் பிலிம் தயாரிப்பு பிரிவை உதகமண்டலத்திற்கு மத்திய அரசு தரவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறேன். தர மறுத்தால் திரு. கல்லன் போன்ற இந்திரா காங்கிரஸ் நண்பர்கள் அதை கட்டாயமாக பெற்று தருவார்கள் என்று நான் இந்த நேரத்தில் நம்புகிறேன். 1972 முதல் 1982 வரை சுமார் 70க்கு மேல் பெரிய தொழில்களுக்கு தமிழக நிர்வாகம் புராஜெக்ட் ரிப்போர்ட் அனுப்பியும் மத்திய அரசு ஒன்றுக்குக் கூட அனுமதி தராமல் இருப்பது மிகுந்த வேதனைத் தருகிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எந்த அரசியல் சட்டம் மாநில அரசையும், மாநில சட்டத்தையும்



வகுக்கிறதோ, அதே அரசியல் சட்டம் தான் மத்திய அரசையும், நாடாளு மன்றத்தையும் நிர்வகிக்கிறது. ஆனால் வறட்சி என்றால் பொறுப்பு மாநில அரசு, அரிசி தட்டுப்பாடு என்றால் பொறுப்பு மாநில அரசு, மின்சார வெட்டு என்றால் பொறுப்பு மாநில அரசு, தண்ணீர் பஞ்சம் என்றால் பொறுப்பு மாநில அரசு. ஆனால் அதிகாரங்கள் அத்தனையும் மத்திய அரசிடம் இருக்கிறது. ஆனால் மத்திய அரசுக்கு பொறுப்பு இல்லை. இந்த நிலை மாறவேண்டும் அரசியல் விஞ்ஞானிகள் பிளாட்டோவும், பெட்ரன்ரசலும் சொன்னது போல் 'நோ பவர் வித்அவுட் ரெஸ்பான்ஸிபிலிடி என்ற தத்துவம் நடைமுறையில் வந்தாக வேண்டும். 700 ஆண்டுகளுக்கு முன்னால் அமெரிக்கன் வார்-ஆப் இன்டிபெண்டன்ஸ் நடந்தது எனக்கு ஞாபகம் வருகிறது. அன்றைய தினம் சொன்னது 'நோ டாக்ஸ் வித்அவுட் ரெப்பரஸன்டேஷன் என்பது. அந்த நிலை இந்தியாவுக்கு உருவாகக் கூடாது என்று நான் விரும்புகிறேன். அதிகாரமும், பொறுப்பும் கைகோர்த்துச் செல்ல வேண்டும். இந்த நிலை உருவாக வேண்டும். இல்லை என்றால் பொறுப்பை மாநில அரசும், மத்திய அரசும் சேர்ந்தே பெற்றாக வேண்டும் என்பதை இந்த நேரத்தில் நான் வலியுறுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

நதிகளை தேசீயமயமாக்க வேண்டும் என்று நேஷனல் டெவலப்மெண்டு கமிட்டியில் 1980-ல் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் வற்புறுத்தினார். பராக்கா அணைத் தண்ணீரை பகிர்ந்து கொள்வதில் வங்காள தேசமும் மத்திய அரசும் பேசி சுமுகமாக தீர்த்துக் கொண்டது போல் காவேரி நீர் பிரச்சனையிலும் மத்திய அரசு தலையிட்டு உடனடியாக தீர்க்க முயல வேண்டும். இண்டர் ஸ்டேட் ரிவர் ஆக்ட்டில் உள்ள ஒரு ஒப்பந்தம் காலாவதி ஆனால் அதற்கு மறு ஒப்பந்தம் ஆகும் வரை பழைய ஒப்பந்தம் தான் அமுலில் இருக்கும் என்று. மத்திய அரசு அதில் கவனம் செலுத்தி இதில் அக்கறைக் காட்ட வேண்டும். காவேரியின் உபரி நீர் தமிழ்நாட்டுக்கு வந்தால் அரிசி உற்பத்தி அதிகரிக்கும் அது இந்தியாவுக்கு தானே உதவும். அதிலும் தமிழ் அரிசி கன்னட அரிசி என்று வேற்றுமை உண்டா என கேட்க ஆசைப்படுகிறேன். ஆனால் இந்த நேரத்தில் உரிமையோடு காவேரி நீர் பிரச்சனையை பேசுகிறபோது இங்கே ஒரு மாமன்ற உறுப்பினர் குறிப்பிட்டார் பதவி விலகி போராட தயாரா என்று. நான் அவருக்கு சில உண்மைகளையும், உணர்வுகளையும் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். கர்நாடகத்தில் கபினி, ஹேமாவதி' ஹாரங்கி ஆகிய அணைகள் எந்த ஆண்டில் கட்டப்பட்டன. அன்றைய தினம் ஆட்சி பீடத்தில் இருந்தவர்கள் யார். அன்றைய தினம் அவர்கள் ஏன் குரல் கொடுக்கவில்லை. நீங்கள் அன்றைக்குக் குரல் கொடுக்கத் தவறியதன். காரணம்

என்ன? 50 ஆண்டுகள் ஒப்பந்தம் 1924 ஆம் ஆண்டிலிருந்து 1974 ஆம் ஆண்டோடு முடிந்தது. அன்று ஆட்சியில் இருந்தது யார்? க்ருஷியல் பீரியட் அல்லவா? அந்த நேரத்திலே தூங்கியவர்கள் யார்? தூங்காதே தம்பி, தூங்காதே என்று எங்களைப் பார்த்துக் கேட்பவர்களே நீங்கள் அன்றையதினம் தூங்கிய காரணத்தினால்தான் இன்றைய தினம் நாங்கள் அவதிப் படுகிறோம். வழக்குப் போடுவதாகச் சொல்லி தஞ்சை மாவட்ட விவசாயிகளிடம் லட்சம் லட்சமாக வசூல் செய்து சுப்ரீம் கோர்டில் வழக்கைப்போட்டு விட்டு வாபஸ் வாங்கியதன் மர்மம் என்ன? காவிரி பேக்ட்ஸ் பைன்டிங் கமிட்டியை மத்திய அரசு நியமித்தது. உபரி நீரை எப்படி தமிழ்நாட்டிற்கு விநியோகம் செய்வது என்பதை ஆய்ந்தது. ஆய்ந்துவிட்டு பொய்யான தகவலை நாட்டுக்குத் தந்தது. உபரி நீரே இல்லையென்று சொன்னது. அந்த நேரத்திலே நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? அந்த நேரத்திலே எல்லாம் உங்கள் புத்தி கத்தி தீட்டப் போனதா என்பதை அறிய ஆசைப்படுகிறோம். அன்று நீங்கள் மக்களுக்குச் செய்த துரோகத்தை நாங்கள் இன்றைக்குச் சுமந்து கொண்டிருக்கிறோம். செய்த பாவத்திற்கு உங்களை நாடு கடத்தவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். எங்களைப் பார்த்து பதவி விலகத் தயாரா என்று கேட்பவர்களே உபதேசம் செய்யாதீர்கள், உபதேசம் செய்ய வேண்டும் என்று விரும்பினால் தி.மு.க.வை கலையுங்கள். உபதேசம் செய்யுங்கள்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் காவிரி நீர்ப் பிரச்சினை குறித்து சொல்ல வருகிறபோது கர்நாடக சர்க்கார் ஹேமாவதி போன்ற இடங்களில் அணையைக் கட்டுவது குறித்து அன்றைக்கு ஆட்சிப் பொறுப்பிலே இருந்த திராவிட முன்னேற்றக் கழக சர்க்காரோ அல்லது திராவிட முன்னேற்றக் கழகமோ அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்று தவறான தகவலைத் தந்திருக்கிறார்கள். நான் மீண்டும் திரும்பக் கேட்கிறேன். அதற்கு அவர்கள் பொறுப்பேற்றுக் கொள்கிறார்களா? அல்லது கண்டனம் தெரிவிக்கப்பட்டதா என்று அறிய விரும்பினால் நாங்கள் நிரூபிக்கத் தயாராக இருக்கிறோம். மறுத்தால் உரிமைப் பிரச்சினை கொண்டு வருவதற்குத் தயாராக இருக்கிறோம். அவர் இரண்டாவதாகச் சொல்லியிருக்கிறார். சுப்ரீம் கோர்டிலே இருந்த வழக்கை திரும்பப் பெற்றதன் மர்மம் என்ன என்று கேட்டார்கள். ஏதாவது மர்மம் இருந்தால் அவர் சொல்லட்டும். நடுவர் தீர்ப்புக்கு விடப்படுமென்று அன்றைய தினம் பிரதமர் அஷ்யூரன்ஸ் கொடுத்ததால் தான் அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டது. அதிலே மர்மம் இருப்பதாக உறுப்பினர் கூறுகிறார். பிரைம் மினிஸ்டராக இருந்த இந்திரா காந்தி அவர்கள் அன்றைய தினம் தலையிட்டு குறுக்கிட்டு வாபஸ் வாங்கிக் கொள்ளுங்கள், நானே முடித்து வைக்கிறேன் என்று



சொல்லிய ஒரு அடிப்படையின் காரணத்தினால்தான் அந்த நிலை ஏற்பட்டது. அவர் இதையெல்லாம் தெரிந்திருக்க நியாயமில்லை. காரணம் அப்போது அவர் பால பருவத்திலே இருந்தவர், துரதிருஷ்டவசமாக வந்து சேர்ந்தவர்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : துணைத் தலைவர் அவர்களே, மன்றத்திலே தவறான தகவல் வரக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். இன்றைக்கு இருக்கின்ற பிரதமர் தான் அன்றைக்கும் பிரதமராக இருந்தார்கள். ஆனால் அவர்கள் நடுவர் தீர்ப்புக்கு விடுவதாகச் சொல்லி உத்திரவாதம் தரவில்லை. எனவே அந்தத் தகவல் தவறானது. ஏனென்றால் பிரதமர் குறித்துச் சொன்னதால் சொல்கிறேன். நடுவர் தீர்ப்புக்கு விடுகிறேன் வழக்கை வாபஸ் வாங்கிக் கொள்ளுங்கள் என்று பிரதமர் சொல்லவில்லை. அது சரியான தகவல் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரைமுருகன் : வழக்குத் தொடுக்கப்பட்ட நேரத்திலே பிரதமர் தமிழ்நாட்டிற்கு வந்தார். இங்கே இருந்த முதல்வர் கலைஞர் அவர்களை அழைத்து நானே இந்தப் பிரச்சினையை முடித்து வைக்கிறேன், வழக்கை வாபஸ் வாங்குங்கள் என்று உறுதிமொழி கொடுத்ததன் அடிப்படையில் அதற்குப் பிறகு அந்த வழக்கு வாபஸ் வாங்கப்பட்டு டெல்லியிலே ஒரு கான்பரன்ஸ் நடத்தப்பட்டு அந்த கான்பரன்ஸிலே தமிழ்நாட்டிற்கும் கர்நாடகத்திற்கும் ஒரு ஏற்பாடு வந்து பேசப்பட்டது ஒன்றும் எழுதப்பட்டது ஒன்றுமாக இருந்து அதற்குப் பிறகு நாங்கள் ஒப்புக்கொள்ளமாட்டோம் என்று வந்தது எல்லாம் பாசனத் துறை அமைச்சர் திரு ராஜாமுகமது அவர்களுக்குத் தெரியும். அவரே ஒருமுறை திராவிட முன்னேற்றக் கழகம்தான் அன்றைக்குக் கெடுத்துவிட்டது என்று சொன்ன பிறகு நான் அதற்கு 'அதோ பாரும் பிள்ளாய்' என்ற தலைப்பிலே ஒரு கட்டுரையை எழுதியதும் அவருக்குத் தெரியும்.

(முற்பகல் 10.50)

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் சொன்னது ஒன்று. பாரதப் பிரதமர் அவர்கள் நடுவர் தீர்ப்பிற்கு விடுகிறோம் என்று உத்தரவாதம் கொடுக்கிறோம் என்று கூறியதால் வழக்கு வாபஸ் பெறப்பட்டது என்று சொல்கிறார். மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் அப்படியல்ல. இங்கே வந்த நேரத்திலே கலைஞர் அவர்களிடம் உறுதிமொழி கொடுத்ததாக சொல்கிறார். முதலில் எதையேனும் ஒன்றை அவர்கள் உறுதி படுத்திக்கொண்டால் எது சரி என்பதை தெளிவுபடுத்த வசதியாக இருக்கும். அதுதான் இங்கே முக்கியமான விஷயம். மற்றபடி காவிரி நீர் பிரச்சினை எப்படி ஏற்பட்டது என்பதை நாம் நீண்ட நேரம் விவாதித்து இருக்

கிறோம். அவைக்கு தவறான தகவலை தந்து விடக்கூடாது என்பதாலும், பிரதமரை சம்பந்தப்படுத்தி இருக்கிறதாலும் தான் உண்மை அதுவல்ல என்பதை நான் கூறுகிறேன்.

திரு அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, இந்த பிரச்னை வந்து விட்டதால் நான் ஒரு விளக்கம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்களை பொறுத்தவரையில் 1924-ம் ஆண்டு ஒப்பந்தம் 1974-ல் காலாவதி ஆகிவிட்டது என்று சொல்லவில்லை, அந்த ஒப்பந்தம் நீடிக்கிறது. 1974-ல் ஒப்பந்தத்திலே ஓவர் ப்ளோ ஆப் வாட்டர், சர்ப்ளஸ் வாட்டரை எப்படி பங்கிட்டுக் கொள்வது என்று இரு மாநில அரசுகளும் ஒரு புது ஒப்பந்தம் போட வேண்டுமென்று இருக்கிறது. அந்தக் கருத்தை பொறுத்தவரையில் எங்களுக்கு எந்த விதமான மாறுபாடும் கிடையாது. தெளிவாக இருக்கிறோம். அதேபோல இந்தப் பிரச்னை குறித்து முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சர்கள் மாநாட்டிலே கலந்துகொண்டு ஒரு அறிக்கையை விட்டிருக்கிறார்கள். கலைஞர் அவர்கள் இங்கே பேசுகிறபோது பேசி இருக்கிறார்கள். அந்த அறிக்கையிலே சொல்லியிருக்கிறார் திராவிட முன்னேற்ற கழக சர்க்கார் காவிரி நீர் கொள்கையில் என்ன கொள்கையை பின்பற்றியதோ அதே கொள்கையைத் தான் நாங்கள் பின்பற்றுகிறோம் என்று சொல்லி அது சட்டப்பேரவையில் குறிப்புகளில் இருக்கிறது. அதேபோல ஹேமாவதியிலும் மற்ற இடங்களிலும் அணை கட்டுவதை கண்டித்து இருக்கிறோம். இரண்டாவது வழக்கிற்கு போக வேண்டிய சூழ்நிலையில் அன்றைக்கு பிரதமர் அவர்கள் வாக்குறுதி கொடுத்ததால்தான் திரும்ப பெறவேண்டிய நிலைமை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சரியான தகவல் மன்றத்திற்கு வைக்க வேண்டும் என்பதற்காக திரும்பவும் சொல்கிறேன். ஓவர்-ப்ளோ என்று ஒன்றும் கிடையாது. சர்ப்ளஸ் என்று சொல்லக்கூடாது என்பதுதான் நம்முடைய நிலை. கால்வாய்களை நவீனப் படுத்துவதன் மூலமாக 10, 15 ஆண்டுகளில் எவ்வளவு தண்ணீரை சமித்து வைக்கமுடியுமோ, மிச்சப்படுத்த முடியுமோ அதை எப்படி பகிர்ந்து கொள்வது என்பதுதான் முக்கியமே தவிர சர்ப்ளஸ் என்பது இல்லை. காரணம் காவிரி படுகையை பொறுத்தவரையில் அது முழுமையும் பயன்பட்டு வருகிறது என்பது ஒன்று. அது ஒரு 'யூஸ்ஃபுல் ரிவர்'. சிறு திருத்தங்கள் தானே தவிர உங்களை முழுமையாக மறுக்கிறேன் என்று தயவு செய்து நீங்கள் கருதக்கூடாது. இரண்டாவதாக 1924-ம் ஆண்டு ஏற்பட்ட அந்த ஒப்பந்தம் 1974-ல் முடிந்து விட்டது என்று கருதமுடியாது. ஏனென்றால் இதிலே ஒரு புரொவிஷன் இருக்கிறது. 1974—க்கு பிறகு சில மாறுதல்களுடன் இந்த ஒப்பந்தத்தை புதுப்பித்துக் கொள்ளவேண்டும் என்பது நிலையே தவிர, —— திரும்பவும் அந்த ஒப்பந்தம் உயிரோடு இருக்கிறது



என்பதுதான் அதற்கு அர்த்தம் என்று நாம் வாதாடிக் கொண்டிருக்கிறோம். அனைத்துக் கட்சித் தலைவர்கள் கலந்து கொண்ட பல்வேறு கூட்டங்களில் நிலைமைகள் தெளிவுபடுத்தப் பட்டிருக்கிறது. ஒப்பந்தங்கள் எப்படி தயாரிக்கப்பட்டது, என்ன சூழ்நிலை என்பதல்ல பிரச்னை. யுடிலிசேஷன் அளவை நிர்ணயிப்பது இதிலே ஒரு ஷரத்து. இன்—ப்ளோ என்று இருந்தால்தான் நம்முடைய நலன்கள் பாதிக்கப்படாது காக்கப் படுகிற நிலைமைகள் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்து துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிக்கைகளை எல்லாம் பத்திரிகை நிருபர்களிடையே பேசியதை எல்லாம் நான் படித்து பார்த்தேன். அவர்களுடைய வாதமே இன்றைக்கு எங்களிடத்திலே சர்ப்ளஸ் வாட்டர் கிடையாது உங்களுக்கு கொடுப்பதற்கு; ஹியூமானிடேரியன் கிரவுண்டில் கொடுத்தோம், இனி கொடுப்பதற்கில்லை. சர்ப்ளஸ் வாட்டர் இல்லை என்று அவர்கள் சொல்லிக்கொண்டிருக் கிறார்கள். அக்ரிமெண்ட்டில் ஓவர்—ப்ளோ என்றோ, சர்ப்ளஸ் என்றோ இல்லை. நாங்கள் சொல்வது ஆயக்கட்டுகள் பாதிக்கப் படாத அளவிற்கு 1924-ம் வருட ஒப்பந்தம் அடிப்படையில், 1974—ம் வருட ஒப்பந்தம் நீர்பங்கீடு என்பது தான் அதனுடைய பொருள்: மற்றவைகள் எல்லாம் டெக்னிக்கலான வார்த்தைகளை வைத்துக்கொண்டு அமைச்சர் அவர்கள் பேசுகிறார் திராவிட முன்னேற்றக் கழகம் காவிரி நீர் பிரச்னையில் தெளிவாக இருக்கிறது. நீங்களே அவைகளை ஆதரிப்பதாக சொல்லியிருக் கிறீர்கள். எனவே எங்கள் மீது குற்றச்சாட்டு சொல்வது சரியல்ல. மேலாக காவிரி நீர் கொடுக்கிறேன் என்று குண்டுராவ் சொல்லியிருக்கிறார். ஆகையினாலே குண்டுராவிற்கு ஓட்டு போடுங்கள் என்று சொல்லி இப்போது ஹெக்டே முன்னால் நிற்பதுதான் இப்போது பிரச்னையாக இருக்கிறது.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரும்பவும் அவர்கள் அதையே சொல் கிறார்கள். நான் டெக்னிக்கலாக சொல்லவேண்டுமென்று கருதவில்லை. நான் எச்சரிக்கையோடு பேசிக் கொண்டிருக் கிறேன். கூடுமான வரையில் இந்தக் காவிரி நீர் பிரச்னையில் நமக்கு நாமே, ஒருவருக்கொருவர் குற்றம் சாட்டிக்கொண்டு, நீங்கள் அந்த நேரத்திலே தூங்கினீர்கள், யார் விழித்துக் கொண்டிருந்தார்கள் என்கின்ற நிலைமை நீடிப்பது இப்பொழுது சரியல்ல. மாண்புமிகு உறுப்பினர் வின்சன்ட், இந்தக் காவிரி நீர் பிரச்னையை வைத்து பதவி விலகத் தயாரா என்று தாங்கள் கேட்டதனுடைய எதிரொலியாகத்தான் பேசிக் கொண்டிருக் கிறார்கள். அப்படிப் போகும்போது இந்தப் பிரச்சினையைப் பலவீனப்படுத்தக் கூடாது என்பதுதான் என்னுடைய வேண்டு கோள். நம்முடைய உரிமை அது. நாம் ஹியூமானிட்டேரியன் அடிப்படையில் என்று கேட்பது, நம்முடைய நாகரீகத்தை

வெளிப்படுத்துகிறதே தவிர, வேறு வார்த்தை பயன்படுத்த வேண்டுமென்று கருதுவோமானால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அதையும் பயன்படுத்தும். நாம் நாகரீகம் குறித்து சில வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். எனவே, இந்த 'இஷ்யூ'விலே ஒருவரை யொருவர் பலவீனப்படுத்த வேண்டாம் என்பதற்காகத் தொடர்ந்து அதைப்பற்றி விவாதிக்க வேண்டாமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. து. புருஷோத்தமன் :** காவிரி நீர் வருமா, வராதா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நாம் எல்லாம் ஒன்றாக இருந்தால் வரும்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் இராஜா முகமது அவர்கள் காவிரி நீர் பிரச்சனையிலே கருத்து வேறுபாடு இருக்கக் கூடாது; அரசியல் பிரச்னை ஆக்காமல் எல்லோரும் ஒற்றுமையாக இருந்து அந்தப் பிரச்னையைத் தீர்க்க வேண்டுமென்று சொன்ன வேண்டுகோளை நான் மறுக்கவில்லை. அது மக்கள் பிரச்னை, தமிழக மக்கள் பிரச்சனை, தமிழக விவசாயிகளுடைய பிரச்னை. அதிலே கருத்து வேறுபாடு கிடையாது. ஆனால், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் இராஜா முகமது அவர்கள் குற்றச்சாட்டு சொல்கின்ற விதத்திலே, திராவிட முன்னேற்றக் கழகச் சர்க்கார், அன்றைக்குச் சரியாக நடவடிக்கை எடுக்கவில்லை என்றதை ஒட்டித்தான், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. வின்சென்ட் ஒரு கருத்தைச் சொன்னார். இந்த அரசு இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்காக, 1924 ஒப்பந்தத்தைப் பற்றி உட்கார்ந்து பேசுவது என்பது வேறு விவகாரம். இன்றைக்குத் தஞ்சாவூர் ஜில்லாவிலே பயிர்கள் வாடிக் கொண்டிருக்கின்ற கால கட்டத்திலே, நீர் கொண்டு வருவதற்கான முயற்சிகள் எடுக்கவில்லை நீங்கள். 'டிமாண்ட்' என்று கூடச் சொல் வதற்குப் பதிலாக, 'ரிக்குவஸ்ட்' வைக்கிறோம் என்று நீங்கள் டெல்லியிலே பேசினால் எப்படி பிரச்னை தீரும்? அன்றைக்கு பி.சி. ராய், சுதந்திர தினத்தைத் துக்க தினமாகக் கொண்டாடு வேன் என்று சொன்னார்.

**திரு. மி. வின்சென்ட் :** 1982 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இருந்து மைய அரசு நமக்கு அரிசி ஒதுக்கீடு செய்யவில்லை யென்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புவ தோடு, 1980 ஆம் ஆண்டும், 1981-ஆம் ஆண்டும் தந்ததைப் போல, இந்த ஆண்டும் நமக்கு அரிசி ஒதுக்கீடு செய்ய வேண்டு மென்று நாங்கள் கேட்பதில் நியாயம் இருக்கிறது. எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு இந்தியாவில் 132 மில்லியன் டன் விளைந்திருந்தும் தமிழ்நாட்டிற்கு அரிசி தராதது வேதனையாக



உள்ளது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒரு தாய்க்கு 22 பிள்ளைகள் என்றால், சில பிள்ளைகள் வேண்டு மென்றால், செல்லப்பிள்ளைகளாக இருக்கலாம். ஆனால், சாப்பாடு போடுவதில் எந்தத் தாயும் பாகுபாடு பார்த்ததாக உலக வரலாறு இல்லை. வரலாறு மாறக் கூடாது. அதுவும் உலகளவில் மாறக்கூடாது என்பதை இந்த நேரத்திலே நான் உங்கள் மத்தியில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

20 அம்சத் திட்டத்தை இன்றையதினம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் நல்லமுறையில் அமுல் நடத்தி வருகிறார். பிரதமரின் அந்த 20 அம்சத் திட்டத்தில் ஒன்று பொது விநி யோகம். பொது விநியோகம் நல்ல முறையில் நடந்து வருகிறது என்பதை 1982-ல் உணவுத் துறைச் செயலாளர்கள் மாநாட்டில், டெல்லியில் மத்திய நிதியமைச்சர் பிரநாப் முகர்ஜி விவசாய அமைச்சர் ராவ் பிரேந்திர சிங் மற்றும் துணை அமைச்சர் ஆர். வி. சுவாமிநாதன் ஆகியோர் சிறப்பான முறை யில் உணவு விநியோகம் செயல்படும் மாநிலம் தமிழ்நாடு என்று தான் பாராட்டியிருக்கிறார்கள். இந்த அளவுக்கு இந்திரா காங்கிரஸ் மாநிலங்களைவிட நல்லமுறையில் 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்றிச் செயல்படுத்தி வருகின்ற தமிழக அரசுக்கு உறுதுணையாக இருக்கிற, 20 அம்சத் திட்டத்தில் ஒன்றான, பொது விநியோகமான உணவு விநியோகம் சீரோடும் சிறப்போடும் நடக்க மத்திய அரசு உடனடியாக தமிழக அரசுக்கு அரிசியை அனுப்பி வைக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஏதாவது ஒரு பொறுப்பான திட்டமாவது உண்டா என்று இங்கே கேட்டார்கள்.... (மணியடிக்கப்பெற்று அடுத்த உறுப்பினர் பேச அழைக்கப் பெற்றார்.)

(முற்பகல் 11-00)

* **திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என் கருத்துக்களை உங்கள் முன் வைக்க விரும்புகிறேன். ஆளுநர் உரை மீது வைக்கப்பட்டிருக்கும் அறிக்கையானது தமிழகத்தில் இன்றையதினம் நிலவுகின்ற மிகப் பயங்கரமான வறட்சி நிலைமைகளைப் பிரதிபலிக்கும் அறிக்கையாக இல்லை என்பதை முதற்கண் குற்றச்சாட்டாகச் சாட்ட விரும்புகிறேன்.

ஆளும் பொறுப்பிலே இருக்கின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மிகவும் கவர்ச்சிகரமான கோஷங்களைத் தான் முன் வைக்கிறார்களே தவிர எந்தவிதமான திட்டமும் உண்மையாக உறுதியாகச் செயல்படும் திட்டமாக இல்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஆளுநர் உரையில் முதல் பக்கத்தில் சத்துணவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் மிகவும் அதிக அளவில் சொல்லப்பட்டிருக்கிறது. சத்துணவுத் திட்டத்தின் காரணமாக 1,40,000-க்கு மேற்பட்டவர்களுக்கு வேலை தந்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். யாருக்கு வேலை தரப்பட்டது? எப்படி வேலை தரப்பட்டது? யார் யார் எவ்வளவு கையூட்டுப் பெற்றிருக்கிறார்கள் என்பதையெல்லாம் என்னைப் பொறுத்தவரையில் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் என்னுடைய தொகுதியில் பல்வேறு முறைகேடுகள் நடந்திருக்கின்றன. இதையெல்லாம் பற்றி மாவட்ட ஆட்சியாளரிடத்தில் தந்திருக்கிறோம்; ஆனால் இதுவரையில் எந்த முறையான விசாரணையும் செய்யப்படவில்லை.

அரசாங்கம் என்னென்ன விதிமுறைகள் வைத்திருக்கிறதோ அந்த விதிமுறைகளுக்கு மாறாக நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றன. 25 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு வேலை தரக்கூடாது என்ற நிலைமையிருந்தும் வயது குறைந்தவர்களுக்கு வேலை தரப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பல்வேறு ஊழல்கள், முறைகேடுகள் ஆளுங்கட்சியினரின் தலையீட்டின் காரணமாக அங்கே செயல்படுகின்றன என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஏறத்தாழ நான்கு வயது வரையுள்ள 23 இலட்சம் குழந்தைகள், ஒன்பது வயது வரையுள்ள 42 இலட்சம் குழந்தைகள் ஆகியவர்களுக்குச் சத்துணவு போடுவதாகச் சொல்கிறார்கள். இத்திட்டத்தின் காரணமாக ஏறத்தாழ 2,63,000 மாணவர்கள் புதிதாகச் சேர்ந்திருப்பதாகக் கணக்கு தரப்பட்டிருக்கிறது. அரசாங்கம் கணக்கு தர வேண்டுமென்ற முறையில் தருகிறார்கள். இந்தக் கணக்கு எப்படி வந்தது? தமிழ்நாட்டில் அமல்படுத்தப்பட்டு வரும் கட்டாயக் கல்வித் திட்டம் இருக்கிறதே, அதன்படி மாணவர்கள் படிக்கவேயில்லையா? இவர்களெல்லாம் இப்பொழுதுதான் படிக்க வந்தார்களா? அப்படி வந்த மாணவர்கள் யார் யார்? அதற்கு இந்த அரசாங்கம் பட்டியல் போட்டுத் தர முடியுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

திரு. மி. வின்செண்ட் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, அதிகமான பிள்ளைகள் வந்தார்களா என்று கேட்கிறார்கள். அவர்கள் முதலில் கவர்னர் உரையைப் படித்துப் பார்த்தார்களா? அதில் 2,63,000 மாணவர்கள் அதிகமாகச் சேர்ந்திருக்கிறார்கள் என்று விளக்கமாக இருக்கிறது. அதைப் படித்துப் பார்த்துவிட்டு பிறகு பட்டியல் கேட்கட்டும். அதைப் படிக்காமல் கேட்பது வழக்கறிஞராக இருக்கின்ற உறுப்பினருக்குச் சரிதானா என்று கேட்க விரும்புகிறேன்.





திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : துணைத் தலைவரவர்களே, புதிதாக இந்தத் திட்டம் அமல்படுத்தப்பட்டதால் அதிகமாக மாணவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்று குறிப்பு தரப்பட்டிருக்கிறது. அதைத்தான் கேட்க விரும்புகிறேன். இந்தத் திட்டத்தின் காரணமாக 2.63 இலட்சம் மாணவர்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அருமை மாண்புமிகு உறுப்பினர் திரு. வின்செண்ட் அவர்கள் சரியான முறையில் படித்துப் பார்த்திருக்க வேண்டும். இதெல்லாம் தெரியாமல் இந்த அளவிற்கு ஆளுங்கட்சி உறுப்பினராக இருக்கிறார்கள். இந்த மாணவர்கள் எப்படி சேர்க்கப்பட்டார்கள், எப்பொழுது சேர்ந்தார்கள், எந்த முறையில் சேர்ந்தார்கள் என்பதைத்தான் முதற்கண் உங்கள் முன் வைக்க விரும்புகிறேன்.

திரு. மி. வின்செண்ட் : துணைத் தலைவரவர்களே....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர்கள் நினைத்த நேரத்தில் எழுந்து பேசக் கூடாது.

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : துணைத் தலைவரவர்களே, குடும்பத்துக்கு ஒருவருக்கு வேலை என்று சொல்லியிருக்கிறார்கள். குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை என்று சொல்லிவிட்டு, இப்பொழுது சத்துணவுத் திட்டத்தில் புதிய பொறுப்பாளர்களைப் போடுகிறோம் என்றும், ஆசிரியர்களைச் சமையல் வேலையிலிருந்து விடுவிக்கிறோம், அவர்கள் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதற்காக விடுவிக்கப்படுவார்கள் என்று சொல்லி இப்பொழுது தேர்வும் நடந்தது. தேர்வு நடந்தபிறகு இதுவரையில் பொறுப்பாளர்கள் நியமனம் செய்யப்படவில்லை. ஆனால் என்னுடைய தொகுதியிலே உள்ள ஒன்றியத்தில் தேர்வுப் பட்டியல் வெளியிடப்பட்டு சிலருக்கு வேலை தரப்பட்டிருக்கிறது. வேலை தரப்பட்டவர்கள் யார் யார் என்று பார்க்க வேண்டும்.

அம்மையப்பன் என்பவர் ஆசிரியராக இருக்கிறார். அவருடைய மனைவி விஜயமாதேவி பொறுப்பாளராக இருக்கிறார். அவருடைய தம்பி அப்பாண்டுராஜன் என்பவர் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார். ஒரே குடும்பத்தில் மூன்று பேர்கள் வேலை பார்க்கும் நிலைமையில் தரப்பட்டிருக்கிறது. இப்படி ஊழலுக்கு, ''ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்'' என்ற முறையில் இருக்கிறது.

இதை திட்டவட்டமான குற்றச்சாட்டாக நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். வேண்டுமானால் இதை நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். இந்த மூன்று பேர்களும் தற்போது பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள். இதை மறுப்பவர்கள் முறைப்படி மறுத்தால் அதற்கு நான் பொறுப்பேற்றுக் கொள்ள தயாராக இருக்கிறேன்.

அதைப்போன்று அண்ணா தி. மு. க. ஆட்சியில் தன்னிறைவுத் திட்டம் என்று ஒரு திட்டத்தைப் போட்டு பல்வேறு ஒன்றியங்களிலே செயல்படுத்தி வருகிறார்கள். என்னுடைய தொகுதியில் வல்லம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வெம்பாக்கம், திருத்தவெளி போன்ற கிராமங்களில் தன்னிறைவுத் திட்டத்தின்படி சாலைகள் போடப்படவில்லை. அப்படி சாலைகள் போடாததற்குக் காரணம் அந்த சாலைப்போடப்படும் பகுதி தனியாருக்குச் சொந்தமான இடம். அதை எடுத்துச் சாலைப் போட முடியாமல் இருக்கின்றது. இப்படி பல்வேறு கிராமங்களில். இந்த மாதிரி நிலைமை இருக்கின்றது. இப்படி இருக்கும்போது எப்படி அந்தத் திட்டம் தன்னிறைவுத் திட்டம் என்று சொல்ல முடியும்.

அடுத்து என்னுடைய தொகுதியிலுள்ள ஒலக்கூரில் பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்காக 1973 ஆம் ஆண்டு டென்டர் கோரப்பட்டது. மேல்மாவிளங்கை, கீழ்மாவிளங்கை, கல்பாக்கம் போன்ற இடங்களில் பள்ளிக் கட்டடம் கட்டுவதற்காக டென்டர் விடப்பட்டு, அந்தக் கட்டிடங்கள் அஸ்திவாரத்தோடு நின்று கொண்டிருக்கின்றன. இந்தத் தன்னிறைவுத் திட்டத்தில் வேலை செய்கின்றவர்கள் அனைவரும் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள்தான். அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது, ஆளுங்கட்சிக்காரர்கள் காண்ட்ராக்டர்களுக்குச் சாதகமாக இருந்து, பல்வேறு 'பில்'களைப் போட்டு சம்பாதிக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நோத்தில் திருச்சி மாவட்டம் அரியலூரில் இந்தத் திட்டம் முறையாக செயல்படவில்லை என்ற காரணத்தால், அங்கே உள்ள அசிஸ்டன்ட் இன்ஜினியரும், யூனியன் இஞ்ஜினியரும் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள், அந்தத் தன்னிறைவுத் திட்டத்தில் நடைபெற்ற ஊழல்களைக் குறித்து பகிரங்கமாகவே மாவட்ட ஆட்சித் தலைவர் இடத்தில் கொடுத்தால், அதன்மீது மாவட்ட ஆட்சித் தலைவரோ அல்லது அரசாங்கமோ எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தன்னிறைவுத் திட்டம் என்று பெயர்ப்பலகைதான் அங்கங்கே இருக்கின்றனவே ஒழிய அந்தத் திட்டத்தின் கீழ் முறையாக வேலை நடக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போன்று இந்த ஆட்சியிலே குறிப்பாக வறட்சி வந்த பிறகு, போர்க்கால நடவடிக்கையாக எந்த நடவடிக்கையும் இதுவரையில் எடுக்கப்படவில்லை. நான் சார்ந்திருக்கின்ற தென்னாற்காடு மாவட்டம் மிக மோசமான அளவில் பாதிக்கப்பட்டிருக்கின்றது. குறிப்பாக திண்டிவனம், வானூர், செஞ்சி, உளுந்தூர்ப்பேட்டை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி பகுதிகள் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. ஏறக்குறைய 7 லட்சம் விவசாயிகள் தற்போது வேலையில்லாமல் வாடிக்கொண்டிருக்



கிறார்கள். அவர்களெல்லாம் வேலை தேடி வெளி மாவட்டங்களுக்குச் செல்லக்கூடிய நிலை ஏற்பட்டு இருக்கின்றது. ஏறக்குறைய $1\frac{1}{2}$ லட்சம் டன் நெல், 1 லட்சம் டன் நிலக்கடலை சாவியாகப் போகும் நிலை இருக்கின்றது. இதைப் போக்குவதற்கு அரசாங்கம் எந்தவிதமான காரியத்தையும் செய்யவில்லை. தென்னார்க்காடு மாவட்டத்தில் நிலவரி வசூல் செய்யப்பட்டு வருகிறது. அதை உடனடியாக ரத்து செய்யவேண்டும். தென்னார்க்காடு மாவட்டத்தை வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து சுற்றுலாத் துறைக்கு 80 கோடி ரூபாய் தேவைப்படுவதாக ஆளுநர் உரையில் தெரிவித்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்திலே உதகமண்டலம், கன்னியாகுமரி, மாமல்லபுரம் போன்ற பகுதிகளை எல்லாம் சேர்த்திருக்கிறார்கள். தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள செஞ்சி பழம்பெரும் ஊர். அது சுற்றுலா இடமாக இருக்கின்றது. நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் கூட ராஜாதேசிங்கு என்ற படத்தில் அந்த ஊரில் நடித்துள்ளார். அந்தச் சுற்றுலா மையமாக ஆக்குகின்ற முயற்சியை இந்த அரசு செய்யவில்லை. எனவே இதை சுற்றுலா மையமாக ஆக்கவேண்டும் என்று எதிர்க்கட்சியின் சார்பில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். செஞ்சிப் பகுதியை கண்டிப்பாக சுற்றுலா மையமாக அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆளுநர் உரையில் தமிழ்நாட்டில் ஐந்து தொழில்பேட்டைகளை ஆரம்பிக்க இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவைகள் எந்தப் பகுதியிலே துவங்கப்படும் என்று அறிவிக்கப்படவில்லை. தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள 12 வட்டங்களில் செஞ்சி வட்டம்தான் மிகவும் பின் தங்கிய வட்டமாகும். எனவே அமைக்கப்படவிருக்கும் தொழிற்பேட்டைகளில் ஒன்றை செஞ்சிப் பகுதியிலே அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அரசாங்கத்தில் முறைகேடுகள் முரண்பாடுகள் எந்த அளவிற்கு இருக்கின்றது என்பதை, இந்த அரசாங்கத்தின் நடவடிக்கைகளை எதிர்த்து ரிட் மனுக்களை உயர்நீதி மன்றத்திலே தாக்கல் செய்திருப்பதில் இருந்து காணலாம். மத்திய சிறைச்சாலை சூப்பிரன்டென்டன்ட் வாசுதேவன் அவர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். அவர் அதை எதிர்த்து உயர்நீதி மன்றத்திலே ரிட் மனு தாக்கல் செய்திருக்கிறார்.

(முற்பகல் 11-10)

அந்த தாக்கல் மீது அவர்களுக்குத் தரப்பட்டது 2 சார்ஜ். ஒன்று மருத்துவமனையில் இருந்த கட்டில், இரும்பு ஸ்பிரிங், அதனுடைய மேல் உறை ஆகியவைகளை அனுமதி இல்லாமல் வாங்கித்தந்தார் என்ற ஒரு குற்றச்சாட்டு. அதன் அடிப்படையில் அவர்களுக்கு நோட்டிஸ் அனுப்பப்பட்டது. அதற்குப் பிறகு அவர் வேறு பொறுப்புககு மாற்றப்பட்டு, அவரை

தற்காலிக வேலை நீக்கம் செய்தார்கள். அவர்களுக்கு துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல் பதவி தரவேண்டுமென்ற நிலை இருந்தது. என்றாலும் இந்த அரசாங்கம் அதற்கு நியாயமான காரணம் ஏதும் இல்லாமல் அவரை தற்காலிக வேலை நீக்கம் செய்தது. அவர்கள் பிறகு ஹைகோர்ட்டிலே மனு தந்த பிறகு, அந்த மனுவின் மீது, அவர்மீது தரப்பட்ட புகார்களை ரத்து செய்யவேண்டுமென்றும், அவருக்கு துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல் பதவி தருவதற்கு நீங்கள் ஆராயவேண்டுமென்று கேட்டு, அதற்கான பதிலை அரசாங்கம் ஜனவரி மாதம் 20ஆம் தேதிகுள் தரவேண்டுமென்று தெரிவித்து இருக்கிறது. ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் இந்த அரசாங்கம் பல்வேறு முறைகேடுகளை, நியாயத்திற்கு புறம்பான காரியங்களை இந்த ஊழல் அரசாங்கம் செய்கிறது என்பதை சுட்டிக்காட்டுவதற்குத் தான், ரிட் மனுவைச் சொன்னேன். இதிலும் மிகப் பெரிய ஊழல். குறிப்பாக தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் மூலமாக நடந்திருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நம்முடைய தமிழ்நாட்டிற்கு சிமெண்ட் பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தால் வெளிநாட்டிலிருந்து சிமெண்ட் வரவழைக்கவேண்டுமென்பதற்காக தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன்மூலமாக இரண்டுகொட்டேஷன்கள் வரவழைக்கப்பட்டன. இதிலே ஒன்று காரியா சிமெண்ட் எக்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் லிமிடெட், கம்பனியாகும். இரண்டாவது சாங்க்யாங் சிமெண்ட் கார்ப்பரேஷன் என்கிற கம்பெனியாகும். டெண்டர் மூலமாக வாங்கிய மனுவைப் போட்டிருக்கிறார்கள். இதிலே 20 மூட்டை உள்ள சிமெண்டுக்கு காரியா சிமெண்ட் எக்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் லிமிடெட் என்ற கம்பெனி, 535.60 காசு என்றும், சாங்க்யாங் சிமெண்ட் கார்ப்பரேஷன் 527.60 காசு என்றும் இரண்டு கொட்டேஷன்கள் தந்தன. இதிலே இரண்டாவது கார்ப்பரேஷன் டெபாசிட் தொகையும். பாங்க் கியாரண்டியும் கொடுத்திருந்தது. ஆனால் முதல் கம்பெனி அப்படிப்பட்ட எந்தவிதமான பாங்க் கியாரண்டியும், டெபாசிட் தொகையும் கட்டவில்லை என்றாலும் இந்த அரசாங்கம் பேச்சுவரர்த்தை என்ற முறையில் 523.60 ரூபாய்க்கு அங்கே ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் சிபாரிசு செய்த அந்த கம்பெனிக்குத் தராமல், இந்த 523.60 கொடுத்த ஒதுக்கிட்டதன் மர்மம் என்ன? இதன் பின்னாலே இருக்கின்ற காரணம் என்ன? 40 லட்சம் டன் சிமெண்ட் வேண்டுமென்று உத்தரவு போட்டது 16-9-82. அது முடியக்கூடிய காலம் 9 மாதம் என்று அறிவித்திருக்கிறார்கள். இது எல்லாம் 9 மாத காலம் என்று அறிவித்திருக்கிறார்கள். இது எல்லாம் 9 மாத காலத்திற்குள் வந்தாக வேண்டும். இப்படிப்பட்ட அளவிற்கு இந்த அரசாங்கம் மிகப் பெரிய ஊழலில் ஈடுபட்டிருக்கிறது. (மணியடிக்கப்பட்டது).

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



''கூறாமை நோக்கிக் குறிப்பு அறிவான் எஞ்ஞான்றும்

மாறாநீர் வையக்கு அணி''.

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கிணங்க தமிழ் மக்களின் நலனில் அக்கறை கொண்டு தமிழகத்தினுடைய வளர்ச்சியில் நாட்டம் கொண்டுள்ள மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து என்னுடைய உரையை ஆரம்பிக்கிறேன்.

இங்கே நம்முடைய அன்பு நண்பர் மாண்புமிகு ராமச்சந்திரன் அவர்கள் சத்துணவுத் திட்டத்தை வெகுவாக குறைகூறிப் பேசினார்கள். உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் என்று கிராமங்களிலே ஒரு பழமொழி உண்டு. அந்தப் பழமொழிக்கேற்ப கிராமத்திலே வறுமையிலே வாடுகின்ற அந்த குழந்தைச் செல்வங்கள் நல்ல உணவை ஒருவேளையாவது அருந்த வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தப் பெரிய திட்டத்தினை செயல்படுத்தியிருக்கிறார்கள். இந்த திட்டத்தில் குறைபாடுகள் இருந்தால், குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு யோசனைகளைச் சொன்னால் நலமாக இருக்கும். அந்த முறையில் இந்த திட்டத்தினுடைய நல்ல பலன்களை அவர்கள் உணரவேண்டுமென்று இந்த நேரத்தில் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். கிட்டத்திட்ட 65 லட்சம் குழந்தைகள் இந்த சத்துணவுத் திட்டத்தினால் நல்ல பலன்களைப் பெறுவதற்கான வாய்ப்பு தமிழகத்தில் இன்றைய தினம் புரட்சித் தலைவர் தலைமையில் தமிழக அரசு செய்திருக்கிறது. இதில் ஆயிரக்கணக்கானோர் வேலைவாய்ப்பு பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. கிட்டத்தட்ட 1 லட்சத்து 40 ஆயிரம் பேர்களுக்கு மேற்பட்டவர்கள் வேலை வாய்ப்பு பெறுகின்றார்கள். இதிலும் இந்தத் திட்டத்தின்கீழ் விதவைகளும், கைம்பெண்களும் அதிகமாக நியமிக்கப்படுகின்ற நல்ல திட்டமாக இந்த திட்டம் அமைந்திருக்கிறது.

இதில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் செஞ்சி இராமச்சந்திரன் அவர்கள் இந்த திட்டத்தில் அமைப்பாளர்கள் ஆக நியமிக்கின்றவர்கள் இதுவரையில் அறிவிக்கப்படவில்லை என்று கூறி இருக்கிறார்கள்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அதற்கான விளங்கங்களை எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் இரண்டு நாளைக்கு முன்னால் சட்டமன்றத்தில் அறிவித்திருக்கிறார்கள். ஜனவரி மாதம் 31-ம் தேதிக்குள் இத்திட்டத்திற்கான அமைப்பாளர்கள் நிச்சயமாக நியமிக்கப்பட்டு விடுவார்கள் என்று அறிவித்து இருக்கிறார்கள். ஆசிரியர்களின் வேண்டுகோளைப் பரிசீலித்துக்கொண்டு இருப்பதால், இது குறித்து ஓரிரு நாட்களில் அவர்கள் ஏற்பாடு செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். இது ஆளுநர் உரையிலும்

குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இந்தத் திட்டத்தின் விளைவாக 2·63 லட்சத்திற்கும் கூடுதலாக மாணவர்கள் சேர்க்கப்பட்டு, அந்தக் குழந்தைகளுக்கு சத்துணவு பெறவும் கல்வி அறிவு பெறவும் வாய்ப்பு கொடுத்து இருக்கிற இந்த அரசு என்ற மகிழ்ச்சியான செய்தியும் ஆளுநர் அவர்களுடைய உரையிலே சொல்லப்பட்டு இருக்கிறது.

என்னுடைய செங்கல்பட்டு மாவட்டம் மிகவும் வறட்சியால் பாதிக்கப்பட்டு இருப்பதால், அந்த மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து, அந்த அடிப்படையில் நிவாரணப்பணிகள் செய்து தரவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான காஞ்சீபுரத்தில், பல நெசவாளர்கள் வாழ்ந்து வருகிறார்கள். பெரிய தொழில்கள் என்று சொல்லும் அளவிற்கு எந்தவிதமான மேஜர் இன்டஸ்டிரியும் இல்லை. இருக்கின்ற பெரும்பாலான தொழிற்சாலைகளும் சென்னையை ஒட்டியிருக்கும் பகுதியில் இருப்பதால். பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த புண்ணியபூமியில் அரசு சார்பில் ஏதாவது ஒரு தொழிற்சாலையை ஆரம்பித்து, அந்தப் பகுதியில் ஒரு ஆயிரம் பேருக்கு வேலை கிடைக்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று காஞ்சீபுரம் பகுதியை பின்தங்கிய பகுதியாக அறிவிக்க வேண்டும் என்றும் பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பகுதியில் பாலாறு வேகவதி என்ற இரண்டு ஆறுகள் ஒடுகின்றன. அந்த இரண்டு ஆறுகளையும் இணைத்தால் அந்தப் பகுதியில் மேலும் ஒரு 3,000 ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் கிடைக்கும் வாய்ப்பு ஏற்படும். அதற்காக திட்டத்தையும் தீட்டி செயல்படுத்த நடவடிக்கை எடுத்து கொடுத்து தரும்படி அரசை வேண்டுகிறேன்.

காஞ்சீபுரம் அருகில் இருக்கும் பாலாறு வேகவதி ஆறுகளில் மேம்பாலம் இல்லை. வெள்ளம் வருகின்ற நேரங்களில் அந்தப் பகுதி போக்குவரத்து இல்லாமல் துண்டிக்கப்படும் வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இவ்விரு ஆறுகளில் மேம்பாலங்கள் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த அந்தப் புண்ணிய பூமியான காஞ்சீபுரம் நகரையும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளையும் சேர்த்து பேரறிஞர் அண்ணா மாவட்டம் என்று ஒன்றை நிறுவி, அந்தப் பகுதியை நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவாக உருவாக்கித்தர வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.



மற்ற மாவட்டங்களில் போக்குவரத்துக் கழகங்கள் தனித்தனியாக அமைக்கப்பட்டு இருப்பதுபோல், செங்கல்பட்டு மாவட்டத்திற்கு என்று தனியாக எந்த ஒரு போக்குவரத்துக் கழகமும் அமைக்கப்படவில்லை. ஆகவே அதற்கென தனியாக ஒரு போக்குவரத்துக் கழகம் அமைத்துக் கொடுத்தால், அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு கூடுதலான பேருந்து வசதிகள் கிடைக்கும் வாய்ப்பு ஏற்படும், என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்தப் பகுதியில் இருக்கும் நெசவாளர்களுக்கு நியாயமான முறையில் நூல் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். என்று வேண்டுகிறேன்.

கிராமங்கள் நகரங்களைப் போல் அனைத்து வசதிகளும் பெற்றாக வேண்டும். அதுவும் அத்தியாவசியமான வசதிகள் ஒரு குறிப்பிட்ட காலத்தில் கிடைத்தாக வேண்டும் என்ற அடிப்படையில் தன்னிறைவுத் திட்டம் தீட்டப்பெற்று, நல்ல முறையில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இந்தியா முழுவதற்கும் வழிகாட்டுகின்ற வகையில் அந்தத் திட்டம் இங்கே செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்தகைய ஒரு நடவடிக்கையால் கிராமத்தில் உள்ள மக்களின் சமூக, பொருளாதார அமைப்பில் மாறுதல் ஏற்பட்டு, அவர்கள் மிக நல்ல முறையில் வளர்ச்சி அடைவார்கள், என்பதில் சந்தேகம் இல்லை.

பொதுவாக, கிராமங்களில் பொது சுகாதார வசதி செய்வதற்கு இதுவரையில் இருந்த எந்த அரசும் கூடுதல் கவனம் செலுத்தவில்லை. இந்த ஆட்சி ஏற்பட்ட பின்னர்தான், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அதற்காக தனித் திட்டம் தீட்டி, பொதுக் கழிப்பிடங்கள் கட்டுவதற்கு 22½ கோடி ரூபாய் ஒதுக்கி, கிராமங்களில் பொதுச் சுகாதாரவசதியை ஏற்படுத்திக் கொடுத்து இருக்கிறார்கள.

இதேபோன்று வறட்சித் துயர் துடைப்புப் பணிக்காக 190 கோடி ரூபாய் ஒதுக்கீடு கேட்கப்பட்டு இருக்கிறது. இந்த நிதியை கிராமப்புறங்கள் முன்னேற்றத்திற்காக செலவழித்தால், அது ஒரு நல்ல திருப்பு முனையாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவிலேயே எந்த ஒரு மாநிலமும் செய்ய முடியாத ஒரு அறிவிப்பை இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். குடும்பத்தில் ஒருவருக்கு வேலை என்று தான் அது. இதற்காக 15 கோடி ஒதுக்கப்பட உள்ளது. இந்த அறிவிப்பு தமிழக வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய ஒரு திட்டமாக அமைந்து இருக்கிறது. ஒவ்வொரு மாநிலமும் மத்திய அரசிடமிருந்து திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடு பெறுகிறார்கள். இந்திய அரசிடமிருந்து நமக்குக் கிட்டத்தட்ட 1983.84 ஆம் ஆண்டுக்கான திட்ட நிதி ஒதுக்கீடு

ரூ. 845 கோடி என்று இறுதி செய்யப்பட்டுள்ளது. நம்முடைய அரசு இந்த அளவிற்குத் தொகை பெற்றிருப்பதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்களின் பெருமுயற்சிதான். அதற்காக நான் அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக சாலை வசதிகளை நாம் சிறப்பாகச் செய்து தரவேண்டும் என்ற முறையில் பெரும் சாலைகளை நல்லமுறையில் பராமரிக்கவேண்டும் என்று அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வரும் இடம் மாமல்லபுரம், காஞ்சீபுரம், திருத்தணி போன்றவையாகும். ஆகவே, சுற்றுலாப் பணிகளின் நலன் கருதி மாமல்லபுரத்திலிருந்து காஞ்சீபுரத்திற்கு காஞ்சீபுரத்திலிருந்து திருத்தணிக்கும் ஒரு நல்ல பரந்த சாலை அந்தப் பகுதியில் அமைத்துக் கொடுத்தால், சுற்றுலாப் பயணிகளுக்கு மேலும் வசதியாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

பொதுவாக மத்திய அரசு தென்னகத்திலே முதலீடு செய்வது குறைந்துகொண்டே வருகிறது. அப்படி குறைந்து கொண்டு வருகிற முதலீட்டை நம்முடைய அரசு எப்பாடு பட்டாகிலும் போராட்டம் நடத்தியாகிலும் உயர்த்தி பெற்றுத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுற்றுலா வளர்ச்சியில் எப்போதும் நம்முடைய அரசு அதிகமாக கவனம் செலுத்தி வருகிறது பெருமளவில் சுற்றுலா வசதிகளைச் செய்து வருகின்ற இந்த வேகத்திலே பேரறிஞர் அண்ணா பிறந்த பல்லவர் பூமியாம் காஞ்சீபுரத்தை, அரசாங்கம் தயாரிக்கின்ற மாஸ்டர் பிளானில் சேர்த்து, சிறந்த ஒரு சுற்றுலா மையமாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் மொழி, தமிழ் கலாச்சாரம் காக்கப்பட நம்முடைய அரசு எடுக்கிற அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஆதரவு தந்து தமிழக மக்கள் எப்போதும் புரட்சித் தலைவர் பின் நிற்க தயாராக இருக்கிறார்கள். தமிழ்மொழி காக்கப்பட புரட்சித் தலைவர் அவர்கள் எந்த நிலையை அறிவித்தாலும் அதைச் செய்ய தமிழக மக்கள் புரட்சித் தலைவர் முகம் நோக்கி நிற்பார்கள்.

"முகம் நோக்கி நிற்க அமையும் அகம் நோக்கி
உற்றது உணர்வார்ப் பெறின்"

என்ற வள்ளுவன் வாக்கைப்போல புரட்சித் தலைவர் முகம் நோக்கி, தமிழக மக்கள் அவர் இடுகின்ற ஆணையை நிறைவேற்ற எப்போதும் தயாராக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி வணக்கம்.





திரு ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்: மாண்புமிகு சட்டப்பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியின் சார்பிலே மேன்மை தங்கிய கவர்னர் பெருமான் அவர்களின் உரையின் மீது என்னுடைய ஒருசில கருத்துக்களைச் சொல்ல நான் விரும்புகிறேன்.

இன்றைக்கு இரண்டாவது ஆண்டாக நாம் இந்தப் வறட்சிப் பணிகளை ஆரம்பித்து, தமிழகத்திலே செய்து வருகிறோம். இரண்டு ஆண்டுகளாக வறட்சி நம்மை ஆட்டிவைத்து. நம்மை இல்லாத கஷ்டங்களுக்கு ஆளாக்கிக் கொண்டு வருகிறது. இதில் நாம் யாரையும் கோளாறு சொல்ல முடியாது. அவர் தான் காரணம் இவர்தான் காரணம் என்று நாம் யாரையும் கோளாறு சொல்ல முடியாத நிலையில் இருக்கிறோம். இயற்கை நம்மை இந்த நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறது.

இந்த இரண்டாண்டு காலத்திலே இந்த வறட்சியாலே நாம் பல கஷ்டங்களை அனுபவித்து வருகிறோம். இந்த நிலையிலே புதுக்கோட்டை மாவட்டத்தைப்பற்றி இந்த அரசுக்கு நன்றாகத் தெரியும். புதுக்கோட்டை மாவட்டம் ரொம்பவும் பின்தங்கிய மாவட்டம். நல்ல மழை பெய்யக்கூடிய நேரத்தில்கூட அங்கே விளைச்சல் குறைவு. எப்போதும் வறட்சி நிலவிக்கொண்டிருக்கிற நிலைமை அந்த மாவட்டத்தில் இருந்து கொண்டிருக்கிறது. அப்படி இருக்கக்கூடிய இந்த நேரத்தில் அதுவும் இந்த வறட்சி இருக்கக்கூடிய நேரத்தில் புதுக்கோட்டை மாவட்ட மக்கள் எந்த நிலையில் இருப்பார்கள் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்த மாமன்றம் இங்கே நடந்துகொண்டிருக்கும்போது இந்தப் பிரச்சனைகளை எதிர்நோக்கி, நாம் சிந்தித்துப் பேசக் கூடிய நிலையில் இருக்கிறோம். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருடைய உள்ளமும் எந்தமாதிரியான வேதனையோடு இன்று பிரச்சினைகளை அணுகி இருக்கிறது என்பது இங்கே நடக்கின்ற விவாதங்களிலிருந்து தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது.

என்னைப் பொறுத்தவரையில், நான் புதுக்கோட்டை மாவட்டத்திலிருந்து வருகின்ற காரணத்தால், அங்குள்ள பிரச்சனைகளைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக்கூற நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டம் எப்போதும் வறட்சியாக இருக்கின்ற காரணத்தால், அந்தக் காலத்திலிருந்தே அதை ஒரு பின் தங்கிய மாவட்டமாக வைத்து இருக்கக்கூடிய காரணத்தால், அதை 'டிரவுட் அஃபெக்டட் ஏரியா'வாக அறிவிக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். நானும் அந்தக் காலத்திலிருந்தே அதுபற்றி சொல்லிக்கொண்டு வருகிறேன்.

அதற்கு இப்போதுதான் சரியான தருணம். இந்த வறட்சியை காரணமாக வைத்துக் கொண்டு, அந்தப் பிரதேசத்தை டிரௌட் அபெக்டட் ஏரியாவாக மாற்றுவதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே உங்களைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். புதுக்கோட்டை மாவட்டத்தில் பருவ மழை தவறியதின் காரணத்தாலே மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு 6 மணி நேரம் மின்சாரம் கொடுப்பதாக மின்சார இலாகாவிலே சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் சொல்வது போல் அப்படி 6 மணி நேரம் மின்சாரம் கொடுப்பதில்லை.

விவசாயிகள் அவர்களுடைய பம்புசெட்டுகளுக்கு கீழே அல்லது அதன் பக்கத்திலே உட்கார்ந்துக் கொண்டு, இதோ மின்சாரம் வரப்போகிறது என்று 6 மணி நேரத்திற்கும் அதிகமாக காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் எந்த 6 மணி நேரம் கொடுக்கப்போகிறார்கள் என்பதற்கு தகவல் இல்லை. ஒரு நாளைக்கு சில நேரம் 6 மணி நேரம் கொடுக்கிறார்கள், ஒரு நாளைக்கு மின்சாரமே கொடுப்பது கிடையாது. ஆகையினால் மின்சார இலாகாவிற்கு நமது அரசாங்கத்திலிருந்து ஒரு உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். புதுக்கோட்டையிலே இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு எந்த மணியிலிருந்து எந்த மணி வரைக்கும் மின்சாரம் கொடுக்கப்படும்—அவர்களுடைய பம்பு செட்டுகளை இயக்குவதற்கு—என்கிற தகவலை அந்தந்த கிராம மக்களுக்கு உறுதியாக முன்கூட்டியே சொல்லிவிட்டால், அவர்கள் அதற்குத் தகுந்தாற்போல் தங்களுடைய வேலைகளை முடித்து விட்டு, அந்த பம்பு செட்டுகளை இயக்குவதற்காக அங்கே வந்து ரெடியாக இருப்பார்கள். அவர்களுக்கு அது நல்ல வசதியாக இருக்கும். இந்த உதவியை அரசாங்கம் கண்டிப்பாகச் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல், எங்கள் மாவட்டத்தில் 3 மில்கள்தான் இருக்கின்றன என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். இந்த 3 மில்களை வைத்துத்தான், எங்கள் மாவட்டத்தில் நாங்கள் 2000 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு வேறு வேலைகளுக்கு வாய்ப்பே கிடையாது. அந்த 2000 குடும்பங்களும் இந்த 3 மில்களில் தான் வேலை பார்த்து பிழைக்க வேண்டிய ஒரு கட்டாய சூழ்நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் மின்சார வெட்டு ஏற்பட்டிருக்கிற காரணத்தாலே அவர்களுக்கு அடிக்கடிலே ஆஃப் அல்லது டெம்பரரி வொர்க்கர்ஸ்க்கு வேலை வாய்ப்பு இழப்பு என்று அடிக்கடி செய்து விடுகிறார்கள். அப்படி செய்யப்படுவதினாலே அவர்களுக்கு வேறு வேலையும் கிடைப்பதில்லை—இதனால் ஆயிரக்கணக்கில் தொழிலாளர்கள் வறுமையில் வாடும் சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இது



போன்ற பின்தங்கிய பிரதேசமாக இருக்கக்கூடிய புதுக்கோட்டைக்கு, 3 தொழிற்சாலைகள் மட்டுமே இருக்கக்கூடிய ஒரு இடத்திற்கு, மின்சார வெட்டு அதிகமாக இருக்கிற காரணத்தாலே, வேலை வாய்ப்புகள் குறைந்து போவதை உத்தேசம் செய்தாவது, அந்த மாவட்டத்திற்கென்று ஒரு சலுகை காட்டி, அங்கேயுள்ள தொழிற்சாலைகளுக்கு அதிக அளவில் மின்சாரம் கிடைக்க அரசு ஏற்பாடு செய்யவேண்டும் என்று அந்தத் தொழிலாளர்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, எங்கள் மாவட்டத்தில் காவிரி மில் என்ற பெயரில் ஒரு மில் இருக்கிறது. இந்த நிறுவனம் பாதி பிரைவேட் செக்டாராகவும் பாதி பப்ளிக் செக்டாராகவும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த நிலை மாற வேண்டும். என்னைப் பொறுத்தவரைக்கும், அது பப்ளிக் செக்டாராகவே முழுமையாக மாறவேண்டும் என்ற கொள்கையுடையவன் அதை அரசாங்கமே முழுமையாக எடுத்து, பப்ளிக் செக்டாராகவே நடத்தினால், அங்கே வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு செக்யூரிட்டி இருக்கும். செக்யூரிட்டி டு தி வொர்க்கர்ஸ் கிடைக்கும். பிரைவேட் செக்டாரில் இருக்கிற காரணத்தால் அவர்களுக்குப் போதிய செக்யூரிட்டி இல்லை என்பது என் கருத்து.

குறிப்பாக அங்கே இருக்கக்கூடிய, காவிரி மில்லிலே இருக்கக்கூடிய சூழ்நிலையை வைத்துத்தான் இதை நான் சொல்கிறேன், மற்றவைகளுக்காக அல்ல. 50,000, 60,000 ஸ்பின்கள் இருக்கக்கூடிய அந்த மில்லை அரசு எடுத்து ஓட்டினால் அதிலேயே கிட்டத்தட்ட 2,000 பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அதனை அரசாங்கம் கவனித்துப் பூரணமாக எடுத்து நடத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் மிகவும் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11–30)

அடுத்து, நம்முடைய புதுக்கோட்டை டவுனை எடுத்துக் கொண்டால் லைட் கிடையாது. பகலிலே கரண்ட் கட் என்று சொல்கிறார்கள், பரவாயில்லை. ஆனால் நைட்டிலே லைட் கிடையாது என்றால் அதனால் தீய சக்திகள் வழியிலே போகின்ற பெண்களின் சங்கிலியினை அறுத்துக்கொண்டு ஓடுகின்ற நிலைமை ஏற்படுகின்றது; திருட்டு ஜாஸ்தியாக ஆகின்றது. எனவே, இந்த மாதிரியான சூழ்நிலைகள் ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டும் என்றால் சரியான முறையிலே இரவிலே லைட்டை நிறுத்தாமல் டவுனிலே கொடுக்கும்படியாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, புதுக்கோட்டையைப் பொறுத்தவரையில் அது ரொம்ப வறட்சிப் பிரதேசம் என்று நான் சொன்னேன். இந்த வருஷம் எல்லாம் சாவியாக ஆகிவிட்டது. எனவே, அவர்களை

வரி கட்டச் சொன்னாலோ அல்லது லோன் கட்டச் சொன்னாலோ அவர்களால் கட்ட முடியாத நிலைமையிலேதான் இருக்கிறார்கள். எனவே, கோவாப்பரேட்டிவ் லோனாக இருந்தாலும் லேன்ட் மார்ட்கேஜ் பேங்க் லோனாக இருந்தாலும் அவற்றை நீண்ட கால லோனாக ஆக்கி தள்ளிப் போட ஏற்பாடு செய்வதோடு வரி வஜா செய்துகொடுத்து அவர்களுக்கு உதவவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வறட்சி வேலைகள் ஆரம்பமாகிக்கொண்டிருக்கின்றன. செல்ஃப் சஃபிசியன்சி ஸ்கீம் என்று சொல்கிறார்கள். ஆனால் தற்போது அரசாங்கத்திற்குப் பணம் நெருக்கடி அதிகமாக இருக்கின்றது. இப்படிப் பண நெருக்கடி அதிகமாக இருக்கின்ற இந்த நேரத்திலே தீய சக்திகள் என்ன செய்கிறார்கள் என்று சொன்னால் செல்ஃப் சஃபிசியன்சி ஸ்கீமிலே கான்ட்ராக்ட் எடுத்துக்கொண்டு வேலையே செய்யாமல் விட்டுவிடுகிறார்கள் அதாவது குளம் வெட்டுவது, ரோடு போடுவது போன்ற வேலைகளுக்கு கான்ட்ராக்ட் எடுத்துக்கொண்டு வேலையே செய்யாமல் பில்லை மட்டும் போட்டுப் பணத்தை வாங்கிவிடுகிறார்கள். இந்த நிலைமை அரசாங்கத்திற்குத் தெரியாது. ஏனென்றால் நீங்கள் எல்லாவற்றையும் கவனிக்க முடியாது. ஆனால் இப்படிப்பட்ட காரியங்களைக் கூர்ந்து கவனிக்கவேண்டும். இன்றைக்கு இருக்கக்கூடிய பண நெருக்கடியில் இந்தமாதிரி காரியங்கள் வேறு நடந்தால் மேலும் கஷ்ட நஷ்டங்கள் அதிகமாகும் என்பதை நல்லதுக்காகத்தான் நான் சொல்கிறேன். எனவே, வேலையைச் செய்யாமல் பில் மட்டும் பாசாகிவிடுகின்றது. அது எப்படி என்பது தெரியவில்லை, இதை நான் மட்டும் சொல்லவில்லை, ஊரிலே உள்ளவர்கள் எல்லாம் சொல்கிறார்கள். எனவே இதுகுறித்து அரசாங்கம் நன்கு கவனித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஒரு முக்கியமான விஷயம் பற்றி சொல்ல விரும்புகிறேன். ஃப்ரீடம் பைட்டர்ஸுக்கு நீங்கள் பல சலுகைகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். 150 ரூபாய் பென்ஷன் கொடுக்கிறீர்கள் ஆனால் புதுக்கோட்டையிலே இருப்பவர்களுக்கு மட்டும் இதனைத் தள்ளி வைத்திருக்கிறீர்கள். இது ஏன் என்று தெரியவில்லை. ஆனால் புதுக்கோட்டையிலே இருப்பவர்களுக்குத்தான் முக்கியமாகக் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு டூயல் ரோல் வந்திருக்கின்றது. ஸ்டேட் மெர்ஜர் மூவ்மென்டிலேயும் போராடினார்கள். இரண்டாவதாக ஃப்ரீடம் பைட்டர்ஸ் மூவ்மென்டிலேயும் சேர்ந்து போராடினார்கள். ஆனால் அவர்களுக்கு உதவாததற்கு நீங்கள் சொல்கின்ற ஒரே காரணம் என்னவென்றால் அவர்கள் ஜெயிலுக்குப் போகவில்லை என்பது. ஆனால் அவர்கள் மீது



கேஸ் போடப்பட்டது. அப்படி கேஸ் போடப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகின்ற நேரத்திலே சுதந்திரம் வந்துவிட்டது. எனவே, மதிப்பிற்குரிய பெரியவர் பக்தவச்சலம் அவர்கள் அந்த கேஸ்களை எல்லாம் வித்ட்ரா செய்துவிட்டார்கள். அதனால் அப்படி கேஸ் வித்ட்ரா செய்யப்பட்டவர்களுக்குப் பென்ஷன் கிடைக்கவில்லை. ஆனால் அவர்களும் பாடுபட்டிருக்கிறார்கள். மற்றவர்கள் எப்படி எல்லாம் அடிகள் வாங்கினார்களோ, அதேமாதிரி இவர்களுக்கும் அந்தமாதிரி கஷ்டங்கள் வந்திருக்கின்றன. எனவே, இவர்களுக்கும் அரசாங்கத்தின் மூலம் ஃப்ரீடம் ஸ்படட்டர்ஸுக்கு கொடுக்கக்கூடிய பென்சனையும், சலுகைகளையும் கொடுக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த இராணுவ சேவை செய்கிறவர்கள் அதிகாரிகள் சரி, ஜவான்கள் சரி பிகாரிலிருந்தும் பஞ்சாப்பில் இருந்தும் இங்கே மாற்றப்பட்டு வருகிறார்கள், வரக்கூடிய அவர்கள் இங்கே வந்தவுடன் தங்களுடைய குழந்தைகளை ஸ்கூலில் சேர்க்கவேண்டும் என்று நினைக்கிறார்கள். ஸ்கூலில் சேர்ப்பதற்கு 10—15 நாள் நிற்கிறார்கள், ஸ்கூலில் இடம் கிடைக்கவில்லை. இவர்களுக்குக் கிடைத்து இருப்பது 11 நாள் கேஷுவல் லீவ்தான் இந்த 11 நாளில் 7—8 ஸ்கூல் அட்மிஷனுக்கு அலைகிறார்கள். இதிலே 7-8 நாள் கேஷுவல் லீவ் போய் விடுகிறது. அவர்களுக்குத் தனியாக சலுகை கொடுக்கவேண்டும், எப்படியாவது. புரபஷனல் காலேஜில் சேர்க்க வேண்டாம். அவைகளில் மெட்ரிட் பிரகாரம் சேருங்கள். அதாவது மெடிக்கல் இன்ஜினியரிங் காலேஜ்களில், அரசாங்க ஸ்கூலாக இருந்தாலும் சரி, தனியார் ஸ்கூலாக இருந்தாலும் சரி, தனியார் காலேஜ் ஆக இருந்தாலும் சரி, அரசாங்க காலேஜ் ஆக இருந்தாலும் சரி போன உடனே அவர்களுக்கு அட்மிஷன் கிடைக்கக்கூடிய அளவுக்கு அவர்களுக்கு உதவி செய்யவேண்டும். தனியார் இன்ஸ்டிடியூஷன்களுக்கும், அரசாங்க இன்ஸ்டிடியூஷன்களுக்கும் ஒரு ஸ்டேண்டிங் இன்ஸ்டிரக்ஷன் கொடுக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு வனத்துறை அமைச்சர் இங்கே இல்லை, இருந்தால் ஒன்றைச் சொல்ல நினைத்தேன், கொடைக்கானலில் விறகு தூக்கி பிழைக்கும் பெண்கள் 200—300 பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்புக்கு ஒரு வழி செய்யவேண்டும். பாரஸ்டில் ஒரு பக்கம் பிடிக்கிறார்கள், அவர்களை பிடிக்காவிட்டால் பாரஸ்டில் உள்ள அலுவலர்கள் மீது ஆக்ஷன் எடுக்கிறார்கள். இது ரொம்ப கன்புஷனில் இருக்கிறது. எந்த மாதிரியான நிலைமை அங்கு இருக்கிறது என்று சொல்ல முடியவில்லை. அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கவேண்டும். ஒரு வழி செய்யவேண்டும். இதற்கு ஒரு ஸ்டேண்டிங் இன்ஸ்டிரக்ஷன் பாரஸ்டு டிபார்ட்மெண்டுக்கு நீங்கள் கொடுக்க வேண்டும். இதையெல்லாம் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிக்க பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற இந்தத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை இந்த மாமன்றத்திலே வைக்க விழைகிறேன். சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரை வறட்சியால் மிகப் பெரிய அளவில் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே தமிழக அரசு சேலம் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சேலம் மாவட்டத்தில் ஆழ் குழாய்க் கிணறுகள் 300 அடிக்கு மேல் தோண்டினால் கூடக் குடிதண்ணீர் கிடைக்கவில்லை. நைனிடாலிலிருந்து பெறப்பட்ட அந்த ஆயிரம் அடி மிஷினை வைத்து சேலம் மாவட்டத்தில் குறைந்தபட்சம் 200 இடங்களில் குழாய்க் கிணறுகளை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கின்ற 6 மாதங்களாக நடைபெற்று வருகின்ற தமிழக அரசின் தமிழக முதல்வரின் சத்துணவுத் திட்டம். புரட்சித் தலைவர், பொன்மனச்செம்மல் அவர்கள் தம் உள்ளத்தில் எழுந்த புனித திட்டம் ஆகும். 12 வருடத்திற்கு ஒரு முறைதான் குறிஞ்சி மலர் பூக்கும் என்று சொல்வார்கள் ஒரு நூற்றாண்டுக்கு ஏன் சொல்லப்போனால் பல நூற்றாண்டுகளுக்கு ஒரு முறை அரசியல் வாதிகள் அரசியல் தலைவர்களாக ஆக முடியும் என்ற கருத்தை உலக அரங்கில் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில்தான் எதிர்கால நோக்கோடு வருங்காலத்தில் உடல கட்டோடு கூடிய தமிழக வாலிப சமுதாயத்தினர் உருவாக வேண்டும் என்பதற்காக இன்றைக்கு தமிழக முதல்வர் சத்துணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தி அதனாலே இன்றைக்குத் எண்ணற்ற இளம் சிறார்களுக்குச் சத்துணவு வழங்குகிறார்கள். இந்தத் திட்டத்தின் அடிப்படையில் 27,800 குழந்தைகள் நல நிலையங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. மத்திய உணவு போடுவது மட்டும் அல்லாமல் வறட்சிக் காலங்களில் அல்லது வெள்ளப்பெருக்கு காலங்களில் சமுதாயநலத் திட்டங்களை அந்தப் பகுதியில் ஒவ்வொரு கிராமத்தில் வைத்து செய்வதற்கு இவைகள் வழிவகையாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கல்வித்துறையைப் பொறுத்தவரை, தமிழக அரசுக்கு இந்த ஆண்டு யுனஸ்கோ நிறுவனம் க்ரப்ஸ்காயா என்ற கல்விப் பரிசை அளித்து இருப்பது கல்வித்துறை வளர்ச்சியில் தமிழகம் மறுமலர்ச்சியைப் பெற்றிருக்கிறது என்பதற்குச் சான்று என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். உலக அரங்கிலே பாராட்டப் படுகின்ற தன்மை உருவாக்கப்பட்டிருக்கிறது.



(முற்பகல் 11–40)

முதியோர் கல்வியைப் பொறுத்தவரையில் முதியோர்களுக்கு நல்ல முறையில் கல்வி வசதிகளை அளிப்பதோடு அவர்களுக்குச் சிறு தொழில்கள், கைத்தொழில்கள் கற்றுத்தரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே அரசுக்குப் பரிந்துரை செய்ய விரும்புகிறேன்.

அடுத்து வீட்டுக்கு ஒருவருக்கு வேலைவாய்ப்பு என்ற திட்டத்தைத் தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். இதைப்பார்த்து பல்வேறு கட்சிகள் எல்லாம் இது நடத்தப்படுமா, இது நடக்குமா என்று கேட்டார்கள். அதைப்போலவேதான், ஏற்கெனவேகூட சத்துணவுத் திட்டத்தைத் தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்த நேரத்திலே இது நடத்தப்படுமா நடக்குமா என்று கேட்டார்கள், இப்படி இந்தத் திட்டங்கள் அறிவிக்கப்படுகின்ற நேரத்திலே சில குறைகளைச் சொல்கிறார்கள். இந்த மாமன்றத்திலே பணியாற்றவேண்டிய கடமையைக் கருதி சிலவற்றைச் சொல்கிறார்கள் என்று, நாங்கள் அதை ஏற்றுக்கொள்கிறோம். வீட்டுக்கு ஒருவருக்கு வேலை வாய்ப்பு என்று புரட்சித்தலைவர் அவர்கள் சொல்லியிருப்பது நிறைவேற்றப்பட்டு இன்னும் சில ஆண்டுகளிலே தமிழகத்திலே உள்ள அத்தனை பேர்களுக்கும் வேலைவாய்ப்புக் கிடைத்த பின்னரே இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகம்தான் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்து நல்ல முறையிலே நிறைவேற்றியிருக்கிறது என்று மற்ற மாநிலங்கள் எண்ணி மகிழ்ந்து அவர்களும் பின்பற்றக்கூடிய நிலைமை ஏற்படப்போகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தன்னிறைவுத் திட்டம் நாட்டுமக்களுக்கு நன்மை பயக்கின்ற திட்டமாகச் செயலாக்கப்பட்டு வருகிறது. நான் அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் திட்டத்தை மாநகராட்சிகளுக்கும் விரிவுபடுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாநகராட்சிகளிலேயும் அந்தப் பணிகள் செவ்வனே நிறைவேற்றப்படுமானால் இந்த திட்டத்தினால் மக்கள் பலனடைவார்கள் என்பதால் மாநகராட்சிகளுக்கும் விரிவு படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப்புறங்களிலே குடிநீர்த்திட்டத்தைப் பொறுத்தவரை கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளிலே தமிழக அரசு 80 சதவீதம் கிராமங்களுக்கு சுத்த குடிநீர் தருவதற்கான திட்டங்களை நல்ல முறையிலே நிறைவேற்றி இருக்கிறது. அதே போல பேரூராட்சிகளுக்கும் குடிநீர் வசதிகளைச் செய்கின்ற முறையிலே தன்னிறைவுத் திட்டத்தை விரிவாக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் நலத் திட்டத்திற்காக 105 கோடி ரூபாய் ஒதுக்கி, மற்ற மாநில அரசுகளையெல்லாம்விட அதிகமான அளவுக்கு ஒதுக்கி மிகப் பெரிய புரட்சியை ஏற்படுத்திய தமிழக அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(டாக்டர் கே. பி. இராமலிங்கம்)

கிராமப்புறங்களை நகரங்களோடு இணைத்தல் என்ற
முறையிலே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு
பல பணிகளைச் செய்து வருகிறது. 1977 ம் ஆண்டு
தேர்தல் காலத்திலே மாண்புமிகு புரட்சித் தலைவர் அளித்த
வாக்குறுதிக்கு ஏற்ப—கிராமங்கள் சிறு நகரங்களாக்கப்படும்
என்று சொன்னதற்கு ஏற்ப—10 கோடி ரூபாய் செலவிலே 500
கிலோமீட்டர் அளவுள்ள கிராமப்புறச் சாலைகள் போடப்
பட்டிருக்கின்றன என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்
கொள்கிறேன். கடந்த மூன்று ஆண்டுகளாக அரசுப் போக்கு
வரத்துக் கழகங்கள் மூலமாக பல்வேறு கிராமப்புறங்களை
இணைக்கின்ற முறையிலே 4 ஆயிரம் பேருந்துகள் விடப்பட்டிருக்
கின்றன. கிராமங்களை நகரங்களாக்குதல் என்ற கொள்கையின்
மூலமாக பல நல்ல பணிகள் நிறைவேறுவதோடு தன்னிறைவுத்
திட்டம் என்ற அடிப்படையிலேயும் பல பணிகள் நிறைவேற்றப்
படுவதால் இன்றைக்குக் கிராமங்கள் நகரங்களாக உருவாகி
வருகின்றன என்பதைப் பார்க்கிறோம், அந்த வகையில் புரட்சித்
தலைவர் அவர்கள் 1977 ஆம் ஆண்டு தேர்தல் வாக்குறுதி
கொடுத்தது நிறைவேற்றப்பட்டு வருகிறது என்பதை நான்
சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாநில நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரையிலே
தன்னிறைவுத் திட்டம் மாவட்டவாரியாகச் செயல்படுத்தப்பட்டு
சாலைகள் எல்லாம் சீரமைக்கப்படவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

தொழில் துறையைப் பொறுத்தவரையில் மத்திய அரசின்
கொள்கையால் இன்றைக்கு—சிமின்ட் விநியோகத்தில்—தொழி
லதிபர்கள் பயன் அடைகிற நிலைமை ஏற்பட்டு ஏழை மக்கள்
பாதிக்கப்பட்டிருக்கின்ற நிலைமை ஏற்பட்டு இருக்கிறது, இந்த
இரட்டைக் கொள்கையை மத்திய அரசு திரும்பப்பெற
வேண்டுமென்று கேட்டுக்கொள்ளவேண்டுமென்று நான் இந்த
நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். யாரிடம், எப்போது,
எங்கே என்ற இல்லாத பிரச்சினைகளையெல்லாம் விட்டுவிட்டு
நான் இந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே தொழில் துறை
மானியத்திலே பேசும்போது குறிப்பிட்டதுபோன்று விந்திய
மலைக்கு வடக்கே உள்ள மாநிலங்களில் 87 மாவட்
டங்கள் பின்தங்கிய மாவட்டங்கள் என்று அறிவிக்கப்பட்டும்,
விந்தியமலைக்குத் தென்புறம் இருக்கின்ற தென் மாநிலங்களிலே
ஒரு மாவட்டம்கூட பின்தங்கிய மாவட்டம் என்று அறிவிக்கப்பட
வில்லை நான் சொல்லிக் கொள்ளவிரும்புகிறேன்.
நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும், நடப்பவைகள்
நல்லவைகளாக இருக்கட்டும் என்ற முறையிலே இந்திய தேசியக்
காங்கிரஸ் கட்சியின் நண்பர்களும், நாடாளுமன்றத்திற்கு
மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும்
தமிழகத்திலே குறைந்த பட்சம் 7 மாவட்டங்களையாவது
தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டங்கள் என்று அறிவிக்கும்



படி கேட்டுக்கொள்ளவேண்டுமென்பதை வற்புறுத்திக் கூற
விரும்புகிறேன். வருகிற நிதிநிலை அறிக்கையில் மத்திய
அரசு அப்படி அறிவிக்க வேண்டுமென்று காங்கிரஸ்நண்பர்கள்
ஒரு தீர்மானத்தை முன்மொழிந்து....

திரு எஸ். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு மாற்றுத்தலைவர்
அவர்களே, அருமை சகோதரர் இராமலிங்கம் அவர்களும் சரி,
ஆளும் வரிசையில் இதற்கு முன்னாலே பேசிய உறுப்பினர்களும்
சரி வட மாநிலங்களிலே பல்வேறு மாவட்டங்களை மத்திய
அரசு பின்தங்கிய மாவட்டங்களாக அறிவித்திருக்கிறது.
தமிழகத்திலே அதுமாதிரி இல்லை என்ற கூற்றினை இரண்டு
நாட்களாக சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு
தொழில் அமைச்சர் அவர்களும் இங்கே இருக்கிறார்கள். நான்
உங்கள் மூலமாக ஒரு விளக்கம் பெற விரும்புகிறேன், தமிழகத்
திலே பிற்படுத்தப்பட்ட தாலுக்காக்கள் என்று அறிவிக்கப்பட்டு
அந்தப் பகுதியிலே ஆரம்பிக்கப்படுகிற தொழிலுக்கு 15 சதவீதம்
மானியம், அதாவது மெஷினாக இருந்தாலும் சரி, கட்டிடமாக
இருந்தாலும் சரி மானியம் வழங்கப்படுகிறதா, இல்லையா
என்ற விவரத்தை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாற்றுத்தலைவர்
அவர்களே, ஏற்கனவே மத்திய அரசு 33 தாலுக்காக்களை
தொழில் துறையிலே பின்தங்கிய தாலுக்காக்கள் என்று அறிவித்து,
அந்தப்பகுதியிலே தொழில் துவங்குபவர்களுக்கு மானியம் 15
சதவீதம் வழங்கி வருகிறது. மாநில அரசு 24 தாலுக்காக்களை
அறிவித்து இருக்கிறது. இது போக இப்போது உறுப்பினர்
இராமலிங்கம் அவர்கள் சுட்டிக்காட்டுவது 'ஜீரோ இன்டஸ்ட்ரீஸ்
டிஸ்ட்ரிக்ட்' என்று சொல்லி இந்திய நாடு முழுவதும் இருக்கும்
எல்லா மாநிலங்களிலும் 82 மாவட்டங்களை தேர்வு செய்திருக்
கிறார்கள். அப்படித்தேர்வு செய்திருக்கிற மாவட்டங்களில் தமிழ்
நாட்டிலேயிருந்து எந்த மாவட்டமும் இல்லை, தொழில் என்று
வருகிறபோது ஜீரோ இன்டஸ்ட்ரீஸ் என்று சொல்லக்கூடிய, ஒரு
தொழிலும் இல்லாத மாவட்டத்திற்கு முன்னுரிமை என்று
சொல்லி, எல்லா தொழில்களும் அந்த மாவட்டங்களை
நோக்கிப் போகிறபோது, ஏற்கனவே பரவலாக தமிழகத்திலே
தொழில் இருந்தது என்ற அந்தக் காரணத்தாலே தமிழ்நாடு
தண்டிக்கப்படக் கூடாதென்று அந்த நிலையைத்தான் உறுப்பினர்
சுட்டிக்காட்டுகிறார்.

திரு என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே. நான் மீண்டும் உங்கள் மூலமாக தொழில் அமைச்சர்
அவர்களைக் கேட்டுக் கொள்வேன். ஒரு தொழிற்சாலையும்
இல்லாத பூஜ்யமாக இருக்கிற மாவட்டம் என்று அவர்கள்
அறிவித்திருக்கிறார்கள். தமிழ் நாட்டிலே ஒரு மாவட்டம் கூட
இல்லை என்று சொன்னால் தமிழ் நாட்டில் அந்த மாதிரியான
நிலையில் மாவட்டங்கள் இல்லை என்றுதானே அர்த்தம்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே. அப்படியென்றால் மாண்புமிகு சித்தன் அவர்கள் தமிழகத்திலே வந்திருக்கிற தொழில்கள் போதும், இனி மேல் தொழில்களே வேண்டாம் என்று சொல்கிறாரா?

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாற்றுத்தலைவர் அவர்களே, விவாதம் சுவையாக இருக்கிறது. நான் விளக்கம் பெறுவதற்காகச் சொன்னேன். தமிழகம் ஒதுக்கப்படுவதாக ஒரு கருத்து அங்கேயிருந்து வந்து கொண்டிருக்கிறது. அதனால் தான் 15 சதவீதம் மானியம், மத்திய அரசு இன்னும் கொடுத்து கொண்டிருக்கிறது என்று சொன்னேன். மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு எந்தத் தொழிலும் ஆரம்பிக்காத மாவட்டங்கள் என்று சொல்கிறார்கள். ஆகவே தமிழகத்திலே எந்த தொழிலும் ஆரம்பிக்காத மாவட்டங்கள் இல்லை என்று தானே அர்த்தம். அவர்கள் வேண்டுமானால் வேறு தொழில் ஆரம்பிக்கின்ற மாவட்டங்கள் பூஜ்யம் மாவட்டமாக அறிவித்து இருக்கிறார்கள். உதாரணம் உத்திரபிரதேசம், மத்திய பிரதேசம் என்று சொல்லி தமிழகத்திலே அதுமாதிரி இல்லை என்று சொன்னால் ஏற்றுக் கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாவட்டங்களில் கூட தமிழகத்திலே இருக்கிற மாவட்டங்களுக்கும், வட மாநிலங்களில் இருக்கிற மாவட்டங்களுக்கும் வித்தியாசம் இருக்கின்றன. வட மாநிலங்களில் சின்ன சின்ன மாவட்டங்களாக செய்திருக்கிறார்கள். ஒரு நான்கு தாலுக்காகளை, ஐந்து தாலுக்காகளை ஒரு மாவட்டம் என்று வைத்திருக்கிறார்கள். இப்படி மாவட்டங்களை வைத்துக் கொண்டு மாவட்டவாரியாக அவர்கள் சொல்கிறார்கள். நான் சொல்வது கூட மாவட்டம் என்பதற்கு பதிலாக தமிழ் நாடு அரசினுடைய வேண்டுகோள், தாலுக்காகளை எடுத்துக் கொள்ளுங்கள். தாலுக்கா என்று எடுத்து உத்தரபிரதேசம் பின்தங்கியது என்று கருதுவீர்களானால் அதற்கு 50 வேண்டுமானால் வைத்துக்கொள்ளுங்கள். ஆனால் தமிழ் நாட்டிற்கு 5 தாலுக்காகளாவது எடுத்து அந்த ஐந்து மாவட்டங்களில் புதுத் தொழில்கள் வருகிற அந்த வாய்ப்பைக் கொடுங்கள்; தாலுக்காவினுடைய அடிப்படையிலே ஏற்றுக்கொள்ளுங்கள் என்று தான் மாநில அரசு மத்திய அரசை வேண்டிக்கொள்கிறது.

(முற்பகல் 11.50)

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிக்க் பேரவைத் மாற்றுத் தலைவர் அவர்களே, நான் சொன்னதைத் திரும்பச் சொல்வதற்காக நீங்கள் பொறுத்துக் கொள்ள வேண்டும். ஒரு அடிப்படையிலே ஒரு தொழிற்சாலையும் இல்லாத மாவட்டங்களை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் (குறுக்கீடு) அப்படியில்லாமல் வேறு தொழிற்சாலைகள் இருக்கின்றன.



(குறுக்கீடு) நம்முடைய தேவைகளை இன்னமும் கேட்கலாம் வலியுறுத்தலாம்; நிறைய கேட்கலாம்; நிறைய கொண்டு வர வேண்டும். நாம் எப்படி பதில் எழுதியிருக்கிறோம்? அவர்கள் என்ன கேட்டிருக்கிறார்கள்? நாம் எவ்வளவு காலம் எடுத்துக் கொண்டோம்? எதிலே எல்லாம் நாம் சரியாக வலியுறுத்தவில்லை? நாம் என்ன கேட்கவில்லையென்பது வேறு விஷயம். இந்த ஸீரோ இன்டஸ்ட்ரீஸ் டிஸ்டிரிக்ட் என்பதிலே எந்தவித பாகுபாடும் இல்லையென்பதைத்தான் நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** அந்த அடிப்படையே தவறு என்பதுதான் நாம் சொல்வது. இந்த அடிப்படையின் காரணத்தாலேயே தமிழ்நாடு பாதிக்கப்படுகிறது. எந்த முறையை கையாளுகிறார்களோ, அந்த முறையே தவறு, அந்த முறையை மாற்று என்றுதான் தமிழ்நாடு அரசு கேட்கிறது, நாங்கள் கேட்கிறோம்

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** எந்த முறையைக் கையாண்டால் தமிழகம் புறக்கணிக்கப்படுமோ அந்த முறையைக் கையாளுவது தான் 1967—லிருந்து மைய அரசு கடைப்பிடிக்கிற கொள்கை. ஆனால், நான் சொன்னது நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும், இனி நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும். அந்த அடிப்படையிலே இனியாவது, வருகின்ற நிதிநிலை அறிக்கையிலே, இங்கே தமிழகத்தினுடைய வாக்குகளைப் பெற்று, உறுப்பினர்களாக வந்திருக்கிற காங்கிரஸ் கட்சியினுடைய அன்பர்கள், தமிழக மக்களுடைய வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்திலே பணியாற்றுகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்கள், மத்திய அரசை வற்புறுத்தி, வலியுறுத்தி, எந்த எந்த அடிப்படையிலே நிர்ணயித்தால், குறைந்தபட்சம் 7 மாவட்டங்களாவது தமிழகத்திலே தொழில் துறையிலே பிற்படுத்தப்பட்ட மாவட்டங்களாக அறிவிக்கப்படும் என்ற வகையிலே, அவர்கள் வற்புறுத்தி, வலியுறுத்தி, அறிவிக்க உதவ வேண்டுமென்றுதான் மாமன்றத்தின் வாயிலாக நான் வேண்டுகோள் விடுப்பது. அதற்கு மறுப்பார்களேயானால் மத்திய அரசைக் கண்டித்து, இந்த மாநில அரசு இந்த மாமன்றத்தின் வாயிலாக ஒரு கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவராக இருக்கிற என். எஸ். வி. சித்தன் அவர்கள் முன்வருவார்களா? என்பது நான் அவர்கள் முன்னாலே வைக்கின்ற கேள்விக் கணையாகும்.

அதே நேரத்திலே மின்சாரத் துறையைப் பொறுத்தவரையில் இன்றைக்குத் தமிழகத்தில் உடனடியாக மின்பற்றாக் குறையை......

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் மாவட்டவாரியாகப் பிரித்துவைக்கிற அந்த அடிப்படையே தவறு என்கிற கருத்தை அரசு கொண்டிருக்கிறது என்று தெரிவித்தார்கள். இதிலே தமிழ்நாடு இந்திரா காங்கிரசினுடைய நிலைமை என்ன?

அவர்கள் இப்படி மத்திய சர்க்கார் பிரித்து, தமிழகத்திலே எந்த மாவட்டமும் வராத நிலைமையை உருவாக்குகிற அந்த வழிமுறையை ஆதரிக்கிறார்களா, எதிர்க்கிறார்களா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிக்க மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் பேசும் பொழுது நானும் கவனித்துக் கொண்டிருந்தேன். மாவட்டம் என்ற எல்லையை, அங்கேயெல்லாம் சின்ன, சின்ன மாவட்டங்கள் என்று வைத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இங்கே, நம்முடைய தமிழகத்திலே ஜனத்தொகை அதிகமாக இருக்கிற காரணத்தால், வேறு காரணத்தால் சமவெளிப் பிரதேசமாக இருக்கிற காரணத்தால் அப்படி இருக்கிறது. ஆனால், மற்ற மாநிலங்களிலே என்ன என்று தெரியாது.....

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** உதாரணத்திற்காக சொல்கிறேன். 10 மைல் ரேடியசுக்குள்ளே ஒரு தொழிற்சாலை இருந்தால், அதுகூட ஒரு மாவட்ட எல்லையிலே இருக்குமானால், அதற்குள்ளே தொழில் இருக்கிறது என்று சொல்லி, அதை நிராகரிப்பது சரியாக இருக்காது. அதே நேரத்திலே 5 மைல் ரேடியசிலே ஒரு தொழிற்சாலையும் இல்லை என்று சொல்லி, அதற்கு ஒரு தொழிற்சாலை; அதற்குப் பக்கத்திலே இன்னொரு 5 மைல் ரேடியசிலே இன்னொரு மாவட்டமாகக் கருதி, அங்கே ஒரு தொழிற்சாலை என்று கொடுக்கிறார்கள். மக்கள் அதிகமாக வாழ்கிற, அதைப் போல் ஏரியா அதிகமாக இருக்கிற இந்த இரண்டையும் கணக்கிலே கொண்டு முடிவு செய்ய வேண்டுமென்பதுதான் நாம் சொல்வது,

THIRU K. S. G. HAJA SHAREEF: Mr. Chairman Sir If the Hon'ble Minister and other members can categorically place before this House, What are all the industries to which permission was not granted and who are all the people who were insisted to go there, that will greatly help us to take up the matter with the Government. There is no use of simply talking like this. The Government of India would have suggested that these are all the backward places. Just as you are having backward places here, then there are also backward places, where there would not have been even one single small scale industry. That does not mean that the Government will insist that whatever industries should be started in any corner of India should go only to that plaee. Let us have a list of industries which are not granted permission to locate them in our State and who have been asked to go to U.P.

**மாண்புமிகு திரு.எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு மாற்றுத்தலைவரவர்களே, பாரதப் பிரதமர் அவர்களே நாடாளுமன்றத்திலே பேசுகிறபொழுது, இந்துஸ்தான் போட்டோபிலிம்ஸ் பற்றி கேள்வி கேட்டதற்கு, வட மாநிலங்களிலே பல மாவட்டங்கள் தொழில் இல்லாமல் இருக்கின்றன என்று சொல்லியிருக்கி



றார்கள். இங்கே நீங்கள்தான் பொதுமேடைகளிலும், சட்டமன்றத்திலேயும் தமிழ்நாட்டிலே தொழிலே வரவில்லை, வரவில்லையென்று குற்றம் சாட்டுகிறீர்கள். அதே நேரத்திலே அங்கே போகிறபொழுது, தமிழ்நாட்டிலே தொழில் வளர்ச்சி அதிகமாக இருக்கிறது. எல்லா மாவட்டங்களிலும் தொழில் இருக்கிறது என்று கூறுகிறீர்கள். எனவே, 'ஸீரோ இன்டஸ்ட்ரீஸ் டிஸ்ட்ரிக்ட்' என்று சொல்கிறபொழுது ஒரு தொழிலும் இல்லாத மாவட்டம் என்று வருவதாலே, தமிழ்நாடு வரவில்லை. எனவே தமிழ்நாட்டிற்கு முன்னுரிமை கொடுக்கவில்லையென்று சொல்கிறோம். எனவே இந்த வேறுபட்ட நிலைமை இருக்கிறது. ஆகவே, தமிழ்நாடு பாதிக்கப்படுகிறது.

இன்னொன்று எந்தெந்த தொழில்களைச் சேர்ந்தவர்கள் போகிறார்கள், எந்த மைய அரசு அமைச்சர்களிடம் என்பதைச் சொல்ல முடியும். அதை அங்கே உள்ள அமைச்சர்களே எங்களிடத்தில் சொல்கிறார்கள். எனவே உதவி செய்வதற்குப் பதில் உபத்திரவம் செய்வதாகப் போய்முடியும். பெரிய தொழில்களை நடத்துபவர்கள், மைய அரசின் ஐ.டி.பி.ஐ. போன்ற நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் வாங்கி பல நிலைகளில் சிக்கி இருக்கின்ற நிலைமையில் இருந்து கொண்டிருக்கின்ற தொழில் அதிபர்களைப்பற்றி இவரைப்போய்க் கேட்டார் என்று அமைச்சர் பயரைச் சொன்னால் அது உதவி செய்வதாக இல்லாமல் உபத்திரவம் செய்வதாகத்தான் இருக்கும். அவ்வாறு செய்வது சரியாக இருக்காது. ஆனால் பெயர்களெல்லாம் இருக்கின்றன, அதைக் கேட்டால் தனியாகத் தருகிறோம். எந்த அமைச்சர் சொன்னார், எங்கெங்கு ப்ராஜக்ட்ஸ் இருக்கின்றன என்பதைப் பற்றியெல்லாம் திரு. ஹாஜா செரீப் அவர்களிடத்திலே நம்பிக்கையிருக்கின்ற காரணத்தால் தனியாகச் சொல்கிறோம். சட்டமன்றத்திலே அவைகளைச் சொல்லி அவைகள் பத்திரிக்கையிலே வந்தால் அவர்களுக்குக் கெடுதல் செய்வதாகத்தான் அமையும், மேலும் வருகின்ற வாய்ப்பில்லாமல் போகும்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாற்றுத் தலைவரவர்களே, நான் கேட்டதற்கு திரு. சித்தன் அவர்கள் இன்னும் பதில் சொல்லவில்லை. மைய அரசு இப்படிப் பிரித்திருக்கும் முறையைத் தமிழக இந்திரா காங்கிரஸ் ஏற்கிறதா அல்லது அதைத் தவறு என்று சொல்கிறதா?

**திரு என். எஸ். வி. சித்தன்:** மைய அரசாங்கம் எந்த அடிப்படையில் பிரித்திருக்கிறது என்கின்ற முழு விவரம் நமக்குத் தெரியவில்லை. நம்முடைய தொழிலமைச்சரவர்கள் சொல்கிறார்கள், அங்கேயெல்லாம் மாவட்டங்கள் சிறிய அளவில் இருக்கின்றன; இங்கே பெரிய அளவில் இருக்கின்றன என்று. இது பற்றிய முழுமையான விவரங்களைத் தெரிந்து கொண்டுதான் சொல்ல முடியுமே தவிர, எங்களைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டிற்குத் தொழிற்சாலைகள் அதிகம் கிடைக்க வேண்டும்,

அதைப் பெறவேண்டும், அதற்காக உழைக்க வேண்டுமென்பது தான். அதில் நாங்கள் என்றைக்கும் பின் தங்கியிருந்ததும் இல்லை; பின் தங்கியும் இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** முட்டையையும் உடைக்கக் கூடாது, ஆம்லெட்டும் வேண்டுமென்று கேட்பதுபோல் இருக்கிறது. மைய அரசு பிரித்திருக்கின்ற முறை தவறு என்று சொல்கிறார்களா? இல்லையா? தொழில் வளர்ச்சி இந்த மாநில அரசால் முறையாக மேற்கொள்ளபடுகிறது என்பதை அவர்கள் ஒத்துக்கொள்ள வேண்டும். இந்த அடிப்படையில் அதை எதிர்க்கிறார்களா அல்லது ஆதரிக்கிறார்களா? இந்த அடிப்படையை அவர்கள் ஒத்துக்கொண்டால் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி வளர்வதற்கான வாய்ப்பு இல்லை. திட்டமிட்டு, மைய அரசு தமிழகத்தைப் புறக்கணிக்க வேண்டுமென்பதுதான் இந்த அடிப்படையின் நோக்கம்.

**THIRU K. S. G. HAJA SHAREEF :** Mr. Chairman, Sir, Many times on the floor of this House we have said that we are one of those who want more industries to come. Not only more industries but we want thousands of industries in small scale sector to come up and to see that employment opportunities are more. If we have an authentic information from the Hon'ble Minister we will certainly take up the case and we will not lag behind to fight for more industries to come here.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** பெரும் தொழில்களெல்லாம் வட புலத்திலே வர வேண்டும், சின்னச்சின்ன குடிசைத் தொழில்களிலே நாம் ஒண்டிக் கொண்டிருக்க வேண்டுமா? இது எப்படிச் சமநீதியாகும்? இது எப்படி ஒருமைப்பாடாகும்.

**THIRU K.S.G HAJA SHAREEF:** Sir, it is only in small scale and medium scale industries there are more employment opportunities. That does not mean in big industries there are no employment opportunities. But more employment opportunity is there in small scale and medium scale industries. From that angle only I have said.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** இந்தத் தத்துவத்தின் படியே வடபுலத்திலே இருப்பவர்கள் குடிசைத் தொழில்களை ஆரம்பிக்க வேண்டும்; பெருந்தொழில்களை ஆரம்பிக்க நாம் ஏற்பாடு செய்யவேண்டும்.

**THIRU K.S.G.HAJA SHAREEF:** Do you not want more men to be employed? You want only big industries to come here. Let the Government state very categorically that They want big industries to come heavily mechanised Then there will not be more employment opportunities.



**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹாஜா செரீப் அவர்களுக்குத் தெரியும். வாதத்திற்காக அவர்கள் வாதிட்டாலும் கூட பெரிய தொழில்கள் இல்லாமல் சிறிய தொழில்கள் உயிர்வாழ முடியாது. ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்ட்ரீஸ் மூலம் உதிரி பாகங்களைத் தயார் செய்து பெரிய தொழில்களுக்குக் கொடுக்கும் வாய்ப்பு என்ற முறையில் ஒன்றுக்கொன்று தொடர்பு உள்ளவையாக இருக்கின்றன. பெரிய தொழில்களும் சிறிய தொழில்களும் இரண்டு கண்களைப்போல் இருந்து இரண்டும் வளர்ந்தால்தான் இரண்டு தொழில்களும் உயிர்வாழ முடியும். ஒன்றைவிட்டு மற்றொன்று வளர முடியாது. மாண்புமிகு அமைச்சர் திரு. காளிமுத்து அவர்கள் கேட்டது, பின் தங்கிய மாவட்டத்திற்கு என்று அறிவித்துவிட்டு மற்ற மாவட்டங்களுக்கு ஒன்றுமே இல்லை, லைசென்ஸே இல்லை என்று சொன்னால் தொழில்கள் எப்படி வரும் என்பதுதான். முட்டையும் உடைக்காமல் ஆம்லெட்டும் வேண்டுமென்பதுகூட அல்ல; முட்டையே இல்லாமல் ஆம்லெட் எப்படி வரும் என்பதைத்தான் குறிப்பிட விரும்புகிறேன்.

(நண்பகல் 12.00)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, பேசிக்கொண்டிருப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள். அவர் எடுத்துச் சொன்ன கருத்துக்களில் சில ஐயப்பாடுகள் வருமேயானால் அதற்கு விளக்கம் கேட்கவும், அவர் பதில் சொல்லவும் வாய்ப்பிருக்கிறது. இந்தப் பிரச்னை முக்கியமாக மாண்புமிகு எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் எழுப்பிய காரணத்தால் மாண்புமிகு அமைச்சர்கள் விளக்கம் தர வேண்டி வந்தது. ஆகவே, இந்தப் பிரச்சினை ஒருவருக்கொருவர் விவாதம்என்று போய்விடுமானால்,பேசுகின்ற உறுப்பினர் திரு. இராமலிங்கத்தை விட்டுவிட்டு, வேறு பிரச்னையிலே போய்விடும். இந்த விவாதத்திற்குரிய சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. மானியக் கோரிக்கை வரவிருக்கிறது. தொழில் மானியத்தைக் குறித்து விவாதிப்பதற்கென்றே நாள் ஒதுக்கப்படும். அப்போது திரு. ஹாஜா செரீப் அவர்களும் மற்ற உறுப்பினர்களும் விவாதத்தில் கலந்துகொண்டு விளக்கங்களைப் பெறலாம்; அமைச்சர் அவர்களும் பதில் அளிப்பார்கள். இப்போது இங்கே கட்சிகளிடையே ஒன்றும் தகராறு இல்லை. தொழிற்சாலைகள் வருவதற்கு தமிழகத்தின் சார்பாக திரு. ஹாஜா செரீப் அவர்களும் வாதிடவேண்டும். எனவே இந்தப் பிரச்சினையை இதோடு விட்டுவிட்டு, உறுப்பினர் தொடர்ந்து பேச தலைவர் அனுமதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. நா. சுந்தரராஜ்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதோ மத்திய சர்க்கார் தமிழ்நாட்டை புறக்கணிக்கிறது என்று கூற்றுப்பட சொன்னார்கள். நான் கேட்க விரும்புவதெல்லாம், தமிழ்நாட்டிலே அசோக் லேலாண்டு கம்பெனி எக்ஸ்பான்ஷன் கேட்ட நேரத்தில் அதற்கு எந்தவித மான காரியத்தையும் செய்யவில்லை. அதேபோன்று கோச் பாக்டரி தமிழ்நாட்டுக்கு ஒதுக்கப்பட்டபோதுகூட தமிழக அரசு இடம் கொடுக்காத காரணத்தினால் அது வேறு மாநிலத்திற்குப் போய்விட்டது. எனவே நீங்கள் இப்படிப் பேசி மக்களைத் திசை திருப்பவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, குற்றச்சாட்டுகள் சொல்வதற்காகத்தான் மன்றமே இருக்கிறது. குற்றம் சாட்டுவதிலே ஒன்றும் தவறு இல்லை. குற்றச்சாட்டு சரியாக இருக்கிறதா அதற்கு வருகின்ற பதில் சரியாக இருக்கின்றதா என்பதைத்தான் பார்க்கவேண்டும். அதற்கும் இது நேரம் இல்லை. மானியக் கோரிக்கை வரும் போது விளக்கம் எல்லாம் கேளுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன இந்தப் பிரச்னையை விட்டுவிட்டு, நீங்கள் வேறு எங்கோ போய்விட்டால் வாதம் வேறு எங்கோ போய் விடும், என்பதற்காகச் சொன்னேன். தயவுசெய்து இத்துடன் நிறுத்திவிடுவது நல்லது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் இராமலிங்கம் அவர்கள் சீக்கிரம் பேசி முடித்துவிட வேண்டும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசியதை நீங்கள் கேட்டுவிட்டுத்தான் வந்திருப்பீர்கள் என்று கருதுகிறேன். நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும். இனி நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும். இனி வரப்போகின்ற காலங்களிலாவது தமிழகத்திற்கு அதிகமான மாவட்டங்களைத் தொழில் துறையிலே பிற்பட்ட மாவட்டமாக அறிவிப்பதற்கு சட்டத்திட்டங்களிலே எந்த அளவுக்கு நெளிவு சுளிவுகளை உருவாக்கி செயலாற்ற நீங்கள் உதவவேண்டும் என்றுதான் நான் குறிப்பிட்டேன்.

திரு. ப. நெடுமாறன்: பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் பேசி முடித்ததும் பேசலாம், தயவுசெய்து உட்காருங்கள்,



டாக்டர் கே. பி. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, சட்டத் திட்டங்களுக்குட்பட்டுத்தான் அறிவிக்கப்பட்டிருக்கின்றது என்பதை நாங்கள் மறுக்கவில்லை. ஆனால் தமிழகம் புறக்கணிக்கப் பட வேண்டும் என்பதற்காக சில சட்டத்திட்டங்களை மாற்றி அமைத்து அதனால்தான் இது வருகிறதோ என்ற அய்யப்பாடு அடைகிறோம். ஆகவே இனி வருகின்ற ஆண்டுகளிலாவது இதை நீங்கள் சீரமைத்து செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து மின் துறையைப் பற்றி சொல்ல விரும்புகிறேன். தமிழகத்திலே உடனடியாக மின் பற்றாக்குறையைப் போக்க வேண்டுமென்பதற்காக, நேற்றைய தினம் தமிழக முதலமைச்சர் அவர்களும் தமிழக மின்துறை அமைச்சர் அவர்களும், கேரளா அரசோடு உடன்பாட்டு ஒப்பந்தம் கையெழுத்து ஆகி, ஓரளவுக்கு தமிழகத்தினுடைய மின் பற்றாக்குறையைப் பூர்த்தி செய்கிற அளவுக்குச் செய்து இருக்கிறார்கள் என்பதற்காக இந்த அரசைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். அதே நேரத்திலே தமிழக அரசினுடைய நிரந்தர மின் திட்டங்களை உருவாக்குவதற்காக மத்திய அரசு உடனடியாக உதவி புரியவேண்டுமென்று நான் மத்திய அரசை மாமன்றத்தின் மூலமாக வேண்டுகோள் விடுக்கிறேன். தமிழகத்திற்கு வறட்சியின் அடிப்படையிலே உணவு தானியங்கள் வழங்கப்பட வேண்டுமென்று வேண்டுகோள் விட்டாலும்கூட மத்திய அரசிலே மிகப்பெரிய பதவியிலே இருப்பவர்கள் சத்துணவுத் திட்டத்திற்கு நீங்கள் அரிசியை பயன்படுத்தி விட்டீர்கள். ஆகவே தமிழகத்திற்கு எங்களால் உதவ முடியாது என்று சொல்கிற நிலைமை இருக்கிறது. மேலும் வற்புறுத்தி கேட்டால் மத்திய அமைச்சர் உயர்திரு ஆர். வி. எஸ், அவர்கள், இருக்கின்ற இருப்பு முடியட்டும், அதற்குப் பிற்கு தருகிறோம் என்று சொல்லுகிறார்கள். பத்திரிகையிலே இதை மிகப் பெரிய அளவிலே விளம்பரம் படுத்தியுள்ளார்கள். அடுத்த வேளை உணவிற்கு தானியம் இல்லை என்று சொல்கிற நிலைமை உருவானதற்குப் பின்னால், அடுத்த வேளை உணவிற்கு தமிழகத்திலே இருக்கின்ற ஏழை குடும்பங்களுக்கு உணவில்லை, தானியம் இல்லை என்ற நிலைமை தமிழகத்திலே வந்ததற்குப் பின்னாலே மத்திய அரசுக்குச் செல்லுங்கள், டெல்லிக்குக் காவடி எடுங்கள் என்று ஒரு அமைச்சர் சொல்வது இதுதான் வருமுன் காக்கும் அமைச்சரா என்ற கேள்வியை நான் எழுப்ப விரும்புகிறேன்.

அடுத்து, மொழிப் பிரச்னையைப் பொறுத்தவரையில் புரட்சித் தலைவர் அவர்கள், தமிழக முதல்வர் அவர்கள் அண்ணாவின் கொள்கையான இருமொழிக் கொள்கைதான் இந்த அரசின் கொள்கை என்று திட்டவட்டமாக அறிவித்துவிட்டார்கள். என்றைக்கும் தமிழகமோ தமிழக மக்களோ இரண்டாந்தர குடிமக்களாக—ஆங்கிலேயர்கள் ஆண்ட நேரத்திலே இந்தியக் குடிமக்கள் அனைவரும் இரண்டாந்தர குடிமக்கள் ஆக்கப்பட்டார்களே, அதைப்போல இன்றைக்கு வடபுலத்திலே இருப்பவர்களால்

தமிழகத்து மக்களை இரண்டாந்தர மக்களாக ஆக்கப்பட மாட்டார்கள், ஆக்கப்படக்கூடாது என்பதிலே திட்டவட்டமாக இருக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அதை மீறி 1963லே நடைபெற்ற நிகழ்ச்சியை மீண்டும் நடத்த முன்வருவார்களானால் தமிழகம் சும்மா இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மணி அடிக்கப் பெற்றது.......

திரு. கே. ஆர். சுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரையின் மீது மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். பத்திலேயே நம்முடைய சட்டமன்றம் சென்ற ஆண்டு பட் ஜட் கூட்டத்திற்குப் பிறகு நீண்ட இடைவெளிக்குப் பிறகு கூட்டப் பட்டிருக்கிறது. கடந்த செப்டம்பர் மாதத்திலே 4, 5 நாட்கள் நடத்தி ஒத்தி வைத்த நேரத்திலே, நவம்பர் மாதத்திலே சட்ட சபை கூட்டுவதாக ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால் அதைக் கூட்டாமல் காலம்கடந்து கூட்டியதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் என்னுடைய ஆட்சேபனையைத் தெரிவித்துக் கொள்கிறேன். சட்டசபையைக் குறிப்பிட்ட காலங்களிலே கூட்டியிருந்தால் பொதுமக்களை பாதிக்கிற பல்வேறு பிரச்னைகளை இன்றைக்கு மன்றத்திலே பேசி முடிவு எடுத்திருக்க முடியும். எனவே வருங்காலத்திலேயே இத்தகைய தாமதத்தை கைவிடவேண்டுமென்று முதலில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக இன்றைக்கும் தமிழகம் முழுவதும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்திலே பாதிக்கப்படாத மாவட்டங்களே இல்லை என்ற முறையில் மாநிலம் முழுவதையும் வறட்சிப் பிரதேசமாக அறிவிக்க வேண்டுமென்று பல்வேறு உறுப்பினர்கள் கேட்டிருக்கிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்திலே அதிகமாக மக்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எந்த ஒரு தாலுக்காவும் இன்றைக்கு வறட்சியிலிருந்து தப்பவில்லை. காவேரிப்பாக்கம் ஏரி உட்பட 3000 ஏரிகள் இன்றைக்கு வறண்டு கிடக்கின்ற ஒரு நிலைமை இருக்கிறது. ஆகவே குடிதண்ணீர் பிரச்னை என்பது இன்றைக்கு மாநிலத்தில் முதல் ரைச்னையாக இருக்கிறது. இந்தக் குடி தண்ணீர் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு ஏதோ கடந்த காலத்திலே வறட்சி என்று சொல்லி குடிநீருக்காக 50இலட்சம் ஒதுக்கினோம், 1 கோடி ஒதுக்கினோம் என்று சொல்வதைப் போல இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய பிரச்னையைத் தீர்க்கமுடியாது.

சென்னை உட்பட கன்னியாகுமரி மாவட்டத்தை எடுத்துக் கொண்டாலும்கூட எத்தனையோ ஆண்டுகளுக்குப் பின்னாலே இன்றைக்கு பல்வேறு தாலுகாக்களிலே குடிநீர் பஞ்சம் ஏற்பட்டிருப்பதாக அந்தத் தொகுதி மெம்பர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே [illegible] அசட்டியதனமாகவோ மெத்தனமாகவோ [illegible]ப்பிரச்னையை அரசு பார்க்கக்கூடாது. ஒரு போர்க்கால [illegible]படையிலே இந்தப் பிரச்னையைத் [illegible]க்கவேண்டும். பத்திரி





கையிலே பார்க்கிறோம். சென்னையிலே குடிநீர்ப் பஞ்சம் 2 நாளைக்கு ஒரு முறை தண்ணீர் கொடுக்கலாமா என்று ஒரு ஆலோசனையை 2, 3 நாட்களுக்கு முன்னாலே பார்த்[illegible]ம் உடுமலைப்பேட்டை தாலுக்காவிலே குடிநீர்ப் பஞ்சம். உடுமலைப் பேட்டை தாலுக்காவை விட்டு மக்கள் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். வேலையில்லை என்ற செய்தி பத்திரிகையிலே வந்திருக்கிறது. ஆகவே கோயம்புத்தூர் ஜில்லாவிற்கு மட்டுமலல, தமிழகம் முழுவதிலும் இருக்கிற.....

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே உடுமலைக்கு நான்தான் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் எனக்குத் தெரியாமல் தண்ணீர் பஞ்சம் வந்துவிட்டது என்று நம்முடைய குடியாத்தம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். உண்மையிலேயே உடுமலைப்பேட்டையைப் பொறுத்தவரையில் தண்ணீர்ப் பஞ்சம் இல்லை. வராதஅளவிற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன. இப்போது தண்ணீர் பஞ்சம் இல்லாத நிலையிலேதான் மக்கள் இருந்துக்கொண்டிருக்கிறார்கள்—என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். தயவுசெய்து தவறான தகவல்களைக் கொடுப்பதன் மூலம் பத்திரிக்கையிலே அது பெரிதாக போடப் பட்டு, இல்லாத பஞ்சத்தை நாமே கொண்டு வந்ததாக ஒரு நிலைமையை உருவாக்கவேண்டாம் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பத்திரிகையில் வந்த செய்தியைச் சொன்னேன். திருமூர்த்தி அமராவதி ஆகிய அணைகளில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு; அதன் காரணமாக அங்கேயுள்ள மக்கள் வெளியேறுகிறார்கள் என்று பத்திரிகையில் செய்தி படித்தேன். அதைத்தான் நான் இங்கே சொன்னேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அது குடிநீர் பஞ்சம் இல்லை. பாசன வசதிக்கு ஏற்ற அளவுக்குத் தண்ணீர் இல்லை என்பதுதானே தவிர வேறு அல்ல. நீங்கள் குடிநீர் பிரச்னை பற்றி பேசிக்கொண்டிருப்பதால், அங்கே குடிநீர் பஞ்சம் இல்லை என்று நான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் தன்னுடைய தொகுதியான குடியாத்தம் பற்றிய கருத்துக்களைச் சொல்லலாம்.

திரு. கே. ஆர். சுந்தரம்: இப்படிப்பட்ட நிலைமைகள் பல்வேறு இடங்களில் இருக்கின்றன. அ[illegible] இந்தப் பிரச்னையைச் சமாளிக்க போர்க்கால நடவடிக்[illegible] போல கடந்த வறட்சியின்போது எடுக்கப்பட்ட நட[illegible]களுக்கும்

மேலாக, துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற அடிப்படையில் இதைச் சொல்கிறேன். இன்றைய தினம் குடிநீர் பிரச்னையை நம் வசத்தில் இருக்கும் குடிநீர் வாரியம் மூலம் மட்டும் தீர்த்துவிட முடியாது. மற்ற மாநிலங்களில் இருந்தும், மத்திய அரசிடமிருந்தும், உதவிகளைப் பெற வேண்டும். வேண்டுமானால், ராணுவ தளவாடங்களைக் கேட்டு, நாம் குடிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தயங்கக்கூடாது. அந்த அடிப்படையிலே நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மீண்டும் வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன்.

வறட்சி நிவாரணப் பணிகள் மாவட்டம் முழுவதும் துவங்கப்படவேண்டும். இன்று பத்திரிகையில் பார்த்தேன். மதுரை, இராமநாதபுரம், தென்னாற்காடு ஆகிய மாவட்டங்களில் வறட்சி காரணமாக உழைத்துப் பிழைக்கும் விவசாயிகள் லட்சக்கணக்கான பேர் தவித்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு வறட்சி நிவாரணப்பணிகள் மூலம் வேலை கொடுக்கவேண்டும், வறட்சி நிவாரணப்பணிகளை மேற்கொள்வதன் மூலம் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள கண்மாய்கள், குளங்கள் ஆழப்படுத்தப்படவேண்டும். கரைகள் பலப்படுத்தப்படவேண்டும். புதிய கண்மாய்கள் குளங்கள் நிறுவப்படவேண்டும். அப்போதுதான் இத்தகைய வறட்சி நிலைமைகளில் இருந்து நம்மைப் பாதுகாத்துக்கொள்ள முடியும். வடாற்காடு மாவட்டம், குடியாத்தம் தாலுக்கா, வேலூர் தாலுக்கா ஆகிய இடங்களில் பாலாறு படுகையில் நிலத்தடி நீர் இல்லை என்ற காரணத்தால் புதிய கிணறுகள் வெட்டக்கூடாது. மின்சார இணைப்புத் தரக்கூடாது என்று நிலத்தடி நீர் ஆய்வாளர்கள், கரும்பம்பட்டி, குடியாத்தம், அனைக் கட்டு ஒன்றியங்களில் இந்த கட்டுபாடுகளைச் செய்து இருக்கிறார்கள். ஆகவே, நிலத்தடி நீர் பிரச்னை தீர்க்கப்பட வேண்டுமானால், நீண்டகால கோரிக்கையாக இருந்து வரும் மோர்தானா அணை போன்ற அணைகள் கட்டப்படவேண்டும். இந்தக் கோரிக்கை வட ஆற்காடு மாவட்டத்தில் நீண்டகாலமாக இருந்துக்கொண்டு இருக்கிறது. இயற்கையாகவே மலையடிவாரங்களில் மழைத் தண்ணீர் நிற்கும் வகையில் குட்டைகளை அமைப்பதன் மூலம் வருங்காலத்தில் இத்தகைய பிரச்னையைத் தீர்ப்பதற்கு உதவிகரமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்,

வடாற்காடு மாவட்டத்தில் உள்ள மொத்த விளைநிலம் நஞ்சை புஞ்சை இரண்டையும் சேர்த்து கணக்கிட்டால் 19 லட்சம் ஏக்கர் இருக்கும். அதில் இன்று சராசரி 50,000 ஏக்கர் நிலம் கூட பயிராகவில்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே இந்த வறட்சியின் தன்மையை அறிந்து' அதற்கு ஏற்ற வகையில்' வரி தள்ளுபடி செய்தல், சிறு விவசாயிகளுக்கு கடன் தள்ளுபடி செய்தல் பெரிய விவசாயிகளாக இருந்தாலும் கூட தள்ளி வைத்து வசூல் செய்வது போன்ற காரியங்களை அரசாங்கம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



 (திரு. கே. ஆர். சுந்தரம்)

இன்றைக்கு ஆளுநர் உரையில் 15 கோடி ரூபாய் செலவழித்து வீட்டுக்கு ஒருவருக்கு வேலை வாய்ப்பு கொடுப்பாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இன்று இருக்கும் நிலைமை என்னவென்று சொன்னால், இருக்கின்ற வேலையைப் பாதுகாக்க வேண்டும் என்ற நிலைமை இருக்கிறது. இன்று வறட்சியின் காரணமாகவும், மின்வெட்டின் காரணமாகவும் நூல் விலை உயர்ந்து இருக்கின்றது, இந்த நூல் விலையைக் குறைப்பதற்கு மத்திய அரசும், மாநில அரசும் தலையிட்டு, நியாயமான விலையில் கைத்தறி நெசவாளர்களுக்கு நூல் கிடைக்கச் செய்ய வேண்டும். மதுரை மாவட்டம், வடாற்காடு மாவட்டம் போன்ற மாவட்டங்களில் கைத்தறி நெசவாளர்கள் வேலையில்லாமல் பாதிக்கப்பட்டு இருக்கும் நிலைமையிருக்கிறது. ஆகவே மாநில அளவிலே கைத்தறி நெசவாளர்களுக்கு வேலை கிடைக்கும் வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழகத்தில் மூன்று லட்சத்திற்கும் மேற்பட்ட பீடித் தொழிலாளர்கள் வாரத்தில் இரண்டு நாள், மூன்று நாள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். போதிய கூலி கிடைப்பது இல்லை. வேலை இல்லாத காலத்திற்கு நஷ்டஈடு கொடுக்கவேண்டும் என்று சொல்லி, தமிழக அரசு பால்-பேக் வேஜஸ்' என்று சட்டம் கொண்டு வந்து இருக்கிறார்கள். அப்படிச் சட்டம் இயற்றியிருந்தாலும் கூட தொழிலாளர்களுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை. இன்றைக்கு முதலாளிகள் என்ன காரணம் சொல்கிறார்களோ அந்தக் காரணத்தை அரசு சொல்லிக்கொண்டு இருக்கிறது. இருப்பு இருக்கிறது, மழைக் காலம் என்று சொல்லி வேலையில்லாக் காலத்திற்கு நஷ்டஈடு கொடுப்பது இல்லை. ஆகவே பாக்டரிகளில் 'லே ஆஃப் செய்யும்போது என்ன நடைமுறை இருக்கிறதோ என்ன விதி இருக்கிறதோ அதைப்போன்று, இங்கும் செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக என்னுடைய தொகுதியாகிய குடியாத்தத்தில் திருமகள் மில்ஸ் இருக்கிறது. அது கடந்த அக்டோபர் மாதத்திலிருந்து முழுமையாக மூடப்பட்டிருக்கிறது. 4 மாதங்கள் ஆகியும் லே ஆஃப் சம்பளம் கொடுக்கப்படவில்லை; தீபாவளி போனஸ் சரியாகக் கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு உடனடியாக லே ஆஃப் சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதோடு அந்த மில்லை திறப்பதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். இன்றைக்கு அந்த மில்லை திறக்கவேண்டுமென்று கோரி அங்கே உண்ணாவிரதம் இருக்கிறார்கள், மறியல் செய்கிறார்கள். அந்த மில்லிலே கோளாறு இருக்கிறது. ஆகவே, தமிழக அரசே அந்த மில்லை ஏற்று நடத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இன்றைக்கு குடிநீர் பிரச்சனையைப்பற்றிச் சொல்லும்போது ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். குடிநீர் வடிகால் வாரியத்தில் வேலை பார்த்து வந்த ஊழியர்கள் சமீபத்திலே மாவட்ட ஆட்சித் தலைவரின் பொறுப்பில் விடப்பட்டிருப்பதாகவும் அதனால் பல சிக்கல்கள் ஏற்பட்டிருப்பதாகவும் சொல்கிறார்கள். அவர்களுக்கு சம்பளம் சரியாக் கிடைக்குமா, சர்வீஸ் நீடிக்குமா என்ற பிரச்சனை எல்லாம் வந்திருக்கின்றது. அதை ரசாங்கம் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு ஆளுநர் உரையிலே மேதகு ஆளுநர் அவர்கள் மின்சாரக் கட்டணத்தை உயர்த்தலாமா என்று சொல்லியிருக்கிறார்கள். எனக்கு முன்னாலே பேசிய பலரும் இதுபற்றிக் குறிப்பிட்டார்கள். இன்றைக்கு மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிற நேரத்தில், அதன் காரணமாக சிறுதொழில்கள், விவசாயம் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிற நேரத்தில் இந்த மின்சாரக் கட்டணத்தை உயர்த்தினால் பொதுமக்கள், குறிப்பாக ஏழை எளிய மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். மக்களைப் பாதிக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தமிழக அரசு ஏற்கெனவே ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தது. இரண்டாண்டு காலத்தில் 480 நாள் வேலை செய்திருந்தால் அவர்களை நிரந்தரமாக்கவேண்டும் என்பது அந்தச் சட்டம். ஆனால் யாரும் நிரந்தரமாக்கப்படவில்லை. எங்கள் ஜில்லாவிலே ஆரணியில் இலட்சுமி சரஸ்வதி பஞ்சாலை இருக்கிறது. அங்கே 3, 4 ஆண்டுகள் வேலை செய்தவர்கள் கூட நிரந்தரமாக்கப்படவில்லை. அவர்கள் சங்கம் அமைத்து, கோரிக்கை வைத்தார்கள்; நிரந்தரமாக்க வேண்டுமென்று கேட்டார்கள். அதன் காரணமாக பல ஊழியர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்; அவர்களுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை.

அதேபோன்று தமிழக அரசு கொண்டுவந்திருக்கிற பல்வேறு சட்டங்கள் இருக்கின்றன. கைத்தறி நெசவாளர்களுக்கு வேலை பாதுகாப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அந்த சட்டத்தின் ஓட்டையை பயன்படுத்தி தடை உத்தரவு பெற்றிருக்கிறார்கள். அதைப்போன்று பீடித் தொழிலாளர்களுக்கு என்று போடப்பட்ட சட்டத்தின் ஓட்டையைப் பயன்படுத்தி உச்சநீதி மன்றத்திலே தடை உத்தரவு பெற்றிருக்கிறார்கள். இந்த தடை உத்தரவுகளை வாபஸ்பெற அரசாங்கம் தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



இப்படியெல்லாம் இருக்கின்ற பிரச்சனைகளை நாங்கள் எடுத்துச் சொல்லுகின்ற நேரத்திலே தொழிலாளர்களைப் பாதிக்கின்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தீர்கள். நாங்கள் எடுத்துச் சொன்னபோது அந்த அத்தியாவசிய சர்வீஸ் சட்டம் செயல்படுத்தப்படுவதால் யாரும் பாதிக்கப்பட மாட்டார்கள் என்று சொன்னார்கள். ஆனால் நடைமுறை என்ன? பஞ்சாலை நான்கு மாதமாக மூடிக்கிடந்தும் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? தொழிலாளர்களைப் பாதுகாக்க என்ன செய்யப்பட்டது. அந்தத் தொழிலாளர்கள் பேச்சு வார்த்தைக்கு அழைத்தாலும் முதலாளிகள் வரவில்லை. அரசாங்கமே இதற்கு ஒரு பரிகாரத்தைக் காண வேண்டும்.

குடிநீர் கேட்டு நாமக்கல்லில் பெண்கள் ஊர்வலம் போனார்கள். அவர்களை தடியால் அடிக்க வேண்டுமா? அங்கே துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற வேண்டுமா? தண்ணீர் கேட்டுதானே ஊர்வலம் போனார்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அவர்களை அழைத்துப் பேசி தீர்த்திருக்கக் கூடாதா? அரசியல் விரோதம், கட்சி விரோதம் காட்ட வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது? இத்தகைய சம்பவங்கள் தவிர்க்கப்பட வேண்டும்.

இன்னொன்று. சமுதாயத்திலே மிகவும் பின்தங்கி இருக்கிற நகர சுத்தித் தொழிலாளர்கள் சர்வீஸ் கண்டிஷனை மாற்ற வேண்டுமென்று சொன்னார்கள். 55 வயது என்று இருப்பதை 60 வயதாக உயர்த்த வேண்டுமென்று கேட்கிறார்கள். லீவு வசதி வேண்டுமென்று கேட்கிறார்கள். லேபர் கமிஷனர் முன்னால் நடைபெற்ற கூட்டத்தில் செய்து கொடுப்பதாக ஒப்புக் கொள்ளப்பட்டது. அதுகூட இன்னும் அமுலாக்கப்படவில்லை; அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை. அரசாங்கம் அதை கவனத்தில் கொண்டு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. சேலம் மேக்னசைட் கம்பெனி இருக்கிறது. ஏற்கெனவே மேத்தா கம்பெனியார் அதை நிர்வகித்துவந்தார்கள். இரண்டு ஆண்டுகளாக கிராசுட்டி கொடுக்கப்படவில்லை, அந்த தொழிலாளர்களுக்கு. அக்ரிமெண்ட் போட்டு இரண்டு வருஷம் ஆகிவிட்டது. அவர்களுக்கு போனசும் கொடுக்கப்படவில்லை. மேத்தா கம்பெனியிலிருந்து அந்தப் பணத்தை வாங்கிக் கொடுக்கவேண்டும். அதைக்கேட்டு, சட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென்று கோரி, அங்கே கடந்த காலத்தில் கிளார்ச்சி நடைபெற்றது. அந்தப் பிரச்சனை இன்னும் தீர்க்கப்படவில்லை.

(பிற்பகல் 12-20)

நேற்றைக்குக் கூட இந்த மாமன்றதத்தில், கன்னியாகுமரி மாவட்டத்தில் தோட்ட தொழிலாளர்களுக்கு, போனஸ் வழங்கவேண்டும் என்ற பிரச்னையிலே, ஸ்டிரக்கை வாபஸ் வாங்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களே கேட்டார்கள். அது அரசுத் துறைதான். மறுக்கவில்லை. அரசுத் துறையானாலும், லாபம் தருகிற தொழிலைச் செய்கிறபோது, அந்த தோட்ட தொழிலாளர்களுக்கு லாபத்தின் அடிப்படையிலே போனஸ் கொடுக்க வேண்டும் என்று கேட்பது நியாயமே. அதைப் பொருந்தாது என்று சொல்வது சரியல்ல. மத்திய அரசு, இதுபோன்ற லாபம் தரும் நிறுவனங்களுக்கு—உதாரணமாக ரெயில்வே, தபால் அலுவலகம் போன்றவைகளில் வேலை செய்கிற ஊழியர்களுக்கு அவர்களுடைய உற்பத்தியின் அடிப்படையில் போனஸ் என்று ஒரு தொகையை கொடுக்கிறார்கள். அந்த முறையிலே ஒரு எக்ஸ்கிரேஷியா போனஸ் என்ற முறையிலேயாவது கொடுக்க வேண்டும்.

அங்கேயுள்ள பார்லிமெண்ட் உறுப்பினர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். உண்ணாவிரதம் இருந்துக்கொண்டிருக்கிறார்கள். ஸ்டிரைக்கை வாபஸ் வாங்கவேண்டும் என்று கேட்பதற்கு பதிலாக, தொழிலாளர் இலாகாவும், வன இலாகாவும் ஒன்று சேர்ந்து, சம்பந்தப்பட்டவர்களை அழைத்துப் பேசி, பேச்சு வார்த்தை நடத்துவது தான் நல்லது. அந்த அடிப்படையிலே அதைச் செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

நேற்றைக்கு இந்த மாமன்றத்திலே பேசுகிற நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் பாலசுப்பிரமணியம் அவர்கள், கம்யூனிஸ்ட் கட்சி தோழர்கள் பேசிய நேரத்தில் மின் வெட்டுக்கு தமிழக அரசுதான் பொறுப்பு என்று பேசியதாகச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் வரதராஜன் அவர்கள் பேசியதை, அவர்கள் சரியாக கவனிக்கவில்லை என்று நினைக்கிறேன். இன்றைக்கு தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிற மின் வெட்டுக்கு, காலாகாலத்தில் மத்திய அரசு நிலக்கரியும் மற்றவைகளையும் கொடுத்திருந்தால் தவிர்த்திருக்கலாம் என்றும் இனிமேல் அவர்கள் அப்படி கொடுத்தாக வேண்டும் என்று வற்புறுத்தி சொல்கிற நேரத்தில், இத்தகைய பிரச்னையில் மத்திய சர்க்கார் பின் பற்றுகிற தவறான கொள்கையின் காரணமாக மாநிலங்கள் பாதிக்கவில்லையா என்று கூட கேட்டார்கள். ஆனாலும் கூட, இன்றைக்கு மின்வெட்டினால் பாதிக்கப்படுகிற நேரத்தில், மாநில அரசு, முன் எச்சரிக்கையாக செய்ய வேண்டிய பொறுப்பு இருக்கிறது என்பதைத்தான் அவர்கள் எடுத்துக் கூறினார்களே தவிர, வேறு அல்ல. முழுக்க முழுக்க மின்வெட்டிற்கு தமிழக அரசுதான் பொறுப்பு என்று அவர் சொல்லவில்லை.

.... (குறுக்கீடு)



திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். என்னுடைய பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார். விளக்கம் அளிக்க அனுமதிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கவனித்துக் கொள்வார்கள். நீங்கள் உட்காருங்கள்.

திரு. கே. ஆர். சுந்தரம்: அது மட்டும் அல்ல. வறுமைப் பிரச்னையைப் பற்றி பேசுகிறபோது மாண்புமிகு உறுப்பினர் வரதராஜன் அவர்கள் பேசுகிற நேரத்தில், சத்துணவுத் திட்டம் மூலமாக மட்டும் தமிழகத்தில் மாற்றத்தைக் கொண்டு வந்து விட முடியாது. சோஷலிசம் வந்து விடாது. அதற்குப் பதிலாக மாற்று வேலை வாய்ப்புகள் அளிக்கிற முறையில், அந்த மக்களுக்கு வேலை வாய்ப்பு உண்டாக்குகிற முறையில் செய்ய வேண்டும் என்று சொன்னாரே தவிர, சத்துணவு மூலமாக போராட்ட முறையைத் தடுப்பதாக அவர் சொல்லவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

கடைசியாக நான் கேட்டுக் கொள்வது, குடியாத்தம் தொகுதியிலே இன்றைக்கு 40 கிராமங்களிலே குடி தண்ணீர் இல்லை. நகரத்தில் தண்ணீர் இல்லை. மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் விவரங்களைக் கொடுத்து குடிதண்ணீர் வசதி செய்து தர வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். சில இடங்களில் ஓரளவிற்குத் தண்ணீர் இருந்தாலும்கூட மின்வெட்டின் காரணமாகத் தண்ணீர் எடுக்க முடியவில்லை. ஆகவே நகராட்சிகளுக்கு அதிலும் பாதிக்கப்பட்ட இடங்களில் எல்லாம் ஜெனரேட்டர்கள் வாங்கிக் கொடுக்க அரசு முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குடியாத்தம் நகருக்கு ஜெனரேட்டர் நிச்சயமாகத் தேவை, அதனை வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று சொல்லி இந்த கோரிக்கையை அந்தப் பகுதி ஆதிதிராவிட பெருமக்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதை அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. வெ. அரங்கராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்தமைக்காக முதலில் தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் தமிழகத்தில் சத்துணவுத் திட்டம் புரட்சித் தலைவர் அவர்களால் கொண்டு வரப்பட்டு, ஏழை எளிய மக்களின், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற எல்லாக் குடும்பங்களில் உள்ள குழந்தைகளுக்கும், அரிசி உணவையே பார்த்திராத எல்லாக் குழந்தைகளுக்கும், உணவு அளிக்கப்பட்டு,

அவர்கள் நல்ல திடகாத்திரமான உடலைப் பெறுவதோடு, படிப்பு போன்ற வசதிகளையும் பெறுவதற்கான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

கிட்டத்தட்ட 2 வயது முதல் 4 வயது வரையில் உள்ள குழந்தைகள் 23 லட்சம் பேர்களுக்கும் ஐந்து வயது முதல் 9 வயது வரையிலுள்ள குழந்தைகள் 42 லட்சம் பேர்களுக்கும் சத்துணவு வழங்கப்படுவதோடு. கிட்டத்தட்ட மொத்தம் 1,40,000—க்கு மேற்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பை அளித்து இந்தத் திட்டத்தின் பயன்களை முழுமை அடையச் செய்திருக்கிறார்கள். இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது என்னவென்றால், இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு 1 லட்சத்து 40,000-க்கு மேற்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பு இந்தத் திட்டத்தின் மூலமாகக் கிடைத்திருக்கிறது என்பது. அதிலும் குறிப்பாக இந்தத் திட்டத்தின் மூலமாக விதவைத் தாய்மார்களும், பெண்களும் இதில் முன் உரிமை பெற்று பயன் பெற்றிருக்கிறார்கள்.

இதன் மூலமாக பள்ளிக்குக் குழந்தைகளை அனுப்பாத குடும்பத்திலிருந்து 2,63,000 குழந்தைகள் இன்றையதினம் அதிகப்படியாக பள்ளியிலே சேர்க்கப்படுகின்ற நிலைமையினை உருவாக்கி இருக்கிறார்கள். மேலும் தமிழகத்திலே உள்ள ஆசிரியர்கள் இந்தத் திட்டத்தினால் எங்களுக்குப் பல சிரமங்கள் இருக்கின்றன என்று கூறி எங்களை அதிலே இருந்து விடுவிக்கவேண்டும் என்று வைத்த கோரிக்கையின் காரணமாக இன்றைய தினம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அந்தப் புதிய சத்துணவுத் திட்டத்திற்குரிய பொறுப்பினைக் கொடுக்கின்ற வகையிலே 35 ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இங்கே கம்யூனிஸ்ட் கட்சியினைச் சேர்ந்த உறுப்பினர் திரு. வரதராஜன் அவர்கள் நேற்று முன் தினம் பேசுகின்றபோது தொழிற்சாலைகளிலே தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாமல் லே ஆஃப் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது குடும்பத்தில் ஒருவருக்கு வேலைவாய்ப்பு என்று அறிவித்திருக்கிறார்களே என்று பேசினார்கள்.

மின்சாரப் பற்றாக்குறை காரணமாக சில தொழிற்சாலைகள் மூடி இருந்தன என்பது நமக்குத் தெரியும். இருப்பினும் நேற்றைய தினம் தமிழக முதல்வர் அவர்களும் மின்சாரத்துறை அமைச்சர் அவர்களும் கேரள அரசோடு தொடர்பு கொண்டு பேசி மின்சாரத்தைப் பெற்றிருப்பதன் வாயிலாக எல்லா தொழிற்சாலைகளையும் இயங்க வைக்கின்ற நிலைமையினை உருவாக்கி இருப்பதால் அனைத்துத் தொழிலாளர்களுக்கும் இதனால் வேலை வாய்ப்பு கிடைக்கும் எந்தத் தொழிலாளியும்வேலை இழக்கின்ற நிலைமை வராது என்பதை நாம் அனைவரும் அறிந்திருக்கிறோம். ஆனால் இதற்காக திட்டத்தையே தீட்டக்கூடாது, திட்டத்தை தீட்டுவது முறையல்ல என்று அவர்கள் கூறினார்களா என்று நான் கேட்க விரும்புகிறேன்.



சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வரும் போதும் அதற்கு எந்த விதமான நிதி ஒதுக்கீடும் செய்யாமல் எப்படி அந்தத் திட்டத்தைச் செயல் படுத்தப் போகிறீர்கள் என்று கேட்டார்கள். ஆனால் அதற்காக இன்றைய தினம் தமிழக முதல்வர் அவர்கள் 112 கோடி ரூபாய் செலவாகும் என்று திட்டம் தீட்டியதோடு மட்டுமல்லாமல் குடும்பத்தில் ஒருவருக்கு வேலை என்ற வகையில் 15 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து குடும்பத்தில் ஒருவருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கின்ற வகையிலே சிறப்பான முறையிலே திட்டத்தைத் தீட்டி இருக்கிறார்கள் புரட்சித் தலைவர் அவர்கள்.

அடுத்து கிராமப்புறத்திலே தன்னிறைவுத் திட்டம் என்ற பெயரால், ஒரு கிராமத்திற்கும் இன்னொரு கிராமத்திற்கு இணைப்பு என்பதே இல்லாமல் இருந்த மிக மோசமானம் நிலைமையில் இருந்த சாலைகளை அனைத்து ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக இணைப்பு வசதிகளை ஏற்படுத்தி இருக்கிறார்கள். தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாகக் கிட்டத்தட்ட 18927 கிலோ மீட்டர் சாலைகள் 43 கோடி ரூபாய் செலவில் போடப்பட்டுள்ளது. ஆனால் இதற்கு முன்பிருந்த ஆட்சிக் காலத்திலே எந்த அளவுக்கு அவர்கள் பணிகளைச் செய்திருக்கிறார்கள், எந்த அளவுக்கு அதற்கான திட்டங்களைத் தீட்டி இருக்கிறார்கள் என்று கேட்டால் இல்லை. தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள்தான் இப்படிப்பட்ட திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்தி இருக்கிறார்கள். இப்படிப்பட்ட திட்டங்களைப் பாராட்டாமல் இருந்தால்கூட பரவாயில்லை. குறை சொல்வதைப் பார்க்கின்றபோதுதான் உண்மையிலேயே நாங்கள் எல்லாம் மிகவும் வருத்தப் படுகிறோம். இன்றைக்கு மேலும் 500 கிலோ மீட்டர் சாலைகளை தேசிய நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக எடுக்க அரசு 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கின்றது. இந்த அளவுக்கு கிராமத்தை முன்னேற்ற வேண்டும் என்பதில் புரட்சித் தலைவர் அவர்கள் காந்தி கண்ட கிராம ராஜ்யத்தை உருவாக்குவதில் தீவிரமாகவும் கண்ணும் கருத்துமாகவும் இருந்து நல்ல பல திட்டங்களைத் தீட்டி செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

மேலும் இன்றைய தினம்ஒவ்வொரு வருவாய் கிராமத்திற்கும் பெண்களுக்கு எந்த அளவுக்கு கழிப்பிட வசதிகளை உருவாக்க வேண்டுமோ அந்த அளவுக்கு உருவாக்குகின்ற வகையிலே இருபத்திரண்டரை கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். கிராமங்களிலே இருக்கின்ற பெண்கள் அனைவரும் இதைப் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக அடிப்படை வசதிகளைச் செய்திருந்தாலும் சாக்கடை வசதிகளையும் செய்து தருகின்ற வகையிலே தன்னிறைவு திட்டத்தின் மூலமாக அதற்கு ஏதாவது வழிவகை செய்ய முடியுமானால் அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கிராமப்புற சாலைகளுக்காக 10 கோடி ரூபாயினை ஒதுக்கி இருக்கின்ற இந்த நேரத்திலே எங்களுடைய பகுதியிலே வீரமச்சாண்டிபட்டி கிராமமக்கள் அய்யாறு பாலம் இல்லாமல் கஷ்டப்படுவதைத் தவிர்த்து பாலம் கட்டித்தரவேண்டும். அங்கே பாலம் இல்லாமல் மக்கள் 8 கிலோ மீட்டர் தூரத்தை பல கிராமங்களைச் சுற்றிக்கொண்டு வரவேண்டிய நிலைமை இருக்கின்றது. எனவே அந்தப் பாலம் கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12–30).

அடுத்து ஒரு பாலம் கட்டாததன் காரணத்தால்ஒட்டம்பட்டி நரசிங்கபுரம் சாலை, ஆதனூர், கட்டகும்பட்டி சாலையில் அப்பகுதியிலே உள்ள மக்கள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் தனிப்பட்ட தீவிலே இருப்பதுபோன்று கஷ்டப் படுகிறார்கள்.

பஸ் போக்குவரத்து வசதி உருவாக்க, குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதற்கு வசதியாக இந்த 3 பாலங்களையும் கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை )

மேலும் மலைவாழ் மக்களுக்கு—4200 குடும்பத்தினர் 1982–83 ஆண்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறவர்களை மேம்படுத்துகின்ற வகையில் திட்டத்தை உருவாக்கி யிருக்கிறார்கள். அந்த வகையில் என் தொகுதியில் பச்சை மலையில் இருக்கிற மக்களைமேம்படுத்தும்வகையில்நிதி ஒதுக்கீடு செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் சுற்றுலாத் துறைக்கு 80 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக் கிறார்கள். ஊட்டியைப் போல் என் தொகுதியில் பச்சைமலை இருக்கிறது. திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய மூன்று மாவட்டங்களிலுள்ள மக்களாவது கோடைவாசஸ்தலமாகப்பயன் படுத்தவசதி ஏற்படும். எனவேபச்சைமலையைசுற்றுலாமையமாக எடுத்து, அந்த பகுதியில் இருக்கிற 3 மாவட்டங்களில் இருக்கிற மக்களும் அதை பயன்படுத்துகிற வகையில் சுற்றுலா தலமாக அமைக்க ஏற்பாடு செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மணியடிக்கப்பெற்றது.)

*திரு.பொ.உத்திராபதி: மாண்புமிகு துணைத்தலைவர்அவர்களே ஆளுநர் உரைமீது இந்தியக்கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். ஆளுநர் உரையைப் பாடத்தகை முடித்துவிட்டார்கள். நாங்களும் திரும்பப் படித்து பார்க்கிறபோது சத்துணவுத் திட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழகத்தில் ஏற்பட்டிருக்க



அதுவும் இந்த நாடு கண்டிராத அளவுக்கு இந்த ஆண்டு தமிழகத்தில் 5 கோடி மக்களை இருள் சூழ்ந்து கவ்வக் கூடிய அபாயம், வறட்சி ஏற்பட்டிருக்கிறது. அதைப் போக்குவதற்கு அடிப்படையான திட்டங்கள், வழிமுறைகள் இந்த உரையில் இருக்கிறதா என்று பார்த்தால் இல்லை என்று தோன்றுகிறது. ஆனால் நமது வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் சமீபத்தில் திருச்சியில் நிருபர்களுக்கு ஒரு பேட்டி கொடுத்திருக்கிறார்கள். விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற உற்பத்தியில் பாதிக்கும் கீழ் வருவாய் இருந்தால் அவர்களுக்கு நிலநீர் வரியை ரத்து செய் செய்வதற்கு அரசாங்கம் பரிசீலிக்கும் என்று அறிவித்திருக் கிறார்கள். ஆனால் தஞ்சை மாவட்டத்தில் 14 லட்சம் ஏக்கர் காவேரி ஆற்றுத் தண்ணீரை நம்பி இருக்கிறது. 3¼ லட்சம் ஏக்கர் குறுவை இநத ஆண்டு பயிர் செய்து அறுவடை ஆகி யிருக்கிறது திரும்பவும் நடவு நட்டது 2 லட்சம் ஏக்கர். 1¾ லட்சம் தரிசாக இருக்கிறது நடமுடியாமல் மீதி 9 லட்சம் ஏக்கர்களுக்குமேல் சம்பா சாகுபடி நடவு முடிந்தது. சுமார் 1½ லட்சம் ஏக்கர் தரிசாக இருக்கிறது. ஆனால் நிலமை என்ன? இன்றைக்குத் தஞ்சை மாவட்டம் முழுமைக்கும்அறுவடை நடந்து கொண்டு இருக்கிறது. ஆனால் பதர்தான் அதிகம் தாலடி அறுவடை பிப்ரவரி கடைசியில் அறுவடைக்குவரும். ஆனால் மேட்டூர் அணை மூடப்பட்டுவிட்டது. கல்லணை மூடி ஆகிவிட்டது. 2 லட்சம் ஏக்கருக்கு மேல் அறுவடை செய்ய முடியாது. அதே சமயத்தில் சம்பா மகசூல் 5–ல் ஒரு பங்கு வீதம் அறுவடை ஆகிறது. அதுவும் பதராக இருக்கிறது. ஆக இப்படி அறுவடை பாதித்துவிட்டது. மற்ற மாவட்டங்களில் மாற்று உற்பத்தி ஆகக்கூடிய பொருள்கள் மழை இன்மையால் அங்கேயும் பாதித்து தமிழ்நாட்டில் இன்றைக்கு உணவுப் பஞ்சம் மேலும் மேலும அதிகரித்து வருகிறது. இதைக் கணக்கில் கொண்டு அரசு தஞ்சை மாவட்டத்தை உடனடியாக வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும்.

விவசாயத்தில் 120 கோடி ரூபாய்க்குமேல் செலவு செய்திருக்கிறார்கள். இன்றைக்கு இந்த 120 கோடியில் 10 லட்சம் கூட கைக்கு வராத நிலைமை இருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட விவசாயிகளுக்கு மாற்று ஏற்பாடு செய்ய வேண்டும். நஷ்டஈடு கொடுக்கவேண்டும். விவசாயத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிலத்துநீர் வரியை ரத்து செய்யவேண்டும். கடனைத்தள்ளுபடி செய்யவேண்டும்என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். மற்ற மாவட்டத்தில் பாதி பேர்களுக்கு மேல் காவேரி நீரை நம்பி யிருக்கிறார்கள். எனவே போர்க்கால வேலை நடவடிக்கைபோல் அரசு செயல்பட வேண்டும். இங்கே காங்கிரஸ் நண்பர்கள் எதற்கெடுத்தாலும் மத்திய அரசைக் குறை கூறுகிறீர்கள் என்று அடிக்கடி குறுக்கிடுகிறார்கள். அந்த காங்கிரஸ் கட்சி நண்பர் களைக் கேட்டுக்கொள்கிறேன், 1974–ம் ஆண்டு ஒப்பந்தம் ரத்து ஆகிறது. 1976 ஆம் ஆண்டு வரையிலும் காங்கிரஸ் கட்சிதான் மத்தியில் ஆண்டார்கள். மீண்டும் 1979-80 ஆண்டில் ஆட்சிக்கு வந்தார்கள், இன்றைய தினமும் காங்கிரஸ் கட்சிதான் ஆண்டு

வருகிறார்கள். இடையில் ஆறு ஆண்டு காலம் காங்கிரஸ் கட்சி ஆட்சிதானே இருந்தது. போன மாதம் வரை கர்நாடக மாநிலத்திலே ஆண்டவர்கள் காங்கிரஸ் கட்சிதான். ஏன் அவர்கள் காவேரிப் பிரச்னையைத் தீர்க்கவில்லை. ஆகவே இதற்கு முழுப் பொறுப்பும் மத்திய அரசுதான். இந்தக் குற்றச் சாட்டை மத்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். மாநில அரசு தட்டி கழிக்க முடியாது நீங்களும் காவேரிநீர்ப்பிரச்னையைக் காலம் தாழ்த்தி வந்ததற்குப் பொறுப்பு ஏற்க வேண்டும் என்று கூறுதுகிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் 10 லட்சம் விவசாயத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கிறவர்கள்தான் அவர்களுக்கு மாற்றுத் திட்டம் ஏதாவது இந்த ஆளுநர் உரையிலே இருக்கிறதா என்றால் இல்லை. தமிழ் நாட்டில் 1 கோடி விவசாயத் தொழிலாளர்களுக்கும் மாற்று வேலை கொடுக்கக்கூடிய திட்டத்தை உருவாக்க வேண்டும். இன்றைக்கு வீட்டுக்கு ஒருவருக்கு வேலையளிக்கும் திட்டம் வருகிறது. மற்றத் திட்டங்கள் இந்த அரசால் கொண்டுவரப்படுகிறது. ஆனால் அந்தத் திட்டங்களின் லாபங்கள், மூலதனங்கள் யாவும் கொள்ளையடிக்கிறவர்கள் பெரிய பெரிய காண்ட்ராக்டர்கள்தான். ஏரி தூர்எடுப்பது என்றாலும், சாலை வேலைகளாக இருந்தாலும் அவர்கள் எடுத்துச் செய்கிறபோது கொள்ளையடிக்கிறார்கள் ஏழைகளுக்கு, தொழிலாளர்களுக்குக் குறைந்த சம்பளத்தைக் கொடுத்து விட்டு அவர்கள் கொள்ளையடிக்கிறார்கள். எதிர் காலத்திலே இந்த வேலைகளுக்கு எல்லாம் ஆங்காங்கே கமிட்டிகள் அமைத்து அவைகள் மூலமாக விவசாயத் தொழிலாளர்களுக்கு முன்னுரிமை அவர்களுக்குப் பயன் கிடைக்குமாறு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பாசனத்தை எடுத்துக்கொள்ளுங்கள். குறைந்த அளவுதான் தண்ணீர் நமக்கு இந்த ஆண்டு கிடைத்திருக்கிறது. வாய்க்கால்கள் நல்லமுறையில் இருக்கிறதா? எந்த மாவட்டத்திலும் கிடையாது. தஞ்சைமாவட்டத்திலே தண்ணீர் ஆற்றுக்குள் சென்றுவிட்டது. இதனால் பல கிராமங்களுக்குப்பயன் கிடைக்கவில்லை. குறிப்பாக என் தொகுதியில் 5 நாள் சுற்றிப் பார்த்தேன். நுகிக்காடு, தொண்டியகாடு, இடும்பவனம் பகுதிகளில் தண்ணீர் பாயாமல் பெருவாரியான சாகுபடி நிலங்கள் தரிசாகக் கிடந்ததைப் பார்த்தேன். பொதுப்பணித் துறையிலே வாய்க்கால்களைச் சீரமைக்கிறார்கள் என்றால் காண்ட்ராக்டர்களிடம் அவைகளைக் கொடுத்து அவர்கள் கொள்ளையடிக்கிறார்கள். அரசாங்கப் பணத்தை அவர்கள் எடுத்துக்கொண்டு போகக்கூடிய நிலைமையைத் தடுக்கும் முறையில் பாசன வேலைகளையெல்லாம் விவசாயத் தொழிலாளர்களுக்குக் கொடுத்து நல்லவிதமாக முன்னேறுவதற்கு ஏற்பாடுகளைச்



தஞ்சை மாவட்டத்திலே பூரா நெல்லும் அரசாங்கம் கொள் முதல் செய்யப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். இந்த ஆண்டு எப்படி விளைந்திருக்கிறது? விவசாயிகள் எல்லாம் தண்ணீர் கிடைக்காமல் எஞ்சின் வைத்து நெல் விளைவித்திருக்கிறார்கள். அதனால் அவர்களுக்கு அதிகமான செலவுகள் ஏற்பட்டிருக்கின்றன. அரசாங்கம் நெல் கொள்முதல் செய்வதை ஒப்புக்கொண்டாலும் வரும் ஆண்டிலே நெல் முழுவதையும் கொள்முதல் செய்யவேண்டும். இந்த ஆண்டோடு கொள்முதல் செய்வதை நிறுத்தி விட்டால் நடுநிலை விவசாயிகள் நெல்லை விற்றிருப்பார்கள். ஆனால் பெரும் நிலக்கிழார்கள்பணக்காரர்கள், எல்லாம் நெல்லைப் பதுக்கி வைத்து இருந்து கொள்முதலை எடுத்தவுடனே அதிக விலைக்கு விற்பார்கள். குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 150 கொடுத்து கொள்முதல் செய்யவேண்டும். சென்ற வருடத்திலேயே நாங்கள் இதைச் சொன்னோம். மேற்கு வங்க அரசுபோல்—அவர்கள் வண்டிச்சத்தம் என்று கொடுத்து வாங்கியதைப்போல்—மாநில அரசாங்கமும்வாங்கவேண்டுமென்று சொன்னபோது நிதியமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்கு நடுங்கினார்கள். இன்றைக்கு வெளிப்படையாக மத்திய அரசை விமர்சனம் பேசியிருக்கிறார்கள், வரவேற்கிறோம். சிமெண்ட் ஒதுக்கீட்டை எடுத்துக்கொள்ளுங்கள். தன்னிறைவுத்திட்டத்தின் கீழ் பள்ளிக்கூடங்கள் கட்டப்படுகின்றன. ஆனால் சிமெண்ட் அதற்குக் கிடைக்கவில்லை. ஆனால் சினிமாத் தியேட்டர்கள் கட்டுவதற்கு சிமெண்ட் கிடைத்து வேகமாக வேலை நடக்கிறது. இலட்சக்கணக்கான கட்டிடத்தொழிலாளர்கள்இன்றைக்குவேலையில்லாமல் சோற்றுக்குக் கையேந்தி பிச்சையெடுக்கக்கூடிய அவல நிலை இருக்கிறது. மின்சாரம் கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப் பயன்படுத்தி சிமிண்ட் உற்பத்தி செய்து சிமிண்ட் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

அதேபோல இன்றைக்கு மின்சார வெட்டினால் தமிழகம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டிருக்கிறது. என் தொகுதியில் குடிநீர் வாரியத்தினால் கட்டப்பட்ட நூற்றுக்கணக்கான தொட்டிகள்தண்ணீர் இல்லாமல் இருக்கின்றன. தொட்டிகள் கட்டுகிற போது அதிகாரிகள் சென்று பார்க்கிற நிலை இல்லாமல் இருக்கிறது. தண்ணீர் இல்லாத இடத்தில் தண்ணீர்த் தொட்டிகளை வாரியம் கட்டுகிறது. இன்றைக்கு இருக்கக்கூடிய தண்ணீர்ப் பஞ்சத்தைக் கணக்கில் எடுத்துக்கொண்டு தண்ணீர் எங்கெங்கு கிடைக்கிறதோ அங்கு தொட்டிகளைக் கட்டுவதற்குக் குடிநீர் வாரியம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழகத்தைப் பொறுத்த அளவு அந்தப் பிரச்னைகள் பூதாகரமாக வெடித்துக்கொண்டிருக்கின்றன என்ற உணர்வை இந்த ஆளுநர் உரையைப் பயன்படுத்தி நான் முதலில் குறிப்பிட்டுக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிரதமர் அவர்கள் அறிவித்த 20 அம்சத் திட்டத்தை, தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நிறைவேற்றுகின்ற விதத்தில், தமிழகத்தினுடைய நிர்வாக இயந்திரம் முடுக்கிவிடப்படும் என்று மற்ற மாநிலங்களுக்கு முன் உதாரணமாக இருந்து தமிழக ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் நன்கு அறிவோம்.

இன்று, வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழகம் வறுமைப் பிரச்னைக்கு ஆளாக வேண்டுமோ, ஏற்பட்டிருக்கிற வறட்சி நம்மை கொன்றுவிடுமோ என்று பயந்து தத்தளித்துக் கொண்டிருக்கும்போது, தமிழகத்து மக்கள், தெருக்களில், இவ்வளவு வறட்சி இருந்துகூட, முந்தைய ஆட்சிகால கட்டத்தில் ஏற்பட்ட விலைவாசி உயர்வு, அரிசி விலை தாறுமாறாக ஏறியவிதம், இந்த ஆட்சியில் இல்லையே என்றுசொல்லக்கூடிய ஒருகட்டாயம் தமிழகத்துத் தெருக்களில் இருக்கிறது என்பதை தன்மானமிக்க இந்த மாமன்றத்திற்கு உணர்த்த நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னுங்கூட கீழ்த்தட்டில் இருக்கிற மக்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாடிக்கொண்டிருக்கிறவர்கள், பச்சையாக சொல்கிறார்கள், இவ்வளவு வறட்சி இருந்தும்கூட, இன்று தமிழகம் தத்தளிக்காமல், தமிழகம் பீறிட்டுக் கொந்தளிக்காமல், தமிழகம் உணர்ச்சிவசப்பட்டு ஆர்ப்பாட்டங்களுக்குச் செவி சாய்க்காமல் தமிழகம் பொய்ப் பிரச்சாரங்களுக்கு ஆட்படாமல் இருப்பதற்குக் காரணமே என்றோ, இன்று தமிழகத்தை ஆண்டு கொண்டிருக்கிற எம்.ஜி.ஆர். செய்த தர்மம்தான் என்று தமிழகத்தினுடைய தெருக்களிலேயே நாட்டு மக்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடு இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உரிமைகள் என்ற அடிப்படையிலும், இந்தியாவினுடைய சுதந்திரத்திற்காகப் போரிட்ட, இந்தியாவினுடைய சுதந்திரத்திற்காகப் பலி கொடுத்த, இந்தியாவினுடைய சுதந்திரத்திற்காகச் செந்நீர் சிந்திய, இந்தியாவினுடைய சுதந்திரத்திற்காகச் செக்கிழுத்த செம்மல்கள் நிரம்பப் பெற்ற தென்னாட்டில், தென் பகுதியான தமிழ்நாட்டிலிருந்து பல கோரிக்கைகளை நாம் மைய அரசுக்கு வைத்திருக்கிறோம். ஏனோ மைய அரசு அந்த கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்குத் தயங்குகிறது என்பதுதான் குரல் உயர்த்திய மாமன்ற உறுப்பினர்கள் இங்கே எடுத்துக் காட்டியது என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். சிலபேர் ஆத்திரப்பட்டு பேசினார்கள். இப்படியெல்லாம் மைய அரசை நீங்கள் பேசலாமா என்று கேட்டார்கள். பிரதமரின் 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற இந்த



ஆட்சி, பஞ்சாபில் இருக்கிற ஒருவர் இந்தியாவினுடைய ஜனாதிபதியாக வர வேண்டுமென்று உத்திரப்பிரதேசத்திலே பிறந்த பிரதமர் இந்திராகாந்தி நினைத்தபொழுது, நம்முடைய கையாலே அந்த ஓட்டுகளை அளிக்க வேண்டுமென்று அந்த மாவீரருக்கு, இன்றைய தினம் அந்த மாபெரும் பொறுப்பிலே இருக்கிற ஜெயில் சிங்குக்கு நம்முடைய வாக்குகளை கேட்கின்ற உரிமை எப்பொழுது டெல்லி அரசுக்கு இருக்கிறதோ, அப்பொழுதே அந்த உரிமையின் அடிப்படையில் இன்று வறட்சியால் தத்தளித்து, கண்ணீர் வடித்து, கெஞ்சி, கூத்தாடி, தொழிற்சாலைகள் தாருங்கள், மானியம் தாருங்கள், வறட்சியைப் போக்குங்கள் என்று சொல்லும் போது, ஏன் இங்கு இருக்கிற மாமன்ற உறுப்பினர்கள் ஒருசிலர் ஆத்திரப்படுகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

135973 சென்னை 600 008

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

ஆந்திராவிலும் கர்நாடகாவிலும் நீங்கள் தோற்றுவிட்டீர்கள் கேரளத்தில் 20 பேரை வைத்துக் கொண்டு ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். தமிழ்நாட்டில் நீங்கள் செத்துவிட்டீர்கள்; ஆகவே தென்னாட்டிற்கு ஒரு பிரதமர் வேண்டுமென்றா நாங்கள் இந்த மாமன்றத்திலே கேட்டோம்? இல்லை) உத்திரப் பிரதேசத்தில் இருக்கிறவர் இந்தியாவின் பிரதமராக இருக்கிறார். பஞ்சாபிலே இருக்கிறவர் இந்தியாவின் ஜனாதிபதியாக இருக்கிறார். இது என்ன நியாயம், தமிழ்நாட்டிலிருந்து ஒருவர் பிரதமராகவும், ஜனாதிபதியாகவும் ஆகவேண்டுமென்றா கேட்டோம், இல்லை. தென்னாட்டிற்கு ஒரு பிரதமர் வேண்டுமென்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கேட்கவில்லை. தென்னாட்டில் நீங்கள் தோற்றுவிட்டால் எங்களுடைய வறட்சியை, எங்களுடைய கொடுமையான உணர்வுகளை, எங்களுக்கு ஏற்பட்டிருக்கிற பஞ்சத்தை, பரிதாபத்தை, கண்ணீரும் கவலையுமாக எடுத்துச் சொல்லும் போது, கருணை காட்ட வேண்டும் மத்திய சர்க்கார் என்றுதான் நாம் இப்பொழுது போராடிக் கொண்டிருக்கிறோம். மானசீகமாக நாம் மனப் போராட்டங்களைத் தந்துகொண்டிருக்கிறோம். 160 கோடியோ, 150 கோடியோதான் நாம்கேட்பது, இதுஒன்றும் பெரிய தொகை இல்லை. 1,600 கோடி ரூபாய் செலவு செய்து கடந்த ஆண்டு நடைபெற்ற ஆசிய விளையாட்டைக் கண்டு உலகமே பாராட்டியது. பிரதமர் இந்திராகாந்தி அவர்களை பாராட்டியது.

V211,31 N83

(பிற்பகல் 12-50)

திரு. இல. பலராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஒரு கட்சியைச் சாடும் பொழுது ஒரு பண்பாட்டோடு சாட வேண்டும். தமிழ் நாட்டிலே காங்கிரஸ்காரர்கள் செத்து விட்டீர்கள் என்று சொன்னார்கள். காங்கிரஸ் கட்சியின் அடிப்படையிலே நாங்க

N83-39-4-15

ளெல்லாம் அங்கத்தினர்களாக இருக்கிறோம். ஜனநாயகத்திலே
எப்பொழுது, யார் சாவார்கள் என்பது அவருக்குத் தெரியாது
போலும் அந்த நிலைக்கு அவர் ஆளாக வேண்டாமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கோவைத்தம்பி: பேரவைத் துணைத் தலைவரவர்களே
காங்கிரஸ் செத்து விட்டது என்று நான் கூறவில்லை சில
காரண, காரியங்கள் செத்துவிட்டதால் நாம் தத்தளித்துக்
கொண்டிருக்கிறோம் என்றுதான் சொன்னேன். இன்றைக்கு
உலகமே போற்றத் தகுந்த வகையில் ஆசிய விளையாட்டுப்
போட்டியை பாரதப் பிரதமர் அவர்கள் டெல்லியில் நடத்திக்
காட்டினார்கள். அது எங்களுக்குப் பெருமையாக இருந்தது.
இந்தியாவிற்கு உலக அரங்கில் பெருமை ஏற்படுகிறது என்கின்ற
நேரத்தில் இந்தியாவில் ஒரு மாநிலமாக அங்கம் வகிக்கின்ற
தமிழ்நாடும் பெருமைப்படுகிறது; ஆகவே ஆசிய ஒலிம்பிக்
விளையாட்டு அப்படி நடந்திருப்பதைக் கண்டு நாங்கள் ஆத்திரப்
படவில்லை அதை நாங்கள் விரும்பி வரவேற்கிறோம். இந்தி
யாவில் அப்ப ப்பட்ட. விளையாட்டு நடக்கிறது என்று.
1,600 கோடி ரூபாய் செலவு செய்து ஆசிய ஒலிம்பிக் விளை
யாட்டுப் போட்டியை டெல்லியில் நடத்தி டெல்லி மாநகரத்தை
சொர்க்க பூமியாக மாற்றியிருக்கிறார்கள். 1,600 கோடி ரூபாய்
செலவில் ஆசிய ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியை
டெல்லியில் நடத்தி டெல்லியை சொர்க்க பூமியாக ஆக்கியிருக்
கின்ற நேரத்தில் இப்படிப்பட்ட விளையாட்டுகளை இந்தியாவின்
பல பாகங்களில், தென்னாட்டில், தமிழகத்தில் ஏன் நடத்தக்
கூடாது என்றுதான் நாம் கேட்கிறோ . சரி அதுவும் வேண்டாம்
எங்களுக்கு தொழிற்சாலை வேண்டுமென்று கேட்கிறோம். 1986
ஆம் ஆண்டில் 600 கோடி ரூபாய் செலவில் காமன்வெல்த்
மாநாடு நடத்தப் போகிறார்கள். நான் இங்கேயிருக்கிற
மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்
கிறேன், அந்த காமன் வெல்த் மாநாட்டை 1,600 கோடி ரூபாய்
செலவு செய்து டெல்லியை சொர்க்க பூமியாக ஆக்கியிருக்கின்ற
நீங்கள் தென்னாட்டில் ஏதாவதொரு மாநிலத்தில் இந்த
காமன்வெல்த் மாநாட்டை நடத்துவதற்கு முன்வர வேண்டு
மென்று பாரதப் பிரதமர் அவர்களுக்கு முறையிட வேண்டுமென்று
பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதில் ஏதாவது தவறு இருந்தால்கூட, 1992 ஆம் ஆண்டில்
இன்னும் 9 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியாவில் நாம் உலக
ஒலிம்பிக் போட்டியை 2,000 கோடி ரூபாய் செலவில் நடத்த
விருக்கிறோம் என்ற செய்தி டெல்லியிலிருந்து வந்தருக்கிறது.
நான் கேட்கிறேன், இந்த மாமன்றத்தில் எப்பொழுது பார்த்
தாலும்தேசியநீரோட்டம் தேசிய நீரோட்டம் என்று எப்பொழுது
பார்த்தாலும் பேசிக்கொண்டிருக்கிறார்களே அவர்களைப்
பார்த்து கேட்கிறேன், 600 கோடி ரூபாய் செலவில் நடத்த
இருக்கின்ற காமன்வெல்த் மாநாட்டையே அல்லது 2,000கோடி
ரூபாய் செலவில் நடத்தவிருக்கின்ற ஒலிம்பிக் போட்டியையோ





தென்னாட்டில் ஏதாவதொரு மாநிலத்தில் நடத்துவதற்கு முன்
வரவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். இங்கே
ஹோசி திட்டம் வேண்டாம், பக்ராநங்கல் திட்டம் வேண்டாம்.
உலகத்தைச் சுற்றி சாலை போடக்கூடிய சிமெண்டைக் கொண்டு
வட இந்தியாவில் டேம்கள் கட்டுவதைப் போல இங்கே
வேண்டாம். ஆனால் நாங்கள் கேட்பதெல்லாம் வறட்சியைப்
போக்க பணம் கொடுங்கள்; உழைப்பவர்களுக்குத் தேவையான
தொழிற்சாலைகளைக் கொடுங்கள், இவைகளை பெற்றுத்
தருவதிலே ஏன் காலதாமதம் செய்கிறீர்கள் என்றுதான் பணிவன்
போடு கேட்டுக்கொள்கிறேன்.

அரசியல் நெருக்கடியின் காரணமாக பாரதத்தை ஆண்டு
கொண்டிருக்கின்ற பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்
களுக்கு ஆபத்து வந்துவிடுமோ என்ற அச்சம் தென்னாட்டில்
ஏற்பட்டிருக்கிறது. இன்று அசாமில் மோசமான நிலைமை
ஏற்பட்டு வெடிகுண்டுகளையும், துப்பாக்கிக் குண்டுகளையும்
தாங்கிக்கொண்டு சுதந்திர இந்தியாவிலிருந்து பிரிவுபட்டிருக்
கிறோம் என்று பயமுறுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

பஞ்சாபில் தீட்டிய பட்டாக் கத்தியுடன் இந்திய ஜனநாயகத்
திற்குச் சோதனைக் கட்டத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்
தென்னாட்டில் அப்படிப்பட்ட உணர்வு எங்கேயாவது பீறிட்டுக்
கிளம்பும் ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிடக்கூடாது. தென்னாட்டிற்கு
ஒதுக்கப்பட வேண்டிய நிதியை, தென்னாட்டிற்குக் கிடைக்க
வேண்டிய மானியத்தை அல்லது தென்னாட்டிற்கு வந்து சேர
வேண்டியவைகள் வந்து சேராமல் போனால் பஞ்சாபிலும்,
அசாமிலும் உள்ள நிலைமைகள் தமிழ்நாட்டில், தென்னாட்டில்
ஏற்பட்டு இங்கே இந்திய சுதந்திரத்திற்கு ஆபத்து வந்துவிடுமோ
என்று பயப்படுகிறோம் என்று சொல்லிக்கொள்கிறேன். அப்படி
பயப்படுகின்ற நிலைமை ஏற்படாமல் பாதுகாக்க வேண்டியது
மத்திய அரசின் கடமை. இந்திய ஒருமைப்பாட்டை பலப்படுத்த
வேண்டியது மத்திய அரசின் கடமை. அந்த நடவடிக்கைகளைத்
தான் இன்றைய தினம் மாநில அரசு என்ற பெயரால்பேரறிஞர்
அண்ணா அவர்களின் தத்துவங்களை எங்கள் இதய தெய்வம்
புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் தமிழகத்தில் அமைதி
யாக நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம்.

குளத்திலே நீர் தேங்கிக்கிடக்கிறது என்ற காரணத்தால்
அந்த நீருக்குச் சக்தியில்லை என்று அந்தக் குளத்தின் கீழே
குடியிருக்கின்றவர்கள் நினைக்க வேண்டாமென்று கேட்டு,
ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, நமது ஆளுநர் அவர்கள் சனவரி 24-ந்தேதி அன்று
நிகழ்த்திய உரையின் மீது அகில இந்திய பார்வார்டு பிளாக்
கட்சியின் சார்பாக கருத்துக்களை எடுத்து வைக்கலாம் என்று
கருதுகிறேன்.

ஆளுநர் அவர்கள் இங்கே நிகழ்த்திய உரையில் சொல்லப் பட்டிருக்கின்ற அந்தக் கருத்துக்களைப் பார்க்கின்றபோது, சத்துணவை மையமாக வைத்து அதைமட்டும் கூறியிருக் கிறார்கள். அதற்குமேல் கவர்னர் அவர்களும் சொல்லுகின்ற போது வறட்சி நிலை இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்டிருக் கின்றது, அதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க இருக்கின்றது என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். சத்துணவைப் பொறுத்த அளவுக்கு எங்களுடைய இயக்கத்தின் சார்பாக, இந்த மாநிலத்தில் உள்ள ஏழை எளிய மக்கள், 65 லட்சம் பேர்களுக்கு மதிய உணவு போடுவதைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

அதே நேரத்தில் 1.40 இலட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுத்திருக்கிறார்கள். இன்னும் 35 ஆயிரம் பேர் களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்படும். அதுவும்வருகின்ற 31-ந் தேதிக்குள் நியமிக்கப்படவிருப்பதாக அறிவித்திருக்கிறார்கள், அவர்களுடைய அறிவிப்பின்படி நடக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் சென்ற ஆண்டு இந்த மன்றத்திலே பேசுகின்றபோது கிராம அதிகாரிகள் பதவி ஒழிக்கப்பட வேண்டும் என்று கொண்டு வந்தபோது, அதைப் பாராட்டிப் பேசியவன் நான். அப்படி ஒழித்த நேரத்தில், கிராம மக்களுடைய துயர் துடைப்பதற்காக, கிராம மக்களை அந்த கிராம அதிகாரி களின் பிடியிலிருந்து விடுவிப்பதற்காக, 12 ஆயிரம் கிராம அலுவலர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று அறிவித்தார்கள். அதிலே கோர்ட் தீர்ப்பின்படி 5,000 பேர்கள் நியமிக்கப்பட்டு, இன்னும் 7, 8 ஆயிரம் பேர்கள் நியமிக்கப்படாமல் இருக் கிறார்கள். அதனால் கிராமப்புற மக்கள், ஏழை எளிய மக்கள் எவ்வளவு துயரபடுகிறார்கள் என்பதை விளக்கமாகப் பேசியவன். இதை எதற்காக சொல்லுகிறேன் என்றால், இப்படிப்பட்ட நியமனங்கள் எல்லாம் உடனடியாக செய்யப்படவேண்டும்.

அடுத்து குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது குடும்பத்தில் உள்ள யாருக்கு வேலை கொடுக்கப் போகிறீர்கள். படிக்காத குடும்பத்தினர், அடிதளத்தில் இருக்கின்ற படிக்காத குடும்பத்தினர் தற்போது 65 சதவிகிதம் இருக் கிறார்கள். இதிலே எத்தனை சதவிகிதம் பேர்களுக்குக் கொடுக்கப் போகிறீர்கள் என்பதையும் தெளிவாக சொல்லவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் வறட்சியைப்பற்றிச் சொல்லுகின்றபோது, மாண்புமிகு ஆளும் கட்சி உறுப்பினர்கள் கூட சொன்னார்கள். இங்கே இருப்பவர்கள் ஆளுநர் உரை வறட்சியாக இருக்கிறது என்று சொன்னால் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் வருத்தத் தோடு இல்லை என்று சொன்னார்கள். நான் வறட்சியாகத் தான் இருக்கிறது என்று சொல்லுகிறேன். நீங்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள், வறட்சி இயற்கையின் சீற்றத்தால் வந்து விட்டது என்று இங்கே அறிவித்திருக்கிறீர்கள். ஆனால் அதற்கு



எடுத்த நடவடிக்கை என்று என்று பார்க்கிறபோது, 1982 ஆம் ஆண்டு செலவினம் இருக்கிறதே 17.50 கோடி, அதை குடி நீருக்காக செலவழித்தோம் என்று அறிவித்திருக்கிறீர்கள். அது எதன் மூலம் செலவு செய்யப்பட்டது என்பது அரசுக்குத் தெரியும். இதுவரையிலே கிராமப் பகுதிகளிலே கிணறுகளே இல்லாமல், தனியார் கிணறுகளிலே தண்ணீர் எடுத்து வந்தவர் களுக்காக குழாய் போடப்பட்டது. தன்னிறைவுத் திட்டத்தின்கீழ், அந்த பணத்தை இப்போது ஏற்பட்டிருக்கின்ற வறட்சிக்காக செலவு செய்யப்பட்டது என்று சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது.

மத்திய அரசிடம் இருந்து 190 கோடி ரூபாயைக் கேட்டு இருக்கிறோம், அவர்கள் பரிவோடு, உணர்வோடு செய்வார்கள் என்று இங்கே சொல்லியிருக்கிறீர்கள். அவர்களுக்கு என்ன பரிவு இருக்கிறது, உணர்வோடு நாங்கள் நம்புகிறோம் என்று சொல்லி இருக்கிறீர்கள். எத்தனை காலம் நம்பிக் கொண்டிருக்கப் போகிறீர்கள். நம்முடைய நிதி அமைச்சர் சொல்லும்போது நாங்கள் மத்திய அரசோடு பகைத்துக்கொள்ளத் தயாராக இல்லை என்று அவை முன்னவர் என்ற ரீதியில் சொல்லியிருக் கிறார்: நாங்கள் உங்களை பகைத்துக்கொள்ளச் சொல்லவில்லை. உரிமையைக் கேட்பதற்குப் போராடவும் தயாராக இருக்க வேண்டும் அல்லது இந்த அவையிலே தமிழக மக்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உண்மையாகத் தேவைப்படுகிறது. அதைக் கொடுக்க வேண்டும் என்று தீர்மானம் கொண்டு வாருங்கள்.

[பிற்பகல் 1-00]

மத்திய அரசு நமது ஜனநாயக முறைப்படி அதற்கு கொடுக்கத் தவறுமானால் அனைத்து மக்களையும் திரட்டி, மத்திய அரசுக்கு எதிராக, சர்வாதிகாரத்திற்கு எதிராக நாங்கள் போராடுவோம் என்ற தீர்மானத்தை இந்த அரசு கொண்டு வரலாம். ஏதோ இந்த மத்திய அரசை எதிர்க்கிறோம் என்று பேசுகிறார்களே தவிர, மத்திய அரசை ஆதரிப்பதைத் தவிர இங்கே நான் பார்க்கின்ற நிலையில் ஒன்றும் இல்லை.

கிராமப்புற ரோடுகளைப் போடுவதற்கு அதிகமாக பணம் ஒதுக்கீடு செய்திருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்களுக்கும் தெரிய வேண்டுமென்பதற்காக இங்கே உள்ள நிலையை, நான் இன்றைய தினம் கூறாமல் இருக்கமுடியாது. தன்னிறைவு திட்டத்தின் மூலமாக கிராமப்புற ரோடுகளைப் போடுங்கள் என்று சொன்னார்கள். பணம் ஒதுக்கப்பட்து. தனியார் நிலங்களை எடுக்க முடியவில்லை. அதற்காக இன்னும் ஆயிரக்கணக்கான கிராமங்களில் ரோடுகள் போடமுடியவில்லை. கேட்டால் சட்டச் சிக்கல் என்று சொல்லுகிறார்கள். நீங்களே பொதுப்பணித் துறைக்கு பொறுப்பாக இருக்கிறீர்கள். ஏன்

நெடுஞ்சாலைகளுக்கு மட்டும் சட்டாய ஆர்ஜிதம் என்ற சட்டம் போல இதற்கும் ஒரு சட்டத்தை கிராமப்புற மக்களுக்கு ரோடு வசதிகளைப் போடுவதற்காக நீங்கள் கொண்டுவரக்கூடாது. ஒருவன் 4 சென்ட் நிலம் தரமுடியாது என்று, தடுத்துக் கொண்டால் அந்த கிராமத்திற்கு ரோடு போடமுடியவில்லை. எத்தனை தன்னிறைவுத் திட்டங்கள் போட்டாலும் கிராமப் புறத்திற்கு ரோடு போடமுடியாது. நாங்கள் கிராமப்புறத்திலே ரோடு வசதி செய்வதற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்திருக் கிறோம் என்று இங்கே குறிப்பிட்டிருக்கிறீர்கள். எந்த நிதி ஒதுக்கினாலும் கிராமப்புறத்திற்கு ரோடு வசதி வந்து சேராது. கிராமப்புற மயான ரோடுகளைப் போடமுடியவில்லை. கேட்டால் சட்டச் சிக்கல். ஒரு நல்ல சட்ட கருத்தத்தை கொண்டுவந்து காந்தி அவர்கள் சொல்லிவிட்டுப் போனார்கள், கிராம ராஜ்யம் அமைக்க வேண்டுமென்றால், கிராம மக்கள் மனமுவந்து நிலங்களைக் கொடுக்கவேண்டுமென்று அவர்கள் காலத்தில் வேண்டுமானால் சொல்லியிருக்கலாம். இப்போது யாரும் மனமுவந்து நிலம் கொடுப்பதற்கு இல்லை என்று தெரிந்ததற்குப் பின்னாலும், மாயனத்திற்குப் போகின்ற பிணத்தைத் தடுத்து எங்களது பகுதியிலே ஒரு பிணம் 2 நாட்களாக மயானத்திற்கும், கிராமத்திற்கும் மத்தியில் வைக்கப்பட்டிருந்தது. அப்படிப்பட்ட அவலநிலையைப் போக்குவதற்கு இந்த அரசு முயற்சிசெய்ய வேண்டும். எத்தனையோ அவசரச் சட்டங்களைக் கொண்டு வருகிறது. உரிமையைக் கேட்டுப் போராடுகின்ற தொழிலாளர்கள் தங்களது உரிமைக்காக போராடுகின்ற அந்தப் போராட்டத்தைக் கூட தடுத்து நிறுத்துகின்ற சட்டத்தைக் கொண்டு வருகிறார்கள். ஆனால் கிராம முன்னேற்றத்திற்கான ஒரு அவசரச் சட்டத்தைக் கொண்டுவந்தால், எங்களைப் போன்றவர்கள், எதிர் வரிசையிலே இருப்பவர்கள் கிராம நன்மைக்காக அதை ஆதரிக்க தயாராக இருக்கிறோம். ஆகவே கிராமப்புறங்களுக்கு தன்னிறைவுத்திட்டம் போட்டோம், பணம் ஒதுக்கிவிட்டோம் என்று சொன்னால் போதாது. தன்னிறைவு திட்டத்தில் நீங்கள் ஒதுக்கியிருக்கிற பணத்தில் கிராமப்புற ரோடுகளைப் போடமுடியவில்லை. எங்கேயோ குளம் வெட்டினோம், சாலைகளைப் போட்டோம் என்றுசொல்லி நடந்து இருக்கிற விவகாரம் கிராமப்புற சாலையை, இணைப்புச்சாலையை சட்டச் சிக்கல் காரணமாக போட முடியவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே இன்றைக்கு ஒரு நல்ல சட்டத்தை நில ஆர்ஜிதம் என்ற முறையில், மற்ற நெடுஞ்சாலைகளுக்கு இருக்கின்ற மாதிரி ரெயில்வேயில் இருக்கின்ற மாதிரி, விதியை நீங்கள் அமுல்படுத்தினால் கிராமப் புறச் சாலைகளைப் போடமுடியும் என்று நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து மின் இணைப்பு. இயற்கையின் சீற்றத்தால் மின்சாரம் அதிகமாக கிடைக்கவில்லை என்பது ஒரு புறம் உண்மையாக இருந்தாலும் நூற்றுக்கு நூறு தொழிற்சாலைகளுக்கு மின்வெட்டு கொடுக்கப்பட்டது. ஆயிரக்கணக்கான



தொழிலாளர்கள் லே—ஆப் காரணமாக வேலையை இழந்தார்கள். அதற்கு மேலும் கிராமப்புறத்திலே இருக்கின்ற விவசாயிகளுக்கு 6 மணி நேரம் வரை கொடுங்கள் என்று அமைச்சர் அவர்களை நான் கேட்டதற்கு இணங்கி முறைப்படுத்திக் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். இருந்தாலும் கீழே இருப்பவர்கள் சரியாக செயல்படவில்லை. 36 மணி நேரம் என் தாலுகா முழுவதும் தொடர்ந்து மின் இணைப்பு இல்லாமல் இருந்தது. அதையும் அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்தேன். காரணம் உற்பத்தி இல்லை என்று சொல்கிறபோது, நீங்கள் சொல்லுகிறீர்கள். ஆளுநர் அவர்கள் உரையிலே சொல்லப் பட்டது, நிலக்கரி கிடைக்கவில்லை. மின் நிலையங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இந்திய அரசும் நிர்ணயம் செய்த நிலக்கரியின் டன் அளவை காட்டிலும், நமது அனல் மின் நிலையங்களுக்கு வழங்கப்படும் நிலக்கரி அளவு குறைந்துவிட்டது என்று நாம் இப்போது அறிகிறோம் என்று சொல்லிவிட்டு, இதை மத்திய அரசு உள்ளப்பூர்வமாக கொடுக்கும் என்று நம்புகிறோம். என்ன உள்ளப்பூர்வமாக நம்புகிறோம். பல ஆண்டுகளாக நாம் பார்த்துவிட்டோம். சென்ற பட்ஜெட்டிலே நாம் பார்க்கின்ற போது நமது நிதி அமைச்சர் அவர்கள் கொடுத்த அந்த அறிக்கையிலே 10 ஆயிரம் டன் அரிசி வேண்டும் என்று கேட்டோம் 4 ஆயிரம் டன் கொடுத்துவிட்டு மீதி கொடுக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆண்டு கேட்டால் ஜனவரி 82 முதல் உணவு தானியம் மத்திய அரசு கொடுக்கவில்லை, ஆனாலும் இன்னும் பரிவோடு நம்பு கிறோம், எதை நம்புகிறார்கள். மத்திய அரசு கொடுக்கும் என்று பரிவோடு உள்ளப்பூர்வமாக உணர்வோடு நம்புகிறோம் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் தான் புறக்கணிக்கிறார்கள், என்று தெரிந்த பிறகும் அவர்களைக் கண்டித்துப் பேசுவதற்கு இந்த அரசு பெரு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். வங்கத்தில் இருக்கும் அரசு, டெல்லியில் இருக்கின்றவர்களைப் பார்த்து அவர்கள் பெற வேண்டியவற்றை நேரிலே பேசிப்பெறு கிறார்கள். ஆண்டுதோறும் மத்திய அரசுக்கு என்னென்ன கேட்டு எழுதப்பட்டது, எந்தத் திட்டத்தை மத்திய அரசு நிராகரித்தது, எதை ஏற்றுக்கொண்டது என்ற அடிப்படையில் ஒரு புத்தகமாக வெளியிட்டு நாட்டுமக்களுக்கு அறிவிக்கிறார்கள். அதுபோன்று இந்த அரசும் இந்தந்தத் தொழிற்சாலைக்கு நாம் அனுமதி கேட்டோம். இதை இதைக் கொடுக்கவில்லை என்று நாட்டு மக்களுக்கு இந்த அரசு தெளிவாக எடுத்துச் சொல்லவேண்டும். புள்ளி விவரங்களோடு சொல்லவேண்டும். நான் வேண்டுமானால் அந்த மாநிலத்தில் எப்படிக்கொடுக்கிறார்கள் என்று சொல்லு கிறேன். எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் அமைச்சர்களாக அங்கே இருப்பதால் அவர்கள் எங்களுக்கு அந்த புத்தகத்தை அனுப்புகிறார்கள். ஆகவே. இந்த அடிப்படையில், இந்தத் தேதியில் கடிதம் எழுதினோம், இந்த வேலையை மத்திய அரசு புறக்கணித்துவிட்டது, அல்லது இதற்கு இல்லை என்று மறுத்து விட்டார்கள் என்பதைப் புத்தகமாகக் கொடுத்து இருக்கிறார்கள். அதேபோல் நீங்களும் செய்வீர்களானால், எங்களைப் போன்றவர்

களும், மத்திய அரசு எந்த அளவிற்கு தமிழ் மக்களுக்கு வசதிகளைச் செய்துதர மறுக்கிறது, அல்லது புறக்கணிக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். அப்படித் தெரிந்து கொண்டால். இந்த மண்ணில் பிறந்தவர்கள் என்ற முறையில், இந்த நாட்டு மக்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்று தெரிந்தால் இந்தச் சட்டமன்றத்திலே இருக்கிற எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும் அவர்களும் சேர்ந்து புறக்கணிக்கப்படுகிறார்கள் என்பதை அறிந்து மத்திய அரசின் தவறான கொள்கையின் காரணமாக நாம் புறக்கணிக்கப்படுகிறோம் என்பதை தெளிவாக நாட்டு மக்களுக்கு எடுத்து சொல்ல முடியும். அப்படி நீங்கள் எடுத்துச் சொல்வதற்குக் கூட தயங்குவீர்களானால் நாட்டு மக்கள் எப்படி தமிழகத்தை மத்திய அரசு புறக்கணிக்கிறது என்று சொல்வார்கள்? நீங்கள் தான் தவறி இருக்கிறீர்கள், கேட்கவில்லை அதனால் அவர்களும் கொடுக்கவில்லை என்று மக்களிடம் கருத்து பரவி இருக்கிறது. ஆகவே, ஆண்டுதோறும் ஒரு அப்படிப்பட்ட அறிக்கையை நீங்கள் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, தமிழகத்திலே இருக்கின்ற விவசாயிகளைப் பற்றி இந்த ஆளுநர் உரையிலே எதுவும் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. இன்றைக்குத் தமிழகத்திலே 80% விவசாயிகள் இருக்கிறார்கள். அந்த விவசாயிகள் எந்த அளவிற்கு இந்த நாட்டுக்கு உற்பத்தியைச் செய்கிறார்கள், உற்பத்தியைப் பெருக்குகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியும். ஆற்றுப் பாசனத்தைவிட, குளத்துப் பாசனத்தை விட, நம்முடைய புள்ளி விவரங்களைப்பார்த்தால் 6-வது பிளான் அடிப்படையில் சொல்லியிருக்கிறீர்கள்—கிணற்றுப் பாசனத்தின் கீழ்தான் அதிக பரப்பளவு விவசாயம் செய்கிறார்கள் என்று குறிப்புக் கொடுத்து இருக்கிறீர்கள். ஆனால் அவர்களுக்கு நாம் மின்சாரம் கொடுக்க முடியவில்லை. இப்போது கூட நீங்கள் அறிவித்து இருக்கிறீர்கள். மின்சாரக் கட்டணம் உயரும் என்று சொல்லியிருக்கிறீர்கள். உயரும் என்பதற்கான காரணங்களையும் சொல்லியிருக்கிறீர்கள். எந்தக் காரணத்தைக் கொண்டும் சாதாரண சிறு விவசாயிகளுக்கு கட்டணத்தை எந்தமுறையிலும் ஏற்றக்கூடாது. அப்படிஏற்றினால் நீங்கள் அவர்களுக்குச் செய்கிற துரோகமாகும். நீங்கள் எவ்வளவோ சலுகைகளைச் செய்கிறீர்கள். அதேபோல், 35 பைசா என்று கேரள அரசாங்கத்தோடு ஒப்பந்தம் செய்து கொண்டு இருந்தாலும், விவசாயிகளுக்கு எந்த வகையிலும் மின் கட்டணத்தை உயர்த்தக்கூடாது என்பதை வலியுறுத்திச் சொல்லிக்கொள்கிறேன்.

உணவு நிலைமை மிகவும் பரிதாபகரமானதாக இருக்கிறது. ஜுன் மாதத்தில் இருந்து மத்திய அரசு நம்மைப் புறக்கணித்து இருக்கிறது. அதோடுமட்டுமல்ல, தமிழக அரசு ப்ரெகுயூர்மென்ட் என்ற பெயரால், நெல்லுக்கு விலை நிர்ணயம் செய்து, குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 112 என்று நிர்ணயித்து இருக்கிறார்கள், ஆனால், மதுரையில் திடீரென்று ஒரு கிலோவிற்கு 1.20 பைசா அரிசிக்கு விலையேற்றியிருக்கிறார்கள். மதுரையில் உள்ள மக்கள் கவும் அவதிபட்டுக்கொண்டிருக்கும் நிலை இருக்கிறது. உற்பத்தி



செய்கிற விவசாயிக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை. இந்த ஆண்டு நீங்கள் தண்ணீரும் கொடுக்கவில்லை, மின்சாரமும் கொடுக்கவில்லை. இருப்பினும் 10 ஏக்கர் விவசாயம் செய்யும் விவசாயி 2 ஏக்கர் செய்து இருக்கிறான். இவ்வளவு கஷ்டப்பட்டு உற்பத்தி செய்த விவசாயிக்கு 112 ரூபாய் ப்ரொகுயூர்மென்ட் விலை ஒரு குவிண்டாலுக்கு என்று உத்தரவு பிறப்பித்து இருக்கிறீர்கள். ஆனால் நம்முடைய அரசு சென்ற ஆண்டே உற்பத்தி செலவு என்று ஏற்றுக்கொண்ட விலை ஒரு குவிண்டாலுக்கு ரூ. 146 ஆகும். இந்த ஆண்டு அதைவிட அதிகமாக செலவு செய்து உற்பத்தி செய்து இருக்கிறார்கள். அவர்களுக்கு அதிகமான விலை நிர்ணயம் செய்யவேண்டும். இல்லையென்றால் ஏழை எளிய விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டு விடுவார்கள். வியாபாரிகள் ஒரு நாளில் ஒரு கிலோவிற்கு 1.20 விலையேற்றிக்கொள்கிறபோது, 6 மாதம் கஷ்டப்பட்டு உற்பத்தி செய்த விவசாயிக்கு நாம் கொடுக்கும் விலை ரூ. 112 ஒரு குவிண்டாலுக்கு என்று சொன்னால் அது எந்த நிலையில் நியாயமாகும் என்பதை இந்த அரசு உணர்ந்து பார்த்து, அந்த விலையை உயர்த்திக் கொடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டிலே சில குறிப்பிட்ட பகுதிகள் இன்னும் வறட்சியால் பாதிக்கப்படவில்லை என்று நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். அநேகமாக எல்லா மாவட்டங்களுமே முழுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் மதுரை மாவட்டம். எல்லாப்பகுதிகளிலும் அங்கே வறட்சி இருக்கிறது. ஆகவே மதுரை மாவட்டத்திலுள்ள எல்லாப் பகுதிகளையும் வறட்சிப் பகுதிகள் என்று அறிவிக்க வேண்டும்.

[பிற்பகல்1-10]

மதுரை மாவட்டத்தில் வைகை நதி பாய்வதினால் அங்கே வறட்சி இல்லை என்று சொல்லியிருக்கிறீர்கள். அதனால் இந்த நெருக்கடியான நேரத்திலும் அங்கே உள்ள தாசில்தார் போலீசாருடன் சென்று 22-ந்தேதி வரிவசூல் செய்திருக்கிறார். வறட்சி இருக்கிறது என்று நீங்களே ஒப்புக்கொள்கிறீர்கள். தமிழ்நாடு முழுவதும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறீர்கள். வறட்சி என்று அறிவிக்கப்பட்ட பின்னால் இந்த ஆண்டு கூட்டுறவு கடனாக இருந்தாலும் சரி நிலவரியாக இருந்தாலும் சரி எதையுமேவசூல் செய்யக்கூடாது. ஓராண்டுக்கு எல்லாவற்றையுமே நிறுத்திவைக்க வேண்டும். இப்படி கூறிக் கொண்டிருக்கிற நேரத்தில் அங்கே போலீசாருடன் சென்று கட்டாயவசூல் செய்வது சரியல்ல. எங்கள் பகுதியிலே கடுமையான வறட்சி இருக்கிறது அதைப்போன்றுதான் மற்றப்பகுதிகளிலும் இருக்கும் என்று கருதுகிறேன்.

வைகையில் ஜுன் மாதம் 25-ந்தேதி தண்ணீர் திறந்து விடுவதற்குப் பதிலாக 3 மாதம் கழித்து டிசம்பர் 18-ந்தேதி தான் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இந்த மாதம் 10 தினங்களுக்கு முன்னாலேயே அது நிறுத்தப்பட்டுவிட்டது, அல்லது

நின்று விட்டது. ஒரே ஒரு மாதம்தான் தண்ணீர் கொடுத்திருக்கிறீர்கள். அதனால் அனுபவித்த இலாபம் என்ன என்பதை அரசாங்கம் எண்ணிப்பார்க்க வேண்டும். ஒரு மாதம் தண்ணீர் விட்டதன் காரணமாக விவசாயி தன்னிடம் இருந்த பணத்தை எல்லாம் செலவிட்டுவிட்டு, நிலத்திலே உழைத்துவிட்டு, சாவியை அறுத்துக்கொண்டிருக்கிறான். ஆகவே, சாதாரணமாக தண்ணீர் இல்லாமல் இருக்கும் வறட்சிப் பகுதியைவிட நீங்கள் தண்ணீர் கொடுத்த பகுதி இன்னும் அதிகமாகப்பாதிக்கப்பட்டிருக்கிறது; மக்கள் கஷ்டப்படுகிறார்கள். பயிர் விளையும் என்ற நம்பிக்கையில் கையில் இருந்த பணத்தையும் உரம், விதை மற்ற காரியங்களுக்காகச் செலவிட்டுவிட்டார்கள். அவர்களுக்கு கிடைத்தது சாவிதான். ஆகவே எல்லாப்பகுதிகளையும் வறட்சிப் பகுதிகளாக அறிவித்துவிட்டு, கடன் வசூல், வரி வசூல்களை எல்லாம் நிறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வறட்சி நிவாரணப் பணிகளை உடனடியாகத் தொடங்க வேண்டுமென்றும் போர்க்கால நடவடிக்கைகளைப்போல் செய்ய வேண்டும் என்றும் எனக்கு முன்னாலே பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். போர்கால நடவடிக்கை என்று சொல்லும் போது நம்முடைய நாட்டைப் பாதுகாத்து நிற்கின்ற பட்டாளத்துக்காரர்கள் இங்கே வந்து செய்யவேண்டுமென்று அர்த்தமல்ல. அவர்கள் போர்க்காலத்தில் எப்படிச் செயல்படுவார்களோ அதைப்போன்று இங்கே இருக்கிற அதிகாரிகள் எல்லாம் செயல்பட வேண்டும்; நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு அரசாங்கம் ஆணையிட வேண்டும், என்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுக் கடன் போன்று எந்தக் கடனாக இருந்தாலும் சரி, நிலவரி போன்று எந்த வரியாக இருந்தாலும் சரி எல்லாவற்றையும் ஓராண்டு காலத்திற்கு தள்ளிவைக்க வேண்டுமென்று கேட்டு, முடிந்தால் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, நடந்து கொண்டிருக்கின்ற ஆளுநர் உரையிலே எனக்கு பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மாமன்றத்திலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் வறட்சி, வறட்சி என்று பேசினார்கள். அப்படி வறட்சி, வறட்சி என்று பேசியவர்கள் காலத்திலேயும் வறட்சி வந்தது. அந்த வறட்சியைப் போக்க அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பதைக்காட்டிலும் அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதை அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.



பாதிக்கப்பட்ட மக்களைப் பார்த்து, எலிக்கறி தின்னுங்கள் என்று சொன்னார்கள். ஒரு நாள் பட்டினி கிடக்கச் சொன்னார்கள் வாரத்தில் ஒரு நாள் ஓட்டல்களை மூடச் சொன்னார்கள். இப்படித்தான் அன்றைக்கு நடவடிக்கை எடுத்தார்கள். ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் வறட்சியைப் போக்க நடவடிக்கை எடுத்திருப்பதை மறந்து விட்டார்கள். விலைவாசி ஏறாமல் பார்த்துக்கொண்டும், விவசாயிகள்பாதிக்கப்படாமல் கொள்முதல் செய்தும், அத்தியாவசியப் பண்டங்களை சீராக விநியோகம் செய்தும் மக்கள் வறுமையைப் போக்க பாடுபட்டுக்கொண்டு வருகிறார்கள்.

காங்கிரஸ் கட்சியினர் கூட நிர்வாகச் சீர்கேடு என்று சொன்னார்கள். அவர்கள் காலத்தில் ரஷியாவுக்கு காலணிகள் அனுப்பப்பட்டன. அவர்கள் அனுப்பிய காலணிகள் இடது, வலது என்ற பேதம் இல்லாமல் அனுப்பினார்கள். ரஷியாவுக்குப் போன அந்த காலணிகள் இங்கே திருப்பி அனுப்பப்பட்டன என்பதை அவர்கள் மறுக்க மாட்டார்கள்.

அதைப்போன்று வாழைப்பழம் ஏற்றுமதி செய்தார்கள். அந்த வாழைப்பழங்கள் ஜப்பான் போய் இறங்கும்போது பஞ்சாமிர்தமாகி புழு நெளிந்து. அந்தத் துறைமுகத்தையே நாறடித்தது என்ற செய்திகள் எல்லாம் ஏடுகளிலே வந்ததை அவர்கள் பார்த்திருப்பார்கள் என்று நம்புகிறேன். இப்படி புழுக்களை ஏற்றுமதி செய்தவர்கள் புரட்சித் தலைவர் ஆட்சியைப் பார்த்து ஏதேதோ இப்படி கூறுகிறார்கள்.

நாம் சுதந்திரம் பெற்று ஏறத்தாழ 35 ஆண்டுகள் ஆகிவிட்டன. பாரதமாதா வயிற்றிலே பிறந்த சில பாவாத்மாக்களாக இன்னும் மயானம் செல்ல சாலை வசதி இல்லாமல் இருக்கிறார்களே ஆதிதிராவிட மக்கள். இது யார் செய்த குற்றம்? இதை எல்லாம் 20 ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சியிலோ அல்லது 7 ஆண்டுகால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலோ சீர் செய்திருக்கிறார்களா? அப்போது இந்தக் குறையைப் போக்க முற்பட்டார்களா? இது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் காலத்திலேதான், தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் படிப்படியாக குறைந்து வந்திருக்கிறது என்பதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இது குறித்து மாண்புமிகு உறுப்பினர்களை சிறிது சிந்திக்குமாறு வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சி ஏற்பட்ட பிறகு, தமிழின் பெருமையை, தமிழர்களின் பெருமையை உயர்த்தியிருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்வேன். உலகத் தமிழ் மாநாட்டின் மூலம், சேர சோழ பாண்டிய காலத்திற்குப் பிறகு, தமிழரின் பெருமையை உலக

அறியச் செய்திருக்கிறார்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள். உலகத் தமிழ் மாநாட்டின் மூலம் மதுரை நகருக்கு பல அடிப்படை வசதிகளைச் செய்து தந்திருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்.

மூவேந்தர்களுக்கும், புலவர்களுக்கும் நுழை வாயிலில் சிலை திறக்கச் செய்து தமிழினத்திற்கு பெருமை தேடி தந்திருக்கிறார்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள். மகாகவி பாரதியாரின் நூற்றாண்டு விழாவினை நடத்தி, இந்திய நாட்டுக்கே வழி காட்டியாக விளங்கிக் கொண்டிருப்பவர் எங்களுடைய இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள். சுயமரியாதை பேரொளி தந்தை பெரியார் அவர்களுக்கு நினைவுத் தூண் எழுப்பி சிறப்புச் செய்தவர் எங்களுடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள். மகாகவி பாரதியார் பெயரிலே பல்கலைக் கழகம், பாவேந்தர் பாரதிதாசன் பெயரில் ஒரு பல்கலைக் கழகம், பெண்களுக்கென்று தனியாக ஒரு பல்கலைக் கழகம் இப்படி பெருமையைச் செய்தவர் எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்.

தலை கொடுத்தேனும் தலைநகரைக் காப்பேன் என்ற சிலம்புச் செல்வர் மா.பொ.சி. அவர்களுக்கு சிலை வைத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள். எல்லை போராட்ட வீரர்களுக்கு பெருமை தேடித் தந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள். நீதிமன்றங்களிலே தமிழ் ஆட்சி மொழியாக இருக்க வேண்டியதற்கான நடவடிக்கைகளை எடுத்தவர் எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள். கடன்காரர்களாக ஆக்கப்பட்ட ஏழை விவசாயப் பெருமக்களின் கடன்களை தள்ளுபடி செய்து, அவர்களை வாழ வைத்தவர் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள். தமிழ் புலவர்களுக்கு பணமுடிப்புத் தந்தவர், தமிழ் புலவர்களுக்கு அண்ணா பதக்கம் வழங்கியவர், உச்சவரம்பு சட்டத்தை தீவிரப்படுத்தியவர், வீட்டுக்கு ஒருவருக்கு வேலை வாய்ப்பு என்று முனைந்து செயல்படுபவர், இன்னும் இதுபோன்ற கணக்கற்ற நற்பணிகளைச் செய்தவர் எங்களுடைய இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்.

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அரசு நிர்வாகத்திலே 50 சதவீதம் ஒதுக்கி, அவர்கள் வாழ வழி வகுத்தவர் புரட்சித் தலைவர் அவர்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, தேர்தல்களில் ஒன்றியங்களில் தனி தொகுதிகள் ஒதுக்கி அண்ணல் அம்பேத்கார் அவர்களின் எண்ணத்தை ஈடேற்றியவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள். தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் சாந்தி அடிகள் கண்ட ராமராஜ்ஜியத்தை நிறுவிக்கொண்டிருப்பவர் எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள். இந்திக்கு இங்கே இடமில்லை என்று வரையறுத்துக் கூறியவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள். குடிசை வாசிகளுக்கு



மின் விளக்கெரிப்பு. குடித்தண்ணீர் தட்டுப்பாடு போக்க கை பம்பு இப்படிப்பட்ட நல்ல காரியங்களை இந்த நாட்டுக்கு அளித்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்.

மாண்புமிகு உறுப்பினர் செஞ்சி இராமச்சந்திரன் அவர்கள் பேசுகிறபோது, தமிழகத்திலே தன்னிறைவுத் திட்டத்திலே ஊழல் என்றார்கள். அவர்கள் ஆண்ட காலத்தில் என்ன மல்லிகை பூவா மணந்தது என்று கேட்க ஆசைப்படுகிறேன். மத்திய செய்தி துறை இலாகா, அவர்கள் செய்த ஊழலையெல்லாம், ஒரு நாள் முழுவதும் தண்டோரா போட்டதை அவர்கள் அறியவில்லையா என்று கேட்க ஆசைப்படுகிறேன். ஊழல் ஊழல் என்று சொல்லுகிறவர்களை கேட்கிறேன், வீராணத்திலே ஊழல், கோதுமையிலே ஊழல், குடிசை மாற்று வாரியத்திலே ஊழல், அரிசி பேரத்திலே ஊழல், சர்க்கரை பேரத்திலே ஊழல், நாற்றம் அடிக்கும் கூவத்தை விட்டார்களா, கூவத்திலேயும் ஊழல் இப்படிப்பட்ட .............(குறுக்கீடு)

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர், அவர் ஸ்பெசிஃபிக்காக குறிப்பிட்டுச் சொல்கிறார். பதிலளிக்க அனுமதி........

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. பாலசுப்பிரமணியன் :** அவர் ஊழல் என்று சொன்னாரே தவிர, யார் என்று எதுவும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. யார் என்று சொன்னால் தலையிடலாம்.........

**திரு. அ. ரகுமான்கான் :** அவர் குற்றச்சாட்டுகளை ஸ்பெசிஃபிக்காக சொல்லுகிறபோது, அதை மறுத்துக் கூறுவதற்கு கடமைப்பட்டிருக்கிறேன். ஸ்பெசிபிக்காக, தன்னிறைவுத் திட்டத்தைப் பற்றி, செஞ்சி இராமச்சந்திரன் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் ஊழல் என்று குறிப்பிட்டு. அதனால் அவர்களைக் கேட்கிறேன் என்று ........

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, அவர்கள் அப்படி சொல்லியிருந்தால், அதை மறுக்க வேண்டிய அவசியம்இருந்தால், மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு இன்னும் பேசுவதற்கு நிறையவாய்ப்பிருக்கிறது. இன்னும் இரண்டு நாட்கள் விவாதம் நடக்கவிருக்கிறது, அப்போது அவர்கள் குறிப்பிட்டுப் பேசலாம்' இப்போது இடையிலே கருத்து தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை.

**[1983 ஜனவரி 29**

**(பிற்பகல் 1-20)**

திரு அ. ரகுமான்கான்: மாற்றுத்தலைவர் அவர்களே, குற்றச்சாட்டு சொல்கின்றபோது மறுக்கின்ற உரிமை எங்களுக்கு இருக்கின்றது.

திரு. ஆர். மணிமாறன்: யாரையும் குறிப்பிட்டு திரு மாரிமுத்து அவர்கள் குற்றச்சாட்டு சொல்லவில்லை. இன்னார் என்று அடையாளம் காட்டிப் பேசவில்லை. அவர் சொல்கின்ற பிரச்சினை இன்றைக்குச் சொல்கின்ற பிரச்சினை அல்ல. ஏற்கெனவே அந்தப் பிரச்சினை சொல்லப்பட்டதுதான்....

திரு. அ. ரகுமான்கான்; ஊழல் என்று சொல்லுகின்றபோது அதிலே எப்படி....

மாண்புமிகு மாற்றுத்தலைவர்: (திரு க. பாலசுப்பிரமணியன்): அவர்கள் யாரையும் குறிப்பிட்டு யார் பேரிலேயும் அந்தக் குற்றச்சாட்டைத் திணிக்கவில்லை. இன்னார் செய்தார்கள் என்று சொல்லவில்லை.

திரு த. மாரிமுத்து: மாற்றுத்தலைவரவர்களே, மற்ற உறுப்பினர்கள் பேசுகின்றபோது அவர்கள் ஊழல் என்று சொன்னதால்தான் நானும் ஊழல் என்று சொல்லவேண்டிய நிலைமை ஏற்பட்டது. இப்படி ஊழலிலே வளர்ந்து ஊழலிலே....

திரு அ, ரகுான்கான்: அவர்கள் குற்றச்சாட்டு சொல்கிறபோது அதற்கு நாங்கள் பதில் சொல்லியாக வேண்டும்.....

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பதில் சொல்ல வேண்டும் என்றால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர் பேசுகின்றபோது அதற்குரிய வாய்ப்பு இருக்கின்றது. அதற்குரிய விதிமுறைகள் இருக்கின்றன. எனவே விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உட்காருவதுதான் நியாயம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மாற்றுத்தலைவர் அவர்களே, அவர்கள் குற்றச்சாட்டு சொல்வது குறிப்பிலே வருகின்றது. எனவே அதற்கு பதில்....

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாற்றுத்தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் திரு. செஞ்சி இராமச்சந்திரன் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே தன்னிறைவுத் திட்டத்திலே ஊழல் என்று சொன்னார்கள். அப்படி அவர்கள் பேசும்போது எங்கே ஊழல் நடந்தது என்றும் எப்படி நடந்தது என்றும் குறிப்பிட்டுச் சொல்லி இருந்தால் அது இந்த அரசுக்கு உதவிகரமாக இருந்திருக்கும். ஆனால் அவர்கள் பொதுவாக ஊழல் நடந்திருக்கிறது என்பதைப் பற்றித்தான் பேசினார்கள். அதேபோல்தான் மாண்புமிகு உறுப்





பினர் திரு. மாரிமுத்து அவர்களும் பொதுவாகத்தான் சொன்னார்களே தவிர திரு. ரகுமான்கான் அவர்கள் செய்துவிட்டார்கள் என்றோ திராவிட முன்னேற்றக் கழகம் செய்துவிட்டது என்றோ குறிப்பிட்டுச் சொல்லவில்லை. ஆனால் திரு. ரகுமான்கான் அவர்கள் இதிலே குறுக்கிடுகின்ற நோக்கம் புரிகின்றது. எனவே குறுக்கீடு இல்லாமல் திரு மாரிமுத்து அவர்களைப் பேச அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. அ. ரகுமான்கான்: துணைத்தலைவர் அவர்களே, ஊழல் என்பதில்....

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மறுப்பு சொல்லவேண்டும் என்றால் அவர்களுக்குப் பேச வாய்ப்பு வருகின்றபோது சொல்லிக்கொள்ளலாம். இப்படி அடிக்கடி குறுக்கிட வேண்டும் என்றால் பிறகு வரிக்கு வரி குறுக்கிட்டுத்தான் ஆகவேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டுவிடும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ராசமாணிக்கம் அவர்கள் குற்றச்சாட்டு சொல்கிறபோது நாங்கள் ஒன்றும் சொல்லவில்லை.

திரு. அ. ரகுமான்கான்: துணைத்தலைவர் அவர்களே, எங்கள் ஆட்சியின் மீது குற்றச்சாட்டுகள் சொல்லி இருக்கிற..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அவர்களுக்கு வாய்ப்பு வரும்போது பேசலாம். இப்போது தயவுசெய்து அமைதியாக அமரவேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் இவ்வளவு தூரம் பிடிவாதம் செய்யவேண்டியது இல்லை. பல் வேறு குற்றச்சாட்டுகளை அவர்களும் சொல்லி இருக்கிறார்கள், அதற்கு பதில் சொல்கின்ற பொறுப்பினை மாண்புமிகு முதல்வர் அவர்களும் ஏற்றுக் காண்டிருக்கிறார்கள். ஆனால் இப்போது திரு. மாரிமுத்து அவர்கள் பேசியதில் குறிப்பிட்டு யாரையாவது சொன்னால் மறுப்புச் சொல்ல வாய்ப்பு வேண்டும் என்று சொல்லலாம். ஆனால அவர்களோ பொதுப்படையாகத்தான் பேசுகிறார்கள். எனவே அடுத்துப் பேசுகின்ற உறுப்பினர்கள் பலபேர் இருக்கிறார்கள். அவர்கள் அப்போது பதில் சொல்லிக்கொள்ள வாய்ப்பு இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. த. மாரிமுத்து: இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்கு பல நல்ல திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறார்கள். இதிலே சத்துணவுத் திட்டம் ஒரு சத்தான திட்டம். உலகமே வியந்து பாராட்டும் திட்டம் பொன்மனச்செம்மலின் இந்த புரட்சிகரமான திட்டத்தின் மூலம்

வறுமையில் வாடும் ஏழை குழந்தைகள், வயது முதிர்ந்த பெரியோர்கள் வயிறு ஆர உண்டு வாழ்த்துகிறார்கள், வணங்குகிறார்கள், நானும் புரட்சித் தலைவரின் பாதம் தொட்டு வாழ்த்தி வணங்கி நன்றி கூறி விடைபெறுகிறேன்.

திரு. ஏ. எம். சேதுராமன்: பேரன்புமிக்க துணைத் தலைவர் அவர்களே, 1983 ஆம் ஆண்டு 24ஆம் தேதி ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்து, கொண்டு வந்திருக்கும் இந்தத் தீர்மானத்தின் மீது பேச விழைகிறேன். 1-7-82 முதல் கிராமங்களுக்கு சத்துணவு திட்டத்தையும், 15-9-82ல் நகர்புற பகுதிகளுக்கு அதே சத்துணவு திட்டம் குழந்தைகளுக்கு மதிய இலவச உணவு அளிக்கப்பட்டது என்பது இந்த நடு அறிந்த உண்மை. இத்திட்டத்தின் மூலம் ஒரு லட்சத்து நாற்பதாயிரம் பேர் வேலைவாய்ப்பு பெற்றிருக்கிறார்கள் என்று இந்த குறிப்பிலே ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. அது வரவேற்கத் தக்கது என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். அப்படி ஒரு லட்சத்து நாற்பதாயிரம் பேர்கள் வேலை வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள் என்று சொல்கிறபோது வெகுவாக பெண்கள் அதில் பங்கு பெற்றிருக்கிறார்கள் என்பதை நாங்கள் சொல்லி பெருமைப்படுகிறோம்.

ஆனால் அதேபோல் சென்ற 15.1-83 முதல் முதியோர்களுக்கும் சத்துணவுத் திட்டம் அளிக்கப்பட்டது. முதியோர்கள் வாயார வாழ்த்துகிறார்கள். கிராமத்தில் இருக்கிற மக்கள் நல்லதொரு அரசு என்று இந்த புரட்சித்தலைவரின் அரசை வாழ்த்துகிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சத்துணவுத் திட்டத்தைப்பற்றி எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் பேசுகிறபோது இது சத்துணவுத் திட்டம் அல்ல என்பதை குறை சொல்லி பேசுகிற ஒரு நிலைமையை இங்கே நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அவர்கள் எந்த திட்டத்தைக் கொண்டு வருவதாக இருந்தாலும் குறை சொல்கிறார்கள். சத்துணவுத் திட்டத்தைப் பற்றி குறை சொல்வதற்கு அவர்களுக்கு யோக்யதை இருக்கிறதா என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். சத்துணவுத் திட்டம் எதிர்காலத்தில் நல்லபடியாக செயல்பட்டு வருமானால் அதற்கு பொதுமக்களும் ஆட்சியும் நல்லதொரு ஒத்துழைப்பும் தருவோமானால் வருங்காலத்தில் ஒரு அமெரிக்காவைப் போன்று தமிழகத்தையும் காணமுடியும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். வரும் நிதி ஆண்டில் படிப்படியாக இந்த சத்துணவுத் திட்டத்தின் மூலம் குழந்தைகளுக்கு உணவோடு சேர்த்து பாலையும் அத்தோடு முட்டையும் கொடுக்க வேண்டும். அந்த திட்டம் நல்லதொருதிட்டம். இதற்காக ரூபாய் 112 கோடி செலவிட்டாலும்கூட எதிர்காலத்தில் அல்லது வருங்காலத்தில் இதற்காக மேலும் ஒரு 10-20 கோடி ரூபாய் ஒதுக்கி ஏழைகளுக்கு கிராமத்தில் அரிசி உணவு கிடைத்தாலும் முட்டையும் பாலும் கிடைப்பது அரிதாக இருக்கிறது. ஆகவே சத்துணவோடு பாலையும் முட்டையும் சேர்த்து கொடுக்கவேண்டும், அங்கே கிடைக்கிற



உணவை அந்த குழந்தைகளுக்கு எளிதாக கிடைக்கக்கூடிய வகையில் வாய்ப்பை ஏற்படுத்தித்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஒவ்வொரு கிராமத்திற்கும் கழிப்பிடங்கள் கட்டுவதற்கு 2.56 கோடி ரூபாயை தமிழக அரசு ஒதுக்கியிருப்பது வரவேற்கத் தக்கது. கிராமத்தில் இருக்கிற வசதி இல்லாதவர்கள் கழிப்பிடங்களுக்கு செல்வதற்கு வசதியாக இதை செய்திருப்பதை எண்ணி மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களுக்கு உள்ளபடியே என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கிராம மக்களும் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறார்கள்.

அந்தவகையில் இப்போது தன்னிறைவு திட்டம் என்று கிராமம் பூராவும் எடுத்து செய்து முடிக்கப்பட்டிருந்தாலும் கூட பேரூராட்சிக்கு இன்னும் 10 கோடி ரூபாயை ஒதுக்கி இந்த திட்டத்தின் மூலம் பேரூராட்சி நிறைவு பெறவேண்டும் என்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இது வரவேற்கத்தக்கது. இது எந்த ஒரு ஆட்சியாலும் எந்த காலத்திலும் செய்யமுடியாது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் ஒவ்வொரு பின்தங்கிய நகராட்சிகளுக்கும் ரூபாய் 25 லட்சம் ஒதுக்கீடு செய்து அந்த முன்னேற்றம் செய்வதற்கு தன்னிறைவு திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இப்போது வறட்சியால் 190 கோடி ரூபாய் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்று மதிப்பீடு செய்து மத்திய அரசுக்கு தமிழ் நாடு அரசு அனுப்பியிருக்கிறது. இது வரவேற்கத்தக்கது. இதில் ஏதோ தாமதம் ஏற்பட்டிருக்கிறது என்று எதிர்க் கட்சியிலிருப்பவர்கள் காங்கிரஸ்காரர்கள், தி.மு.க.காரர்கள் குறை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அலுவல் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

திரு. ஏ. எம் சேதுராமன்: வறட்சி நிலைப்பற்றி அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்களிடமிருந்தும் அறிக்கைகளைப் பெற்று 190 கோடி ரூபாய் அளவுக்கு உதவி மதிப்பிடப்பட்டு இருக்கிறது. 15 கோடியை முன்னால் வறட்சிக்காக வாங்கியவர்கள் எவ்வளவோ பெருமைப்பட்டுக்கொண்டார்கள். இப்போது 190 கோடி ரூபாய் கேட்டிருக்கிறோம். அதிலே 150 கோடியாவது கொடுக்க அவர்கள் முன்வந்தால் தமிழ்நாட்டிலே உள்ள வறட்சியைத் தீர்க்க முடியும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஒன்று வரப்போவதாகவும், அதற்கு மத்திய அரசின் அங்கீகாரம் கிடைத்திருக்கிறது என்றும் ஒரு நல்ல செய்தியைத் தெரிவித்திருக்கிறார்கள். தமிழகத்தில் அநேக மாவட்டங்களில் பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. தமிழ்ப்பல்கலைக் கழகம் வந்திருக்கிறது. பாரதியார் பல்கலைக்கழகம் வந்திருக்கிறது. ஆனால் எங்களுடைய மாவட்டமான வட ஆற்காடு மாவட்டத்தில் இல்லை என்ற குறை இருக்கிறது. ஆகவே தயவுசெய்து மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் வேளாண்மைப் பல்கலை கழகத்தை வட ஆற்காடு மாவட்டத்திலே கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதுபோன்ற ஒரு கருத்து ஏற்கெனவே இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, அரிசி ஆலைகளைப் பொறுத்தவரைக்கும் மின் கோட்டா என்று வைத்து குறைந்த அளவுக்கு அரைக்கப்படும் என்று சொல்லி இருக்கிறார்கள். 20,25 எச்.பி. என்று குறைந்த அளவிலே உள்ளவைகளுக்கு கோட்டா சிஸ்டம் என்று கொண்டு வராமல் 25 எச்.பி.க்கும் அதிகமாக உள்ளவர்களுக்குக் கொண்டு வந்து மற்றவர்களுக்கு விதிவிலக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 31-1-1983 அன்று திங்கட்கிழமை பேரவை காலை, மாலை இரண்டு வேளையும் கூடும். பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 31-1-1983 காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1,32 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

125 தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு கள் விதிகள் மற்றும் தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு சாராய(சில்லறை விற்பனைக் கடைகள்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 29-3-1982 ஆம் தேதியிடப்பெற்ற மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையின் 216 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

126. பண்ணை முதல்வர் தனியுரிமைக்கூறு விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து 15-4-81 ஆம் தேதியிடப்பெற்ற வன மீன் துறையின் 439 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1882 ஆம் ஆண்டு வனச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 64 ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.)

(ஆ.) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் கூடும் ஏழாவது சட்ட மறுப் பேரவையின் ஆறாவது கூட்டத்தொடர்

உள்ளடக்கம்


31–1–83 பக்கங்கள்

1. வினாக்கள்-விடைகள்—
உடுக்குறியிட்ட வினாக்கள் 419—457

2. தகவல் கோரல்—
(அ) உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு அளித்தல் 457—458
(ஆ) முன் அனுமதியின்றி எழுப்பப்பெறும் பிரச்சனைகள் 458

3. கவன ஈர்ப்பு—
அம்மாஸ்டிவிளையிலுள்ள கயிறு ஆலை மூடப் பெற்றுள்ளது. 458—463

4. அறிக்கை அளித்தல்—
உரிமைக் குழுவின் அறிக்கை

5. அறிவிப்பு—
மதுவிலக்கு திருத்தச் சட்ட முன்வடிவு 1983 (ஆ,இ) 463

6. அரசினர் சட்டமுன்வடிவுகள்—
(அ) மதுவிலக்கு திருத்தச் சட்ட முன்வடிவு 1983 464
(ஆ) சென்னை உயர்நீதிமன்ற (விசாரணை அதிகாரவரம்பினை) நீட்டித்தல் சட்ட முன் வடிவு, 1983 465—460

7. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—
விவாதம் (தொடர்ச்சி) 467—639
திரு. துரைமுருகன் 496—68
திரு. எஸ். ஜகத்ரட்சகன் 482—488
திருமதி டி. யசோதா 488—496

| | |
|---|---|
| திரு. ஜே. சி. டி. பிரபாகரன் | 497—505 |
| திரு. ப. நெடுமாறன் | 505—519 |
| திரு. எம். செல்லமுத்து | 519—523 |
| திரு. ஆ. வெள்ளைச்சாமி | 523—527 |
| திரு. செ. சிவசாமி | 528—533 |
| திரு. ஏ. டி. குலசேகர் | 533—535 |
| திரு. பி. துரைராஜ் | 535—540 |
| திரு. ஆர். டி. கோபாலன் | 540—542 |
| திரு. டாக்டர் கே. சௌரிராஜன் | 542—550 |
| திரு. கோ. விஸ்வநாதன் | 505—55 |
| திரு. பாபு ஜனார்த்தனன் | 559—566 |
| திரு. ஏ. தங்கராசு | 566—568 |
| திரு. கே. தனுக்கோடித் தேவக் | 568—571 |
| திரு. என், எமு. வி. சித்தன் | 572—589 |
| திரு சேலம் மு. ஆறுமுகம் | 589—595 |
| திரு. மு. ஜான் விஞ்சென்ட் | 595—600 |
| திரு. மு. அப்பாதுரை | 601—607 |
| திரு. த. வீராசாமி | 608—612 |
| திரு. ஏ. சாகுல் ஹமீது | 612—618 |
| திரு. பெ. திருமாறன் | 618—622 |
| திரு. ஜே. எஸ், இராசு | 622—629 |
| திரு. எஸ். சிவராமன் | 629—635 |
| திரு. எ . பழனிவேல் | 635—639 |
| (பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்) | 639 |


# தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை

திங்கட்கிழமை 1983 சனவரி 31

தை 18, துந்துபி —திருவள்ளுவர் ஆண்டு 2014

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9·00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்

''நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய
வாயினர் ஆதல் அரிது''

நுட்பமான பொருள்களைக் கேட்டு அறிவினை வளர்த்துக் கொள்ளாதவர், வணக்கமான சொற்களைப் பேசும் வாயினை உடையவராக இருத்தல் இயலாது.

## 1. வினாக்கள் விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

வாலிநோக்கம் மீன்பிடி துறைமுகம்

*வினா எண் 61—திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாலிநோக்கம் மீன்பிடி துறைமுக கட்டுமானத்திற்கு நிதி எவ்வளவு ஒதுக்கப்பட்டுள்ளது?

(ஆ) அந்தப் பணி எப்போது முடிவு பெறும்?

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன்: (அ) மற்றும் (ஆ): மத்திய அரசு 77,00,000/ செலவில் இத்துறைமுக கட்டுமான பணியை மேற்கொள்ள இவ்வாண்டு பிப்ரவரி திங்களில் ஒப்புதல் அளித்தது. இதில் 50 சதவீத செலவினத்தை மத்திய அரசும் மீதமுள்ள 50 சதவீத செலவினத்தை மாநில அரசும் ஏற்கும். இப் பணியினை விரைவில் துவங்கிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கட்டுமானப்பணி துவங்கப்பட்டு இரண்டு ஆண்டுகளில் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது.

திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1980 ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில்

வாலிநோக்கத்தில் சிறிய மீன்பிடி துறைமுகம் அமைப்பதற்காக ரூ. 11 இலட்சம் மாநில அரசால் ஒதுக்கப்பட்டது. அந்தப்பணி இதுவரையில் துவக்கப்படாமல் இருக்கிறது. அதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் கூறுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாலிநோக்கம் திட்டத்திற்கு மத்திய அரசினுடைய ஒப்புதலைப் பெறுவதற்காக காத்திருந்தோம். மத்திய அரசு சென்ற ஆண்டு ஒப்புதலைத் தந்தது. முதலில் 60 இலட்சம் ரூபாய் என்று கணக்கிட்டோம். அவர்கள் ஒப்புதல் கொடுத்தபோது அதனுடைய மதிப்பீடு 77 இலட்சம் ரூபாய் வருகிறது என்று கருதி அதற்கு மத்திய அரசு ஒப்புதல் தந்தது. அதற்கு பிறகு விலைவாசிகள் உயர்வின் காரணமாக அண்மையில் 94·32 இலட்சம் ரூபாய் ஆகுமென்று கணக்கு சொல்லப்பட்டிருக்கிறது. அந்த 94.32 இலட்சம் ரூபாய்க்கான அனுமதி வேண்டும். அதிலே 50% மத்திய அரசும் 50% மாநில அரசும் செலுத்த வேண்டும்.

செடி, மரங்களை அழித்து நிலம் சமப்படுத்தும் வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மீனைப்பதப்படுத்தும் கூடத்திற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர மீன்பிடி துறைமுகம் அமைக்கும் இடத்தை மண்கூட்டி தயார் செய்யவும் பற்றுச்சுவர் கட்டவும் ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் நாம் ஓரளவிற்கு செலவழித்தாலும் நம்முடைய 50 சதவீதத்திலே சரிக்கட்டப்படும். மத்திய அரசிடத்திலே 50 சதவீதம் கோரப்படும்,

**திரு. வ. சத்தியமூர்த்தி:** பேரவைத் தலைவர் அவர்களே, வாலிநோக்கம் சிறிய மீன்பிடி துறைமுகத்திற்கு ஒரு திட்டமும் சிறிய கப்பல் துறைமுகத்திற்கு ஒரு திட்டமும் தனித்தனியாக அங்கீகரிக்கப்பட்டு நிதி அளிக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு திட்டங்களும் ஒரே இடத்தில் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளது. இந்த இரண்டு திட்டங்களையும் ஒருங்கிணைத்து ஒரே முறைப்படி செயல்படுத்துவதற்கு அரசு ஆய்வு செய்து ஆணை பிறப்பித்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன்பிடித் துறைமுக கட்டுமானம் பற்றியுள்ள கேள்வியாக இருப்பதால் அதுபற்றி விவரங்கள் மட்டும் உள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்க்சேஸ்வீ போட்டால் இரண்டினுடைய நிலைமை என்ன என்பதைத் தெரிவிக்க இயலும்





பிரமலை கள்ளர்களுக்கு வீடுகட்ட வழங்கப்படும் தொகை

*வினா எண். [illegible]2—**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிரமலை கள்ளர்களுக்கு ஒரு நபருக்கு வீடு கட்ட எவ்வளவு பணம் இனாமாக அரசு கொடுக்கிறது?

(ஆ) இதில் அம் மக்களின் பங்காக எவ்வளவு பணம் கட்டப்பட வேண்டும்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) மற்றும் (ஆ) பிரமலைக் கள்ளர்களுக்கு கட்டப்படும் வீட்டின் மதிப்பீடு ரூ. 4,300 ஆகும், இதில் ரூ. 3,225 அரசு மானியமாகவும் ரூ. 1,075 வீடு கட்டிக் கொள்கிறவர்களின் பங்காகவும் இருக்கும்.

**திரு. சோ. அழகர்சாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த வீடு கட்டுகிற திட்டத்திலே அவர்கள் முன்கூட்டி தாங்கள் கட்ட வேண்டிய 1,075 ரூபாயை கட்டிவிட வேண்டுமென்றும், இதை காண்ட்ராக்ட் முறை மூலமாகத்தான் கட்டவேண்டுமென்றும் ஒரு முறை இருப்பதால் பலபேர்கள் இதனை பயன்படுத்த முடியவில்லை. ஆகவே 4,300 ரூபாய் எஸ்டிமேட்டிலே கட்டுகிற வீடுகள் எஸ்டிமேட்டினுடைய அளவிற்குள் கட்டிக் கொடுக்கிற நிலையை அனுமதித்து 3,225 ரூபாயை சொந்தமாக கட்டுகிறபோது அவர்களுக்கே பணம் கொடுப்பதற்கான ஏற்பாட்டை அரசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, வீடு கட்டுவதற்கு 4,300 ரூபாய் ஆகுமென்று முன்பு கணக்கெடுத்து அதிலே நான்கில் ஒரு பங்கினை வீடு கட்டுகிறவர்கள் தரவேண்டுமென்றும், மீதி மூன்று பங்கினை அரசு மானியமாகத் தரும் என்றும் நாம் குறிப்பிட்டிருந்தோம். இப்போது ரூ. 4300—ல் அத்தகைய வீடுகள் கட்டுவதற்கு சிரமம் என்பதால் ரூ. 5,600 ஆகுமென்று கூறப்பட்டிருக்கிறது. அதிலே அரசினுடைய பங்கு 4,200 ரூபாயாக இருக்கும். அவரவர்கள் தனியாக கட்ட வேண்டியது ரூ. 1,400 ஆக அமையும். அவர்கள் நான்கில் ஒரு பங்கு கட்டுகிற சூழ்நிலையில் அரசு மூன்று பங்கினைத் தரும். இப்போது அரிசன வீட்டு வசதி வாரியத்திலேரே கட்டுகிற சூழ்நிலையைத்தான் பெற்றிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போல மாற்றம் செய்வதனால் நலம் ஏற்படும் என்றால் அதுபற்றி ஆலோசிக்கலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரமலைக் கள்ளர்களுக்கு வீடுகட்டும் இந்தத் திட்டத்தின் கீழே எவ்வளவு ரூபாய் ஒதுக்கப்பட்டது? எத்தனை பேருக்குக் கொடுக்கப்பட்டது என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றிய முழு விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. எம். செல்லமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது அரிசனங்கள், பிரமலைக் கள்ளர்கள் வீடு கட்டும் திட்டத்திலே குறிப்பிட்ட அளவு, அதாவது பேஸ் மட்டம் வரை அவர்கள் கட்டிய பின்புதான் நிதி ஒதுக்கப்படுகிறது. இதனால் ஏற்கனவே அவர்கள் செய்யவேண்டிய வேலையில் சுணக்கம் ஏற்பட்டு அந்த நிதியைப் பெறமுடியாத சூழ்நிலையிருக்கிறது. ஆகவே அதைப் பரிசீலனை செய்து மாற்ற அரசு முயற்சி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, வீடு கட்டுகிறவர்கள் தங்களுக்குரிய கஷ்டங்களை எடுத்துத் தெரிவிப்பார்களானால், அந்த கஷ்டங்களை எந்த வகையிலே போக்கலாம் என்று அரசு ஆராய்ந்து, போக்க ஆவன செய்யும். ஆனால் எப்பொழுதும் அவர்கள் பங்கு 1/4 பங்கு அதனைத் தருகின்ற முயற்சியிலே அவர்கள் ஈடுபடவேண்டும். மீதி 3/4 பங்கை அரசு தருவதிலே எந்தவித இடர்பாடு அல்லது சங்கடம் ஏற்பட வழியில்லை. அவர்களுக்கு ஏதாவது சங்கடம் இருந்தால், என்ன சங்கடம் என்று தெரிவிப்பார்களானால், சங்கடத்தை எப்படிப் போக்கலாம் என்பதை அரசு ஆராயும்.

### தமிழ்நாட்டில் பள்ளிக் கட்டடங்களை கட்ட அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடனுதவி பெறும் திட்டம்

*வினா எண். 65—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உயர்நிலைப்பள்ளி, உயர் செகண்டரி பள்ளி கட்டடங்களைக் கட்டுவதற்கு அரசுடைமையாக்கப்பட்ட பாங்குகள் மூலம் கடனுதவி பெற அரசு செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆம்.

திரு. என். எ. வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே பல்வேறு இடங்களிலே, அரசு உயர் நிலைப் பள்ளி. மேல்நிலைப் பள்ளிகளிலே மாணவர்கள்


வினாக்கள்—விடைகள் 425


எண்ணிக்கைக்குத் தகுந்த அளவிலே போதுமான கட்டிடங்கள் இல்லாமல் மர நிழலிலே, வெயில் காலங்களிலும் வகுப்புகள் நடத்தவேண்டிய சிரமம் ஏற்பட்டிருக்கிறது. இதற்குப் போதிய பணவசதி இல்லாத காரணத்தாலே, அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலே பணம் கேட்கப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எவ்வளவு கேட்கப்பட்டது? எவ்வளவு கொடுக்கப்பட்டது? அந்தத் திட்டத்தின் கீழே கட்டிடங்கள் கட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளில் குறைந்தபட்ச வசதிக்காக மட்டும் நமக்குத் தேவையான நிதி சுமார் ரூ. 91 கோடியாகும். அதைப்பற்றி நாம் தமிழ்நாட்டிலே உள்ள தேசீய வங்கி பிரதம அதிகாரிகளிடம் இரண்டு தடவை பேசி, அதற்கான ஏற்பாடு செய்தோம். அவர்களும் ஒரு அதிவிரைவு திட்டத்திற்கு ஒப்புதல் தந்து 1982—83ல் ஒவ்வொரு வங்கிக்கும் ரூ 2.5 இலட்சம் என்ற கணக்கில் 20 வங்கிகள் ரூ. 50 இலட்சம் தொகையை முன்னதாக அளிப்பது என்றும் அரசுப் பள்ளிக் கட்டிட கட்டுமானக் கழகம் ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்றும் யோசனை தெரிவித்தார்கள். அதற்குப் பிறகு வட்டிப் பிரச்னை வந்தது. நாங்கள், மற்றவர்கள் தருவதைப் போல் வட்டி தர முடியாது, இது ஒரு முக்கியமான காரியமாக இருப்பதால், குறைந்தபட்ச வட்டியான 4 சதவீதம் வட்டிக்குத் தர வேண்டுமென்று கேட்டோம். அதற்கு அவர்கள் ரிசர்வ் வங்கி அனுமதி இல்லாமல் தர முடியாது என்று சொன்னார்கள். நாம் ரிசர்வ் வங்கி நிர்வாகிகளைச் சந்தித்து கேட்டோம். அவர்கள் தர முடியாது என்று சொல்லிவிட்டார்கள். இப்போது மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம். 4 சதவீதம் வட்டிக்கு ரிசர்வ் வங்கி அனுமதி அளிக்க வேண்டுமென்று ரிசர்வ் வங்கிக்கு அறிவுறுத்துமாறு டெல்லி அரசைக் கேட்டிருக்கிறோம்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள், பல இடங்களில் போதிய கட்டிட வசதியில்லாமல், குறிப்பாக கோவில்பட்டி பெண்கள் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் ஆயிரக்கணக்கான மாணவியர்கள் படிக்கிறார்கள். மரத்தின் நிழலிலே படிக்கிறார்கள். வட்டி வீதம் கொஞ்சம் அதிகமாக இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

(முற்பகல் 9—10)

இதைக் கொஞ்சம் வற்புறுத்திப் பெற்று, இம்மாதிரி கட்டிட வசதிகள் இல்லாத பள்ளிகளுக்குக் கட்டிடம் கட்டுவதற்குத் தீவிரமாக முயற்சியை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1983 ஜனவரி 31

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நாம் மத்திய அரசுக்கும், நிதியமைச்சருக்கும், திட்டத் துறையினருக்கும் இந்த அரசின் சார்பிலே கடிதம் எழுதியிருக்கிறோம். இதை வற்புறுத்திக் கடிதம் எழுதியிருக்கின்றோம்.

திரு. நி. அன்பழகன்: பேரவைத் தலைவரவர்களே, தன் நிறைவுத் திட்டத்தின் மூலமாகத் தொடக்கப் பள்ளிகளுக்கான கட்டிடங்கள் தமிழகம் முழுவதும் சிறப்பாகக் கட்டி முடிக்கப் பட்டிருக்கின்றன, இதைப்போல தமிழகம் முழுவதும் உள்ள உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் ஆகியவைகளுக்கும் குறிப்பிட்ட கால வரையறைக்குள் கட்டிடம் கட்டி முடிப்பதற்கு அரசு செயல் திட்டம் வகுப்பதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்; மாண்புமிகு தலைவரவர்களே, அப்படியொரு சிறப்புத் திட்டம் போடப்பட்டு அதற்கான நிதி உதவி பெறத்தான் நாம் வங்கிகளை நாடினோம். இப்பொழுது அந்த நிதி பெறுவதிலே உள்ள சிக்கல்களைப் பற்றித்தான் நான் எடுத்துச் சொன்னேன். மத்திய அரசு, கல்விக்காக, பள்ளிக் கூடங்களுக்காகக் கடன் தருவது அல்லது நிதி தருவதைச் சரியான மூலதனமாக அவர்கள் கருதி உதவி செய்ய வேண்டுமென்று நாம் கேட்டிருக்கிறோம்.

திரு. து. புருஷோத்தமன்: பேரவைத் தலைவரவர்களே, தமிழ் நாட்டிலுள்ள உயர்நிலைப்பள்ளிகள், உயர் செகண்டரி பள்ளிகள் ஆகியவற்றுக்குப் பல இடங்களிலே பெருவாரியான பள்ளிகளுக்கு கட்டிடங்கள் இல்லாத குறை இருக்கின்றது. குறிப்பாக சைதாப்பேட்டையில் உள்ள, ஏறத்தாழ நூற்றாண்டு விழாவே கொண்டாடக்கூடிய அளவில் இருக்கின்ற அரசு மாதிரிப் பள்ளி கட்டிடம் போதிய வசதி இல்லாமல் இருக்கிறது. இதனால் ஆண்டு தோறும் அதிகமான மாணவர்களை அனுமதிக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. அங்கே மரங்கள் நிறைந்திருப்பதால் அந்த மரங்களின் அடியிலே பள்ளிப் பிள்ளைகளை அமர வைத்து பாடம் சொல்லிக் கொடுக்கின்ற நிலைமை இருக்கிறது. அந்தப் பள்ளிக்கூடம் பெரிய பள்ளியாக இருப்பதாலும் நீண்டகாலமாக நல்லமுறையிலே இயங்கி வருவதாலும் ஏதாவது சிறப்புத் திட்டமாவது தீட்டி, அங்கே போதுமான இடவசதி இருப்பதால் அரசினுடைய நிதியிலிருந்து கட்டிடங்கள் கட்டித்தர அவசியம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கடனுதவி பற்றிய கேள்வி. புதிதாகக் கட்டிடம் கட்ட வேண்டுமென்று கேட்டால் இந்தக் கேள்வியில் அமைச்சரவர்கள் எப்படி பதில் கூறுவார்கள்?



1983 ஜனவரி 31]

திரு. து. புருஷோத்தமன்: அவசியம் கருதி கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லாஇடங்களுக்கும் அவசியம் கருதிச் செய்யத்தான் வேண்டும். உறுப்பினரவர்களின் தொகுதிக்கு மட்டும்தானா அவசியம்?

திரு. து. புருஷோத்தமன்: பேரவைத் தலைவரவர்களே, கல்வி எவ்வளவு முக்கியமானது என்பது உங்களுக்கெல்லாம் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லாமே முக்கியமானது தான்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்தக் கட்டிடங்கள் கட்டுவதை நாம் மிக முக்கியமானதாக ஏற்றுக்கொண்ட பிறகுதான் இந்தத் திட்டத்தையே தீட்டியிருக்கிறோம். ஆகவே இந்த அரசு அதன் தேவையை உணர்ந்திருக்கிறது. தேவை சைதாப் பேட்டை பள்ளிக்கா, இன்னொரு பள்ளிகா என்பது பிரச்சனை அல்ல. 96 கோடி ரூபாய்க்கு இப்பொழுது தமிழகத்திற்குத் தேவை இருக்கிறது. ஏறக்குறைய 200 பள்ளிகளுக்கு மேல் கட்டிடமே இல்லாமல் இருக்கின்றன. அதற்குக் காரணம், ஆர்வத்தோடு புதிதாகப் பள்ளிகளை ஆரம்பித்தார்களே தவிர அந்த ஆர்வத்திற்கேற்ப அந்தந்தச் சமயங்களில் கட்டிடங்களையும் கட்டுவதற்கு அன்றைக்கே முனைந்து கட்டியிருப்பார்களேயானால் இவ்வளவு பெரிய பாரமாக இந்த அரசுக்கு வந்திருக்காது. 30 ஆண்டுக்காலத்திற்கு முன்பிருந்து பள்ளிகளுக்கு அனுமதி கொடுத்தார்களே தவிர அதற்கேற்ப கட்டிடங்களைக், கட்டித் தரவில்லை. அதற்கான நிதியை ஒதுக்கவில்லை. நாம் இப்பொழுது அத்தனையையும் சேர்த்துச் செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறோம். துவக்கப் பள்ளிகளுக்குத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாகக் கட்டிடங்கள் கட்டினோம். உயர்நிலைப் பள்ளிகளுக்கும், மேல்நிலைப் பள்ளிகளுக்கும் அப்படியொரு திட்டத்தைத் தீட்டியிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்வி சம்பந்தமாக தொகுதி பற்றிய துணைக் கேள்விகள் கேட்பதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

திரு ஜே.எஸ். இராசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலேயிருந்து கடனுதவி, நிதியுதவி பெறுவதற்கு முன்னால், இருக்கின்ற அவசியத்தைக் கருதி, கல்வித் துறைக்கு நிதி ஒதுக்கும்பொழுது ஒருசில கோடிகளை இந்த ஆண்டு அதிகமாக ஒதுக்கி, புதிய கட்டிடங்களைக் கட்டுவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டு

மென்பதோடுகூட, இயக்குநரகத்திற்கு ஆயரக்கணக்கான பள்ளிகளிலேயிருந்து மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அனுப்பப்பட்டு நீண்டகாலமாக அவைகள் பைசல் செய்யப்படாமல் இருக்கின்றன. ஆகவே, இடைக்காலத் திட்டமாவது திட்டி நிதியுதவி வங்கியிலிருந்து கிடைப்பதற்கு முன்னால் இந்த ஆண்டு கல்வித் துறைக்கு அதிகமான அளவிற்குப் பணம் ஒதுக்கி, பள்ளிக் கட்டிடங்களை இந்த ஆண்டு கட்டுவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பட்ஜெட்டிலே வரவேண்டியதை இப்போதே கேள்வியாக நீங்கள் கேட்க நான் பதில் சொல்லக்கூடிய நிலையிலே இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே காரணத்திற்காக எல். ஐ. சி. நிறுவனத்திடமிருந்தும் நிதியாதாரம் கேட்கப்பட்டதே, அது பலன் அளித்ததா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, எல். ஐ. சி. யிடமும் அணுகி அவர்களும் தருவதற்கில்லை என்று சொல்லிவிட்டார்கள். இது ஒரு முக்கியமான குறைபாடு. மத்திய அரசு கல்விக்காக செலவு செய்வதை ஒரு மூலதனமாக என்றைக்குக் கருதுகிறார்களோ, அன்றைக்குத் தான் இந்தப் பிரச்சினையில் சரியான முடிவு ஏற்படும். இப்போது உலக வங்கி போன்ற நிறுவனங்களிலும் கூட, கல்விக்கு செலவு செய்வதை சிறந்த மூலதனம் என்று ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். உலகிலே உள்ள பல்வேறு நாடுகளிலும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். மனித சக்தியை வளப்படுத்துவ ; மிக முக்கியமான செலவு, மிக முக்கியமான மூலதனம் என்ற இந்தக் கருத்தை மத்திய அரசு ஒரு கொள்கையாக ஏற்றுக் கொள்ளுமானால் அப்போதுதான் இந்தப் பிரச்சினைக்கு விரைவான தீர்வை நாம் காண முடியும். அதையும் நாம் வற்புறுத்தி நமக்குக் கிடைக்கக்கூடிய சந்தர்ப்பங்களிலே எல்லாம் சொல்லி வருகிறோம்.

அரசு உயர்நிலைப்பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள்

***வினா எண். 66 திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை அரசு உயர்நிலைப் பள்ளியாக மாற்றி அங்கு பணியாற்றும் ஆசிரியர்களை 1—4—1970 க்கு பிறகு பதவி உயர்வு (பட்டதாரி ஆசிரியர்) கொடுக்கும் போது பணிக்காலம் முழுமையும் கணக்கிடப்படாமல் இருந்து வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆமெனில் அதன்மீது அரசு எடுக்க இருக்கும் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகள் அரசு உயர்நிலைப்பள்ளிகளாக உயர்த்தப்படும் போது அடிப்படை விதி எண். 130 ஐ அடிப்படையாகக் கொண்டு, அவ்வகுப்பு ஆசிரியர்கள் அரசுப் பணியேற்கும் நாளிலிருந்து அவர்கள் முன்னுரிமை நிர்ணயிக்கப்படுகின்றது. எனவே இதன்மீது நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் எழவில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் ஏற்கெனவே நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் ஏறக்குறைய அரசாங்கப் பள்ளிகளாகத்தான் நடைபெற்றிருந்தன. அவர்கள் உயர்நிலைப் பள்ளிகளுக்கு வருகின்றபோது பதவி உயர்வு கொடுக்கின்ற காலங்களில் அவர்களுடைய சர்வீசை கணக்கிடாமல் இருந்ததால் பல பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்களே, இதை அரசாங்கம் கவனத்தில் கொண்டு, மறுபரிசீலனை செய்யுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது இதுவரையில் இருந்து வருகின்ற நடைமுறை ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலே பணியாற்றியவர்களாக இருந்து, அந்த ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி. உயர்நிலைப் பள்ளியாக ஆகின்றபோது யார் யார் அந்த உயர்நிலைப் பள்ளகளிலே சேருகிறார்கள் என்று பார்த்து, அந்த விருப்பத்தை அறிந்து, அவர்களைச் சேர்த்து அவர்களை இந்த விதி எண். 130—ன் அடிப்படையில், என்றைக்குச் சேருகிறார்களோ அன்றிலிருந்தே, அந்தப் பழைய காலத்தை நாம் வரையறை செய்து வருகின்றோம். இப்போது இருக்கின்ற பிரச்சினை எல்லாம் ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களாக ஆக்கி இருக்கிறோம். ஆகவே அவர்களுடைய பிரச்சினை சம்பந்தப்பட்ட முறையில் விதிகள் உருவாக்கப்பட்டு வருகிறது. அந்த விதிகள் உருவாக்கப்பட்ட பிறகு அவர்களுடைய நிலைமை என்ன, இந்த விதிகள் உருவாக்கப்படுவதற்கு முன்னாலே சேர்க்கப்பட்டவர்கள் யாரேனும் பாதிக்கப்பட்டிருக்கிறார்களா என்று பார்த்து பிறகுதான் இது பற்றி இறுதி முடிவை நாம் எடுக்க முடியும்.

திரு பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, ஏற்கனவே இருக்கின்ற நடைமுறையைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இந்த நடுநிலைப்பள்ளிகளை எல்லாம் அரசாங்கப் பள்ளிகளாக சென்ற ஆண்டு முதல் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக மாறினால் இந்த விதி உடனடியாக மாற்றப்படுமா? அல்லது இப்போது இருக்கின்ற ஏற்பாடு இதற்கு ஒத்து வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களான உடனே அவர்களுடைய நிலைமை என்ன என்பதைக் குறித்த விதிகள்தான் இப்போது பரிசீலிக்கப்படுகிறது, இந்த விதிகள் வந்த உடனே இந்தப் பிரச்சினையிலே சரியான தீர்வு காண முடியும்.

திரு. எல். இளையபெருமாள்: தலைவர் அவர்களே நடுநிலைப் பள்ளிகள் அரசுடைமை ஆக்கப்பட்ட பிறகு, செகன்டரிகிரேடு ஆசிரியர்களாக இருந்தவர்கள் பட்டதாரிகளாக மாறி வேலை வாய்ப்பு கிடைக்க வேண்டிய நிலையில் கிடைக்காமல் இருப்பது பற்றி அரசாங்கத்திற்குப் புகார் வந்திருக்கிறதா? அப்படி வந்த பின்னரும், அங்கே காலி இடங்கள் இருந்தும் இப்படிப்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க அரசாங்கம் உடனடியாக ஆணையிட முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அவர்கள் அரசு அலுவலர்களாக ஏற்கப்பட்டு விட்டார்கள். ஆனால் அவர்களுடைய பணி சம்பந்தப்பட்ட விதிகள் இன்னும் இறுதியாக்கப் படவில்லை. அது இறுதியாக்கப் பட்ட பிறகுதான் அவர்களுடைய பதவி உயர்வு அல்லது அவர்களுடைய பணி மூப்பு போன்ற நிலைகளில் எல்லாம் ஒரு தெளிவை நாம் ஏற்படுத்த முடியும்.

திரு. மு. அப்பாதுரை: தலைவர் அவர்களே, இதேபோன்ற பிரச்சினை முன்னாலே ஜில்லாபோர்டு பள்ளிகள் அரசுடைமையாக்கப்பட்டபோது ஏற்பட்டது. அதேபோன்று இந்தப் பிரச்சினைகளிலேயும் காலதாமதம் ஏற்படுத்தாமல்—அவர்கள் எங்கே பணியாற்றினாலும் அவர்கள் தொடர்ந்து ஆசிரியர்களாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்—அந்த இடைவெளியைக் குறைத்து உடனடியாக அரசு நடவடிக்கை எடுத்து இந்தப் பட்டதாரி ஆசிரியர்களை அரசுப் பணியில் உடனடியாக எடுத்துக் கொள்வது போன்ற நடவடிக்கைகளை எடுத்து கொள்ள அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதிகளை உருவாக்குகிறபோது இப்படிப் பட்ட யோசனைகளையெல்லாம் அவர்கள் வைத்து, ஆலோசித்துத்தான் முடிவு எடுக்கிறார்கள்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, 1982-ஆம் ஆண்டிலிருந்து ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை, அரசு உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றியதால் எத்தனை ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அதைப்பற்றிய விவரம் இப்போது இல்லை. ஆனால் இந்த ஆண்டு நாம் 5-க்கும் குறைவாகத்தான் உயர்த்தியிருக்கிறோம்.

**கூட்டுறவுச் சங்கங்களில் பினாமி பெயரில் பெறப்பட்டுள்ள கடன்கள்**

*வினா எண் 67—திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகம் முழுவதும் எத்தனை கூட்டுறவு சங்கங்களில் பினாமி பெயரில் எவ்வளவு கடன்கள் பெறப்பட்டுள்ளது?

(ஆ) அவற்றின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) தமிழகம் முழுவதும் 101 விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களில் 45.38 இலட்ச ரூபாய் அளவிற்கு பினாமிக் கடன்கள் பெறப்பட்டு உள்ளது.

(ஆ) பினாமிக் கடன்கள் மீது தாவா நடவடிக்கை, நிறைவேற்ற மனு நடவடிக்கை, தண்டத் தீர்வு நடவடிக்கை, தமிழநாடு கூட்டுறவுச் சட்டத்தின் கீழ் விசாரணை செய்து கோர்ட்டில் வழக்குகள் தொடர்தல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பினாமி பெயரால் வழங்கப்பட்ட கடன்களை திரும்பப் பெறமுடியாத காரணத்தால் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படமுடியாமல் இருக்கின்றன. ஒருசிலருக்கு தவறான முறையில் பினாமி கடன்களைக் கொடுத்த அதிகாரிகள் மீது

கடுமையான நடவடிக்கை எடுத்து, அந்தத் தொகையை மீண்டும் திரும்பப் பெறுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகையோர் மீது கடுமையான நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. 65—ன் கீழ் என்கொயரி நடத்தப்பட்டிருக்கிறது. அதையொட்டி போலீஸ் வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. சில வழக்குகளில் சர்சார்ஜ் புரோசீடிங்ஸ் நடந்து கொண்டிருக்கிறது. ஆர்பிட் ரேஷன் கேஸ் நடந்துகொண்டிருக்கிறது. எக்ஸ்பிடிஷன் பெட்டிசன் போடப்பட்டிருக்கிறது. எனவே இப்படிப்பட்ட நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. நி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நடவடிக்கைகளின் காரணமாக இதுவரை ஏதாவது தொகை திரும்பப் பெறப்பட்டிருக்கிறதா? அதே நேரத்தில் பினாமியாக கடன்கள் கொடுத்த சில சங்கங்கள் மூடப்பட்டிருக்கின்றன. அவைகளை மீண்டும் திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்மிபுகு திரு. சி. பொன்னையன்;** தலைவர் அவர்களே, சங்கங்கள் மூடப்பட்ட நிலை என்பதல்ல. சங்கங்களுடைய நிர்வாகிகள் அறவே நீக்கப்பட்டு மத்திய வங்கியினுடைய பொறுப்பிலே அந்தச் சங்கங்கள் கொண்டு வரப்பட்டிருக் கின்றன. இதுகாறும், 1,81,000 ரூபாய் அளவிற்கு வசூல் செய்யப்பட்டிருக்கின்றது. மீதித் தொகை வசூல் செய்யப்பட வில்லை, காரணம் வழக்குகள் நிலுவையில் உள்ளன.

**திரு. சேலம் மு. ஆறுமுகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பினாமிக் கடன்கள் எந்தெந்த ஆண்டு வழங்கப்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட 90 சதவீதம் கடன்கள் 1969—லிருந்து 76 வரை வழங்கப்பட்டிருக்கின்றன. நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. செ. செம்மலை;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. குறுகிய காலக் கடன்கள் பயிர் கடன்கள் வழங்கப் படுகின்றபோது. இதேபோல் தவறுகள் நடைபெற்றிருப்பதாக சொல்லப்படுகிறது. குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட தொகையை பட்டுவாடா செய்யவேண்டுமென்ற நிலைமை ஏற்படும்போது இப்படிப்பட்ட தவறுகள் நடைபெறுகின்றன. எனவே இந்த கடன்கள் வழங்கிய பிறகுதான் இந்தத் தவறுகள்



கண்டுப்பிடிக்கப்படுகின்றன. எனவே இத்தகைய தவறுகள் நடைபெறாமல் இருக்க இவைகள் எல்லாம் தடுக்கப்பட அரசு ஏதாவது முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சட்டத்திலே சட்டத்தை ஒட்டிய விதிகளும் குற்றங்களைச் செய்ய உடந்தையாக உள்ளவர்களுக்கு உதவி செய்யக்கூடிய முறையில் இருப்பதால். இப்படிப்பட்ட தவறுகள், குறைபாடுகள் நடைபெறுகின்றன. எனவே, அவற்றை அறவே களைவதற்கு புதியதாக வர இருக்கின்ற சட்டத்திலே தக்க ஏற்பாடுகள் செய்யப்பட இருக்கின்றன.

**திரு செ. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பினாமி கடன்கள் வழங்கப்பட்டது பற்றி அமைச்சர் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இப்போது பினாமி சங்கங்களே உருவாக்கப்பட்டு கடன்கள் பட்டுவாடா செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே இதைத் தடுக்க ஏதாவது நடவடிக்கை அரசாங்கம் எடுக்குமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே, இதுகாறும் நடைமுறையில் இருந்துவந்த விதிகளின் பிரகாரம் 10 உறுப்பினர்கள் இருந்தால் போதும் ஒரு சங்கத்தை அமைத்து விடலாம். சங்கத்தை உருவாக்க முனைகின்ற ப்ரோமோட்டர் என்று சொல்லப்படுகின்ற 10 பேர்கள் நன்நோக்கம் இல்லாமல் சுயநல நோக்கத்தில் தவறான வழிகளில் ஈடுபடுகின்ற நிலைமையை ஆரம்பக் கட்டத்திலேயே அதிகாரிகளால் கண்டு பிடிக்க முடியாத நிலைமை ஏற்படுகிறது. உண்மையிலே அப்படிப்பட்ட சில சங்கங்கள் அமைக்கப்பட்டது. அத்தகை யோர் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களில் பினாமி பெயரால் கடன் வாங்குபவர்கள் தலைவர்களாகவும், டைரக்டர்களாகவும் இருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, விசாரணை நடந்து அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்கிறார்கள். விசாரணை இல்லாமலேயே அவர்களை பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து உள்ளே தள்ளுவதற்கு சட்டங்கள் இயற்றப் படுமா அல்லது நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** ஏற்கனவே செய்த தவறு களை most of the offences being Criminal ஏற்கனவே இருக்கிற சட்டத்தின்கீழ் தான் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க முடியும். இனிமேல் தவறு செய்யாமல் கண்காணிப்பாக இருக்கும் நோக்கத் தோடு ப்ரிவென்டீவ் அப்ரோச்சாக வர இருக்கிற கூட்டுறவுச்

சங்கங்கள் சட்டத்தில் தக்க ஷரத்துக்களை நாம் கொண்டு வர இருக்கிற காரணத்தால் எதிர்காலத்தில் அப்படிப்பட்ட குறைகள் இல்லாமல் பாதுகாத்துக் கொள்ள கண்டிப்பாக முடியும்.

திரு. எல். இளையபெருமாள்: அமைச்சர் அவர்கள் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகச் சொன்னார்கள். ஆனால் இதுவரையில் எவ்வளவு அதிகாரிகள்பேரில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அவர்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்? சீப் ப்ரொமோட்டேர்ஸ் ஆக இருந்தவர்கள் எவ்வளவு பேர்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துல்லியமான குறிப்புகள் தற்போது என்னிடமில்லை. அதிகாரிகள் பலர்மீது டிஸிப்ளினரி ப்ரொஸிடிங்க்ஸ் எடுக்கப்பட்டு அவர்களுக்கு இன்க்ரிமென்ட் குறைப்பு மற்றும் பணிக்குறைப்பு போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. சீப் ப்ரொமோட்டேர்ஸைப் பொறுத்த வரையில் பல வழக்குகள் இன்னும் நிலுவையில் இருந்து வருவதன் கரரணமாக வழக்குகள் முடிந்த பிறகுதான் தெரியும். முழுமையான விவரங்கள் இப்போது என்னிடம் இல்லை.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பினாமிக் கடன்கள் வாங்குவதற்கு அஸ்திவாரமாக இருக்கிற பிரச்னை, கூட்டுறவுச் சங்கங்கள் கடன்கள் கொடுக்கக்கூடிய நேரத்தில் சூப்பர்வைசேர்ஸ் போய் விசாரிக்கவேண்டும் என்றிருக்கிறது, ஆனால் ஒரேநேரத்தில் ஒரு குறிப்பிட்ட டைம் லிமிட்டிற்குள் இந்தக் கடன்கள் கொடுக்கப்படுவதன் காரணமாக.——சூப்பர்வைசேர்ஸ்க்கு 10 சங்கங்கள் மேற்பார்வை செய்யவேண்டிய வேலை கொடுக்கப்படுகிற காரணத்தால் ——சூப்பர்வைசேர்ஸின் வொர்க்லோட் அதிகமாக இருப்பதால், ஒரே நேரத்தில் போய் அனைத்து அப்ளிகேஷன்களையும் விசாரிக்க முடியாத காரணத்தால் இப்படிப்பட்ட தவறுகள் ஏற்படுகின்றன. எனவே அப்ளிகேஸன்களை சரியாக விசாரிக்கத்தக்க அளவில் வசதி செய்து கொடுக்க சூப்பர்வைசேர்ஸ்களின் வேலைப்பளு குறைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: சூப்பர்வைசேர்ஸின் வொர்க்லோட் அதிகமாகயிருக்கிறது என்பது சரியல்ல. குறிப்பாக இந்த பினாமிக் கடன்களைப் பொறுத்தவரையில் ஏதோ இன்று ஒன்று, நாளை ஒன்று, அடுத்த நாள் ஒன்று என்று நடக்கவில்லை. பலவிடங்களில், குறிப்பாக தமிழ் நாட்டில் அதிகமான பினாமிக் கடன்கள் வாங்கப்பட்டு அந்தத் தவறுகள் நடந்தது தர்மபுரி மாவட்டம் என்று தெரிய வருகிறது. அங்கு மட்டும் கிட்டத்தட்ட ரூ. 39,26,000 ஒரு குறிப்பிட்ட காலத்தில் சில மாதங்களுக்குள் எடுத்திருக்கிறார்கள். அதைப் பார்க்கிறபோது ஒரே நாளில் இந்த முயற்சியில் ஈடுபட்டு பல சங்கங்கள் ஒன்றாகக் கூட முன்கூட்டியே பேசி வைத்ததுபோல் செய்திருக்கிறார்கள். சூப்பர்வைசேர்ஸ்க்கு தற்போது அதிகமான பளு இல்லை.



திரு. த. மாரிமுத்து: அதிகமான அளவிற்கு பினாமி பெயரில் பொது மக்கள் பணத்தில் தவறு செய்திருக்கிறவர்களை, அப்படி தவறு செய்தவர்கள் யார் யார், எப்படியெல்லாம் தவறு செய்திருக்கிறார்கள் என்று இப்படி பொது மக்களின் பணத்தை கொள்ளையடித்தவர்கள் பற்றிய விவரங்களை தெளிவாக பத்திரிகைகளில் விளம்பரம் செய்து அதை பொது மக்கள் அறிந்து கொள்ளக்கூடிய அளவிற்குச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இப்படிப்பட்ட தவறுகள் செய்தவர்கள் யார் யார் என்பது அந்தந்தப் பகுதிகளின் பொது மக்களுக்கு ஏற்கனவே தெரியும் என்று நான் நம்புகிறேன். காரணம், வழக்குகள் தற்போது தொடரப்பட்டு நடந்து வருகின்றன.

நீதிமன்றங்களில் தீர்ப்பின் நகல்களைப் பெறுவதில் ஏற்படும் காலதாமதம்.

*வினா எண் 68—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு கூட்டுறவு–சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக நீதிமன்றங்களில் தீர்ப்பு நகல்களைப் பெறுவதில் அசாதாரண காலதாமதம் எறபடுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் இக் குறையைப் போக்கி விரைவில் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ). ஆம். (ஆ) ஆம்.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, தமிழக நீதிமன்றங்களில் தீர்ப்புகள் வழங்கப்பட்டு பல மாதங்களாகியும்கூட நகல்கள் பெற முடியாமல் வழக்குக்கு உரியவர்கள் சிரமப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அரசு அதைப் போக்குவதற்கு என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: நீதிமன்றங்களில் வழக்குகளைத் தாமதமாக எடுக்கயிருப்பதைத் தடுக்குமுகத்தான் ஜட்ஜ்மென்ட் காப்பீஸை பொறுத்தவரையில் துரிதமாக பொது மக்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்தால்தான் வழக்குகள் அதிகக் காலம் தேங்கிக்கிடப்பதைத் தடுக்கமுடியும் என்ற நோக்கத்தோடு முதன்முறையாக ஜெராக்ஸ் காப்பீஸ் மெஷின்ஸ்க்குக் கூட உத்தரவிட்டு அதை சென்னை உயர்நீதிமன்றம், மாவட்ட குற்றவியல் மன்றங்கள், மற்றும் தலைமை நீதி மன்றங்கள் ஆகியவற்றிற்கெல்லாம் நாம் தற்போது தந்திருக்கிறோம்.

அது மட்டுமல்ல. விதி 135, 136-ன்படி தீர்ப்புகளின் நகல்கள் கட்டாயமாக கொடுத்தாக வேண்டும் என்ற அந்த விதியைக்கூட அரசு தற்போது தளர்த்த நடவடிக்கை எடுத்திருக்கிறது.

(முற்பகல் 9—30)

**திரு. என். பழனிவேல்:** தலைவர் அவர்களே, கட்டாயமாக தீர்ப்புகளின் நகல்கள் கொடுக்கப்பட வேண்டுமென்று விதியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், அங்கேயிருக்கக்கூடிய அலுவலர்கள் பெரிய அளவிற்கு லஞ்சத்தை எதிர்பார்த்துக் கொண்டு, அந்த நகல்களைக் கொடுப்பதில் காலதாமதம் ஏற்படுத்துகிறார்கள். இது எல்லா கோர்ட்டுகளிலும் நடைபெறுகின்றது. ஆகவே, இதைக் குறித்து கறாராக ஒரு உத்தரவு போட்டு, இந்த லஞ்சத்தை ஓரளவிற்கேனும் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? அதை அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றங்களிலே லஞ்சம் என்ற நிலை துரதிருஷ்டமான ஒன்றுதான். ஆனால், விதி எங்கெங்கே கடுமையாக இருக்கிறதோ. அங்கெல்லாம் இந்தக் குறைபாடுகள் நிகழ்வது நடைமுறையில் இருந்துவருகின்ற ஒன்று என்றாலும், இத்தகைய தவறுகளைக் குறைப்பதற்கு, கண்டிப்பாக இந்த விதியைத் தளர்த்தி விட்டால் பொதுமக்களுக்கு இன்னல் இராது என்று கருதி, இந்த விதியைத் தளர்த்துவதற்கு தற்போது அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இப்போது நீதிமன்றங்களில் வழங்கப்படுகின்ற தீர்ப்புகளின் நகல்களைப் பெறுவதற்கு எளிதாக்குகின்ற வகையில், 'சீராக்ஸ்' மெஷின்கள் வாங்கிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நீதிமன்றங்களில் தீர்ப்புகளை வாங்கி அப்பீல் அதாவது மேல் முறையீடு செய்வதற்கு 60 நாட்கள், 90 நாட்கள் என்றிருப்பதுபோல் தற்போது 'சீராக்ஸ்' மெஷின்கள் வாங்கிக் கொடுக்கப்பட்டிருப்பதால், தீர்ப்புகளின் நகல்களை குறிப்பிட்ட 15 தினங்களுக்குள் அல்லது 30 தினங்களுக்குள் கொடுத்தாக வேண்டுமென்ற ஒரு விதியை. திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 36 இடங்களில் இந்த 'சீராக்ஸ்' மெஷின்களை வழங்கியிருக்கிறோம். வழங்கப்பட்ட இந்த இடங்களுக்கு 15 நாட்கள்கூட தேவையில்லை, 2, 3 நாட்களில் அந்த ஜட்ஜ்மென்ட் காப்பிகள் கிடைத்து விடுகின்றன. ஆனால், இன்னும் வழங்கப்பட வேண்டிய பல இடங்கள் இருக்கின்றன.



அதற்கு நிதி தட்டுப்பாடு தடையாக இருக்கின்றது. அடுத்த ஆண்டு நாம் இதுகுறித்து நடவடிக்கை எடுத்த பிறகு, அப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் ஒரு விதியைக் கொண்டு வருவதற்கு அரசு யோசிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 'சீராக்ஸ்' மிஷின்கள் மூலம் காப்பி வழங்கப்படும் நடைமுறை உயர்நீதி மன்றத்திற்கு விஸ்தரிக்கப்பட்டிருக்கிறதா? அச்சுக் காப்பி வழங்கப்படாததால் அரசாங்கத்திற்கு இழப்பு ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது. அப்படி சமீபத்தில் ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கிறது. உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்து, ஒரு குறிப்பிட்ட மருந்தை வாங்கக்கூடாது என்று தீர்ப்பளித்தும் கூட, அதன் நகல்கள் உடனடியாக கிடைக்காத காரணத்தினால், அதிகமான அளவில் அது வாங்கப்பட்டு, அரசாங்கத்திற்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அச்சுக் காப்பி வழங்குவதில் தாமதம் ஏற்படுகின்ற காரணத்தினால், 'சீராக்ஸ்' மெஷின்கள் வழங்குவது உயர்நீதி மன்றத்திற்கும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறதா? இல்லையென்றால், அப்படி வழங்குவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜட்ஜ்மெண்ட் காப்பிகள் பெறுவதில் அரசுக்கு அவ்வப்போது இழப்பு ஏற்படுவது உண்மைதான். இந்தக் குறைபாடுகள் உயர்நீதி மன்றத்திலே இருப்பதும் உண்மைதான், எனவேதான், அதைப் போக்குவதற்கு உயர்நீதி மன்றத்திலே அண்மையில் 'சீராக்ஸ்' மெஷின்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

**திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற நீதி மன்றங்களிலே நகல்களைப் பெறுவதற்கு 'சீராக்ஸ்' மெஷின்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஏற்கனவே இந்தப் பணியினைச் செய்துவந்த பணியாளர்களுக்கு இதனால் வேலை இழப்பு ஏற்படுமா? அப்படியென்றால், அவர்கள் பணியினை இழக்காமல் பாதுகாப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்கள் நலனைக் கருதி சில முன்னேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளும்போது, இது போன்ற பிரச்சனைகள் வருகின்றது. ஆனாலும், இந்தப் பணியாளர்களுக்கு வேலை இழப்பு ஏற்படாத அளவிற்கு, அவர்களுக்கு மாற்று வேலை தர அரசு நடவடிக்கை எடுக்கும்.

128-279—3

[1983 ஜனவரி 31

### பெட்ரோல் பங்குகளில், பெட்ரோல் மற்றும் டீசல் வழங்குகின்ற பம்புகளில் பொருத்தப்பட்டுள்ள மீட்டர்கள்.

*வினா எண் 69—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பெட்ரோல் பங்குகளில் உள்ள பெட்ரோல்' டீசல் வழங்குகின்ற மீட்டர்கள் முறையாக இயங்குகின்றனவா வழங்கப்படுகின்ற பெட்ரோல், டீசல் அளவு சரியாக உள்ளதா என்பதைப் பரிசோதனை செய்ய அரசு என்ன ஏற்பாடு செய்துள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பெட்ரோல் பங்குகளில் உள்ள பெட்ரோல், டீசல் வழங்குகின்ற பம்புகள் முறையாக இயங்க அரசு தகுந்த நடவடிக்கை எடுத்துள்ளது. பெட்ரோல் மற்றும் டீசல் பம்புகளில் பொருத்தப் பட்டுள்ள மீட்டர்கள் சரி பார்க்கப்பட்டு 12 மாதங்களுக்கு ஒரு முறை தொழிலாளர் துறை துணை ஆய்வாளர்களால் முத்திரையிடப்படுகின்றன. மேலும் ஆய்வாளர்கள் திடீர் ஆய்வுகள் மேற்க்கொண்டு குறைகள் கண்டால் சரியான நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிக்க அமைச்சர் அவர்கள் பொதுப் படையான ஒரு பதிலைச் சொன்னார்கள். பதில் எப்படியிருந்த போதிலும் வழங்கப்படுகின்ற பெட்ரோல் அளவு பங்கிற்கு பங்கு குறைந்து இருப்பதாகவும், அதுமட்டுமல்லாது குறைவது ஒருபுறம் இருக்க வழங்கப்படுகின்ற பெட்ரோல், டீசல் ஆகியவற்றில மண்ணெண்ணெய் கலப்பதாகவும் அதை நானே அனுபவித்த காரணத்தால் சொல்கிறேன்—சொல்லப்படுகிறது. மோட்டார் வண்டிகளை பழுதுபார்க்க எடுத்துச்செல்கிறபோது மண்ணெண்ணெய் கலந்த காரணத்தால் பழுதுபார்க்கும் செலவு அதிகமாகும் என்று சொன்னதால் இந்த விவரம் தெரிகிறது. ஆகவே, இப்படி குறைவாக சப்ளை செய்வது ஒரு குற்றம், கலப்படம் செய்வது இரண்டாவது குற்றம் என்கிற வகையில் இதை அரசாங்கம் தீவிரமாகக் கண்காணித்து அப்படி செய்பவர்கள் மீது தக்க நடவடிக்கைகளை எடுத்து, தகுந்த தண்டனைகளை வழங்க அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, எடை குறைவு, தரம் சரியல்ல என்பது சில இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. தக்க நடவடிக்கைகளைத் துரிதமாக எடுக்க வேண்டும் என்ற உத்தரவையும் அரசு பிறப்பித்து இருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, கடுமையான மின்சாரப் பற்றாக்குறை இருப்பதால் இன்றைக்கு விவசாயிகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும் டீசல் தேவைப்படுகிறது. இந்த டீசல் வழங்குவதில் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்று வருகின்றன, இன்றைக்கு



1983 ஜனவரி 31]

இந்த டீசல் வழங்குவது என்பது உரியவர்களுக்குத் தேவையான அளவிற்குக் கிடைக்கவேண்டும் என்ற அடிப்படையில், சீரான முறை வகுத்து எந்தவிதமான புகாரும் இல்லாத வகையில் அதனை வினியோகிக்க அரசு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன். பேரவைத் தலைவர் அவர்களே, அது என்னுடைய துறை இல்லையென்றாலும் கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைச் சொல்லவிழைகிறேன். டீசல் தற்போது கொடுப்பது மத்திய அரசு பொறுப்பில் இருக்கும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், பாரத் பெட்ரோலியம், இந்துஸ்தான் பெட்ரோலியம் ஆகிய மூன்று நிறுவனங்களிடம் இருக்கின்றன. அவர்கள் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களை தனித்தனியாகப் பிரித்து, அதிலே அந்தந்தப் பகுதியின் தேவை என்ன என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் கேட்டறிந்து சப்ளை செய்து வருகிறார்கள்.

Diesel control order is not introduced in our State.

திரு. கோவைதம்பி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பெட்ரோல், டீசல் வழங்குவதில் ஏற்படுமின்ற அளவு குறைவு, கலப்படம் தடுப்பதற்காக தமிழக அரசே, மத்திய அரசு நிர்வாகத்தில் உள்ள கார்ப்பஷேன்களிடமிருந்து பெட்ரோலை வாங்கி, கிளைகளை அமைத்து சப்ளை செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன். மாண்புமிகு தலைவர் அவர்களே, மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று கேட்கின்ற நாம் டீசல் வினியோகம், பெட்ரோல் வினியோகம் ஆகியவற்றையும் மாநிலங்களுக்கு மத்திய அரசு தந்தால் நம்மைவிட மகிழ்ச்சி அடைவார்கள் யாரும் இருக்க முடியாது. கூட்டுறவு மைய அரசோடு தொடர்பு கொண்டபோது, கூட்டுறவு அமைப்புகள் மூலமாக, குறிப்பிட்ட அளவிற்கு வினியோகம் தரப்படும் என்று சொல்லி, ஆரம்ப காலத்தில் தந்தார்கள். ஆனாலும் கடந்த இரண்டாண்டு காலமாக என்ன காரணமோ கூட்டுறவு அமைப்பின் மூலமாக அளிக்கப்பட்டு வந்த வினியோக முறையைப் படிப்படியாகக் குறைத்து, தனியாருக்குத் தர வேண்டும் என்ற முறையை மைய அரசு மேற்கொண்டு வருகிறது. இது சரியான முறையல்ல என்பதைக் கூட மத்திய அரசுக்கு மாநில அரசு எடுத்துச் சொல்லியிருக்கிறது.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, வருஷத்திற்கு ஒரு தரம் தொழிலாளர் இலாகாவில் இருக்கும் அதிகாரிகள் சென்று பெட்ரோல் டீசல் பங்குகளை பரிசோதனை செய்து, சீல் போடுவதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி செய்த பிறகும் கூட அளவு குறைவு என்பது தொடர்ந்து நடைபெறுகிறது என்பது குறித்து அரசுக்கு ரிப்போர்ட் வந்து இருக்கிறதா? அப்படி நடக்கிறது என்பது உண்மை. ஆகவே, ஒரு மாதத்திற்கு ஒரு தரம் 'சர்ப்ரைஸ் செக்' நடத்துவதற்கும்

அளவு சரிப்பார்ப்பதற்கும், தவறு என்று கண்டுபிடிக்கப்பட்டால் சீல் போட்டு வருவதற்கும், அந்த விற்பனை சரியாகச் செய்யப்படுகிறதா என்பதைச் சரிபார்ப்பதற்கும், தனியான அதிகாரிகளை நியமிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா? தொழிலாளர் இலாக்காவில் இருக்கும் அதிகாரிகளுக்கு வேலைப்பளு அதிகம் இருப்பதால் அவர்களால் அந்தப் பணியைச் செய்ய முடியவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன். மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியவற்றில் உண்மை இருக்கிறது. ஆண்டுக்கு ஒரு முறைதான் திடீர் சோதனை நடத்தப்படுகிறது. மாநிலம் தழுவிய அளவில் 24–6–81 அன்று 352 பெட்ரோல் பங்குகளில் சோதனை நடத்திய 60 பங்குகளில் இத்தகைய குறைபாடுகள் இருக்கின்றன. 250 எம். எல். வரை அவர்கள் எடுக்கிறார்கள் என்பது கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 6–2–82 அன்று 316 இடங்களில் நடத்திய திடீர் சோதனைகளில் 36 இடங்களில் இந்தக் குறைபாடு அதிகமாக இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறது. திடீர் சோதனை அவ்வப்போது மாதத்திற்கு ஒரு முறை நடத்தவேண்டும் என்பது நல்ல யோசனை. குறைந்தது 3 மாதத்திற்கு ஒரு முறை நடத்துவது குறித்து அரசு பரிசீலிக்கும் தொழிலாளர் நல இலாகாவில் உள்ள அதிகாரிகளுக்கு வேலைபளு என்பது உண்மை தான்: அதிகாரிகளின் எண்ணிக்கையைச் சற்று அதிகரிக்கவேண்டும் என்பதில் கூட அரசு பரிசீலனை செய்ய இருக்கிறது. அது மட்டுமல்ல எடை, அளவு சம்பந்தமாக உள்ள பிரிவுகளில் கூட அதிகாரிகள் எண்ணிக்கையைச் சற்று உயர்ந்த அரசு பரிசீலனை செய்யும்.

(முற்பகல் 9–40)

திரு. மு. ப. முனுசாமி: தலைவரவர்களே, பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய்—இந்த மூன்றையும் ஒருவரே விற்பனை செய்யும் உரிமை பெற்றிப்பதால்தான் அவர்களுக்கு கலப்படம் செய்வதற்கு வசதியாக இருக்கிறது. எனவே இவற்றைப் பிரித்து தனித்தனியாகக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு தலைவரவர்களே, மத்திய அரசு எடுக்க வேண்டிய முடிவு இது.



கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் உள்ளூர் எழுத்தர்கள் பணியை முறைப்படுத்தும் திட்டம்.

*வினா எண். 70—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு கூட்டுறவுசட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலம் முழுவதும் கூட்டுறவு சங்கங்களில் பணியாற்றும் உள்ளூர் எழுத்தர்கள் (Local Clerks) பணியை முறைப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ). மற்றும் (ஆ): அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன். தலைவரவர்களே, தமிழ்நாடு முழுவதும் இப்படி முறையாகக் கூட்டுறவுப் பயிற்சி பெற்றிருப்பவர்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு? கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றக் கூடியவர்கள் மாற்றம் பெற முடியாது. அவர்கள் குறைந்த சம்பளமே பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். கூட்டுறவுச் சங்கத் தலைவரின் தயவில்தான் அவர்கள் பணியாற்ற முடியும். அதனால்தான் பெரும்பாலும் கூட்டுறவுச் சங்கங்களில் தவறுகள் நடைபெறுகின்றன. ஆகவே, கூட்டுறவுத் துறையில் பணியாளர்களை நிரந்தரமாக்கவும், கூட்டுறவுத் துறையில் பயிற்சி பெற்றவர்களைக்கொண்டு மேற்பார்வை செய்யவும், இனிமேல் பயிற்சி பெற்றவர்களையே நியமித்து, அவர்களை நிரந்தரமாக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன். தலைவரவர்களே, எம்பிளாய்மென்ட் எக்சேஞ்சின் மூலம் அல்லாமல் நேரடியாக அந்தந்த மாவட்டத்தில் நியமிக்கப் பட்ட பலர் ஏற்கனவே நிரந்தரமாக பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இன்னும் 1,234 பேர்கள் நிரந்தரப்பணியில் அமர்த்தப்படவில்லை. இதில் இரு பிரச்சினைகள் இருக்கின்றன. எம்பிளாய்மென்ட் எக்சேஞ்சு மூலம் அவர்கள் நியமிக்கப்படவில்லை என்பது ஒரு காரணம். கூட்டுறவுத் துறையில் குறைந்தபட்ச பயிற்சி கூட பெறவில்லை என்பது மற்றொரு காரணம். இது குறித்து அரசு விரைவில் பரிசீலனை செய்து, தகுந்த நடவடிக்கை எடுக்கும்.

திரு. வேடச்சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன். தலைவரவர்களே, முறையாக கூட்டுறவுத் துறையில் பயிற்சி பெற்றவர்களுக்குக்கூட குறைந்தஅளவு சம்பளம்தான் கொடுக்கப்படுகிறது. 250 ரூபாய் சம்பளத்தில் 10 ஆண்டுகளுக்குமேல் அவர்கள்

பணியாற்றிவிட்டார்கள். எம்பிளாய்மென்ட் எக்சேஞ்சில் அவர்கள் பெயர்களையும் கான்சல் செய்துவிட்டார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் மதுரை மாவட்ட மத்திய வங்கியில் 50, 60 பேர்கள் நியமிக்கப்பட்டு, இப்போது அவர்களை நிரந்தரமாக்க முயற்சி செய்தபோது, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் அவர்களுடைய பதிவு ரத்து செய்யப்பட்டிருப்பதால், அவர்கள் எல்லாம் நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ள முடியவில்லை. சுமார் 200—க்கு மேற்பட்டவர்கள் அப்படி இருக்கிறார்கள் மதுரை மாவட்டத்தில். இந்தப் பிரச்சனையைக் கருதிப் பார்த்து அரசு விரைவான நடவடிக்கை எடுத்து, இப்போது பணியில் இருப்பவர்களை நிரந்தரமாக்க தகுந்த நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, ஏறத்தாழ 10 ஆண்டு காலமாக பணியில் இருப்பவர்களையும், கூட்டுறவுத் துறையில் பயிற்சி பெற்று பணியில் இருப்பவர்களையும், நிரந்தரமாக்குவது குறித்து அரசு ஆராய்ந்து விரைவாக நடவடிக்கை எடுக்கும் என்று எற்கெனவே சொன்னேன்.

திரு. பாபு ஜனார்த்தனன். தலைவரவர்களே, கூட்டுறவு பயிற்சி பெற்றவர்கள் அந்தந்த உள்ளூரிலே நிறைய பேர் இருக்கிறார்கள். இலட்சக் கணக்கான ரூபாய் இலாபம் வரக்கூடிய கூட்டுறவு வங்கிகளிலே கூட ஆட்களை நியமிக்க எற்பாடு செய்தால் அவர்கள் உள்ளூரிலேயிருந்து வரவில்லை என்று எம்லாய்மென்ட் ஆபீசுக்கு திருப்பி அனுப்பிவிடுகிறார்கள். ஆகவே, குறைந்தபட்சம் உள்ளூர் ஆட்களையே வேலைவாய்ப்பு அலுவலகங்கள் அனுப்ப எற்பாடு செய்யப்படுமா? அது மட்டுமல்லாமல் பெருமளவுக்கு இலாபம் வருகின்ற கூட்டுறவு வங்கி போன்ற நிறுவனங்களில் தேவையான அளவுக்கு பணியாளர்களை நியமிக்க அரசு ஒரு கொள்கையை வகுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன். தலைவரவர்களே, ஒவ்வொரு நிர்வாகத்தினுடைய 'டரன் ஓவருக்கும், ஏற்றப்படி அங்கே பணியாற்றக் கூடிய பணியாளர்கள் இருக்க வேண்டுமென்ற நடைமுறை இருக்கிறது. சில இடங்களில் அவ்வாறு உரிய முறையில் இல்லை என்பது தெரிகிறது. டர்ன் ஓவர் அதிகமாக இருந்தாலும் பணியாளர்கள் குறைவாக இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டும்போது அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கலாம்.

கூட்டுறவு நிறுவனமாக இருந்தாலும் அல்லது ஏதாவது ஒரு தொழில் நிறுவனமாக இருந்தாலும் அந்தந்த ஊரில் இருக்கிறவர்களுக்கு வேலை கொடுப்பதில் முன்னுரிமை கொடுப்பது நல்ல நடைமுறை. ஆனால் Discrimination cannot be effected because it will violate Art 14 of the Constitution., என்ற காரணத்தால்



அந்த விதியை நாம் மாற்ற முடியாது. இருந்தாலும் நடைமுறையில் உள்ளூரில் இருப்பவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்ற நடைமுறையை ஏற்படுத்த என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அது குறித்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. எஸ். சிவராமன். தலைவர் அவர்களே, கூட்டுறவு வங்கிகளில் ஊழியர்களை நியமனம் செய்வதற்கு முன்பெல்லாம் மத்திய வங்கியின் மூலமாகத்தான் செய்யப்பட்டது. அதாவது அவர்களுடைய ஒப்புதல் பெற்றுதான் நியமனங்கள் நடைபெற்றன. ஆனால் இன்றையதினம் கூட்டுறவு வங்கிகளில் அந்தந்த இடங்களில் அவரவர்களாகவே நியமனம் செய்து கொள்ளலாம் என்று உள்ளது. இதனால் பல ஊழல்கள் நடைபெற வாய்ப்பிருக்கிறது. அதிலுள்ள தலைவர்கள் சொல்வது போலத்தான் நியமனங்கள் செய்யவேண்டியிருக்கிறது. அதை மாற்றி மத்திய வங்கிகள் மூலமாக நியமனம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு செய்ய அரசு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள நடைமுறையில் இருக்கிற சட்டம் 'அதை ஒட்டிய விதிகளின் அடிப்படையில்' ஒரு கூட்டுறவுச் சங்கம் "Each society is an autonomous body" அதனால் அவர்களாகவே பணியாட்களை நியமிக்கலாம் என்று முழு உரிமையும் உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போன்ற முறை சில நேரங்களில் சில மாவட்டங்களில் இருந்தது. மத்திய வங்கியிலிருந்து அவர்கள் கடன் வாங்கிய அடிப்படையில், இன்னும் மற்றும் சில அடிப்படைகளில், அப்படி சில இடங்களில் நடைபெற்றது உண்மைதான். ஆனால் வர இருக்கிற சட்டத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய ஆலோசனை நடைமுறையில் வர இருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கூட்டுறவு சங்கங்களிலே பணியாற்றும் ஊழியர்கள், எழுத்தர்கள் போன்றவர்கள், மாண்புமிகு உறுப்பினர் பாலசுப்பிரமணியன் அவர்கள் சொன்னதைப் போல மிக குறைந்த சம்பளம் ரூ. 40, 50, 100 என்று பெற்றுக் கொண்டு பணியாற்றி வருகிறார்கள். அவர்கள் ஏற்கனவே பணியாற்றியிருப்பதால், எம்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சிலும் அவர்களுடைய பெயர் நீக்கப்படுகிறது. ஆகவே, அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, ஏற்கனவே பணிபுரிந்திருக்கிறார்கள் என்கிற அடிப்படையில் அவர்களுக்கு பிரோமோஷன் முறையில் பதவிகள் வழங்க, அரசு பரிசீலனை செய்வது என்பதற்குப் பதிலாக உடனடியாக நியமனம் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்,

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களில் தற்காலிக பணியாளர்களாக இருப்பவர்களுக்கு உடனடியாக நேரிடையாக சூப்பர்வைசர்களாக புரோமோஷன் கொடுப்பது என்பது நடக்க முடியாத காரியம். ஏனென்னில் முதலில் தற்காலிக பணியில் இருப்பவர்களுக்கு நிரந்தரமான பணிகள் கொடுத்தாக வேண்டும். பிறகுதான் அக்கார்டிங் டு தேர் சீனியாரிட்டி, புரமோஷன் கொடுக்க பரிசீலிக்க முடியும் அதுதான் இருக்கிற முறை.

## தேயிலை மீதான விற்பனை வரி

*வினா எண் 63—திரு. கு. ரமணி மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தேயிலைத் தோட்ட முதலாளிகள் கேட்டதற்கிணங்க தேயிலை மீது விற்பனை வரி குறைக்கப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம்எனில் அது பற்றிய விவரங்கள் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்.** (அ) ஆம்

(ஆ) கோவை மற்றும் குனூரில் உள்ள தேயிலை ஏல விற்பனை மையங்களில் விற்கப்படும் தேயிலைக்கு 5 சதவீதமாக இருந்த வரியினை 2 1/2 சதவீதமாக 9-11-81 முதல் ஒரு ஆண்டுக்கு குறைக்கப்பட்டது. பிறகும் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, இந்த குறைக்கப்பட்ட வரி விதிப்பை 9-11-82 முதல், 8-11-1983 முடிய நீடித்துள்ளது.

**திரு. கு. ரமணி:** மாண்புமிகுபேரவைத் தலைவர் அவர்களே, தேயிலைத் தோட்ட முதலாளிகள் நிறைய இலாபம் சம்பாதிக்கக் கூடிய தொழிலை நடத்தும் பணக்காரர்கள். ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் அவர்களுடைய தொழிலில் சிறிது சங்கடங்கள் ஏற்பட்டாலும் தொடர்ந்து இலாபம் அடையக்கூடிய சூழ்நிலை அந்தத் தொழிலில் உண்டு. அவர்களுக்கு ஏன் அரசாங்கம் பரிந்துப் போய் இந்த வரியைக் குறைக்க வேண்டும்? இதற்கு என்ன காரணம் என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தேயிலையை ஏலம் போடுகிற முறை இருக்கிறது. அதை கேரளாவிலே போடுகிறார்கள். கேரளாவிலே ஏலம் போடுவதால் இங்கேயுள்ளவர்கள் அங்கே போய் ஏலம் எடுக்கிறார்கள். இதனால் நம்முடைய வருமானம் குறைத்துவிடுகிறது என்கிற காரணத்தால் கோவையிலே புதியதாக ஏலம் போடுகிற முறையை ஏற்படுத்தியிருக்கிறோம்.



இதனால் இங்கேயுள்ள வியாபாரிகள் அங்கே போகாமல் இங்கேயே வாங்குகிறார்கள், அரசுக்கு அதிக இலாபம் வருகிறது.

**திரு கு. ரமணி:** தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வியே வேறு. நான் கேட்டிருப்பது தேயிலை மீது விற்பனை வரி குறைக்கப்பட்டுள்ளதா என்பது? அப்படி குறைக்கப் பட்டிருந்தால் அது எந்தவிதத்திலே நியாயம்? ஏலம் போடும் முறையை கோவையிலே ஏற்படுத்தியிருப்பதாக அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அதில் அரசாங்கத்திற்கு இலாபம் வருகிறது—வரட்டும். அதைப்பற்றிய பிரச்னை அல்ல நான் கேட்டது. சாதாரணமான மக்களுக்கு பல் பொடியிலிருந்து எல்லாப் பொருள்களுக்கும் விற்பனை வரியை போட்டிருக்கிற அரசு. கொள்ளை இலாபம் சம்பாதிக்கக்கூடிய தேயிலைத் தோட்ட முதலாளிகளுக்கு ஏன் விற்பனை வரியைக் குறைக்க வேண்டும்—ஏன் அவர்களுக்கு அந்தச் சலுகை அளிக்க வேண்டும்? ஏன் வரியை அதிகமாக்கி வசூலிக்க நடவடிக்கை எடுக்கக்கூடாது என்றுதான் கேட்கவிரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு இதுபற்றி ஆராய்ந்து இவ்வாறு குறைக்கலாம் என்று சொன்னதற்குப் பிறகுதான் குறைக்கப்பட்டிருக்கின்றது. இங்கே மட்டுமல்ல, கேளராவில் கூட வரி குறைவாக இருக்கின்றது. எனவே இங்கே குறைக்காவிட்டால் அங்கே போய்விடுமோ என்று எண்ணி அதைத் தடுப்பதற்காகத்தான் இவ்வாறு குறைக்கப் பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் கேரளாவிலே 5 சதவீதத்திலிருந்து 2 சதவீதத்திற்குக் குறைத்து விட்டார்கள். எனவே அங்கே போய்விடக் கூடாது என்பதற்காகவும் மேலும் மத்திய அரசு கூட்டம் போட்டு நீங்களும் மற்ற மாநிலங்களைப் போல் குறைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதன் காரணத்தால் தான் குறைக்கப் பட்டது. கோயம்புத்தூருக்கு அருகிலே கொச்சி இருக்கின்றது. நாம் குறைக்காவிட்டால் அங்கே போய்விடும். ஆனால் அந்த வரியினை ஏற்றினால் அதன் பிறகு நம்முடைய தேயிலை அங்கே போனால் பரவாயில்லை அதை ஏற்றிக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னால் அதை ஏற்றத்தயார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு கே. உச்சி.** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விற்பனை வரியினை 6 சதவீதத்திலிருந்து 2 சதவீதத்திற்கு குறைத்த பிறகும் கூட சில தனியார்கள் விற்பனை வரியினை ஏமாற்றுவதற்காக வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்கிறார் கள், எனவே அதைத் தடுகின்ற வகையிலே எல்லாத் தேயிலை யையும் இந்த மாநிந்திலேயே விற்கவேண்டும் என்ற வகையிலே ஏற்பாடு செய்வதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, தேயிலையை ஏற்றுமதி செய்வது என்பது மத்திய அரசின் பொறுப்பிலே இருக்கின்றது. வரியினை மட்டும்தான் நாம் போடுகிறோம். ஆனால் வரி ஏய்ப்பினைக் கண்டுபிடிப்பதற்காக அரசு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறது. ஏனவே குறிப்பாக எங்கே வரி ஏமாற்றப்படுகின்றது என்று தெரிவித்தால் அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்ளே, இதுபற்றிய ஒரு கூட்டம் டெல்லியிலே நடந்ததாகச் சொல்லப்படுகின்றதே, அந்தக் கூட்டத்தைக் கூட்டியது யார்? அந்தக் கூட்டம் எப்போது நடந்தது? தேயிலையின் மீது இவ்வாறு வரி குறைப்பு செய்தால அதனால் ஆண்டு வாரியாக எவ்வளவு வருவாய் வருகின்றது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, தேயிலையின் மூலமாக நமக்கு எவ்வளவு வருவாய் வருகின்றது என்றால் மொத்தமாக 1978-79-ல் 315 இலட்சம் ரூபாய். 1979—80-ல்278 இலட்ச ரூபாய் 1980-81-ல் 305 இலட்சம் ரூபாய். வரியினைச் குறைத்ததற்குப் பிறகு இவ்வாண்டு வருமானம் 439 இலட்சம் ரூபாய் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## சைதாப்பேட்டைத் தொகுதியில் வெள்ளத்தினால் ஏற்படும் சேதங்களைத் தடுக்கும் திட்டம்

வினா எண். 64 திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டுதோறும் பொதுவாக வெள்ளத்தால் சைதாப்பேட்டை தொகுதி பெருவாரியாக பாதிக்கப்படுகின்றதே அதற்காக அரசிடம் நிரந்தர நடவடிக்கை எடுக்க ஏதேனும் செயற்குறிப்புள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, சைதாப்பேட்டைத் தொகுதியில் உள்ள அடையாறு ஆற்றின் கரைப் பகுதிகளில் வசிக்கும் மக்களை ஆற்று வெள்ளத்திலிருந்து பாதுகாக்க நீண்ட கற்சுவர் ஆற்றின் கரையோரத்தில் கட்டப்பட்டது. மேலும் தற்போது உலக வங்கித் திட்டத்தின் கீழ்த் மாம்பலம், நந்தனம் திறந்த கழிவுநீர்க் கால்வாய்த் திட்டம்



செயல் படுத்தப்பட்டு வருவதால் இந்தத் திட்டத்தின் மூலம் நீர்தேக்கம் இல்லாமல் இருப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. து. புருஷோத்தமன்:— பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள் என்பது எனக்குச் சரியாகப் புரியவில்லை. இருந்தாலும் ஆண்டுதோறும் மழையாலே பாதிக்கப்பட்டு சைதாப்பேட்டையிலே உள்ள.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்; பதிலே புரியவில்லை என்றால் அதைத் தொடர்ந்து எவ்வாறு கேள்வி கேட்க முடியும்?

மாண்புமிகு திரு- எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத்தலைவர் அவர்களே, நான் உறுப்பினர் அவர்களுக்குப் புரிய வைக்க முயற்சி செய்கிறேன். முடிந்தால், நான் அதில் வெற்றி பெறுகிறேன். அவர்கள் எந்த இடத்தில் புரியவில்லை என்று சொன்னால் அதை மீண்டும் அவர்களுக்குப் புரியும்படி சொல்கிறேன்.

திரு.புருஷோத்தமன்.— மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சைதாப்பேட்டை தொகுதியிலே அடையாற்றினை ஒட்டியுள்ள திடீர் நகர், கோட்டூர்புரம், சின்னமலை போன்ற பகுதிகளை ஒட்டியுள்ளபகுதிகள் பள்ளமாகஇருப்பதன் காரணத்தால் ஆண்டு தோறும் அங்கே வெள்ளத்தால் பாதிப்பு ஏற்படுகின்றது. அதனால் நிவாரணம் தரப்பட்டு அரசியினுடைய பெரும் பணம் செலவாகின்றது' அரிசி கொடுக்கிறோம், புடவை, வேட்டி கொடுக்கிறோம், பல்பொடி கொடுக்கிறோம்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்; உங்கள் கேள்வி என்ன? சைதாப்பேட்டை தொகுதியைப் பற்றி வேறு நேரத்தில் பேசிக் கொள்ளலாம். கேள்வியை மட்டும் இப்போது கேளுங்கள்.

திரு. து புருஷோத்தமன்— பள்ளமாக இருக்கும் பகுதியில் நீர் தேங்காமல் இருப்பதைத் தடுக்க வேண்டும். வேளச்சேரி பகுதியில் ஏரியில் எல்லாம் லே அவுட் போட்டு வீடுகள் கட்டுகிறார்கள். அங்கு ஏற்படும் இழப்புகளுக்கு அரசு நிவாரணம் கொடுக்கிறது. இதை எல்லாம் தடுக்க அரசு முன்வருமா என்பதைஅறிய விரும்புகிறேன்? ஸ்டாம்வாட்டர் டிரைனேஜ் அமைத்து நீர் தேங்காமல் தடுப்பதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னதை அவர் புரிந்துக் கொள்ளவில்லை என்பதை இப்போது நான் புரிந்துக் கொண்டேன். நான படித்த போதே சொன்னேன் உலக வங்கி மூலம் நடவடிக்கை எடுக்க ஏற்பாடுகள் நடந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. து. புருசோத்தமன்: பேரவைத் தலைவர் அவர்களே, அவர் படிக்கின்ற போது ஒன்றைத் தெரிந்துக் கொண்டேன். அதாவது தடுப்புச்சுவர் கட்டப்பட்டிருக்கிறது என்று. அது, தி. மு. க. ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உலக வங்கி மூலம் பணம் பெற்று அதைச் செயல்படுத்தப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள்,

திரு. து. புருஷோத்தமன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. காலத்தில் அந்த கரையோரப் பகுதிகளில் தடுப்புச்சுவர் கட்டப்பட்டது. அதைத்தொடர்ந்து நாங்கள் பல முறை அந்தப் பகுதிகளில் ஒரு நிரந்தர ஏற்பாடு செய்யவேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறோம். உலக வங்கி மூலம் பணம் பெற்று செய்வதற்கு முன்பே இந்த அரசு பணம் செலுத்தி அந்தப் பகுதிகளில் தடுப்பு சுவர் கட்டி பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடுப்புச்சுவர் கட்டப்பட்டது என்று தான் தெரிவித்தேன். அதை அ.இ.அ.தி.மு.க. கட்டியதா? தி.மு.க. கட்டியதா என்று நான் தெரிவிக்கவில்லை. அது தி.மு.க. ஆட்சியில் கட்டப்பட்டதா? இல்லை காங்கிரஸ் ஆட்சியில் கூட கட்டியிருக்கலாம். அந்தப் புள்ளி விவரங்கள் இப்போது என்னிடம் இல்லை. உலக வங்கி திட்டத்தின்கீழ் அந்த நீர்த்தேக்கப் பகுதிகளில் நடவடிக்கை எடுக்க எல்லா விதமான முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடையாறு கரையோரங்களிலுள்ள குடிமைப் பதிகளை மேம்படுத்தும் திட்டம்.

வினா எண். 71—திரு. ச. பாலகிருஷ்ணன்; மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் அடையாறு கரை ஓரங்களில் உள்ள குடிசைப் பகுதிகளை மேம்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதற்காக எவ்வளவு தொகை செலவிடப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—

(அ) அடையாறு கரை ஓரத்தில் மொத்தம் 26 குடிசைப் பகுதிகள் உள்ளன. அவற்றில் அரசு மற்றும் மாநகராட்சிக்குச் சொந்தமான நிலங்களில் உள்ள 12 குடிசைப்பகுதிகளை மேம்படுத்தும் திட்டம் உண்டு.



(ஆ) இந்நாள் மதிப்பின்படி ரூ.112.94 இலட்சங்கள்.

திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேலைகள் எப்போது துவங்கப்படும்? எப்போது முடியும்? இந்தத் திட்டத்தின் மூலம் பயனடையும் குடிசைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடம் 8 பகுதியில் 721 குடும்பங்கள் என்ற தகவல் இருக்கிறது. மேலும் ஒரு பகுதியில் 298 குடும்பங்கள் என்ற தகவல் இருக்கிறது. மற்ற இடத்தில் எவ்வளவு பேர் என்ற தகவல் என்னிடத்தில் இல்லை.

திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மற்ற முக்கிய நகரங்களில் உள்ள பகுதிகளுக்கும் இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தி செயல்படுத்தும் எண்ணம் உள்ளதா? அதைச்செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி ஆலோசனை செய்யவேண்டும்.

குடிநீர் வடிகால் வாரியத்திற்குத் தேவையான குழாய்கள் தயார் செய்யும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

வினா எண். 72. திரு. கே. ஆர். கணபதி திரு. எஸ். டி. உகம்சந்த் டாக்டர் கே. பி. இராமலிங்கம்— மற்றும் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் குடிநீர் வடிகால் வாரியத்திற்கு தேவையான குழாய்கள் தயார் செய்யும் தொழிற்சாலை அமைக்கப் படுமா

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்குத் தேவையான கற்சாரைக் குழாய்கள் (Pre stressed concrets pipes) மற்றும் சுட்டமண் குழாய்கள் (Stone ware pipes) ஆகியவற்றைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளை தமிழகத்தில் தகுதி வாய்ந்த இடங்களில் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து பூர்வாங்க நடவடிக்கை வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(முற்பகல் 10—00)

திரு. எஸ். டி. உகம்சந்த்: தலைவர் அவர்களே, இந்த வாரியம் எப்போது செயலுக்கு வரும்? எவ்வளவு மதிப்பீட்டில் அந்தத் தொழிற்சாலை அமைய இருக்கிறது என்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்; தலைவர் அவர்களே, சாத்தியக் கூறுகள் குறித்து பூர்வாங்க நடவடிக்கை வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டது. பூர்வாங்க நடவடிக்கை முடிந்த பிறகு எவ்வளவு விரைவிலே வேலை செய்ய முடியும் என்று கணித்துக் கூற முடியும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, அரசு இந்தத் தொழிற்சாலையைத் துவங்குவதற்கு முன்னால், அதுவரையில் வேலையில்லாத பட்டதாரிகள் கூட்டுறவு அடிப்படையில் குடிநீர்க் குழாய்கள் தயார் செய்ய முன்வருவார்களானால் அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து குடிநீர்வடிகால் வாரியம் அவர்களிடமிருந்து குழாய்களைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: புரப்போசல்ஸ் தயார் செய்து குடிநீர் வடிகால் வாரியத் தலைவரை அணுகி அந்தப் பொறியியல் என்சினியர்கள் அதை ஏற்றுக் கொள்கின்ற நிலை ஏற்பட்டால் அதைப் பற்றிப் பரிசீலனை செய்யலாம்.

திரு. கோவைத்தம்பி: தலைவர் அவர்களே, இந்த வடிகால் வாரியம், குடிநீர் வாரியம் இரண்டிற்கும் இந்த பைப்களை சப்ளை செய்வதற்குத் தமிழ்நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட கம்பெனிகள் எவ்வளவு இருக்கின்றன. அப்படிப்பட்ட கம்பெனிகள் இல்லையென்றால் இந்த பைப்களைப் பெறுவதற்கு எந்த மாநிலத்தோடு முயற்சிகளைச் செய்துகொண்டிருக்கிறோம் அப்படியில்லையென்றால் உறுப்பினர் டாக்டர் இராமலிங்கம் குறிப்பிட்டதைப் போல் வேலையில்லாத பட்டதாரிகள் மூலமாக இந்தத் திட்டத்தை ஊக்குவிப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எ. இராகவானந்தம். தலைவர் அவர்களே, இரண்டு வாரியங்கள் இல்லை. குடிநீர் வடிகால் வாரியம்என்ற ஒரே வாரியம் தான்அது. மாண்புமிகு உறுப்பினர் கேள்விக்கு விரிவான பதில் கொடுத்தாக வேண்டும். எனவே தனிக் கேள்வியாகப் போட்டால் விரிவாக பதில் தரமுடியும்.

திரு. வ. சத்தியமூர்த்தி: தலைவர் அவர்களே, தமிழகத்திலே குடிநீர் வடிகால் வாரியத்தினால் நிறைவேற்றப்படுகின்ற பணிகள் தொடர்ந்து பல ஆண்டுகளுக்கு இருக்கக் கூடியவை அல்ல. இப்போதே நூற்றுக்கு 80 சதவீதம் பணிகள் முடிந்து விட்டிருக்கின்றன. இந்த நிலையில் புதிதாக தொழிற்சாலை அமைத்தால் எதிர்க்காலத்திலே அவற்றைப் பயன்படுத்த வாய்ப்பு இருக்கிறதா என்பதைத் துறை பரிசீலித்து இருக்கிறதா



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்கு நேரடியாகத் தொடர்பு இல்லாதது என்றாலும் நிரம்பப் டணிகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் காள்கிறேன். தொழிற்சாலைகள் தேவைப்படுகின்றன.

நென்மேனி அணைக்கட்டுத் திட்டம்

வினா எண். 73— திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தூர் தாலுக்கா நென்மேனி அணைக்கட்டுத் திட்டம் இந்த நிதி ஆண்டில் ஆரம்பிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில் மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ மற்றும் ஆ) இராமநாதபுரம் மாவட்டம், சாத்தூர் தாலுக்காவில், வைப்பாற்றின் குறுக்கே நென்மேனி; இருக்கங்குடி கிராமங்களுக்கருகே ரூ. 6.90 லட்சம் மதிப்பீட்டில் நீர்த்தேக்கம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருந்து இந்த கேள்விகளுக்குவிடையளிக்கப்படுகின்ற இந்த நேரத்திலே அந்தத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்; இந்தத் திட்டத்திற்கு காஸ்ட் புரடக்ஷன் ரேஷீயோ எந்த அடிப்படையில் உள்ளது. இதனால் புதிய ஆயக்கட்டுகள் எத்தனை ஏக்கர் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: இந்தத் திட்டத்தினுடைய பயன் செலவு விகிதம் 1: 24: 1 ஆகும், இது பயனுள்ள திட்டம் என்று கருதி 600 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ள அரசு அனுமதி வழங்கியிருக்கிறது. இதன் காரணமாக 9156 ஏக்கர் புன்செய் நிலம் புதிய பாசனம் பெறும் என்றும், 614.11 ஏக்கர் நிலத்திற்குப் பாசனப் பற்றாக்குறை போக்கபடுமென்றும் 626.97 ஏக்கர் நன்செய் நிலங்களுக்கு பாசன உறுதி கிடைக்கும் என்றும் இந்தத் திட்டத்தினால் உணவு உற்பத்தி சுமார் 10175 டன் கிடைக்கும் என்றும் மதிப்பீடு செய்யப்பட்டு இருக்கிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சோரணம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, எப்போது இந்தத் திட்ட வேலை முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான கால்கோள் விழா நடந்து இப்போது திட்டப்பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

பாண்டலம் ஏரியிலுள்ள மதகுகள்கு

வினா எண். 74— திரு. சோ. கலித்தீர்த்தான்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாண்டலம் ஏரியில் உள்ள 2 பெரிய மதகுகள் பழுதாகி உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதனை சீர் செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) ஆம்

(ஆ) இதற்கான மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு, இப்போது பணிகள் மேற்கொள்ளப்பட்டு ஓரளவிற்கு முடியும் தருவாயில் இருக்கிறது.

திரு. சோ. கலித்தீர்த்தான் : தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் இந்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதாகச் சொன்னார்கள். நன்றி. இரண்டு மதகுகளில் ஒரு மதகின் பணி முடிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இன்னும் ஒரு மதகு சீர் செய்ய வேண்டியிருக்கிறது. இதனால் சுமார் 350 ஏக்கர் நிலங்கள் சாகுபடி செய்யமுடியாமல் இருக்கின்றன. அந்த பணியை இந்த ஆண்டிலேயே செய்து முடிக்க அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது; தலைவர் அவர்களே, இன்னும் இரண்டு, மூன்று மாதங்களில் அந்தப்பணியை முடித்து விடலாம் என்று அரசு கருதுகிறது.

உடைந்துப் போன ஆத்தங்கரைப்பட்டி அணையினை மீண்டும் கட்டும் திட்டம்

வினா எண். 75 திரு. வே. இரா. ஜெயராமன் மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வைகையாற்றில் கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின்போது உடைந்து போன ஆத்தங்கரைப் பட்டி அணையினை திப்பரவு என்னுமிடத்தில் மீண்டும் கட்டும் திட்டம் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) மற்றும் (ஆ) ரூ. 21.20 லட்ச மதிப்பீட்டில் இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனைக்கு வந்து இப்போது அதற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். நன்றி. இதனால் எத்தனை ஏக்கர் நிலங்கள் பயன் பெறும்? பழைய ஆயக்கட்டுகள் இதிலே சேர்க்கப் பட்டிருக்கின்றதா? புதிய ஆயக்கட்டுகள் எவ்வளவு சேர்க்கப் பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தில் சுமார் 806 ஏக்கர் புதிய மற்றும் பழைய நிலங்கள் பயனடையும். ஆத்தங்கரைப் பட்டி அணையின் கீழ் வரும் 220 ஏக்கர் நிலங்களும் இந்தத் திட்டத்தில் புதியதாக சேர்க்கப்பட்டிருக்கின்றன.

தமிழ்நாட்டில் வெட்டியெடுக்கப்படும் கரும்பாறைகள்

*வினா எண். 76—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் கள்ளத்தனமாக கரும்பாறையை வெட்டி எடுத்து ஏற்றுமதி செய்வதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகள் மற்றும் இந்திய அரசின் 1957 ஆம் ஆண்டு கனிமங்களும் சுரங்கங்களும் (முறைப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) சட்டம், இவைகளில் அரசுக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு கள்ளத்தனமாக கரும் பாறைகளை வெட்டியெடுத்து ஏற்றுமதி செய்வதை அபராதம் விதித்து அல்லது நீதி மன்றங்களில் வழக்கு தொடுத்து அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பாறையை தனியார் வெட்டியெடுத்து ஏற்றுமதி செய்வதைத் தடைசெய்து அரசே ஏற்றுமதி செய்தால் அந்நியச் செலாவணி அதிகம் கிடைக்குமே, அரசு சொந்தப் பொறுப்பில் அவற்றை வெட்டியெடுத்து மெருகேற்றிக் வெளிநாடுகளுக்கு அனுப்பும் உத்தேசம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கனவே 'டாமின்' நிறுவனம் இந்தப் பணியில் ஈடுபட்டிருக்கிறது. சுமார் ஒரு கோடி ரூபாய் வரையில் இது வரைக்கும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்திருக்கிறது. ஏற்கனவே உரிமம் அதாவது லீஸ் பெற்றுக் கொண்டிருப்பவர்கள் தொடர்ந்து அந்தப் பணியைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய லீஸ் முடிகிறபோது டாமின் நிறுவனம் எடுத்து வெட்டி அனுப்புகிற முயற்சியில் ஈடுபடும்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தலைவர் அவர்களே, வெளிநாடுகளில் இந்தக் கரும்பாறையை எந்த எந்தப் பணிகளுக்காக பயன்படுத்துகிறார்கள் என்பதை நேரில் கண்டறிய சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய நிபுணர் குழு ஒன்று வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

திரு. உ. சுப்பிரமணியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, டாமின் மூலம் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் கட்டிங் அண்ட் பாலிஷிங் யூனிட் ஏற்பாடு செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதா? அதற்குப் பணம் ஒதுக்கியுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, சுமார் மூன்று கோடி ரூபாயில் கட்டிங் அண்ட் பாலிஷிங் யூனிட் ஒன்றை சென்னை துறைமுகத்தின் அருகிலே நிறுவதற்கான பணியில் ஈடுபட்டிருக்கிறது. அரசு நிதி ஒதுக்கப் செய்திருக்கிறது. ஐ.டி.பியிலேயிருந்து கடன் வரவேண்டி இருக்கிறது. அது வந்த பிறகு இயந்திரங்கள் வெளிநாட்டிலிருந்து வாங்க வேண்டியிருக்கிறது. அதெல்லாம் முடிந்த பிறகு அந்த கட்டிங் அண்ட் பாலிஷிங் யூனிட் புதிதாக துவங்கப்படும்.

(முற்பகல் 10-10)

திரு. ப. சுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற கள்ளத்தனமாக கல்லை வெட்டுவதைத் தடுப்பதற்கு, இந்த அரசுக்குத் தேவைப்படாத கறுப்புக் கல்லை தனியார்களுக்குக் குத்தகைக்கு கொடுக்க அரசுக்கு உத்தேசம் உண் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே உரிமம் பெற்றிருப்பவர்கள், லீஸ் பெற்றிருப்பவர்கள் வெட்டி எடுத்து அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். புதிதாக, அரசாங்கத்திற்குத் தேவையில்லையென்றால், அல்லது டாமின் நிறுவனத்தாலே செய்ய மு ய



வில்லையென்றால், மிகக் குறைவாக இருக்கிற பகுதிகளில், மிக ரெமோட்டான பகுதிகளில் இருக்கிற பிளாக்ரைட்டைப் பொறுத் வரைக்கும் தனியாருக்குக் கொடுக்கலாமா என்பதைப் பற்றி அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

சோளிங்கர் நகருக்கருகிலுள்ள மலைப் பகுதிகளில் கிடைக்கக் கூடிய கனிப்பொருள்.

*வினா எண். 77 திரு. சி. கோபால்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு மாவட்டம் சோளிங்கர் நகருக்கு அருகில் உள்ள மலைப்பகுதிகளில் கனிப்பொருள் ஏதாவது கிடைக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளனவா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: ஆம். இது 'டாமின்' நிறுவனத்தின் ஆய்விலுள்ளது.

கூடலூரிலுள்ள மைக்கா சுரங்கங்கள்.

*வினா எண். 78 திரு. கே. உச்சி: —மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் உள்ள கூடலூரில் மைக்கா சுரங்கங்களைத் தனியார் அனுபவித்து வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், வருடம் ஒன்றுக்கு உற்பத்தியாகும் மைக்காவின் அளவு எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ் திருநாவுக்கரசு: (அ) ஆம்.

(ஆ) 1979-80 ஆண்டு 23 டன்னும் 1980-81 ஆம் ஆண்டு 58 டன்னும் மைக்கா அந்தப் பகுதியில் தோண்டி எடுக்கப் பட்டுள்ளது. ஏற்கனவே ஆரம்பத்துலே லீஸ் பெற்ற சுமார் 12 பேர்கள் அந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கிறார்கள்.

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, அந்த லீஸ், உரிமம் பெற்றவர்கள் எந்த அடிப்படையில் பெற்றிருக்கிறார்கள் என் பதையும் அதனால் அரசுக்கு என்ன இலாபம் கிடைக்கிறது என்றும் தெரிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, அரசுக்கு சீனரேஜ் கிடைக்கிறது! என்ன அடிப்படையிலே என்றால் அதிலே அடிப்படை ஒன்றும் இல்லை.

டாமின் நிறுவனம் செய்யமுடியாத பகுதிகளில். தேவையில்லையென்ற பகுதிகளில், மிகக் குறைவாக இருக்கிற பகுதிகளில், தனியார்கள் விண்ணப்பம் செய்கிறபொழுது, அது மாவட்ட ஆட்சித் தலைவரால் பரிசீலிக்கப்பட்டு, ஜியலாஜிஸ்ட்டால் பரிசீலனை செய்யப்பட்டு, தொழில் துறை இயக்குநரால் பரிசீலனை செய்யப்பட்டு, தொழில் துறை செயலாளரால் பரிசீலனை செய்யப்பட்டு அதற்குப் பிறகு முடிவு எடுக்கப்படுகிறது.

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, அந்த மைக்கா தொழில் மிகவும் இலாபகரமான ஒரு தொழில். அந்தத் தொழிலில் அதிகமாக ஆந்திரத்து மக்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அதனால் நம் பகுதியிலே உள்ளவர்கள் அப்பணியை செய்ய முன்வருவார்களானால் அதற்கு முன்னுரிமை வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: யார் முன் வந்தாலும் அரசு பரிசீலிக்கும்.

திரு. மு. அரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனிவளத்தின் மூலம் தனியார்கள் கொள்ளை இலாபம் அடிப்பதைத் தடுப்பதற்காக அதை அரசுடைமையாக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு, தமிழ்நாடு கனிம நிறுவனம், தமிழ்நாடு மாக்னசைட் கார்ப்பரேஷன் என்ற இந்த இரண்டு நிறுவனங்களும் தமிழகத்திலே வெட்டப்படுகிற கனிமங்கள் தனியார்களிடம் இருக்கின்றன என்ற காரணத்தால், அரசாங்கமே அவற்றை வெட்டி எடுத்து ஏற்றுமதி செய்ய வேண்டுமென்ற உணர்வோடுதான் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் நிறுவப்பட்டு, அந்த இரண்டு நிறுவனங்களும்—தமிழ்நாடு கனிம நிறுவனம், தமிழ்நாடு மாக்னசைட் கார்ப்பரேஷன்— இலாபத்தில் இயங்கிக் கொண்டு வருகின்றன. இந்த இரண்டு கார்ப்பரேஷன்களும் தன்னாலே முடிந்த பகுதிகளில் எல்லாம் கனிமங்களை வெட்டியெடுத்து, உள்நாட்டிலேயும் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்தும் விற்கும் பணியிலே ஈடுபட்டிருக்கின்றன.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, கூடலூரில் மைக்கா மைன்ஸ் இருக்கிற பகுதி முழுவதும் ஏராளமான மைக்கா டெப்பாசிட்ஸ் இருக்கின்ற இடம் தனியார்கள் உரிமம் பெற்று பல சந்தர்ப்பங்களில், அவர்கள் அந்த மைக்கா மைன்ஸை மூடிவிட்டுப் போய் விடுகிறார்கள். அதனால் அந்த மைக்கா பொருள் உற்பத்தியும் நின்றுபோகிறது, தொழிலாளர்களுக்கும் வேலை போகிறது. ஆகவே, அந்த நிலைமையை அரசாங்கம் ணக்இல் கொண்டு, அரசுக்கு நல்ல வருமானம் சம்பாதித்துக்





கொடுக்கும் என்ற அந்த முறையில் லீசுக்கு விடாமல் அதை அரசாங்கம் தானே எடுத்து, தான் வைத்திருக்கக்கூடிய கனிமப் பொருள் கார்ப்பரேஷன் மூலமாகவே இதையும் நிர்வகிக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் சொன்னதைப் போல் 12 பேர்களுக்கு, 1970–லேயே லீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுதெல்லாம் அதிகபட்சம் ஆறு ஆண்டுகளுக்கு மேலே அவர்களை வெட்டியெடுத்துத் தொழிற்சாலைகளுக்குப் பயன்படுத்தும் அந்த அமைப்பாக இருந்தால்தான் கொடுக்கிறோம். வெட்டி எடுத்து விற்பவர்களுக்கு மூன்று ஆண்டுகளுக்குத்தான் கொடுக்கிறோம். 1979-ஆம் ஆண்டு சமயத்தில் 20 ஆண்டுகள் என்று கொடுத்து அது 93, 92, 89, 88, 85 என்று இப்படித்தான் லீஸ் முடிகிறது. அதை நாம் இடையிலே தடுத்தால் அவர்கள் நீதிமன்றத்திற்குப் போகக்கூடிய வாய்ப்பிருக்கிறது. ஏற்கெனவே லீஸுக்குக் கொடுத்து 93 லேதான் முடிகிறது என்றால் அதை இப்பொழுது நாம் நிறுத்த முடியாது. ஆனால் புதிதாக எடுக்கின்ற அளவிற்குத் தரமாகவும் இருந்து அதிகமாகவும் இருந்தால் டாமின் நிறுவனம் அந்த முயற்சியிலே ஈடுபடும்.

தொழில் நிறுவனங்களுக்காக செய்யப்படும் நில ஆர்ஜிதம்.

*வினா எண். 79—திரு. ஆர். தியாகராசன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் நிறுவப்படும் தொழில் நிறுவனங்களுக்கு அரசு அல்லது தனியார்துறை நிலம் ஆர்ஜிதம் செய்யும்போது அதனால் பாதிக்கப்படும் நில சொந்தக்காரர்களின் குடும்பத்தாருக்கு அந்த நிறுவனங்களில் வேலை வாய்ப்பு அளிக்க அரசு திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: அரசு நிறுவனங்களுக்காக நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு நிலமிழந்த குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு ஒரு நபர் வீதம் வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை தனது 29–6–1978 ஆம் நாளிட்ட ஆணை நிலை எண் 656–ல் அரசு அனைத்து பொதுத்துறை நிறுவனங்களும் நிலமிழந்த குடும்பங்களுக்கு, குடும்பத்திற்கு ஒருவர் வீதம் வேலை வாய்ப்புத் துறையினை அணுகாமல் நேரடியாக வேலை வாய்ப்பளிக்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளது. இந்த ஆணை தற்பொழுது அமுலில் உள்ளது.

தனியார் துறைகளுக்கு நிலம் ஆர்ஜிதம் செய்யும்போது அதனால் பாதிக்கப்படுவோருக்கு வேலை வாய்ப்பு அளிப்பது சம்பந்தமாக அரசினுடைய கவனத்திலே, பரிசீலனையிலே இருக்கிறது.

திரு. எல். இளையபெருமாள்: பேரவைத் தலைவரவர்களே, நெய்வேலி பகுதியில் இரண்டாவது சுரங்கம் வெட்டும்பொழுது அங்குள்ள ஆதிதிராவிட மக்களுக்கும், பின்தங்கிய மக்களுக்கும் சொந்தமான நிலங்கள் எடுக்கப்பட்டும் இன்று வரையிலேயும் அவர்களுக்கு உத்தியோகம் கொடுக்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அப்படியிருக்கும்பொழுது, தற்பொழுது உத்தரவு இருப்பதால் அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதற்காக ஏற்கனவே அந்தப் பகுதியிலே சில கிளர்ச்சிகள் ஏற்பட்டபொழுது மாவட்ட ஆட்சித் தலைவர் அளவிலே பேச்சு வார்த்தை நடந்தது. அதற்குப் பிறகு அரசாங்க அளவிலேயும் நானும்கூட அந்த அதிகாரிகளை யெல்லாம் வரச்சொல்லி நம்முடைய அதிகாரிகளை வைத்துக் கொண்டு பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டு முடிந்த அளவிற்கு அந்தப் பகுதியில் உள்ள அனைவருக்கும் அதிலும் குறிப்பாக நிலம் கொடுத்திருக்கும் அனைவருக்கும் வேலை வாய்ப்பை நிச்சயமாகக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறோம்.

THIRU L. ILAYAPERUMAL: My question has not been answered properly. That is why, I want to put another question.

MR. SPEAKER: You must give notice for another question; but not now.

திரு. தி. அன்பழகன்: பேரவைத் தலைவரர்களே, புதிதாக ஒரு பகுதியிலே தொழில் துவங்கப்படும் பொழுது அந்தப் பகுதியிலே உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பொதுக் கேள்வி.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவரவர்களே, தொழில் நிறுவனங்களுக்கு நிலம் ஆஜிதம் செய்யும்பொழுது, அதனால் பாதிக்கப்படும் நிலச் சொந்தக்காரர்களின் குடும்பத்தாருக்கு வேலைவாய்ப்பு அளிப்பதிலே, அரசு நிறுவனங்களாக இருந்தால் வாய்ப்பளிக்கப்படுவதாகவும், தனியார் துறைகளில் நிலம் ஆர்ஜிதம் செய்யும்போது பாதிக்கப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பது சம்பந்தமாகப் பரிசீலனையில் உள்ளது என்றும் அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆலங்குளம் சிமெண்ட் ஃபேக்டரிக்கு நிலம் ஆர்ஜிதம் செய்யும்பொழுது பாதிக்கப்



பட்டவர்கள் மனுச் செய்தும் இன்னும் பலருக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கப்படவில்லை. வெளியிலேயிருந்து அவர்கள் ஆட்களை எடுக்கிறார்கள். எனவே, தனியார் துறைகளுக்கு நிலம் ஆர்ஜிதம் செய்யும்போதும் அதனால் பாதிக்கப்படுகின்றவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டுமென்ற கண்டிஷனைப் போட்டு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தனியார் துறைகளுக்கு நிலம் ஆர்ஜிதம் செய்யும்பொழுது அதனால் பாதிக்கப்படுவோருக்குவேலைவாய்ப்பு அளிப்பது சம்பந்தமாக அரசு பரிசீலித்து வருகிறது. பொதுத் துறை நிறுவனங்களுக்கான தொழிற்சாலைகளுக்கு நிலம் ஆர்ஜிதம் செய்யும்பொழுது நிலம் கொடுத்தவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. ஆனால் அதை நடைமுறைப்படுத்துவதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன. உதாரணமாக ஒரு குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலைவாய்ப்பு என்ற முறையில் நிலம் கொடுத்த அனைவருக்கும் கொடுப்பது என்று சொல்லும்பொழுது அந்தக் குடும்பத்தில் 45 அல்லது 50 வயதல் ஒருவர் இருக்கலாம். ஆனால் அந்தத் தொழிற்சாலைக்குத் தேவைப்படுகின்றவர்களோ 10 ஐ.டி.ஐ. படித்தவர்களாக இருக்கலாம். நிலம் கொடுத்தவரோ 5 ஆவது வரை படித்த 51 வயதானவராக இருந்தால் அவரை வேலைக்கு எடுத்துக்கொள்ள முடியாது. டெக்னோகிராட்ஸ் தேவைப்படாமல், ஐ. டி. ஐ. போன்ற படிப்பு அறிவு தேவைப்படாத, உழைப்பு மட்டுமே தேவைப்படும் வேலையாக இருந்தால் இவர்கள் தேர்வு செய்யப் படுவார்கள். டெக்னிக்கல் போஸ்டாக இருந்தால், அந்தக் குடும்பத்திலே யாராவது அந்தப் படிப்பு படித்தவராக இருந்தால் அவர் அப்சார்ப் செய்யப்படுவார். ஆகவே, தேவைக்கேற்ப, தொழிற்சாலையின் அளவிற்கேற்ப அக்காமடேட் செய்யப்படு கிறார்கள்; இடம் தரப்படுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 80 மாண்புமிகு அமைச்சரின் வேண்டுகோளுக் கிணங்க ஒத்திவைக்கப் பெறுகிறது.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

(முற்பகல் 10—20)

2. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு அளித்தல்.

திரு. என். சங்கரய்யா: பாயிண்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, திரு. கு. ரமணி, எம்.எல்.ஏ. அவர்களுக்கு 6-1-1983 அன்று அவர் சட்டமன்ற உறுப்பினர் பணியை ஆற்றக்கூடிய காலத்தில், அவருக்குக் கொலை மிரட்டல் டெலிபோன் மூலம்

வந்து, அது குறித்து 28-1-1983 அன்று தங்களிடத்திலே ஒரு விரிவான கடிதம் கொடுத்து இருக்கிறார். ஒரு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குக் கொலை மிரட்டல் வருமானால் அவருக்குத் தக்க பாதுகாப்புக் கொடுக்க வேண்டியது தங்களுடைய பொறுப்பிலே அடங்கும். அந்தக் கடிதத்தின்மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்,

**மாண்புமிகு** பேரவைத் தலைவர்: சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எல்லா இடங்களிலும் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்பது பேரவைத் தலைவரின் கீழ் வராது. அவருடைய கடிதத்தை முதல்வர் அவர்களுக்கும் முன்னவர் அவர்களுக்கும் அனுப்பி இருக்கிறேன். அதன்மீது மாண்புமிகு முதலமைச்சர் நடவடிக்கை எடுப்பார் என்று நம்புகிறேன்.

(ஆ) முன் அனுமதியின்றி எழுப்பப் பெறும் பிரச்னைகள்.

திரு. பொ. உத்திராபதி: தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். தஞ்சை மாவட்டத்தில் நெல் கொள்முதல் செய்வது குறித்த........

**மாண்புமிகு** பேரவைத் தலைவர்: தயவு செய்து உட்காருங்கள். எதற்கும் ஒரு வரைமுறை இருக்கின்றது. இந்தப் பிரச்சினை குறித்து ஒத்திவைப்புத் தீர்மானமாகவோ அல்லது கவன ஈர்ப்புத் தீர்மானமாகவோ கொண்டு வாருங்கள். அதைவிட்டு பொத்தாம்போக்கிலே எழுந்து சொல்வதை அனுமதிக்க மாட்டேன். (குறுக்கீடு) அப்படியானால் அதை என் அறையிலே வந்து கேளுங்கள். அவையிலே அனுமதிப்பதற்கு இல்லை. உங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. சிவசாமி பேசப் போகிறார். அவரிடம் சொல்லிப் பேசச் சொல்லுங்கள்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். உறுப்பினருடைய உரிமையைப் பாதிக்கின்ற ஒரு விஷயம்........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படியானால் அதை உரிமை மீறல் பிரச்சினையாகக் கொண்டு வாருங்கள்.

3. கவன ஈர்ப்பு.

அம்மாண்டிவிளையிலுள்ள கயிறு ஆலை மூடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் ஜே.ஹேமச்சந்திரன், டி. மணி, எம். செல்லமுத்து ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.





திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் அம்மாண்டிவிளையிலுள்ள கயிறு ஆலை 7-9-1982 முதல் மூடப்பட்டுள்ளதால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளது குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

கன்னியாகுமரி மாவட்டம், அம்மாண்டிவிளையிலுள்ள கயிறு ஆலை, 'டாக் ப்ளோர்' (Tac Floor) என்ற பெயரில் தி ஆலப்பி கோ. லிமிடெட், ஆலப்பி என்ற நிர்வாகத்தின்கீழ் பாய்முடை பொருட்களை உற்பத்தி செய்து வந்தது. இந்த நிறுவனத்தில் சுமார் 150 தொழிலாளர்கள் பணியாற்றி வந்தனர். தொழிலாளர்கள் அனைவரும் டாக் ப்ளோர் தொழிற்சங்கத்தில் (சி.ஐ.டி.யூ.) உறுப்பினர்.

மேற்படி ஆலப்பி கம்பெனி நிர்வாகம் தங்களது 4-9-1982 தேதிய அறிவிப்பில் கீழ்க்கண்டவாறு ஒரு அறிவிப்பைத் தொழிலாளர்களுக்கு விடுத்தது.

"இந்திய அரசும் கயிறு வாரியமும் கயிறு உற்பத்தி பொருட்களை ஏற்றுமதி செய்ய அனுமதி மறுத்துள்ளதால் டாக் ப்ளோர் நிறுவனத்தை மேற்கொண்டு ஆதாயத்துடன் நடத்த இயலாத நிலையில், வில்லியம் குடாக்கர் அண்ட் சன்ஸ் இந்தியா லிமிடெட், ஆலப்பி தொழில் நிறுவனத்துடன் ஓர் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு, அதன் படி டாக் ப்ளோர் தொழிற்சாலை வில்லியம் குடாக்கர் அண்ட் சன்ஸ் இந்தியா லிமிடெட் அவர்களுக்கு மாற்றப்பட்டது. மேற்கண்ட ஒப்பந்தத்தில் டாக் ப்ளோர் தொழிற்சாலையில் வேலை செய்த அனைத்து தொழிலாளர்களுக்கும் சேரவேண்டிய நட்ட ஈட்டுத் தொகையை ஆலப்பி கம்பெனி வழங்கும். பழைய நிர்வாகத்தின் கீழ் வேலை செய்துவந்த எல்லா தொழிலாளர்களுக்கும் தொழிற் தகராறு சட்டப் பிரிவு 25 FF-ன் கீழ் ஒரு மாத ஊதியம் மற்றும் அனைத்து நட்ட ஈட்டுத் தொகைகள் வழங்கப்படுவதால் 4-9-1982 முதல் அனைத்துத் தொழிலாளர்களின் பணி நிறுத்தப்பட்டதாகக் கருதப்படும்".

வில்லியம் குடாக்கர் அண்ட் சன்ஸ் இந்திய லிமிடெட் நிர்வாகம் தங்களது 6-9-1982 தேதி கடிதத்தில் டாக் ப்ளோர் நிறுவனம் 6-9-1982 முதல் தங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது என அறிவித்தது.

இந் நிலையில் டாக்ப்ளோர் தொழிற்சங்கம் வேலை இழந்த தொழிலாளர்கள் அனைவருக்கும் மீண்டும் வேலை வாய்ப்புக் கிடைக்க 9-9-1982 தேதிய கடிதம் மூலம் நாகர்கோவில் தொழிலாளர் துறை உதவி ஆணையர் அவர்கள் முன் தொழிற் தகராறு சட்டப்பிரிவு 2(கே)—ன் கீழ் ஒரு தொழிற்தகராறு எழுப்பினர். 1[illegible]—9—1982—ல் நாகர்கோவில் தொழிலாளர் துறை உதவி ஆணையர் இரு தரப்பினரையும் அழைத்து பேச்சு வார்த்தை நடத்தினார். பின்னர் தொழிலாளர் துறை இணை ஆணையர் அவர்களால் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டது. 17—12—1982 அன்று நடந்த பேச்சுவார்த்தையில் இரு தரப்பாரும் தங்களுக்குள் நேரடிப் பேச்சு வார்த்தைகள் நடத்த விருப்பம் தெரிவித்தனர். அதன்படி, பிரச்சினை இருதரப்பினரின் நேரடி பேச்சு வார்த்தைக்கு (Bilateral Talks) விடப்பட்டது. மேற்படி இரு தரப்பினரின் பேச்சு வார்த்தை முடிவுகள் தெரியாத நிலையில், மீண்டும் 24—1—1983 அன்று இரு தரப்பினரும் பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டனர். 24—1—1983 அன்று போடப்பட்ட பேச்சு வார்த்தைக்கு நிர்வாகம் ஒத்தி வைப்புக் கோரியது, தொழிற்சங்கம் வரவில்லை. மீண்டும் பேச்சு வார்த்தைகள் தொடரப்பட்டு இத்தகராறை சுமுக முடிவுக்குக் கொண்டு வர முயற்சிகள் தொடரப்படும். தற்போது நிலைமை அமைதியாக உள்ளது.

*திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் 'இந்திய அரசும் கயிறு வாரியமும் கயிறு உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்ய அனுமதி மறுத்துள்ளதால் டாக்ப்ளோர் நிறுவனத்தை மேற்கொண்டு ஆதாயத்துடன் நடத்த இயலாத நிலையில், வில்லியம் குடாக்கர் அண்ட் சன்ஸ் இந்தியா லிமிடெட் ஆலப்பி தொழிற் நிறுவனத்துடன் ஓர் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு, அதன்படி டாக்ப்ளோர் தொழிற்சாலை வில்லியம் குடாக்கர் அண்ட் சன்ஸ் இந்தியா லிமிடெட் அவர்களுக்கு மாற்றப்பட்டது' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. உண்மை என்னவென்றால் வில்லியம் குடாக்கர் அண்ட் சன்ஸ் இந்தியா லிமிடெட் கம்பெனி டாக்ப்ளோர் கம்பெனியின் முதலாளிக்கு பங்கு உள்ள மற்றொரு கம்பெனியாகும். இந்த காரணத்தைச் சொல்லி தொழிலாளர்களையும் அரசையும் ஏமாற்றுவதற்காகத்தான் இப்படிப்பட்ட நடவடிக்கையை முதலாளிகள் எடுத்துள்ளனர்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் கேள்வியாகக் கேட்க வேண்டும். சொற்பொழிவு செய்யக் கூடாது. உங்களுடைய பிரச்சினையை கன்சிலியேஷன் மூலமாகத்தான் தீர்த்துக் கொள்ள முடியும் என்று நான் நினைக்கிறேன். நானும் ஏற்கனவே தொழிலாளர் நல அமைச்சராக இருந்ததால் இதைச் சொல்லுகிறேன். அதை விட்டு இப்போது கேள்வியை மட்டும் கேளுங்கள்.



*திரு. ஜே. ஹேமச்சந்திரன்; தலைவர் அவர்களே, இந்த அம்மாண்டிவிளையிலுள்ள கயிறு ஆலை ஆசியாவிலே உள்ள கயர் மெக்கனைஸ்டு ஆலையிலே மிகப் பெரிய ஆலை. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காகத்தான் மத்திய அரசால் லைசன்சு வழங்கப்பட்ட போதிலும், இப்படிப்பட்ட தொழிற்சாலையில் உள்ள தொழிலாளர்களை கேஷுவல் அல்லது சீசனல் தொழிலாளர்களாக மாற்றுவதற்காகவும், அவர்களுடைய வேஜஸ்களைக் குறைப்பதற்காகவும், இந்த ஆலை முதலாளிகள் முன்னறிவிப்பில்லாமல் மற்றொரு நிர்வாகத்திற்குக் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்று சொல்லி, கதவடைப்பு செய்திருக்கிறார்கள். இதனால் நேரடியாக 180 தொழிலாளர்களுக்கும் இந்தக் கம்பெனிக்கு 'ரா—மெட்டிரியல்ஸ்' சப்ளை செய்கின்ற தொழிலாளர்கள் ஆயிரக்கணக்கானவர்களுக்கும் வேலை இழப்பு ஏற்பட்டிருக்கிறது. எனவே இந்த ஆலையை உடனடியாக திறப்பதற்கும், அவர்களுக்கு வேலை கொடுப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்,

*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல் டிரான்ஸ்பர் ஆஃப் மேனேஜ்மெண்ட், ஒரு நிர்வாகத்திலிருந்து வேறு ஒரு நிர்வாகத்திற்கு நிர்வாகம் மாற்றப்பட்டிருக்கிறது. ஆனால் தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய 25 எப்.எப். சட்டத்தின்படி, கிடைக்க வேண்டிய பணத்தை தருகிறோம் என்று சொல்லுகிறார்களே தவிர, எடுத்துக் கொண்ட புதிய நிர்வாகத்தில் வேலை தருகிறோம் என்று உத்தரவாதம் தரப்படவில்லை. எனவே இதையொட்டி தொடர்ந்து பேச்சு வார்த்தை நடந்தது. இன்னும் நடந்து கொண்டிருக்கிறது. அந்தப் பேச்சு வார்த்தை தொடர்ந்து நடைபெறும்.

*திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இது இல்லீகல் டிரான்ஸ்பர் என்பதை அரசு அறியுமா? ஏன் என்றால், ஒரே முதலாளி பங்குள்ள 2 கம்பெனியிலே, ஒரு கம்பெனி மற்றொரு கம்பெனிக்கு டிரான்ஸ்பர் என்று சொல்லி, தொழிலாளர்களைப் பழிவாங்க வேண்டுமென்ற முறையிலே நடவடிக்கை இருக்கிறது. இன்று கயிறுத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு மத்திய அரசால் பல கோடிக்கணக்கான ரூபாய்கள் ஒதுக்கப்பட்டு, அதை அபிவிருத்தி செய்வதற்கு ஒரு பக்கத்திலே நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய நேரத்திலே இப்படி மத்திய அரசு லைசென்சை வழங்குவதில்லை என்று மூடிவிடுவதாலே, மாநில அரசு மத்திய அரசை அணுகி அந்த ஆலை முதலாளி—லட்சக்கணக்கான ரூபாய் அரசினுடைய பல்வேறு நிறுவனங்களிலே இருந்துதான்—கடனாகப் பெற்றுத்தான் இந்த ஆலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த ஆலையை அரசே ஏற்று அரசுப்—பொறுப்பிலே நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு எஸ்.இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இருக்கிற தகவல் பிரகாரம் 25 எப். எப், சட்டத்தின்படி டிரான்ஸ்பர் ஆப் மேனேஜ்மெண்ட், நிர்வாகம் மாற்றப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை இல்லீகல் டிரான்ஸ்பர் ஆஃப் மேனேஜ்மெண்ட் என்று சொல்கிறார்கள். எனவே கன்சிலியேஷன் புராசிடிங்க்ஸ் நடக்கும்போது இதைப்பற்றியெல்லாம் ஆதாரங்களோடு அவர்கள் எடுத்து வைப்பார்களேயானால், இதை அதிகாரிகளிடம் அரசுக்கு அறிக்கை வரும்போது, அதைப்பற்றி பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க முடியும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*திரு. டி.மணி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் சில விவரங்களை இங்கே தந்திருக்கிறார்கள். இதிலே முக்கியமான பிரச்சினை என்னவென்றால் தமிழகத்திலேயிருந்து பல்வேறு பகுதிகளில், பல்வேறு மாவட்டங்களில் இருக்கின்ற கூட்டுறவுத் துறையின் மூலமாக தயார் செய்யப்படுகின்ற ஈரிழைக் கயிறிலிருந்து ஒரு பகுதியிலிருந்துதான் அந்த டாக் ப்ளோர் ஆலை நடந்து வருகிறது. அதனாலே ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் கொல்லங்கோடு பகுதியிலேயிருந்து, நீரோடியிலேயிருந்து கலிங்க ராஜபுரத்திலிருந்தும் அரசாங்கத்தினுடைய கூட்டுறவுத் துறையின் மூலமாக உற்பத்தி செய்கின்ற கயிறு உற்பத்தி செய்யும் தொழிலில் ஈடுபட்டிருந்த ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே, வெறும் 150 தொழிலாளர்கள்மட்டும் அல்ல. இதனால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலைமையைக் கணக்கில் எடுத்துக் கொண்டு அந்த தொழிற்சாலையைத்திறப்பதற்கு முதலாளி தயாராக இல்லையென்றாலும் அரசாங்கமே அதை ஏற்று நடத்த முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. எஸ்.இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்சினை என்னவென்றால், அப்படிப்பட்ட ஒரு தொழிற்சாலை இப்போது இல்லை. வில்லியம் குடாக்கர் அண்ட் சன்ஸ் கம்பெனி லிமிடெட் என்ற நிர்வாகம் தங்களது 6-9-1982 தேதி கடிதத்தில் டாக் ப்ளோர் நிறுவனம் 6-9-1982 முதல் தங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று அறிவித்துவிட்டது. இது 'மாலபைடி டிரன்ஸ்பரா' 'போனபைடி டிரான்ஸ்பரா' என்பதைப் பார்க்க வேண்டும். நீங்கள் விவாதம் செய்யும்போது அதைத் திறமையாக எடுத்துவைத்தால், அரசுக்கு வருகிற தகவலைக் கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதை அரசு பரிசீலனை செய்யும்.

திரு. எம் செல்லமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலையை மூடி ஏறத்தாழ 5 மாதம் ஆகிறது. 5 மாதமாக கன்சிலியேசன் நடந்து கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இதை எவ்வளவு காலத்தில்



முடிப்பார்கள்? இதை உடனடியாக முடித்து அந்தத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிக்கக்கூடிய முறையில் இந்த நிறுவனத்தை அரசே ஏற்று நடத்த முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10—30)

*மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, 24-1-1983 அன்று பேச்சு வார்த்தைக்கு ஏற்பாடு செய்தபோது நிர்வாகம் ஒத்தி வைப்பு கோரியது. தொழிற் சங்கம் வரவில்லை. எனவே, அந்த சமரசப் பேச்சு வார்த்தையிலே, அதிகாரிகளுக்கு இருக்கிற சிரமத்தை அருள் கூர்ந்து கவனிக்க வேண்டுகிறேன். நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் ஒத்திவைப்பு கேட்கிறார்கள். தொழிற் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் வருவதில்லை. எனவே இருசாராரும் விரைவிலே வந்து அந்தப் பேச்சு வார்த்தையிலே ஒரு முடிவு காணவேண்டுமென்று அவர்கள் வருவதற்கு ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும். அவர்கள், முதலாளி அவசியம் கலந்து கொள்ள வேண்டுமென்று சம்மன் அனுப்பவேண்டுமென்பதற்காகவே ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து மத்திய அரசிற்கு அனுப்பியிருக்கிறோம். அது உங்களுக்குத் தெரியும். இந்த ஆண்டுக்கு முன்னால் நிறைவேற்றப்பட்ட, சம்மனிங் பவர்ஸ் பார் தி கன்சிலியேஷன் ஆபீசர்ஸ் அதற்கு இன்னும் பிரசிடென்சியல் அசென்ட் கிடைக்கவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. அறிக்கை அளித்தல்,

உரிமைக் குழுவின் அறிக்கை.

மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்: தலைவர் அவர்களே, பொதுப் பணித்துறை முன்னாள் தலைமைப் பொறியாளர் திரு. மணவாளன் அவர்கள் மீது எழுப்பப் பற்ற உரிமை மீறல் பிரச்சினை பற்றிய உரிமைக் குழுவின் அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

5. அறிவிப்பு.

மதுவிலக்கு திருத்தச் சட்ட முன்வடிவு 1983 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு மதுவிலக்கு திருத்தச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்வதற்கும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

## 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) மதுவிலக்கு திருத்தச் சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு மதுவிலக்கு திருத்தச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்."

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தின் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்திலே இருக்கக்கூடிய கடைசிப்பகுதி மாநிலத்தை விட்டு மாநிலத்திற்கு மது கடத்தப்பட்டால், அவற்றை அதிகாரிகள் கண்டுபிடிக்கிறார்கள், அது ஸ்மகிளிங் செய்யப்பட்டதா, செய்யப்படவில்லையா, அல்லது அந்த லைசென்சு பெறுவது சம்பந்தமான பணம் 'அமௌண்ட்' சம்பந்தமாக அதிகாரிகள் தவறு இழைக்கிறார்கள் என்று சொல்லி சில நடவடிக்கைகள் எடுக்கின்றபோது, நீதிமன்றத்திற்குச் சென்று அதில் தங்கள் பக்கம் நியாயம் இருக்கிறது என்று வாதாடுகின்ற உரிமை மனுதாரர்களுக்கும் அல்லது அப்பொருள் யாரிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டதோ அவர்களுக்கும் இருக்க வேண்டும். அதைவிட்டுவிட்டு, அதிகாரிகள் சொல்வது இறுதித் தீர்ப்பு என்று இருக்கக்கூடாது. அதிகாரிகள் கடத்தல் செய்கிறார்கள் என்று தவறான முடிவை எடுத்துவிட்டால்கூட, அதில் நியாயம் பெறுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடும். அதுமட்டுமல்ல, அதில் ஏதாவது ஒரு சின்ன தவறு, தப்பு நடந்துவிட்டால் கூட அதில் முடிவு எடுக்கும் உரிமை நீதிமன்றத்திற்கு இருக்க வேண்டும். அந்த உரிமை நீதிமன்றத்தில் இருந்து பிரிக்கப்படுவது என்பது சரியல்ல. எனவே இந்தத் திருத்தத்தை நான் எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு மதுவிலக்கு திருத்தச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று. அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இச்சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்டமுன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.



### (ஆ) சென்னை உயர்நீதிமன்ற (விசாரணை அதிகார வரம்பினை) நீட்டித்தல் சட்ட முன்வடிவு), 1983.

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"1983-ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்ற (விசாரணை அதிகார வரம்பினை) நீட்டித்தல் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்."

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தின் தலைவர் அவர்களே, இதிலே சில முக்கியமான பிரச்சினைகள் இருக்கின்றன. செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த 12 ஊராட்சிப் பகுதிகள் சென்னைக்கு அருகே உள்ள அந்தப் பகுதிகள் 1978-ஆம் ஆண்டு மே திங்களில் சென்னை நகரத்தோடு இணைக்கப்படுகின்றன. ஆகவே, சென்னை உயர்நீதிமன்ற அதிகாரத்தின் கீழ் அந்தப் பகுதிகள் சேர்க்கப்பட்டு, ஒரிஜினல் சிவில் ஜூரிஸ்டிக்ஷன், ஸ்மால் காசஸ் கோர்ட், சிட்டி சிவில் கோர்ட், மெட்ராஸ் ஹைகோர்ட் ஆகியவற்றின் அதிகாரம் விஸ்தரிக்கப்படுகிறது. அதுதான் இப்போது கொண்டு வரப்பட்டு இருக்கிற இந்தச் சட்டத்தின் ஷரத்தாகும். ஆனால் அதிலே மிக முக்கியமான பிரச்சினை என்னவென்றால், ஸ்மால் காசஸ் கோர்ட், சிட்டி கிவில் கோர்ட் மற்றும் ஹைகோர்ட், ஆகியவற்றின் வேலைபளு அதிகமாகிறது. நீதிபதிகள் கூடுதலாக நியமிக்கப்பட வேண்டும். நீதிமன்றக் கட்டிடங்கள் புதிதாகக் கட்டப்பட வேண்டும். ஊழியர்கள் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும். ஆனால் இதில் வருந்தத்தக்க ஒரு விஷயத்தை நான் சொல்லவிரும்புகிறேன். இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறோமே தவிர இது அமுல் நடத்தப்படுவதில் பல தேக்கங்கள் ஏற்படுவதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. உதாரணமாக சென்னை உயர்நீதிமன்றத்திலே இன்னும் 25 நீதிபதிகள் தேவைப்படலாம் என்று உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியே திருச்சியில் கருத்து தெரிவித்து இருக்கிறார்கள் என்று பத்திரிகையில் செய்தி வந்து இருக்கிறது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத்தின் ஜூரிஸ்டிக்ஷன் தமிழகம் பூராவும் இருக்கிறது. சைதாப்பேட்டை மட்டுமல்ல. எனவேஅதோடு தொடர்புடையது மட்டும் பேச வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, சைதாப்பேட்டை வட்டத்தில் புதிதாகச் சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கும் அந்த ஜூரிஸ்டிக்ஷன் விரிவுபடுத்தப்படுகிறது என்பது இந்தச் சட்டத்தின் நோக்கம். இப்போது சென்னை உயர்நீதிமன்றத்தில் 25 நீதிபதிகள் தான் நியமிக்கப்பட்டிருந்தாலும் சிவில் ஒரிஜினல் ஜூரிஸ்டிக்ஷன் பிரச்சினை வந்திருக்கிறது.

**மாண்புமிகு திரு சி. பொன்னையன்:** தலைவரவர்களே, ஒரு மாநகரின் எல்லை விரிவாக்கப்படும்போது, எந்த எந்த பகுதிகள் என்று புதிதாகச் சேர்க்கப்படும்போது. ஒரிஜினல் ஜூரிஸ்டிக்ஷன் அந்தப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும். அதுபற்றி ஏதாவது கூறுவதாக இருந்தால் கூறலாம்.

**திரு அ. ரகுமான்கான்:** சென்னை உயர்நீதி மன்றத்தின் சிவில் ஒரிஜினல் ஜூரிஸ்டிக்ஷன் என்று சொல்லக்கூடிய அதிகாரம் இப்போது சைதாப்பேட்டை வட்டத்தோடு இணைக்கப்பட்ட பல பகுதிகளுக்கும் நீட்டிக்கப்படுகிறது. இந்தச் சட்டத்தில் அதைப் பற்றித்தான் சொல்கிறார்கள். நான் சொல்ல விரும்புவது, இதன் மூலம் ஸ்மால் காஸ் கோர்ட்ஸ், சிட்டி சிவில் கோர்ட்ஸ்,- மெட்ராஸ் ஹைகோர்ட் ஆகியவைகளுக்கு கூடுதலாகப் நீதிபதிகள் நியமிக்கப்பட வேண்டும். ஒர்க் லோடு அதிகமானதால் ஸ்டாஃப் கூடுதலாகப் போட வேண்டும். இந்தச் சட்டம் கொண்டு வரப் படுகிற நோக்கத்தைப்பற்றி நான் குறைசொல்லவில்லை. ஆனால் நீதிமன்றங்களிலே சட்டத்தை அமல்படுத்துவதிலே ஏற்படுகின்ற இடையூறு என்ன என்பதைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதையெல்லாம் இந்தச் சட்டம் விவாதத்திற்கு வரும் போது சொல்லுங்கள் ; இப்போது தேவையில்லை.

**திரு அ. ரகுமான்கான்:** நான் ஒரு நிமிடம் சொல்வதை தயவு செய்து கேட்டுவிட்டு, நீங்கள் தீர்ப்புக் கொடுங்கள்.

**மாண்புமிகு திரு சி. பொன்னையன்:** மாண்புமிகு தலைவரவர்களே, These are all points that can be taken up at the time of consideration, but not at the time of introduction.

**திரு அ. ரகுமான்கான்:** தலைவரவர்களே, இங்கே இந்த சட்டம் அறிமுகப்படுத் தப்படுகின்ற நிலையிலேயே நான் ஒன்றைக் குறிப்பிட வேண்டும். மெட்ராஸ் ஹைகோர்ட்டிலே போதிய அளவுக்கு நீதிபதிகள் இல்லை. முன்சீப் செலக்ஷன் ஆகி 7 வருடம் ஆயிற்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை; உட்காருங்கள்,

பேரவை முன்னுள்ள கேள்வி:

''1983-ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்ற (விசாரணை அதிகார வரம்பினை) நீட்டித்தல் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.'

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்ற பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேர[illegible]லைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம்



**7. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் விவாதம் — (தொடர்ச்சி).**

**திரு. இல. பலராமன்:** தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன.

(1) ''தமிழ்நாட்டில் விவசாயிகள் செயலற்றிருக்கும் நிலை பற்றியும், தமிழ்நாட்டு வளர்ச்சிக்காக தொழில் நிறுவனங்கள் அமைக்க அல்லது விவசாய அபிவிருத்திப் பணிக்குத் தேவையான திட்டங்கள், கொள்கைகள் வகுக்க வேண்டிய அவசியம் பற்றியும்;

(2) கடந்த இரண்டு ஆண்டுகளாக வடஆற்காடு மாவட்டம் வறட்சியால் பெரும் பாதிப்பு ஏற்பட்ட நிலையையும், இந்த ஆண்டு பலமாவட்டங்களில் பெரும் பகுதி வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையையும் குறித்தும்,

(3) வறுமைக் கோட்டிற்குக் கீழ் இருக்கும் ஏழை எளிய மக்களுக்கு உதவியாக உள்ள 25 அம்சத் திட்டத்தை தமிழ்நாட்டில்

பரவலாக அமல் செய்யாததைக் குறித்தும் குறிப்பிடாதோரோடு

(4) இன்றைய வறட்சியான சூழ்நிலையில் விவசாயம் மிகவும் பாதிக்கப்பட்டு மின்சாரம் வழங்கும் நேரம் குறைக்கப் பட்டிருப்பதால் உற்பத்தியும் விவசாயிகளின் பொருளாதாரம் பின்னுக்குத் தள்ளப்பட்டு, உற்பத்திக்கு பொருள் கட்டுப் படியாகாத சூழ்நிலையில் மின் கட்டணம் உயர்த்துவோம் என்று ஆளுநர் உரையில் கூறியிருப்பது வருந்தத்தக்கது.''

**திரு. எல். இளையபெருமாள்:** அதை நான் வழிமொழிகிறேன்.

**திரு செ. சிவசாமி:** தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

(1) ''வறட்சியால் வாடும் மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கப்பட வேண்டிய அவசியம் பற்றியும்

(2) குடிதண்ணீர் பற்றாக்குறையைப் போக்க உடனடியாக ஆழ் குழாய் கிணறுகளை எல்லாக் கிராமங்களிலும் அமைக்கப் பட வேண்டிய அவசியம் பற்றியும்

(3) இராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து மாவட்ட தலைமை அலுவலகத்தை மதுரையிலிருந்து மாவட்டத்திற்குள் கொண்டு வர வேண்டிய அவசியம் பற்றியும்

(4) சேதுசமுத்திர திட்டத்தை உடனே அமுல் நடத்தவேண்டிய அவசியம் பற்றியும்

(5) கிழக்குக் கடற்கரை சாலையை உடனே வேலை துவங்க வேண்டிய அவசியம் பற்றியும்

(6) இராமேஸ்வரம் சுற்றுலா மையத்தில் முயல் தீவு, நல்ல தண்ணீர் தீவு போன்ற தீவுகளைத் தனியாரிடமிருந்து எடுத்துச் சேர்த்துக் கொள்வதின் அவசியம் பற்றியும்;

(7) உடைந்த வைகை கால்வாய் திட்டத்தை மீண்டும் செப்பனிடப்படவேண்டிய அவசியம் பற்றியும் ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருத்தத்தக்கது.''

திரு. தி கா. நல்லப்பன்: அதை நான் வழிமொழிகிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் ப. நெடுமாறன், குமரிஅனந்தன், சோ. அழகர்சாமி, க. பாரமலை, என்.சங்கரய்யா, கு. ரமணி, மு. அம்பிகாபதி, பொ. உத்திராபதி, செ. சிவசாமி, தி.கா. நல்லப்பன், எஸ். ஆண்டித்தேவர், கே. தனுக்கோடி தேவர், ஆகியோர் சேர்ந்து கொடுத்திருக்கும் திருத்தங்களை அவர்களில் ஒருவர் மொழியும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன்: தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

(1) மிகவும் கடுமையான வறட்சியால் தமிழக மக்கள் அவதிப்படுகின்றனர் என்பதையும், குடிநீர் பஞ்சம் கிராமங்களிலும், நகரங்களிலும் உள்ளவர்கள் அனைவரையும் வாட்டி வதைத்து வருகிறது; இதுவரை காணாத மின்சார வெட்டின் விளைவாக தொழில் முடக்கப்பட்டு, லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலையற்று தவிக்கிறார்கள் என்பதைப்பற்றியும்

(2) ஏராளமான விவசாயிகளும் விவசாயத் தொழிலாளிகளும் வருமானத்தை இழந்து பயிரை இழந்து, வேலையிழந்து அல்லல் படுகின்றனர் என்பதைப் பற்றியும்

(3) கைத்தறித் தொழிலாளர்களும், உற்பத்தியாளர்களும் மோசமான விலை உயர்வினால், தொழில் நடத்த முடியாமல் நெருக்கடியில் சிக்கித் தவிக்கின்றனர் என்பதைப் பற்றியும்

(4) இவர்களுக்கு உடன் நிவாரணம் அளிக்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முற்றிலும் தவறிவிட்டது என்பதைப் பற்றியும்

(5) இப்பிரச்னையில் தமிழக மக்களுக்கு நிவாரணம் அளிப்பதில் பெரும் பங்கேற்க வேண்டிய மத்திய அரசின் அலட்சியத்தையும், மெத்தனப் போக்கையும் மக்களிடம் எடுத்துக் காட்டி, அதற்காக மக்களைத் திரட்ட அரசு பெரிதும் தயங்குகிறது என்பதைப்பற்றியும்;

(6) தமிழகத்தில் காவிரிச் சமவெளிப்பகுதியில் சம்பாப்பயிரை காப்பாற்றுவதற்காக, அவசரமாகத் தேவைப்படும் காவேரி நீரைப் பெறுவதற்குச் சாத்தியமான சகல முயற்சிகளையும் அரசு தற்போது மேற்கொள்ளவில்லை என்பதைப்பற்றியும்

(7) அத்யாவசியப் பணிகளில் பணிபுரியும் உழைப்பாளி மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமையான வேலை நிறுத்த உரிமையை பறிக்கும் கறுப்புச் சட்டத்தை அரசு அவசரச் சட்டமாகக் கொண்டு வந்துள்ளது என்பதைப் பற்றியும்



(8) நியாயமான விலையில் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்வதற்கும், மத்திய அரசிடமிருந்து உணவு தானியங்களை வற்புறுத்தி பெறுவதற்கும், நியாய விலைக்கடைகளில் உணவு தானிய விநியோகம் முறையாக நடைபெறுவதற்கும் அரசு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்பதைப்பற்றியும்

(9) தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு மத்திய அரசை வற்புறுத்துவதில் போதுமான அக்கறையைக் காட்டாதது பற்றியும் ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

திரு. சோ. அழகர்சாமி: அதை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் என். எஸ். வி. சித்தன் உ. சுப்பிரமணியன் ஆகியோர் சேர்ந்து திருத்தம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் திருத்தத்தை முன்மொழியும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

''தமிழ்நாட்டில் கடுமையான வறட்சியின் காரணமாக மக்கள் மிகவும் அவதிப்படும் நிலையில் மிக அவசரமாகவும் அவசியமாகவும் அரசு எடுக்கவேண்டிய நிவாரணப் பணிகளை ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.''

திருத்தம் வழிமொழியப்பெற்றது.

திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம்: தலைவரவர்களே நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்

(1) ''அம்பை தொகுதியிலுள்ள காரையாறு அணை பக்கமிருந்து கேரள மாநிலத்தை இணைக்கும் பாதையை செப்பனிட வேண்டுமென்றும்

(2) அம்பை தொகுதியிலுள்ள மதுரா கோட்ஸ் மில் பக்கம் 10,000 பேர்களுக்கு மேல் தினசரி சென்று வரும் முக்கியமான ரோட்டில் தாம்பிரபரணி ஆற்று மீதுள்ள பாலம் பழுதடைந்துள்ளதால் வேறு ஒரு பாலம் கட்டப்படுமென்றும்

(3) கடையம் ஒன்றியத்தில் ஆம்பூரில் ஒரு மருத்துவமனை திறக்கப்படுமென்றும்

(4) அம்பை மருத்துவமனை அபிவிருத்தி செய்யப்படுமென்றும் ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.''

திரு. கே. ஆர். சுந்தரம்: அதை நான் வழிமொழிகிறேன்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்திலே ஆளுநர் உரையின் மீது நடைபெற்றுக் கொண்டிருக்கும் விவாதத்தில் நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே சில கருத்துக்களை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒருவனுக்கு திருமணமாகி பல்லாண்டுகள் ஆகியும் குழந்தை இல்லாமல்' பிறகு ஆறு, குளங்கள் எல்லாம் சுற்றி, ஆண்டவனை வேண்டி ஒரு ஆண்மகவைப் பெற்றெடுத்தான். பிறந்த குழந்தை குருடாகவும் முடமாகவும் இருந்தால் அந்தத் தம்பதிகளுக்கு எப்படி இருக்குமோ அப்படிப்பட்ட நிலையிலே நாங்கள் இருக்கிறோம்

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

சட்டமன்றம் கூடாதா, ஆளுநர் உரை வராதா, பிரச்சனை தீராதா என்று ஏங்கிக் கொண்டிருந்த எங்களைப் போன்றவர்களுக்கு மின்சாரம் என்ற கண் குருடாக்கப்பட்டு, தொழில் என்னும் கால்கள் முடமாக்கப்பட்டு வறுமை என்பதிலே சோம்பிப்போன சவலக் குழந்தையைப் பெற்றெடுத்து, இந்த அவையிலே வைத்து, அதைப்பற்றி பாராட்டிச் சொல்லுங்கள் என்றால் நாங்கள் எப்படி பாராட்டுவது?

(முற்பகல் 10—40)

ஆனால் ஆளும் கட்சியிலே இருக்கிற நண்பர்கள் அந்த சவலைக் குழந்தையைப் போய், அது சவலை குழந்தையாக இருந்தாலும், கண்ணில்லாத குழந்தையாக இருந்தாலும், ஒளி படைத்த கண்ணினாய் வா வா வா என்று அழைத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் அதை குற்றம் சொல்ல மாட்டேன் ஏனெனில் காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு, ஆனால் எனக்கு இருக்கிற கவலை எல்லாம் இல்லாததை எல்லாம் இருப்பது போல் பாவித்து சொர்ண விக்கிரகமே தங்கக் கலசமே என்று பாராட்டுகிறீர்களே—அந்தச் சவலைக் குழந்தையைப் பார்த்து— நண்பர்களே அதற்காக நான் உங்களைப் பாராட்டுகிறேன்.

ஒரு கோபம் நம்முடைய ஆளும் கட்சி நண்பர்களுக்கு ஆளும் கட்சியை யாரும் பாராட்ட மாட்டேன் என்று சொல்கிறார்களே என்று— இன்றைக்கு நான் அவர்களைப் பாராட்டுகிறேன். இல்லாததை எல்லாம் இருப்பது போல் நினைத்து திறமையாக இந்த ஆளுநர் உரையை பாராட்டிக் கொள்கிறார்களே, அந்த நண்பர்களின் திறமையை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஆளுநர் உரையிலே என்ன இருக்கிறது? வரிக்கு வரி வறுமை, வறட்சி என்ற புலம்பல்களை கீதமாக இசைத்துக் கொண்டிருக்கிறது. பிறகு வழக்கமான விழாக்கள், அதன் விளம்பரங்கள் இவற்றின் விவரங்களை வைத்துக் கொண்டு 2, 3 பக்கங்களை நிரப்பியாகி விட்டது. பிறகு, பத்திரிகைகளிலே அவ்வப்போது வெளிவந்து புளித்துப் போய்விட்ட பழம்பெரும் செய்திகள்—இவைகளை வைத்துக் கொண்டு, ''செய்திகள் வாசிப்பது ஆளுநர் குரானா'' என்று போடவில்லையே தவிர, இதிலே வேறு என்ன மக்களுக்கு அவசியமான திட்டங்கள் இருக்கின்றன?

இதிலே இன்னொரு விவரம் புதியதாக, வேடிக்கையாக வந்திருக்கிறது? லீவு நாட்களிலே குழந்தைகளுக்கு இந்த சத்துணவு சாப்பாடு எப்படி போடப்படுகிறது என்பது பற்றி, முன்னாலேயே





பொட்டலமாகக் கட்டி அவர்கள் பள்ளிவிட்டுச் செல்கையில் கையில் கொடுத்துவிடுகிறார்களாம். இரண்டு நாட்கள் லீவு வந்தால் என்ன செய்யப்போகிறார்கள்? இந்த உணவுப் பொருள்களை வைத்துக்கொள்ள ஒவ்வொருவருக்கும் ரெப்ரெஜிட்டர் வாங்கிக் கொடுக்கப்போகிறார்களா?

அது மட்டும் அல்ல, 1 லட்சத்து 40 ஆயிரம் மேற்பட்டவர்களுக்கு இந்த திட்டத்தினால் வேலை வாய்ப்பு வந்திருக்கிறதாம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அவையிலே பதில் சொல்ல நேருகிறபோது யூனியன் வாரியாக— ஒவ்வொரு யூனியனிலும் இன்னின்ன பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை ஒரு புள்ளி விவரத்தோடு தெரிவிக்க முடியுமா?

அது மட்டும் அல்ல, இந்த ஆளுநர் உரையிலே இன்னொரு புள்ளி விவரத்தையும் தந்திருக்கிறார்கள். இந்த சத்துணவு திட்டத்தின் பயனாக 2.63 லட்சம் மாணவர்கள் பள்ளிக்கூடங்களில் புதிதாகச் சேர்ந்திருக்கிறார்கள் என்று. எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. திரு. கேதார் பாண்டே அவர்கள் நடத்திய ஆசிரியர்கள் மாநாட்டிலே, அன்றையதினம் ஸ்கூல் டைரக்டராக இருந்த திரு.வெங்கட சுப்பிரமணியம் அவர்கள் ஒரு அறிக்கையைக் கொடுத்தார்கள். தமிழ்நாட்டிலே மாணவர்கள் 100 சதவீதத்தினர் பள்ளிகூடத்திற்கு வருகை தருகிறார்கள் என்று. எதற்கெடுத்தாலும் 100 சதவீதம். மின்சார வெட்டும் 10 சதவீதம் குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்கு போவதும் 100 சதவீதம், 100 சதவீதத்தில் நீங்கள் கெட்டிக்காரர்கள். அப்படி 100 சதவீதத்தினர் பள்ளிக்கு வருகை தருவது உண்மையாக இருந்தால், இந்த சத்துணவு திட்டத்திற்குப் பிறகு பள்ளிக்கூடங்களில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளதாக சொல்லப்படுகிறதே 2.63 லட்சம் மாணவர்கள், அவர்கள் எப்படி வந்தார்கள். இந்த திட்டம் செயல்பட ஆரம்பித்தவுடன் பிறந்து கிடுகிடுவென்று வளர்ந்து பிறகு சேர்ந்து விட்டார்களா? இதை உண்மையென்று வைத்துக் கொண்டால்கூட புதிதாக 2.63லட்சம் மாணவர்கள் சேர்ந்திருப்பார்கள் என்று வைத்துக் கொண்டால் கூட — ஒரு வகுப்பிற்கு 40 பேர்கள் என்றால் கணக்குப் போட்டுப் பார்த்துக் கொள்ளுங்களேன்— நம்முடைய நாவலர் அவர்கள் கணக்கிலே மிக கெட்டிக்காரர்கள்—கிட்டத்தட்ட 5 ஆயிரம் ஆசிரியர்களையாவது நியமித்திருக்க வேண்டாமா? 2 லட்சத்து 63 ஆயிரம் மாணவர்களை கட்டி மேய்க்க ஆசிரியர்கள் வேண்டாமா? எத்தனை ஆசிரியர்களை நியமித்திருக்கிறார்கள்? அதை ஏன் கூறவில்லை. பள்ளிக்கு பிள்ளைகள் அதிகமாக வந்திருக்கிறார்கள் என்றால், ஆசிரியர்கள் பற்றாக்குறையாக இருக்கிறார்களே? ஏன் அதிகமாக நியமிக்கவில்லை? அது என்ன நியாயம்?

இந்த விஷயமாக, அதாவதுசத்துணவு திட்டத்தின் வரவு செலவு விஷயமாக ஆடிட்டர் ஜெனரல் அவர்களுக்கும் இவர்களுக்கும் தகராராம். கணக்கை காட்ட மறுக்கிறார்களாம்

கணக்குக் கேட்டுக் கட்சி ஆரம்பித்தவர்கள். அரசாங்கத்திலிருந்து செலவழிக்கப்படும் திட்டத்திற்கு கணக்கை காட்ட மாட்டேன் என்று சொல்கிறார்கள் என்றால் அவர்களின் உணர்வு பூர்வமான நியாயத்தை பாராட்ட வேண்டும். நான் அதை மிகவும் மெச்சுகிறேன். அன்றைக்கு கணக்கு சம்பந்தமாக என்னென்ன கேள்விகள் எல்லாம் கேட்டார்கள். ஆனால் அரசாங்கத்தினுடைய செலவிற்கு கணக்கை காட்ட மாட்டேன் என்று சொல்லுகிறார்களாம்.

அது மட்டும் அல்ல, பாரதி விழாவில் பங்குபெற்ற கலைக் குழுவினரை வெளிநாட்டுக்கு அனுப்பியிருக்கிறார்களாம். சென்ற ஆண்டு, சென்ற சுதந்திரதின விழாபோன்ற நாட்களில் பார்த்தேன் திரு சஞ்சீவி ரெட்டி அவர்கள் பிரசிடென்டாக இருந்தபோது, அந்த விழாவிற்கு இங்கேயிருந்து மாரியம்மன் ஆட்டக்காரர்களை அனுப்பியிருந்தீர்கள். அவைகளை பார்க்க சகிக்கவில்லை. இந்த மாரியம்மன் காளியம்மன் ஆட்டங்களைத் தவிர வேறு எதுவும் தெரியாதா உங்களுக்கு? தயவுசெய்து இதை மாற்றுங்கள்.

அடுத்து கிராமங்களில் 22.56 கோடி செலவில் கழிப்பிடங்கள் கட்ட திட்டமிருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. கழிப்பிடங்களை கட்டி விட்டு தண்ணீருக்கு எங்கே போவது?

ஆகவே இருக்கின்ற நிலைமையைக் கெடுத்து விடாதீர்கள். வறட்சி 190 கோடி ரூபாய். அறிக்கை அனுப்பிவிட்டோம் என்று சொல்கிறார்கள். ரொம்ப கெட்டிகாரர்களைக் கொண்டது நமது அமைச்சரவை. அவர்கள் என்ன சொல்கிறார்கள்? மத்திய அரசுக்குத் தகவல் தரப்பட்டு விட்டது என்று. எப்போது அனுப்பினீர்கள்? 24-ஆம் தேதியன்று என்று சொல்கிறீர்கள். அன்றைக்குத்தான் ஆளுநர் உரை. பிறகு அனுப்பினோம் என்று எப்படி சொல்கிறீர்கள்? ப்ளேன் போனதற்குப்பிறகு டைப்பண்ணி உடனடியாகக் கொடுத்திருக்கிறோம் 11 மணிக்கு என்று சொல்கிறீர்களா? என்ன இது உண்மைக்கு மாறான செய்தி? ஏன் இந்த மாதிரி காலதாமதம்? நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள், பருவமழை பொழிகிறதா என்று லாஸ்ட் டேட் வரையில் பார்த்தார்களாம். 23-ஆம் தேதி கடைசி நாள் அன்றைக்கு மழை வராது என்று This is the last date. So they sent a report to the Central Government Sir. it is a funny idea, இந்த மாதிரித் திட்டத்தை நாங்கள் பார்த்ததே இல்லை. அதிலேயும் ஒன்றைத் தைரியமாகச் சொல்கிறீர்கள். வடாற்காடு மாவட்ட கலெக்டர் 190 கோடி ரூபாய்க்கு மேல் கொடுக்கிறார். ஆனால் நீங்கள் எல்லா மாவட்டத்திற்கும் சேர்த்து 190 கோடி ரூபாய்க்கு கொடுத்திருக்கிறீர்கள்? யாரையாவது கூப்பிட்டீர்களா?........



(குறுக்கீடு)...... இதிலே எல்லாம் ரொம்ப கணக்கு. ஏறத் தாழ ஒரு கோடி. ஆனால் இந்தக் கணக்கிலே ஒன்றும் காணோம். என்ன கொடுக்கிறார்கள் அதிலே? இவர்களுக்கு கரன்ட் இல்லை. ஏன் இல்லை? கரி இல்லை? ஏன் கரி இல்லை? அது டெல்லியிலே இருந்து தரவில்லை. வேகன் வரவில்லை. உடையவர்கள் உதறுகிறார்கள் என்றபோது சிவலிங்கத்திற்கு பஞ்சகச்சம் கேட்டதாம். இவர்களுக்கே அனல் மின்சாரத்திற்குக் கரி கிடைக்கவில்லை என்றால் பிறகு ஏன் தைரியமாக 250 கோடி ரூபாய் செலவிலே புகளூரிலே காகிதத் தொழிற்சாலை ஆரம்பித்துவிடச் சொல்கிறீர்கள். கரும்பு அரைக்கிற மொழிற்சாலைகளே அந்தச் சக்கைகளை எல்லாம் காகிதம் பண்ணக் கொடுத்துவிடுங்கள். உங்களுக்கு நாங்கள் 30 ஆயிரம் டன் கரி தருகிறோம் என்று சொல்கிறீர்கள். இப்படி சுகர் ஃபேக்டரியிடம் கரி தருகிறோம், சக்கையைக் கொடுங்கள் என்று கேட்கிறீர்கள். ஆனால் எண்ணூரிலே கரி கிடைக்காமல் இருக்கின்ற கரியினைப் புடைத்து போடுகிறார்கள் அதற்கே கரியைக் காணோம். ஆனால் நீங்களோ சுகர் பேக்டரியிலே இருந்து சக்கையை எடுத்துக் கொண்டு கரியினைக் கொடுக்கப் போகிறீர்களாம், இப்படிச் சொல்லி நாங்கள் பெரும் தொழில் ஆரம்பிக்கிறோம் என்று சொல்கிறீர்கள். இந்தத் தொழிலுக்கு இதுவும் கெட்டு அந்தத் தொழிலுக்கு அதுவும் கெட்டு அதாவது மங்குனிக்கு மங்குனி கெட்டு, கொங்குனிக்கு கொங்குனி கெட்டது என்ற கதையினைச் சொல்வார்கள் எங்கள் ஊரிலே. எனவே இரண்டு கதையையும் சேர்த்துக் கெடுத்து வைத்திருக்கிறீர்கள். என்ன ஒரு நல்ல திட்டம் இது? உடனே அடுத்து ஒன்று சொல்கிறீர்கள். வெளிநாட்டிலே இருந்து நிலக்கரி வாங்குவதற்காக மத்திய அரசிடம் கேட்டோம் அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை என்று சொல்கிறீர்கள். நீங்கள் ஒன்றையுமே லோக்கலிலே வாங்க மாட்டீர்கள். எல்லாமே வெளி நாட்டில் இருந்து தான். சிமெண்ட் வெளிநாட்டிலே இருந்து நிலக்கரி வெளி நாட்டிலே இருந்து இப்படி எல்லாமே வெளி நாட்டிலே இருந்து தான் வாங்குவீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை

சிமெண்ட் வாங்கினிர்களே என்ன ஆச்சு? சிமென்ட் போதவில்லை, சரி, கொரியா நாட்டிலே இருந்து வாங்கினீர்கள், அப்போது தமிழ்நாட்டிலே இருக்கின்ற தமிழ்நாடு சிமென்ட்ஸ் கார்ப்பரேஷன் கொட்டேஷன் கேட்டார்கள். அதிலே கொட்டேஷன் கொடுத்தது கொரியன் சிமென்ட் எக்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் ஒன்று. சாங்கியாங் கார்ப்பரேஷன் லிமிடெட், கொரியா என்பது இன்னொன்று. இரண்டுபேரும் டென்டர் கொடுக்கிறார்கள். ஒரு மெட்ரிக் டன்னுக்கு அதாவது 20 மூட்டைக்கு 535 ரூபாய் 60 காசு என்று கொடுக்கிறார்கள் கொரியன் சிமென்ட்டுக்காரர். சாங்கியாங் கார்ப்பரேஷன்காரர்கள் 527 ரூபாய் ஒரு மெட்ரிக் டன்னுக்கு என்று கொடுக்கிறார்கள். இவர்களில் யார் குறைவாகக் கொடுக்கிறார்களோ அவர்களிடம்தானே வாங்கவேண்டும். உடனே 535 ரூபாய் சொல்கிறவனைக் கூப்பிட்டு—— அவர்களுக்கு

பாங்க் டெப்பாசிட் கிடையாது, எந்த உத்தரவாதமும் கிடையாது. எந்த காரண்டீயும் அவர்கள் கொடுக்கவில்லை. உடனே அவர்களிடம் நெகோஷியேஷன் செய்து உடனடியாக 40 இலட்சம் முட்டையை அனுப்பு அதிலே முட்டைக்கு 8 அணா அல்லது 2 ரூபாய் தள்ளு என்று சொல்கிற ஒரு நிலைமை வந்திருக்கின்றது. ஆகவே வெளிநாட்டிலே இருந்து......

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்தப் பிரச்சினை குறித்து வெளியிலேயும் பேசப்பட்டது. அரசின் சார்பிலேயும் நாங்களும் பதில் சொல்லி இருக்கிறோம். டெண்டர் கால் ஃபார் செய்யப்பட்ட போது அதிலே தனியார் ஏஜெண்ட்ஸ் பலபேர் பார்ட்டிசிபேட் பண்ணி இருந்தார்கள். ஆனால் உற்பத்தியாளர்கள் என்ற வகையிலே அதிலே இரண்டு கம்பெனிக்காரர்கள் பார்ட்டிசிபெட் பண்ணி இருந்தனர். அதாவது ப்ரட்யூசர்ஸ் அதிலே இரண்டு பேர். ஒன்று நார்த் கொரியா கம்பெனி, இன்னொன்று சவுத் கொரியா கம்பெனி. நார்த் கொரியா கம்பெனி அரசுக்குச் சொந்தமான கம்பெனி. கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சி நார்த் கொரிய நாட்டிலே நடைபெறுகின்றது. மேலும் மத்திய அரசுக்குச் சொந்தமான ஸ்டேட் கார்ப்பரேஷன் அவர்களிடமிருந்து இறக்குமதி செய்திருக்கிறார்கள். அதேபோல் கர்நாடக மாநிலமும் இதே வழியிலே நார்த் கொரியன் கம்பெனியிலே இருந்து இறக்குமதி செய்திருக்கிறார்கள்.

(முற்பகல் 10-50)

டெபாஸிட் நாங்கள் கட்ட தேவையில்லை, நாங்கள் அரசாங்க கம்பெனி என்று சொல்லி, வேண்டுமானால் எங்கள் தூதரகத்தின் மூலமாக கியாரண்டி தருகிறோம் அந்த கியாராண்டியை நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள், இந்த காண்டிராக்டில் ஏதாவது ஊழல் இருக்குமானால் ஏதாவது மேமேஜஸ் இருக்குமானால், நஷ்டம் இருக்குமானல் எங்கள் அரசு பொறுப்பு ஏற்றுக்கொள்ளும் என்று அந்தத் தூதரகமே இந்த அரசுக்குத் தெரிவித்து இருக்கிறது. இந்த அடிப்படையில் எந்தவிதமான தவறும் நடக்கக்கூடாது என்ற காரணத்தினால் தான் அரசுக்குச் சொந்தமான கம்பெனிக்கு முன்னுரிமை கொடுத்து அவர்களை அழைத்துப் பேசி அவர்களுக்கு கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். சவுத் கொரியா கம்பெனி பிரைவேட் கம்பெனி அந்த பிரைவேட் கம்பெனியை விட இன்னும் குறைந்த விலையில் சப்ளை செய்ய இந்த நார்த் கொரியா கம்பெனியிடம் பேச்சு வார்த்தை நடத்தி இதனால் அரசுக்கு 10 லட்சம் ரூபாய் லாபம் எற்படுகிறது, அதாவது மிச்சப்படுகிறது. ஏற்கனவே அந்தக் கம்பெனிக்குச் சொந்தமான தூதரகத்தில் இருந்து கியாரண்டிப் பெற்றுக்கொண்டு அந்த அரசுக்குச் சொந்தமான கம்பெனிக்கு கொடுத்திருக்கிறோம். இதில் எந்தவிதமான தவறும் நடைபெறவில்லை. இதை நாங்கள் பலமுறை சொல்லியிருக்கிறோம். அவர்கள் திரும்ப திரும்ப இதையே சொல்லி வருகிறார்கள்.



திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே குறைவான தொகையைப் போட்ட ஒருவனை கூப்பிடாமல் அதிகமான தொகையை போட்டவனை கூப்பிட்டு நெகுஷியேஷன் செய்து இருக்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே சொன்னேன். 2 பேருக்கும் டிபரன்ஸ் மிக குறைவானது, இன்னும் அதிலிருந்து குறைப்பதற்கு பாஸிபிலிட்டிஸ் இருக்கிறது. அப்படியிருக்கும் போது தனியாரை அழைத்துப் பேசுவதா? அல்லது அரசு நிறுவனத்தை அழைத்துப் பேசுவதா என்கிறபோது அரசுக்குச் சொந்தமான நிறுவனத்திற்கு முன்னுரிமைக் கொடுத்து அவர்களை அழைத்துப் பேசினோம். தனியார் நிறுவனத்தை விட குறைவாக கொடுக்க அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஒப்புக்கொண்டதன் பிரகாரம் அரசுக்கு 10 லட்சம் ரூபாய் லாபமாக கிடைக்கிறது. அதனால் அரசு நிறுவனத்துக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டது. இங்குள்ள சிமெண்ட் கார்ப்பரேஷன் ஒரு அரசு நிறுவனம் கவர்ன்மெண்டு டு கவர்ன்மெண்டு என்ற அடிப்படையில் இந்த ஏற்பாட்டை செயல்படுத்தினோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குற்றச்சாட்டை முதலில் சொல்லிவிடுங்கள். இங்கு வந்து திடீர் என்று சொல்லக்கூடாது.

திரு. துரைமுருகன்: தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் நிறுவனம் எந்த கம்பெனி கிட்டே வாங்கச்சொல்லி ரெக்கமண்டு செய்திருக்கிறார்கள்? அந்த சாங்யாங் கம்பெனி கிட்டே வாங்கச் சொல்லித் தான் ரெக்கமண்டு செய்திருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: இதில் 2 பிரச்சனைகள் இருக்கின்றன. முதலிலே டெண்டர் கால்பார் பண்ணப்பட்டது. முதலில் அரசாங்கத்திற்கு ஒரு அறிக்கை வருகிறது. அவர் சொல்வது உண்மைதான், முதலில் அவர்களுக்கு (சவுத் கொரியாகம்பெனிக்கு) கொடுக்கப்படுகிறது. அந்த தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் சிபாரிசுபடி அப்போது மத்திய அரசு மாநில அரசுக்கு ஒரு இன்ஸ்ட்ரக்ஷன் கொடுக்கிறது. அது என்ன இன்ஸ்டிரக்ஷன் என்றால் எப்.ஓ.யி. ரேட்டில்தான் வாங்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசு கப்பல் மூலமாகத்தான் கொண்டுவர வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசு கப்பல் போக்கு வரத்துத்துறை அமைச்சருடைய அந்த இன்ஸ்டிரக்ஷன் வந்த பிறகு மீண்டும் டெண்டர் வைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அடுத்து அந்த டெண்டர் முறையில் மாற்றம் செய்ய மத்திய அரசு இன்ஸ்டிரக்ஷன் பிரகாரம் திருப்பி நெகோஷியேஷன் செய்யப்படுகிறது எனவே இதிலே மறுபடியும் தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் நார்த் கொரியா கம்பெனியிடமிருந்து வாங்க வேண்டும் என்று சிபாரிசு செய்திருக்கிறது. இதில் ஏதோ தமிழ்நாடு சிமெண்டு கார்ப்பரேஷனுக்கு விரோதமாக அரசு செயல்

படுத்துகிறது என்று கூறுவது உண்மைக்குப் புறம்பானது. இது வேண்டும் என்றே திட்டமிட்டு சொல்வது ஆகும். தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் சிபாரிசு செய்ததை இங்குள்ள தொழிற் துறை செயலாளர் தலைமைச் செயலாளர் கையொப்பம் இட்டு அதன் பிறகுதான் அதிலே அமைச்சர் என்கிற முறையில் நானும் அதற்கு மேல் உள்ளவர்களும் கையொப்பம் இட்டு இருக்கிறார்கள். உத்தரவு இருக்கிறது. இதிலே எந்தவிதமான தவறும் நடக்க வில்லை என்பதை மீண்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன்: * * *

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில நேரங்களில் இப்படி உட்கார்ந்து கொண்டு பேசுவது நீக்கப்படாததால் அது பத்திரிக்கைகளில் வந்து விடுகிறது. அதுபோல்தான் நேற்று திரு. சுந்தரராஜன் அவர்கள் அசோக்லேலேண்டு பற்றி பேசினார், அப்படியே அவைகள் எல்லாம் பத்திரிக்கையில் வந்திருக்கின்றன. இதைப் போல் உறுப்பினர்கள் உட்கார்ந்துகொண்டு பேசுவது எல்லாம் பத்திரிக்கையில் வருகிறது. ஏதோ ஜாக்கிரத்தையாக என்கிறார். அப்படியில்லை எது முறையோ அந்த முறையோடு * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்கார்ந்து பேசுவது எல்லாம் அவைக்குறிப்பில் ஏறாது.

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. எதையும் முன்னெச்சரிக்கையாக செய்வதாக சொல்கிறார். இதை அரசியல் விளம்பரத்திற்காகப் பேசலாமே தவிர, உண்மையில் எது சட்டப்படி செய்யவேண்டுமோ எது அரசுக்கு, மக்களுக்கு லாபமோ அந்த அடிப்படையில்தான் அரசு செயல்படுகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது மட்டும் அல்ல. இந்த உரையிலே சில விஷயங்கள் மின்சாரத்திற்கு 271 கோடி ரூபாய் தேவைப்படுகிறது என்று இருக்கிறது. ஏற்கனவே கரண்டு இல்லை. ஒவர் இருளடைந்திருக்கிறது. விவசாயிகள் பம்புசெட்டுகளுக்கு ஒரு லைனில் மின்சாரம் வந்து காயில் எரிந்துபோய் அவர்கள் செத்துக்கொண்டு இருக்கிறார்கள். அந்தப் புண்ணிலே வேலைப் பாய்ச்சுகிற மாதிரி வரியை ஏற்றப்போகிறோம் என்று எலக்ட்ரிசிடி போர்டு சொல்லியிருப்பதைத் தவிர இதிலே வேறு ஒன்றும் இல்லை.

---

மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



இன்னொன்று, புதிய திட்டம், என்ன திட்டம் தெரியுங்களா.
இந்த நாட்டை வாழவைக்கும் திட்டம். பொருளாதார மேம்
பாட்டிற்காக பயிற்சி நேர் காணுதல் திட்டம், பாற்பெருக்கத்
திட்டம், விதைப் பண்ணைத் திட்டம், தோட்டப் பண்ணைத்
திட்டம், நிலவளத் திட்டம், பார்த்தீர்களா சார், இவ்வளவு
திட்டங்களை வகுத்திருக்கிறது இந்த சர்க்கார் என்று சொல்
கிறார்கள். 80 லட்சம் ரூபாயில் காய்கறிப் பண்ணை. இந்த
சர்க்காருடைய பெரிய சாதனை இது. இருக்கிறதை மூடிவிட்டு
இல்லாததைத் திறக்கிறேன் என்கிறார்கள். தமிழ்நாட்டில்
5 சென்டர்களில் 10 பண்ணைகள் இருந்தன. சிலோனிலிருந்து
வந்த அகதிகள் வேலை பார்த்துக் கொண்டிருந்தார்கள், 1,500
குடும்பங்களுக்கு மேலே, ஏன் மூடிவிட்டார்கள்? நட்டம்
வந்தது என்று சொல்கிறார்கள். 5 சென்டர்களிலே 10 பண்ணை
களை மூடிவிட்டார்கள். அவர்கள் கோட்டை வரை வந்தார்கள்.
கோட்டை வரை வந்தால் என்ன ஆகும்? அவர்களையெல்லாம்
ஜெயிலில் கொண்டுபோய் தள்ளிவிட்டீர்கள். இன்றைக்கு ஏழை
விவசாயிகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். என்ன
செய்கிறீர்கள். நீங்கள் நட்டம் வந்தது என்கிறீர்கள், நட்டம்
வரட்டும், ஆனால் இலங்கையிலிருந்து வந்த அகதிகள் கஷ்டப்
பட்டு சம்பாதித்து இருக்கிறார்களே, அதை மூடலாமா? நட்டம்
வராத காரியத்தையேயா இந்த சர்க்கார் செய்கிறது? நான்
கேட்கிறேன்.

இந்தச் சர்க்காரிலிருந்து வாங்கினார்கள் ஒரு ஹெலிகாப்டரை
80 லட்சம் தான். இப்போது அது ரொம்ப லாபம் தருகிறது.
அப்படியா? தலைவர் அவர்களே, திரு. சர்மா ஒரு தடவை
பாண்டிச்சேரிக்குப் போனாரே தவிர எப்போதாவது நீங்களும்
வி.ஐ.பி., நானும் வி.ஐ.பி., மந்திரிகள் வி.ஐ.பி.-க்கள்தான்,
யாராவது அதிலே ஏறியிருக்கிறார்களா? இதுவரையிலே
யாருமே ஏறவில்லை. ஏன் தெரியுங்களா? யானை வாங்கி
விட்டால் தீனி போட்டாக வேண்டும் பாருங்கள், அதற்கு
மெயின்ட்டனன்ஸ்க்கு மாதம் 4 ஆயிரம் ரூபாய், அதை பார்க்
செய்வதற்கு மாதம் 1,500 ரூபாய், அதற்காக 2 பைலட்களை
டெபுடேஷன் அலவன்ஸை
டெபூட் செய்திருக்கிறார்கள். அந்த டெப்யூடேஷன் அலவன்ஸை
நாம்தான் கொடுத்தாக வேண்டும், அது மட்டுமல்ல, அது ஒரு
மணி நேரம் ஓடினால் 8 ஆயிரம் ரூபாய் செலவு ஆகும்.
ஆகவே 1 லிருந்து $1\frac{1}{2}$ லட்ச ரூபாய் வரையில் மாதம் ஒன்றிற்கு
அந்த வெள்ளை யானை சாப்பிட்டுக்கொண்டு இருக்கிறது
சாப்பிட்டுவிட்டு என்ன பண்ணுகிறது? பேசாமல் இருக்கிறது.
ஏன் வாங்கினீர்கள்? வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களைப்
போய் பார்த்து அங்கிருந்தே அபயம் கொடுக்க என்று சொன்
னார்கள். 2,100 கிலோ இருந்தால்தான் வெள்ளப் பகுதியிலே
பறக்கும், ரெஸ்க்யூ ஆப்பரேஷன் பண்ணமுடியும். இல்லா
விட்டால் பறக்காது. அதிலே ஒரே ஒரு எஞ்சின். யாரும் வாங்க
மாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள். அந்த சர்க்கார்
பார்த்தது. யார் இளிச்சவாயன் இந்த ஊரிலே என்று, நம்

தலையிலே கொண்டுவந்து போட்டுவிட்டது. கர்நாடகத்திற்கு ஒருவர் அட்வைஸ் கொடுத்து இருக்கிறார். ஒரு எஞ்சினுள்ள ஹெலிகாப்டரில் ஏறாதீர்கள், உடனே விண்ணுலகம் போய் விடுவீர்கள் என்கிறார்கள். இரண்டு எஞ்சின் உள்ள ஹெலிகாப்டரை வாங்காமல் ஒரு எஞ்சினுள்ள ஹெலிகாப்டரை யார் வாங்கச் சொன்னார்கள்? என்னவோ சொன்னமாதிரி புட்டுக்கவே ஒன்றுமில்லாதபோது நொட்டுக்கக் கேட்கிறார்கள் என்று. இந்த ஹெலிகாப்டர் நட்டம் இல்லையா? ஆனால் பண்ணையிலே இருக்கிறவர்களை இருக்கக்கூடாதுஎன்று சொல்லி, விட்டார்கள்.

இன்னொன்று பாருங்கள், விளம்பரத்திற்காக எப்படிச் செய்கிறார்கள் என்று. அரிசனங்களுக்காக கமுதியிலே நூற்பாலை என்று சொல்கிறார்கள். அரிசனங்களைத் தவிர வேறு யாரையும் உள்ளே விடமாட்டீர்களா? வேறு யாரையும் சேர்க்கமாட்டீர்களா? வேலையில்லாத பிரச்சினையைத் தீர்ப்பதற்காக கமுதியிலே அரிசனங்களுக்காக ஒரு நூற்பாலை என்றால் அங்கே வேறு யாரும் வரமாட்டார்களா? பெருவாரியாக என்று ஒரு வார்த்தையையாவது போட்டிருக்கிறார்களா? போடவில்லை. 'எக்ஸ்க்ளூஸ்விலி பார் ஹரிஜன்ஸ்' என்றால் யாரை ஏமாற்றுகிற வேலை இது?

அதேமாதிரி இன்னும் அரிசனங்களுக்கு வீடுகள். நாங்கள் 7 ஆயிரம் ரூபாயில் கான்க்ரீட் போட்ட வீடுகளைக் கட்டிக் கொடுத்தோம். இப்போது நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? 4 ஆயிரம் கொடுத்தால் பாதிக்குமேலே லஞ்சம் போய்விடுகிறது இப்போது 4 சுவர்களை எழுப்பி குட்டிச்சுவராக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள், என்ன சமாச்சாரம் என்று கேட்டால் சொல்வார்கள் மத்திய அரசு, மத்திய அரசு, மத்திய அரசு என்று.

ஏன் கரண்ட் வரவில்லை; மத்திய அரசு. ஏன் சாலை வரவில்லை, மத்திய அரசு, ஏன் தொழிற்சாலை வரவில்லை, மத்திய அரசு. மத்திய அரசு மத்திய அரசு மத்திய அரசு என்றால் என்னமோ சினிமாவிலே வருகிற மாதிரி 'டகடடண்ட், டகடடண்ட், டகடடண்ட்' என்று கதாநாயகன் மாதிரி மத்திய அரசு, மத்திய அரசு, மத்திய அரசு மத்திய அரசு, என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். வராததொழிலுக்கு லைசென்ஸ் கொடுக்கவில்லை என்கிறார்கள், வந்ததையாவது பிடித்தீர்களா? விட்டுவிட்டீர்களே, நீங்கள் போய் சடுகுடு ஆடி தூக்கிவரா விட்டாலும் வந்ததை அடிப்பதற்கு இல்லாமல்விட்டுவிட்டீர்கள். மத்திய அரசு இருக்கிறதே அது லேசானது அல்ல, விராட பருவத்திலே—பாரதத்திலே அர்ச்சுனன் அடிக்கக் கறக்கிற, ஆடிக்கறக்கிற மாடு மாதிரி—மிரட்டினால் மத்திய அரசு பணியும்





குனிந்தால் குட்டும், குமுறி நின்றால் பணியும். ஆனால் உங்களுக்கு அந்த தைரியம் கிடையாது, மத்திய அரசை எதிர்ப்பதற்கு.

பி.சி.ராய் சொன்னார், அவர் காங்கிரஸ்காரர். எண்ணெய்க் கிணறு இல்லையென்றால் சுதந்திர நாளை துக்கநாளாகக் கொண்டாடுவோம் என்று கர்ஜித்ததைப்போல் உங்களால் கொண்டாடமுடியுமா? இன்றைக்கு மேற்கு வங்கத்தின் முதலமைச்சர் திரு ஜோதிபாசு போனார், வறட்சி நடுபணத்தை என்றார், வாங்கினார், போய்க்கொண்டே இருந்தார். அந்த தைரியம் உங்களுக்கு உண்டா? அச்சுதமேனனுக்கு உள்ள தைரியம் உங்களுக்கு உண்டா? திரு. ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாத்திற்கு இருக்கிற தைரியம் உங்களுக்கு உண்டா? வீரேந்திர பாட்டில் காங்கிரஸ்காரர், எங்கள் கோரிக்கையை ஏற்கவில்லையென்றால் டெல்லியில் எங்கள் அலுவலகங்கள் எல்லாம் தூதரகங்களாக மாறும் என்றார்.

(முற்பகல் 11.00)

ஆனால் உங்களுக்கு அது கிடையாது. (குறுக்கீடு) மன்னிக்க வேண்டும். நேற்று நாவலர் அவர்கள் பேசும்போது என்ன ரூலிங்? பேசுகிறபோது அவர்கள் கருத்தைச் சொல்லட்டும் என்று சொன்னார்களா, இல்லையா? உங்களை நம்பித்தான் பேசுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் நகைச்சுவையோடும், நடிப்போடும் பேசிக்கொண்டிருக்கிறார். அதை நாம் கேட்டு மகிழலாம்.

**திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, ஏதாவது என்னிடத்திலே நடிப்பு இருக்குமேயானால் யாம் பெற்ற பேறு நாவலரிடத்திலேதான். அன்று கலைஞர் அவர்கள் சேலம் இரும்பாலை இல்லையென்றால் பிளானிங் கமிஷன் அப்ருவல் இல்லையென்றால் கூட்டத்திற்கே வரமாட்டேன் என்று கர்ஜித்தார்கள். உங்களுக்கெல்லாம் நன்றாக தெரியும். தமிழ்நாடு ஹவுஸ் வந்து விட்டார். பிறகு பிரைம் மினிஸ்டர் இந்திரா காந்தி அவர்கள் போன் செய்து நான் சேர்த்துக் கொள்கிறேன். வாருங்கள் என்று சொன்ன பிறகுதான் அந்த குழு கூட்டத்திற்கே போனார். அந்த தைரியம் உங்களுக்கு உண்டா? உங்களுக்கு கேட்கவே பயமாக இருக்கிறதே; பிரஸ் ரிப்போர்ட்டர்ஸ் கேட்கிறார்கள், பிரைம் மினிஸ்டரிடத்திலே என்ன டிமாண்ட் வைத்தீர்கள் என்று? ஷட் அப். டிமாண்ட் என்று எதுவும் வேகமாக பேசாதீர்கள். ரிக்வெஸ்ட் வைத்தோம் என்று சொல்கிறீர்கள். டிமான்டிற்கு பதிலாக ரிக்வெஸ்ட் வைத்தால் எப்படி உங்களுக்கு கிடைக்கும்? ரெயில்வே தொழிற்சாலை வந்தது, நீங்கள் குனிந்தீர்கள். மத்திய சர்க்கார் குட்டி அனுப்பிவிட்டது. அசோக் லேலண்ட் உங்களுடைய சோம்பேறித்தனத்தாலே போனது. கடற்படை கல்வி நிலையம் போய் விட்டது....

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** தலைவர் அவர்களே, குற்றச்சாட்டிற்கு பதில் சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். கோச் பேக்டரி பற்றி இங்கே எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே பேசினார்கள். பதில் சொல்லி இருக்கிறேன். அசோக் லேலண்ட் அப்படிதான். மத்திய அரசினுடைய தொழிற்சாலை புதியதாக வருகிறபோது எல்லா மாநிலங்களும் கேட்டு எழுதுகிறோம். அவர்களும் எல்லா மாநிலங்களிடமும் இடம் கொடுங்கள், இதற்கெல்லாம் இன்ப்ரா ஸ்டரக்ச்சர் பெசிலிட்டீஸ் இருக்கிறதா என்று கேட்டு எழுதுகிறார்கள். தமிழ்நாடு எழுதியது; ஆந்திராவும் எழுதியது; ஆனால் முடிவு செய்கிற அதிகாரம் அவர்களிடத்திலே இருக்கிறது. கேட்கிறவர்களுக்கெல்லாம் கொடுக்கப்படுவதில்லை. நாமும் எழுதினோம்; ஆந்திராவும் எழுதினார்கள். அந்த நேரத்திலே அது ஆந்திராவிற்கு திருப்பதியிலே அமைக்க அனுமதி கிடைத்தது. அசோக் லேலண்ட் பொறுத்தமட்டில் அதனுடைய மானேஜிங் டைரக்டர் சகானி அவர்களே பத்திரிகைகளில் தெளிவாக எழுதியிருக்கிறார்கள். சென்னையிலே விரிவாக்கம் ஓசூரில் ஆரம்பித்து இருக்கிறோம். வட மாநிலங்களுக்கு போவது மார்க்கெட்டிங் காரணமாகத்தான் போகிறோம். தென் மாநிலங்களுக்கு வேண்டிய சேசிஸ் தயார் செய்கிறோம். இங்கே செய்வதை வட மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லும் போது விலை கூடுகிறது. ஆகவே மார்க்கெட்டிங் காரணமாகத்தான் வடமாநிலத்திற்கு இந்த எக்ஸ்பேன்ஷனை கொண்டு போகிறோம் என்று சொல்லியிருக்கிறார். ஓசூரில் அந்த தொழிற்சாலையை நானும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் தான் திறந்து வைத்தோம். எனவே அசோக் லேலண்ட் பொறுத்தவரையில் மார்க்கெட்டிங் காரணமாகதான் போனது. ரெயில்வே கோச் பாக்டரியை பொறுத்தவரையில் மத்திய அரசினுடைய முடிவினால் போனது. மாண்புமிகு உறுப்பினருக்கு மத்திய அரசோடு போராட துணிச்சல் இல்லையென்றால் அதற்காக மாநில அரசை குறை சொல்லக் கூடாது.

**திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, நீங்கள் தான் எனக்கு டைம் கொடுக்கவேண்டும். பாரதத்திலே ஒருவன் பாட்டு படிப்பான், மற்றொருவன் விளக்கம் கொடுப்பான். அந்த மாதிரி நான் பேசியதற்கு அவர் விளக்கம் சொல்லிக் கொண்டிருக்கிறார். அசோக் லேலண்ட் என்றால் ஒரு மணி நேரம் பதில் சொல்கிறார். நேவல் அகாடமி ஏன் போயிற்று? இராமேஸ்வரத்தில் கொசு ஒழிப்புத் திட்டம் போட்டார்களே, ஏன் போயிற்று? சாகித்ய அகாடமி போயிற்றே, ஏன் போயிற்று? கலர் பிலிம் தொழிற்சாலை ஏன் போயிற்று? இதற்கெல்லாம் சொன்னீர்கள் என்றால் மூன்று மணி நேரம் ஆகும். உங்களை கேட்பது வாதாடுவதற்காக அல்ல, தலைவர் அவர்களே ஒன்றை சொல்லிக் கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருக்கலாம். அன்றைக்கு மத்தியிலே தமிழ் நாட்டுனுடைய நலத்தை எண்ணிதான் காவிரி நீர் பிரச்னையிலே மத்திய அரசு



நியாயமான முறையிலே இருக்காவிட்டால் தமிழக விவசாய மக்களிடம் இருள் சூழும் என்று மாநில அவையில் திரு வை. கோபால்சாமி பேசியிருக்கிறார். அதுமட்டுமல்ல. இன்னொன்றையும் சொல்லியிருக்கிறார். காடு, நீர், நிலம் எல்ல வற்றிலும் போகக்கூடிய ஒரு டிராக்டர், யுத்த தளவாடங்களுக்கு பயன்படக் கூடியது, அதை வெளிநாட்டிலேயே வாங்கிக் கொண்டிருந்தார்கள். இப்போது நம் நாட்டிலேயே தயாரிக்கிறார்கள். அப்படியானால் திரு கோபால்சாமி கேட்கிறார், நீங்கள் எந்த மாநிலத்திலே அந்த தொழிற்சாலையை துவங்க முடிவு செய்திருக்கிறீர்கள் என்று; திரு வெங்கட்ராமன் அவர்கள் பதில் சொல்கிறார், ஆந்திர மாநிலத்தில் மேடக் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. அமைச்சரின் பதில் எனக்கு ஏமாற்றத்தை அளிக்கிறது; திருச்சியிலே தான் துவங்க வேண்டுமென்று பேசினார்.

அங்கே அரசியல் கண்ணோட்டம் பார்த்தோமா? அது மட்டுமல்ல, 'ஊட்டி'யில் கலர் பிலிம் தொழிற்சாலை அமைக்க வேண்டும்,-இது மத்திய மேல்சபையிலே திரு. வை. கோபால்சாமி பேசிய பேச்சு. எதற்காகச் சொல்கிறேன் என்று கேட்டால், நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தாலும் இந்த மாநிலத்திற்குத் தேவையானவைகளை கேட்பதிலே நாங்கள் பின்வாங்கவில்லை என்பதற்காகத்தான். நம்முடைய மதிப்பிற்குரிய தொழில் துறை அமைச்சர் சொல்கிறார், எங்களுக்குத் தைரியம் இல்லை என்று. ஆனால், அது மட்டும் அல்ல, தலைவர் அவர்களே, இன்னும் நான் விளக்கம் சொல்ல விரும்புகிறேன்.

Tamil Nadu gets the lowest per capita Central assistance.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரமாயிற்று, முடியுங்கள். 10 நிமிஷம்தான் கொடுக்கப்பட்ட நேரம். அதற்கு மேலேயே கொடுத்தாயிற்று. இரண்டு நிமிஷத்திலே முடியுங்கள்.

**திரு. துரைமுருகன்:** 5 நிமிஷமாவது கொடுங்கள், முடித்துக் கொள்கிறேன். இந்தியாவில் இருக்கிற எல்லா மாநிலங்களும் அதிகமாக வாங்கியிருக்கின்றன. சிக்கிம்கூட, ரூ. 1,185/— வாங்கியிருக்கிறது; மேகாலயா, திரிபுரா திரு. மிதுன் சக்கரவர்த்தி முதலமைச்சர்; என்னோடு ஒரு வருஷம் ஜெயிலிலே இருந்தார் வேலூரிலே, மீசாவிலே கைது செய்யப்பட்டு ரூ. 337/— வாங்கியிருக்கிறது, 'லோயஸ்ட்' வாங்கியது யார்? நாம் தான், ரூ. 34 தான் வாங்கியிருக்கிறோம். தொழிலும் போச்சு, வந்த தொழிலும் போச்சு, வராத தொழிலும் போச்சு. காரணம், சென்ட்ரல் கவர்ன்மெட்டைக் கேட்பது கிடையாது.

* * *

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பிலே அவர் சொன்னதற்கு நான் பதில் சொன்னேன். ஆனால், தனிப்பட்ட முறையிலே என்னைப்பற்றி அவர் சொல்கிற வாசகங்கள் அவைக்குறிப்பிலே இடம் பெறுமானால்,

* * *

Thiru Duraimurugan: **

MR. SPEAKER: Personal remarks will be expunged. இரண்டு பக்கமும் நான் எக்ஸ்பஞ்ச் செய்கிறேன். யாரைப் பற்றி பேசி னாலும் சரி, நல்லதல்ல, அது முறையல்ல.

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, அது மட்டு மல்ல, மத்திய சர்க்கார் இப்படி செய்கிறது என்கிறார்கள். சரி, விட்டுவிடுங்கள். இவர்கள் கையில் அதிகாரம் இருக்கிறதே, கரும்பு விலை நிர்ணயம்-அது என்னவாயிற்று? ஆந்திராவிலே ரூ. 185/-என்று பிக்ஸ் செய்திருக்கிறார்கள். வேலூரிலே, சர்க்கரை ஆலையிலே மகத்தான உற்பத்தி செய்து சாதனை காட்டியிருக்கிறார்கள். ரூ. 110/- கொடுத்திருக்கிறார்கள். கொடுப்பானா, கோடுக்க மாட்டானா என்று தெரியவில்லை. வாராவாரம், லாட்டரி சீட்டு வருகிற மாதிரி, அடுத்த வாரம் கரும்பு விலை நிர்ணயிக்கப்படும், அடுத்த வாரம் நிர்ணயிக்கப் படும் என்று சொல்லி, இப்பொழுது எல்லா கரும்பும் போயிற்று 6 மாதம் பணம் கொடுக்கவில்லையென்றால், வட்டி போட்டா கொடுப்பார்கள்? கரும்பு விலையை நிர்ணயிக்க மத்திய அரசு உதவி வேண்டுமா? உங்களுக்கு அதிகாரம் கிடையாதா? ஆனால் இன்றைக்குப் பேசுவதெல்லாம் எங்களுக்கு மநில சுயாட்சி வேண்டும் என்பது. எங்களுக்கு ரொம்ப மகிழ்ச்சி. 1974–லே, இதுபற்றி நாங்கள் பேசும்பொழுது என்ன எதிர்த்தார்கள் தெரியுமா? மாநில சுயாட்சி வேண்டாம். அதிக அதிகாரம் வேண்டாம் என்றார்கள். என்னுடைய அருமை நண்பர், என்னோடு படித்தவர், திரு. குப்புசாமி அவர்கள் ரொம்ப அழகாகச் சொன்னார். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறுக்கீடுகள் வேண்டாம். அதோடு திரு. துரைமுருகன் பேச்சு முடிந்தது. அடுத்து திரு. எஸ். ஜகத்ரட்சகன் பேசுவார்.

*திரு. எஸ். ஜகத்ரட்சகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களால் ஆற்றப்பட்ட உரையை வரவேற்றுப் பேசுவதிலே நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த உரையைப் பொறுத்தவரையிலும் எதிர்க்கட்சியினர் இந்தவுரை வறட்சியாக இருக்கிறது என்றார்கள். காலையில் எழுந்தவுடன் பத்திரிகையைப் பார்ப்பதற்கு அவர்களுக்குச் சற்று சங்கடமாக இருக்கிறது!

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



(முற்பகல் 11–10)

காலையிலே எழுந்ததும் பத்திரிகையைப் பார்த்தால் ஒரு நாளைக்கு ஆயிரம் பேர், இரண்டாயிரம் பேர், பத்தாயிரம் பேர் என்று கட்சியை விட்டுத் தோழர்கள் வெளியே செல்கின்ற நிலையில் அந்த மிரட்சியிலே இருப்பவர்களுக்கு எதைப் பார்த் தாலும் வறட்சியாக இருப்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்று மில்லை.

பாரதத்திலே கதை ஒன்று சொல்லுவார்கள். தருமரைப் பார்த்துச் சொன்னார்களாம், யாராவது ஒரு தீயவர் இருக் கிறாரா என்று பார்த்து விட்டு வா என்று. உலகம் பூராவும் சுற்றிப் பார்த்துவிட்டு வந்து தருமர் சொன்னாராம், உலகம் பூராவும் சென்று பார்த்தேன். எங்குப் பார்த்தாலும் தீயவர் களே இல்லை; யாரைப் பார்த்தாலும் நல்லவர்களாகவே இருக் கிறார்கள் என்று. பக்கத்திலிருந்த துரியோதனனைப் பார்த்து, உலகம் பூராவும் பார்த்து யாராவது நல்லவர்கள் இருக் கிறார்களா என்று பார்த்து விட்டு வா என்று சொன்னார்கள். துரியோதனன் உலகம் பூராவும் சுற்றிப் பார்த்து விட்டு வந்து சொன்னானாம், யாரைப் பார்த்தாலும் தீயவர்களாகவே இருக் கிறார்கள் என்று.

அதைப்போல நம்முடைய எதிர்க்கட்சியிலேஇருக்கின்றார்கள். எதைப் பார்த்தாலும் தவறு என்று சொல்வதையே வழக்கமாக கொண்டிருக்கிறார்கள். காமாலைக் கண்ணனுக்கு கரித்தூளும் மஞ்சள் என்பார்கள். அதுபோல எதைப் பார்த்தாலும் குற்றம் என்றும், தவறு என்றும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

சத்துணவுத் திட்டத்தைப் பற்றி எதிர்க்கட்சியிலே இருப் பவர்கள் சொல்கிறார்கள் எத்தனை நாளைக்கு இதனைப் போட முடியும் என்று. ஒரு தாயைப் பார்த்து உனக்கு எத்தனை நாளைக்குப் பால் வரும், உன் குழந்தைக்கு எத்தனை நாளைக்கு நீ பால் கொடுக்கப் போகிறாய் என்று எவராவது கேட்பதுண்டா? சத்துணவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு தாயைப் போல இருக்கின்ற எங்களுடைய தங்கத் தலைவன் இரவு பகலாகப் பிச்சையெடுத்தாவது என் உயிர் உள்ளவரையில் சத்துணவுத் திட்டத்தை நிறைவேற்றுவேன் என்றல்லவா சொல்லியிருக்கிறார்!

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

காண்டேகர் கூறியது ஒன்று நினைவுக்கு வருகிறது. ஒரு தாய் தன்னுடைய இரத்தத்தைப் பாலாகவும், தன்னுடைய கண் களை விளக்காகவும், தன்னுடைய கைகளைத் தொட்டிலாகவும் கொண்டு குழந்தையைக் காப்பாற்றுகிறாள் என்று, அதைப் போல எங்களுடைய தங்கத் தலைவன் தமிழக முதல்வர் புரட்சித் தலைவரவர்கள் இந்தச் சத்துணவுத் திட்டத்தைப் பொறுத்த வரையில் எந்தக் காரணத்தைக் கொண்டும் எந்தச் சூழ்நிலையி லேயும் உயிருள்ள வரையில் இதை நிறைவேற்றியே தீருவேன்

என்று சொல்லியிருக்கிறார். ஏழை எளிய பட்டாளி மக்களின் குழந்தைகள் உயிர் வாழ்வதற்கான மாபெரும் திட்டத்தை முதல்வரவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை பற்றி மேலை நாட்டினர்கூடப் பாராட்டுகிறார்கள். அண்டை மாநிலங்களிலே இருப்பவர்கள் பாராட்டுகிறார்கள். இந்தத் திட்டம் எப்படி கொண்டு வரப்பட்டது என்று ஆர்வத்தோடு கேட்கிறார்கள். பொதுவுடைமைக் கட்சியினரும் பேசுகிறார்கள்; அவர்கள் சில குறைகளைச் சொல்கிறார்கள். நான் கேள்விப் படுகிறேன். சீன நாட்டிலே கூட இப்படிப்பட்ட ஒரு திட்டம் கொண்டு வரப்பட்டு, அங்கே பிறக்கின்ற குழந்தைகளுக்குச் சரியான உணவு, சத்தான உணவு தர வேண்டுமென்று தோற்று வித்திருக்கிறார்கள். இப்படி எல்லாவிடங்களிலேயும் இந்தத் திட்டத்தை மிகவும் சிறப்பாகவும், எல்லோரும் பாராட்டுகின்ற அளவிலேயும் நடத்துகின்ற நேரத்திலே இங்கேயுள்ள நம்முடைய எதிர்க்கட்சியினர் ஏதாவது குற்றச்சாட்டு சொல்ல வேண்டுமே என்றுதான் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன்.

* * *

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்; இந்தப் பிரச்சினை பற்றி யாரும் பேசவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். இது பொதுப் பிரச்சினை. இந்த விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய திரு. ஜகத்ரட்சகன், பேராசிரியர், நாவலர் துரைமுருகன் ஆகியோர்கள் பேசிய அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் படுகிறது.

திரு. எஸ். ஜகத்ரட்சகன்: துணைத் தலைவர் அவர்களே, எங்கள் இயக்கத்தைப் பொறுத்தவரையில் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நேற்றுகூட அவையிலே பேசுகின்ற நேரத்திலே சொன்னார்கள் கங்கை காவிரியை இணைக்கவேண்டும் என்று. வெள்ளையர்கள் இந்த நாட்டை விட்டு வெளியேறும்போதுகூட இந்த நாடு வளவாழ்வு பெறவேண்டுமானால், பொலிவுபெறவேண்டுமானால் கங்கையையும் காவிரியையும் இணைக்கவேண்டுமென்று கருத்துத் தெரிவித்திருக் கிறார்கள். என்னவோ தெரியவில்லை, மத்தியிலே இருக்கின்ற

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



வர்கள் இதுவரையில் மவுனமாக இருக்கிறார்கள். அவர்களின் அமைதிக்குக் காரணம் புரியவில்லை. ஏறத்தாழ இரண்டாயிரம் கோடி ரூபாயிலே உலகத்திலே உள்ள எல்லோரும் பாராட்டுகின்ற வகையில் ஆசிய விளையாட்டை டெல்லியிலே நடத்திக் காட்டி னோம். நிலநூல் அறிஞர் ஒருவர் சொல்லி இருக்கிறார், இந்த 2 ஆயிரம் கோடி ரூபாய் நமக்கு இருக்குமானால் இந்த கங்கை–காவிரி இணைப்பின் முதல் கட்டப் பணியை முடித்திருக்க லாம் என்று சொல்லியிருக்கிறார். ஆசிய விளையாட்டை நடத்துவதில் ஆர்வங்காட்டுபவர்கள் மாநிலங்கள் மகிழ்ச்சியடை யும் மகத்தான திட்டங்களையும் நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வட மாநிலத்திலே தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டபோது வங்காள தேசத்திற்குச் சென்று, பேச்சு வார்த்தை நடத்தி பிரம்மபுத்திரா வழியாக தண்ணீர் கொண்டு வரவேண்டும் என்ற வர்கள் வடக்கிலே இருப்பவர்கள் வாழவேண்டும் என்று பாடு பட்டவர்கள் வறண்டு கிடக்கின்ற தமிழகத்தை, பருவமழை தவறிய காரணத்தினாலே இங்கே தண்ணீர்ப் பஞ்சம் மிகவும் கடுமையாக இருப்பதை உணர்ந்தும் இந்தக் காவிரித் தண்ணீரைக் கொண்டு வருவதற்குப் பதிலாக மத்தியிலே இருக்கிறவர்கள் என்னவோ ஏளனம் செய்து கொண்டிருக்கிறார்கள். இதற் கெல்லாம் காரணம் புரியவில்லை.

இங்கே பேசியவர்கள் எல்லாம், சொன்னார்கள். இங்கே மழைவரவேண்டும் என்று குன்னக்குடி வைத்தியநாதனுடைய வயலின் கச்சேரியைப் பற்றிப் பேசினார்கள். பகுத்தறிவைப் பற்றி நீங்கள் மட்டும் பேசலாமா? நாங்கள் வேண்டுமானால் பேசலாம். இப்படிப் பேச அருகதையில்லை, காரணம்**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் கண் நோயைப் பற்றிப் பேசிய அந்த வாசகங்கள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப் படுகின்றன.

(முற்பகல் 11-20)

திரு. எஸ். ஜகத்ரட்சகன்: துணைத் தலைவர் அவர்களே, நேற்று அவர்கள் சொன்னார்கள். இங்கே மழை பெய்யவில்லை என்று சொல்லி குன்னக்குடி வைத்திய நாதன் வயலின் கச்சேரி நடத்துகிறார்கள். அது மட்டும் அல்ல சில்க்கு என்றெல்லாம் சொன்னார்களே, என்பதற்காகத்தான் இந்த வாசகத்தை சொல்ல வேண்டுமென்று நினைத்தேன் நான் பேசுவதை எல்லாம் எடுத்து விட வேண்டுமென்று சொன்னால் நான் எதைப் பேசுவது என்று எனக்குப் புரியவில்லை.

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பதவி விலகிக் கொண்டிருக்கிறார்கள் என்ற ஒரு செய்தி தமிழகத்திலே பரபரப்பாக நடந்துகொண்டிருக் கிறது என்று சொன்னார்கள். எனக்கு நன்றாக நினைவு இருக் கிறது. டெல்லியிலே ஒரு அமைச்சர், நம்முடைய இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மத்திய உள்துறை அமைச்சர் ஆந்திர மாநிலத்திற்கு வந்திருந்தபோது ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழிருக்கிறார்கள் என்று பேசியி ருக்கிறார்கள். எனக்கு ஏற்பட்டிருக்கிற ஐயப்பாடுஎன்னவென்றால், மத்தியிலே இருக்கிறவர்கள் சொல்லித்தான் இவர்கள் இராஜினாமா செய்துகொண்டிருக்கிறார்களோ என்ற ஐயப்பாடு சிலருக்கு இருப் பதாக மக்களும் பேசிக்கொள்கிறார்கள்.

அடுத்து, அரிசிப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலும் தமிழகம் மிகவும் பின்தங்கியுள்ளது. எங்களுடைய நாவலர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். பருவமழை இங்கே பெய்யவில்லை. பக்கத்திலே இருந்து அரிசி வரவில்லை என்று சொல்லியதோடு ஆந்திராவிலே அதிகமாக அரிசி விளைந்திருக் கிறது. அதிகமா அங்கேவிளைந்திருக்கிற அரிசியைத்தமிழகத்திற்கு, தரவேண்டுமென்று கேட்கலாம் என்ற எண்ணத்திலே இருக்கிற போது மத்திய அரசிலே இருப்பவர்கள் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். வேறு மாநிலத்திற்கு அரிசியை நீங்கள் அனுப்பக்கூடாது என்று சொல்கிறார்கள். எனக்குப் புரியவில்லை. தமிழகம், எந்தவகையிலே தவறு செய்திருக்கிறது? தமிழகத்தைப் பொறுத்தவரையிலே ஏன் இப்படி மத்திய அரசிலே இருப்பவர்கள் மாற்றாந்தாய் மனப்பான்மையிலே இருக்கிறார்கள் என்று புரியவில்லை. கொள்முதலைப் பொறுத்தவரையிலும் அரிசி விளைவிப்பதற்காக ஏறத்தாழ 140 ரூபாய் ஆகிறது. நெல் விளைவிப்பதற்கு எந்த நேரமும் தண்ணீரைக் கொடுக்கவேண்டும், 140 ரூபாய் செலவாகிறது. ஆனால் மத்திய அரசு நிர்ணயிப்பதோ 122 ரூபாய். ஆனால் வட மாநிலத்தில் விளைகிற கோதுமைக்கு 90 ரூபாய்தான் செலவாகிறது. ஆனால் அவர்கள் 165 ரூபாய் நிர்ணயிக்கிறார்கள். மேலும் ஊட்டி தொழிற்சாலையைப்பற்றி இங்கே இருப்பவர்கள் எல்லசம் சொன்னார்கள், காங்கிரசு நண்பர்களுக்குத் தெரியாது என்று நினைக்கிறேன். நாடாளு மன்றத்திலே பிரபு என்கிற உறுப்பினர் அங்கே கேட்டார். எங்கள் தமிழகத்திற்கு அந்தத் தொழிற் சாலை ஊட்டியிலே வேண்டுமென்று கேட்டார்கள். அவர்கள் தர மறுத்தார்கள், உங்கள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்தான் கேட்டார்கள். தர மறுக்கிறார்கள். சாரணம் இந்த பிரபு என்பவர் வட மாநிலத்துக்காரராக இருந்தால், அதுவும் இந்தி பேசுகிறவராக இருந்திருந்தால் கண்டிப்பாகக்கொடுத்திருப்பார்கள். அவர் தமிழ் பேசுகிறார் என்ற ஒரே காரணத்திற்காக, அந்த தொழிற்சாலையைக் கூடக் கொடுக்காமல் வேறு மாநிலத்திற்கு மாற்றவேண்டுமென்ற திட்டத்திலே இருக்கிறார்கள்.



மொழிப் பிரச்னையைப் பொறுத்தவரையிலும் ஆளுநர் உரையிலே மிக அழகாகச் சொல்லியிருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் இரண்டே இரண்டுதான், ஆங்கிலமும், தமிழும் தொடர்ந்து இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார் கள். இப்படி சொல்கிறபோது நம்முடைய ஆளுங்கட்சியிலே இருப்பவர்கள்கூட ஏதோ வெறி என்று சொல்கிறார்கள். எனக்குப் புரியவில்லை. வெறி என்று சொன்னால், அதைச் சொல்கிறவர்கள் யாராக இருக்கவேண்டுமென்றால் வேண்டாதவர் களாகத்தான் இருக்க வேண்டும். இந்த நாட்டிற்கு விடுதலை வாங்கித் தந்த அண்ணல் காந்தி அடிகள் அவர்கள் சொன்னார்கள் 1947லே இந்திய நாட்டிற்கு விடுதலை கிடைத்தவுடன் காங்கிரஸ் இயக்கத்தை கலைத்துவிட வேண்டுமென்று சொன்னவர் நமது காந்திஅடிகள். அந்த காந்தி அடிகள் தங்களுடைய சுயசரிதையை தன் னுடைய தாய் மொழியான குஜராத்தியிலேதான் எழுதினார்கள். அதற்கு அடுத்து பூதான் இயக்கத்தினுடைய தந்தை வினோபா அவர்கள் தனது தாய் மொழியிலேதான் கீதைப் பேருரையை எழுதினார்கள். அதற்கு அடுத்து திலகர் அவர்கள் கீதை விளக் கத்தைத் தாய் மொழியிலே எழுதி காட்டினார்கள். ஆகவே தாய் மொழியை வளர்ப்பது, தாய் மொழி வேண்டுமென்று சொல்வது வெறி என்று சொன்னால் நமக்குப் புரியவில்லை. எல்லா இடங்களிலும் மத்திய அரசைப் பொறுத்த வரையில் இந்தியைப் புகுத்த வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். நேற்றுகூட நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதிக்கு எதிரிலே ஓவர்சீஸ் ம்யூனிகேஷன் என்று கருதுகிறேன், ஆங்கிலத்திலே எழுதப்பட்டிருக்கிறது. இது எதைக் காட்டுகிறது? தமிழ்நாடு, தமிழிலே எழுதுங்கள். வேண்டுமானால் ஆங்கிலத்திலேகூட எழுதிவிட்டுப் போங்கள். அங்கே எழுதியிருக்கிறார்கள். விதேஷ் சஞ்சார் பவன் என்று எழுதியிருக்கிறார்கள். எதற்காக எழுதியிருக்கிறார்கள். அந்த வாசகத்தை யார் புரிந்துகொள்வார்கள். அதற்கு அடுத்து பக்கத் திலே இருக்கின்ற தூரதர்ஷன் கேந்திரா என்று டி.வியைப் பற்றி எழுதியிருக்கிறார்கள். இதையெல்லாம் தமிழகத்திலே இப்படி இந்தி மொழியைப் புகுத்துவதற்கு எந்தெந்த வழிகளையெல்லாம் பயன்படுத்துகிறார்கள் என்பதைக் காணும்போது எங்களுக் கெல்லாம் வருத்தமாக இருக்காதா? இங்கே இருக்கிற காங்கிரஸ் காரர்கள் இதை உணரவேண்டும். ****

தமிழகத்தைப் பொறுத்தவரையில் இங்கே பெரிய பிரச்சினை இறால் மீன் பிடிப்பதாகும். தமிழகத்தில் 600 மைல் நீளம் கடற் கரைப் பகுதியிருந்தாலும், இறால் பிடிப்பதற்கான அனுமதியை மத்திய அரசு பெரிய பெரிய முதலாளிகளுக்குத்தான் வழங்கி வருகிறது. அப்படிப்பட்ட உரிமம் தமிழகத்தில் உள்ளவர்களுக்கு அதிகமாகக் கொடுத்தால், இங்கேயுள்ளவர்களுக்கு அதிகமான வருமானம்வரும். லாபம் பெருகும். அதனால் தமிழகமும் நல்ல வளர்ச்சி அடையும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சோவியத் நாட்டோடு ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் நிறுவப்பட இருக்கும் அனல் மின் நிலையங்களில் ஒன்றை தமிழகத்திற்கு மத்திய அரசு தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்றுமதி இறக்குமதி உரிமம் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. இங்கே ஒரு சிலருக்குத்தான் கொடுக்கப்படுகிறது. வடபுலத்தில் அதிகமான பேர்களுக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. இதன் காரணமாக தமிழகத்தின் வருமானம் குறைந்து காணப்படுகிறது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எங்களுடைய செங்கற்பட்டு மாவட்டம் மிகவும் வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, செங்கற்பட்டு மாவட்டம் முழுவதையும் வறட்சிப் பகுதியாக வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என்றும் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள உத்திரமேரூர் ஏரி ஆழப் படுத்தப்பட வேண்டும் என்று நீண்ட நெடுங்காலமாக கேட்டு வருகிறோம். அதையும் சீர்செய்துதரவேண்டும்என்றுகூறி, திருவள்ளுவர் கூறியதைப்போல,

'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப்படும்'

என்ற முறையில் அரசுதான் மக்களைத் தழுவி அரவணைப்பாக நடந்துகொள்ள வேண்டும். அரவணைப்புக்கும் ஆதரவுக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகிற எங்கள் தங்கத் தலைவர் புரட்சித் தலைவரின் அரசுக்கு தமிழக மக்கள் சார்பாக, ஏழை எளிய பாட்டாளி மக்கள் சார்பாக என் இதயங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்து, விடைபெறுகிறேன்.

(முற்பகல் 11-30)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜகத்ரட்சகன் அவர்கள் பேசும்போது ** ** *** ஆகியோரைப் பற்றி குறிப்பிட்டுப் பேசியது அவைக் குறிப்பில் இருக்கவேண்டியதில்லை. அவற்றை முழுமையாக அவைக்குறிப்பிலே இருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன். அடுத்து, திருமதி டி. யசோதா பேசுவார்.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநருடைய உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற விவாதத்திலே கலந்துகொள்கின்ற ஒரு வாய்ப்பினை எனக்கு கொடுத்ததற்காக முதற்கண் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



ஆளுநர் உரையிலே மிகப்பெரிய திட்டமாக அதிகமான வர்ணனைக்கு ஆளாக்கப்பட்டிருப்பது சத்துணவுத் திட்டம். அதைப்பற்றி அதிகமான வர்ணிப்பு இருப்பது இயற்கைதான் ஏனென்றால் அதிகமான நிதி ஒதுக்கீடு அதிலே ஒதுக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால் வர்ணிப்பு அதிகமாக இருக்கிற சூழ்நிலை ஏற்படுகிறது. ''சரக்கு முறுக்காக இல்லாவிட்டாலும் செட்டியார் முறுக்காக இருக்க வேண்டும்'' என்ற முறையிலே அமைந்திருக்கின்ற இந்த சத்துணவுத்திட்டத்திற்கு அந்த வர்ணிப்பு இருக்கிறது.

பாராட்டினால் அறிவாளிகளுக்கு, பாராட்டவில்லை என்றால் குற்றச்சாட்டுகளைச் சொல்கிறவர்கள் விவரம் இல்லாதவர்கள் என்கிறார்கள். அப்படித்தான் விவாதங்களும் அமைந்திருக்கின்றன. பத்திரிகைகள் பாராட்டவில்லை என்று சொல்கிறார்கள். ஏதோ ஒரு பத்திரிகை ''சத்துணவுத் திட்டத்திற்கு சம்பந்தம் இல்லாத சிலரை வைத்து அந்தப் பணத்தினுடைய வரவு செலவுகளை தணிக்கை செய்ய வேண்டும்'' என்று சுட்டிக்காட்டியதை பார்த்திருப்பீர்கள். இந்த கவர்னர் உரையின் அடிப்படையிலே நான் கேட்டுக்கொள்கிறேன். அது விவரம் இல்லாத பத்திரிகையா அல்லது ஒன்றும் தெரியாத பத்திரிகையா?

இன்னும் சொல்ல வேண்டுமென்றால் இப்படிக் குறைகளைக் சுட்டிக்காட்டுகின்ற காரணத்தால், பாராட்டுதல்களை மட்டும் கூறவேண்டும்: குற்றங்குறைகளைக் கூறக்கூடாது என்று நீங்கள் எதிர்பார்க்கின்ற காரணத்தால் உங்களுடைய விருப்பம் எப்படி இருக்கிறது என்றால், மூக்கை அறுத்துவிட்டு மல்லிகையை நுகரச் சொல்வதுபோல் இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இன்னும் சொல்ல வேண்டுமென்றால், அண்மையில் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் எனக்கு ஒரு பொங்கல் வாழ்த்து அனுப்பியிருந்தார்கள். அதிலே அவர்கள் குறிப்பிட்டிருந்த வாசகம் ''உழைப்பவர்கள் பெற்ற சோறும் உண்மையில் பெற்ற வாழ்வும் தழைத்திடும் என்று சொல்லி இங்கே தைப் பொங்கல் வந்தது'' என்பது. அப்படியானால் உழைப்பினால் வந்த சோறுதான் தழைக்கும்; உழைக்காமல் வந்த சத்துணவு சோறு தழைக்காது என்று ஒதுக்கிவிடபோகிறீர்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத்தலைவரவர்களே, உழைக்கக்கூடியவர்கள் உழைப்பினால் பெற முடியும். ஆனால் குழந்தைகள் உழைக்க முடியாதவர்கள்.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்களின் பெற்றோர்களுக்கு உழைப்பு இருந்து, அதற்குரிய ஊதியமும் இருந்திருந்தால், அந்தக் குழந்தைகள் சத்துணவு வாங்க வரவேண்டிய சூழ்நிலையே இருக்காது என்பதைத்தான் இந்த நேரத்திலே நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

இன்னும் சொல்லப்போனால், இந்த கவர்னர் உரையிலே, விடுமுறை நாட்களுக்கு இந்தக் குழந்தைகளுக்கு உணவுப் பொட்டலங்களாக முதலிலேயே தயார் செய்து, முதல்நாள் மாலையே கொடுத்து அனுப்பிவிடுவதாக சொல்லியிருக்கிறார்கல். ஆனால் அவ்வாறு உண்மையிலேயே கொடுத்து அனுப்புகிறார்களா என்று சொன்னால்—24 ஆம் தேதியன்று இந்த உரை நிகழ்த்தப்படுகிறது—26 ஆம் தேதி குடியரசு தினம் விடுமுறை நாள் 25 ஆம் தேதி மாலை குழந்தைகளுக்கு அவ்வாறு உணவுப் பொட்டலங்கள் கொடுக்கப்பட்டனவா என்றால் இல்லை. நான் ஆதாரத்தோடு சொல்கிறேன். சென்னையிலே சில பகுதிகளிலே மதிய உணவு கொடுத்துவிட்டு, மாலையில 4 மணிக்கு சர்க்கரைப் பொங்கலைக் கொடுத்துவிட்டார்கள். அது கொஞ்சம் கெட்டியாக இருந்திருந்தால் சர்க்கரைப் பொங்கல் என்று சொல்லலாம், சற்று நீர்த்த நிலையில் கஞ்சி என்று சொல்லக்கூடிய வகையில் மாலை 4½ மணிக்கு வழங்கப்பட்டது. சில இடங்களில் 2 வயது முதல் 4 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு ரவா லட்டும் கொடுத்தார்கள். அதை குழந்தைகள் அப்போதே சாப்பிட்டு விட்டார்கள். வேண்டும் என்றால் மதியம் சாப்பிதற்குப் பிறகு அதிகப்படியாக கொடுத்திருக்கிறார்கள் என்று வேண்டுமானால் சொல்லலாமே தவிர, அந்த ரவா லட்டும், சர்க்கரை கஞ்சியும் மறுநாளைக்கான உணவாக இருக்க முடியாது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து வேலையில்லாத திண்டாட்டத்தை ஒழிப்பதற்காக வீட்டுக்கு ஒருவருக்கு வேலை வாய்ப்பு என்ற திட்டத்தின்கீழ் ஒரு திட்டம் தொடங்க, 25 கோடி ரூபாய் வரும் நிதியாண்டில் ஒதுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட சென்னை தலைநகரத்திலே மட்டும் 2½ லட்சம் பேருக்கு மேல், 2½ லட்சம் என்று சொல்கிறபோது, தமிழகம் முழுவதற்கும் 15 கோடி ரூபாய் இதற்கென்று ஒதுக்குவது. சரியாக இருக்குமா இந்தத் தொகை போதுமா என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

காங்கிரஸ் கட்சி ஆட்சியிலே இருந்தபோது, தமிழகத்திலே ஏற்பட்ட அத்தனை பிரச்சனைகளுக்கும் காங்கிரஸ் கட்சி பொறுப்பேற்று சயலாற்றி வந்தது. மத்திய அரசு மீது பழியை போட்டு தப்பித்துக் கொள்ள அப்போதிருந்த ஆட்சிக்கு வாய்ப்பும் இல்லை வசதியும் இல்லை. ஆகவேதான் மொத்தப் பிரச்சனைகளுக்கும் காங்கிரஸ் கட்சி பொறுப்பேற்று தமிழகத்தை பாதுகாத்து வந்தது. அதை உணர்ந்து தெரிந்து கொண்டுதான் பஞ்சக்காலத்தில் கஞ்சித் தொட்டி வைத்து நடத்திய நிலைமையை மாற்ற வேண்டும் என்றுதான் சமையல் செய்து மதிய உணவாக அளிக்கும் திட்டத்தை காங்கிரஸ் ஆட்சி கொண்டு வந்தது.



அது மட்டும் அல்ல வெள்ளைக்காரன் காலத்தில் ரேஷன் முறை அமுலில் இருந்தது. அதனை காலஞ்சென்ற சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் முதற்கொண்டு செயல்படுத்தி வந்தபோது, அப்போதிருந்த எதிர்க்கட்சியினர் ½ அவுன்சு என்று கேலி செய்தார்கள். அப்போது நாட்டில் நிலவிய உணவுப் பற்றாக்குறைக்கு மத்திய அரசாங்கத்தின் மீது பழியைப் போட அப்போதிருந்த காங்கிரஸ் அரசாங்கம் தயாராக இல்லை. ஆனால் அன்றைய காங்கிரஸ் அரசு முனைப்போடு செயல்பட்டு அப்பஞ்சத்தைப் போக்கியதுமல்லாமல், உணவு பொருள்கள் சேமிப்பில் கவனம் செலுத்தியதின் காரணமாகத்தான் இன்றைக்கு உணவு நிலைமையிலே மிகப் பெரிய மாற்றத்தைக் கண்டிருக்கிறோம் என்று சொன்னால் அது மிகையல்ல. அந்த மாற்றத்தின் விளைவாகப் பிறந்ததுதான் கலைஞர் என்.எஸ்.கே. அவர்கள் போட்ட ஐம்பதும் அறுபதும், என்ற நாடகம். 50 ஆம் ஆண்டில் இருந்த உணவு நிலைமைக்கும், 60 ஆம் ஆண்டிலிருந்த உணவு நிலைமைக்கும் வித்தியாசப்படுத்தி அவர் பாடிய பாடல்தான், இங்கே டாக்டர் சமரசம் அவர்கள் குறிப்பிட்ட பாடல், ''கல்லும் மணலும் கலந்த அரிசி, கறுப்பு உளுந்து கலந்த கம்பு அரிசியைத் தின்று வம்பு வந்தது அந்த ஆட்சியில்—ஊசி முல்லைப் போன்ற அரிசி மூட்டைக் கணக்கில் வாங்கிப் போட்டு மூக்கு வரைக்கும் சாப்பிடுவது இந்த ஆட்சியில்'' என்பது அந்தப் பாடல். என்.எஸ்.கே. அவர்கள் பாடியது. இந்தப் பாடல் இப்போது எப்படிப் பொருந்தும் என்பதை நீங்கள் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இப்போது வழங்கப்படும் அரிசி எப்படி இருக்கிறது என்று சொன்னால், முல்லை அரும்பு போல் அல்ல, பொன் வண்டு முட்டை போல் இருக்கிறது. சரி அரிசிதான் உருவத்தில் அந்த நிலையில் இருக்கிறதே, முல்லைக்குரிய மணமாவது அந்த அரிசியில் இருக்கிறதா என்றால், அதில் முடைநாற்றம் தான் வந்து கொண்டிருக்கிறது.

அடுத்து மின் பயனீட்டாளர்களிடமிருந்து வசூலிக்கும் மொத்த மின் கட்டணங்கள் தற்போது மின் உற்பத்திக்காக ஆகும் செலவுத் தொகைக்குக்கூட எட்டி வராத நிலையில் உள்ளது. ஆகவே இந்தச் செலவை ஈடு செய்ய 270 கோடி ரூபாய்க்கு மேல் தேவைப்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். மின் துறையிலே அரசுக்கு நட்டம் என்று சொல்வதற்கு மனம் வராத காரணத்தாலே சரி கட்ட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கும் சரி கட்ட வேண்டும் ஈடு செய்யவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். பஸ் போக்குவரத்துக் கழகங்களுக்கும் ஈடுசெய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு தொழிலில் வரும் வரவு அதன் செலவுக்கே போதவில்லை என்று சொன்னால்—மத்திய திட்டக்குழு என்ன சாதாரண தோசைக் கடை ஆப்பக்கடையா வைத்திருக்கிறார்கள். அப்படி தோசைக் கடை ஆப்பக்கடை வைத்திருப்பவர்கள்கூட ஒரு பழமொழிக்காக என்ன சொல்வார்கள் என்றால், 'செலவுக்கேற்ற லாபம்

சரியில்லை என்று சொன்னால், ஒன்று மாவை குறைக்க வேண்டும் அல்லது விலையை ஏற்றவேண்டும் என்றுதான் சொல்வார்கள்.

எனவே, செலவை ஈடுகட்ட முடியவில்லை மின் கட்டணத்தை உயர்த்தலாம் என்று சொல்வதை விட்டுவிட்டு, மத்திய திட்டக் குழு தொடர்ந்து வற்புறுத்துகிறது என்கிற காரணத்தாலே நாங்கள் கட்டணத்தை உயர்த்தவேண்டிய நிலைமையிலே இருக்கிறோம் என்று சொல்வது, கசப்பான மருந்துகளில் சர்க்கரைப் பாகை சேர்ப்பது போன்ற நிலைமையில்தான் இருக்கிறது என்று குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

(முற்பகல் 11-40)

அடுத்தாற்போல் தொழில் துறையைப் பற்றி தமிழகத்தைப் பொறுத்தவரையிலே மத்திய அரசால் இங்கே மாற்றாந் தாய் மனப்பான்மையோடு நடத்தப்படுகின்றது என்று சொன்னார்கள். ஆனால் மத்திய அரசு என்று சொல்வது உண்மையிலேயே மாற்றாந்தாய் அல்ல. தியாகங்களைச் சுமந்து கொண்டிருக்கின்ற ஒரு மிகப் பெரிய தாய் என்றுதான் சொல்வேன். இன்றைக்குக் குழந்தைகளாக இருக்கின்ற மாநிலங்கள் அவரவர்கள் தங்களுடைய தேவைகளை எடுத்துச் சொல்கின்றபோது அந்தத் தாயை எவ்வளவு கேவலமாக விமரிசனம் செய்யவேண்டுமோ அவ்வளவு கேவலமாக விமரிசனம் செய்யும்போது அத்தனையையும் தாங்கிக் கொண்டு அந்தத் தாய் குழந்தைகளுக்கு வேண்டிய சலுகைகளைச் செய்து கொடுப்பதில் முன் உதாரணமாக இருந்து ஆர்வம் காட்டுகிறார்கள். ஒரு தாய்க்கு எத்தனையோ குழந்தைகள் இருக்கலாம். அந்தக் குழந்தைகளிடத்திலே பாசத்திலும் பற்றிலும் அவர்களைப் பேணிக் காப்பதிலும் அந்தத் தாய்க்கு வித்தியாசம் இருக்க முடியாது. ஆனால் அந்தக் குழந்தைகளிலே ஒரு குழந்தை பலமாகவும் இன்னொரு குழந்தை பலகீனமாகவும் இருக்கின்றது என்றால் பலமுள்ள குழந்தைக்கு மேலும் கொடுத்து அதை மேலும் பலமுள்ளதாக ஆக்கமாட்டாள். பலமுள்ள குழந்தைக்குச் சமமாக பலகீனமாக உள்ள குழந்தையினைக் கொண்டுவர வேண்டும் என்ற பொறுப்பு அந்தத் தாய்க்கு இருக்கின்றது என்பதால் தொழில் வளர்ச்சியிலே குன்றி இருக்கின்ற மாநிலங்களுக்கு விசேஷ கவனத்தைச் செலுத்தவேண்டிய நிலைமையில் இருக்கின்றார்களே தவிர அதற்காக அவர்கள் தமிழகத்தைப் புறக்கணித்து விட்டார்கள் என்று சொல்வதோ, மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடக்கின்றது என்று சொல்வதோ உண்மைக்குப் புறம்பானது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

காங்கிரஸ் ஆட்சியிலே இருந்தபோது இந்த நாட்டிலே இருந்தவர்கள் என்ன சொன்னார்கள்? டெல்லிக்குக் காங்கிரஸ் காரர்கள் காவடி தூக்குகிறார்கள் என்று சொன்னார்கள். காவடி தூக்கியது யாருக்காக? இந்த நாட்டு மக்களுக்காகத்தான். அப்படி காவடி தூக்கியதன் பயனாகத்தான் இன்றைக்கு எத்தனையோ தொழில்களில் பெரிய மாற்றத்தை



ஏற்படுத்தினோம். நாங்கள் ஆட்சியிலே இருந்தபோது இந்தியாவிலே உள்ள மாநிலங்களிலேயே தமிழ்நாடு வளர்ச்சியிலே 3-வது இடத்தைப் பிடித்திருந்தது. ஆனால் இன்றைக்கு அதிலிருந்து 3-வது இடத்திற்குத் தமிழகம் சென்றிருக்கிறது என்று சொல்கிறார்கள். தமிழகத்து மக்கள் உங்களை நம்பினார்கள். காங்கிரஸ்காரர்கள் காவடி தூக்கத்தான் போயக்கு. ஆனால் சேரன் செங்குட்டுவன் பரம்பரையிலிருந்து வந்தவர்கள் இமயமலையிலே இருந்து கல்லைக் கொண்டுவந்து சிலை எடுத்ததைப் போல இவர்கள் நிச்சயமாக டெல்லிக்கு ரதகஜதுரக பதாதைகளோடு சென்று அங்கே திட்டங்களைக் கட்டு மூட்டையாகக் கட்டிக் கொண்டு அள்ளிக்கொண்டு வந்துவிடுவார்கள் என்று எதிர் பார்த்தார்கள். ஆனால் இன்றைய நிலைமை என்ன? அத்தனையிலும் பின்தங்கிய நிலைமைதான் இருக்கின்றது. ஆனால் அத்தனைக்கும் காரணம் மத்திய அரசு என்று சொல்கிறீர்கள். அன்றைக்கு இருந்த காங்கிரஸ்காரர்கள் எவ்வளவு பெரிய இந்துஸ்தான் போட்டோ தொழிற்சாலையினை இங்கே கொண்டு வருகின்றபோது போட்டி இல்லாமல் இருந்ததா? தமிழக அரசினைப் பார்த்து நீங்கள் கொண்டு போங்கள் என்று சொன்னார்களா? விஸ்கோ நிறுவனத்தைக் கொண்டுவரும் போதும், மால்கோ நிறுவனத்தைக் கொண்டுவரும்போதும் தமிழக அரசிடம் நீங்கள் கொண்டு போங்கள் என்று சொன்னார்களா? அப்போதும் தகராறு இருக்கத்தான் செய்தது. குடுமிபிடி சண்டை இருக்கத்தான் செய்தது. போட்டா போட்டிக்கு இடையிலே காங்கிரஸ்காரர்கள் அங்கே நின்று அதைப் பெற்றுக் கொண்டு தமிழகத்திற்கு வந்தார்கள். ஆனால் நீங்கள் அப்படிச் செய்வதற்குத் தயாராக இல்லாததால்தான் எல்லாவற்றையும் இழந்துவிட்டு மத்திய அரசின்மீது பொறுப்பினைச் சுமத்து கிறீர்கள், எனவே பொறுப்புள்ளவர்கள் பேசுகின்ற பேச்சல்ல இது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மால்கோ நிறுவனத்தைப் பொறுத்தவரையிலே அதைத் தமிழ்நாட்டிற்குக் கொடுக்க அன்றைய தொழில்துறை மந்திரியாக இருந்த லால்பகதூர் சாஸ்திரி தயாராக இல்லை. அப்போது அன்றைக்கு இங்கே முதல் மந்திரியாக இருந்த பக்தவச்சலம் அவர்கள் தன்னுடைய வயதான காலத்திலே கூட டெல்லியின் கடுங்குளிரினைப் பொறுத்துக்கொண்டு டெல்லி தமிழகத்திற்குச் சென்று லால்பகதூர் சாஸ்திரி எப்போது வருவார் என்று கேட்டு 11 மணிக்குத்தான் வருவார் என்று சொன்னபின் இரவு 11 மணி வரை காத்திருந்து போராடி ஆர்டரைப் பெற்றுக்கொண்டு வந்தார்கள். இந்த நாட்டினை உயர்த்தவேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்ததன் காரணத்தால்தான் தொழில் துறையிலே பெரிய மாற்றத்தைக் கொண்டுவரவேண்டும் என்ற எண்ணம் இருந்ததால்தான் அப்படிச் செய்தார்கள். ஆனால் இன்றைக்கு அவ்வாறு உண்மையாகப் போராடிப் பெறுவதற்கு நீங்கள் தயாராக இருக்கவேண்டும் நீங்கள் திறமை உள்ளவர்கள் என்றால் மத்தியிலே இருந்து திட்டங்களைக் கொண்டுவந்து

குவிப்பதிலே நீங்கள் தயாராக இருக்கவேண்டும். ஆனால் அதை விட்டுவிட்டு இன்றைக்கு நீங்கள் மத்திய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடந்து கொள்கிறது என்று சொல்வதை நான் நிச்சயமாகக் கண்டிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து இன்றைக்குக் குறிப்பாகச் சொல்லவேண்டும் என்றால் தமிழகத்தினுடைய நிலைமை ஒட்டுமொத்தமாக எப்படி இருக்கின்றது என்று நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள் என்று சொன்னால் ஒருவேளை உணவைக்கூட ஒரு குழந்தைக்குக்கூட கொடுக்க முடியாத நிலைமையிலே இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கின்ற சராசரி குழந்தைகள் இருக்கின்றது என்று கவர்னர் உரையிலே குறிப்பிட்டிருக்கிறீர்கள். இந்தச் சத்துணவுத் திட்டம் பற்றிப் பெரிதாகப் பேசுகிறீர்கள். ஆனால் நான் அதைத் தவறு என்று என்னுடைய தரப்பிலே குறிப்பிடமாட்டேன். ஆனால் அதே நேரத்தில் ** ** **

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற போது***

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதை மாற்றிச் சொல்லுங்கள் (குறுக்கீடு) எல்லோரும் அது வேண்டாம் என்பது போல் பீல் பண்ணுகிறார்கள். ஆகவே அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட ஆணையிடுகிறேன். ஆகவே அதை வேறு மாதிரி சொல்லுங்கள்.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்த வார்த்தைகள் வேண்டாம். வேறு பேசலாம். இதுகுறித்து உறுப்பினர் பேசியதும் அதற்குப் பதிலாக மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பேசிய வாசகங்களையும் அவைக்குறிப்பிலிருந்து எடுத்துவிடவேண்டும் என ஆணையிடுகிறேன்.

திருமதி டி. யசோதா: அடுத்து குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் இங்கே அதிகமாக மத்திய அரசை மாற்றாந் தாய் மாற்றாந்தாய் என்று சொல்கிறார்கள். சில உறுப்பினர்கள் கணக்கைச் சொல்கிறார்கள். எந்த எந்த மநிலங்களுக்கு என்ன என்ன தேவையோ அதைப் பரிசீலித்து அந்த அடிப்படையில் மத்திய அரசாங்கம் தாய்மை உணர்வோடு செயல்படுகிறது.

---

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



ஆனால் நீங்கள்தான் மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடந்து கொள்கிறீர்கள். வறட்சி நிவாரண நிதி கொடுத்திருக்கிறீர்களே எல்லா மாவட்டங்களுக்கும் ஒரே நிலையிலா கொடுத்தீர்கள்? மாற்றாந்தாய் மனப்பான்மையோடுதான் கொடுத்திருக்கிறீர்கள். அதைப்போலவே தன்னிறைவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் எந்த எந்த இடங்களுக்கு எவ்வளவு ஒதுக்கியிருக்கிறீர்கள், அதிலே பாகுபாடு கிடையாதா? மாற்றாந்தாய் மனப்பான்மை கிடையாதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தன்னிறைவுத் திட்டத்திலே எல்லா ஒன்றியங்களுக்கும் சரிசமமாக கொடுக்கப் பட்டிருக்கிறது. மாற்றாந்தாய் மனப்பான்மை இல்லை. வேண்டுமானால் சட்டமன்ற உறுப்பினர்கள்—காங்கிரஸ் கட்சியைச்சேர்ந்த நண்பர்கள் அதைப் பாராட்டியிருக்கிறார்கள்—அவர்கள் பக்கத்திலேயே இருக்கிறார்கள். அவர்களைக் கேட்டுப் பார்த்தாலே தெரியும். மக்களுக்கு இது நல்ல திட்டம் என்று பாராட்டிப் பேசியவர்கள் பக்கத்திலே இருக்கிறபோது மாற்றாந் தாய் மனப்பான்மையோடு இந்த அரசு நடந்துகொண்டிருக்கிறது என்று சொல்வது சரியல்ல. தயவுசெய்து அந்த வார்த்தைகளை அவர்கள் திரும்பப் பெறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி டி. யசோதா: துணைத் தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தைப்பற்றி நான் குறை சொல்லவில்லை. தன்னிறைவுத் திட்டத்திற்கு எல்லா ஒன்றியங்களுக்கும் ஒரே அளவுக்குத்தான் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறதா? அந்த அந்த இடங்களில் தேவைக்கு ஏற்பதான் ஒதுக்கியிருக்கிறீர்கள். சில இடங்களில் கூடுதலாகவும் சில இடங்களில் குறைவாகவும் இருக்கலாம், அது மாற்றாந்தாய் மனப்பான்மை என்று நாங்கள்....

(முற்பகல் 11-50)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா சொல்கிறபடி. தேவைக்கேற்றமுறையில் திட்டத்தை வகுத்து நிறைவேற்றுகின்ற நிலைமையைத்தான் இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது. தேவைக்கேற்ப கொடுப்பதை எப்படி மாற்றாந்தாய் மனப்பான்மையோடு ஒப்பிடமுடியும் என்று நான் கேட்க விரும்புகிறேன். நீங்கள் காட்டுகிற உதாரணங்கள் நீங்கள் சொல்கிற கருத்துகளுக்கு ஏற்றதாக இல்லையென்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தயவுசெய்து அவர்கள் வேறு உதாரணங்களுக்குப் போனால் நன்றாக இருக்கும்.

திருமதி டி. யசோதா: நான் சொல்வதை அவர்கள் முழுமையாகக் கேட்டுவிட்டால் நன்றாக இருக்கும். அவர்கள் தேவைக்கு ஏற்ப நிதி ஒதுக்கீடு செய்வதைப்போல் மத்திய

அரசாங்கம் தேவைக்கு ஏற்ப அந்த அந்த இடத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்கிறார்கள். இது மாற்றாந்தாய் மனப்பான்மையில்லை என்றால் அதுவும் மாற்றாந்தாய் மனப்பான்மை இல்லை........(திரு. மி. வின்செண்ட் குறுக்கீடு)........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் குறுக்கிடுவது முறையல்ல, அமரவேண்டும்.

**திருமதி டி. யசோதா:** இன்னும் சொல்லவேண்டுமானால் இந்தியைப் பொறுத்தமட்டில் கடுமையான விவாதம் நடைபெறுகிறது. இந்தி தமிழகத்திலே திணிக்கப்பட்டால் நாங்கள் அதை வரவேற்கக் கூடியவர்கள் அல்ல. காங்கிரஸ் கட்சி மந்திரி சபை இருந்தபோது இந்தி திணிக்கப்பட்டால் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தித் திணிப்பை எதிர்க்கிறோம். அதேநேரத்திலே இந்தியை விரும்பிப் படிக்க வேண்டுமென்று நினைக்கிறவர்களுக்கு அதற்கு இந்த அரசாங்கம் உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னைப் பொறுத்தவரையில் சொல்லிக்கொள்கிறேன் வசதி படைத்தவர்களின் குழந்தைகள் அத்தனைபேரும் பணம்கொடுத்து ஆங்கிலப் பள்ளிகளிலே சேர்ந்து படிக்கிறபோது இந்தியைக் கற்றுக் கொள்கிறார்கள். ஆனால் பணம் செலுத்தமுடியாத சூழ்நிலையில் உள்ள ஏழைகளின் குழந்தைகள் இந்தியைப் படிக்க வேண்டுமென்று விரும்பினால் அதற்கு வசதியை ஏற்படுத்தித் தரவில்லையென்றால் அவர்களுடைய உரிமைகள் இந்த நாட்டிலே மறுக்கப்படுகின்றன என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் சொல்லவேண்டுமானால் நீங்கள் மத்திய அரசாங்கத்தை—எந்த திட்டமாக இருந்தாலும் மத்திய அரசாங்கத்திற்கு நன்மை தருகிற பிரச்சினையாக இருக்குமானால்—அணுகுகிறபோது நாங்கள் உங்கள் பக்கத்திலே நின்று பெற வேண்டிய உதவிகளைப் பெற்றுத்தர உறுதுணையாக இருப்போம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆளுநர் உரையினைப் பொறுத்தவரையில் ஒட்டு மொத்தமாக எப்படியிருக்கிறது என்று சொல்லவேண்டுமானால் மேலே ஒரு ரொட்டித் துண்டும், கீழே ஒரு ரொட்டித் துண்டும் இடையில் உணவுப்பண்டமும் இருக்கும் அந்தப் பண்டத்தைப்போல மேலே சத்துணவு கீழே இந்தித் திணிப்பு வீரவசனம் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு உணவுப் பண்டமாக இருக்கிறது. இடையில் எந்தும் இல்லை, சாரமும் இல்லை என்று சொல்லி இந்த உரையிலே தமிழகத்தின் பிரச்சினைகள் எதிர் காலத்திலே தீர்வதற்கான நிலைமைகள் இல்லை. கள்ளச் சாராயம் போகும் நல்லசாராயம் என்றீர்கள். ஆனால் இன்னும் கள்ளச்சாராயம் இருக்கிறது. ஆனால் மேல்மங்கலம் என்ற இடத்திலே கருணாகரன்சேரி என்ற இடத்திலே கள்ளச் சாராயத்தை பெருமளவுக்குப் பிடித்து இருக்கிறார்கள். அதிலே அரசியல்வாதிகள் அத்தனை பேர்களும்பங்கெடுத்த நிலையிலே..



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அரசியல்வாதிகள் என்று எல்லோரையும் சேர்த்துச் சொல்லவேண்டாம். அப்படி பொதுவாகச் சொல்லாதீர்கள். குறிப்பாக ஏதாவது இருந்தால் அதைச் சொல்லுங்கள்.

(அடுத்த உறுப்பினர் பேசுவதற்கு அழைக்கப்பட்டார் )

***திரு. ஜே. சி. டி. பிரபாகரன்:** மாண்புமிகுபேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுவதிலே பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்த விவாதத்தை இன்று துவங்கி வைத்து பேசியிருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் நாடாளு மன்றத்தில் தங்கள் உறுப்பினர் திரு வை. கோபால்சாமி தமிழ்நாட்டில் இன்று ஏற்பட்டிருக்கிற நிலைமைகளை எடுத்துச் சொல்லவில்லையா? தொழிற்துறைகளைப் பற்றி பேசவில்லையா என்றெல்லாம் இங்கே விளக்கமாக கருத்துக்களைச் சொன்னார்கள். நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே மன்றத்தில் எடுத்துச் சொல்லி வருகிற கருத்துக்களுக்கும், நாடாளுமன்றத்தில் உங்கள் உறுப்பினர் சொல்லி வருகிற கருத்துக்களுக்கும் பல நேரங்களில் ஏற்பட்டிருக்கிற முரண்பாடுகளை எங்களால் சுட்டிக் காட்ட முடியும். அதிலும் குறிப்பாக காவிரி நீர் பிரச்னைக்காக தமிழகத்தில் இருக்கிற அத்தனை மக்களும் ஒருங்கிணைந்து, ஆர்த்தெழுந்து தங்களது உணர்வுகளை எல்லாம் ஒரு அர்த்தால் மூலம் நடத்தி காட்டுவோம் என்று இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் சொன்னபோது, நாடாளுமன்றத்திலே உங்கள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. மாயத்தேவர் அவர்கள் என்ன பேசினார்? அதனை இந்த மன்றத்தினுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். அங்கே அவர் சொல்கிறார் அந்த அர்த்தாலை மைய அரசு தடைசெய்ய வேண்டுமென்று; அது முன்னுக்குப் பின் முரண் இல்லையா என்று கேட்க விரும்புகிறேன். (கூச்சல், குழப்பம்).

**திரு. துரைமுருகன் :** துணைத்தலைவர் அவர்களே, நான் பேசுகிறபோது மந்திரி அவர்கள் குறுக்கே வரிக்கு வரி பேசுகிற போது எங்களுக்கு உரிமை இல்லையா? காவிரி நீர் பிரச்னை குறித்து தஞ்சை மாவட்டத்திலே இருக்கிற சர்வகட்சிதோழர்கள் ஒருங்கிணைந்து ஒரு அர்த்தாலை அந்த மாவட்டத்திலே நடத்துகிறார்கள். ஆனால் அந்த அர்த்தாலை போக்கடிக்க வேண்டுமென்று தமிழ்நாடு முழுவதுமாக ஒரு அர்த்தாலை நடத்துகிறோம் என்று ஒரு ஆளுங் கட்சி, அல்லது அரசே அதற்கு முன் வந்து நடத்துகிற அர்த்தால், எதிர்கட்சிகள் கொடுக்கிற உரிமைக்குரலை நசுக்குவதற்காக போட்டிக்காக நடத்தியது உள்ளபடியே காவிரி நீர் வரவேண்டும் என்பதற்காக அல்ல, (கூச்சல் குழப்பம்).

திரு. ஆர். மணிமாறன்: துணைத் தலைவர் அவர்களே, அரசினுடைய உணர்வுகளுக்கு மதிப்பளித்து உங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர் மதிப்பிற்குரிய மாயத்தேவர் அவர்கள் நாடாளுமன்றத்தில் பேசினாரா?

(கூச்சல், குழப்பம்)

திரு. துரைமுருகன்: துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் நிற்கும் போது மைக் வேலை செய்யக் கூடாது. ஆனால் நீங்கள் நிற்கிற போது திரு. மணிமாறன் மைக் மட்டும் வேலை செய்கிறது. மைக் போடுகிறவர் ஆளும் கட்சி உறுப்பினருக்கு மட்டும் மைக் போடுகிறாரா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்களுக்கும் மைக் போடச் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் பிரபாகரன் பேசுகின்ற போது திரு. மாயத்தேவர் பேசியதைப் பற்றி குறிப்பிட்டார். அவர் பேசினாரா இல்லையா என்பதை மட்டும் சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: அதைத்தான் சொல்கிறேன். இந்த ஆளும் கட்சி எதிர்கட்சிகள் கொடுக்கிற உரிமைக் குரலை நசுக்குவதற்கு போட்டியாக, பொறாமை அர்த்தாலை போட்டார்களே தவிர இது உள்ளபடியே காவிரி நீர் வருவதற்காக அல்ல. (கூச்சல் குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அப்படிப் பேசக் கூடாது. காவிரி நீர் பிரச்னையை தயவுசெய்து யாரும் பேச வேண்டாம். இத்தோடு முடித்துவிடுங்கள்.

(நண்பகல் 12—00)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சிகள் அந்த நாள் அன்று காவிரிப் பிரச்னையில் என்ன, என்ன முன் வைத்தார்களோ, அவற்றிற்கு மாறாக நாங்கள் வேறு பிரச்னைகளை முன் வைத்தால்தான் அவைகள் நாங்கள் மறுப்பதற்காகச் செய்ததாகும். அதுமட்டுமல்ல, அவர்கள் என்றைக்கு ஊர்வலம் போக வேண்டுமென்று சொன்னார்களோ என்றைக்கு பொதுக் கூட்டம் போட வேண்டுமென்று சொன்னார்களோ, என்றைக்கு கதவடைப்பு செய்ய வேண்டுமென்று சொன்னார்களோ, அதற்கு முதல் நாள் அந்தப் பிரச்னையில் நாங்கள் ஈடுபட்டிருந்தால்—நாங்கள் முன்கூட்டியே கதவடைப்பு செய்திருந்தால், எதிர்கட்சிகளுடைய வேலைகள் நல்ல முறையில் நடைபெறாமல் தடுப்பதற்காக நாங்கள் செய்தோம் என்று சொல்லலாம். எதிர்க்கட்சிகள் எல்லாம் எந்த நாளை குறிப்பிட்டார்களோ, அதே நாளில் தான் நாங்களும் செய்யவேண்டுமென்று சொன்னோம். எதிர்க்கட்சிகள் தஞ்சை மாவட்டத்



தில் மட்டும் என்று சொன்னார்கள். தஞ்சை மாவட்டம் மட்டும் என்று சொன்னால் மற்ற மாநிலங்களிலே உள்ளவர்கள், கேரளாவிலே அல்லது கர்நாடகத்து மக்கள், தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும்தான் கெடுதல் என்று நினைப்பார்கள் என்பதால் மாநிலம் பூராவும் என்பதைக் காட்டுவதற்காக அதை விரிவுப் படுத்தியதோடு மட்டும் அல்லாமல் அதை எல்லா எதிர்க்கட்சி தலைவர்களுக்கும் நாங்கள் தெரிவித்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்தப் பிரச்னையைப் பற்றிப் பேச வேண்டாமென்று சொன்னேன். பெயரைச் சொன்னதும் எழுந்து கொள்கிறார்கள், பிரச்னையைச் சொன்னாலும் எழுந்து கொள்கிறார்கள். ஆகவே, பெயரைச் சொல்லாமல், அந்தப் பிரச்னையைச் சொல்லாமல் வேறு பிரச்னையைப் பற்றி உறுப்பினர்கள் பேச வேண்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரபாகரன் அவர்கள் பேசியது காவிரி நீர்ப் பிரச்னை அல்ல. மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் பேசுகிறபொழுது, தமிழகத்தினுடைய மக்கள் சம்பந்தப்பட்ட பிரச்னைகளுக்காக, தங்கள் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் எப்படியெல்லாம் வாதாடினார்கள் என்ற விவரங்களை அடுக்கினார்கள். அவர்கள் அதற்குப் பதில் சொல்லிய வகையில்தான் எதிர்க்கட்சியைச் சேர்ந்த நாடாமன்ற உறுப்பினர் ஒரு ஒட்டு மொத்தமான பிரச்னையில் எப்படி எல்லோரும் சேர்ந்து ஒரு அர்த்தால் நடத்தினோமோ, அந்த பிரச்னையில் அவர் எப்படி நடந்து கொண்டார் என்பதை அவர்கள் இங்கே குறிப்பிடுகிறார்கள். அது உண்டா, இல்லையா என்று அவர்கள் மறுக்கட்டும், நாங்கள் வரவேற்கிறோம். அதற்குப் பதிலாக, எதிர்க்கட்சிக்குப் போட்டி, அந்தக் கட்சிக்குப் போட்டி என்றெல்லாம் திசை திருப்புகின்ற முயற்சியில் தயவு செய்து திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் ஈடுபட வேண்டாம்.

திரு துரைமுருகன்: அதைத்தான் நம்முடைய திரு. மாயத்தேவர்கள் அவர்கள், இந்த அரசு செய்திருக்கிற அர்த்தால் ஒரு நாடகம், ஒரு போலி நடிப்பு என்பதைச் சுட்டிக்காட்டினார். காரணம். நீங்கள் அத்தகைய போலி நடிப்பை அர்த்தாலிலே நடத்திக் காட்டினீர்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நடிப்பு என்பது நாட்டுக்குத் தெரிகிறது. யார் நடிக்கிறார்கள் என்பதும் நாட்டுக்குத் தெரிகிறது. இங்கேயும் சொல்லிவிட்டு, அங்கேயும் சொல்கிறீர்கள் என்பதுதான் உண்மை.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன். பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஊனோடும், உயிரோடும், உடலோடும் கலந்திருக்கிற இந்தச் சத்துணவுத் திட்டத்தினைப்பற்றி ஏழை, எளிய மக்கள், மிக மகிழ்ச்சியோடு சொல்கிறார்கள், புண்ணியவான் புரட்சித் தலைவர் ஆட்சியிலேதான் குழந்தைகளைப் பெறுவதற்கு மட்டும் உரிமை பெற்றிருந்த எங்களுக்கு, அவர்களை வளர்க்கின்ற முழு பொறுப்பினையும் இந்த அரசாங்கமே ஏற்றிருக்கிறது என்ற அந்தப் பெரு மகிழ்ச்சியினை இன்றைக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். சத்துணவுத் திட்டத்தைப் பற்றிச் சொல்லும்போது, தலைவாரி, பூச் சூடவில்லை; பள்ளிக்கூடம் போய் வா என்கிறார் அன்னை. பள்ளிக்கூடம் போகிற பிள்ளை வீட்டுக்கு வருகிறான். சாப்பாடு எங்கேயிருக்கிறது என்று கேட்கிறான். காலியாகயிருக்கிற கஞ்சிக் கலயத்தைக் காட்டி, ஒன்றும் இலை கண்ணா என்று கண்களிலே கண்ணீரோடு சொல்கின்ற அந்தத் தாய், தமிழகத்திலே இன்றைக்கு இல்லை என்பதை மட்டும் நான் இங்கே பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

விடுதலை பெற்ற 10 ஆண்டுகளுக்குள்ளாக, நாட்டிலே இருக்கிற 14 வயதுக்குட்பட்டிருக்கிற எல்லோருக்கும் கட்டாயக் கல்வி அளிக்க வேண்டுமென்று அன்றைக்கு அறுதியிட்டு சொன்னோமே நிறைவேற்ற முடிந்ததா? அன்றைக்குப் பள்ளிக் கூடத்திற்குப் போகாத பிள்ளை, இந்தத் திட்டத்தின் மூலமாக, இன்றைக்குப் பள்ளிக்குப் போக முடிந்திருக்கிறது. Bringing the child to the School என்கின்ற அந்த அடிப்படை தத்துவத்தை இந்தத் திட்டம் இன்றைக்கு நிறைவேற்றியிருக்கிறது, மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபொழுது முன்பிருந்த மதிய உணவுத் திட்டத்தைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டுப் பேசினார்கள். அந்த மதிய உணவு திட்டத்தைப் பற்றி அன்றைக்கு அவினாசிலிங்கம் பெண்கள் கல்லூரியைச் சேர்ந்தவர்கள் மிக பெரிய ஆராய்ச்சி செய்து ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அதை நான் சொல்லியாக வேண்டும். அன்றைக்கு அவர்கள் சொன்னார்கள், அந்த மதிய உணவு திட்டத்திலே ஆண்டுக்கு 20 நாட்கள்தான் உணவு போட முடிகிறது. பணப் பற்றாக்குறை. 15 பைசாவிலே ஆசிரியர் சமைத்தது மட்டுமல்ல, பள்ளிக்கூடங்களில் சமைப்பதற்கு அறையில்லாத காரணத்தாலே, வகுப்பு அறைகளிலே சமைக்கச் செய்தார்கள். மாணவர்களும் சேர்ந்து சமைத்தார்கள். அங்கே காசு இல்லாத காரணத்தாலே, பள்ளிக்கூடங்கள் கடனிலே மூழ்கின. பஞ்சாயத்துக்கள் பணம் தராத காரணத்தாலே ஆசிரியப் பெருமக்கள் வீதிவீதியாக மாதந்தோறும் கலெக்டருக்குப் போகக்கூடிய நிலைமைகள் ஏற்பட்டன என்று திட்டவட்டமாக, அறிக்கையிலே அன்றைக்கு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.



சத்துணவுத் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும் அன்புக்குரிய மாமன்ற உறுப்பினர்கள் கேட்கிறார்கள் இந்தச் சத்துணவுத் திட்டத்தால் என்ன நன்மை என்று. பள்ளியிலிருந்து இடையிலே நின்று போகின்ற மாணவர்களின் எண்ணிக்கை இதனால் குறைந்திருக்கிறது; மாணவர்கள் புதிதாகச் சேர்க்கப்படுவது அதிகமாக ஆகியிருக்கிறது. செக்குலர் 'ஸ்டேட் என்று சொல்லுகிறோமே' அதைப்போல சாதி சமய மற்ற,மத பேதமற்ற சமுதாயம் அமைக்கிற ஒரு திட்டமாக இந்தத்திட்டம் அமைந்திருக்கிறது. மேலும் லிட்டரஸி ரேட் அதிகமாகும் வாய்ப்பை இந்தத் திட்டம் தந்திருக்கிறது. குறிப்பாகக் கிராமப்புறங்களில் பிறந்திருக்கும் குழந்தைகள் இடையிலே இறந்து போகாது என்ற நம்பிக்கை வந்திருப்பதால் குடும்ப நல திட்டத்திற்கு வழிவகுக்கும் திட்டமாகவும் இந்தச் சத்துணவுத் திட்டம் அமைந்திருக்கிறது என்பதை நான் சொல்லியாக வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் உரைபற்றி இங்கே சொல்லும்பொழுது, 1968 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த மாமன்றத்திலே ஆற்றிய உரையினை மேற்கோளாகக் காட்டுவதற்குக் தாங்கள் அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்; "காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மெம்பர்கள் 'ஒருமைப்பாடு முக்கியமா? மொழிப் பிரச்சினை முக்கியமா?, என்று கேட்டார்கள், அதைத்தான் நானும் திருப்பித் திருப்பிக் கேட்கிறேன். பார்க்கிற உங்களை எல்லாம் கேட்கிறேன். வருகிற மக்களை எல்லாம் கேட்கிறேன். என்னுடைய குரல் நெடுந்தூரம் வரைக்கும் எட்டும் என்றால் டெல்லியில் உள்ளவர்களை எல்லாம் கேட்கிறேன். தேச ஒருமைபாடு முக்கியமா? மொழி முக்கியமா தேச ஒருமைப்பாடுதான் முக்கியம் என்றால் இவ்வளவு மனக்கிலேசத்தை உண்டாக்குகின்ற மொழிப் பிரச்சினையை ஏன் கிளப்பினீர்கள்? அந்த மொழிப் பிரச்னையை கிடங்கில் போட்டுவையுங்கள், பின்னால் பார்த்துக் கொள்ளுங்கள், ஒரு அமைதியான சூழ்நிலையில் அதைப்பற்றி ஆழ்ந்து சிந்தித்துக் கொள்ளலாம் என்று கனம் ராஜாஜி அவர்கள் சொன்னார்களே, ஏன் நீங்கள் அதைக் கேட்கவில்லை?"

இவ்வாறு கேட்டு விட்டு அண்ணா அவர்கள் தொடர்ந்து பேசும்பொழுது குறிப்பிட்டார்கள்: "கொஞ்சம் விட்டுக் கொடுக்கலாம். விட்டுக் கொடுப்பது நாமேதானா? தியாகம் செய்ய வேண்டும் என்பது நமக்கு மட்டும்தானா? எல்லாக் காலத்துக்கும் நாம் விட்டுக் கொடுத்து வந்திருக்கிறோமே, மற்றவர்கள் எதையாவது விட்டுக் கொடுத்திருக்கிறார்களா? நீங்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். தேச ஒருமைப்பாட்டுக்காக நாம் இந்தியை ஏற்றுக்கொள்ள வேண்டும், கொஞ்சம் விட்டுக் கொடுக்கிற மனப்பான்மையுடன் என்று காங்கிரஸ்காரர்கள்

சொல்லலாம். சரி, நாம் விட்டுக் கொடுக்கலாம், அவர்கள் விட்டுக் கொடுப்பது என்ன? தேச ஒருமைப்பாட்டுக்காக அந்த மக்கள் செய்கிற தியாகம் என்ன? ஏற்கிற கஷ்டம் என்ன? இழந்துவிட்ட நன்மை என்ன? தேச ஒருமைப்பாட்டுக்காக நாம் பொறுமையுடன் விட்டுக்கொடுக்க, விட்டுக்கொடுக்க அவர்கள் செய்துகொண்டு போகிற காரியங்கள் என்ன? நம் மீது இந்தியைத் திணிக்கிற துணிவைத்தான் பெற்றார்கள், நாம் எந்த அளவுக்கு தொடர்ந்து விட்டுக்கொடுத்துக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதை காங்கிரஸ் வரலாற்றைப் பார்த்தாலும் சரி, மற்ற மற்ற கட்சி வரலாறுகளை எடுத்துப்பார்த்தாலும் சரி நன்றாகத் தெரியும். நாம் எவ்வளவோ தியாகங்களைச் செய்து வந்திருக்கிறோம். நம்முடைய சுகதுக்கங்களை எல்லாம், வாழ்வு, தாழ்வுகளை எல்லாம் இழக்கத் தயாராய் இருந்து வந்திருக்கிறோம். இரும்பாலைகளை வடநாட்டிலே பிலாயிலும், துர்க்காபூரிலும், ரூர்கேலாவிலும் ஆரம்பித்தார்கள். அதுவும் நம்முடையதுதானே என்று நம்மை நாமே சமாதானம் செய்து கொண்டோம். நம்முடைய சேலம் இரும்பாலைத் திட்டம் தூங்கிக்கொண்டிருப்பதை நாம் உணராதவர்கள் அல்ல. பெரும் பெரும் தொழிற்சாலைகளை திடீர், திடீர் என்று அந்தப் பகுதிகளிலேயே ஆரம்பித்துக்கொண்டார்கள். இருந்தும் அந்தப் பகுதியும் நம்முடைய தேசத்தை சேர்ந்ததுதானே என்று நம்மையே நாம் ஆறுதல் செய்துகொண்டோம். காண்ட்லா துறைமுகத்தை ஏற்படுத்திக் கொண்டு அதை சுங்கத்தீர்வை இல்லாத துறைமுகம் என்று அறிவித்துக் கொண்டார்கள். நம்முடைய தூத்துக்குடி துறைமுகம், சேதுசமுத்திரத் திட்டம் ஆகியவை ஒன்றாக இணைக்கப்பட்டு நிறைவேற்றபடவேண்டும் என்று நாமும் 25 வருடங்களாகக் கோரி வருகிறோம். இருந்தும் அது நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. அதைச் செயலாற்ற முடியாத பொறுமையோடு நாம் இருந்து கொண்டிருக்கிறோம். எதற்கும் ஓர் எல்லை உண்டு. வறுமைக்குத்தான் எல்லை இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். மற்ற எல்லாவற்றுக்கும் எல்லை உண்டு, எல்லை கடவாமல் நாமும் பொறுமையோடுதான் இருந்து கொண்டு வருகிறோம். பொறுமையின் கடைசி எல்லைக்கே, அந்த எல்லையின் விளிம்புக்கே நாம் வந்து விட்டோம் என்பதை எப்படித் தெரிவிப்பது, என்று 1968 ஆம் ஆண்டு அண்ணா அவர்கள் விளக்கமாகப் பேசியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் உரையைப் படித்த பிறகு, நாட்டிலே உள்ள மிகப் பெரும் திட்டமான சத்துணவுத் திட்டம், தன்னிறைவுத் திட்டம், குடிசைகளுக்கு மின் விளக்கு வழங்கும் திட்டம் என்று இந்த நாட்டிலே உள்ள எல்லா மாநிலங்களுக்கும் வழிகாட்டியாகத்தான் இந்த மாநிலம் இருந்து கொண்டிருக்கிறது என்பது தெரிய வரும்.



இன்றைக்குக்கூட மைய அரசு மொழிப் பிரச்னையிலே மின்சாரப் பிரச்னையிலே, உணவுப் பிரச்னையிலே பாராமுகமாக இருக்கிறது என்றால் இது பெரியகுளம் தேர்தல் எதிரொலியாக இருக்குமோ என்று ஐயப்படுகிறோம்.

இன்னொன்றையும் நாம் இங்கே சொல்லியாக வேண்டும். மொழிப் பிரச்னையைப் பற்றிப் பேசுகின்ற நேரத்தில் எங்களுடைய இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் 1978 ஆம் ஆண்டு தென் மாநில முதல்வர்களை அழைத்துச் சொன்னார்கள், இந்தித் திணிப்பை ஒருபோதும் ஏற்கமாட்டோம் என்று அறுதியிட்டுச் சொன்னார்கள். அதற்கு முன் இதே மாமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்ததையும் நான் எண்ணிப்பார்க்கிறேன். அன்றைக்கு Civtl Aviatian Department ல் அலுவல்கள் இந்தியில் இருக்க வேண்டுமென்ற நிலை வந்த பொழுது ஆர்த்தெழுந்து அது குறித்து ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததை எண்ணிப் பார்க்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்றுள்ள சூழ்நிலையில் ஆகாஷ்வாணி என்று அறிவிக்கும் நிலை வானொலியில் வருகிறது. உடனே ஆர்த்தெழுந்த புரட்சித் தலைவர் அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகச் செயற் குழுவைக் கூட்டித் தீர்மானம் போட்டார்கள். இந்தியை ஒருபோதும் ஏற்க மாட்டோம் என்று. அதற்குப் பிறகு நிலைமை என்னவாயிற்று? அன்றைக்கு அமைச்சராக இருந்த திரு. வசந்த சாத்தே அவர்கள்கூட வெளிநாட்டுக்குச் சென்ற நேரத்தில், அவர்கள் இந்த நாட்டிலே இல்லாத நேரத்திலே, ஆகாஷ்வாணி என்று சொல்ல வேண்டுமென்ற உத்தரவைப் பாரதப் பிரதமர் அவர்கள் திரும்பப் பெற்றார்கள் என்பதைப் பெருமையோடு சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இரயில்வேயில் உத்தியோக உயர்வுக்கு இந்தியில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்ற நிலை வந்தபொழுது நமக்குச் சந்தேகம் ஏற்பட்டது. உட்கார இடம் கொடுத்தால் பின்னால் படுக்கப் பாய் கேட்பார்களோ என்ற அச்சம் ஏற்பட்டது. அந்த முறையிலே நான் சொல்கிறேன். இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களே, இன்றுள்ள மாறுபட்ட சூழ்நிலையிலே தென் மாநில முதல்வர்களைக் கூட்டி இந்தித் திணிப்பைத் தடுக்கும் கவசமாக இருக்கின்ற புரட்சித் தலைவரவர்கள் இந்த மகாமன்றத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் தோளோடு தோள் கொடுத்து நிற்க அந்த முடிவை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் துறையைப் பற்றி அமைச்சர் அவர்கள் விளக்கமாக சொன்னார்கள். நம்மைப் பொறுத்தவரைக்கும், மைய அரசினுடைய மூலதனத்தில் வருகின்ற தொழிற்சாலைகளை அவர்கள் எங்கே வேண்டுமானாலும் கொண்டு போய் போட்டுக் கொள்ளட்டும். நமக்குக் கவலையில்லை. ஒருவேளை

(பிற்பகல் 12.10)

கேட்பதற்குக் கூட உங்களுக்கு உரிமை இல்லை என்று சொல்லக் கூடும். உங்களுடைய டெப்பாசிட்களை எங்கே வேண்டும் என்று நினைக்கிறீர்களோ அங்கேயே வைத்துக் கொள்ளுங்கள். இங்கே உங்களுக்கு டெபாசிட் இல்லை என்று நினைப்பீர்களேயானால் நாங்கள் குறுக்கிடத் தயாராக இல்லை. ஆனால் தனியார்கள் தொழில் துவங்க முன் வருகிறபோது, அவர்கள் தமிழ் நாட்டிலே துவங்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கின்ற முதலாளிகள் விரும்புகிறார்கள். இங்கே தான் அமைதியான சூழ்நிலை இருக்கின்றது. தொழில் தகராறு உடனடியாகத் தீர்க்கப்படுகின்றன. தொழிலாளர்களுக்கும், முதலாளிகளுக்கும் ஒரு நல்ல உறவை வைக்கக்கூடிய தனியார்கள் தொழில் துவங்க மக்கள் வருகிறபோது முட்டுக்கட்டை போடுகின்ற நிலைமையை மத்திய அரசு தவிர்த்தாக வேண்டும் என்பதை நான் இங்கே பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தியத் துணைக் கண்டத்தைப் பொறுத்தவரைக்கும் தமிழகத்திலே நாம் ஆற்றியிருக்கின்ற பணிகள், பொதுமக்கள் நம் முன்பாக வைத்திருக்கின்ற கோரிக்கை, வேண்டுகோள் அத்தனையும் ஏற்றுத் தொடர்ந்து எல்லா பிரச்சினையையும் தாய்நலத்தோடு அணுகி வந்திருக்கிறோம். மைய அரசு இன்றைக்கு இருக்கின்ற பிரச்சினையிலே அன்னையாக இருக்க வேண்டும் என்ற பெருவிருப்பம் நமக்கிருக்கிறது ஆனால் அன்னையாக இருக்கவேண்டிய மைய அரசு, இங்கே மாமியார் மருமகள் உதாரணத்தைச் சொன்னார்கள். அது கூட பொலித்தமாக இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. மைய அரசு அன்னையாக இருக்கவேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். ஆனால் நர்சாக மாறிவிடக் கூடாது. குழந்தை வளருகிறபோது, மாநிலக் குழந்தைகள் வளருகிறபோது, அள்ளி அணைத்து உள்ள உணர்வுகளைப் புரிந்து கொண்டு, நாடி நரம்புகளைத் தொட்டுப் பார்த்து அன்னையாக இருக்கவேண்டுமே தவிர, அங்கே நோய்வாய்ப்பட்டும், மருத்துவ மனைக்கு வரட்டும், மருந்து கொடுக்கலாம், ஆய்வு நடத்தலாம் என்று சொல்லுகின்ற நர்சாக மைய அரசு மாறிவிட கூடாது என்று இங்கே பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோன்று இன்று ஆளுநர் உரையில் வீட்டுக்கு ஒருவர்க்கு வேலை கொடுக்கும் திட்டம் என்று அறிவித்திருக்கிறார்கள். இந்தியத் துணைக்கண்டத்திலேயே 35 ஆண்டு காலம் ஆகிறது விடுதலை பெற்று—உண்ண உணவில்லை என்று மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் சிறப்பாகச் சொன்னார்கள். 35 ஆண்டு காலத்திலே, இந்தியத் துணைக்கண்ட வரலாற்றிலேயே வீட்டுக்கு ஒருவருக்கு வேலை என்று அதற்காக நிதி ஒதுக்கி இருக்கின்ற ஒரே மாநில அரசு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அரசுதான் என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



இன்றைக்கு டி.வி.யிலே என்ன நடக்கிறது. இந்தித் திணிப்பைப் புகுத்துகிறார்கள். டி.வி.யிலே தேசிய நிகழ்ச்சி நடத்தப்படும் என்று சொல்லி இந்தியிலே செய்தியைக் கொண்டு வருவோம் என்று சொன்னார்கள். அதற்குப் பின்னாலே இங்கே இருக்கின்ற மக்கள் உள்ள உணர்ச்சிகளை வெளியிட்டதற்குப் பிறகு அதை வாபஸ் பெற்றார்கள்.

திருமதி டி. யசோதா: தலைவர் அவர்களே, கவர்னர் உரையிலே அவர்கள் குறிப்பிட்டதைத்தான் நான் சொன்னேன். நானாக சொன்னதாக அவர்கள் சொன்னதை தவிர்த்துவிட வேண்டுகிறேன்.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன்: தலைவர் அவர்களே, இன்றைக்கு டி.வி.-லே தேசிய நிகழ்ச்சிகள் மூலமாக மைய அரசு பொது மக்களுடைய வெறுப்பை சம்பாதித்துக் கொண்டு இருக்கின்றது என்பதை மட்டும் நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 15-8-1982 முதல் தேசிய நிகழ்ச்சிகளை நடத்துகிறார்கள். ஆனால் இங்கே தமிழ்நாட்டிலே இருக்கின்ற அனைவரும் அந்த தேசிய நிகழ்ச்சி நடக்கிறபோது தொலைக்காட்சிப் பெட்டியை மூடிவிடுகிறார்கள். ஆனால் 70, 80 வயது ஆனவர்கள் மட்டும் மகிழ்ச்சி அடைகிறார்கள். காரணம் அன்றாடம் டி.வி. பார்க்கின்ற பையன்கள் அந்த தேசிய நிகழ்ச்சி வந்த பிறகு எல்லா டி.வி.-யையும் மூடிவிடுகிறார்கள், அதனால் எங்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கின்றது என்கிறார்கள். அந்த மகிழ்ச்சியைத் தான் மத்திய அரசு தந்திருக்கிறதே தவிர, நியாயமாக தொலைக் காட்சி எதற்காக நிறுவப்பட்டிருக்கிறதோ அந்த தொலைக் காட்சி அந்தப் பணியைச் செய்யவேண்டாமா? அந்தப் பணியைச் செய்வதற்கு மத்திய அரசு தடையாக இருக்கின்றது என்பதை தமிழக மக்களுடைய உள்ள உணர்வுகளை இங்கே வெளியிட விரும்புகிறேன். இந்தியைத் திணிக்கமாட்டோம், இந்தியைப் புகுத்த மாட்டோம் என்று அறுதியிட்டுக் கூறுகின்றார்கள். அடிக்கடி உறுதி கூறுகின்றார்கள். நிலையாக மைய அரசின் சார்பிலே இருக்கின்ற அந்த நிறுவனங்களிலே எந்தக் காரணத்தை முன்னிட்டும் தென்மாநிலங்களிலே இருக்கின்ற அந்த உணர்ச்சியை அலட்சியப்படுத்துகின்ற போக்கினை மைய அரசு கைவிட வேண்டும் என்று நான் இங்கே பணிவோடு கேட்டுக்கொண்டு, இந்த மாநில அரசு நிறைவேற்ற இருக்கின்ற திட்டங்களை ஆளுநர் உரை தெளிவாக கூறி இருக்கிறது, அதை மீண்டும் வரவேற்று முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் விவாதத்திலே பங்கு பெறுகிற ஒரு வாய்ப்பு கிடைத்ததற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். முதன் முதலாக நம்முடைய தமிழகத்தின் எதிர்காலத்தை மிக நீண்ட நெடுங்காலத்திற்கு பாதிக்க இருக்கிற ஒரு பிரச்னையைப் பற்றி என்னுடைய

கருத்துக்களை வைக்க விரும்புகிறேன். காவிரிப் பிரச்னையைப் பற்றி இங்கே பேசிய எல்லாக் கட்சி உறுப்பினர்களும் அவர்கள் கருத்துக்களையெல்லாம் இங்கே சொன்னார்கள். காவிரி டெல்டா பகுதியிலே ஏறத்தாழ 15.5 இலசட்ம் ஏக்கர் நிலத்திலே 3 5 இலட்சம் ஏக்கர் நிலம் ஏற்கனவே தரிசாக போட்டுவிட்டார்கள் விவசாயிகள். மீதம் இருக்கிற 12 லட்சம் ஏக்கர் நிலத்திலே இருக்கக்கூடிய சம்பா பயிருக்கும் தாளடிப் பயிருக்கும் போதுமான தண்ணீர் வருமா வராதா என்ற கவலையிலே ஆழ்ந்திருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையில் கர்நாடக மாநிலம் தண்ணீர் தராவிட்டால் 12 லட்சம் ஏக்சர்களில் பெரும்பகுதி அழிந்து போகும் என்பதிலே சந்தேகம் இல்லை. இதன் மூலம் காவிரி நீர் செல்லவேண்டிய பகுதியிலே விவசாயிகளுக்கு இந்த ஆண்டு 150 கோடி ரூபாய்க்கு நஷ்டம் வர இருக்கிறது. ஆகவே தமிழகத்தின் எதிர்காலத்தை மிகப் பெரிய அளவிற்கு பாதிக்கக் கூடிய இந்தப் பிரச்னையிலே இந்த அவையிலே அத்தனை உறுப்பினர்களும் தங்களின் கவலையை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். ஏற்கனவே சென்ற முறை இந்த சட்டமன்றம் கூடியபோது 10-9-1982 ஆம் தேதியன்று நான் காவிரிப் பிரச்னையைப் பற்றி ஒரு மணி நேர விவாதம் கேட்டு அதைப் பற்றி விவாதம் நடந்தது. நானும் மற்ற கட்சி உறுப்பினர்களும் எங்களுடைய கவலையை வெளிப்படுத்தினோம். அரசாங்கத்தின் சார்பிலே பதில் அளித்துப் பேசிய நமது மின் துறை அமைச்சர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் அன்றைக்குத் தெளிவாகவே ஒன்றைச் சொன்னார்கள். நம்முடைய மின்துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது சொன்னார்கள். ''இந்த காவிரிப் பிரச்னையைப் பற்றி கர்நாடகத்திற்கு நானே நேரிலே சென்று முதல் அமைச்சர் அவர்களோடு பேசியிருக்கிறேன். 36 டி.எம்.சி. தண்ணீர் எங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அவர்கள் நிச்சயமாக கொடுப்பார்கள்'' என்று நமக்கு ஆறுதல் சொன்னார்கள். ஆனால் அந்தப் பேச்சு வார்த்தையின் விளைவாக தண்ணீர் வரும் என்று காவிரிப் பாசன விவசாயிகள் எதிர்பார்த்து காத்துக்கொண்டிருந்தார்கள்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை).

தண்ணீர் வரவில்லை. அதற்குப் பின்னால் தமிழகத்தைச் சேர்ந்த பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த எம்.பிக்கள் பிரதமர் இந்திராவைச் சந்தித்தார்கள். அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்களும், நமது இடது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மதிப்பிற்குரிய ராமமூர்த்தி அவர்களும், ஜனதாக் கட்சியைச் சேர்ந்த செழியன் அவர்களும், அ.தி.மு.க.வைச் சேர்ந்த ராமகிருஷ்ணன் ஆக எல்லோரும் சேர்ந்து பிரதமரைப் பார்த்து வற்புறுத்தினார்கள், இந்தப் பிரச்னையை



அனுதாபத்தோடு பரிசீலிப்பதாகவும், உடனடியாக தண்ணீர் விடுவதற்கு ஆவன செய்கிறேன் என்றும் பிரதமர் அவர்கள் சொன்னார்கள். அதுவும் நடக்கவில்லை. அதற்குப் பின்னால் நம்முடைய மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் அங்கே டெல்லிக்குப் பறந்து சென்று பிரதமர் அவர்களை 40 நிமிடங்கள் சந்தித்துப் பேசி காவிரி தண்ணீர் கொடுக்கவேண்டுமென்று கேட்கிறார். எப்போது? அக்டோபர் மாதம் 19 ஆம் தேதி கேட்கிறார்கள் அந்தப் பேச்சின் முடிவிலே அவர்கள் வெளியே வந்து பத்திரிகையிலே நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். பிரதமரிடம் நான் பேசிய பேச்சிலே எனக்கு திருப்தி ஏற்பட்டிருக்கிறது. நிச்சயமாக நம்முடைய பிரச்னையை அனுதாபத்தோடு கவனிப்பதாக பிரதமர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். எனவே ஆவன செய்வார்கள் என்று நம்புகிறேன். எனவே நிச்சயமாக வீணாகிக் கொண்டிருக்கிற தண்ணீர் வரும் என்ற நம்பிக்கையை அவர் தெரிவிக்கிறார். ஆனாலும் வரவில்லை தண்ணீர். கர்நாடக மாநில முதல் அமைச்சராக இருந்த குண்டுராவ் அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள். எங்கள் அணைகளிலே போதுமான தண்ணீர் இல்லை என்று சொன்னார்கள். அன்றைக்கு உடனடியாக நான் இதை மறுத்து ஒரு அறிக்கை வெளியிட்டேன். அங்கே இருக்கின்ற அணைகளிலே எல்லாம்—கபினி, ஹேமாவதி, ஹாரங்கி, கிருஷ்ணராஜசாகர் போன்ற அணைகளிலே எல்லாம் போதுமான தண்ணீர் இருக்கிறது. அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற தண்ணீரிலே அவர்களுக்கு உபயோகம் இல்லாத தண்ணீரிலே ஒரு பகுதியை அவர்கள் தரலாம் என்று நான் சுட்டிக்காட்டியதற்கு, அவர் இல்லை என்று சொல்கிற காரணத்தால் இந்த ஆண்டு தண்ணீர் எவ்வளவு இருக்கிறது என்பதை கண்டறிவதற்கு மத்திய அரசாங்கம் ஒரு குழுவை நியமிக்க வேண்டுமென்று நம்முடைய மதிப்பிற்குரிய பிரதமருக்கு கடிதம் எழுதினேன். நம்முடைய முதல் அமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்தேன். இதே கருத்தை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும் வற்புறுத்தினார்கள் மத்திய அரசாங்கத்திடம்.

[பிற்பகல் 12—20.]

ஆனால், பேக்ட் பைன்டிங் கமிட்டியை மத்திய அரசாங்கம் அமைக்க முன்வரவில்லை. அதற்குப் பின்னால் எங்கள் கட்சியின் சார்பாக ஒரு பேக்ட் பைன்டிங் கமிட்டியை நாங்கள் அமைத்தோம். எங்கள் கட்சியின் துணைத் தலைவர் இராமமூர்த்தி, தமிழகத்தில் சாகித்திய அகடமி விருதுபெற்ற எழுத்தாளர் மதிப்பிற்குரிய தீபம் நா. பார்த்தசாரதி, மற்றும் சித்திக் ஆகிய 3 பேரைக் கொண்ட ஒரு 'உண்மைநிலை அறியும் குழுவை' நாங்கள் அமைத்தோம். அவர்கள் 2000 கிலோ மீட்டர் சுற்றுப்பயணம் செய்து, 5 நாட்கள் அலைந்து திரிந்து ஒவ்வொரு அணையிலும் எவ்வளவு தண்ணீர் இருக்கிறது என்பதைக் கண்டறிந்து வந்து,

டிசம்பர் மாதம் 5-ம் தேதி தமிழகத்திற்கு அறிவித்தார்கள். அன்றைய நிலைமையில் 62 டி.எம்.சி. தண்ணீர் அந்த அணைகளில் தேக்கி வைக்கப்பட்டு இருந்தது, நமக்குத் தேவையான தண்ணீர் 30 டி.எம்.சி. தான். அதுவும் காவிரி பாசனத்தின் கீழ் வருகின்ற நிலங்களில் வாடிக்கொண்டிருக்கும் பயிர்களைக் காப்பதற்குத்தான் நமக்கு இந்தத் தண்ணீர் தேவை. நாம் முழுவதையும் வேண்டும் என்று கேட்கவில்லை. ஆனால் அந்த அணைகளில் அவர்கள் எவ்வளவு நீரைத் தேக்கி வைத்து இருக்கிறார்கள் என்ற உண்மையை பகிரங்கமாக நிருபித்த பின்னாலும் கூட அவர்கள் போதுமான தண்ணீர் இல்லை என்று திரும்பத் திரும்பத் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். இந்த அணைகளில் எவ்வளவு தண்ணீர் இருக்கிறது, இல்லை என்பது ஒரு புறம் இருக்கட்டும்.

காவிரி பிரச்னையில், காவிரி ஒப்பந்தப்படி 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தப்படி, சென்ற ஜூன் மாதத்தில் இருந்து டிசம்பர் மாதம் வரையில் எவ்வளவு தண்ணீர் கர்நாடகம் நமக்கு அளித்து இருக்க வேண்டும். அதிலே அவர்கள் எவ்வளவு தண்ணீர் கொடுத்தார்கள். இன்னும் அவர்கள் எவ்வளவு தண்ணீர் அளிக்க வேண்டியிருக்கிறது என்று ஆளுநர் உரையில் இந்த அரசாங்கம் வெளியிட்டு இருக்கவேண்டும். நம்முடைய நியாயம் என்ன? நாம் அடாவடியாக உரிமையை மீறி, நமக்கு உரிமை இல்லாத தண்ணீரைக் கேட்கவில்லை. 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் இன்றும் இருக்கிறது என்று நாம் சொல்கிறோம், அவர்கள் இல்லை என்று சொல்வார்கள். அவர்கள் வாதத்தையே வைத்துக் கொண்டாலும் இன்னொரு ஒப்பந்தம் வருகிற வரையில் இருக்கின்ற ஒப்பந்தம் செல்லுபடியாகும். அந்த நியாயத்தின் அடிப்படையில், எவ்வளவு தண்ணீர் அவர்கள் சென்ற ஜூன் மாதத்தில் இருந்து டிசம்பர் மாதம் வரையில் கொடுத்து இருக்கவேண்டும், எவ்வளவு கொடுத்தார்கள் என்ற உண்மை நிலையை இந்த ஆளுநர் உரையில் அரசாங்கம் வைத்து இருக்கவேண்டும். அதன் மூலம் மக்களுக்கு இந்த விவரங்களைத் தெரிவித்து இருக்கவேண்டும். அதை அரசாங்கம் செய்யத் தவறி விட்டது என்பதை வருத்தத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நான் இந்த விவரங்களை இந்த அவையின் முன்னால் வைக்க விரும்புகிறேன். சென்ற ஜூன் மாதத்தில் இருந்து டிசம்பர் மாதம் வரையில் நமக்கு 90·740 டி எம்.சி. தண்ணீர் அவர்கள் கொடுத்து இருக்கவேண்டும். அதாவது இந்த 7 மாதங்களில் ஒப்பந்தப்படி கொடுத்து இருக்கவேண்டும் ஆனால் அவர்கள் கொடுத்தது 46.974 டி எம்.சி. தண்ணீர்தான் கொடுத்து இருக்கிறார்கள். இன்னும் உரிமைப்படி, ஒப்பந்தப்படி, நியாயப்படி அவர்கள் நமக்குக் கொடுக்க வேண்டிய தண்ணீர் ஏறத்தாழ 43,766 டி.எம்.சி. தண்ணீர் கொடுக்க வேண்டும அது முழுவதையும் கூட நம்முடைய அரசாங்கம் கேட்கவில்லை.



உடனடியாக காவிரிப்பகுதியில் வாடிக்கொண்டிருக்கின்ற பயிர்களுக்கு குறைந்தபட்சம் 30 டி எம்.சி. கொடுங்கள், எங்களுக்கு அளிக்கப்பட வேண்டிய தண்ணீரையாவது கொடுங்கள் என்று ஓங்கிய குரலில், நம்முடைய நியாயத்தை வலியுறுத்தும் வகையில் கேட்டு இருக்கவேண்டும். அதை இந்த ஆளுநர் உரையிலே நீங்கள் வலியுறுத்திச் சொல்லியிருக்க வேண்டும். உண்மை நிலையை மக்கள் மத்தியில் வைத்தால் தான் மக்களுக்கு உண்மை நிலை தெரியும்.

இந்தப் பிரச்னை தமிழகத்திற்கும், கருநாடகத்திற்கும் இடையே உள்ள பிரச்னை அல்ல. அகில இந்தியா முழுவதற்கும் இந்தப் பிரச்னை தெரிவிக்கப்பட்டு இருக்கவேண்டும். அதற்குப் பொன்னான வாய்ப்பு ஆளுநர் உரையில் உங்களுக்கு கிடைத்தது. அதை நீங்கள் என்ன காரணத்தாலோ தவற விட்டு இருக்கிறீர்கள் என்பதை வருத்தத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

காவேரியில் தண்ணீர் வரவில்லை, விடவில்லை என்பது ஒருபக்கம். இன்னொரு பக்கத்திலே இன்னொரு அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. அது இதைவிட முக்கியமானது. காவேரி நதி நீரைப்பற்றி கர்நாடகத்திற்கும் தமிழ்நாட்டிற்கும் இடையே பிரச்னை, டிஸ்பியூட் இருக்கிறது. ஆகவே தமிழ்நாட்டில் ஓடுகின்ற காவேரியின் கிளை நதிகளில் என்ன திட்டத்தை நம்முடைய அரசாங்கம் போட்டாலும் கூட காவேரி டிஸ்பியூட்டட் ரிவர், இந்தத் திட்டங்களை நிறைவேற்றக்கூடாது என்று பிளானிங் கமிஷனும், மத்திய அரசும் சொல்லி நிறுத்தி விடுகிறார்கள்.

நான் உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன் காவேரி பிரச்சனையை காரணமாகக்காட்டி அனுமதி மறுக்கப்பட்ட அல்லது நிறைவேற்ற முடியாத பெரிய நீர்பாசனத் திட்டங்கள் எத்தனை, சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள் எத்தனை, மின்சார உற்பத்தித் திட்டங்கள் எத்தனை என்பதை நீங்கள் பகிரங்கமாக அறிவிப்பதற்கு முன்வர வேண்டும். நீங்கள் அதை மக்களுக்கு அறிவித்தாக வேண்டும். இவ்வளவு பெரிய அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்தக் கட்டத்தில் கூட தைரியமாகச் சொல்ல முன்வரவில்லை என்றால் நீங்கள் தமிழ்நாட்டின் எதிர்காலத்தையே நாசப்படுத்திய குற்றத்திற்கு ஆளாவீர்கள் என்பதை மிக அடக்கத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த நேரத்தில் எனக்கு கிடைத்திருக்கிற சில தகவல்களையும் இந்த அவை முன் வைக்க முன்வருகிறேன். கொல்லிமலை நீர்த்தேக்கத் திட்டம், மருதையாறு திட்டம், ஆண்டி ஓடைத் திட்டம், வழுக்குப்பாறைப்பள்ளம் திட்டம், பழநிக்கு அருகே ஓடுகின்ற சண்முகா நதித் திட்டம், ஒகனேக்கல் நீர்மின்சாரத் திட்டம் — இவை போன்ற பல்வேறு திட்டங்கள் காவேரி நதியோடு தொடர்பு பட்டிருக்கிற அல்லது காவேரி

கிளை நதிகளில் அமைகின்ற திட்டங்களாக இருப்பதினால் மத்திய திட்டக் குழு தடுத்து நிறுத்துகிறது; நீங்கள் நிறைவேற்றக் கூடாது என்று சொல்கிறது. நம்முடைய பக்கத்திலே நியாயம் இருந்தாலும் மத்திய சர்க்கார் மறுத்து வருகிறது.

பழநியில் உற்பத்தியாகிற ஓடுகின்ற சண்முகா நதி அமராவதியில் கலக்கிறது, அமராவதி காவேரியின் ஒரு கிளை நதியாக இருக்கிறது; காவேரியில் கலக்கிறது. சண்முகா நதி எந்தக் கட்டத்திலும் கர்நாடகத்தில் போய் பாய்வதில்லை. அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. இருந்தாலும் காவேரி நதி நீர் பிரச்சனையைக் காட்டி சண்முகா நதித் திட்டம் பல்லாண்டு காலமாக தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. இது எந்தவகையில் நியாயம்? நியாயத்திற்காகப் போராடுகிறோம் என்று தெளிவாகக் காட்ட இந்தக் கட்டத்தில் கூட நீங்கள் முன்வர வில்லை என்றால் நீங்கள் சொல்வதற்கு வேறு எந்தக் கட்டம் வரப்போகிறது?

மத்திய திட்டக் குழு சொன்னவுடன் தமிழ்நாடும் நிறுத்தி விடுகிறது. ஒன்றை நீங்கள் சிந்திக்க வேண்டும். கபினி அணை திட்டம், ஹேமாவதி திட்டம், ஹேரங்கித் திட்டம் போன்றவை களுக்கு மத்திய திட்டக் குழு ஆட்சேபணை தெரிவித்தது; மத்திய அரசு ஆட்சேபணை தெரிவித்தது. அதை மீறி அங்கே அணைகளைக் கட்டினார்கள். அவர்களுடைய வசதிகளைப் பெருக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதை யாரும் கேட்கவில்லை; தடுக்கவில்லை. அப்படி இருக்கும்போது நீங்கள் எதற்காக இந்தத் திட்டங்களை நிறுத்தி வைத்திருக்கிறீர்கள் என்று நான் அறிய விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. மத்திய அரசாங்கம் ''கமான்ட் ஏரியா டெவலப்மென்ட் ப்ரோகிராம்'' என்ற அடிப்படையில் பாசன வசதிகளை பெருக்குவதற்காக எல்லா மாநிலங்களுக்கும் உதவி செய்கிறது. அதற்கு என்று அமைப்புகளை ஒவ்வொரு மாநிலமும் நிறுவி இருக்கிறது. அந்த வகையிலே பல்வேறு மாநிலங்களுக்கு மத்திய அரசு நிதி உதவி செய்கிறது. அந்த அடிப்படையில் கர்நாடக மாநிலத்திற்கு 1981–82-ல் 176·83 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய தமிழ கத்திற்கு 17·42 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது நமக்கு மிகக் குறைந்த தொகை என்பதைக்கூட இப்போது நான் பேச முன்வரவில்லை. அது முக்கியமல்ல. அதைவிட முக்கியமானது மற்றொன்று இருக்கிறது. இந்தப் பணத்தை கர்நாடகம் எதற்காக செலவிடுகிறது? அதுதான் முக்கியம். மத்திய அரசு ஒதுக்கியிருக்கிற இந்த பணத்தை நதிநீர் பற்றாக் குறையாக இருக்கிற இடங்களில் பாசனத் திட்டங்களை நவீனப்படுத்த மத்திய அரசு கொடுத்த இந்த பணத்தை நதிநீர் பிரச்சனைக்குரிய காவேரியிலே கபினி கிளை நதி பாசனத் திட்டத்தை விஸ்தரிக்க கர்நாடக அரசு பயன்படுத்துகிறது. இதை நீங்கள் ஆட்சேபணை செய்தீர்களா?



காவேரி டிஸ்பியூட்டட் ரிவர் என்ற காரணத்தால் இங்கே எந்தத் திட்டத்தையும் நிறைவேற்றக் கூடாது என்று மத்திய சர்க்கார் நம்மைப் பார்த்து கேட்கிறது. அதே நேரத்தில் கர்நாடக அரசு நிறைவேற்றுகின்ற திட்டங்களை மத்திய அரசு தடுக்கவில்லை. இதைச் சுட்டிக்காட்டி நீங்கள் கேட்டீர்களா? அவர்கள் செய்வது எந்த வகையிலே நியாயம் என்று பார்க்க வேண்டாமா? மத்திய அரசு பணத்தையே அதற்கு பயன்படுத்து கிறார்கள் என்றால் இதை நீங்கள் சுட்டிக்காட்ட வேண்டாமா என்பதை நான் அறிய விரும்புகிறேன். அதையும் நம்முடைய அரசாங்கம் தன்னுடைய பதிலிலே அளிக்கும் என்று நிச்சயமாக நம்புகிறேன்.

(பிற்பகல் 12-30)

அதைப்போல பெரியார் அணையிலே, இன்றைக்கு தண்ணீர் அளவு குறைந்ததன் காரணமாக, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களிலே இருக்கக்கூடிய விவசாயிகள் பெரிய கஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். பெரியார் அணையிலே 152 அடி உயரம் இருந்த தண்ணீரை 16 அடி குறைக்க வேண்டும் என்று, 136 அடியாக ஆக்கவேண்டும் என்ற ஒரு நிலைமையும் ஏற்படுத்தப்பட்டது. அதைப்பற்றியும் இந்த மாமன்றத்தில் நான் முன்பே விரிவாகப் பேசியிருக்கிறேன். அதனால் அதை மறுமுறையும் விளக்கிச் சொல்லவேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கிறேன். இப்படி 16 அடி குறைந்துவிட்டதன் விளைவாக, ஆண்டுக்கு 13½ டி.எம்.சி. தண்ணீரையும் நாம் இழந்து விட்டோம்.

அதன் மூலம் மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள 80 ஆயிரம் ஏக்கர் நிலங்களை இன்றைக்கு சாகுபடி செய்ய முடியாமல், அந்தப் பகுதியிலே வாழக்கூடிய விவசாயிகள் அவல நிலைமைக்கு ஆளாகியிருக்கிறார்கள். அதைப்பற்றிய ஒரு கவலையோ அல்லது அதற்கு மாற்றாக அந்த 16 அடி தண்ணீரை மீண்டும் உயர்த்த வேண்டும் என்பதற்காக மத்திய அரசாங்கத்திடம் போராடி அனுமதி பெறவேண்டும் என்பதற் காகவோ என்ன நடவடிக்கைகளை நீங்கள் எடுத்தீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

அதைப்போலவே தமிழகத்தில் தொழில் வளர்ச்சியைப் பற்றியெல்லாம் எனக்கு முன்னாலே பேசிய பல்வேறு கட்சி உறுப்பினர்களும் அவரவர்கள் கருத்துக்களை எடுத்துத் தெரிவித்தார்கள். கடந்த 16 ஆண்டு காலத்தில் தமிழகத்தில் எந்தப் பெருந்தொழிலையும், ஹெவி இன்டஸ்ட்ரீஸ்களை ஆரம்பிப்பதற்கு மத்திய அரசாங்கம் முன் வரவில்லை. சரி, நம்முடைய தமிழக அரசாங்கம் தொடங்குவதறகு உத்தேசித்த தொழிலையாவது தொடங்குவதற்கு அனுமதி தந்ததா என்றால்

அதுவும் இல்லை. மிகவும் பிற்பட்ட பகுதியான மதுரை மாவட்டத்தில் வேடசந்தூர் பகுதியிலே ஒரு சிமெண்ட் தொழிற்சாலை தொடங்கவேண்டும் — 40 கோடி ரூபாய் செலவிலே என்று இந்த அரசாங்கம் எடுத்துக் கொண்ட முயற்சிக்கு மத்திய அரசாங்கத்தின் பதில் என்ன? கடந்த இரண்டு ஆண்டு காலமாக அந்தப் பிரச்னை இழுபறியாக இருக்கிறது. ஏனென்றால் அங்கே நிலக்கரி போன்றவைகளை கொண்டு வருவதற்கு பிராட்கேஜ் இல்லை — வேடசந்தூர் பகுதியிலே — என்று சொன்னார்கள். பிராட்கேஜைப் போடுங்கள் என்று சொன்னால், பிராட்கேஜ் போடுவதற்கு என்ன தொழில் இருக்கிறது அங்கே, தொழிற்சாலை இல்லாத பகுதியிலே பிராட்கேஜ் போடுவது எக்கனாமிக்கலாக சரியாக வராது என்று சொல்லுகிறார்கள். இது எந்த வகையிலே நியாயம்?

இந்த வேடசந்தூர் சிமெண்ட் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் தற்போது என்னவாயிற்று என்று யாருக்கும் தெரியவில்லை. அதைப்போல தூத்துக்குடி துறைமுகப் பகுதியையும், கும்முடிப்பூண்டியையும் ப்ரீ டிரேட் ஸோன் என்று அறிவிக்க வேண்டும் என்று கேட்டீர்களே, அதற்கு இதுவரையில் ஏன் தகவல் வரவில்லை? இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலே இப்படிப்பட்ட இடங்களில் எல்லாம் ப்ரீ டிரேட் ஸோன் என்று அறிவித்திருக்கிறபோது, தமிழகத்திற்கு மட்டும் ஏன் மறுக்கிறார்கள் என்பது குறித்து மத்திய அரசாங்கத்திடம் நீங்கள் எந்த அளவுக்கு போராடியிருக்கிறீர்கள், ஏன் அவைகள் எல்லாம் இன்னமும் வரவில்லை என்பதைப்பற்றிய விளக்கம் இதுவரையில் தமிழக அரசாங்கத்தின் தரப்பிலேயிருந்து இல்லை.

சரி தஞ்சையிலே பெட்ரோ கெமிக்கல் காம்பிளாக்ஸ் நிறுவ அனுமதி கேட்டீர்களே அது என்னவாயிற்று? கடிதம் டெல்லிக்கு போனதா? டெல்லியிலிருந்து பதில் வந்ததா. என்று தகவல் இல்லை. 'இருட்டறையில் உள்ளதடா உலகம்' என்று பாரதிதாசன் சொன்னதைப்போல நீங்கள் அனுப்பிய திட்டங்கள் பற்றிய கடிதங்கள் எல்லாம் மைய அரசாங்கத்தின் இருட்டறையிலே போடப்பட்டிருக்கிறதா? அவைகளின் கதி என்னவாயிற்று? அதைப்பற்றிய கவலை நாட்டு மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

சரி புதிய தொழில்கள் தான் வரவில்லை. இருக்கின்ற தொழில்களையாவது பாதுகாக்கிற நடவடிக்கைகளை, உறுதியான நிலைமைகளை எடுக்க வேண்டுமா? வேண்டாமா? இன்டகரல் கோச் பேக்டரி, சென்னையிலே பெரம்பூரிலே இருக்கிறது.

One of the prestigeous industries in Asia ஆசியாவின் மிகச் சிறந்த தொழிற்சாலைகளில் ஒன்று என்ற பாராட்டுதலைப் பெற்ற தொழிற்சாலை அது. வெளிநாட்டிலேயிருந்து எந்த அரசாங்கத் தலைவர் வந்தாலும், டிட்டோ வந்தாலும் குருஷ்சேவ்



வந்தாலும், மற்ற மாபெரும் தலைவர்கள் வந்தாலும்' இந்தியாவிலே அவர்கள் பார்வையிடக்கூடிய மிகப்பெரிய தொழிற்சாலைகளில் ஒன்றாக, பெரிய இன்டஸ்ட்ரியாக பெரம்பூர் ரெயில்பெட்டி தொழிற்சாலை அமைந்திருக்கிறது. அது 1952லே தொடங்கப்பட்டது. அன்று ஆரம்பநிலையில் 350 ரெயில்வே பெட்டிகளை மட்டும் உற்பத்தி செய்யக்கூடிய திட்டம் இடப்பட்டிருந்தது, ஆனால் அது நாள்தோறும் வளர்ந்து நம்முடைய தொழிலாளர்களின் திறமையின் காரணமாக இன்றைக்கு அந்தத் தொழிற்சாலை ஆண்டு ஒன்றுக்கு 750 ரெயில்வே பெட்டிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

அது உலகம் பூராவும் விற்பனை ஆகின்றது. பல்வேறு நாடுகள் அந்தத் தொழிற்சாலைக்கு ஆர்டர்கள் கொடுக்கிறார்கள். அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகின்ற ஒரு மாபெரும் தொழிற்சாலையாக அந்தத் தொழிற்சாலை இயங்குகிறது. ஏறத்தாழ 15 ஆயிரம் தொழிலாளர்கள் அதிலே வேலை செய்கிறார்கள். அவர்கள் நல்ல ஸ்கில்ட் ஒர்க்கர்ஸ். இந்தத் தொழிற்சாலையிலே 3 வது ஷிப்ட் போடவேண்டும் என்று சொல்லப்பட்டது. தற்போது 2 ஷிப்ட் ஓடிக்கொண்டிருக்கின்றது. மூன்றாவது ஷிப்ட் போட்டால் 5,000 தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும். தமிழகத்திலே வேலையில்லாமல் வீதிகளிலே திரியும் 5,000 இளைஞர்களுக்கு வேலை கிடைக்கும். அதற்காக ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. அதிலே ஒரு 15 கோடி ரூபாய் அந்த மூன்றாவது ஷிப்ட் ஏற்படுத்துகின்ற வகையிலே அந்தத் தொழிற்சாலையினை விரிவுபடுத்துவதற்கு செலவிட்டால் போதும். தற்போது ஏற்கெனவே 750 இரயில் பெட்டிகள் உற்பத்தி செய்யப்படுகின்றது. மேலும் 350 இரயில் பெட்டிகள் உற்பத்தி செய்ய முடியும். இரண்டும் சேர்த்து 1,100 இரயில் பெட்டிகள் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு திறன் கொண்டதான அந்தத் தொழிற்சாலை விரிவடையும். ஆனால் மற்ற மாநிலங்களிலே தொழிற்சாலைகள் அமைப்பது பற்றி ஆட்சேபணை இல்லை. இந்தியாவின் எல்லா மாநிலமும் வளர வேண்டும் என்று எண்ணுகின்றவர்களில் நானும் ஒருவன். ஏற்கெனவே இருக்கின்ற இந்தத் தொழிற்சாலையினை 15 கோடி ரூபாய் செலவிலே விரிவாக்கினால் மேலும் 350 இரயில் பெட்டிகளை அதிகமாக உற்பத்தி செய்ய முடியும் என்ற நிலைமை இருக்கும்போது இதை விட்டுவிட்டு ஹரியானா மாநிலத்திலே 90 கோடி ரூபாய் செலவிட்டு இதே 350 இரயில் பெட்டிகளை உருவாக்குகின்ற வகையிலே தொழிற்சாலை அமைப்பதன் அவசியம் என்ன? அங்கே வேறு புதிய தொழிற்சாலைகள் அமைப்பதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. 90 கோடி ரூபாயிலே புதிய தொழிற்சாலையினை அமைக்க வேண்டும் என்றால் அதற்கு ஸ்கில்ட் லேபரர்ஸ் கிடையாது, அங்கே உற்பத்தியினைத் தொடங்குவதற்கு பல ஆண்டுகள் ஆகும். ஆனால் இங்கே 15 கோடி ரூபாய் முதலீட்டிலே சில மாதங்களிலேயே அந்த உற்பத்தியினைத் தொடங்கிவிட முடியும்.

அதற்கென தரம் வாய்ந்த தொழிலாளர்கள் இங்கே இருக்கிறார்கள். எனவே இது லாபமா, இதற்காக புதிதாக 90 கோடி ரூபாய் செலவிலே தொழிற்சாலை அமைப்பது லாபமா என்பதைப் பார்க்கவேண்டும். வடக்கு, தெற்கு என்ற விவரத்தின் அடிப்படையிலே நான் இதைக் குறிப்பிடவில்லை. நான் அந்த உணர்வுடையவன் அல்ல. ஒட்டுமொத்தமாக இந்தத் தொழிற்சாலையினை விரிவுபடுத்துவதால் எவ்வளவு லாபம் என்பதைத்தான் இதுபோன்ற பிரச்சினையிலே பார்த்து முடிவு எடுக்கவேண்டும். இதிலே பிராந்திய உணர்வு அடிப்படையிலே மத்திய அரசிலே இருப்பவர்கள் செயல்பட்டால் தேசிய ஒற்றுமை என்ன ஆகும் என்பதை நான் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இது நல்லதல்ல நாட்டுக்கு.

உதகமண்டலத்திலே கலர் ஃபிலிம் தொழிற்சாலை அமைப்பது பற்றி இரண்டு நாட்களாக எல்லா உறுப்பினர்களும் எல்லா கட்சியினைச் சேர்ந்தவர்களும் எழுப்பி இருக்கிறார்கள். உதகமண்டலத்திலே ஃபிலிம் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்ட போது 300 ஏக்கர் பூமியை தமிழக அரசு ஏற்கெனவே கொடுத்து அந்தத் தொழிற்சாலை அமைக்கப்பட்டது. ஜெர்மனியிலே இருக்கக்கூடிய அக்ஃபா கம்பெனியோடு சேர்ந்து இந்தத் தொழிற்சாலை அமைக்கப்பட்டது. அப்படி அமைக்கப்படுகின்ற போது அக்ஃபா கம்பெனியைச் சார்ந்த நிபுணர்கள் இந்தியாவிற்கு வந்து இங்குள்ள பல்வேறு பகுதிகளைச் சுற்றிப் பார்த்து உதகமண்டலம்தான் சிறந்த இடம் என்ற காரணத்தால் அதைத் தேர்ந்தெடுத்தார்கள். சட்டமன்றத்திலே இருக்கக்கூடிய பல்வேறு கட்சிக்காரர்கள் சொல்லி அங்கே அது வரவில்லை. காரணம் இந்தத் தொழிற்சாலைக்கு வேண்டிய கச்சாப்பொருள்கள் அதாவது ரா மெட்டீரியல்ஸ் கர்நாடகம், தமிழகம் ஆகிய இரண்டிலும்தான் கிடைக்கின்றது. இதுதான் முதல் காரணம். இரண்டாவது இந்தத் தொழிற்சாலையிலே உற்பத்தி செய்யக்கூடிய ஃபிலிம்-க்கு மார்க்கெட் சென்னை நகரமும், பம்பாய் நகரமும்தான். இந்தியாவிலே உள்ள ஸ்டுடியோக்களில் 100-க்கு 99 சதவீதம் இந்த இரண்டு நகரங்களிலும்தான் இருக்கின்றது. இந்தத் தொழிற்சாலையிலே உற்பத்தி செய்யக்கூடிய ஃபில்மை உடனடியாக விற்பனைச் சந்தைக்கு அனுப்பவேண்டும் என்றால் ஏர் கண்டிஷன் வைக்கப்பட்ட லாரிகளில்தான் அனுப்பவேண்டும். அவ்வாறு அனுப்பாவிட்டால் ஃபில்ம் கெட்டுப் போகும். எனவே இங்கேயே அந்தத் தொழிற்சாலையினை அமைப்பது நல்லது. அதை விட்டுவிட்டு இமயமலை அடிவாரத்தில் நைனிடாலிலே கொண்டுபோய் அமைப்பது நல்லதா? ரா மெட்டீரியல்ஸ் கர்நாடகாவிலே இருந்து போகவேண்டும். பிறகு உற்பத்தி செய்த ஃபிலிமை பல்லாயிரக்கணக்கான மைல்களைத் தாண்டி இங்கே கொண்டு வரவேண்டும் என்பது நல்லதா?



எது தேசத்திற்கு ஒட்டுமொத்தத்திலே நல்லது என்பதை நண்பர்கள் மத்திய அரசில் இருப்பவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும், அதிலே 3,வது முக்கியமானது. இந்த தொழிற்சாலை கலர் பிலிம் யூனிட் ஆரம்பிப்பது என்ற முடிவு பல ஆண்டுகளுக்கு முன்பு எடுக்கப்பட்டிருந்தாலும் பின்பு அமுல் படுத்த முடிவு செய்யப்பட்டது. அதற்கு தமிழக அரசு 200 ஏக்கர் நிலம் கொடுத்தது. இதற்கு வேண்டிய தண்ணீர் அருகில் இருக்கக்கூடிய காமராஜ் சாகர், பால்மன்ஸ் வேலி ஆகிய 2 அணைகளில் எவ்வளவு தண்ணீர் உள்ளதோ அதில் தொழிற்சாலைக்கு தேவையானதை அளிப்பதற்கு தயார் என்று தமிழக அரசு சொல்லியிருக்கிறது. இவ்வளவு சொன்ன பிறகும் கூட உத்திரப்பிரதேசத்திலுள்ள நைனிடாலுக்கு இந்த கலர் பிலிம் தொழிற்சாலையை மாற்றுவது தேச நஷ்டம் என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-40.)

மேலும் இந்த ஊட்டி தொழிற்சாலைக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. கருப்பு வெள்ளை பிலிமுக்கு இப்போது மார்க்கெட் இல்லை. கொஞ்ச கொஞ்சமாக அந்த மார்க்கெட் சரிந்து கொண்டிருக்கிறது. இன்னும் 5 ஆண்டுக்குப் பின்னால் இந்த மார்க்கெட் இருக்காது. கலர் பிலிமுக்குத்தான் மார்க்கெட் உண்டு. அப்படி ஆனால் 5 ஆண்டு கழித்து மார்க்கெட் இல்லாத நிலைமையில் ஊட்டி தொழிற்சாலை அடியோடு மூடப்படக்கூடிய அபாயம் இருக்கிறது. அதை தடுக்கவேண்டும் என்றால் இந்த கலர் பிலிம் யூனிட் ஊட்டியில் அமைக்கப்பட்டு ஆகவேண்டும். திட்டமிட்டப்படி அமைக்ப்பட்டு ஆக வேண்டும், இதை மத்திய அரசிடம் வற்புறுத்தி நாம் பெற்று ஆகவேண்டும்.

அடுத்தது பல ஆண்டு, காலமாக காவேரி படுகையில் பெட்ரோல் கிடைக்கிறது, இருக்கிறதா? இல்லையா? என்பதை சோதனை செய்யவேண்டும் என்று தமிழகத்தின் நீண்ட நெடுங்காலமான கோரிக்கை. காவேரி படுகையில் பெட்ரோல் எடுக்கப்படுமானால் அந்த பகுதி தொழில் வளம் மிக்க பகுதியாக மாறும். அந்தப் பகுதியில் பொருளாதார நிலை உயரும் என்ற காரணத்தினால் நாம் அதை பல ஆண்டு காலமாக வற்புறுத்தி வருகிறோம். அதன் பின்னால் காவேரி படுகையில் எண்ணெய் இருக்கிறதா என்பதை அறிய ஆரம்பித்தனர். கடலிலே முதல் கிணறு தோண்டப்பட்டது. ஒரு நாளைக்கு 1,500 பாரல் எண்ணெய் கிடைத்தது. ஆக எண்ணெய் இருக்கிறது என்பது உறுதியாகிறது, 2-வது கிணறு தோண்டினார்கள், அதிலே பெட்ரோல் டிரேசர்ஸ் கிடைக்கிறது என்பது உறுதியாகிறது. மேற்கொண்டும் தோண்டுவதற்கான வேலை நடந்தது. 3-வது கிணறு தோண்டலாம் என்று அந்த வேலையையும் ஆரம்பித்தார்கள். திடீர் என்று இந்த வேலைகள்

எல்லாம் நிறுத்தப்படுகின்றன. இந்த வேலைகளில் ஈடுபட்டிருந்த கப்பல்கள் அந்த துரப்பணக் கருவிகள் அத்தனையையும் உடனடியாக ஆந்திராவிலுள்ள கோதாவரி படுகைக்கு அனுப்பப்படுகின்றன ஆந்திராவிலுள்ள கோதாவரியில் எண்ணெய் வந்தால் அதையும் எடுக்கவேண்டும். அது இந்த தேசத்திற்கு நல்லது. பொருளாதாரம் செழிக்கும் என்பதில் எனக்கு அபிப்பிராயபேதம் இல்லை; வரவேற்கிறேன். ஆனால் காவேரி படுகையில் சோதனை செய்வதை அவசர அவசரமாக நிறுத்தி அதை கோதாவரி படுகைக்கு அனுப்பியதன் மர்மம் என்ன? அதை தமிழக அரசின் சார்பில் ஆட்சேபித்தீர்களா? அதற்கு உங்கள் எதிர்ப்பை தெரிவித்தீர்களா? என்பதை நான் அறிய விரும்புகிறேன். ஆந்திராவிலே தேர்தல் வந்தவுடன் அதை அங்கே மாற்றிவிட்டார்கள். இப்படிப்பட்ட நிலைமையிலே மத்திய அரசிலே இருப்பவர்களை நான் தனிப்பட்ட முறையில் குற்றம் சொல்லவில்லை. மத்தியில் உள்ள பெட்ரோலிய அமைச்சர் திரு. சிவசங்கர் அவர்கள் ஆந்திராவைச் சேர்ந்தவர்கள் என்பதால் இதைச் செய்தாரா, அவருக்கு இருக்கக் கூடிய உணர்வு நம்முடைய தமிழகத்திற்கு இருக்க வேண்டுமா? வேண்டாமா? என்பதைதான் நான் உங்கள் கவனத்திற்கு வைக்கவிரும்புகிறேன்.

ஏற்கனவே தமிழகத்திற்கு பெரும் தொழில்கள் எதையும் மத்திய அரசு இந்த 16 ஆண்டு காலத்தில் கொடுக்கவில்லை, அமைத்து இருக்கிற மத்திய அரசாங்கத்திற்கு சொந்தமான தொழிற்சாலைகளின் விரிவாக்க பகுதிகளை மற்ற மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. இந்த நிலைமையிலே தனியார் துறையிலே என்ன நடக்கிறது அதைப்பற்றிய தகவலை இந்த மன்றத்திலே தெரிவிக்கவிரும்புகிறேன்.

ஐ.டி.பி.ஐ. என்ற ஒரு அமைப்பு பம்பாயில் இருக்கிறது: அவர்கள் பெரிய பெரிய தொழில்களுக்கு நிதிஉதவி செய்கிறார்கள். கடனாக கொடுக்கிறார்கள். அந்த கடன்களை சில நேரங்களிலே அந்த நிறுவனங்களின் பங்காக மாற்றிகொள்கிறார்கள். அந்த கடன் ஏராளமாக கொடுத்ததால் அதை பங்காக மாற்றி அந்த நிறுவனத்தில் ஆதிக்கத்தை பெற்றுகொள்கிறார்கள்.

சில நேரங்களிலே அது ஆபத்தாக முடிகிறது. ஐ.டி.பி.ஐ. யிலே என்ன செய்திருக்கிறது என்பதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தமிழகத்திலே தனியார்களால் ஆரம்பிக்கப்பட்ட பெரும் தொழில்கள் ஐ.டி.பி.ஐ.யால் எப்படி வஞ்சிக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவிக்க விரும்புறேன் தமிழகத்திலே தனியார்களின் பெருந்தொழில்கள் நட்டத்திலே நடக்குமானால் அகதத் தொழில்களை அரசாங்கமே தேசியமயமாக்கினால் நான் அதை வரவேற்கிறேன். மாநில அரசாங்கமானாலும் மத்திய அரசாங்கமானாலும் தேசியமயமாக்கினால் அதுதான் சிறந்த வழி. வரவேற்கிறேன். ஆனால் என்ன நடக்கிறது. மிகப் பெரிய முதலாளிகள் ஏக போகத் திமிங்கலங்கள் வட நாட்டிலே யார் இருக்கிறார்களோ அவர்கள் அந்தத் தொழிசாலைகளை பெற்றுக்கொள்ளக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சமுதாயத்திலே சோஷலிஸம் மலரவேண்டுமென்று அனைவரும் விரும்புகிறோம், அந்த எண்ணத்திலே நடைபெறுகிறதா என்றால் இல்லை. மதுரை மீனாட்சி மில்ஸ், கருமுத்து தியாகராஜ் செட்டியாருடையது; அதனுடைய கதி இன்றைக்கு என்ன? வடக்கிலிருக்கின்ற ஏக போக முதலாளி டால்மியாவின் கைக்கு மாறியிருக்கிறது. மீனாட்சி மில்லிலே ஐ.டி.பி.ஐ. பங்கு பெற்றிருக்கிறது. திடீரென்று இரவோடு இரவாக அவ்வளவு பங்கையும் டால்மியாவுக்கு பினாமி பெயரால் மாற்றுகிறார்கள். மத்திய அரசாங்கமானாலும் மாநில அரசாங்கமானாலும் நான் கேட்டுக் கொள்கிறேன். தேசியமயமாக்கவேண்டுமென்ற கொள்கையை நீங்கள் அறிவித்த பின்னாலே இந்த பெருந்தொழில்களை ஏகபோக முதலாளிகள் சொந்தமாக்கிக் கொள்வதற்கு அரசாங்கம் உடந்தையாக இருப்பீர்களானால எப்படி சோஷலிஸம் மலரப் போகிறது என்று கேட்க விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, இந்தியா சிமிண்ட்ஸ் கதியும் அதுதான். அது யார் கைக்குப் போயிருக்கிறது? மதுரை மீனாட்சி மில்ஸ் டால்மியாவின் கைக்குப் போனதைப்போல் இது இண்டியன் டுபாக்கோ கம்பெனிக்கு அன்னிய முதலாளிகளின் கைக்கு ஐ.டி.பி.ஐ. மூலமாக வஞ்சித்துக் கைப்பற்றப்பட்டுப்போய் இருக்கிறது. நம்முடைய கோவை மாவட்டத்திலே உள்ள விஸ்கோஸின் கதி என்ன? சந்தான்தேசாய் என்ற ஏகபோக முதலாளியின் கையில் அது இன்றைக்கு சிக்கியிருக்கிறது. அருமை தலைவன் காமராஜ் ஆட்சிக் காலத்திலே தமிழகத்திலே இந்தத் தொழில்கள் தொடங்கப்பட்டன. இதை தமிழக அரசு தேசியமயமாக்கியிருந்தால் வரவேற்றிருப்பேன். ஆனால் தமிழகத்திலே ஆரம்பிக்கப்பட்ட பெருந்தொழில்களை ஏகபோக முதலாளிகள் காள்ளைப்புற வழியிலே புகுந்து கைப்பற்றி இருக்கிறார்களே அதைத் தடுத்துநிறுத்துவதற்கு குரல் எழுப்பினீர்களா?

இதைப்போன்று பல்வேறு பிரச்சினைகளை இங்கே வைத்தாலும்கூட ஒன்றை நான் வற்புறுத்த விரும்புகிறேன். காவிரிப் பிரச்சினையானாலும் தமிழகம் தொழில் துறையில் வஞ்சிக்கப்படுகிற பிரச்சினையானாலும் தமிழக நலன்கள் பாதிக்கப்படுகிற பிரச்சனையானாலும் கட்சிவேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு இந்த மன்றத்திலே இருக்கின்ற அத்தனை பேர்களும் ஒருமனதாக குரல் கொடுத்து நியாயமான உரிமைகளை நாம் பெற்றாக வேண்டும். இங்கே காவிரி பிச்ரசனையிலே பரஸ்பரம் குற்றச் சாட்டுகள் இருந்தது எனக்கு வருத்தமாக இருந்தது. பரஸ்பரம் குற்றஞ் சாட்டுவது நமக்கு முக்கியமல்ல.

தமிழ்நாட்டிலே உள்ள அத்தனை கட்சிகளும் ஒன்றுபட்டு நம்முடைய நியாயமான உரிமைகளைப் பெறுவதற்காக போராடுகின்ற நிலை இருந்தால்தான் மத்திய அரசாங்கமும் அண்டை மாநிலங்களும் நம்மை மதிக்கும். அப்படிப்பட்ட நிலை இல்லாததால் உதாரணமாக என்ன ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். கர்நாடக மாநிலத்திலே, சட்டமன்றத்திலே ஒரு தமிழர் அ.இ.அ.தி.மு.கவை சேர்ந்தவர். அது அல்ல முக்கியம். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் தன்னுடைய தாய்மொழியிலே பதவிப் பிரமாணம் எடுத்தார் என்பதற்காக சட்டமன்றத்திலேயே ஓட ஓட விரட்டியடிக்கப்பட்டு சபாநாயகர் அறையிலே போய் தஞ்சம் புகக் கூடிய நிலைமை இந்த தேசத்தில் இருக்குமானால் அது நியாயம்தானா?

(பிற்பகல் ச2-50)

தேசிய ஒருமைப்பாட்டை பற்றி விடாமல் பேசிக் கொண்டிருக்கிற மத்திய அரசிலே இருப்பவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த நாட்டிலே ஒரு மனிதன் தன்னுடைய தாய் மொழியிலே பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்வதை ஒரு குற்றச்சாட்டாக கருதப்பட்டு சட்டமன்றத்திலே அடித்து நொறுக்கப்படுவாரேயானால் அப்படி அடித்து நொறுக்குபவர்களைப் பற்றி கவலை இல்லை; அந்த நிலைக்கு அந்த மாநிலத்திலே உள்ள தமிழர்களின் நிலை ஆளானதற்கு யார் காரணம்? நாம் தான் காரணம். கோலார் தங்க வயலிலே தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட போது தமிழகத்திலிருந்து குரல் கிளம்பவில்லை. கோவாவில் கன்னடியர்கள் தாக்கப்பட்ட நேரத்தில் அந்த மாநிலத்திலேயிருந்த முதலமைச்சர் குண்டுராவ் அங்கே விரைந்து போனார். அமைச்சர்கள் போனார்கள்: அதிகாரிகளை அனுப்பினார்கள், பிரச்சினையில் அக்கறை செலுத்தினார்கள். இந்த அரசாங்கத்தின் சார்பிலே யாராவது ஒரு அமைச்சர் அங்கே சென்றிருக்க வேண்டும். அதை நீங்கள் செய்யவில்லை. அதனுடைய விளைவு அதே கோலாரில் மக்களுடைய ஆதரவைப் பெற்ற உறுப்பினரை சட்ட மன்றத்திலே அடிக்கிற கொடுமை நடக்கிறது. என்றால் இத்தகைய நிகழ்ச்சிகள் எதிர்காலத்தில் இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் வரக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே பொதுவாக நாம் கொள்கை மரபு வேறொரு சட்டமன்றத்தைப் பற்றி அந்த சட்டமன்றத்திலே நாம் குற்றச்சாட்டாக, குறையாக எடுத்துச் சொல்லக் கூடாது. சட்டமன்றத்திற்கு வெளியே நடைபெறுகிற நிகழ்ச்சி என்றால் அந்த நிகழ்ச்சியை வேண்டுமானால் நீங்கள் குறிப்பிட்டு பேசலாமே தவிர சட்டமன்றத்தைப் பற்றி பேசவேண்டிய அவசியம் இல்லை. தவிர பேசுகிற போது அதனுடைய அளவு



அறிந்து பேசுவதற்கான ஒரு வாய்ப்பைத் தரவேண்டும். எக் காரணம் கொண்டும் எந்த சட்டமன்றத்தையும் குறை சொல்லவோ, அதற்கு ஒரு நோக்கம் கற்பித்தோ இங்கே குறிப்பிட்டு பேசக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. நெடுமாறன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். அந்த சட்டமன்றத்தை குறை சொல்லி நான் எதுவும் சொல்லவில்லை. அந்த சட்ட மன்றத்திலெ ஒரு சட்டமன்ற உறுப்பினர் தாக்கப்பட்ட ஒரு கொடுமைக்கு என்னுடைய வருத்தத்தை தெரிவித்தேனே தவிர, யார் தாக்கினார்கள் என்பதையோ, எந்தக் கட்சிக் காரர்கள் என்பதையோ அல்லது சட்டமன்றத்தை இழிவு படுத்துகிற அளவிலோ நான் எந்த வார்த்தையையும் சொல்ல வில்லை. பொதுவாகத் தான் சொன்னேன். ஆகவே இது போன்ற பிரச்னைகளிலே நம்முடைய தமிழகத்திலே நமக்குள்ளே ஆயிரம் அபிப்பிராய பேதங்கள் இருக்கலாம். கருத்து வேறு பாடுகள் இருக்கலாம். இந்த கருத்துவேறுபாடுகள் நம்முடைய சமுதாயத்தை பாதிக்கிற பிரச்னைகளில் ஒதுக்கி வைத்துவிட்டு ஒன்றாக குரல் கொடுக்காவிட்டால் நம்முடைய எதிர்காலத்தை பல்வேறு அபாயங்கள் சூழ்ந்திருக்கிறது என்பதை சுட்டிகாட்டி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

***திரு. எம். செல்லமுத்து:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன்.

வறட்சி நிலைமைகள் பற்றி ஆளுநர் உரையில் விரிவாக பேசப்படுகிறது. தமிழகத்திலே வந்திருக்கக்கூடிய வறட்சி என்பது இயற்கையினால் மட்டும் வரவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். செயற்கையினால் தான் வந்திருக்கிறது. கொடுக்க சொல்லக் கூவியவர்கள் தண்ணீர் கொடுக்கவேண்டியவர்கள் கொடுக்கவில்லை; கேட்டு பெறவேண்டியவர்கள் பெறாததால் தான் இன்றையதினம் தமிழகத்தில் குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் மிகப்பெரிய வறட்சியின் நெருக்கடி உருவாக்கப்பட்டிருக்கிறது. காவிரி பாசனத்தில் உள்ள ஏறத்தாழ 73 லட்சம் ஏக்கர் நிலங்கள் இன்றைக்கு வறட்சி நிலவுகிற ஒரு சூழ்நிலையில் இருப்பதற்கு யார் காரணம்? இவைகளை போக்குவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதில் உரிய முறையில் நடவடிக்கை எடுக்காததன் காரணம் தான் முக்கியமானது. இதிலே அரசியல் இல்லையென்று சொல்ல முடியாது. அரசியல் விளையாட்டின் காரணமாக தஞ்சை மாவட்டத்தின் மக்கள் குறிப்பாக விவசாயிகள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். ஏறத்தாழ 100 கோடி ரூபாய்க்கு மேல் வறட்சியின் கொடுமையால், நட்ட பயிர்கள் காய்ந்து விட்டதன்

காரணமாக நஷ்டமாகியுள்ளது. போட்ட முதல் முழுவதும் இழந்து விவசாயிகள் அந்த மாவட்டத்தில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இன்றைக்கு உருவாகியிருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில்தான் தமிழ்நாடு முழுவதும் இன்றைக்கு நெல்விலை ஒருவிதமாக இருக்கிறபொழுது, குறிப்பாக, தமிழகம் முழுவதும் நெல்லுக்கு கூடுதலாக விலை கிடைக்கின்றபொழுது தஞ்சை மாவட்டத்திலே ரூ. 137—க்குக் குவிண்டால் நெல்லைக் கொள்முதல் செய்வோம் என்று அரசு அறிவித்திருக்கிறது. இது எப்படி இருக்கிறது என்று சொன்னால், ஏற்கனவே வாடி வதங்கிக் கொண்டிருக்கிற, துன்பங்களிலும் துயரங்களிலும் வாடிக் கொண்டிருக்கக்கூடிய தஞ்சை மாவட்ட மக்களைத் துன்புறித்துவதாக, பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் நெல்லை உற்பத்தி செய்தால், அதைத் தட்டிப் பறிக்கக்கூடிய ஒரு செயல்முறையாகத்தான் அரசு இந்த உத்தரவைப் பிறப்பித்திருக்கிறது. வழிப்பறிக்கு ஒப்பான சூழ்நிலையிலே ரூ. 137 ஒரு குவிண்டால் என்று சொல்லியிருப்பது சரியானதாக இல்லை. எனவேதான் தமிழகம் முழுவதும் சற்றுக் கூடுதலாக நெல் விற்றுக் கொண்டிருந்தாலும் அந்த விலையைக் கொடுக்கக்கூடிய வகையிலே, தஞ்சை மாவட்டத்திலே உற்பத்தியாகக்கூடிய நெல்லுக்குக் குவிண்டாலுக்கு ரூ. 150 கொடுத்து, நெல்லை அரசே கொள்முதல் செய்யவேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே உள்ள சுமார் 1 கோடி விவசாயத் தொழிலாளர் குடும்பங்கள் வேலை செய்யக்கூடிய ஏறத்தாழ 60 இலட்சம் பேர்கள், இந்த வறட்சியின் காரணமாக, இன்றைக்கு வேலையில்லாமல், மிகவும் பாதிக்கப்பட்டு, அவர்கள் வாழ்க்கையே ஒரு கேள்விக்குறியாக இருக்கக்கூடிய சூழ்நிலையிலே இன்றைக்கு இருக்கிறார்கள். வீட்டுக்கொருவருக்கு வேலை என்று இங்கே பிரமாதமாக பேசப்படுகிறது. ஆனால், கிராமப்புற மக்கள், ஏறத்தாழ $2\frac{1}{2}$ கோடி மக்கள் இன்றைக்கு வறுமையில் வாடுகிறார்கள் என்று அரசுத் தரப்பிலே புள்ளிவிவரம் கூறும்போது அந்த $2\frac{1}{2}$ கோடி மக்கள் வாழ் வழி என்ன என்று அரசு சரியாகச் சொல்லவில்லை.

இன்றைக்கு 10 இலட்சம் மோட்டார் பம்ப் செட்கள் கரன்ட் கிடைக்காமல் பாழாகிக் கொண்டிருக்கின்றன. அது மட்டுமல்லாமல், இந்த 10 இலட்சம் மோட்டார்களுக்கும் சரியாக கரன்ட் கொடுத்திருந்தால், 20 இலட்சம் ஏக்கர் நிலத்திலே சாகுபடி நடந்திருக்கும். காவிரி நிலத்திலே 20 இலட்சம் ஏக்கர் விளைத்திருக்கும். ஏறத்தாழ 50 இலட்சம் ஏக்கர் நிலங்களைச் சாகுபடி செய்ய முடிந்திருக்கும். இந்தச் சூழ்நிலை இயற்கையால் வந்தது என்பதை ஒத்துக்கொள்ள முடியாது. அது செயற்கையாக, குறிப்பாக 'இந்த அரசினுடைய அலட்சியப் போக்கால், மக்கள்மீது அக்கறையில்லாத அலட்சியப் போக்கால் நடந்திருக்கக்கூடிய ஒரு நிகழ்ச்சி என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், சென்ற அக்டோபர் 15—ஆம் தேதி இந்த விவரங்களையெல்லாம் எடுத்துக் காட்டி, மிகப்பெரிய வேலை நிறுத்தத்தை செய்தும்கூட, அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்காத காரணத்தால்தான் இன்றையதினம் அங்கே மிகப் பெரிய பாதிப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

18 நீர் மின் நிலையங்களிலே தண்ணீர் இல்லை. சுமார் 36,000 ஏரிகள் வறண்டு கிடக்கின்றன. 10 இலட்சம் மோட்டார்களுக்கு மின்சாரம் இல்லை. இதனால் மிகப்பெரிய நெருக்கடிகள் உருவாகி இருக்கின்றன. இன்றைக்கு என்ன செய்யவேண்டும்? உடனடியாக தமிழகத்தையும் தஞ்சை மாவட்டத்தையும் வறட்சி என்று அறிவித்து, நிவாரண வேலைகளைச் செய்யவேண்டும். இப்படி செய்வதற்குப் பதிலாக வறுமையில் வாடிக்கொண்டிருக்கிற விவசாயிகளது துயரத்தைப் துடைப்பதற்குப் பதிலாக, இன்றையதினம் சத்துணவுபற்றி பிரமாதமாகப் பேசப்படுகிறது. ஏதோ சத்துணவு இன்றைக்கு அளிக்கப்பட்டாலும், ஏற்கனவே, நீண்ட நெடுங்காலமாக, ஆட்சிகள் மாறி, மாறி வந்தாலும், ஆட்சிகள் மாறினாலும், அவர்களுடைய கொள்கைகள் காரணமாக, இன்றைக்கு கிராமப்புறத்திலும் நகரப்புறத்திலும் வாழக்கூடியவர்கள் குழந்தைகள் பள்ளிகளுக்குச் செல்லக்கூடிய குழந்தைகளுக்கு ஒருவேளை சோறு போட முடியாத சூழ்நிலை உருவாக்கப் பட்டிருந்தாலும் இன்றைக்கு வந்திருக்கக்கூடிய இந்தச் சத்துணவுத் திட்டம் என்பது ஒருவேளை சோறு போடுவதை நாங்கள் மறுக்கவில்லை. சோறு போடுவதை நாங்கள் வரவேற்றுத்தான் இருக்கிறோம். ஆனால், இந்தச் சத்துணவுத் திட்டத்தின் மூலம் பிரச்னைகள் முழுவதும் தீர்ந்து விடும் என்று கனவு காண்பதோ அதைப்பற்றி பிரமாதமாகப் பேசுவதோ, தமிழகத்து மக்களுக்கு உதவி செய்யாது என்று மட்டும் நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன்.

தமிழகத்திலே ஏற்பட்டிருக்கக்கூடிய வறட்சியைப் போக்குவதற்கு அரசாங்கம்உடனடியாகத் திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக தஞ்சை மாவட்டத்தையும் தமிழகத்தையும் வறட்சி என்று உடனடியாக அறிவித்து அதற்கான நிவாரண வேலைகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1–00)

வறட்சி நிவாரணப் பணிகளுக்கான வேலைகளை உடனே துவக்கி எல்லாப் பகுதிகளுக்கும் வேலைக்கு உணவுத் திட்டத்தை அமல்நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கனவே வேலைக்கு உணவுத் திட்டம் என்று இருந்தது. அதைத் தேசிய கிராமப்புறவேலைவாய்ப்புத் திட்டம் என்று மாற்றினார். பஞ்சாயத்துயூனியன்களிலோ அல்லது மாவட்ட ஆட்சித் தலைவ

ரிடத்திலே கேட்டால் பணம் இல்லை என்று சொல்கிறார்கள். அவைகளையெல்லாம் தீர்க்கும் முறையில் உணவுக்கு வேலைத் திட்டத்தை உடனடியாகத் துவங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நீர்ப்பாசனத்திற்கு உத்தரவாதம் ஏற்படுத்தும் வகையில் ஏரி, குளங்களை ஆழப்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வறட்சி நிவாரணப் பணியாக, விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை அளிக்கும் முறையில் ஆங்காங்குள்ள குளங்களையும், கண்மாய்களையும், ஏரிகளையும் ஆழப்படுத்தும் திட்டத்தை உடனடியாகத் துவக்குவதற்கான பணத்தை ஒதுக்கி அதற்கான வேலைகளைத் துவக்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது கோடை காலம் வந்து விட்டது. ஏற்கனவே வறட்சி நிலவும் நேரத்தில், இப்பொழுது குடி தண்ணீர் கூடக் கிடைக்காத பல அவல நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. அவர்களுக்குக் குடிதண்ணீர் கிடைக்கக்கூடிய வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மனிதனுக்கு மட்டும்தான் வறட்சி என்பது அல்ல. இன்றைக்குக் கால்நடைகளுக்கும் கூட வறட்சி ஏற்பட்டிருக்கிறது. அந்த கால்நடைகளுக்குத் தீவனம் வழங்கும் காரியத்தை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வறட்சியின் காரணமாக விவசாயிகள் உற்பத்தி செய்யும் பயிர்கள் முழுவதும் வீணாகி மிகப்பெரிய தொல்லைகளுக்கு ஆளாகும் நிலைமை இருக்கிறது. இந்த நேரத்தில் அவர்களுக்கு விதிக்கப்படும் தண்ணீர் வரி, நில வரி போன்ற பல்வேறு வரிகளை ரத்து செய்து அவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் நடவடிக்கைகளை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குத்தகை விவசாயிகள் பல்வேறு அறக்கட்டளைகளுக்குச் சொந்தமான நிலங்களிலும், கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களிலும் தனியார்க்கு சொந்தமான நிலங்களிலும் சாகுபடி செய்து வருகிறார்கள். இப்பொழுது ரெவின்யூ கோர்ட் திறந்திருக்கிறது. அங்கு மனுக்கள் கொடுத்து விட்டால் குத்தகை கொடுக்கிறாயா வெளியே போகிறாயா என்று கேட்டு பல்லாயிரக் கணக்கான குத்தகை விவசாயிகளை வெளியேற்றும் ஒரு சூழ்நிலை இருக்கிறது. அவர்களுக்கு உடனடியாக நிவாரணம் அளிக்கும் வகையில் குத்தகைதாரர்களை நிலத்திலிருந்து வெளியேற்றாமல் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



நடப்பு ஆண்டுக்கான குத்தகை முழுவதையும் ரத்து செய்ய வேண்டும். ரெவின்யூ கோர்ட்டுகளை இப்பொழுது திறந்திருப்பது குத்தகை விவசாயிகளைப் பாதிக்கும் நடவடிக்கையாக இருக்கிறது. விவசாயிகளுக்கு உடனடியாகத் தீர்வு காணும் வகையில் ரெவின்யூ கோர்ட்டுகளை மூட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத் தொழிலாளர்களின் கூலிகளை மறு ஆய்வு செய்வதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அது தமிழ்நாடு முழுவதும் சென்று விசாரணை நடத்தியிருக்கிறது. அந்த அறிக்கையை உடனடியாக அவையிலே வைத்து அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்குச் சமூக ரீதியான பாதுகாப்பு கொடுப்பதற்கான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இருபது அம்சத் திட்டத்தைப் பற்றி இங்கே பேசினார்கள். கவர்னர் உரையில்கூட இருபது அம்ச திட்டத்தை அமல் நடத்துவதில் முதலமைச்சரவர்கள் கவனமாக இருப்பதாகச் சொன்னார்கள். இருபது அம்ச திட்டமானது 1975-76-ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டு, தமிழகத்திலே நிறைவேற்றப்பட்டுக் கொண்டு வருகிறது அதிலே என்ன இருக்கிறது என்பது எங்களுக்கெல்லாம் புரியவே இல்லை. அதனால் நம் நாட்டின் வறுமை போய்விட்டதா?

இருபது அம்சத் திட்டத்தில் நிலச்சீர்திருத்தம் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்த அவையிலே நிறைவேற்றப்பட்ட சட்டம் என்ன ஆயிற்று என்று புரியவில்லை. தஞ்சை மாவட்டத்திலே பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பினாமியாகவும், டிரஸ்ட் என்று ஏற்படுத்தியவர்களிடமும் இருந்து கொண்டு அதே நிலப்பிரபுகளுக்கு சொந்தமாக இருக்கும் நிலைமையிருக்கிறதே தவிர இந்தச் சட்டத்தின் மூலம் நிலம் எடுக்கப்படவில்லை. இருக்கக்கூடிய சட்டத்தை விரைவுபடுத்தும் நடவடிக்கை என்று இருக்கிறதே தவிர, உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்று ஆக்கப்பட என்ன நடவடிக்கை இருக்கிறது? வறுமை போக வேண்டுமானால், கோடிக்கணக்கான மக்களுக்கு வேலை அளிக்க வேண்டுமானால், நிலச் சீர்திருத்தச் சட்டத்தை விரைவாக கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே. தமிழக ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசுகின்ற நல்ல வாய்ப்பை அளித்தமைக்காக நான் என்னுடைய நன்றியைத்

தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன், இந்த ஆளுநர் உரை பல்வேறு நல்ல அம்சங்களைக் கொண்டிருந்தாலும் முதலாவதாக தமிழகத்திலே சத்துணவுத் திட்டத்தை நிறைவேற்றி, தமிழகத்திலேயிருக்கின்ற இலட்சோபலட்சம் ஏழை மக்களின் குழந்தைகளுக்கு நல்வாழ்வு, ஊட்டமான வாழ்வு திடமான வாழ்வு கிடைக்கும் வகையில் புரட்சித் தலைவரவர்கள் செய்திருக்கும் திட்டத்தைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதே நேரத்தில் அந்த மன்றத்திலே கடந்த 4 தினங்களாக காவிரி நீர் பிரச்சினை பற்றிப் பேசப்பட்டு வருகிறது. காவிரி நீர் பிரச்சினையைப் பொறுத்த வரையில் அது யாரால் தடைபட்டு இருக்கிறது என்பதை எண்ணிப்பார்க்கவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். 1924 ஆம் ஆண்டு காவிரி பங்கீடு பற்றி ஒப்பந்தம் ஏற்பட்டது 1974 ஆம் ஆண்டு அந்த ஒப்பந்தம் முடிந்துவிட்டாலும், அந்த ஒப்பந்தத்திலே வரவேண்டிய பிரகாரம் அந்த ஒப்பந்தம் மீண்டும் புதுப்பிக்கப்படவேண்டும் என்பதுதான் அதிலே கண்டிருக்கிறது. ஆனால் அப்படி புதுப்பிக்கப்படவில்லை. அது யாருடைய குற்றம். மத்தியிலே ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற மைய அரசு அன்றையதினம் மாநிலங்களிலே ஏற்படுகின்ற பிரச்சினையைத் தீர்த்துவைக்கவேண்டியது அதனுடைய பொறுப்பாகும். எடுத்ததற்கெல்லாம் மாநிலங்களுடைய அதிகாரங்களை எடுத்துக்கொள்கிறேன், மத்திய அரசு இங்கே கல்வித் துறையா அதை நாங்கள் எடுத்துக்கொள்கிறோம், சேல்ஸ்டாக்ஸா அதை நாங்களே எடுத்துக் கொள்கிறோம் என்று மாநிலங்களிலே இருக்கின்ற எல்லா அதிகாரங்களையும் எடுத்துக் கொள்வதிலே குறியாக இருக்கின்ற மைய அரசு 1974-லே இருந்து 1983 வரையில் சற்றேறத்தாழ 9 ஆண்டுகள் மைய அரசு மவுனம் சாதிக்கின்ற காரணம் என்ன? மத்திய அரசு தலையிட்டுத் தீர்வு காண்பதற்கு வழி வகுக்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்பவத எண்ணிப்பார்க்க வேண்டிய கட்டாயத்திலே இருக்கிறோம்.

அண்டை மாநிலமான கர்நாடகத்திலே இந்திரா காங்கிரஸ் கடந்த 9 ஆண்டுகாலமாக ஆட்சியிலே இருந்திருக்கின்றது. மைய அரசு தலையிட்டிருந்தால் அதைத் தீர்த்து வைத்திருக்க முடியும் காவிரி பிரச்சினை ஏற்பட்டிருப்பதற்குக் காரணமே மைய அரசு தான் என்று குற்றம் சாட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைய தினம் காவிரி நீர்ப்பிரச்னையைப் பொறுத்தவரையில் நாம் அத்தனை பேரும் ஒருங்கிணைந்து செயலாற்றவேண்டும் என்பதிலே யாருக்கும் சந்தேகம் இல்லை,

அதேபோல தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையில்இந்த மாநிலங்களுக்கு வந்த தொழிற்சாலைகள் எல்லாம் வெளி மாநிலங்களுக்குச் சென்று விட்டது என்று சில நாங்களாகவே இங்கே நாம் பேசிக்கொண்டு இருக்கிறோம். எனக்கு முன்னாலே



இங்கே பேசிய இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் தேவை இருந்தால் கேளுங்கள் கொடுக்கப்படும், இங்கே தேவையில்லை அதனாலேதான் கொடுக்கவில்லை என்ற பொருள்பட பேசினார். தேவையில்லை என்று கூறுகின்றவர்கள்.

......

திருமதி டி. யசோதா : மாற்றுத் தலைவர் அவர்களே, என்னுடைய பெயரைக் குறிப்பிட்டு சொன்னதாலே சொல்கிறேன். நான் தேவையில்லை என்று சொல்லவில்லை. தொழில் துறையைப் பொறுத்தமட்டிலும் போராடிப் பெறவேண்டும் என்று தான் சொன்னேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : போராடவேண்டும் என்றால் இன்று மைய அரசு போகிற போக்கைப் பார்த்தால் போராடிக் கொண்டேதான் இருக்கவேண்டும். வேறு ஒன்றும் செய்ய முடியாது. போராடிக் கொண்டேதான் இருக்கவேண்டும். மாற்றாந்தாய் மனப்பான்மையில் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1967 ஆம் ஆண்டிலே அங்கே மைய அரசுக்கு மாற்று அரசாக மைய அரசிலிருந்து மாறுபட்ட அரசாக தமிழகத்திலே ஏற்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை தமிழகத்திலே மைய அரசு எந்தத் தொழிற்சாலையை ஒதுக்கியிருக்கிறது. அதேபோல மைய அரசினுடைய ஆளுங்கட்சியைச் சேர்ந்த மாநிலங்களில் எந்தஅளவுக்கு தொழிற்சாலைகளைத் தொடங்கி இருக்கிறார்கள் என்ற கணக்கைப் போட்டுப் பார்த்தால், மைய அரசு எந்த அளவுக்கு மாற்றாந்தாய் மனப்பான்மையில் செயல்பட்டிருக்கிறது என்பதை ஒத்துக் கொள்வீர்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்து மின்திட்டத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். மைய அரசு எந்த அளவுக்கு இதிலே அலட்சியமாக இருக்கின்றது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். அருகாமையிலே இருக்கின்ற கல்பாக்கம் அனல் மின் நிலையத்தை 6 ஆண்டுகளிலே முடிக்கவேண்டும் என்று அன்றையதினம் இருந்த மறைந்த அணுசக்தி வல்லுநர் பாபா அவர்கள் மிகத் தெளிவாகக் கூறியிருக்கின்றார்கள். ஆனால் 16 ஆண்டுகள் ஆகியும் இன்னும் முடிக்காத நிலை இருக்கின்றது. இப்படிப்பட்ட போக்குக்கு யார் காரணம்? ஆகவே இதற்கும் மத்திய அரசுதான் காரணம். மாநிலங்களில் மின் தட்டுப்பாடு ஏற்படுவதற்குக் காரணம், நாம் கொடுக்கும் திட்டங்களை எல்லாம் அவர்கள் காலம் தள்ளிப் போடுகிறார்கள். அலட்சியம் செய்கிறார்கள் அல்லது புறக்கணிக்கிறார்கள், என்பதுதான் இதற்குக் காரணம்.

அதே நேரத்தில் மொழிப் பிரச்சினையைப் பற்றி நிறைய உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். என்னுடைய கருத்தை நான் எடுத்து வைக்க விரும்புகிறேன்.

தேடி கிடைத்தற்கரிய தேன் தமிழை

பாடிக் களித்துப் பாமாலை சூட்டி

ஏத்தும் என் பெரும் தமிழை இழந்து விட்டு

சோற்றாலடித்தப் பிண்டங்களாய் நாங்கள் வாழ விரும்பவில்லை, என்பதைப்போல, துப்பாக்கித் தோட்டாவிற்கு எத்தனை இன்னுயிர்களை நாம் தமிழகத்திலே கொடுத்திருக்கிறோம்.

(பிற்பகல் 1–10)

1965–லே நடைபெற்ற போராட்டத்திலே எத்தனை உயிர்களை நாம் பறிகொடுத்திருக்கிறோம். அப்படிப்பட்ட தமிழைப் போற்றி பாதுகாக்க வேண்டியது நம்முடைய கடமையாகும். ஆனால் மத்திய அரசாங்கத்தின் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்றவர்கள் எப்படியாவது இந்தியைப் புகுத்தவேண்டுமென்ற எண்ணத்தோடு செயல்பட்டு வருவதை பல்வேறு துறைகளில் காண்கிறோம். எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் எல்லாம் மிகத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ரயில்வேத்துறையில் இந்தியைப் படித்தால்தான் பதவி உயர்வு கொடுக்கப்படும் என்ற ஒரு ஆணையை பிறப்பித்து இருப்பதாகச் சொல்கிறார்கள். அதைப்போலவே தொலைக்காட்சி நிலையத்திலே, தொலைக்காட்சி தொடங்கிய உடனே அதை தூர்தர்ஷன் கேந்திரா என்று இந்தியிலேதான் போடுகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. அதேபோல் இன்றையதினம் தொலைக்காட்சியிலே ஞாயிற்றுக்கிழமை அன்று தமிழ்ப்படம் காட்டப்பட்டு வந்தது. ஆனால் தமிழ்ப்படம் காட்டப்படுவதை நிறுத்திவிட்டு, அதை சனிக்கிழமை அன்று காட்டுகின்றார்கள். ஆனால் இந்திப்படம் ஞாயிற்றுக்கிழமை அன்று காட்டப்படுகிறது. இந்த மாநிலத்திலே வாழுகின்ற மக்கள் தங்களுடைய தாய் மொழிப் படத்தை ஓய்வாக இருக்கின்ற ஞாயிற்றுக்கிழமைகளிலே பார்க்கமுடியாத அளவிற்கு சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். சனிக்கிழமை போடுகின்ற அந்த நாட்களிலே அலுவலகத்தில் வேலை செய்கின்ற மகளிரும், அலுவலகத்திலே வேலை செய்கின்ற ஊழியர்களும், மற்றவர்களும் எந்த அளவுக்கு அவதியுற்றுச் சென்று அந்தப் படத்தைப் பார்க்க வேண்டுமென்ற சூழ்நிலை இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். அந்த அளவுக்கு இங்கே வாழ்கின்ற மக்களுக்கு ஓய்வு இருக்கின்ற நாட்களிலே நம்முடைய தாய் மொழிப்படத்தைப் பார்க்கக்கூடிய வழி இல்லாத நமக்கு மத்திய அரசு தன்னுடைய இந்தி வெறியை,





இந்தி மொழியைத் திணிக்கின்ற வெறியை நடத்திக்கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட சூழ்நிலை மாறியாகவேண்டும். நம்முடைய மொழி உணர்வை மதிக்கவேண்டும். அப்போதுதான் வேற்றுமையிலே ஒற்றுமை என்பதை நாம் காணமுடியும் என்பதை தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். கலர் டி. வி. காட்டுவதிலேகூட அதேபோல இன்றையதினம் டெல்லி, பம்பாய், கல்கத்தா, அமிர்தசரஸ் என்ற 4 மாநிலங்களில்தான் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதிலேகூட தென் மாநிலங்கள் புறக்கணிக்கப்படுகின்றன. இந்த அளவுக்கு இன்றையதினம் மத்திய ஆட்சிப் பொறுப்பிலே இருப்பவர்கள் மாற்றாந்தாய் மனப்பான்மையோடு அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள் என்பதை திட்டவட்டமாக எடுத்துக்கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் என்னுடைய தொகுதியிலே பல்வேறு பிரச்னைகள் இருக்கின்றன. இருந்தாலும் ஓரிரு பிரச்னைகளை எடுத்து வைக்க கடமைப்பட்டிருக்கிறேன். நீண்ட நெடுங்காலமாக சோத்தார் நாயக்கன் கோம்பை என்ற அந்தக் கோம்பைத் திட்டம் அங்கே ஒரு சிறிய அணை கட்டவேண்டிய திட்டத்தை இங்கே பலமுறை வலியுறுத்தி இருக்கிறேன். அதை மீண்டும் வற்புறுத்தி அந்த திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் சித்தன்கோட்டையிலே அரசு மருத்துவமனை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்ற கோரிக்கையை நான் இரண்டு முறை எடுத்து வைத்திருக்கிறேன். அந்த திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்கவேண்டுமென்று நான் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்தி வளர்ச்சிக்காக அங்கே மத்திய ஆட்சிப் பொறுப்பிலே உள்ளவர்கள் பல கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அதைப்போல 6 ஆயிரம் பேர்கள் பேசுகின்ற சமஸ்கிருதம் என்ற மொழியின் வளர்ச்சிக்காக பல கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட மத்திய அரசு மாநிலங்களினுடைய மொழியை, நம்முடைய தாய் மொழியை, அதனுடைய வளர்ச்சிக்கு நிதிஒதுக்கியிருக்கிறார்களா என்பதையும் நம்முடைய காங்கிரஸ் நண்பர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். அவர்களது உள்ளத்திலே அந்த உணர்வு இருக்கும். நம்முடைய மொழி வளரவேண்டும், இந்தி புகுத்தப்படுவதை தடுத்து நிறுத்தவேண்டும் என்ற அந்த உணர்வு இருக்கும். இருந்தாலும் தாங்கள் சார்ந்திருக்கின்ற இயக்கத்தின் கொள்கைக்காக, இந்தியைப் பரப்பவேண்டும், இந்தி மொழியைத் திணிக்க வேண்டும் என்ற அந்த கொள்கைக்கு ஒத்துப்போகின்ற மனப்பாங்கைத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. செ. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களை தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். இந்த உரையின் மூலமாக மத்திய அரசு மாநில அரசின் உரிமைகளையும், கோரிக்கைகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டு காலத்தைக் கவனித்து உதவி செய்யவில்லை என்று தெரிகிறது. சட்டப்பிரகாரம் மக்களைக் காப்பாற்றுவதற்கும், உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மத்திய மாநில அரசுகளுக்குச் சமமான பங்கு உண்டு. இன்னும் சொல்லப்போனால் மாநில அரசைக் காட்டிலும் மத்திய அரசுக்குத்தான் அதிக பொறுப்பு உண்டு என்பது தெளிவான விஷயம். அப்படி இருக்க, நூற்றாண்டுகளுக்கு முன்பு இந்திய அரசு லண்டன் பார்லி மெண்டின்கீழ் இருந்ததைப் போல நினைத்துக் கொண்டு வறட்சி நிலைமை எங்களுக்குத் தெரியாது. காலகாலத்திலே தகவல் கொடுக்கப்படவில்லை, நிவாரணத்திற்கு 150 கோடி கேட்டால், 49 கோடி கொடுப்பது, அகல ரயில்பாதை கேட்டால் தட்டிக்கழிப்பது, கனரகத் தொழிற்சாலைகள் கேட்டால் பாராமுகமாக இருப்பது, போட்டோ பிலிம் தொழிற்சாலையை விரிவு படுத்தவேண்டுமென்று கேட்டால் வேறு திசையிலே போவது, என்.ஆர்.இ.பி. திட்டங்களுக்கு சமயத்திலே அரிசி கேட்டால் இது இப்போது கிடையாது வேறு ஒரு திட்டத்திற்கு பார்த்துக்கொள்வோம் என்று தாமதப்படுத்துவது, காடுகளை நிர்வகிப்பது மாநிலத்தில் இருக்கிற காடுகளை யாரிடத்திலும் கேட்காமல் எடுத்துக்கொள்வது, நிலக்கரி கொண்டு வருவதற்கு கப்பல் வாங்கவேண்டுமென்று கேட்டால், முடியாது என்று சொல்வது, காவிரி நீர் கேட்டால் கவனிக்காமல் இருந்து விடுவது என்று இப்படியாக மத்திய அரசு ஆட்சி நடத்துவது சரியல்ல. இந்த நிலைமை நீடித்தால் நிச்சயமாக எதிர்காலத்தில் பெரிய குளம் மட்டுமல்ல, திருச்செந்தூரும் உங்கள் காலை வாரிவிடும் என்பதை உங்களுக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக சத்துணவுத் திட்டம் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறவிரும்புகிறேன். சத்துணவுத் திட்டத்தின்மூலம் குழந்தைகள் நல நிலையங்களில் 23 லட்சம் பேர்களும், கல்வி நிலையங்களில் 42 லட்சம் குழந்தைகளும் நல்ல சத்துணவு சாப்பிடுவதாகச் சொல்லப்படுகிறது. இதனால் மொத்தம் 1,75,000 பேர்களுக்கு வேலை கொடுப்பதாகவும் சொல்லப் படுகிறது. இந்த நிலைமையில் 2.63 லட்சம் மாணவர்கள் புதிதாகப் பள்ளிகளுக்கு வந்துள்ளனர் என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். இவ்வளவு பெரிய சத்துணவுத் திட்டத்திற்கு ரூ. 112 கோடி செலவு செய்த பின்னால்—இன்று கல்வி வளர்ச்சியில் தமிழ் நாடு வளரவில்லை என்பதையும்—கிராமப்பகுதிகளில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் பள்ளிக்கூடத்திற்கு அதிகமாக வருகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நெடுங்காலமாக நகரங்களைப்



போல் கிராமங்களில் உள்ள மாணவர்கள் பள்ளிக்கு வருவது இல்லை என்ற குறை இருந்தது. ஆனால் அந்த நிலைமை மாறி தற்போது கிராமங்களில் உள்ள பள்ளிகளுக்கு குழந்தைகள் வர ஆரம்பித்து இருக்கிறார்கள் என்பது வரவேற்கத்தக்கது.

இந்த சத்துணவுத் திட்டத்தில் பல குறைபாடுகள் இன்று நடந்து கொண்டு இருக்கின்றன. எங்கே பார்த்தாலும் அரிசி திருடுவது, பருப்பு திருடுவது, சாமான்கள் திருடுவது போன்ற களவுகள் இன்று தொடர்ச்சியாக வந்து கொண்டு இருக்கின்றன. என்னுடைய தொகுதியில் நானே இன்ஸ்பெக்ட் செய்கிறநேரத்தில் ஒரு மூட்டை அரிசி கடத்தப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. இன்று இதுபோன்ற குறைகள் சத்துணவுத் திட்டம் அமுல்படுத்துவதில் இருக்கின்றன. அரிசி மட்டும் போட்டுவிட்டு மற்ற சாமான்களை எடுத்துக்கொண்டு போய்விடுகிறார்கள். இந்த நிலைமை மாற்றப்பட்டாகவேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு வறட்சி நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. தென்மேற்குப் பருவ மழை தவறிவிட்டது. வடகிழக்கு பருவ மழையும் தவறிவிட்டது. இந்த நிலைமையில் நஞ்சைப் பயிர்கள், புஞ்சைப் பயிர்கள் முழுவதும் அழிந்துவிட்டன. தமிழ் நாடு முழுவதும் இன்றைக்குத் தத்தளித்துக்கொண்டு இருக்கிறது. ஒரு மாதத்திற்குப் போதுமான ஸ்டாக் கூட இன்றைக்கு இல்லை. கடந்த 8 மாத காலமாக மத்திய அரசு அரிசி கொடுக்கவில்லை. இப்படியாக மனித உயிர்களோடு மத்திய அரசு விளையாடிக் கொண்டு இருக்கிறது. இந்த நிலையில் கர்நாடக மாநிலமும் கழுத்தை அறுக்க நினைக்கிறது. இப்படியே வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தால் எதிர்காலத்தில் பெரிய ஆபத்தாக முடியும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

தமிழக அரசு வறட்சி நிவாரணப்பணிகளுக்காக 190 கோடி அளவிற்கு திட்டம் தீட்டி, மத்திய அரசிடம் உதவி கோரியுள்ளது. நிச்சயமாக இது சரியான புள்ளிவிவரத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டதல்ல என்று நினைக்கிறேன். தமிழகத்தில் உள்ள வறட்சி நிலைமையை ஓரளவிற்குச் சமாளிக்க குறைந்தது 250 கோடி ரூபாய் தேவைப்படும். ஆகவே, நல்லமுறையில் புள்ளிவிவரங்களைச் சேகரித்து, அதிகமான நிதியைப் பெறுவதற்கு மாநில அரசு முன்வரவேண்டும்.

வறட்சி நிவாரணப் பணிகள் உடனடியாகத் துவங்கப்பட வேண்டும். மாவட்டங்களில் இருந்து சரியான புள்ளிவிவரங்கள் இன்னும் சேகரிக்கப்படவில்லை என்று நினைக்கிறேன். ஆகவே, மீண்டும் நல்ல முறையில் புள்ளிவிவரங்களைச் சேகரிக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கண்மாய்களில் நீர்பிடிப்புப் பகுதிகளை ஆழமாக்கவேண்டும். எப்.டி.எல். எடுத்து கழுங்குகளும் தாம்போகிகளும் கட்டப்பட்டதால் தண்ணீர் அதிகம் கட்டுவதற்கு ஆழப்படுத்தவேண்டும். வரி வசூல் செய்வதைத் தள்ளுபடி செய்யவேண்டும். இந்த ஆண்டுக்கு வரி வஜா செய்வதுடன், கடன்களுக்கான வட்டி போடுவதையும் நிறுத்தவேண்டும். எங்கே பார்த்தாலும் இன்றைக்கு தட்டு முட்டுச்சாமான்களை எடுப்பதும், ஜப்தி நடவடிக்கைகள் செய்வதும் நடந்து கொண்டு இருக்கிறது. அதையும் நிறுத்தவேண்டும்.

விவசாயிகளின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்காக உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டது. ஆனால் அந்த உயர்மட்டக் குழு இன்று படுத்து தூங்கிக்கொண்டு இருக்கிறது. உயர்மட்டக் குழுவின் ஆலோசனைகள் எல்லாம் இன்றைக்கு குப்பைத் தொட்டியில் போடப்பட்டு இருக்கின்றன. ஆகவே, உயர்மட்டக் குழுவின் பரிந்துரைகளை அரசு ஏற்றுக்கொண்டு, விவசாயிகளுக்கு நன்மை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, மாட்டுத் தீவனம் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. மாட்டுத் தீவனம் எங்கே பார்த்தாலும் இல்லாத நிலைமை இருக்கிறது. இராமநாதபுரம் ஜில்லா போன்ற பெரிய மாவட்டங்களில் இருக்கும் மக்கள் மட்டுமல்ல, ஆடுகளும் மாடுகளும் கூட வெளியிடங்களுக்குச் சென்று இன்று தீவனம் தேடவேண்டிய நிலைமை இருக்கிறது. முன்பெல்லாம் பஞ்சம் வந்தால தஞ்சைக்கும், மதுரைக்கும் பிழைக்க போய் விடுவார்கள். இப்போதுள்ள நிலைமையில் தஞ்சைக்கும் போக முடியாது, மதுரைக்கும் போகமுடியாது. அங்கேயே இருந்து கொண்டு அவதிப்பட்டு மாளவேண்டிய நிலைமைதான். இராமநாதபுரம் ஜில்லாவில் இருந்து கொண்டு இருக்கிறது. ஆகவே, வறட்சியைத் தாங்கக்கூடிய அளவிற்குப் பணிகளை அரசாங்கம் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-20)

அது மட்டுமல்ல, எதிர்காலத்தில் மழை பெய்தால் உடனடியாக விவசாயம் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். குறிப்பாக தண்ணீர் பிரச்சினையைக் கருத்திற்கொண்டு குறுகிய கால விதைகளை, வறட்சியைத் தாங்கக்கூடிய விதைகளை விவசாயிகளுக்கு வழங்க தயார் நிலையில் இருக்க வேண்டும்.

வைகை கால்வாய்கள் நல்லமுறையில் சீர்செய்யப்பட வேண்டும். இப்போது மழைக்காலங்களில் தண்ணீர் வரும்போது வீணாக கடலுக்குப் போகிறது. இதுபற்றி பலமுறை எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது, ஆனாலும் இன்றுவரையில் எவ்வுதை



கால்வாய் சீர் செய்யப்படவில்லை. ஐந்தாண்டு காலமாக உடைந்துபோன கால்வாய்கள் சீர்செய்யப்படாமல் அப்படியே கிடக்கின்றன. அதைப்போன்று கண்மாய்களும் செப்பனிடப்படவில்லை. 7300 காண்மாய்கள் இராமநாதபுரம் ஜில்லாவில் உள்ளன. கிட்டத்தட்ட 300-க்கு மேற்பட்ட காண்மாய்கள் உடைந்த நிலையிலே கிடக்கின்றன. சீர்செய்யும் வேலைகள் நடக்கவில்லை. பல கோடி ரூபாய் அபிவிருத்தித் திட்டங்களுக்காகச் செலவிடப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. ஒரு சில இடங்களில் வேலை நடைபெற்றாலும், ஒதுக்கப்பட்ட பணத்தில் 50 சதவீதம் கான்ட்ராக்டர் மடியிலே போய்விடுகிறது அல்லது வேறு ஒரு வகையில் எங்கோ போய்விடுகிறது. கிட்டத்தட்ட 40 அல்லது 45 சதவீதம் தான் பணிக்கு செலவிடப்படுகிறது. இதை எல்லாம் கவனித்து தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையென்றால் அபிவிருத்தித் திட்டங்கள் பாழாகிவிடும்.

மாநிலத்தில் இன்னும் நிரந்தர குடிதண்ணீருக்கு ஏற்பாடு செய்யப்படவில்லை. இராமநாதபுரம் ஜில்லாவில் கிராமங்களில் போடப்பட்ட திட்டங்கள் நிறைவேறவில்லை. அடித்த குழாய்கள் அப்படியே விடப்பட்டுள்ளன. சிறு ரிப்பேர்கள் கூட செய்யத் தவறியதால் உபயோகமில்லாமல் கிடக்கின்றன. பூமிக்கடியில் திருவாடானை தாலுகாவில் உள்ள நல்ல தண்ணீரை உபயோகிக்க வக்கில்லாமல் குடிநீர்ப் பஞ்சம் உண்டாக்கப்படுகிறது. பூமிக்கடியில் நல்ல தண்ணீர் இருக்கிறது. கடற்கரைப் பகுதிக்கு நல்ல தண்ணீர் கொடுக்க இதைப் பயன்படுத்திக்கொள்ளலாம். அரசாங்கத்தின் கையாலாகாத தனத்தால் சுதந்திரம் பெற்று 35 ஆண்டுகள் ஆன பின்னாலும் குடிநீருக்குப் போராட வேண்டியிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. மின்சாரத்தைப் பொறுத்தவரையில் அரசாங்கம் மெத்தனமாக இருந்த காரணத்தால்தான் இந்த அளவுக்கு கடுமையான ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தற்போது எரி எண்ணெய் ஊற்றி, அதன் மூலம் மின்சாரத்தை உற்பத்திச் செய்து விநியோகிப்பதாக பத்திரிகைகளில் பார்க்கிறோம். இந்த எரி எண்ணெய்யை காலாகாலத்தில், முன்னாடியே பயன்படுத்தி இருந்தால், அதன் மூலம் உற்பத்திச் செய்திருந்தால் இரண்டு மாதங்களுக்கு முன்னாலேயே ஓரளவு சரிசெய்திருக்க முடியும். காலாகாலத்தில் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியதால் இந்த இக்கட்டான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கடந்த இரண்டு வாரமாக நிலைமை ஓரளவு சீராகி வருகிறது.

தூத்துக்குடியில் 210 மெகாவாட் யூனிட் ஒன்று சரியாக இயங்கவில்லை. அதை சீர்செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும். நெய்வேலியில் மேலும் ஒரு யூனிட் உடனடியாகத் தொடங்க ஏற்பாடு செய்யவேண்டும்.

கல்பாக்கம் அணு மின் நிலையத்தைப் பற்றிய தகவலே இல்லை. அந்தத் திட்டத்தை 1983-லேயே தொடங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

எதிர்காலத்திலே இப்படிப்பட்ட நெருக்கடியை சமாளிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் 100 மெகாவாட் மின்சாரம் உற்பத்திச் செய்யக்கூடிய அனல் மின் நிலையங்களை அமைக்க வேண்டும். அப்படிச் செய்தால் அந்தந்த மாவட்டத்தின் தேவையை அது பூர்த்தி செய்துகொள்ளும். எல்லா இடங்களிலும் தொழில் அபிவிருத்தி செய்துகொள்ள முடியும்; விவசாய அபிவிருத்திக்கும் அது பயனுள்ளதாக இருக்கும். மின்சார வெட்டு வரும்போது அது பேருதவியாக இருக்கும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைநகர் சம்பந்தமாக—இப்போது இருப்பதிலேயே பெரிய மாவட்டம் இராமநாதபுரம் மாவட்டம். 1970-லேயே அந்த மாவட்டத்தைப் பிரிக்க வேண்டுமென்று பிரப்போசல்ஸ் அனுப்பப்பட்டன. மாவட்டத்தின் தலைமையகம் எங்கே அமைக்கப்படுவது என்பதில் ஏற்பட்ட சிக்கல் இன்னும் தீர்ந்தபாடில்லை. 1977-ல் புதிய அரசு வந்தவுடன் முதல் வரவு செலவுத் திட்டத்திலேயே அதுபற்றி பேசப்பட்டது. இருந்தாலும் அது இதுவரையிலே ஊறுகாய் பானையில் போடப்பட்டுவிட்டது. 1982-83 ஆம் ஆண்டு பட்ஜெட்டில் மீண்டும் தலைகாட்டியது. ஆனால் ஒரு வேலையும் நடக்கவில்லை. இராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டாகவோ, மூன்றாகவோ பிரித்து, சிறு சிறு மாவட்டமாக்கி, தொழில் வளர்ச்சியை மையமாக்கி வளர்ச்சிப் பணிகளுக்கும் நிர்வாக வசதிக்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன். சேதுசமுத்திரம் திட்டத்தைப்பற்றி பல தடவை சொல்லப்பட்டுவிட்டது. போன பட்ஜெட்டிலும் அது வந்தது. அப்போது அதுபற்றி ஒரு மணி நேர விவாதம் கூட நடந்தது. ஆனால் இந்த ஆளுநர் உரையிலே அதுபற்றி பேச்சு மூச்சு இல்லாத நிலை இருக்கிறது. சேதுசமுத்திரம் திட்டத்தை உடனடியாகக் கொண்டுவர ஏற்பாடு செய்யவேண்டும். அதனால் தமிழ் நாட்டுக்கு பெரும் நன்மை உண்டு. குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தின் முன்னேற்றத்திற்கு ஒரு முக்கியமான திட்டமாகும். அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கிழக்குக் கடற்கரை ரோடு ஒரு முக்கியமான பணி. அந்தத் திட்டத்திற்கு 300 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது; இந்த ஆண்டுதான் அது சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு இன்னும் வேலை தொடங்கப்படவில்லை. 300 இலட்சம் ரூபாய்



சாங்ஷன் ஆகி 3, 4 மாதங்கள் ஆகிவிட்டன, வேலை நடக்கவில்லை. உடனடியாக அந்த வேலையைத் தொடங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. ஏ. டி. குலசேகர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரையின் மீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே என்னுடைய கருத்துக்களை கூற விழைகின்றேன். இந்த ஆளுநர் உரை வழக்கம்போல ஏதோ சடங்குகளுக்காகவும் சாஸ்திரத்திற்காகவும் தரப்பட்டிருக்கிறதே யல்லாமல், எந்தச் செயல் திறமையையும் காட்டி மக்கள் பிரச்னைகளுக்கு தீர்வு காணவேண்டும் என்ற முனைப்பு உள்ள ஒரு அரசின் சாதனைகளை அளிக்கின்ற ஒரு அறிக்கையாக இங்கேயில்லை. மொத்தத்தில் இந்த அறிக்கை மக்கள் பிரச்னையில் அரசாங்கத்தின் ஈடுபாடற்ற தன்மையை படம் பிடித்துக் காட்டுவதாகவே இருக்கிறது.

குழந்தைகளுக்கு உணவு வழங்குவதில் இரு வேறு கருத்துகளுக்கு இடம் இருக்க முடியாது. ஆனால் இந்த ஒன்று மட்டுமே அரசாங்கத்தின் செயல் திறமைக்கு சான்றாகவோ, மாநிலத்தின் வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாகவோ அமைந்துவிட முடியாது. சத்துணவு திட்டத்தின் மூலம் ஜனவரி 31க்குள் 35,000 பேர்களுக்கு வேலை கொடுப்பதாக முதலமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இந்த வேலை கொடுப்பது பத்தாயிரம் பேருக்கு போலீஸ் வேலை தந்ததைப்போல் அந்தக் கதையைப் போல் ஆகாமல், வெறும் ஏட்டோடும் பேச்சோடும் நிற்காமல், நாட்டில் உண்மையாகவே அமுல் நடத்த வேண்டும் என்று வேண்டுகிறேன்.

குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை தருவதாக 15 கோடி ரூபாயை வரவு-செலவுத் திட்டத்திலே ஒதுக்கப்போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த 15 கோடி, எந்தத் தொழிலிலே, எந்தத் துறையிலே முதலீடு செய்யப்படப்போகிறது, எப்படி வேலை தரப்போகிறீர்கள்? குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை தருவது என்றால் இந்தத் தொகை எப்படி போதுமானதாக இருக்கும், எந்த அடிப்படையில் வேலை தரப்போகிறீர்கள் என்பதைப் பற்றியெல்லாம் இந்த அறிக்கையிலே விளக்கமாக இல்லை.

கடந்த 2 ஆண்டுக்காலமாக மத்திய அரசாங்கத்திற்கு புதிய தொழில் துவங்க 48 லெட்டர் ஆப் இன்டென்ட் அனுப்பியிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அது என்னவாயிற்று? உங்கள் ஆட்சிக் காலத்தில் பெரும் முதலீட்டுக்கான தொழில்கள் ஏதாவது தொடங்கின என்று கோடிட்டுக் காட்ட முடியுமா? இந்த நிலையிலே பெரும் தொழில்கள் ஆரம்பிக்கப்படும்

எண்ணிக்கை உயர்கிறதோ இல்லையோ, பஸ் கட்டண உயர்வும், பால் விலை உயர்வும், வீட்டு வசதி வாரியத்தின் வீடுகளின் வாடகை உயர்வும், அமைச்சர்களின் சம்பள உயர்வும், அமைச்சர்களுக்கு வீட்டு வாடகை அலவன்ஸ் உயர்வும், பெரும் அதிகாரிகளின் பதவி உயர்வும் அதிகரித்திருக்கின்றனவேயல்லாமல் தொழில்கள் இங்கே உயரவும் இல்லை, அதிகம் வரவும் இல்லை.

குற்றங்களின் எண்ணிக்கை நாட்டில் உயர்ந்திருக்கின்றன. எதிர்க்கட்சிகளின் மீதான அரசியல் நோக்கங்கள் கொண்ட வழக்குகளின் எண்ணிக்கையும்தான் உயர்ந்திருக்கின்றனவே தவிர, திட்டங்கள் எதுவும் இங்கே உயரவில்லை. இது தவிர மக்களின் நித்திய வருமானம் உயரவில்லை. எந்தத் துறையிலேயும் உற்பத்தியும் உயரவில்லை, என்பதை சொல்லாமல் இருக்க முடியவில்லை.

இந்த அரசு புதிதாக தொழில் துவங்காவிட்டாலும் ஏற்கெனவே உள்ள தொழில்களை, இங்கே இருக்கின்ற தொழில்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு தமிழக அரசுக்கு உண்டு என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். கடுமையான மின்வெட்டு காரணமாக கோவை மாவட்டத்திலே உள்ள தொழில்கள் எல்லாம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. தொழிலாளர்கள் எல்லோரும் லே-ஆப் பெற்று நித்திய வருமானத்தை இழந்து நிற்கிற நிலைமை ஏற்பட்டுள்ளது. கோவை மாவட்டத்திலே உள்ள பெரும் முதலாளிகளும், சிறு முதலாளிகளும் மிகவும் வேதனைப்பட்டுக் கொண்டு லே-ஆப் கொடுக்கிற நிலைமை இருக்கிறது. அல்லது தொழிலாளர்களுக்கு அவர்கள் விடுமுறை கொடுத்துக் கொண்டு, தொழிற்சாலையை மூடவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமையை போக்குவதற்கு டி.ஐ.ஐ.சி. மூலம் இந்த அரசு நிபந்தனைகள் அற்ற கடன்களை அளித்து, ஜெனரேட்டர்கள் வாங்கிக் கொடுத்து, அந்தத் தொழிற்சாலைகளையும், தொழிலாளர்களையும் காப்பாற்ற வேண்டும் என்று இந்த அரசிற்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த அரசு பொறுப்பேற்று நடத்தும் கார்பொரேஷன்களையும் நஷ்டம் அடையாமல் பார்த்துக் கொள்ளவேண்டியதும் இந்த அரசினுடைய கடமையாகும். ஆனால் அதைச் செய்ய இந்த அரசு தவறிவிட்டது. உதாரணமாக சிமெண்ட் கார்பொரேஷனில் கிட்டத்தட்ட 15 கோடிக்கு மேலே நஷ்டம் ஏற்பட்டுள்ளது. அதற்கு முழு காரணம், நிர்வாகத் திறமையின்மையேயாகும்.

அடுத்து குறிப்பாக கோவை மாவட்டத்திலே உள்ள தொழிலாளர்கள் மருத்துவமனையிலே, ஈ.எஸ்.ஐ. மருத்துவமனையிலே கடந்த மூன்று மாதங்களாக எந்தவிதமான அறுவை சிகிச்சைகளும் செய்யப்படவில்லை. அதற்கு காரணம் அங்கே ஜெனரேட்டர் கிடையாது. பத்தாண்டுக்காலமாக அந்த மருத்துவமனைக்கு ஜெனரேட்டர் வேண்டும் என்று கேட்டும்,



இதுவரையில் கொடுக்கப்படாத காரணத்தால் அங்கே அறுவை சிகிச்சைகள் நடைபெற முடியாத நிலைமை இருக்கிறது. அங்கே மருந்துகளும் சரிவர கொடுப்பது இல்லை. இதற்கென்று கடந்த சட்டமன்றக் கூட்டத்திலேகூட, அந்த மாவட்டத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கேட்டுக் கொண்டதற்கிணங்க வாக்குறுதி அளிக்கப்பட்டது. ஆனால் இதுவரையில் அந்த மருத்துவமனைக்கு எந்தவிதமான மருத்துவ வசதிகளும் செய்து கொடுக்காத நிலையே உள்ளது.

கோவை மாவட்டத்தில் உள்ள மெடிகல் காலேஜ் மருத்துவமனையிலும் இதே நிலைதான் ஏற்பட்டுள்ளது. அங்கேயுள்ள நோயாளிகளுக்கு கொடுக்கப்படுகிற துணிகள் அனைத்தும் சலவை செய்யப்படாத நிலையிலே, அழுக்குடன் அப்படியே கொடுக்கப்படுகிறது. இதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நான் நேரிலேயே பலமுறை கூறியிருக்கிறேன். இந்த மாமன்றத்தில் ஆளுநர் உரைக்கு பதிலளிக்கும்போது, இதற்குத் தகுந்த விளக்கம் அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கோவை மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் 150 அடி ஆழத்தில் கீழேயிருந்து தண்ணீர் எடுத்து பம்புகள் இறக்கி விவசாயம் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அவர்கள் மின்சாரத்தை குறிப்பிட்ட அளவுதான் உபயோகப்படுத்தவேண்டும் என்று இந்த அரசாங்கம் அறிவித்துள்ளது.

(பிற்பகல் 1–30)

எனவே அதைத் தளர்த்தி அவர்கள் வேண்டிய அளவுக்கு மின்சாரத்தை அவர்களுக்குக் கொடுத்து அவர்கள் விவசாயத்தினைப் பெருக்குவதற்கு வழிவகைகளைச் செய்துதரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று மாலை 4.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பிற்பகல் 4–00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு.பி.எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

7. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் தொடர்ச்சி.

**திரு. பி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. குப்புசாமி அவர்கள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தை ஆதரித்து நான் சில கருத்துக்கள் கூற விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்கள் தமது உரையில் கிரீடம் வைத்தாற் போல் இந்த அரசின் முக்கியமான சாதனையான சத்துணவுத் திட்டத்தைப்பற்றி விவரித்திருப்பது சாலப்பொருத்தமுடையது என்று நான் கருதுகிறேன், தமிழகத்தில் இந்த சத்துணவுத் திட்டத்தின் மூலம் ஏறத்தாழ 68,82,000 ஏழை எளிய குழந்தைகள் ண்டு முழுவதும் தினமும் ஒரு வேளை சத்துணவு பெற்று வருகின்றனர். இது பாராட்டுதற்குரிய சாதனை அல்லவா என்று நான் கேட்கிறேன். இந்தச் சத்துணவுத் திட்டத்தின் மூலம் தமிழகத்தில் உள்ள எவ்வளவோ ஏழை எளிய குடும்பங்கள் இன்று தங்கள் குழந்தைகள் ஒரு வேளை சத்துணவு கிடைக்கும் வாய்ப்பு பெறுவது கண்டு அவர்கள் மட்டுமில்லாமல் தமிழகத்தில் உள்ள எல்லோரும் இன்று புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியை பாராட்டிக் கொண்டிருக் கிறார்கள். இந்தத் திட்டத்தின் மூலம் ஒன்றரை லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது என்பதை எண்ணிப் பார்த்திடல் வேண்டும், இதிலே தாழ்த்தப்பட்ட மக்கள் ஏறத்தாழ 40% அளவிற்கு வேலைவாய்ப்பு பெற்றிருக்கிறார்கள். விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் போன்றோர் இத்திட்டத்தின் மூலம் வேலைவாய்ப்பு பெற்று அவர்கள் எல்லாம் மகிழ்ச்சியாக தங்கள் வாழ்நாளை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். வயது வந்து அரசாங்கத்தின் உதவித் தொகை பெறும் 30,000 முதியோர்களும் இந்தத் திட்டத்தின் மூலம் பயன் பெறுவதை எண்ணிப் பார்க்க வேண்டும். கடந்த ண்டு இந்தத் திட்டம் இந்த மாமன்றத்தில் அறி முகப்படுத்தப்பட்டபோது கேலியும் கிண்டலுமாகப் பேசிய வர்கள் இன்று வெட்கி தலை குனியக்கூடிய அளவிற்கு இத் திட்டம் தமிழ்நாட்டில் நன்கு செயல்பட்டு வருவதை எண்ணிப் பார்த்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஜாதி மத மொழி பேதங்கள் ஒழிந்து எல்லோரும் முதலில் தமிழர்கள் பின்னர் இந்தியர் என்ற நிலை தமிழகத்தில் உருவாகி இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள 22 மாநிலங்களுக்கும் தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் உள்ள அரசு வழிகாட்டியாக இன்று செயல்பட்டுக் கொண்டு வருகிறது.

அடுத்தாற்போல, இந்த மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்ற உத்தரவாதத்தை கொடுத்து அதற்காக இன்றைக்கு நிதிநிலை அறிக்கையில் 15 கோடி ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கியிருப்பதை வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறோம். ஒவ்வொரு குடும்பத்திலும் நான்கைந்து பேர் கள் படித்துவிட்டு வேலையில்லாமல் எந்த அளவிற்கு கஷ்டத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து, அந் நிலையை உணர்ந்து, இன்று கட்டாயமாக குடும்பத்தில் ஒருவருக்கு வேலை கொடுக்கப்படும் என்று அறிவித்திருப்பதை வரவேற்கிறேன். இந்த அருமையான திட்டம் தமிழகத்தைத் தவிர வேறு எந்த மாநிலத்திலாவது நடைபெற்றுக் கொண் டிருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன். இந்தியத்தரணியில்



எங்குமில்லாத அளவிற்கு தன்னிறைவு திட்டத்தை இங்கு அமல்படுத்தி ஏறத்தாழ 378 ஒன்றியங்களிலும் கடந்த மூன்று ஆண்டுகளாக 30 கோடி ரூபாய் அளவிற்கு செலவு செய்து ஏழை எளிய மக்களுக்கு நம் அரசு பல வசதிகளும் செய்து கொண்டு வருவதை நாம் அறிவோம் இன்றைய தினம் தமிழகத்தி லே பள்ளிக்கூட கட்டிடமே இல்லாத ஆரம்பப் பள்ளிகள் கிடையாது என்ற சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு அத்தியாயத்தை இந்த அரசாங்கம் ஏற்படுத்தியிருப்பதை நாம் எல்லோரும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

கிராமங்களில் குடிதண்ணீர் பிரச்னையானாலும் சரி, ரோடு வசதியானாலும் சரி, பள்ளிக்கூட வசதியானாலு சரி, மருத்துவ வசதியானாலும் சரி அத்தனையும் ஒருங்கிணைந்த வகையிலே கடந்த மூன்றாண்டு காலத்திலே தமிழகத்தில் எந்த அளவுக்கு அதிகமாக்க முடியுமோ, அந்த அளவுக்கு செய்து கட்டி முடிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது, உண்மை யிலேயே இந்த புரட்சித் தலைவர் ஆட்சியை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக எந்தவிதமான நன்மையும் இல்லை என்று சொல்லும் அங்கத்தினர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக இன்றைக்கு கிராமங்களில் எந்த அளவுக்கு முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக் கின்றன என்பதை மனசாட்சியோடு சொல்லவேண்டும். பல் வேறு நெருக்கடி ஏற்பட்ட நேரங்களில் இப்படிப்பட்ட புரட்சி கரமான திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தியதை நாம் யாரும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஆதித் திராவிட, ஏழை பழங்குடி மக்கள் தங்களுடைய பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள, நடப்பு ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே 104 கோடி ரூபாய் செலவிட வழிவகை செய்திருப்பதை நம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். கிராமங்களிலே உள்ள ஏழை எளிய மக்கள் பயனடைய, வீடு கட்டும் திட்டத்தின் மூலம் கூட்டுறவுக் கடன் வழங்கி, அங்கே உள்ள எத்தனை அரிசன மக்கள் தங்களுக்கு வீடுகள் கட்டிக் கொள்ள வேண்டுமென்று கேட்கிறார்களோ, அத்தனை பேர் களுக்கும் வீடுகள் கட்டிக்கொள்ள, கடன் வசதியை ஏற்படுத்திக் கொடுத்து, அதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத் திருக்கும் இந்த அரசை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக் கிறோம்.

என்னுடைய தொகுதி சம்பந்தமாக ஒருசில கோரிக்கை களை வைக்க நான் விழைகிறேன். நெல்லை மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டு காலமாக பருவமழை பெய்யாத காரணத்தினால், வறட்சி நிலைமை ஏற்பட்டுள்ளதை உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு

கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன். குடிநீர் தட்டுப்பாடு இன்றைக்கு நெல்லை மாவட்டத்திலே ஒருசில தாலுகாக்களிலே கடுமையாக நிலவி வருகின்ற காரணத்தினால், அங்கே சுமார் 1,400 ஆழ் குழாய் பம்புகள் தோண்டுவதற்கு அனுமதி கேட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அரசுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். அதை உடனடியாக அரசாங்கம் கவனித்து அதற்கு அனுமதி வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் அங்கே பருவமழை சரியாக பெய்யாத காரணத்தினால் சங்கரன்கோவில், குருவிக்குளம் ஒன்றியப் பகுதிகளிலே இன்றைய தினம் நீர்ப்பாசன வசதி இல்லாத காரணத்தினால், பயிர்கள் காய்ந்து, தீய்ந்து போய் இருக்கின்ற காரணத்தினால், அங்கே இருக்கக்கூடிய ஏழை எளிய விவசாயிகளுக்கு கடன் வசதியை ரத்து செய்தோ, தள்ளுபடி செய்தோ, கூட்டுறவுக் கடனை ஒத்திவைத்தோ அவர்களைக் காப்பாற்றுவதற்கான ஒரு உத்தரவை போடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தப் பகுதிகளை கடுமையான வறட்சிப் பகுதிகளாக அறிவித்து, மேலும் பல வசதிகளை, சலுகைகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நேற்றையதினம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு பேட்டியிலே கூறியிருக்கிறார்கள். கேரள மாநிலத்தில் மேற்கு நோக்கிப் பாயும் நதி நீர் கடலிலே வீணாகப் போய் கலக்கிறது; அதை தமிழகத்திற்கு திருப்பி விடுவதற்காக கேரள மாநிலத்தோடு நான் கலந்து பேசப் போகிறேன் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அளித்துள்ள அந்த அறிக்கை, அந்தப் பகுதி மக்களுக்கெல்லாம் ஒரு சிறப்பான, மகிழ்ச்சியான செய்தியாக இருக்கிறது. இந்தக் கோரிக்கையிலே கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. 1967 முதல் காங்கிரஸ் ஆட்சி நடத்தப்பட்டு வந்த காலம் முதல் இதை நிறைவேற்ற வேண்டுமென்று சிந்தித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், இன்றைக்கு தமிழகத்திலே தண்ணீர் நெருக்கடி இருக்கின்ற நேரத்தில். கேரளத்திலே தேசிய நீரோட்டமுள்ள காங்கிரஸ் ஆட்சி நடப்பதால், தேசிய ஒருமைப் பாட்டைக் கருதி, வீணாகக் கடலிலே சென்று விழக்கூடிய தண்ணீரை தமிழ்நாட்டிற்கு திருப்பி விடுவதற்கு அவர்கள் மனம் வைத்து, அனுமதி தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அனுமதியை விரைவிலே பெற்றுத்தர, நமது அரசாங்கம் முயற்சி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாட்டின் பெரிய நதிகளெல்லாம் தேசிய மயமாக்கப் படவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அரசாங்கமானது தேசிய ஒருமைப்பாட்டை எந்த அளவிற்கு இந்தியத் துணைக் கண்



டத்திலே வரவேண்டுமென்று விரும்புகிறதோ, அதற்கு ஏற்றாற்போல், பல காரியங்களை, மாநிலத்திற்கு வேண்டிய உரிமைகளை, சலுகைகளை எப்படி செய்து தரவேண்டுமோ, அதே போன்று மாநிலங்களிலே வறட்சி ஏற்படும்போது, பொருள் தட்டுப்பாடு உள்ள காலங்களில் மத்திய அரசாங்கத்திடமிருந்து நாம் கேட்கவேண்டிய நிலையில் இருக்கிறோம். அதைக் கேட்க வேண்டிய உரிமை நமக்கு இருக்கிறது.

இன்றையதினம் தமிழகத்திலே சத்துணவுத் திட்டத்திற்காகவும், தமிழ்நாட்டிலே அரிசியின் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது என்று பல தடவைகள் மத்திய அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்லியும், கடந்த 8 மாதங்களாக அரிசி எதுவும் ஒதுக்காமல் இருப்பது உள்ளபடியே வருந்தத் தக்க காரியமாகும். இந்த நிலையில் அவர்கள் இருந்தால், தேசிய ஒருமைப்பாட்டை அவர்கள் எப்படிக் காக்க முடியும் என்பதை நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோன்று நமக்கு மின்சாரத் தேவையிருக்கிறது. அனல் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு நிலக்கரி கொடுக்க வேண்டுமென்று கேட்டால், அதற்கு அவர்கள் கையை விரிக்கிறார்கள். நிலக்கரியை மற்ற மாநிலங்களிலே இருந்து கொண்டு வருவதற்காக, நம்முடைய பணத்திலிருந்து கப்பல் வாங்கி நிலக்கரியைக் கொண்டு வரவேண்டுமென்றாலும், அதற்கு மத்திய அரசின் அனுமதியைக் கேட்டால், அங்கே கப்பல் வாங்குவதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

(மாலை (4-10)

நம்முடைய வசதிக்காக, நமக்காக கப்பல் வாங்க அனுமதி கேட்டால் அனுமதி மறுக்கப்படுகிறது.

பற்பல பெரிய திட்டங்களை எல்லாம் திட்டி நம்முடைய தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்கு அனுப்பியும் கூட நமக்கு அனுமதி கிடைக்காத நிலை இருந்து வருகிறது.

16 மொழிகள் நமது தேசிய மொழியாக இருக்கிறது. அப்படியிருக்க இந்தியை மட்டும் ஆட்சி மொழியாக கருத வேண்டும் என்று இன்றைக்கு சொல்கிறார்கள். இந்தியை தமிழ்நாட்டில் மறைமுகமாக செயல்படுத்த அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் உண்மையில் நாம் இதை சிந்தித்துப்பார்க்க வேண்டும். இந்த நிலை இந்திய துணைக்கண்டத்தில் நடக்குமானால் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையே உள்ள தொடர்பை எந்த அளவுக்கு பாதிக்கும் என்பதை இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

மொத்தத்தில் இந்த ஆளுநர் உரையானது அரசின் சாதனைகளை எடுத்துக் காட்டக்கூடியதாக இருக்கிறது. அரசாங்கத்தில் எந்த அளவுக்கு பல காரியங்களை செய்திருக்கிறார்கள் என்பதை காட்டுகிறது என்பதை கூறிக்கொண்டு எனக்கு இந்த ஆளுநர் உரைமீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

திரு ஆர்.டி. கோபாலன் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை மீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி தொடங்குகிறேன்.

முதலமைச்சர் அவர்களுடைய சத்துணவுத் திட்டத்தின் மூலம் 65 லட்சம் ஏழை எளிய குழந்தைகளை தத்து எடுத்திருக்கிறார் நமது இதய தெய்வம் புரட்சித்தலைவர் அவர்கள் உலகத்தில் வேறு எந்த நாட்டிலும் இது மாதிரி செய்திருக்கிறார்களா? ஒரு புரட்சித் திட்டம் இது. இந்த திட்டத்தின் சிறப்பை வருங்காலத்திலே வரலாற்று ஆசிரியர்கள் பொன் எழுத்துக்களால் பொறிப்பார்கள். 112 கோடி ரூபாய்க்கு ஒப்பற்ற திட்டத்தை தீட்டி நிறைவேற்றி வருகின்றார், நமது இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள். தமிழகத்தின் தலைசிறந்ததாக கருதப்படும் நாளேடான இந்து 25–1–82ஆம் நாள் அன்று தனது தலையங்கத்தில் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்று அரசு அறிவித்துள்ளதை பாராட்டியதே இதற்கு தக்க சான்றாக இருக்கும்.

பாரதியார் நூற்றாண்டு விழாவை நடத்தி தேசிய ஒருமைப்பாடு ஆண்டாக விழா எடுத்து இந்திய துணைக் கண்டமே வியந்து பாராட்டும் அளவுக்கு செய்தது நமது தமிழ்நாடு. இதன் பெருமை நமது இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையே சாரும்.

குடும்பத்தில் ஒருவருக்கு வேலை என்ற சிறந்த சீரிய பெருமைப்படத்தக்க திட்டத்தின் மூலம் கட்சி வேறுபாடு இன்றி ஜாதி மத வேறுபாடு இன்றி தீட்டப்பட்டுள்ளது. இந்த ஆட்சி கட்சி சார்பற்றது என்பதற்கு அதுவே ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இளைஞர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதம் என்பதையும் இந்த நேரத்தில் நான் குறிப்பிடுவது என்னுடைய கடமை.

மேலும் நாடு போற்றும் தன்னிறைவு திட்டத்தின் மூலம் இன்று கிராமப்பகுதியில் கிராம மக்களின் தேவைகளை புரிந்து செய்திருக்கிறார்கள். இங்கே பேசிய எதிர்க்கட்சி நண்பர்கள் தன்னிறைவு திட்டத்தில் ஊழல் ஊழல் என்று கூறினார்கள். அதனுடைய வேலை சிறப்பானதை யாரும் குறிப்பிட்டு கூறவில்லை. முன்பு எல்லாம் காடுகளுக்கு, வயல்களுக்கு, தோப்புகளுக்கு செல்ல வேண்டும் என்றால் நடந்து சுமைகளை தலையில் சுமந்து கொண்டு சென்று கொண்டிருந்



தார்கள். ஆனால் இப்போது ஒவ்வொரு இடத்திற்கும் வண்டி, ஜீப் ஆகியவைகள் போவதற்கு இன்று பாதைகள் வெகு அழகாக போட்டிருக்கிறார்கள். தி.மு.க. நண்பர்கள் ஊழல் ஊழல் என்று கூறிக்கொண்டு தன்னிறைவு திட்டத்தை வரவேற்க தயங்குகிறார்கள்.

மேலும் தஞ்சையில் தண்ணீர் இல்லாமல் வாடுகிறார்கள். வறட்சி நம்மை வாட்டுகிறது. ஆனால் மத்திய அரசு இந்தி திணிப்பில் தீவிரமாக இருக்கிறது. குறிப்பாக ரயில்வே துறையில் வெகு தீவிரம் காட்டுகிறது. இந்த தீவிரத்தை தஞ்சைக்கு தண்ணீர் கொடுக்கவும், வறட்சியை போக்கவும் வெகு கவனம் செலுத்தவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் கேரளாவிலே மேற்கு நோக்கிப் பாயும் கல்லாறு தண்ணீர் கடலில் போய் வீணாகக் கலக்கிறது. அந்தத் தண்ணீரை தமிழகத்திற்குத் திருப்பிவிட்டால் மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்கள் தஞ்சை மாவட்டத்தைப்போல் நெல் களஞ்சியமாக விளங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நேற்றையதினம் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் நிருபர்களுக்குப் பேட்டியளிக்கிறபோது கேரளாவில் மேற்கு நோக்கிப் பாயும் தண்ணீரை தமிழகத்திற்கு திருப்பி விடுவது குறித்து பேச்சுவார்த்தை நடத்துவோம் என்று கூறியிருப்பது நமக்கு எல்லாம் ஆறுதலை ஏற்படுத்தியிருக்கிறது. அந்தப் பேச்சுவார்த்தை சுமுகமாக முடிந்து தமிழகத்திற்குத் தண்ணீர் கொண்டுவர ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய கம்பம் தொகுதியிலே கண்ணகி கோயில் ஒரு தீராத பிரச்சினையாக இருந்துவருகிறது. ஒவ்வொரு ஆண்டும் சித்திரா பௌர்ணமியன்று அந்தப் பகுதி மக்கள் விழா எடுப்பது வழக்கம். இந்த ஆண்டு கேரள அதிகாரிகள் எங்களை அங்கே போகவிடாமல் தடுத்து நிறுத்தினார்கள். அங்கே ஒரு சிலை வைக்கவேண்டுமென்று நம்முடைய பகுதியைச் சேர்ந்த மக்கள் விழா எடுக்க முயற்சியெடுக்கிற நேரத்திலே அங்கே சென்ற 9 பேர்கள் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது வழக்குத் தொடர்ந்தார்கள் 7–6–1982 அன்று நானும் அமரர் கம்பம் நடராஜன் எம்.பி. அவர்களும் அந்த மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்து நிலைமையைக் கூறினோம். சிலை வைக்காமல் விழா நடத்த எத்தவிதமான ஆட்சேபணையும் இல்லை விழா நடத்திக் கொள்ளலாம் என்று தெரிவித்தபோது, நானும் கம்பம் நடராஜனும் சிலை வைக்கமாட்டோம் என்று உறுதிமொழி கொடுத்து விட்டு வந்தோம். அங்கே செல்வதற்குத் தடையில்லை என்று அவரே கையொப்பமிட்டு எழுதிக் கொடுத்தார். நாங்கள் அதை

வாங்கி அந்த டெபுடி கலெக்டரிடம் கொடுத்தோம். ஆனால் அவர் யார் கொடுத்தாலும் அனுமதி தரமுடியாது என்று மறுத்துவிட்டார். ஆகவே ஒருவரும் அந்த ஆண்டு விழா எடுக்க முடியாத துர்பாக்கிய நிலை ஏற்பட்டது. தமிழகத்திலே தென் பகுதியிலே எல்லையிலே உடனடியாக ஒரு சாலையைப் போட்டால் இப்படிப்பட்ட பிரச்சினை ஏற்பட வழியில்லை கேரள அரசுடனும் மத்திய அரசுடனும் பேசி அந்த கண்ணகி கோயில் நம்முடையதுதான் என்று நிருபிக்கவேண்டுமென்றும் அந்த எல்லைச் சாலையைப் போடவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மதுரையிலிருந்து கோட்டையம் செல்லும் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக்கவேண்டுமென்று நம்முடைய அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கம்பம் தொகுதியிலே இருக்கின்ற பச்சைகுமாச்சி சாலையை அரசுசாலை ஆக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பதினெட்டாம் கால்வாயின் வேலையை உடனடியாகத் துவக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பதினெட்டாம் கால்வாய்த் திட்டம் நிறைவேற்றப்பட்டால் கம்பம் போடி' பெரிய குளம் ஒரு செழிப்பான பகுதியாக வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

மேலும் கொடைக்கானலில் டி.வி. ஸ்டேஷன் ஏற்படுவதற்கு தமிழக அரசு மத்திய அரசிடம் எடுத்துக்கூறி மாநில அரசு ஏற்கெனவே அதற்குத் தேவையான நிலத்தையெல்லாம் ஒப்படைத்து இருக்கிறது. இன்னும் துவங்காமல் இருக்கிறது, அதை உடனடியாகத் அது துவக்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றிகூறி அமைகிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது நடந்துகொண்டிருக்கின்ற விவாதத்தில் பங்கேற்பதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறிக் கொள்கிறேன். ஆளுநர் உரையைக் கேட்கிற போது ஒரு புறத்திலே மகிழ்ச்சியும், ஒரு புறத்திலே வேதனையும் ஏற்படுகிறது. மகிழ்ச்சிக்குக் காரணம் இந்தியாவின் வடகோடி மாநிலத்திலே பிறந்து மத்தியிலே உள்ள டெல்லி மாநகரத்திலே மைய அரசிலே மிக உயர்ந்த பதவிகளை வகித்து கடைசியாக தமிழகத்திற்கு தென்கோடி மாநிலத்திற்கு வந்து நம்முடைய மாநிலத்திலே ஆளுநராக பதவியேற்று நான்கு மாத காலத்திற்குள்ளாக தமிழிலே இங்கே உரையாற்ற வேண்டுமென்ற அடிப்படையில் .... •

---

*மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



(மாலை 4-20)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதெல்லாம் நாங்கள் யாரும் பார்க்கவில்லை. அதெல்லாம் இருக்கக் கூடாது. அவைகளை அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

டாக்டர் கே சௌரிராஜன் : துணைத் தலைவர் அவர்களே' நான் தவறுதலாக ஒன்றும் கூறவில்லை. இது அவருடைய தேசிய உணர்வை காட்டுகிற நேரத்தில், ரோம் நாட்டில் இருக்கிறபோது அங்குள்ள ரோமானியர்களைப் போல நடந்து கொள்ளவேண்டும் என்று ஆங்கிலேய அறிஞர்கள் சொல்லிச் சென்றிருக்கிறார்கள். அதற்கும் ஒரு படி மேலே போய் பேரறிஞர் அண்ணா அவர்கள் மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்று தமிழக மக்களுக்கு சொல்லிச் சென்றிருக்கிறார்கள். இதை நான் இந்த நேரத்தில், ஞாபகப் படுத்துகிறேன் என்றால் தமிழக மக்கள் மற்ற மாநிலங்களுக்குச் செல்கிற நிலையில், மாற்றான் தோட்டத்து மல்லிகை மணக்கும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் நமக்குச் சொல் இருக்கிறார்கள் என்பதை அவர்கள் நினைவு கூர்ந்துகொள்ள வேண்டும்.

ஆளுநர் உரையின் போது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களும் வெளிநடப்பு செய்தது எனக்கு மனவேதனையாக இருந்தது. இந்த நாட்டினுடைய அரசியல் சட்டம் தான் இந்த மாநிலத்தை ஆளுகிறது. அவசர சட்டங்களும் சரி, அரசாங்க உத்தரவுகளும் சரி ஆளுநர் அவர்களின் உத்தரவின் கீழ் தான் வருகின்றன. ஆளுநர் இங்கே உரையாற்றுகிற போது தானே சொந்தமாக உரையை தயாரித்து அவர் இங்கே வருவதில்லை. இந்த அவைக்கு சொந்தக்காரன் நான் என்றும், இந்த அவையை கூட்டுவதற்கும், ஏன் அதை கலைப்பதற்கும் கூட எனக்கு அதிகாரம் இருக்கிறது என்பதை நமக்கு நினைவுபடுத்துவதற்கு, ஆளுநர் அவர்கள் இங்கே வந்து நம் இரு அவையையும் கூட்டி உரையாற்றுகிறார்கள். ஜனநாயக ஆட்சியிலே எந்த கட்சி ஆட்சியில் இருக்கிறதோ அந்த ஆட்சியினுடைய உரையை அது தான் என்னுடைய அரசு என்று சொல்லி அவர்கள் இங்கே உரையாற்றுகிறார்களே தவிர தானாக தயாரித்து உரையாற்றுவதில்லை.

திரு என் பழனிவேல் : துணைத்தலைவர் அவர்களே, இங்கே வெளிநடப்பு செய்தது சம்பந்தமாக ஏற்கெனவே எங்கள் தலைவர் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்' அதெல்லாம் இப்போது நீங்கள் சொல்லவேண்டாம். உட்காருங்கள்,

டாக்டர் கே சௌரிராஜன்: துணைத்தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழகத்தில் கட்சி மாறுகின்ற நிலைமைகள் உருவாகிக் கொண்டிருக்கிறது. சிலர் சில சலுகைகளுக்காகவும், சிலர் கொள்கை அடிப்படையிலும் செல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதில் உங்கள் பிரச்சினை என்ன இருக்கிறது. ஆளுநர் உரையைப் பற்றி மட்டும் பேசுங்கள்.

டாக்டர் கே சௌரிராஜன்: நமக்கு இருக்கிற ஒரே பாதுகாப்பு ஆளுநர் தான் என்பதை வலியுறுத்திச் சொல்கிறேன். ஆட்டிற்கு தாடி, மாநிலத்திற்கு ஆளுநர் என்று சொல்லிய கட்சியைச் சேர்ந்தவர்கள் கூட ஆளுநர் உரையின் மீது வெளிநடப்பு செய்யவில்லை என்பதை எடுத்துக்கூறி ஆளுநர் என்பது இந்தியச் சட்டத்தினுடைய தர்மசக்கரமாக சுழன்று கொண்டிருக்கிறது. அதனாலே ஆளுநருக்கு பொறுப்பு இருக்கிறது. எங்கெங்கு அநீதி நடக்கிறதோ அங்கெல்லாம் ஆளுநர் தலையிட வேண்டிய அவசியம் இருக்கிறது, 'தர்மோ ரட்சதி ரட்சகா' என்று சமஸ்கிருதத்தில் சொல்வார்கள். தர்மத்தை எவன் காப்பாற்றுகிறானோ அவனைத்தான் தர்மம் காப்பாற்றும். ஆகவே, ஆளுநருக்கும் அந்தப் பொறுப்பு இருக்கிறது. இந்த நாட்டிலே நேர்மையையும் தர்மத்தையும் காப்பாற்றுகின்ற பொறுப்பு ஆளுநருக்கு இருப்பதைத்தான் நான் இந்த நேரத்திலே நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; இதெல்லாம் அவருக்குத் தெரியும். நீங்கள் நினைவூட்ட வேண்டியதில்லை.

டாக்டர் கே சௌரிராஜன்' பேப்பரிலே வந்தால் போதும். அடுத்தபடியாக, ஆளுநர் உரையைப் படிக்கின்ற பொழுது இதை மூன்று பகுதிகளாக பிரித்துக்கொள்ளலாம். முதல் பகுதியிலே, முழுக்க, முழுக்க இந்த ஆட்சியினுடைய ஒரே கொள்கை, அதாவது. சத்துணவுத் திட்டத்தைப் பற்றியே, விவரித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்குச் சுய விளம்பரம் என்று சிலர் சொல்லலாம், தற்பெருமை' என்று சிலர் சொல்லலாம். காரணம் எனக்கு ஒரே சிரிப்பாக இருக்கிறது. இந்த ஆட்சியே இந்தச் சத்துணவு திட்டத்தை நம்பித்தான் இருந்து கொண்டிருக்கிறதோ என்று எனக்குச் சந்தேகம் வந்துவிட்டது காரணம் என்னவென்றால். இந்தச் சத்துணவுத் திட்டத்திற்கு எந்த அளவுக்கு விளம்பரம் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு



விளம்பரம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சத்துணவுத் திட்டம்தான் இந்த ஆட்சியினுடைய கொள்கை என்று சொல்லக் கூடிய அளவுக்கு இன்று போய்க் கொண்டிருக்கிறது. முதல் முதலில் இந்தச் சத்துணவு திட்டம் பற்றிய அறிவிப்பு வந்த பொழுது, நான் அதைப் பாராட்டினேன். அதே நேரத்தில் உள்ளபடியே மிகவும் பயந்தேன். இன்னமும் அதைப் பாராட்டக்கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் என்னவென்றால் நான் எந்த அளவுக்குப் பயந்தேனோ அந்த அளவுக்கு அது நடைபெறவில்லை ஓரளவுக்கு மிக செம்மையாகவே அது நடைபெறுகிறது என்பதை இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், முதலிலே நான் அதைச் சொன்னபொழுது, பயங்கரமான விளைவுகள் ஏற்படலாம் விஞ்ஞானத்தின் அடிப்படையில் என்று நினைத்தேன். ஆனால், சென்ட்ரலைஸ்ட் கிச்சன் கட்டாமல், அங்கங்கே. ஒவ்வோரிடத்திலே, பள்ளிக் கூடங்களிலேயே, சமையல் செய்து போடுகின்ற நிலைமையை ஏற்படுத்திய காரணத்தினால், இன்று வரவேண்டிய எவ்வளவோ மிகப் பெரிய பயங்கரங்கள் எல்லாம் வராமல் தடுக்கப்பட்டு விட்டது என்பதையும் நான் இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்காக நான் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் எந்தத் திட்டம் போட்டாலும் குறைகள் இருக்கும். குறைகளைச் சொல்வது எங்களுடைய கடமை. அதை நிவர்த்தி செய்வது உங்களுடைய பொறுப்பு என்று எடுத்துச் சொல்கின்ற நேரத்தில், மதிய உணவு திட்டத்தில் விறகுக்காகக் கொடுக்கப்படுகின்ற பணம் போதாத காரணத்தினால், அங்கங்கே உள்ள ஆசிரியர்கள் நாம் கொடுக்கின்ற பணத்தின் மூலமாக விறகை வாங்க முடியாமல், குழந்தைகளைச் சுள்ளிப் பொறுக்கிக் கொண்டு வர சொல்லக்கூடிய அளவுக்கு இன்று சில இடங்களில் இருந்திருக்கிறது என்று எனக்குத் தகவல் வந்திருக்கிறது. அது தவிர்க்கப்பட வேண்டுமென்பதை நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்திலே, இங்கே சென்னை நகரத்திலே எங்கு பார்த்தாலும் சத்துணவுக் கூடத்தைக் கட்டியிருக்கிறீர்கள். சத்துணவுக் கூடங்களைக் கட்டுகின்ற நேரத்திலேயே பக்கத்திலேயே ஒரு போர் பம்ப் போடுவது மிகப் பெரிய காரியம் அல்ல. அதையும் கூடவே செய்திருந்தால், அது இந்தச் சத்துணவுத் திட்டத்திற்குப் பயன்படாவிட்டாலும், பக்கத்திலே உள்ள ஏழை, எளிய மக்களுக்குப் பயன்பட்டிருக்கும். அதை செய்திருக்கக் கூடாதா என்று இங்கே நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

அதே நேரத்தில், இங்கே சென்னை நகரத்தில் பல வசதி படைத்தவர்கள் குழந்தைகளைக் கூட அங்கே வேலைக்காரிகளாக வருகிறவர்கள் அந்தக் குழந்தைகளைக் எடுத்துக் கொண்டு போய், அந்தக் குழந்தைகள் பெயராலே ரிஜிஸ்தர் செய்து, அந்தக் குழந்தைகளின் சொந்தக்காரர்களான தாய் தகப்பன்களுக்குத் தெரியாமலேயே, அந்தச் சத்துணவை வாங்கி-

பெரியவர்களும் சாப்பிட்டுக் கொண்டிருக்கக்கூடிய நிலைமையை நான் கண் கூடாகப் பல இடங்களிலே, என்னுடைய தொகுதியிலேயே பார்த்திருக்கிறேன். ஆகவே, அப்படிப்பட்ட குறைகளையெல்லாம் அவர்கள் தீர்க்க வேண்டியது அவசியம் என்று இந்த நேரத்திலே வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, இரண்டாவது பகுதியாக ஒரு மாபெரும் பயங்கரமான பகுதியாக ஒரு ஒப்பாரி வைத்திருக்கிறார்கள் என்று சுருங்கச் சொல்லலாம். தமிழகத்திலே வறட்சி நிலைமை வந்து விட்டது; மின் சாரப் பற்றாக்குறை: அரிசிப் பற்றாக் குறை தண்ணீர் பற்றாக்குறை; இப்படி பல குறைகள். ஏதோ, தமிழகத்திலே இந்த ஆண்டுதான் புதிதாகத் தோன்றியிருப்பது போலவும், அதை எப்படிச் சமாளிக்க முடியும் என்ற ஏராளமான ஒப்பாரி என்று கூடச் சொல்லலாம், அந்த அளவுக்குத் தமிழகத்திலேயிருக்கிற நிலைமையை அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மின்சாரப் பற்றாக்குறையும், தண்ணீர் பற்றாக்குறையும், அரிசி உணவு பற்றாக்குறையும் இதற்கு முன்பு பலமுறைகள் தமிழகத்திலே ஏற்பட்டிருக்கின்றன. 1965லே ஏற்பட்டது. மீண்டும் 1975லே ஏற்பட்டது. ஒவ்வொரு முறையும் எப்படி சமாளித்தார்கள் (மணியடிக்கப் பெற்றது)

(மாலை 4 30)

சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் எந்த அளவிற்குப் பயங்கரமான கொடுமையில் தமிழகத்தின் தலைநகரமாகிய சென்னை நகரம் இருந்துக்கொண்டிருக்கிறது என்பதை நாம் யாரும் சிந்தித்துப் பார்க்கவில்லை. சுலபமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள், தலைநகரத்தை மாற்றி விடலாமென்று. நீங்கள் மாற்றினாலும், மாற்றாவிட்டாலும் மக்கள் தாங்களாகவே சென்னை நகரத்தை காலி செய்துவிட்டுச் செல்லும் காலம் வெகுவிரைவிலே வந்து விட்டதுபோல்தான் இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒவ்வொரு நபருக்கும் கிட்டத்தட்ட 40 கேலன் அதாவது 200 லிட்டர் தண்ணீர் தினமும் கொடுக்கப்பட வேண்டுமென்பது உலக சுகாதாரக் கழகத்தின் கோட்பாடு. பம்பாயில் 210 லிட்டரும், டெல்லியில் 220 லிட்டரும், பெங்களூரில் 120 லிட்டர் வரையிலும் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் சென்னையில் மட்டும் ஒரு நபருக்கு 60 லிட்டர் தண்ணீர் விதம் தான் இன்று வழங்கப்படுகிறது. இன்று சென்னையில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பஞ்சம் வரலாறு காணாத அளவிற்கு இருக்கிறது. குடிநீர்ப் பஞ்சம் பற்றி ஒரு படம்கூடப் போட்டிருக்கிறார்கள் இந்து பேப்பரிலே போட்டிருக்கிறார்கள். சென்னை நகரத்தில் பலயிடங்களில் பூமிக்கடியில் 120 அடி அல்லது 150 அடி வரையில் சென்றாலொழிய தண்ணீர் கிடைக்காத நிலைமை இன்றையதினம் இருந்துக் கொண்டிருக்கிறது.



இப்படியொரு கடுமையான குடிநீர்ப்பஞ்சம் ஏற்பட்டிருக்கின்ற இந்தச் சென்னை நகரத்தில் வருகின்ற கோடைக் காலத்திலே மக்களின் தாகத்தைப் போக்குவதற்காக என்ன அவசர நடவடிக்கையைத் தமிழக அரசு எடுத்திருக்கிறது என்பது இங்கே சரியான முறையில் விவரிக்கப்படவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

நிலத்தடி நீரை எடுப்பது என்பது ஒரு அபாயகரமான காரியமாகும். நிலத்தடி நீரை 150 அடிக்குக் கீழேயிருந்து எடுத்து விட்டால் நிச்சயமாக அந்த இடத்தில் கடல் நீர் புகுந்து சென்னையிலே உள்ள எல்லாக் கிணறுகளிலுமே உப்பு நீராக மாறி வருங்காலத்திலே சென்னையிலே யாரும் இருக்க முடியாது என்ற நிலைமை உருவாகிவிடுமென்று நான் எச்சரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருவான்மியூரில் இன்றைக்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது? அங்கே துணை சபாநாயகரவர்களுக்கு 4 கிரவுண்ட் நிலம் இருந்துவிட்டால் போதும். நான்கு கிணறுகளைத் தோண்டி ஒரு லாரிக்கு 200 ரூபாய் வீதம் 5 லாரி தண்ணீரை ஒவ்வொரு கிரவுண்டிலும் கிணறு தோண்டி எடுத்து சென்னை நகரத்திற்கு விற்பனைக்கு வந்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் அரசாங்கத்திற்குச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

Dr.K. SOWRIRAJAN: Mr. Deputy Speaker, I want some time. Don't you think it is important? You will not be able to get water after two months. Don't you think that it is your responsibility to advise the Government or suggest to the Government a solution to this problem?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சரி, முடித்து விடுங்கள்.

Dr.K. SOWRIRAJAN; I will finish it quickly.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதற்கு நான் என்ன செய்ய முடியும்? உங்களை உட்கார வைக்கத்தான் முடியும், வேறு என்ன செய்ய முடியும்?

டாக்டர் கே. சௌரிராஜன்; உட்கார வைப்பது எப்பொழுது வேண்டுமானாலும் முடியும்.

Because that is a right which you are enjoying by virtue of your position.

[டாக்டர் கே. சௌரிராஜன்] [1983 ஜனவரி 31

நிலத்தடி நீரை துராக்கிரமமாகத் திருவான்மியூர் பக்கத்தில் உள்ள மக்கள் விநியோகம் செய்து கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுப்பதற்கு அரசு முயற்சி எடுக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். தேவைப்பட்டால் இதற்கு ஒரு சட்டம் கூடப் போடலாம். நிலத்திற்கடியில் உள்ள புதையல் அரசாங்கத்திற்குச் சொந்தம்; நிலத்திற்கடியிலுள்ள கனி வளங்கள் அரசாங்கத்திற்குச் சொந்தம்; நிலத்திற்கடியில் உள்ள எண்ணெய் அனைத்துமே அரசாங்கத்திற்குச் சொந்தம். அதைப் போல பூமிக்கடியில் இருக்கின்ற தண்ணீர் மட்டும் அரசாங்கத்திற்குச் சொந்தம் என்று ஏன் அறிவிக்கக்கூடாது? அவ்வாறு சட்டமியற்றி இப்படி தண்ணீரை விநியோகம் செய்ப வர்களின் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்து ஏன் அதைத் தடுக்கக்கூடாது? அவ்வாறு செய்து மக்களுக்குக் கொடுக்கும் அளவில் ஏன் விநியோகிக்கின்ற அளவிற்கு நடவடிக்கை எடுக்கக் கூடாது என்றுதான் கேட்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக அரிசி நிலைமையைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அரிசி நிலைமை இன்றையதினம் மிகவும் கேவலமாகப் போய்க்கொண்டிருக்கிறது. மாண்புமிகு நாவலர் அவர்கள் இங்கே சொன்னார்கள், மத்தியத் தொகுப்புக் கொடுத்துக்கொண்டு இருந்திருக்கிறோம், இப்பொழுது கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். இரண்டு மாதங்களுக்கு முன்னால் இங்கே வந்திருந்த மத்திய அமைச்சர் ஒருவர் மத்தியத்தொகுப்புக்கு அரிசி கொடுக்கவில்லை, நாங்கள் கொடுக்கவில்லை, நாங்கள் கொடுக்க யோசித்துக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். அந்த நேரத்தில் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் அவர்கள் ஒரு கேள்வியைப் பத்திரிகையிலே கேட்டார்கள். மத்தியத் தொகுப்பு என்பது என்ன வங்கியா? நாங்கள் வேண்டுமென்றபொழுது கொடுத்து வைத்து, வேண்டுமென்றபொழுது எடுத்துக் கொள்ள என்ற பதில் கேள்வியைப் போட்டிருந்தார்கள். ஆனால் இன்று என்ன நடக்கிறது?

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

நாங்கள் மத்தியத் தொகுப்புக்கு உபரியாக இருந்தபொழுது கொடுத்தோம், இப்பொழுது கொடுக்கவில்லை என்று அவர்கள் குறை கூறிக்கொண்டிருக்கிறார்கள். எது உண்மை, எது நியாயம் என்பதை அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கூட இரண்டு நாட்களுக்கு முன்பு பேசியதாக பத்திரிகையிலே பார்த்தேன்.

Andhra Pradesh rice for Tamil Nadu.

தமிழ்நாட்டுக்கு அரிசி வருகிறது.

Fortunately now a Non-Congress Government has come to power in Andhra Pradesh and it will be a greater advantage to our Government.



1983 ஜனவரி 31] [டாக்டர் கே. சௌரிராஜன்]

என்று பேசியிருக்கிறார். காங்கிரஸ் அல்லாத அரசு ஆந்திராவில் வந்திருப்பதால்தான் நமக்கு அரிசி கிடைக்கப்போகிறது என்று சொல்லி இருக்கிறார். ஆனால் மறுநாளே ஹைதராபாத்திலிருந்து ஒரு அறிவிப்பு வருகின்றது.

Tamil Nadu Civil Supplies Corporation has entered into a contract, like any other trader, to buy rice from the quota of Millers in Andhra Pradesh. There is no Government to Government deal in rice.

என்று அங்கே ஆந்திராவிலே இருந்து அவர்கள் சொல்லுகிறார்கள். அறிவிப்பு வருகிறது. இதில் எது உண்மை என்பது எனக்குப் புரியவில்லை. விளக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன், சென்னை நகரத்தில் உள்ளவர்களுக்கு......

மாண்புமிகு பேரவைத் தலைவர். டாக்டர் சௌரிராஜன் தயவு செய்து முடித்துக்கொள்ளுங்கள். நீண்ட நேரம் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். ஹைதராபாத் எல்லாம் போனால் சீக்கிரம் முடிக்க முடியாது.

டாக்டர் கே. சௌரிராஜன். தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலே உள்ளவர்கள்—நம்முடைய துணை சபாநாயகர் அவர்கள் கூட—குடும்பக் கார்டிலே அரிசி வாங்குவதில்லை. வெளி மார்க்கட்டிலேதான் வாங்குகிறார்கள். ** சொல்லக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது. சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

டாக்டர் கே. சௌரிராஜன்: தலைவர் அவர்களே, ஆந்திராவிலே இருந்து வருகின்ற அரிசி 70 கிலோ ரூ. 285/—க்குக் கிடைக்கிறது. ஆனால் அரசாங்கம் 40 ஆயிரம் டன் கொள்முதல் செய்தால் சாதாரண மக்கள், 750 ரூபாய், ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்கு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

கின்ற சாதாரண மக்கள் மிகவும் கஷ்டப்படுவார்கள். ஏனென்றால், தற்போது ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்குகின்றவர்களுக்கு குடும்பக் கார்டிலே அரிசி கொடுக்கக்கூடாது என்று அரசாங்கம் உத்தரவிட்டிருக்கின்றது. அதனாலே அவர்கள் வெளி மார்க்கெட்டிலே வாங்குகிற நிலைமை இருக்கிறது. தற்போது ஒரு கிலோ அரிசி 4 ரூபாய் 5 ரூபாய் என்று வாங்குகிறார்கள். ஆனால் நீங்கள் கொள்முதல் செய்துவிட்டால் 7 ரூபாய், 8 ரூபாய் என்று விலை உயர்ந்துவிடும். எனவே இந்த காரியத்தைச் செய்யாதீர்கள் என்று 750 ரூபாய், 1,000 ரூபாய் சம்பளம் வாங்குகின்றவர்களின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியிலே, தமிழகத்திலே தொழில் துறை ஜீரோவாகப் போய்விட்டது என்று மிகப்பெரிய வாதம் நடந்தது. மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கூட சொன்னார்கள். அங்கே மத்திய அரசு ஜீரோ இன்டஸ்ட்ரி உள்ள மாவட்டங்களைப் பிரித்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். மத்திய அரசு எப்படிப் பிரித்து இருக்கிறது என்று பார்க்க நமக்கு அதிகாரம் இல்லை. ஏதோ அடிப்படையில் பிரித்திருக்கிறார்கள். நாம் என்ன செய்யவேண்டுமென்றால், என்னுடைய தாழ்ந்த அபிப்பிராயம் இன்டஸ்டிரி இல்லாத தலுக்காக்களை எல்லாம் சேர்த்து ஒரு மாவட்டமாக ஆக்கி ஜீரோ மாவட்டமாகக் காட்டி இருக்கலாம். அதைவிட்டுவிட்டு எதற்கெடுத்தாலும் மத்திய அரசைக் குறை கூறவேண்டுமென்ற அடிப்படையில், மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இப்படிப்பட்ட அப்ரோச் இந்த முறையிலே போகுமானால் எதிர்காலத்திலே தமிழகமே இருள் மயமாக ஆகிவிடும். இதனால் எந்த லாபமும் ஏற்படப்போவதில்லை என்று கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

திரு. கோ. விஸ்வநாதன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது நன்றி தெரிவிக்கின்ற இந்தத் தீர்மானத்திலே என்னுடைய சில கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுவரையில் பேசிய எல்லா உறுப்பினர்களுடைய—குறிப்பாக எதிர்க்கட்சி உறுப்பினர்களுடைய—பேச்சை நான் முழுமையாகக் கேட்டேன். கேட்கமுடியாத வாய்ப்பு இல்லாதபோது எதிர்க்கட்சி உறுப்பினர்களுடைய பேச்சையும் நான் படித்துப் பார்த்தேன். இதிலே அதிக நேரத்தை எடுத்துப் பேசுகின்ற உறுப்பினர்களில் சில பேர், இந்த அரசாங்கத்தின் மீது ஒரு காழ்ப்புணர்ச்சியைக் காட்டியிருக்கிறார்கள். கிண்டலும் கேலியும் பேசியிருக்கிறார்களே தவிர, உருப்படியான ஒரு யோசனையை





அவர்கள் சொல்லியதாகத் தெரியவில்லை. அவர்கள் பொதுவாகக் குறிப்பிட்டார்கள். இந்த அரசு ஒழுங்காகச் செயல்படவில்லை, அரசாங்கம் ஒழுங்காக நடைபெறவில்லை, பணம் ஒழுங்காகச் செலவு செய்யப்பட்டதுபோல தெரியவில்லை. குற்றச்சாட்டுகளை நிறையவே சொல்லி இருக்கிறார்கள். அவர்களுக்குப் பதிலாக ஒன்று மட்டும் நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இந்த மாநிலத்தில் தமிழக அரசினுடைய பணம் எப்படிச் செலவு செய்யப்படுகிறது என்பதை ஆராய்ந்து கொண்டிருக்கின்ற திட்டக் கமிஷன் துணைத் தலைவர், அன்று அமைச்சராகஇருந்தவரும் முன்னாள்.முதலமைச்சராக இருந்தவருமான திரு. எஸ். பி. சவான் அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார் என்பதை மட்டும் இந்த நேரத்தில் குறிப்பிடுவது அவர்களுக்குப் பதிலாக அமையும் என்று நான் கருதுகிறேன்

My friend Mr. M.G. Ramachandran has managed the affairs of this State very well. I am sure Tamil Nadu will do very well in the coming years under his stewardship.

(மாலை 4.40)

என்று திட்ட அமைச்சர் அவர்கள், திரு.எஸ்.பி. சவான் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதைத் தவிர வேறு பதிலை நான் அவர்களுக்குச் சொல்லவில்லை. யார் நேர்மையாக, நாணயமாக இருந்து இந்த நாட்டினுடைய நிலைமைகளைப் பார்க்கவேண்டுமோ அவர்கள் தமிழ்நாடு ஒழுங்காக நடைபெறுகிறது, நிர்வாகம் ஒழுங்காக நடைபெறுகிறது என்பதை ஒப்புக்கொள்கிறார்கள். நமது அருமை நண்பர் துரைமுருகன் அவர்கள் பேசும்போது ஒன்றை குறிப்பிட்டார்கள். சத்துணவாலே குழந்தைகள் நிறைய பேர்கள் சேர்ந்திருக்கிறார்கள். 2 லட்சத்திற்கு மேற்பட்டவர்கள் சேர்ந்திருக்கிறார்களென்று சொல்லி, ஆசிரியர்களை ஏன் நியமிக்கவில்லை என்று கேட்டார்களே, அவர் கேள்வியிலே பதிலும் இருக்கிறது. 33 ஆயிரம் பள்ளிகளுக்கு மேல் தமிழ்நாட்டில் இருக்கும்போது நீங்கள் சராசரியாக பார்த்தால் 7, 8 குழந்தைகள்தான் ஒரு பள்ளியில் சேர்ந்து இருப்பார்கள். அந்த 7, 8 பேருக்காக ஆசிரியர்களை அமர்த்த வேண்டிய அவசியம் இல்லை என்பதை ஏனோ அவர்கள் மறந்து விட்டார்கள். அவர் இன்னொன்றையும் கேட்டார். தமிழ்நாட்டிற்கு வரவேண்டியத் தொழிற்சாலையைக் கோட்டைவிட்டு விட்டீர்கள், அந்தத் தொழிற்சாலை கிடைக்கவில்லை, இந்தத் தொழிற்சாலை கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். இதிலே நாங்கள் ஒத்துப்போகிறோம். தமிழ்நாட்டிற்கு நிறைய தொழில் வளம் தேவை. தொழிற்சாலை வரவேண்டுமென்பதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். ஆனால் ஒன்றை அவர் கேட்டார். நீங்கள் அவர்களைப் போல எதிர்க்க தைரியம்

உண்டா. ஜோதிபாசு அவர்களைப் போல தைரியம் உண்டா என்று கேட்டார்கள். ட்ருமன் சக்ரவர்த்தியைப் போல எதிர்க்கின்ற தைரியம் உண்டா என்று கேட்டார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால் அவர் ஒன்றை மட்டும் ஏன் சொல்லவில்லை? தி.மு.கவைப்போல எதிர்க்கின்ற தைரியம் உண்டா என்று நம்முடைய துரைமுருகன் அவர்கள் கேட்கவில்லை என்பதை நான் திருப்பிக் கேட்க விரும்புகிறேன். ஒன்றை அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். ட்ருமன் சக்ரவர்த்தி அவர்கள் தன்னோடு சிறையிலே ஓர் ஆண்டுக்காலம் இருந்தவர் என்பதை அவர்கள் சொன்னார்கள். அதைத் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் மறக்கமாட்டார்கள் என்பதை நான் நிச்சயமாக நம்புகிறேன். அவர்கள் பேச்சிலே குறிப்பிட்டது எல்லாம் கிண்டல் அதிகமாக இருந்தது. அது அவர்களுக்கு இருக்கிற உரிமை. குறை சொல்வது எதிர்க்கட்சிக்கு இருக்கிற உரிமை. அதை நான் பறிக்கமாட்டேன். ஆனால் என்ன யோசனையை அவர்கள் கூறினார்கள் என்று பார்த்தால், கடைசியில் இந்த நிர்வாகத்திலே தவறு இருக்கிறது என்று சொன்னார்கள். இப்படி இந்த நிர்வாகம் நடக்கவேண்டுமென்று ஒரு சின்ன யோசனையைக் கூட அவர்கள் சொல்லவில்லை. நான் அவர்களைத் திருப்பிக் கேட்க விரும்புகிறேன். எங்களுக்குத் தைரியம் இருக்கிறதா, தைரியம் இருக்கிறதா என்று ஆளும் கட்சியைப் பார்த்து கேட்பவருக்கு நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மத்திய அரசை எதிர்ப்பதற்கு நீங்கள் வரவேண்டாம். தைரியம் இருக்கிறதா என்ற கேள்விக்கே வரவில்லை. திருச்செந்தூரிலே இங்கே இருக்கிற சின்ன காங்கிரசை எதிர்ப்பதற்கு உங்களுக்குத் தைரியம் இருக்கிறதா என்பதை மட்டும் இந்த நேரத்திலே நான் தெரிவிக்க விரும்புகிறேன். அருமை நண்பர்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் துரைமுருகன் அவர்களுக்கு பதில் அளிக்கின்றபோது அவர்களுக்கு மட்டுமே பதில் சொல்லவேண்டுமே தவிர காங்கிரஸ் கட்சிக்காரர்களை பிரச்னையில் இழுக்கவேண்டாம். விவாதத்திற்கு உட்பட்டு முறையாகப் பேசுங்கள்.

திரு. கோ. விஸ்வநாதன்: தலைவர் அவர்களே, மத்திய அரசிலே இருப்பது பெரிய காங்கிரஸ் என்றும், மாநிலத்திலே இருப்பது சின்ன காங்கிரஸ் என்றுதான் குறிப்பிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காங்கிரசிலே பெரிய காங்கிரஸ் சின்னக் காங்கிரஸ் என்று இல்லை. எல்லாம் ஒரே காங்கிரஸ் தான்.

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. விஸ்வநாதன் அவர்கள் சொன்ன மாதிரி ஏதோ காங்கிரசை எதிர்க்கிற தைரியம் உண்டா என்று கேட்டார்கள். திருச்செந்தூர் இடைத்தேர்தல் என்று அறிவிக்கப்பட்ட உடனே



திராவிட முன்னேற்றக்கழகம் களத்திலே இறங்கும், தேர்தலிலே போட்டி போடும் என்று எங்களுடைய கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். திரு. விஸ்வநாதனுக்கு எல்லாம் தெரியும். அதைப்பற்றி நான் பேசவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்த்தால் தைரியமாக எதிர்க்கும். ஆதரித்தால் அதை நேர்மையாக ஆதரிக்கும் என்று பிரதமர் அவர்களே தெரிவித்திருக்கிறார்கள். * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் கட்சியைப் பற்றிச் சொன்னதை மட்டும் நிறுத்திக்கொண்டு மற்றவற்றை நீக்கிவிடவேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

திரு. கோ. விஸ்வநாதன்: தலைவர் அவர்களே, நான் பதில் சொல்வார் என்று எதிர்பார்த்தேன். ஆனால் பதில் சொல்லவில்லை. இவர் எந்தவிதமான யோசனையையும் சொல்லவில்லை என்பதை நான் குறிப்பிட்டேன். (குறுக்கீடு)

அருமை நண்பர் ரகுமான்கான் அவர்களை நான் நிச்சயமாகப் பாராட்டவேண்டும். அவர் மட்டுமாவது ஒரே ஒரு யோசனையைச் சொல்லியிருக்கிறார். அவருடைய நீண்ட நெடிய பேச்சிலே பலமுறை சொல்லியிருக்கும் யோசனை—விலைவாசியேற்றம், உணவுப் பண்டங்கள் விலையேற்றம், காவிரி நீர்ப்பிரச்னை, மத்திய சர்க்கார் தொழில் ஆரம்பிக்காததற்கான பொறுப்பு, இவைகள் எல்லாம் தீர்க்கப்படவேண்டும் என்று சொன்னால், இவர் சொல்லும்யோசனை 'நீங்கள் ராசினாமா செய்துவிடுங்கள், என்பதுதான். இதை அவர்கள் திரும்பத் திரும்ப 4-5 முறை சொல்லியிருக்கிறார். இந்தப் பிரச்னை தீரவேண்டுமானால், ஒரேயொரு வழி ராசினாமா செய்யுங்கள், உங்களோடு நாங்கள் ஒத்துழைக்கத் தயார் என்று சொல்கிறார். நாங்கள் ராசினாமா செய்துவிட்ட பிறகு எதிர்க்கட்சி எங்களுடன் ஒத்துழைக்கத் தயார் என்று சொல்கிறார். கிராமத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள். யாருக்கு எதுயெது மீது அக்கறை உண்டோ அவர்கள் அதனதன் மீது தான் அக்கறை வைத்திருப்பார்கள் என்று. இருளனுக்கு கவனம் எல்லாம் எலிவளைமீது என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட அக்கறை இருப்பது நாட்டிற்கோ அல்லது தமிழகத்திற்கோ நல்லதல்ல. உண்மையான, உருப்படியான யோசனைகளை அவர்கள் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே சத்துணவுத் திட்டம் பற்றி கொஞ்சம் அதிகமாகவே பேசப்பட்டது. அதைப் பற்றி நான் அதிகம் பேச விரும்பவில்லை. ஒன்றை மட்டும் நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் கூட சத்துணவுத் திட்டத்தைப்பற்றி குறைக் கூறியதை என்னால் ஏற்றுக்கொள்ள

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

முடியவில்லை. இந்த நாட்டில் மிகப்பெரிய அதாரிட்டி ஆன் நுட்டிரிசியன் ப்ரொபசர் அசோக்மித்ரா அவர்கள் கூட இந்தத் திட்டத்தைப் பாராட்டியிருக்கிறார்கள். (குறுக்கீடு)

திரு. என். பழனிவேல்: நாங்கள் குறைகூறுவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். இந்த நாட்டிலே சத்துணவுத் திட்டம் போடுவதால் பெரிய மாறுதல் எதுவும் வந்து விடாது என்று தான் சொல்கிறோமே தவிர, சத்துணவுத் திட்டத்தைப் பற்றி வேறு ஒன்றும் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் வார்த்தைக்கு வார்த்தை பதில் சொல்லவேண்டுமென்ற முறையில் பதில் சொல்லக் கூடாது. அடுத்துப் பேச இருக்கும் அவரவர் கட்சி உறுப்பினர்களிடம் சொல்லி அதற்குப் பதில் சொல்லலாம்.

திரு. கோ. விஸ்வநாதன்: பசித்த வயிறு இருந்தால்தான் புரட்சி உண்டாகும் என்று சொல்வார்கள். அந்த நம்பிக்கையில் தான் இதை எதிர்க்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. புரட்சி தேவை என்று கருதுவதே பசியைப் போக்குவதற்குத்தான் அதற்காகவேதான் இந்தத் திட்டத்தை ஆதரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரப் பற்றாக்குறை என்பது நாம் எல்லாம் மிகவும் கவனத்தோடே பரிசீலிக்கவேண்டிய ஒரு பிரச்னையாகும். நமக்குத் தேவையான மின்சாரம் கிட்டத்தட்ட 3000 மெகாவாட். அதிலே பாதி அனல் மின்சாரமாகவும், பாதி புனல் மின்சார மாகவும் நாம் பெற்றுக்கொண்டு இருக்கிறோம். ஆனால் மழை பொய்த்த காரணத்தால், இரண்டு பருவ மழைகளும் பொய்த்து விட்ட காரணத்தால், இன்றைக்கு பாதியளவு கூட கிடைக்க வில்லை. சரி, கிடைக்கவில்லை, அனல் மின்சாரத்தை நம்பி இருக்கலாம் என்று சொன்னால், அதற்கு நிலக்கரி கிடைக்க வில்லை. இந்தியாவிலே இருக்கும் நிலக்கரி இந்தியாவிற்கு மட்டு மல்ல, பல நாடுகளுக்குக் கொடுத்தபின்னாலும், நம்மாலே தாங்கிக்கொள்ள முடியும், அந்த அளவிற்கு நிலக்கரி இந்தியா வில் இருக்கிறது. நமக்குத் தேவையான நிலக்கரியை மத்திய சர்க்கார் நமக்குக் கொடுக்கவில்லை. இதைச் சொல்கிறபோது சிலர் கோபித்துக்கொள்வார்கள். எதற்கெடுத்தாலும் மத்திய சர்க்காரைக் குறை கூறிப்பேசுகிறீர்கள் என்று. நான் அவர் களுக்குச் சொல்லிக்கொள்வேன். கிடைக்கின்ற நிலக்கரியைக் கொண்டுவர ரயில்வே வாகன் கேட்டால் இல்லை என்று சொல் கிறார்கள். கப்பலில் கொண்டு வரலாம் என்று கப்பல் கேட்டால் இல்லை என்று சொல்கிறார்கள். சரி, கப்பல் கிடைக்கவில்லையே நாங்களே ஒரு கப்பலை வாங்கி அதன் மூலம் கொண்டு வருகிறோம் என்று சொன்னால், கப்பலை வாங்கக் கூடாது என்று சொல்கிறார்கள். பின் எப்படிக் கொண்டு வருவது என்று கேட்டால், நாங்களே ஒரு ஷிப்பிங் கம்பெனி துவக்கப்போகிறோம்



கோஸ்டல் ஷிப்பிங் கம்பெனி துவக்கப்போகிறோம், அந்தக் கம்பெனி கப்பலை விலைக்கு வாங்கும், அப்படி விலைக்கு வாங்கி விட்ட கப்பலைக்கொண்டு, உங்களுக்கு நிலக்கரி கொண்டு வந்து தருவோம் என்று மத்திய சர்க்கார் அதற்குப் பதிலாகத் தருகிறது. நான் அதைத்தான் கேட்கவிரும்புகிறேன். எந்தக் காலத்தில் அந்தக் கம்பெனியை ஆரம்பித்து, எப்போது அது கப்பலை விலைக்கு வாங்கி, நிலக்கரியைத் தமிழகத்திற்குக் கொண்டுவந்து கொடுக்கப்போகிறது என்று தெரியவில்லை. நமக்கு முக்கியமாகத் தேவையானது அனல் மின்சாரம்.

Thiru K.S.G. Haja Shareef: On a point of information, I may tell the Hon'ble Member that more Steamers can be got at a very cheap price.

திரு.கோ. விஸ்வநாதன்: நமக்குக் கிடைக்கும் அனல்மின்சாரம் போதவில்லை, அணு மின்சாரம் உபயோகிக்கலாம் என்று சொல்லி, 1966 ஆம் ஆண்டு கல்பாக்கத்தில் ஒரு அணு மின் நிலையம் அமைப்பதற்கு முடிவு எடுக்கப்பட்டது. அது என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. இங்கேயிருக்கும் மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்வேன், 17 ஆண்டு ஆகிவிட்டதே, இந்தத் திட்டம் ஏன் வரவில்லை, இவ்வளவு பெரிய கும்பகர்ண தூக்கம் மத்திய அரசுக்கு ஏன் இருக்கிறது இந்தக் கல்பாக்கம் திட்டத்தைப் பொறுத்தவரையில் என்று கேட்க ஆசைப்படுறேன்.

(மாலை 4—50)

இங்கே எல்லோரும் தொழில் வளத்தைப்பற்றி பேசினார்கள். தொழில் வளர்ச்சி பெருகவில்லை என்ற குற்றச்சாட்டை எதிர்க் கட்சியினர் சொன்னார்கள். ஏன் பெருகவில்லை என்பதை அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். தொழில் வளர்ச்சிக்கு நம்மால் செய்ய வேண்டிய அனைத்தையும் செய்திருக்கிறோம் என்று ஆளும் கட்சி உறுப்பினர்களும், தொழில் அமைச்சர் அவர்களும் சொன்னார்கள். தொழில் துறையிலே தனியாரை எவ்வளவு ஊக்குவிக்க முடியுமோ அந்த அளவுக்கு நாம் ஊக்குவித் திருக்கிறோம். மாநில அரசு எவ்வளவு தொழில்களைத் தொடங்க முடியுமோ அவ்வளவையும் தொடங்குகிறது. ஆனால் மத்திய அரசிலிருந்து வரவேண்டிய தொழில்கள் நமக்கு வரவில்லை என்று சொல்வதிலே தவறு இல்லை என்று கருதுகிறேன்.

மேலும் தொழில் துறையிலே கடந்த ஓராண்டு காலமாக, குறிப்பாக கடந்த 6 மாத காலமாக அவர்கள் கடைபிடித்து வருகின்ற நடைமுறை நமக்கு அச்சத்தைத் தருவதாக இருக் கிறது என்று லேசாகச் சொல்ல விரும்புகிறேன். தனியார் துறையில் கூட அவர்கள் தலையீடு இருக்கிறது. சென்னை யிலிருந்து எஸ்டாபிலிஷ்டு இன்டஸ்ட்ரியலிஸ்ட் ஒருவர் போய்

தொழிலை விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டபோது அதையும் உத்தரபிரதேசத்திற்குக் கொண்டுவந்தால் லைசென்ஸ் தருகிறோம் என்று சொல்லுகிற மத்திய சர்க்கார் அமைச்சர் ஒருவர் இருக்கிறார் என்றால் நிலைமை எங்கே போய் முடியும் என்று தெரியவில்லை. இதை எல்லாம் எடுத்துச்சொன்னால் மாற்றாந்தாய் மனப்பான்மை என்றால் காங்கிரஸ் நண்பர்கள் கோபித்துக்கொள்கிறார்கள். மாற்றாந்தாய் மனப்பான்மை என்று சொன்னால் அது கூட தவறு. ஏனென்றால் அது அவர்களுக்கு அநீதி இழைப்பதாக இருக்கும். அந்த அளவுக்கு மத்திய சர்க்கார் நடந்துக் கொண்டிருக்கிறது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நாட்டின் பிரதமராக இருப்பவர் உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்; தொழில் அமைச்சராக இருப்பவர் உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்; கல்வி அமைச்சர் உத்திரப்பிரதேசத்தைச் சேர்ந்தவர். புதிதாக காபினெட்டில் சேர்ந்திருக்கிற விஸ்வநாத் பிரதாப்சிங் உத்திரப்பிரதேசத்தைச் சேர்ந்தவர். நிறைய இணை அமைச்சர்கள், துணை அமைச்சர்கள், உத்திரப் பிரதேசத்தை சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். இதில் நமக்கு ஆட்சேபணை இல்லை. தமிழ்நாட்டிலிருந்து இரண்டு பேர்கள் இருந்தார்கள். இப்போது ஒருவர் தான் 'கறிவேப்பிலைக் கொத்து மாதிரி' இருக்கிறார். நமக்கு இருக்கிற கவலை எல்லாம் தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய தொழில்கள் வந்தாகவேண்டும். அதை உத்தரப்பிரதேசத்திற்குக் கொண்டு போகக்கூடாது. இங்கே இருக்கின்ற அனைவருக்கும் அதைக் கேட்க உரிமையிருக்கிறது; காங்கிரஸ் நண்பர்களுக்கும் உரிமை இருக்கிறது; அவர்கள் அதைக் கேட்கவில்லை.

ஆனால் இதற்கு முன்னாலே இங்கே அமைச்சராக இருந்தவர் காங்கிரஸ்காரர் திரு. அனுமந்தையா அவர்கள் தைரியமாகக் கேட்டார்கள். பிரதமர் பதவியையே ராட்டேஷன் முறையில் தென்னாட்டவருக்கும் தர வேண்டுமென்று கேட்டார்கள். அப்போது இருந்தவர்கள் தைரியமாகக் கேட்டார்கள். தைரியம் உள்ள சிலர் அந்தக்காலத்தில் காங்கிரசில் இருந்தார்கள். இப்போது இருப்பவர்கள் அப்படியல்ல. (குறுக்கீடு) திரு. சாம் பிரசாத் முகர்ஜி அவர்கள் குறிப்பிட்ட ஒன்றை இந்த அவையின் கவனத்திற்கு இப்போது கொண்டுவர விரும்புகிறேன். ''இந்தியா இஸ் பாரத், பாரத் இஸ் யு.பி.'' என்று அவர்கள் ஒருகாலத்தில் சொன்னார்கள். இந்த நேரத்தில் நான் மத்திய அரசைப்பார்த்து கேட்க விரும்புவதெல்லாம் அவருடைய சொற்களை நிரூபித்து விடாதீர்கள் என்பதுதான்.

இன்னொரு விஷயத்தையும் இந்த அவையின் கவனத்திற்கு கொண்டு வந்தால் இங்கே இருக்கின்றவர்களுக்கு மத்திய அரசின் போக்கைப் புரிந்துக்கொள்ள வசதியாக இருக்கும் என்று கருதுகிறேன். மத்திய சர்க்கார் ஆசிய விளையாட்டுப் போட்டிகளை



ஒலிபரப்புவதற்காக நான்கு 'அவுட் ஸ்டேஷன் ப்ராட்காஸ்டிங்
ஸ்டேஷன், டி.வி. செட்களை வெளிநாட்டிலிருந்து வாங்கி
னார்கள். ஆசிய விளையாட்டு போட்டிகள் முடிந்த பின்னால்
அந்த 4 செட்டுகளையும் 4 மெட்ரோபோலிடன் சிட்டிகளுக்கு
கொடுப்பதாகச் சொன்னார்கள். அப்படி கொடுக்கப்பட்டிருக்க
வேண்டும். ஆனால் நடந்தது என்ன? மாண்புமிகு புரட்சித்
தலைவர் அவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அமைச்சர்
ஆர்.எம்.வி. அவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். நேரிலும்
பேசியிருக்கிறார்கள். இதுவரை அவர்களிடமிருந்து பதில் வர
வில்லை. இப்போது அவர்கள் கல்கத்தாவுக்கு ஒன்று, டெல்லிக்கு
ஒன்று, பம்பாய்க்கு ஒன்று கொடுத்திருக்கிறார்கள். ஒன்றை
சென்னைக்குத் தந்திருக்க வேண்டும். ஆனால் தரவில்லை.
அதை ஜலந்தருக்கு வழங்கியிருப்பதாக செய்தி வந்திருக்கிறது.
இதில் ஏதாவது மாற்றம் இருந்தால் காங்கிரஸ்காரர்கள்
சொல்லலாம். ஆக நிலைமை இப்படி இருக்கும்போது இது
எங்கே போய் முடியும் என்று தெரியவில்லை.

நம்முடைய சத்துணவுத் திட்டத்திற்கு அரிசி தேவை. ஏழை
எளிய மக்களுக்கு நல்ல முறையிலே ரேஷன் வழங்க அரிசி தேவை.
நாங்கள் அரிசி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்
கிறோம். அதைப்போல காங்கிரஸ் கட்சியில் சேர்ந்த அல்லது சேர
இருக்கிற டாக்டர் சௌரிராஜன் அவர்கள் அப்படி கேட்கவில்லை
(குறுக்கீடுகள்). நமக்கு அரிசி கிடைக்கவில்லை என்றால் பஞ்சம்
ஏற்படும். இப்போது பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. உணவு
உற்பத்தி குறைந்திருக்கிறது. மொத்தமாக இன்றைக்கு 80, 00
டன் அரிசி நமக்குத் தேவை. 6 மாதமாக கேட்கிறோம் அரிசி
கொடுங்கள் என்று. இதுவரை மத்திய சர்க்கார் எந்தவிதமான
உதவியும் செய்யவில்லை; அரிசி கொடுக்கவில்லை. வேறு
மாநிலங்களிலிருந்து பெற முயற்சி செய்து கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சௌரிராஜனை ஏன்
ஏதாவது ஒரு கட்சியில் சேர்க்க வேண்டும் என்று பார்க்கிறீர்கள்?
ஆளுநர் உரைமீது பேசுங்கள். (சிரிப்பு)

திரு. கோ. விஸ்வநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாதம் ஒன்றுக்கு நமது அரசுக்கு 80 ஆயிரம் டன்
அரிசி தேவைப்படுகிறது. 6 மாதங்களுக்கு மேலாகக் கேட்டுக்
கொண்டிருக்கிறோம். இதுவரையில் மத்திய அரசு நமக்கு
வேண்டிய ஒரு டன்னைக் கூட கொடுத்து உதவுவதில்லை.
அது மட்டும அல்ல. வேறு மாநிலங்களிலிருந்து விலை கொடுத்து
வாங்க முயற்சி எடுத்துக் கொண்டாலும், அதற்கு வேண்டிய
பர்மிஷனைக் கூட, அனுமதியைக் கூட கொடுப்பதற்கு மத்திய
அரசு தயங்குகிறது. பருவ மழைகள் பொய்த்து விட்டன.
ஏரிகள், குளங்கள், ஆறுகள் முதலியவை தண்ணீர் இல்லாமல்
காய்ந்திருக்கின்றன. மின்சார பற்றாக்குறை வேறு, உணவு
உற்பத்தியைப் பாதித்திருக்கிறது. இந்த நிலை இருக்கும்போதே

67 லட்சம் குழந்தைகளுக்கு உணவு வழங்க வேண்டும் என்று திட்டம் போட்டு, மத்திய அரசின் உதவி கேட்டால், ஒரு டன் அரிசியைக் கூட தரமுடியாது என்று மத்திய அரசு மறுக்கிறதே இது என்ன ஜனநாயகம்? இது என்ன தேசீய ஒருமைப்பாடு, இதிலே என்ன நியாயம் இருக்கிறது என்று நான் மத்திய அரசை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளவிரும்புகிறேன்? (மணியடிக்கப் பெற்றது)

மத்திய—மாநில உறவுகளுக்கிடையில் மிகப் பெரிய மாற்றம் இருக்கவேண்டும், அதனை நாம் ஏற்படுத்த முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆந்திர, கர்நாடகத் தேர்தலுக்குப் பிறகாவது மத்திய அரசின் கண் திறந்திருக்கப்பட வேண்டும். ஒரு காலத்தில் மிக மோசமான நிலையில் மாநிலங்கள் ஒரு குளோரிபைடு முனிசிபாலிடியாக நடந்து கொண்டிருந்தன. அந்த அளவு நிலைமை தற்போது இல்லை என்றாலும், கவர்னர்களை மாநிலங்களுக்கு அனுப்புவது போல, முதலமைச்சர்களை அனுப்பி வந்த நிலை மாற்றப்பட்டிருந்தாலும் கூட, அந்த மாஸ்டர்—சர்வெண்ட் ரிலேஷன்—ஷிப் இன்னும் மாறாமல் அப்படியேதான் இருக்கிறது. அரசியல் சட்டம் ஏற்கனவே மத்திய அரசுக்கு அதிக அதிகாரத்தையும், மாநில அரசுகளுக்கு குறைந்த அளவே அதிகாரத்தையும் கொடுத்திருக்கிறது. அது போதாது என்று இருக்கிற குறைந்த அளவு அதிகாரங்களையும் நடைமுறையில் நம்மிடம் தராமல் பிடுங்கிக் கொண்டிருந்த மத்திய அரசு இனியாவது தன்னுடைய கொள்கையை மாற்றிக் கொண்டு, ஒழுங்காக, நியாயமாக, நாணயத்தோடு நடக்க முன் வருவார்களா என்று கேட்க விரும்புகிறேன்?

தமிழ்நாட்டிலே மிகப் பெரிய வறட்சி ஏற்பட்டிருக்கிறது, வட ஆற்காடு மாவட்டத்தில் மிகக்கடுமையான வறட்சி. இருக்கிற 1,911 கிராமங்களில் ஒன்றிரண்டு போக, கிட்டத்தட்ட 1,908 கிராமங்கள் வறட்சியினால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. மொத்த நீர் நிலைகளில் 2971 ஏரிகளில்—7, 8 ஏரிகள் போக, மீதம் உள்ள 2,964 ஏரிகளிலே நீர் இல்லை. 4 ஆயிரம் கிணறுகளில் தண்ணீர் கிடையாது. உடனடியாக ஆழப்படுத்த வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். 2,500 கிராமங்களுக்கு மேலே பாதுகாக்கப்பட்ட குடிநீர் அளித்தாக வேண்டும் என்ற நிலைமை இருக்கிறது. நெல் பயிர், 6, 7 லட்சம் ஏக்கர்களில் பயிரிடப்படுகின்ற மாவட்டத்தில் 1½ லட்சம் ஏக்கர் நிலத்தில்தான் பயிரிடப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.

அது மட்டும் அல்ல இந்த மாவட்டத்திற்கு தேவை என்று 22 கோடி ரூபாயைக் கேட்டிருக்கிறார்கள். அதில் 1½ கோடி ரூபாயை உடனடியாக ஒதுக்கிக் கொடுத்திருக்கிற புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றியைக் கூறி, மீதம் இருக்கிற பணத்தையும் கொடுத்து அந்த மாவட்ட மக்களை காப்பாற்ற



வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நமது மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர், 100 கோடி தேவை என்று கேட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இன்னும் அவர் தன்னுடைய மாவட்டத்தில் (மணியடிக்கப் பெற்றது) அதிக கவனம் செலுத்தவேண்டும் என்று மட்டும் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

திரு. பாபு ஜனார்த்தனன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநருடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானததில் என்னைப் பேச அழைத்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுநர் உரையில் ஒரு 4 பக்கங்களுக்கு சத்துணவுத் திட்டத்தினுடைய விஷயங்களை சிறப்பாக கூறியிருக்கிறார்கள். சத்துணவு திட்டம் ஏழை எளியவர்களுக்கு உணவு அளிக்கவேண்டும் இளம் சிறார்களுக்கு உணவு அளிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் கொண்டு வரப்பட்டிருந்தாலும், அதன் நடைமுறைகளைப் பார்க்கிறபோது, இன்றையதினம் நாட்டிலே 50 சதவீதத்திற்கு மேலே அதன் நோக்கம் ஈடேறவில்லை என்பதை தெரிவிப்பது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

எல்லாப் பள்ளிக் கூடங்களிலேயும் ஒரு பக்கத்தில் உடைந்த மேசை நாற்காலிகள், பெஞ்சுகள் முதலியன போடப்பட்டிருக்கின்றன. இன்னொரு மூலையிலே அரிசி, பருப்பு, மற்ற பதார்த்த வகையறாக்கள் பரப்பி வைக்கப்பட்டு இருக்கின்றன. கண் காணிக்கப்படும்போது பலவிதமான புகார்கள் வருவதை பார்க்க முடிகிறது. ஆசிரியர் அரிசியை எடுத்துக் கொண்டு போய் விட்டார், எண்ணெய் டின்னைக் காணவில்லை பருப்புகள் காணவில்லை என்று எங்கே பார்த்தாலும், அது பற்றிய ஊழல் புகார்கள் தான் பத்திரிகைகளிலே கூறப்பட்டு உள்ளனவே தவிர, முறையாக இல்லை. ஆகவே குறை கூறும் முகாமாகத்தான் இன்றையதினம் அது அமுல்படுத்தப்பட்டுக்கொண்டு வருகிறது.

(மாலை 5-00)

பல இடங்களில் அந்தச் சத்துணவு திட்டத்திலே அன்றாட நிகழ்ச்சியாக பல்லி விழுந்தது என்றும் மாணவர்கள் மயக்கமுறுகிறார்கள் என்றும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. காஞ்சியிலே வாலாஜாபாத்திலே பல்லியை எடுத்து ஒரு மாணவன் காட்டி உண்டு கொண்டிருப்பவர்கள் வெஜிடேரியன் உணவுதான் என்று சொன்னார்கள், ஆனால் இது என்ன நான்—வெஜிடேரியன் உணவு என்று சொல்லி பல்லியை எடுத்துக் காட்டியிருக்கிறான். அப்படி பல்லி விழுந்த உணவினைச் சாப்பிட்டுவிட்டு 175 மாணவர்கள் மயக்கமுற்று மருத்துவ மனையிலே சேர்க்கப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இப்படி பல இடங்களில் பல்லி விழுந்தது என்றும், பூச்சிவிழுந்தது என்றும் குறைபாடுகள் உள்ளன

மேலும் இந்த மதிய உணவின் காரணமாக மதியம் வரையிலே பாடம் சரியாக நடக்கவில்லை. அதன் பிறகு உணவளித்துவிட்ட பின் அந்தக் குழந்தைகள் வீட்டிற்குச் சென்று விடுகிறார்கள். அல்லது தூங்கிவிடுகிறார்கள். இதனால் கல்வியின் தரம் பாதிக்கப் படுகின்றது. கல்வி அந்த இளம் சிறார்களின் உள்ளத்திலே எவ்வாறு பதியும். அவர்களுடைய நேரங்கள் எல்லாம் வீணாக்கப் படுகின்றன என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புக்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. விஸ்வநாதன் அவர்கள் சத்துணவுத் திட்டத்தினை நீங்கள் குறை சொல்கிறீர்களே, என்று சொன்னார்கள். குறை சொல்லத்தான் செய்வோம். ஆனால் அதற்கு பதிலாக எந்த ஏழை எளிய மாணவர்களுக்கு உணவு அளிக்க வேண்டும் என்று நினைக்கிறீர்களோ அந்த வீடுகளுக்கு நீங்கள் கொடுத்திருக்கின்ற 50 ரூபாயினை அரிசியாகவோ அல்லது பருப்பாகவோ கொடுக்கலாம். அல்லது வேறு வகையிலே அந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்ற வகையிலே கொடுக்கலாம். எனவே பள்ளியிலே இந்தச் சத்துணவுத் திட்டத்தி மூலம் உணவினைச் சமைத்துக் கொடுப்பது என்பது சரியாக நடைபெறாது என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இந்தச் சத்துணவுத் திட்டத்திலே....

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவரவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பிர் அவர்கள் தவறான தகவல்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது நான் பாயின்ட் ஆஃப் ஆர்டர் அலவ் பண்ணவில்லை.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைத் தந்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை திரு. வெங்கடசுப்பிரமணியம் அவர்கள் வலியுறுத்துகிறார்கள். அதைத்தான்நானும் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர் கூறுவது போன்ற நிகழ்ச்சி எதுவும் நடைபெறவில்லை. அதுமட்டுமல்ல. இன்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி 67 லட்சம் குழந்தைகளுக்கு இந்தச் சத்துணவினை வழங்கிக் கொண்டிருக்கின்றது. ஆனால் உணவுக் கூடங்களைக் கட்டி ஒவ்வொரு ஊருக்கும் வழங்கிக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் அரசியல் பொறாமையின் காரணமாக பல்லி விழுந்தது என்று காத்துக் கொண்டிருக்கின்ற நிலைமை திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே பல்லி விழுந்ததாக இதுவரை எந்த செய்தியும் வரவில்லை. எனவே தவறான தகவலைத் தரவேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அனுமதி தரவில்லை. (குறுக்கீடுகள்)

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் எழுந்து ரிக்கார்ட் பண்ணும்போது......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி ஒவ்வொருவரையும் அனுமதித்துக் கொண்டிருக்க முடியாது. உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் அமரவேண்டும்.

திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஆவேசமாகச் சொல்லுகிறார் ஆனால், பல இடங்களில் பத்திரிகைகளிலே செய்தி வந்திருக்கிறது. இன்னும் அடுத்த வருஷத்திற்குள் இதைப்போல், எத்தனை பிரச்னைகள் இந்த மதிய உணவுப் பிரச்னையில் வரப் போகிறது என்பதை......

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து தவறான தகவலைக் கொடுக்கக்கூடாது என்பதை இந்த நேரத்தில் மீண்டும் வலியுறுத்திக் கூறிக் கொள்கிறேன். பத்திரிகைகளுலே வந்த செய்திகள்கூட, பொய் செய்திகள் என்று மறுப்பு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அப்படியிருக்கிறபோது, வேண்டாத செய்திகளைச் சொல்ல வேண்டாம் என மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஒரு நல்ல, தாய் உள்ளத்தோடு கொண்டுவரப்பட்டுள்ள திட்டத்திற்கு, தவறான எண்ணங்களை இப்போது புகுத்தினால், சரியாக இருக்க முடியாது என்பதை நான் இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, தாங்கள் திரு.ப. வெங்கடசுப்பிரமணியம் அவர்களைப் பேச அனுமதித்தீர்கள். அவர்களை மட்டும் எப்படி அனுமதித்தீர்கள்? நாங்கள் மட்டும் என்ன இரண்டாம் தர உறுப்பினர்களா? ஆகவே, திரு. ரகுமான்கான் அவர்களையும் பேச அனுமதிக்க வேண்டும். இல்லையென்றால், எப்படி நியாயமாகும்? (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது திரு. வெங்கடசுப்பிரமணியம் அவர்களைப் பேச நான் அனுமதிக்கவில்லை. பாபு ஜனார்த்தனன் பேசி முடிக்கட்டும்.

திரு. துரைமுருகன் ; எங்களுக்குப் பேசுவதற்கு உரிமை கொடுக்கவேண்டும். அவர்களுக்கு அனுமதி கொடுத்த பிறகு, எங்களுக்கு இல்லையென்றால் என்ன அர்த்தம்? வரிக்கு வரி

எழுந்து, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லலாம், நாங்கள் மட்டும் பாபு ஜனார்த்தனம் பேசுகின்ற வரையில் சும்மா உட்கார்ந்து கொண்டிருக்க வேண்டுமா ?

திரு. அ. ரகுமான்கான் : பாயின்ட் ஆப் ஆர்டர், தாங்கள் இவ்வாறு செய்வதை ஒத்துக்கொள்ள முடியாது. எங்களுக்கும் அனுமதி கொடுக்க வேண்டும். (குறுக்கீடு)

Thsru Durasmurugan Mr. Specker Sir, a Member cau rasse a point of order at any time. So, Hon. Rahmankhan raised a point of order. You can hear him first, and then decide whether it is relevant or not. If it is relevant you allow it and if it is relevant yon can expunge it

திரு. அ. ரகுமான்கான்: பாயின்ட் ஆப் ஆர்டர், இங்கே உறுப்பினர் பாபு ஜனார்த்தனம் அவர்கள் சொல்லிய குற்றச் சாட்டுக்கு அமைச்சர் அவர்கள் மறுத்திருக்கிறார்கள். ஆனால், ஒன்றை நான் உங்கள் மூலம் தெரிவிக்க விரும்புகிறேன். புதுக்கோட்டை மாவட்டத்திலும், குமாரபாளையத்திற்குப் பக்கத்திலும், அவர் சொல்லக்கூடிய அந்த ஊரிலும் இது மாதிரியான சம்பவங்கள் நடைபெற்று, பத்திரிகைகளிலே செய்திகள் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டு, அதன் காரணமாக அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அறிக்கைகள் தரப்பட்டிருக்கின்றன. ஆகவே, இந்த செய்திகள் தவறு என்று சொன்னால், அதற்கு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டு, அது நடக்க வில்லை என்று சொல்லுகிறாரா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன் ? (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சற்று அமைதியாக இருக்கும் படி கேட்டுக் கொள்கிறேன். பாபு ஜனார்த்தனம் அவர்கள் அதை ஒரு குற்றச்சாட்டாகச் சொன்னபோது, அப்போது அமைச்சர் அவர்கள் தாய் உள்ளத்தோடு கொண்டு வரப் பட்டுள்ள திட்டத்தில், குறைபாடுகளை பெரிது படுத்தாதீர்கள் என்று வேண்டிக் கொள்கிறேன் என்று சொன்னார். இதிலே ஒருவருக்கொருவர் வாக்குவாதம் வேண்டாம். 66½ இலட்சம் குழந்தைகள் பயனடையும் இந்தச் சத்துணவுத் திட்டத்திலே குறைபாடுகளை கற்பிக்கக்கூடாது. எனவே, இந்த சப்ஜக்டை விட்டு, மற்றவற்றிற்குப் போகலாம்.

திரு பாபு. ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திலே குறைபாடுகள் உள்ளதாகத் தான் இதை நடத்த முடியுமே தவிர, குறையில்லாமல் நடத்த முடியாது என்பதை சவாலாகக் கூறிக்கொள்கிறேன். காரணம், ஒரு திருமணம் நடைபெறுகிறது என்று சொன்னால், அங்கே உள்ள உக்கிராண அறையில் அண்ணனுக்கு ஒரு தலைப்பாகையை கட்டி விட்டு, ஒரு கதவைத் திறந்துவிட்டு, தாழ்பாள் போட்டு அங்குள்ள பலசரக்குகளைக் காப்பாற்ற வேண்டியிருக்கிறது. அதேபோல், சமையல்காரன் அறையிலேயும் காவல் காத்திருப்பார்கள். அப்படி எவ்வளவு காவல் இருந்தும், திருடு போய்விடும். அதனால், இந்தத் திட்டத்திலே நடைமுறையிலே நிச்சயமாக 50%க்கு மேநாட்டு மக்களுக்கு இது உதவாது;



அதற்கடுத்து, செக் செய்வதாகச் சொல்லுகிறார்கள். செக் செய்வதற்கு குழுக்கள் போடுகிறார்கள். அன்றாடம் சமையல் செய்யும் சாப்பாட்டை, முதலிலே ஆசிரியர்கள் சாப்பிட வேண்டு மென்று பத்திரிகையிலே வருகிறது. ஒரு மொத்தை சோறு

(மாலை 5-10)

ஆசிரியர் சாப்பிட்டுவிட்டு பிறகு சிறுவர்களுக்கு தர வேண்டும் என்று அறிவிப்பு வந்திருக்கிறது. செக் என்று வருகிறார்கள் அவர்களுக்கு ஒரு குவளை சோறு கொடுத்தால் என்ன ? அவர்கள் முதலில் சாப்பிட்டுவிட்டு பிறகு வேண்டுமானால் சிறுவர்களுக்கு கொடுக்கலாம். இன்றைய தினம் இந்த சத்துணவு திட்டத்தின் மூலம் ஏதோ ஒரு பெரிய காரியத்தை சாதித்து விட்டது போல் விளம்பரப்படுத்துகிறார்கள். நடைமுறையில் இது சரிபட்டு வராது. இதை ஆளுங்கட்சியில் உள்ளவர்களும் அமைச்சர்களும் உணரவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தன்னிறைவு திட்டத்திலே இன்றையதினம் அதன் பலனை சரிபாதி கூட நிறைவேற்றவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். குடிநீர் வசதி இல்லை. நாட்டிலே இருக்கிற வறட்சி நிலைமை நம்முடைய அமைச்சர் திரு. குழந்தைவேலு அவர்கள் வருத்தப்படக்கூடாது. ஊராட்சித் தேர்தல், ஊராட்சி ஒன்றியத் தேர்தல் என்று 3 மாதத்திற்கு ஒரு முறை அறிவிப்பு வரும். ஆனால் இன்றையதினம் கிராமத்தில் விளக்கு எரியவில்லை என்றால் கூட அங்குள்ள சட்டமன்ற உறுப்பினர்களைத் தான் கேட்கிறார்கள். அமைச்சர் அவர்களை கேட்பது இல்லை. இன்றையதினம் ஊராட்சி மன்றத்தில் தலைவர் இல்லை, பெருந்தலைவர் இல்லை. எல்லோரும் இல்லாத காரணத்தினால் எந்த பிரச்னை என்றாலும் சட்டமன்ற உறுப்பினர்களைத்தான் கேட்கிறார்கள். அவர்கள் தான் பதில் சொல்ல வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அண்ணா நகரில் 20 லட்சம் பெருமானமுள்ள பங்களாவில் நமது குழந்தைவேலு அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த பிரச்னை எல்லாம் நேரில் தெரியாது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, ஏதோ 20 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள பங்களாவில் நான் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் பாபு ஜனார்த்தனன் அவர்கள் கூறியிருக்கிறார்கள். உண்மையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கட்டிக்கொடுத்ததைப் போலவும் அதில் நான் இருப்பது போலவும் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். உண்மையில் நான் இருப்பது வாடகை பங்களா 2000 ரூபாய் வாடகையில் இருந்து கொண்டு இருக்கிறேன். தன்னிறைவு திட்டத்தினை பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்து இருக் கிறார்கள் பாதி வேலைகளே நடைபெறுகிறது என்று. எல்லா

வேலைகளும் நடைபெறுகிறது. எந்த எந்த வேலையை எடுத்துக் கொண்டிருக்கிறோமோ அவைகளை முடித்து இருக்கிறோம். எங்கே வேலை நடைபெறவில்லை என்பதை தெளிவாக சுட்டிக் காட்டினால் நடவடிக்கை எடுக்கிறோம்.

திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் 20 லட்ச ரூபாய் பெருமானமுள்ள பங்களா அவருடையது என்று சொல்லவில்லை. வசதி நிலையில் அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அந்த வகையில் அவருக்கு பொள்ளாச்சியில் நடப்பது தெரியாது. அவர் பொள்ளாச்சி சட்டமன்ற உறுப்பினர்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு ; பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நான் எந்தத் தொகுதியை சேர்ந்தவன் என்பதைகூட புரிந்துகொள்ளாமல் பேசிக்கொண்டிருக்கிறார்கள். நான் உடுமலைப்பேட்டை பகுதியைச் சேர்ந்தவன்.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, பேச்சு வாக்கில் தவறாக வந்துவிட்டது. அமைச்சர் அவர்கள் பங்களாவாசியாக இருக்கின்ற காரணத்தினால் நிலைமை தெரியாது என்று சொன்னேன். ஊராட்சித் தலைவர்கள் இல்லை. உறுப்பினர்கள் இல்லை, ஒன்றிய பெருந்தலைவர்கள் இல்லை. இருந்தால் இந்த குறைபாடுகளை அவர்களிடம் தெரிவிப்பார்கள்.

தன்னிறைவு திட்டத்தின் உள்நோக்கம் சரியாக இருக்கலாம். ஆனால் 40 லட்சம், 30 லட்சம் என்று செலவு செய்கிறபோது அதில் பெரும் பகுதியை காண்டிராக்ட்காரர்கள் கொள்ளை அடிக்கிறார்களே தவிர சரியானபடி அவைகள் பயன்படவில்லை என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

காலனிக்குப் பாதை வசதி இல்லை, மயான பகுதிக்குச் சரியான பாதை வசதி இல்லை. எத்தனையோ உதாரணங்களை என்னுடைய தொகுதியிலே கொடுக்கமுடியும். இதைப்போலவே குடிநீர் விஷயத்திலும் மக்கள் நன்மைகள் பெறமுடியாத நிலைமை இருக்கிறது.

வரலாறு காணாத வறட்சி என் மாவட்டத்திலே இருக்கிறது. இதற்கு பரிகாரம் காண அமைச்சர் அவர்கள் தீவிரமாக அதில் தனது கவனத்தைச் செலுத்தவேண்டும், செலுத்துவார்கள் என்று நம்புகிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்தவரை சென்னை நகரத்திலே மின்சாரம் இல்லை என்றால் எப்படு பட்டாவது நிலக்கரி கிடைக்கவில்லை என்றாலும் கூட எண்ணெயை பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்து கொடுக்கிறார்கள். ஆனால் கிராமங்களில் தொடர்ந்து மின்சாரம் கிடைக்கவில்லை. இதனால்



விவசாயம் பாதிக்கிறது. அதனால் அங்கே தண்ணீர் கிடைக்காத காரணத்தினால் நெல் விளைச்சல் இல்லை. கேட்பார் அற்ற நிலைமை இருக்கிறது.

அதேபோலவே ஒவ்வொரு துறையிலும் ஒரு சரியான மன நிறைவு இல்லாத ஆட்சியாக இன்றையதினம் இந்த ஆட்சி இருந்துகொண்டு இருக்கிறது என்று சொல்ல நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் மருத்துவ மனைகள் ஏழைகள் பயன்படுத்த முடியாத நிலையை இருக்கிறது என்ற குற்றச்சாட்டை வருத்தத் துடன் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது மருத்துவ மனை ளிலே பணம் கொடுத்தால்தான் பெட் கிடைக்கிறது. பணம் கொடுத்தால்தான் வைத்தியம் கிடைக்கிறது என்ற நிலைமை இருக்கிறது. இதை நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. இந்த அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல பார்லிமெண்டேரியன், ஆனால் மருத்துவ இலாகாவிலே மலிந்து இருக்கின்ற ஊழலைப் பற்றிச் சொல்லாமல் இருக்கமுடியாது. பெட் கிடைக்க வேண்டு மென்றால் பணம் கொடுத்தாக வேண்டும் என்ற நிலை தான் இருக்கிறது.

இப்போது தமிழகத்திலே கடுமையான வறட்சி இருக்கிறது. ஆகவே நம்முடைய ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தாராளமாக மனது வைத்து வரிவசூலிக்கவேண்டும். வட ஆற்காடு மாவட் டத்திலே சாதாரணமா வறட்சி என்றால் வேறு ஒரு மாவட்டம் சுபீட்சமாக இருக்கும். ஆனால் இந்த நேரத்தில் தமிழகத்திலே எல்லா மாவட்டங்களும் வறட்சியால் கடுமையாகப் பாதிக்கப் பட்டிருக்கின்றன. எனவே எல்லா நிலவரிகளையும் கைவிட வேண்டும் என்று சொல்ல போனால் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய ரெவின்யூ அமைச்சர் அவர்கள் நல்ல உள்ளம் படைத்தவர்கள், அதை நிச்சயமாகச் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்தவரையில் நிச்சயமாக அவற்றை எல்லாம் ஒத்திவைக்கவேண்டும். மக்கள் சுபீட்சமாக வாழ்கிறபோது விவசாயிகள் நல்ல நிலைமைக்கு வருகிறபோது வசூலிக்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்தவேண்டும். இன்றைய தினம் கூட்டுறவுக் கடன்களை வசூலிப்பதற்காக பல வீடுகளிலே ஜப்தி செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. டிராக்டர்களை பறிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. பெரிய விவசாயிகளாக இருந்தாலும் சரி, சிறிய விவசாயிகளாக இருந்தாலும் சரி, ஒவ்வொரு விவசாயிக்கும் 1,0 ரூபாய் கொடுக்கவேண்டும். சிறார்களுக்கு — அவர்கள் பசியோடு இருக்கிறார்கள் என்று சொல்லி— சத்துணவுத் திட்டம் கொண்டுவந்து இருக்கிறார்கள்.

இன்றைக்கு விவசாயிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே ஒவ்வொரு விவசாயிக்கும் 150 ரூபாய் தருவீர்களானால் நாங்கள் பாராட்டுவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியிலே உள்ள சில நிலைமைகளை சொல்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியிலே சுமார் 80 ஏரிகள் தண்ணீர் இல்லாது பாதிக்கப்பட்டிருக்கின்றன. மழை பெய்தாலும்கூட அங்கே தண்ணீர் வராது என்ற நிலைமைதான் இருக்கிறது. பாலாறு அணைக்கட்டுப் பகுதியிலே அந்த நிலை இருக்கிறது. 190 கோடி ரூபாய் கேட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பணத்தை ஏரிக்கு தண்ணீர் வருகின்ற வாய்க்கால்களை தூர் எடுக்கக் கூடிய அளவிலே நல்ல முறையிலே பயன்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். வேம்பாக்கத்திலே 30 ஆண்டுகளாக பட்டா கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள். நீண்டகாலமாக அனுபவித்து வரும் விவசாயிகளுக்கு அந்த நிலப் பட்டாக்களை வழங்குவதற்கு ஏற்பாடுகளை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. ஏ. தங்கராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகின்ற வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் தென் ஆற்காடு மாவட்டத்தில் வள்ளலார் இராமலிங்க அடிகளார் தர்மசாலையை ஏற்படுத்தினார்கள். வடலூரில் இருக்கின்ற அங்கு வருகின்ற ஏழை எளிய மக்களுக்கு அன்னதானம் கொடுக்க ஏற்பாடு செய்து 867 ஆம் ஆண்டு மே மாதம் 5-ம் நாள்முதல் உணவு கொடுக்க ஆரம்பித்தார்கள். அன்று முதல் இன்று வரை 1.6 ஆண்டுகளாக அது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. ஆனால் நம்முடைய புரட்சித்தலைவர் அவர்கள் இன்றைக்கு தமிழகம் பூராவும் சத்துணவுத் திட்டம் தீட்டி கிராமப் பகுதிகளிலும் நகரப் பகுதிகளிலும் சேர்த்து சத்துணவு வழங்குவதற்கு 112 கோடி ரூபாய் கேட்டிருக்கிறார்கள். அதை பார்க்கிற போது நாம் மட்டுமல்ல, இன்றைக்குத் தமிழகம் பூராவும் மக்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள். இன்றைக்குக் குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலைவாய்ப்பு என்ற அடிப்படையில் 15 கோடி ரூபாய் கேட்டிருக்கிறார்கள். தன்னிறைவுத் திட்டத்திற்கு பேரூராட்சி

(மாலை 5-20)

களுக்கு 10 கோடி ரூபாய் கேட்டிருக்கிறார்கள். அதற்கு பின்னர் ஊராட்சி ஒன்றியங்களில் மேல் நிலைத் தொட்டிகள் இருக்கின்ற இடங்களில் கழிப்பறைகள் கட்டுவதற்கு ரூ. 22.56 கோடி கேட்டிருக்கிறார்கள். அதற்கு அடுத்து நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களின் அரசு கிராமங்களில் சொல்லார்களே



அதைபோல பானையிலிருந்தால் தான் அகப்பையிலே வரும் என்று, அந்த வகையிலே பானையில் இருப்பதை பங்கிடுவதைப் போல விவசாயிகளுக்கு மின்சாரத்தைப் பங்கிடுவதிலே தொடர்ந்து ஆறு மணி நேரம் மின்சாரம் தருகிறார்கள். இதை பார்க்கிற போது இந்த அரசு ஏழை, எளிய விவசாயிகளுக்கு நன்மை செய்வதில் காட்டுகிற அக்கறையையும், அன்பையும் கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

இப்படி தமிழ் நாட்டிலே எந்த திட்டத்தைப் போட்டாலும் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் திறமையாகவும், நேர்மையாகவும், நாணயமாகவும் நடத்தி வருகிறார்கள். அண்டை மாநிலங்களிலிருந்து வருகிறவர்கள் எல்லாம் இந்த ஆட்சி மக்கள் ஆட்சி என்று பாராட்டிச் செல்கிறார்கள். ஆனால் தமிழ் நாட்டிலே 20 ஆண்டுகாலம் ஆட்சி நடத்தியவர்களும், 7½ ஆண்டு காலம் ஆட்சி செய்தவர்களும், இங்கு நேர்மையான ஆட்சி நடைபெறுகிறது, உத்தமர் ஆட்சி நடைபெறுகிறது, உலகத் தமிழ் மாநாடு நடத்தி வெற்றி கண்டார், தன்னிறைவுத் திட்டத்தை நடத்தி வெற்றி கண்டிருக்கிறார், சத்துணவு ஏற்படுத்தி வெற்றி நடை போட்டுக் கொண்டிருக்கிறார் என்பதை இவர்கள் பாராட்டி இருக்கவேண்டும். பாராட்டும் எண்ணம் இருந்தாலும் பாராட்ட மாட்டார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். அதை வைத்துத் தான் நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் போற்றுவோர் போற்றட்டும், தூற்றுவோர் தூற்றட்டும் என்ற வகையில் என் கடன் பணி செய்து கிடப்பதே என்று ஏழை, எளிய மக்கள் ஏற்றம் பெறுகிற வகையில் பாடுபடுகிறார்கள்.

அதற்கு அடுதது வறட்சி நிவாரண வேலைகளுக்கு நமது புரட்சித் தலைவர் அரசு ரூபாய் 190 கோடி ரூபாய் மத்திய அரசைக் கேட்டிருக்கிறார்கள். ஆனால், மத்திய அரசு மவுனம் சாதித்துக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் நம்முடைய முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆங்காங்கு வறட்சி நிவாரண வேலைகளைத் துவங்கி இருக்கிறார்கள். துவங்கினாலும் வறட்சி இந்த ஆண்டு தமிழகம் முழுவதையும் பாதிக்கிறது. அதிலும் குறிப்பாக தென்னாற்காடு மாவட்டம் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த வேலைகளில், குடிநீர் வழங்குவது முக்கியமாக வளர்ச்சிப் பணியில் வருகிறது. கிராமப் புறங்களில் இருக்கிற மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் தொட்டியிலிருந்து அருகாமையில் இருப்பவர்களுக்கு குடிப்பதற்கு குழாய்கள் மூலம் குடிநீர் வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

கிராமப்புறங்களில் இருக்கிற ஏரிகளை, 200 ஏக்கருக்கு உள்பட்ட ஆயக்கட்டுகளை ஆங்காங்கு புல்டவுசர் மூலம் ஆழப்படுத்தி ஒரு போகம் விவசாயம் செய்வதற்கு தண்ணீர் தேங்குவதற்கு உரிய நடவடிக்கையை இந்த நிவாரண வேலையில் சேர்த்துக் கொள்ள வேண்டும். கிராமப்புறங்களில் விவசாயம் செய்வதற்கு நல்ல தொரு வாய்ப்பாக அமையும்.

கிராமப்புறங்களில் சிறு விவசாயிகள் மேம்பாடு என்ற திட்டத்தில் இங்கே நிலத்தடி தண்ணீரை குழாய் கிணறுகள் மூலமாக விவசாயம் செய்வதற்கு ஏற்பாடு செய்து, பருவ மழையைமட்டும் நம்பிராமல் தண்ணீர் கிடைக்க ஏற்பாட்டினை செய்து தரவேண்டும். இப்படிப்பட்ட காரியங்களை வறட்சி நிவாரணப் பணிகளில் எடுத்துக் கொள்ள வேண்டும். என்னுடைய தொகுதியான குறிஞ்சிப்பாடியில் இருக்கிற பெருமாள் ஏரியை இயந்திரத்தின் மூலமாக ஆழப்படுத்தி, அதற்கு கீழ்ப்புறம் இருக்கிற ஆயக்கட்டுகள் விவசாயம் செய்வதற்கு வழி வகை செய்ய வேண்டும் என்று கேட்டு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. தனுக்கோடித்தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் பொருட்டு நான் சார்ந்திருக்கும் அகில இந்திய பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பாகப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, என்னுடைய கருத்தைக் கூற விரும்புகிறேன். இப்போது கவர்னர் உரையில், தமிழகத்தினுடைய முதல்வர் மிகப்பெரிய ஒரு சௌகரியமான திட்டத்தை, சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். சத்துணவுத் திட்டம் கொண்டு வந்த நேரத்திலேயே நான் அதை வரவேற்றிருகிறேன். அதை நடைமுறைப்படுத்தும் போது, என்னுடைய தொகுதியில் சத்துணவின் நிலை என்ன என்பதைத் கண்டறிந்தேன். வறுமையில் இருந்த மக்கள்அரிசி சோறு என்ன, பருப்பு என்ன என்று தெரியாத மக்கள், இன்றைக்குப் பாராட்டக் கூடிய அளவுக்கு, அந்த குழந்தைச் செல்வங்களைப் பெற்றதாயும் தந்தையும் வேலைக்குச் செல்கின்ற நேரத்தில், பள்ளிக்கு சென்று வருகின்ற குழந்தைகள் பாதுகாப்போடு நல்ல உணவு உண்டு விட்டு வருகின்றது என்று சொல்கின்றகுரலை என் காதாரக் கேட்கிறேன். ஆகையால் அந்த சத்துணவுத் திட்டத்தை. இன்னும் சிறப்புடன் அமுல் நடத்துவதற்கு, இன்னும் தீவிரம் காட்ட வேண்டுமென்று நான் சார்ந்திருக்கிற அகில இந்திய பார்வார்ட்பிளாக் கட்சியின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன். உண்மையிலே சொல்வார்கள் தானத்தில் சிறந்தது அன்னதானம்., என்று அந்த தானத்தை எவருடைய எதிர்ப்பு வந்தாலும், நிறைவேற்றுவதற்கு நீங்கள் பாடுபட வேண்டுமென்று மனமார வாழ்த்தி வரவேற்று, பாராட்டுகிறேன்.

அடுத்து, தன்னிறைவுத் திட்டம். நன்னிறைவுத் திட்டத்தின் மூலம் என்ன செய்கிறார்கள் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் கிராமந்தோறும் பள்ளிகள் வேண்டுமென்று சொன்னார்கள்; பள்ளிகள் அமைக்க வேண்டுமென்று சொன்னார்கள். பள்ளிகள் அமைக்கப்பட்ட நேரத்தில் மாணவர்கள் இருந்து படிப்பதற்குப் பள்ளிக்கட்டிடம் கட்டாத நேரத்தில், பள்ளிக் கட்டிடம் இல்லாமல் என்னுடைய தொகுதியில், மிகப் பெரிய மரத்தடியில் குழந்தைகள் படித்தது என்பதை நீங்கள் யாரும் மறக்க



முடியாது, ஆனால் இன்றைக்கு மாணவர்கள் ரூ 1இலட்சம் மதிப்புள்ள கட்டிடத்தில் அமர்ந்து படிக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். அதே போல், இன்றைக்கு நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் மத்திய அரசு எங்களைப் புறக்கணிக்கிறது என்று சொன்னார்கள். இன்றைக்குத் தமிழகத்தில் என்றும் கண்டறியாத பெரும் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. நாங்கள் வறட்சிப் பகுதியில் பிறந்தவர்கள். வறட்சியைச் சாதாரணமாக கண்டறிந்தவர்கள். இந்த ஆண்டு மாதிரி வறட்சியை என் வாழ்நாளில் கண்டதில்லை. குறிப்பாக முகவை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ஒரு ஆண்டு மழை பெய்தால், 5 ஆண்டுகளுக்கு வறட்சி ஏற்படும், எங்கள் மாவட்ட மக்கள் வறட்சியால் வாடினால், எங்களை ஏற்றுக் கொள்ளக் கூடிய மாவட்டம் நெற்களஞ்சியம் என்று சொல்லப்படும் தஞ்சை மாவட்டமும், மதுரையும், திருநெல்வேலியும். அந்தத் தஞ்சையும் ஏன் எந்த மாவட்டத்தை எடுத்துக் கொண்டாலும், எல்லா இடங்களிலும் வறட்சி ஏற்பட்டிருக்கிற காரணத்தால், எங்களுடைய பகுதி மக்கள் எங்கே வாழ்வது, வாழச்செல்வது என்று ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். இயற்கையினுடைய சீற்றத்தால், யாராலும் தடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஊசியின் முனையில் ஒட்டகத்தை நுழைக்கப்பார்க்கின்ற காலகட்டத்தில். வேக வேகமாகப் பேசப்படுவதை நான் கேட்கிறேன். ஆகவே தமிழக அரசு மிரண்டு விட வேண்டாம். மக்கள் சக்தி உங்கள் பக்கம் இருக்கிறது என்பதை சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். உண்மையைஉறுதியாகச்சொல்வதற்கு நான் கடமைப் பட்டவன் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் மத்திய அரசு நமக்கு கொடுக்க வேண்டிய உணவு தானியத்தைக் கொடுக்க இதுவரையில் மறுக்கிறார்கள் என்று சொல்கிற நேரத்தில் வருத்தத்தோடு ஒன்றைச் சொல்லிக் கொள்ள நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இந்த நாட்டின், ஏகாதிபத்திய வெள்ளையனை விரட்டுவதற்குத் தமிழகம் மற்ற மாநிலங்களை விட எந்த வகையிலும் தாழ்ந்து கிடக்கவில்லை என்பதைத் தைரியத்துடன் சொல்லிக் கொள்கிறேன். தேசத்திருமகனாகப் பிறந்த தேவர் அவர்களுக்கு வாய்ப்பூட்டுச் சட்டம் போடப்பட்டது. அவர் பிறந்த பூமி தமிழ்நாடு. இந்த நாட்டுச் சுதந்திரத்திற்காக செக்கிழுத்தாரே சிதம்பரனார், அவர் பிறந்த ஊர் இது. ஒருவேளை உணவு ஒருவனுக்கு இல்லையென்றால், இந்த ஜகத்தினை அழித்திடுவோம் என்று சொன்ன புரட்சித் தலைவர் பிறந்த பூமி இந்த பூமி. கொடி காத்த திருப்பூர் குமரன் பிறந்த பூமி இந்த பூமி. இந்த நாட்டினுடைய விடுதலைக்குத் தமிழகம் வேறு எந்த மாநிலங்களையும் விட பின்தங்கிய மாநிலம் அல்ல என்பதை மத்திய சர்க்காருக்கு நான் சார்ந்திருக்கிற அகில இந்திய பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பாக நான் தரிவித்துக் கொள்கிறேன். ஆகவே மாற்றாந்தாய் கண்ணோட்டம் இல்லாமல், இப்போது தமிழகத்தில் நிலவுகின்ற வறட்சியைக் கருத்தில் கொண்டு என்னுடைய சகாக்களாகிய காங்கிரஸ்காரர்களை, அகில இந்திய

பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பாக நான் கேட்டுக் கொள்வது, மத்திய சர்க்காரை மனிதாபிமானத்தோடு நடந்து கொள்ள நீங்கள் சொல்ல வேண்டும்.

(மாலை 5—30)

அடுத்து தண்ணீர்ப் பிரச்னையை எடுத்துக் கொண்டால் காவிரி நீர்ப் பிரச்னையைப் பற்றி 1952—ஆம் ஆண்டே இந்த மாமன்றத்திலே முத்துராமலிங்கத் தேவர் சொல்லியிருக்கிறார்கள். இந்த நாடு சுதந்திரம் அடைந்த பிறகு நாட்டிலே உள்ள ஜீவநதிகளையெல்லாம் தேசீயமயமாக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இந்த நாட்டிலே உள்ள ஜீவநதிகளையெல்லாம் தேசீயமயமாக்காத வரையில் இந்தக் கொடுமைகளினால் நமக்குப் பாதிப்பு தான் ஏற்படும். எனவே நாட்டிலே உள்ள ஜீவநதிகளையெல்லாம் தேசீயமயமாக்க வேண்டும் என்ற இந்தக் குரலை கண்டிப்பாக மத்திய அரசுக்கு நாம் கொடுக்க வேண்டும். மத்திய அரசு அதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதற்காக அகில இந்திய பார்வார்ட் பிளாக் போராடும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுங்கட்சி மீது பல குற்றச்சாட்டுகளைச் சுமத்துகிறார்கள் சுமத்தட்டும். ஆனால் குற்றம் சொல்லக் கூடியவர்களுக்கு அதை நிவர்த்திப்பதற்கான திட்டத்தைச் சொல்லத் தெரியவில்லையே என்பதை அறிந்து நான் வருத்தப்படுகிறேன். திட்டத்தைப் பற்றி குறை சொல்பவர்கள் இதை எப்படி மாற்றியமைக்கலாம் என்று இதுவரையில் சொன்னதாகக் கேள்விப்படவில்லை அப்படிப் பட்ட திட்டத்தைக் கொடுக்கவும் இல்லை. ஆளுங்கட்சிக்காரர்கள் எதிர்க்கட்சிக்காரர்களுக்கு மரியாதை கொடுக்கும் நிலைமை வரவேண்டும். அதே நேரத்திலே ஆளுங்கட்சிக்குக் கொடுக்க வேண்டிய மரியாதையை எதிர்க்கட்சியினரும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வாதாடுவதில் திறமையாக இருங்கள். வாதாடி மக்களுக்குச் சுபிட்சமாக காரியங்கள் நடைபெறுவதற்கு உதவி செய்யுங்கள். ஆனால் அவ்வாறு செய்யாமல் மக்களையும் குழப்பி நீங்களும் குழம்ப வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு இருக்கின்ற வறட்சி நிலையைப் பற்றி அரசு அறியும். முகவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் என்றைக்குமே வறட்சியை ஏற்றுக்கொண்ட பகுதி. இந்த ஆண்டு மிகவும் கடுமையான வறட்சியை ஏற்றுக்கொண்டிருக்கிறது. 1969-ஆம் ஆண்டு மத்தியிலே இருந்து ஒரு தூதுக்குழு வந்தது. அந்த தூதுக் குழு, இந்த நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து இந்தப்பகுதி தொழில் வளம் இல்லாமல் விவசாயத்தை நம்பி உள்ள பகுதியாக, நீர்வளம் இல்லாமல் உள்ள பகுதியாக இருக்கிறது. எனவே, இதை நிரந்தர வறட்சிப் பகுதி என்று அறிவிக்க



வேண்டுமென்பதை அந்த மத்தியக்குழு ஏற்றுக்கொண்டிருக்கிறது மத்தியக் குழுசொன்னபடி அந்தப் பகுதியிலே உள்ள முதுகளத்தூர் கடலாடி ஆகிய எந்த தொழிலுமே இல்லாத பகுதிகளை நிரந்தர வறட்சிப்பகுதியாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வறண்டு கிடந்த என்னுடைய தொகுதிக்கு தமிழக முதல்வர் அவர்கள், ஏழைகளின் நண்பனாக வாழ்ந்து காட்டிக் கொண்டிருக்கும் அந்த தமிழக முதல்வரவர்கள் என்னுடையதொகுதிக்கு ஒரு வரப்பிரசாதத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அது தான் பஞ்சாலை. அந்த பஞ்சாலையின் காரணமாக ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்ததற்காக மனதார, உளமார என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை முதல்வர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டு மில்கள் கொடுப்பதாக அரசு எனக்கு சென்ற ஆண்டு தெரிவித்திருந்தது. இதில் கமுதி யூனியனில் ஒன்றை அமைத்து விட்டார்கள். இன்னொன்றை முதுகளத்தூரில் அமைக்க வேண்டுமென்று மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

மலட்டாறு திட்டத்தை இந்த ஆண்டு எடுத்துக் கொள்வதாக வாக்குறுதி கொடுத்திருக்கிறது. அதையும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்க்கிறேன்.

உணவுப் பிரச்னையிலும் மின்சாரத்தைப் பொறுத்தவரையிலும் அரசாங்கம் முன் கூட்டியே நடவடிக்கை எடுக்கத் தவறி விட்டது என்கிற கருத்தைச் சொல்கிறார்கள். அரிசியையும், மின்சாரத்தையும் அரசு கையில் வைத்துக் கொண்டு கொடுக்க மறுக்கிறார்கள் என்றால் எல்லோரும் சேர்ந்து போராடலாம். எனவே, வறட்சி நிலவுகின்ற இந்த நேரத்தில் நாமெல்லாம் ஒருமித்த கருத்தோடு இருந்து, தோளோடு தோள் நின்று ஒத்துழைப்பு கொடுத்தால் இந்த வறட்சியைச் சமாளிக்க முடியும். அவ்வாறு வறட்சியைச் சமாளித்து மக்களை நல்வாழ்விற்குக் கொண்டு வருவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பொழுது எங்கள் தொகுதி மிகவும் பெரிய வறட்சியை ஏற்றுக்கொண்டிருப்பதால், அந்த வறட்சியைப் போக்குவதற்கு தமிழக அரசு முதுகளத்தூர் தொகுதிக்கு தனிக்கவனம் செலுத்தி நிதியைக் கூடுதலாகக் கொடுக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம், ஜெய்ஹிந்த்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக அரசாலே தயாரிக்கப்பட்டு மேதகு ஆளுநர் அவர்களாலே படிக்கப்பட்ட இந்த உரையின் மீது, இந்திய தேசீய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எங்கள் மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய கருத்தினையொட்டியும், இந்த நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திறகு நான் கொடுத்திருக்கின்ற திருத்தத் தீர்மானத்தையொட்டியும் இந்த மாமன்றத்தின் முன் சிலகருத்துக்களை வைக்க விரும்புகிறேன். இந்த மாமன்றத்தின் மூலமாக தமிழக மக்களுக்குப் படிக்கப்பட்ட இந்த உரை, தமிழக உண்மை நிலையைப் பிரதிபலிப்பதாக இல்லை.

ஏதோ ஆண்டு தொடக்கத்திலே சம்பிரதாயமாக நடக்கக் கூடிய ஒரு சடங்காக இருக்கின்றதே தவிர, மக்கள் எதிர்பார்த்த பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள், மக்கள் முன்னேற்றத்திற்காக எந்த திட்டமும் காணப்படவில்லை. அதே நேரத்தில் தமிழகத்திலே இன்றைக்கு எவ்வளவு வறட்சி ஏற்பட்டிருக்கிறதோ அதை விட இந்த உரை வறட்சியாக இருக்கின்றது என்பதைத் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இந்த அறிக்கையின் மூலமாக நீண்ட நாட்களாக எதிர் பார்த்துக் கொண்டிருந்த ஊராட்சி மன்ற, ஒன்றிய நகராட்சி மாநகராட்சித் தேர்தல்கள் வரும் என்ற அறிவிப்பு வரும் என்று எதிர்ப்பார்த்தோம். ஒரு பத்திரிக்கையிலே கூட, ஒரு வேடிக்கை சித்திரம் போடப்பட்டிருந்தது. ஒரு பெரியவர் சொன்னார், மண மக்களைப் பார்த்து பஞ்சாயத்துத் தேர்தல் நடக்கும் வரை சந் தோஷமாக இருங்கள் என்று. இப்படிப்பட்ட நிலைமை தமிழகத் திலே இருக்கிறது. மக்கள் மறந்து போகின்ற அளவிற்கு நீண்ட நெடுநாட்களாக உள்ளாட்சித் தேர்தல் ஒத்தி வைக்கப்படுகின்றது.

அதே போல இந்த ஆளுநர் உரையில் கூட்டுறவுச் சங்கங்களுக் கான தேர்தல் எப்பொழுது நடைபெறும், அந்தச் சட்ட முன் வடிவு இங்கே எப்போது நிறைவேற்ற வரும் என்று எதிர்பார்க் கின்ற நேரத்திலே, அதற்கான அறிவிப்பும் இதிலே வரவில்லை. தமிழக மக்களுக்கு அது ஏமாற்றமாக இருக்கின்றது என்று நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நீண்ட நாட்களாக கிராம அதிகாரிகள் இல்லாத காரணத் தாலே கிராமங்களில் இருக்கின்ற சாகுபடி பற்றியும், கிராமத்தில் அரசுக்கு சொந்தமான சொத்துக்களைப்பற்றியும், இன்னும் கிராமங்களிலே வசூலாக வேண்டிய கடன்களைப் பற்றியும் முழுமையான தகவல் இல்லாத காரணத்தாலே இன்றைக்குத் தமிழகத்திலே பெரிதும் நாம் பாதிக்கப் பட்டிருக்கிறோம். கிராம அதிகாரிகள் இன்னும் முழுமையாக நிரப்பப் படவில்லை. அதற் கான அறிவிப்பும் இதிலே இல்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த ஆண்டு அரசுக்கு கிடைத்தது எல்லாம் வறட்சி. வறட்சி அவர்களுக்கு ஒரு சாக்காக இருக்கிறது. மழை நன்றாகப் பெய்தால், உற்பத்தி பெருகி இருந்தால் அது



ஆளுகின்ற கட்சி சாதனை என்று சொல்வார்கள். மழைபெய்யா விட்டால் அது வறட்சி என்று சொல்லி தப்பிக்கப் பார்க்கிறார் கள். இல்லை என்று சொன்னால் இருக்கவே இருக்கிறது மத்திய அரசாங்கம்.

எடுத்ததற்கெல்லாம் மத்திய அரசாங்கம். எந்தப்பிரச்னையை எடுத்துக் கொண்டாலும் மத்தியஅரசாங்கம். இங்கே தொழிலைப் பற்றிக் கேட்டால் மத்தியிலே தொழில் அமைச்சர் யாரோ ஒருவரைக் கேட்டார்: கேட்டதற்கு தமிழகத்திலே ஏன் தொடங்குகிறீர்கள். உத்திரப் பிரதேசத்திலே தொடங்குங்கள் என்று சொன்னால் என்று சொல்லுகிறார்கள், யாரிடம் அப்படி சொன்னது? அவரைச் சொல்லுங்கள் நீங்கள், யாரிடம் சொன்னார், எப்போது சொன்னார், அப்படி நிரூபிப்பீர்களே யானால், உங்களோடு சேர்ந்து நாங்களும் போராடுவதற்குத் தயாராக இருக்கிறோம் என்று கேட்டால், அதை சொன்னாலே பொது நன்மைக்கு உகந்ததல்ல என்று சொல்கிறார்கள்.

எனக்கு ஒரு சந்தேகம் இருக்கிறது. எதற்கெடுத்தாலும் மத்திய அரசாங்கத்தைப் பற்றி சொல்லுகின்ற இவர்களைப் பார்த்து தமிழக மக்கள், எதற்கெடுத்தாலும் மத்திய அரசாங்கம் என்று சொன்னால் இங்கே ஒரு அரசாங்கம் ஏன் என்று கேட்க நினைத்து ஆரம்பித்து விட்டார்களானால் நிலைமை என்ன வாகும்? மேலும் நாடாளுமன்றம் இருக்கிறது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்திற்கு இரண்டு நாடாளு மன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அந்த உறுப்பினர்கள் அங்கே கேட்டு அதற்குப் பதில் வருமேயானால் பொருத்தமாக இருக்கும். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் நாங்கள் இங்கே இருக்கிறோம். ஒரு பிரச்னையை சொல்கிறார்கள் என்றால் சரியாக இருக்குமே தவிர தமிழக மக்களைத் திசை என்றால் அதற்கு எங்கே பதில் தயாராக இருக்குமோ, எங்கே அந்தப் பதிலை பெறவேண்டுமோ அங்கே சொன்னார்கள். திருப்புவதற்காக மத்திய அரசாங்கம், மத்திய அரசாங்கம் என்று சொல்வதுபொருத்தமாக இருக்காது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்னாலே கேள்வி நேரத்தின் போது சொன்னார்கள். வறுமைக் கோட்டிற்கு கீழே இந்தியா முழுவதும் எடுத்துக் கொள்வீர்களேயானால், மக்களுடைய விழுக்காடு 48 சதவிகிதம். ஆனால் தமிழகத்திலே இவர்கள் சாதனை 53 சதவிகிதம் என்று நான் நினைக்கிறேன். என்னுடைய புள்ளி விவரம் சரியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஆகவே காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலே இருந்ததை விட ஏதாவது உயர்ந்திருக்கிறதா என்று பார்ப்போமேயானால் இந்த வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறவர்கள் எண்ணிக்கை உயர்ந்திருக் கிறது என்பது தான் என் நினைவுக்குத் தெரிந்த செய்தி. அமைச்சர் அவர்கள் சொல்வார்களானால் நான் திருத்திக் கொள்கிறேன்.

(மாலை 5-40)

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** பேரவைத் தலைவர்
அவர்களே, நான் சொன்ன கணக்கு 1967-68லே எடுக்கப்பட்ட
கணக்கு. ஏன் என்றால் மத்திய அரசுதான் கணக்கு எடுக்கிறது.
இப்போது எடுக்கப்பட்ட கணக்கல்ல, 1978-1979-லே 1980-
1981-லே, 1981-82-லே எடுக்கப்பட்ட கணக்கல்ல.

**திரு என். எஸ். வி. சித்தன்:** தலைவர் அவர்களே, இப்போது
எடுத்தால் நிச்சயமாக்க கூடியிருக்கும். பொதுவாகவே நிதி நிலை
அறிக்கை வருகின்ற போதுதான் வரி உயர்வு பற்றியெல்லாம்
அறிவிப்பு வரும். நிதி நிலை அறிக்கையிலே எந்தப் புதிய வரிகள்
வருகின்றது, எந்த இனத்திலே அதிகமாக வருகிறது. எவ்வளவு
உயருகிறது என்று எல்லாம் எதிர்பார்த்து இருப்பார்கள்.
ஆனால் இந்த ஆண்டு ஆளுநர் அவர்களது உரையிலே வரி
உயர்வுக்கு இணையாக மின்சாரக் கட்டணங்கள் உயர்வு பற்றி
செய்தி வந்திருக்கிறது. ஆகவே வருகின்ற காலங்களிலே மிகக்
க்டுமையான காலமாக இருக்கிறது. வறட்சி ஒரு புறம்.
இன்னும் நிறைய பிரச்னைகள் இருக்கின்ற காரணத்தால்
கடுமையாக எச்சரிக்க விரும்புகிறேன். இங்கே ஆளும் கட்சியிலே,
அந்த வரிசையிலே இருக்கின்றவர்கள் முதல் அமைச்சருடைய
சத்துணவு திட்டத்தை பெரிதாக பேசினார்கள். ஆளுநர்
அவர்களுடைய உரையிலே கூட ஒரே சாதனையாக, இது
பெரிதும் படிக்கப்பட்டது. இங்கே கொடுத்திருக்கிற புள்ளி
விவரப்படி ஏறத்தாழ 65 இலட்சம் குழந்தைகள் இந்த முதல்
அமைச்சருடைய சத்துணவு திட்டத்தினால் பயன் பெற்று
இருக்கிறார்கள். ஏறத்தாழ 1,40,000 பேர்களுக்கு வேலை
வாய்ப்பு கிடைத்திருக்கிறது. 112 கோடி ரூபாய்க்கு இந்த
அரசாங்கம் செலவிட்டு இருக்கிறது. சுதந்திரம் பெற்று இத்துணை
ஆண்டு காலத்திலே இப்படிப்பட்ட சாதனையை நிகழ்த்தி
யிருக்கிறோம் என்று சொல்லுகின்ற அவர்களுக்கு நான் நினைவு
படுத்துவேன். சுதந்திரம் பெற்று இத்தனை ஆண்டுகளுக்குப்
பின்னாலே தமிழ்நாட்டில் இந்த ஆட்சியிலே கள்ளுக் கடை
களையும், சாராயக் கடைகளையும், திறந்து விட்டு,
எத்தனைக் கோடி ரூபாய் இந்த அரசுக்கு கிடைக்கிறது?
சுருக்கமாக சொன்னாலும், எவ்வளவு குறைவாகச் சொன்னாலும்
கூட 600 கோடி ரூபாய் கிடைத்திருக்கிறது. அந்த 600 கோடி
ரூபாயை ஏழைகளிடமிருந்து தட்டிப் பறித்துக் கொண்டு
வறுமைக் கோட்டிற்கு கீழே இருப்பவர்கள் மேலும் வறுமைக்கு
ஆளாக்கி விட்டு....

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இதைப்போல மதுவிலக்கு அமுலில்
இல்லாமல் இருக்கிற மற்ற காங்கிரஸ் கட்சி நடைபெறுகிற
மாநிலங்களிலே எல்லாம் கூட வருவாய் வருகிறது. எனவே
அந்த மாநிலங்களிலே இப்படி போடப்படுகிறதா, இல்லை
என்றால் போடுவார்களா அல்லது ஏன் போடவில்லை என்பதற்கு
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்கம் அளிக்கவேண்டுகிறேன்.



**திரு. என். எஸ். வி. சித்தன்:** தலைவர் அவர்களே, எனக்கு
வேடிக்கையான ஒரு பழைய சம்பவம் நினைவுக்கு வருகிறது.
நான் கல்லூரியிலே படித்துக் கொண்டிருக்கின்ற நேரத்திலே
என்னுடைய நண்பர் ஒருவர் சொல்வார். நான் வின்ஸ்டன்
சர்ச்சிலைப் பின்பற்றுகிறேன் என்று அப்போது சொல்வார். எந்த
வகையிலே பின்பற்றுகிறார் பேச்சு திறமையிலே அல்லது
இப்படி 'V', என்று சொல்வதிலே பின்பற்றுகிறாரா அல்லது
வேறு எந்த திறமையிலே அவரைப் பின்பற்றுகிறார்
என்று கேட்கிற போது அவர் சொல்வார். நான் சுருட்டுப்பிடிப்
பதிலே வின்ஸ்டன் சர்ச்சிலைப் பின்பற்றுகிறேன் என்று அப்
போது சொல்வார். நான் உங்கள் மூலமாக நம்முடைய தொழில்
துறை அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். நாம்
பின்பற்ற வேண்டிய குதாரணங்கள் நிறைய இருக்கின்றன.
எத்தனையோ முன்னேற்றத் திட்டங்கள் இருக்கின்றன.
அவைகளை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அதை விட்டுவிட்டு
இதைச் சொல்லி தப்பித்துக் கொள்வது என்பது அவ்வளவு
பொருத்தமாக இருக்கும் என்று எனக்குத் தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** தலைவர் அவர்களே,
இது கொள்கை சம்பந்தமான பிரச்னை. இந்த மதிய உணவுத்
திட்டத்தை ஆதரிக்கிறோம். அல்லது தேவையில்லை என்று அவர்
கள் பேசவேண்டும் அல்லது மதுவிலக்கை ரத்துசெய்ய வேண்டும்
அல்லது மதுவிலக்கு இருக்க வேண்டும் என்று சொல்ல வேண்டும்
இரண்டையும் கேட்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குழப்ப
வேண்டாம் என நான் சொல்வேன். மற்ற மாநிலத்தில் ஆளு
கின்ற காங்கிரஸ் கட்சி அகில இந்திய கட்சி, எனவே கொள்கை
ஒன்றாகத்தான் இருக்க வேண்டும். இதனால்தான் அவர்
களிடத்தில் இந்த விளக்கத்தைக் கேட்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** தலைவர் அவர்களே, நான் மிக்க
நிதானத்தோடுதான் பேசிக் கொண்டிருக்கிறேன். குழப்பாமலே
தான் பேசுகிறேன். இந்த தமழகத்தைப் பொறுத்த அளவிலே
பேசிக்கொண்டு இருக்கிறேன். இங்கே வாக்களித்தவர்கள்
தமிழகத்து மக்கள்தான். இந்த மன்றத்திற்குத்தான் நாம் பதில்
சொல்ல வேண்டும் தமிழக மக்களுக்கு பதில் சொல்ல வேண்டும்.
தமிழகத்திலே நீங்கள் வந்ததற்குப் பின்னாலேதான் மதுக்கடைகள்
திறக்கப்பட்டிருக்கின்றன. அப்படியே எடுத்துக் கொண்டாலும்
கூட அகில இந்திய காங்கிரஸ் கட்சி கொள்கை அளவிலே கூட
உங்களுக்கு தெரியும். "தமிழன் என்று ஒரு இனம் உண்டு
தனியே அவர்க்கு ஒரு குணம் உண்டு" என்பதை சற்று நிதான,
தோடு எண்ணிப்பாருங்கள். எனவே நாம் பின்பற்ற வேண்டித்
உதாரணங்கள் நிறைய இருக்கின்றன. எங்களைப் பொறுத்த
வரையில் தெளிவாக இருக்கிறோம்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே பாண்டிச்சேரியில் வாழ்பவர்களும் தமிழர்கள் தான். மதுவிலக்கு தளர்த்துவதற்கு பாண்டிச்சேரியில் இருக்கின்ற காங்கிரஸ் அமைச்சர்கள் பதவி விலகிக் கொண்டு அவர்கள் தி.மு.க.வை மது விலக்கை அமுல்படுத்த வேண்டுமென்று வற்புறுத்துவார்களா

திரு. என். எஸ். வி.சித்தன் அமைச்சர் அவர்கள் பாண்டிச்சேரியை பற்றி சொல்வார்கள் என எனக்குத் தெரியும். பாண்டிச் சேரிக்கும் தமிழகத்திற்கும் நிறைய வறுபாடுகள் இருக்கின்ற (குறுக்கீடு). அவசரப்படவேண்டாம். 1947-க்குப் பின்னாலே நாம் மதுக்கடைகளை மூடினோம். ஆனால் பாண்டிச்சேரியில் தொடர்ந்து வழிவழியாக பிரஞ்சுக்காரர் ஆட்சியிலிருந்து தொடர்ந்து இருக்கிறது. ச்அதை சொல்லி தப்பிக்க வேண்டாம். ஆக, 600 கோடி ரூபாயை மக்களிடமிருந்து பறித்துக் கொண்டு 112 கோடி ரூபாயைக் கொடுக்கிறேன் என்பது என்ன நியாயம். குடும்பத்தில் இருக்கிற பெரியவர்களை எல்லாம் குடிக்க வைத்து விட்டு, ஒரு கையாலே 600 கோடி ரூபாயைப் பிடுங்கிக் கொண்டு, 112கோடி வைத்து ஒரு நாளைக்கு உணவு போடுகிறேன் என்று சொல்வது எவ்வளவு பொருத்தமாக இருக்கும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

மாண்புமிகு திரு. பி. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு ஆக தான் சொன்னேன். அவர் சொன்னது போல 600கோடியாக அல்லது 150 கோடியாக இருக்கலாம். அதிகமாகப் போனால் 200 கோடி இருக்கலாம். (குறுக்கீடு) 120 கோடி வருமானம் என்று சொல்கிறார்கள். அந்த 120 கோடியை வைத்து குழந்தைகளுக்கு சாப்பாடாக போடப் படுகிறது. எனவே வருவது அவர்களுக்கே, ஏழைக் குழந்தகளுக்கே செலவு செய்யப்படுகிறது. ஆகவே மற்ற மாநிலங்களிலே காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்கின்ற இடங்களில் இப்படி மானம் வந்து அவர்கள் இதை இப்படி குழந்தைகளுக்காக சாப்பாடு போடுகிறார்களா என்பதற்காக தான் நான் இதை சுட்டிக் காண்பித்தேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் இந்த மதுக்கடைகள் மூலமாக தமிழக அரசுக்கு எவ்வளவு வருமானம் என்று சொல்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத்தான் தெரியும். உங்களுக்கு கூட்டுப் பொறுப்பு இருக்கிறது என்பதும் எங்களுக்குத் தெரியும். எங்களுக்கு கிடைத்த செய்திகளை, தகவல்களை நாங்கள் இங்கே சொல்கிறோம். அந்த அடிப்படையில் இங்கே மதுக்கடைகள் மூலமாக 500-600 கோடி கிடைக்கும் என்று சொல்கிறோம் நீங்கள் ஆட்சியில் இருப்பதால் நீங்கள் சொல்கிற புள்ளி விவரங்களை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் அந்தப் பணத்தை எடுத்துத் தான் இதற்குக் கொடுக்கிறோம் என்று சொன்ன வரையில் போதும்.



இந்த இலவச சத்துணவுத் திட்டத்தின் மூலம் 35,000 பேருக்கு கூடுதல் வேலை வாய்ப்புக் கொடுக்கப் போகிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள். இதற்கு ஆட்கள் தேர்ந்தெடுப்பதில் எத்தனை குழப்பங்கள். எத்தனை முறை அந்த லிஸ்ட் மாறியிருக்கிறது? 35,000 பேர்களுக்கு வேலை கொடுப்பதற்காக விண்ணப்பங்கள் பெறப் பட்டன. அதற்காக தேர்வுக்குழு அமைக்கப்பட்டது. அந்தகுழு செய்த முடிவு இறுதி முடிவாஇல்லை, அந்தக் குழுவின் முடிவு அறிவிக்கப் படவில்லை. யார், யார் தேர்வுக்கு வந்தார்கள், எந்தெந்த கேண்டிடேட்ஸ் என்று லிஸ்ட் சென்னைக்கு வந்தது. சென்னைக்கு வந்த பிறகும் அந்த லிஸ்ட் அறிவிக்கப்படவில்லை. பின்னர் எலிஜிபிள் கேன்டிடேட்ஸ் அத்தனை பேரின் விபரங்களும் சென்னைக்கு அனுப்பப்பட்டது. பின்னர் அதுவும் மாறி, இப்போதுவேலைக்கு ஆட்களைப் போட்டு இருக்கிறீர்கள். எனக்குக் கிடைத்த தகவல் சென்னையில் இருந்து பட்டியல் மட்டும் போகவில்லை. "கான்பிடன்சியல் கவர்" போய் இருக்கிறது. ஆகவே, இந்தத் தேர்விலே கூட எங்களுக்கு ஐயம் இருக்கிறது. நாட்டில் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் இருக்கின்றன. அவற்றின் மூலமாக இவர்களைத் தேர்ந்தெடுக்காமல் இந்த முறை கொண்டு வருவானேன்.? மேலும், இந்த கான்பிடன்சியல் கவரில் உள்ள பட்டியலில் உள்ள ஆட்களை வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் எடுக்கவில்லை என்று சொன்னால் என்ன காரணத்தால் எடுக்கவில்லை என்றும் சொல்ல வேண்டும் என்ற செய்தியும் எங்களுக்குக் கிடைத்து இருக்கிறது.

நான் கேட்டுக் கொள்வது எல்லாம் இத்தகைய குழப்பங்கள் இதில் வருவானேன்.? ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களைப் போடுவதற்குத் தானே இத்தனையையும் செய்து இருக்கிறீர்கள் என்று சொல்லிக் கொள்கிறேன்.

மேலும், சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பல் பாடி திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். அது வெறும் விளம்பரத் திட்டம் என்று நீங்களே சொல்லிவிட்ட காரணத்தால் நான் அதைப்பற்றி அதிகம் சொல்ல வேண்டியதில்லை அதைப் போலவே கிராமத்திலே பெண்களுக்கு கழிப்பிட வசதி என்று சொல்லி அதற்காகப் பலகோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. தற்போது குடிநீர் வசதி இல்லாத காரணத்தால் அந்த இடங்களில் இந்தத் திட்டம் எந்த அளவிற்கு வெற்றிகரமாக அமையும் என்பதைப் பொறுத்து இருந்து பார்க்க வேண்டும்.

பாரதிவிழா கொண்டாடும் இந்த அரசுக்கு நான்ஒரு யோசனை சொல்லிக் கொள்வேன். பாட்டு திறத்தாலே இந்த வையத்தைப் பாலித்திடும் அந்தப் புரட்சிக்கவிஞனுடைய பாடல்களை எவ்வளவு மலிவான விலையில் தமிழக மக்களுக்கு, குழந்தைகளுக்கு கிடைக்கச் செய்ய முடியுமோ அந்த அளவிற்கு விலை குறைத்து கொடுப்பதற்கு முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தன்னிறைவுத் திட்டம் இன்று மூன்று கட்டங்களாகப் பிரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டு வருகிறது. அதிலே ஆரம்ப காலத்தில் அமல்படுத்தப்பட்ட ஒன்றியங்களுக்கு குறைந்த அளவுதான் நிதி ஒதுக்கப்பட்டது. இரண்டாவது, மூன்றாவது கட்டங்களில் அதிகப்படுத்தப்பட்டது. நான் உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்வேன் ஏற்கனவே முதல் கட்டத்தில், இரண்டாம் கட்டத்தில் எடுக்கப்பட்ட ஒன்றியங்களில் இன்னும் பல வேலைகள் நிறைவேற்றப் பெறாமல் இருக்கின்றன. ஆகவே, தன்னிறைவுத் திட்டத்திலேயே நிறைவேற்ற முடியவில்லை என்று சொன்னால், வேறு எந்தத் திட்டத்திலே அதை நிறைவேற்ற முடியும், நிறைவேற்றப் போகிறீர்கள் என்று கேட்க விழைகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தினை மூன்று கட்டங்களாகப் பிரித்து, அந்த மூன்று கட்டப் பணிகளும் இன்றைக்கு நடந்து கொண்டு இருக்கின்றன. அதிலே முதல் கட்டம், இரண்டாவது கட்டம் பணிகள் முடிந்து விட்டன. மூன்றாவது கட்டப் பணிகள் கூட 75% நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன. ஆகவே, முடியாமல் எந்தப் பணியும் இல்லை. ஏதாவது கிராமங்கள் வேண்டுமானால் முதல் கட்டம், இரண்டாவது கட்டம் ஆகியவற்றிலே விடுபட்டுப்போய் இருக்கலாம். எடுக்கப்பட்ட வேலைகள் அனைத்தும் முடிக்கப்பட்டு விட்டன என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என்.எஸ். வி.சித்தன்: நான் முடிவுபெறாமல் இருக்கும் பணிகளைப் பற்றிச் சொல்லவில்லை. அதிலே நான் அதிக கவனம் செலுத்தவில்லை. காரணம், அது எப்படியும் இன்னும் 6 மாத காலத்திற்குள் முடிக்கப்பட்டுவிடும். ஆகவே அதைப் பற்றி எனக்கு அக்கறைஇல்லை. என்னுடைய அக்கறையெல்லாம் பலவேலைகள் எடுக்கப்படாமல் இருக்கின்றன. பலவேலைகள் முதல் கட்டத்திலேயோ அல்லது இரண்டாவது கட்டத்திலேயோ எடுக்கப்படாமல் பல இடங்களில் இருக்கின்றன. அவைகளையெல்லாம் தன்னிறைவுத் திட்டத்திலே எடுத்துக் கொள்ளவில்லையே, அவற்றிற்காக என்ன மற்றொரு திட்டமா வரப் போகிறது? இப்படி விட்டு விட்டு வேலைகளை எடுத்துக் கொண்டால் அந்தப் பெயருக்கே பொருத்தம் இல்லாமல் போய்விடும் என்று சொல்லிக்கொள்கிறேன். தன்னிறைவுத் திட்டம் பற்றி நிறையச்சொல்ல வேண்டியிருந்தாலும், அதிக நேரம் இல்லாததால் அடுத்த பிரச்னைக்கு நான் போகிறேன்.

(மாலை 5.50)

இன்றைக்கு தமிழ்நாட்டிலே வறட்சி மிக அதிகமாக இருக்கிறது. நாம் எதற்கெடுத்தாலும் 'வரலாறு காணாத, வரலாறு காணாத' என்று சொல்கிறோம். அது எதற்குப் பொருந்துகிறதோ இல்லையோ இப்போது வரலாறு காணாத வகையில் இருக்கிற இந்த வறட்சி நிலைமைக்கு பொருத்தமாக



இருக்கிறது. இப்போதே இப்படி இருக்கிறது; இனி வருகின்ற காலம் இன்னும் கடுமையாக இருக்கும் என்று எச்சரிக்கை செய்கிறேன். குடிநீர் பிரச்சினையில் பஞ்சம், அரிசிப் பிரச்சினையில் பஞ்சம். இப்படி பல இனங்களிலே பற்றாக்குறை, பஞ்சம் இருக்கின்ற காரணத்தால் வரும்காலம் கடுமையாக இருக்கும். மதுரை மாவட்டத்தில் நேற்று ஒரு கிலோ அரிசி 5 ரூபாய்க்கு விற்றதாகத் தகவல் வந்திருக்கிறது. கிலோ 5 ரூபாய் என்றால் ஒரு படி 7 ரூபாய் ஆகிறது. விலை விஷம் போல் ஏறிக்கொண்டிருக்கிறது. படி அரிசி ரூ.10—க்கு விற்கும் நிலை வரத்தான் போகிறது.

வறட்சி நிவாரணப் பணி அறிக்கையை முன்னாடியே அனுப்பி வைத்திருக்க வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் சொன்ன போது அமைச்சரவர்கள் சொன்னார்கள். 24—ந்தேதி ஆளுநர் உரைக்குப் பின்னாலே சொன்னார்கள், அதற்கு முன்னாலே அனுப்பியிருந்தால் கொஞ்சம் குளம் குட்டைகளில் தண்ணீர் இருந்தால், யாராவது வந்து பார்த்தால் கொஞ்சம் பசுமை இருப்பதாகத் தெரியும், அதனால்தான் முன்னாலேயே அனுப்பவில்லை என்று சொன்னார்கள். நல்லவேளை. இன்னும் நான்கு மாதங்கள் கழித்து அறிக்கை அனுப்பியிருந்தால் வறட்சி நிலை நன்றாகத் தெரியும் என்று சொல்லவில்லை; அனுப்பிவிட்டதாகச் சொன்னார்கள்.

வறட்சி நிலைமை இப்போதே கடுமையாக இருப்பதால் நிவாரணப் பணிகளை போர்க்கால அடிப்படையில் செய்ய வேண்டும், போர்க்கால நடவடிக்கை என்று சொல்லுகின்ற போது பெரியகுளத்தில் நாடாளுமன்ற தேர்தலின்போது எப்படி செயல்பட்டீர்களோ அப்படி செயல்பட வேண்டும் என்று சொல்வது பொருத்தமாக இருக்கும். குடிநீர் கேட்டபோது, நுகர்பொருள் கேட்டபோது எவ்வளவு முனைப்பாக பெரியகுளத்தில் காரியங்கள் நடைபெற்றனவோ அதே முனைப்புடன் இந்த வறட்சி நிவாரணப் பணிகள் நடைபெற வேண்டும்.

வறட்சிப் பணிகளுக்கு மத்திய அரசிடமிருந்து தமிழ்நாட்டுக்கு கொடுக்க வேண்டிய பணத்தை கேட்பதிலே இந்த அரசோடு துணையாக இருந்து காங்கிரஸ் கட்சி எவ்வளவு அதிகமாக பணத்தைப் பெற்றுத்தர முடியுமோ அவ்வளவு அதிகமாகப் பெற்றுத்தர தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு உரிய ஆரம்ப நடவடிக்கைகளை நீங்கள் எடுக்க வேண்டும்.

இன்றைக்கு தமிழ்நாட்டிலே கடுமையான மின்சாரப்பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. ஆளுநர் உரையிலே 75 சதவீதம் பற்றாக்குறை இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். 100 சதவீதம் பற்றாக்குறையினால் வேலைகள் தடைப்பட்டு

இருப்பதை அவர்கள் குறிப்பிடவில்லை. இதற்கு முன்னால் எந்தக் காலத்திலும் இல்லாத அளவுக்கு இப்போது இந்த மாநிலத்தில் மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது, நிலைமை கடுமையாக இருக்கிறது என்று சொல்லியிருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும். (மணியடிக்கப்பெற்றது) பின் வரிசையில் இருந்தால் 10 நிமிடம் கொடுப்பீர்கள், முன்வரிசைக்கு வந்த பிறகாவது கொஞ்சம் கூடுதல் நேரம் கொடுக்கக்கூடாதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எல்லோரும் 3 பிரச்சனைகள் பற்றித் தான் பேசுவார்கள். வறட்சி, மின்சாரம், தண்ணீர் என்ற மூன்றும்தான் முக்கியமாக இடம் பெறுகிறது. அதை சாதாரணமாகவும் சொல்லலாம், அழுத்தமாகவும் சொல்லலாம். எப்படிச் சொன்னாலும் ரிக்கார்டு ஆவது ஒரேமாதிரிதான் இருக்கும். சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** 5, 6 மாதங்களுக்கு முன்னாலேயே மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டுவிட்டது. அப்போதே உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் இந்தப் பிரச்சனையில் நிலைமையை ஓரளவு சமாளித்திருக்கலாம். 1967-க்குப் பின்னால் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி இல்லாத காரணத்தால் மின் உற்பத்தியில் போதிய கவனம் இல்லாததால் இப்படிப்பட்ட கடுமையான மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மதுக் கொள்கையில் இந்த அரசு தள்ளாடிக்கொண்டிருக்கிறது. பாட்டில்களில் அடைக்கப்பட்ட சாராயம் விநியோகிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் என்பது என்னுடைய ஞாபகம். ஆனால் இன்றைக்கு மதுக்கடைகளில் பாட்டில் இல்லாமலேயே தாராளமாக வழங்கப்படுகிறது, கள்ளச்சாராயம் நிறைய விற்கப்படுகிறது, நாங்கள் மதுவிலக்கை ரத்து செய்யவில்லை, தளர்த்தி இருக்கிறோம் என்று சொன்னீர்கள், பெர்மிட் வழங்குகிறோம் என்று சொன்னீர்கள், ஒரு ஆளுக்கு எவ்வளவு கொடுக்கிறோம் என்று சொன்னீர்கள். அந்த அடிப்படையிலே கேட்கிறேன். இந்த சர்க்கார் இதுவரையில் எவ்வளவு பெர்மிட் கொடுக்கிறது? அதற்கு எவவளவு சாராயம் வழங்க வேண்டும்? எவ்வளவு சாராயம் இன்று கடைகளில் விற்கப்படுகிறது என்ற கணக்கை உங்களால் கொடுக்க முடியுமா?

இன்றைக்கு தமிழ்நாட்டில் எங்கு பார்த்தாலும் கள்ளச் சாராயம் தாராளமாக விற்கப்படுகிறது. இந்த அரசால் தடுக்க முடியவில்லை. இதைப்பார்த்தாலே தெரியும் இந்தத் திட்டம் எவ்வளவு தோல்வி அடைந்திருக்கிறது என்பது.

மத்திய அரசு எந்தத் தொழிலையும் இங்கே தொடங்கவில்லை, மாற்றான்தாய் மனப்பான்மையோடு நடந்து கொள்கிறது என்று சொன்னார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்த



வரையில் வெடிமருந்து தொழிற்சாலை ஒன்றை பின்தங்கிய மாவட்டத்தில் ஆரம்பிக்க வேண்டுமென்று முடிவு செய்து, இராமநாதபுரம் மாவட்டத்தில் சாயல் குடிக்கு அருகே இடம் எல்லாம் பார்க்கப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அங்கே தகுந்த ஒரு இடத்தை ஆய்வு செய்து அறிக்கை அனுப்பி வைத்த பின்னால் அந்தத் திட்டம் வடாற்காடு மாவட்டத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது. இப்படி தமிழக அரசே ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்கு மாற்றம் செய்யும்போது மத்திய அரசு பல்வேறு சூழ்நிலைகளை ஆராய்ந்து, பல்வேறு காரியங்களை ஆராய்ந்து மாற்றம் செய்வதில் நியாயம் இல்லையா? இங்கே ஒருவர் தொழில் தொடங்க அல்லது வேறு ஏதாவது ஒரு காரியத்திற்கு மனு போட்டால் உடனே கொடுத்து விடுகிறீர்களா? எத்தனை தடவை வலியுறுத்திக் கேட்டு பல முறை அலைந்து பெறவேண்டி இருக்கிறது. அதைப்போல எழுதியிருக்கிறோம், தந்தி கொடுத்திருக்கிறோம் என்று சொல்லாமல், தொழில் துறை அமைச்சர் அவர்கள் மிகவும் இளமையாக இருக்கிறார்கள், அவர்கள் சுறுசுறுப்பாக இயங்கி நிறைய தொழில்களை பெறுவதற்கு முயற்சி செய்யவேண்டும்.

1966-க்கு முன்னால் இருந்த நிலையை கருத்திற்கொண்டு எதிர்காலத்திலே பெரிய தொழிற்சாலைகளை இங்கே கொண்டு வர நீங்கள் முயற்சி செய்ய வேண்டும், நாங்கள் அதற்கு துணையாக இருக்கிறோம். இதிலே மாற்றாந்தாய் மனப்பான்மை கிடையாது.

காலம் கடத்திவிட்டு, மெத்தனமாக இருந்துவிட்டு மத்திய அரசையே அடிக்கடி குற்றம் சொல்வதில் பயன் இல்லை என்று நான் கூறுவேன்.

அடுத்தாற்போல் ஒசூர் தாலுக்காவிலே கேரலப்பள்ளி என்று ஒரு அணை கட்டப்பட இருக்கிறது. அந்த அணையின் மூலமாக சிப்காட்டுககு தண்ணீர் கிடைப்பதோடு, அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களுக்கும் தண்ணீர் வசதி கிடைக்கும். அந்த அணை 1976 ஆம் ஆண்டு கட்ட ஆரம்பிக்கப்பட்டது. 2.65 லட்சம் செலவிடப்பட்டது. 1980 ஆம் ஆண்டில் கேட்கும் போது 4 ஆண்டுகளுக்குப் பின்னாலே அதன்மீது வழக்கு ஒன்று வழக்கு மன்றத்திலே இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். எனக்கு கூட நினைவு வருகிறது நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் ஒரு ஆண்டு அல்லது 2 ஆண்டுகளுக்கு முன்னாலே இது குறித்து வழக்கொன்று வழக்கு மன்றத்திலே இருக்கிறது என்று சொல்லியதாக எனக்கு நினைவிருக்கிறது. இப்படி 6,7 ஆண்டுகளுக்குப் பின்னாலும் இந்த அணை கட்டி முடிக்கப்பட்டு முழுமையாக்கப்படாமல் இருக்கிறது. வழக்கை விரைவில் முடிக்க அரசு முயற்சி எடுக்கவில்லை,

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1983 ஜனவரி 31

இன்னும் சொல்லப்போனால், 600 ஏக்கர் நிலம் அதற்காக ஆர்ஜிதம் செய்யப்பட்டது, கால்வாயும் கட்டப்பட்டது, அணை கட்டி முடிக்கப்பட்ட நிலையிலேயும் தண்ணீர் வராமல் 600 ஏக்கர்நிலச் சொந்தக்காரர்கள் விவசாயமும் செய்ய முடியாமல் அந்த 600 ஏக்கர் நிலக்காரர்களுக்கு நஷ்டஈடும் தராமல் இருக்கக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே தயவு செய்து இத்தகைய மெத்தமான மந்தப்போக்கை நீங்கள் மாற்றிக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய அமைச்சரவையிலே இருப்பவர்கள் அறிவிப்பு கொடுப்பதிலே சமர்த்தர்கள். ஆனால் கொடுத்த அறிவிப்புகளை எந்த அளவு நிறைவேற்றுகிறார்கள்? நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 12,000 போலீஸ்காரர்களை வேலைக்கு நியமிக்கப் போகிறோம் என்று அறிவிப்பு செய்தார்கள். சென்ற ஆண்டு பேசுகிறபோது கூட இதைப்பற்றிச் சொன்னேன் நான். போலீஸ் வேலைக்கான தேர்வு நடத்தப்பெற்றது. தேர்விலே ஒழுங்கீனம் நடைபெற்றதாகச் சொல்லி, அதற்கான பத்திரங்களை எல்லாம் தேர்வுக்கு வந்தவர்கள் கொடுத்தற்குப் பின்னாலே, ராணுவத்திலே ஆள் எடுப்பது போல நாங்கள் எடுக்கப் போகிறோம் என்று சொன்னார்கள். ஆனால் அது என்னவாயிற்று? நாங்கள் போய்க்கேட்டால் ஒரு விவரமும் தெரியவில்லை. என்று மக்கள் எங்களிடம் கேட்கிறார்கள். இந்த மாதிரியான ஒத்தி போடுகிற முறைகள் நல்லதல்ல என்று எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன்.

நம்முடைய ஊரகத் தொழில் அமைச்சர் அவர்கள் இங்கே இல்லை, இருந்தால் சொல்வார்கள். ஒரு ஆண்டுக்கு முன்னாலே ஒரு அறிவிப்பு கொடுத்தார்கள் தனியார் சீட்டுக் கம்பெனிகள் செய்யும் மோசடிகளை தவிர்ப்பதற்காக, அரசாங்கமே சீட்டுக் கம்பெனி நடத்த போகிறது என்று. நாள் குறித்துச் சொன்னார்கள். அண்ணாவின் பிறந்தநாள் அன்றிலிருந்து சீட்டுக்கம்பெனி தொடங்கப் போவதாக சொன்னார்கள். அறிவிப்புக் கொடுத்து ஒரு ஆண்டு ஆகிறது. அண்ணாவின் பிறந்தநாள் வந்து 6மாதங்கள் ஆகிறது. நினைவு நாள் கூட இன்னும் 3 நாட்களில் வரயிருக்கிறது என்ன ஆயிற்று சீட்டுக்கம்பெனி? சீட்டுக் கம்பெனி சட்டத்திற்கு சீட்டுக் கிழித்து விட்டார்களோ தெரியவில்லை. இப்படிப்பட்ட அறிவிப்புகள், அறிவிப்புகளாக மட்டும் நின்றுவிடாமல், அதனை நிறைவேற்றவும் முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்கள் சென்ற ஆண்டு ஒரு அறிவிப்புக் கொடுத்தார்கள். என்ன அறிவிப்பு? தனியார்களுக்கு சொந்தமாக இருக்கிற சந்தைகளையெல்லாம் (குறுக்கீடு) ஒழித்துவிட்டு அரசாங்கமே சந்தைகளை கட்டயிருக்கிறது என்று, அதன்



1983 ஜனவரி 31] [திரு. என். எஸ். வி. சித்தன்]

மூலமாக ஏழை நடுத்தர வியாபாரிகளுக்கு நன்மை செய்யவிருக்கிறது என்றும் சொன்னார்கள். நீங்கள் அன்றைக்கு அறிவித்து ஒரு ஆண்டு ஆகிறது. ஆனால் சந்தையிலே இருந்த வியாபாரிகள் நடுத்தெருவிலே தள்ளப்பட்டு அந்த சந்தைகள் இருந்த இடங்களில் பல மாடிக் கட்டிடங்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, நான் அறிவிப்புக் கொடுத்தது உண்மை. கடந்த ஆண்டு பட்ஜெட் கூட்டத் தொடரிலே அந்த அறிவிப்பு செய்தேன். அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே சீக்கிரமாக அது அமுல் படுத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, எனக்கு இருக்கிற ஆதங்கம் எல்லாம், அறிவிப்புகளுக்கு ஆண்டு விழாக்கள் கொண்டாடக்கூடிய நிலை ஏற்பட்டுவிடக் கூடாதே என்பது தான். விரைவில் வரவேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன், விரைவில் நடவடிக்கை எடுத்தால் மிக்க மகிழ்ச்சி வரவேற்கிறோம்.

அதேபோல இன்றைக்கு தமிழக அரசாங்கத்திலே மூத்த அதிகாரிகள் மத்தியிலே, ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் மத்தியிலே ஒரு திருப்தியற்ற நிலை ஏற்பட்டிருப்பதை என்னால் கேட்கமுடிகிறது. இங்கே வேலை கிடைக்காத பிரச்னை ஒரு புறம் இருக்கிறது. பல்வேறு திரப்பப்படாத பதவிகள் நிறைய இருக்கின்றன, ஆனால் அவை நிர்ப்பந்த முறையிலே கட்டாய காத்திருப்பாக வைக்கப்பட்டிருக்கிறது. இதுபோன்ற கட்டாய காத்திருப்பு இருக்கிறதே மிகவும் கொடுமை. வேலை இல்லாத் திண்டாட்டத்தைவிட கொடுமையானது. இன்றைக்கு பல்வேறு அதிகாரிகள் மத்தியில் இந்த நிலை இங்கேயும் சரி போலீஸ் துறையிலேயும் சரி நிம்மதியற்ற நிலை இருந்து வருகிறது என்பதை மறுக்க முடியாது. உதாரணமாகச் சொன்னால் சிவில் சப்ளைஸ் கமிஷனராக இருந்த பத்மநாபன் அவர்களைப் பற்றிச் சொல்ல முடியும். இன்றைக்கு உயர் அதிகாரி கங்கப்பா அவர்கள் ராஜினாமா செய்திருக்கிறார்கள். பனம் புழுங்கி ராஜினாமா செய்திருக்கிறார்கள். அதைப்பற்றியெல்லாம் நிறைய சொல்லவேண்டும் என்று நான் நினைக்கிறேன். இது போன்ற மூத்த உயர் அதிகாரிகள் மத்தியிலே அரசாங்கத்திற்கும் அமைச்சர்களுக்கும் இடையே நல்ல இணக்கம் இருக்க வேண்டும். நம்முடைய திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அவர்கள் முன் அணியிலே இருக்கக்கூடிய காரணத்தாலே, நல்உறவு இருக்க வேண்டும் என்று சொல்லவிரும்புகிறேன்,

அது மட்டுமல்ல கால்நடை துறையிலே 1982—83 ஆம் ஆண்டுகளிலே பெரிய முறைகேடுகள் நடைபெற்றிருக்கின்றன. என்னிடத்திலே விவரங்கள் இருக்கின்றன. அமைச்சர் அவர்கள் கேட்டால் கூட தர முடியும்.

(மாலை 6—00)

டெண்டர் போடுவதிலே பல்வேறு தவறுகள் நடந்திருக்கின்றன. பல இலட்சக்கணக்கான ரூபாய் மோசடி நடந்திருப்பதாகச் செய்தி கிடைக்கின்றது, கால்நடைத்துறையிலே கால் நடைகளுக்கு மருந்து வாங்குகின்றபோது அந்த மருந்துகளின் கலவையைச் சொலலித்தான் டெண்டர் போடுவது வழக்கம். ஆனால் இப்போது என்னவென்றால் தனியார் கம்பெனிகள் என்னென்ன பெயர்களை அந்தந்த மருந்து களுக்குக் கொடுத்திருக்கிறார்களோ அந்தப் பெயர்களைச் சொல்லியே டெண்டர் விடுகிறார்கள். மேலும் குறைந்த டெண்டர் கொடுத்தவர்கள் எடுத்துக் கொள்வார்கள் என்பது சாதாரணமாக இருந்து வந்த நிலைமை. ஆனால் தற்போது கூடுதலாக டெண்டர் கொடுத்தவர்கலை அழைத்து நீங்கள் அதிகமாக கொடுத்திருக்கிறீர்கள் என்று சொல்லி உடைத்த டென்டரைக் குறைத்து கொடுக்க சொல்லி வாங்கி இருக்கிறார்கள். இதனால் இலட்சக்கணக்கான ரூபாய் மோசடி செய்யப்பட்டிருக்கின்றது. அது குறித்து வழக்கு மன்றத்திற்கு சென்று நீதிமன்றத்திலே தீர்ப்பளிக் ப்பட்டது. அதிகாரிகள் வாங்கக்கூடாது என்று நீதிபதிகள் தீர்ப்பளித்ததற்குப் பிறகும் அந்த நீதிமன்றத்தின் தீர்ப்பிற்குத் தலை வணங்காமல் மேலும் வாங்குவதற்கு முயற்சி நடப்பது என்பது தமிழக அரசிலே தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. அதனால் மக்களின் வரிப்பணம் பல லட்சக்கணக்கில் பாழடிக்கப்படுகின்றது. அதைத் தடுத்து நிறுத்த வேண்டும். சம்பந்தப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அடுத்து ஆளுநர் அவர்களின் அறிக்கையிலே 16வது பக்கத்திலே வனத்துறை பற்றிச் சொல்லி இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் ஆகிவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போதுதான் ஆளுநர் உரைக்கு வந்திருக்கிறீர்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன்;** தலைவரவர்களே, மரங்களை நிறைய வளர்க்கவேண்டும் என்பதிலே கருத்து வேறுபாடு இல்லை. மரங்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதிலும் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் மரங்களை வெட்டுகின்றபோது வனத்துறையிலே முறைகேடுகள் நடக்கின்றன. நான் சார்ந் திருக்கின்ற மதுரை மாவட்டத்திலே வைகை நதிப் பக்கத்திலே நதி உருவாகின்ற இடத்திலே இருந்து 15 கிலோ மீட்டர் வரை "ஆற்றுமருது" என்ற ஒருவகை மரம் இருக்கின்றது. ஆனால் பொதுவாகப் பட்ட மரங்களைத்தான் ஏலம் விடுவது



வழக்கம். ஆனால் வழக்கத்திற்கு மாறாக சில மாத காலமாக உயிரோடு இருக்கின்ற மரங்கள் வெட்டப் படுகின்றன. மேலும் ஏலம் விடுகின்றபோது கன அடி எவ்வளவு ரூபாய் பெறுமோ அதிலிருந்து பல மடங்கு குறைவாகப் போடப்பட்டு அந்த மரங்களின் அளவும் குறைத்து கணக்கிடப்பட்டு பெர்மிட் இல்லாமலே பல இலட்சக்கணக்கான மரங்கள் அந்தப் பகுதியிலே வெட்டப்பட்டிருப்பதாகச் செய்திகள் வந்திருக்கின்றன.

**மாண்புமிகு திரு ஆர் எம் வீரப்பன்;** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் கூறிக் கொண்டிருக்கின்ற விவரம் வனத்துறையின் தொடர்பாக நடந்ததல்ல. வைகைக் கரையோரத்திலே இருக்கின்ற ரெவின்யூ புறம்போக்குப் பகுதிகளிலே நடப்பதாகப் புகார் வந்து உடனடியாக அதிகாரிகளை அனுப்பி நடவடிக்கை எடுத்து தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. எனவே அதிலே யாராவது குற்றம் இழைத்திருந்தால் அவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதற்கு நன்றி. ஆனால் எனக்கு நினைவிலே இருக்கின்றது. கடந்த நவம்பர் மாதம் என்று நினைக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காந்தி கிராமத்திற்கு அருகிலே ஒரு இடத்திலே பேசுகின்றபோது இந்த மாதிரி வைகைக் கரையிலே உள்ள மரங்களை வெட்டுவதற்கு வனத்துறை பொறுப்பல்ல, வருவாய்த் துறையிலே இருப்பவர்கள் செய்த தவறுகளாலேதான் நடந்திருக்கின்றது என்று சொல்லி.......

**மாண்புமிகு திரு. ஆர். எம் வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு யார் பொறுப்பு என்பதல்ல. மரங்கள் வெட்டப்பட்ட உடனே வனத்துறையின் மீது குற்றம் சாட்டப்படுகிறது. அதிலே வனத்துறை ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று நான் ஆராய்கின்றபோது வனத்துறைக்குத் தெரியாமல் அந்த மரங்கள் ஏலம் விடப்பட்டிருக்கின்றது. எனவே அப்படி ஏலம் விட்டவர்கள் யார் என்று பார்க்கின்ற போது வருவாய்த் துறைக்கும் உட்பட்டது அது என்ற விவரம் தெரியவந்தது. ஆனாலும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர் களும் கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் எனவே, அங்கே ஏலம் விடப்பட்டிருக்கின்றது, திருடப்பட வில்லை. வனத்துறையிலே உள்ள பல பெரிய அதிகாரிகள் மூலம் அந்தப் பகுதியிலே அதாவது போடி, கம்பம், தேனி போன்ற இடங்களிலே உள்ள மரக்கடைகளிலே எல்லாம் சோதனை செய்து எங்கெங்கே அப்படி சட்டபூர்வமற்ற மரங்கள் வைக்கப்பட்டிருக் கின்றன என்று கண்டுபிடிக்கப்பட்டு அதுபற்றி விசாரித்த போது முறையாக ஏலம் எடுத்ததாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே வனத்துறைக்குப் பொறுப்பல்ல, வருவாய்த்துறை

தான் பொறுப்பு என்று சொல்லப்படவில்லை. நீங்கள் அந்தக் கூட்டத்திலே இல்லாத காரணத்தால், யாரோ சொல்லியோ, அல்லது பத்திரிக்கையிலே அரைகுறையாக பார்க்கப்பட்டு உங்களுக்கு தகவல் தந்ததன் காரணத்தால் அப்படிப் பேசுகிறீர்கள் என்று கருதுகிறேன். ஆனால் எந்தத் துறையின் அதிகாரத்திற்கு உட்பட்டது என்றும், எப்படி நடந்தது என்றும் ஆராய்கிற போது விவரங்கள் தெரிய வருகின்றது என்று சொல்லப்பட்டது. ஆனால் வருவாய்த்துறையும் கடுமையான நடவடிக்கை எடுத்திருக்கின்றது. வனத்துறையும் கூட வனத் துறை அதிகாரிகளை கேட்டிருக்கிறார்கள். எந்தத் துறையாக இருந்தாலும் மரங்கள் வெட்டப்படுவதைப் பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என்.எஸ். வி. சித்தன்:** அமைச்சரவர்கள் காந்தி கிராமத்தில் பேசிய பேச்சுக்கு வருவாய்த்துறை அதிகாரிகள் சங்கத்திலே இருந்து மறுப்புத் தெரிவித்திருக்கிறார்கள். பொதுக் காரியதரிசி எப். எம். குத்புதீன் மறுப்பு தெரிவித்துள்ளார்.

மாண்புமிகு அவைத்தலைவர் அவர்கள் கொஞ்சம் படிப்பதற்கு எனக்கு அனுமதி அளிக்க வேண்டும்.

''மதுரை ஜில்லா மேகமலைப் பகுதியில் ரூ. 30 லட்சம் பெறுமான மரங்களை வெட்ட தாசில்தார்கள் சர்டிபிகேட் கொடுத்ததாக தமிழக வனத்துறை அமைச்சர் குறிப்பிட்டுள்ளதற்கு தமிழ்நாடு ரெவின்யூ அதிகாரிகள் சங்கப் பொதுக்காரியதரிசி எப். எம். குத்புதீன் மறுப்பு தெரிவித்துள்ளார்''.

மரங்களைக் கொண்டு செல்வதற்கு உரிய பெர்மிட்டுகள் தாசில்தார்களால் வழங்கப்படவில்லையென்றும், பட்டா நிலங்களில் பட்டுப்போன அல்லது காற்றினால் விழுந்த மரங்களை அப்புறப்படுத்த மட்டுமே ஆட்சேபணையில்லையென்று தாசில்தார்கள் சர்டிபிகேட் கொடுப்பார்கள் என்றும் மேகமலை காட்டுப் பகுதியில் கடந்த 6 மாதங்களாக கள்ளத்தனமாக பெருமளவு மரங்கள் வெட்டப்படுவது குறித்து ரெவின்யூ அதிகாரிகள் மீண்டும் மீண்டும் புகார் செய்தும் அவை பற்றி எவ்வித நடவடிக்கையும் அரசு எடுக்காதிருந்துவிட்டு, அரசு நிர்வாகத்தில் ஒரு பகுதி மீது பழி சுமத்தும் வகையில் அமைச்சர் பேசுவது வருத்தத்திற்குரியது என்று சங்கம் கருதுவதாயும் கூறியுள்ளார்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு சித்தன் அவர்கள் முன்னாலே குறிப்பிடுகிறபோது மிக விலையுயர்ந்த மரங்களை விலை குறைவாக ஏலம் விட்டார்கள் என்று குறிப்பிட்டார்கள். காய்ந்து போன மரங்கள், பட்டுப்போன மரங்கள் இவைகளைத்தான் ஏலம் விட வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அவைகள் ரெவின்யூவி



னுடைய புறம்போக்கு நிலத்திலே, வைகை கரையிலே இருக்கிற மரங்கள். அதை ஏலம் விட்டது ரெவின்யூ துறையினர். அந்த ஏலம் விட்டதில் என்னென்ன முறைகேடுகள நடந்திருக்கின்றன என்பதை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆராய்ந்து கொண்டிருக்கிறார். மாவட்ட ஆட்சித் தலைவர் ஆராய்ந்து கொண்டிருப்பதையும் தாண்டி வனத்துறையினர் அந்த இடத்திலே இருந்து வெளியேறி வந்ததற்கு பின்னால், வெளியிலே எந்த இடத்திலே பார்த்தாலும் அதை ஏன் தடுத்து நிறுத்தவில்லை என்று கேட்ட போதுதான், அவைகளை வாங்கிக்கொண்டு போகிறவர்கள் கையிலே அதற்கான பெர்மிட்டுகளை வைத்திருந்ததாகத் தெரிவித்திருக்கிறார்கள் எப்படி ஆனாலும், தவறு எங்கே நடந்தாலும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இரு துறையும் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கின்றன நான் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன், அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றம் சாட்டுகிற உறுப்பினர்களே அரசாங்கத்தின் தரப்பிலோ, அமைச்சர்களோ, அல்லது மாவட்டத் துறையைச் சார்ந்தவர்களோ ஒரு கருத்தைத் தெரிவிக்கிறபோது அதிலே சம்பந்தப்பட்ட ஒரு பிரிவினர் அரசு அலுவலர்கள் இப்படிப்பட்ட ஒரு அறிக்கை தருகிறார்கள் என்பதை அரசினிடத்திலே வைத்து, அவருக்கு சாதகமாக இங்கே குற்றச் சாட்டாக சொல்லிக் கொண்டிருந்தால் எப்படி குற்றவாளி யார் என்று கண்டுபிடிக்க முடியும் என்பதை அருள் கூர்ந்து தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிக்க தலைவர் அவர்களே, வைகை நதி வருகின்ற 15 கிலோ மீட்டர் தூரத்திலே பசையாக உயிரோடு இருக்கிற பல மரங்கள், விலை உயர்ந்த மரங்கள் வெட்டப்பட்டிருக்கின்றன. அதனாலே பல லட்சக் கணக்கான ரூபாய், அரசாங்கத்திற்கு வரவேண்டிய ரூபாய் வரவில்லை. யார் யாரோ சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். எத்தனை லட்ச ரூபாய் என்று ''அந்த கந்தனுக்குத்தான் வெளிச்சம், ஆகவே நான் விரும்புவது எல்லாம் இது மாதிரியான தவறுகளைச் செய்தவர்கள், வனத்துறையைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, வருவாய்த் துறையைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, ஒரு விசாரணையை தாராளமாக பாரபட்சம் இல்லாத முறையிலே நடத்த முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இதிலே குறுக்கிடுவதற்கு நீங்கள் பொறுத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் ஒரு எதிர்க்கட்சியைச் சார்ந்த பொறுப்புள்ள சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே இந்த அவைக்குத் தகவல் தெரிவிக்கிறார்கள் என்ற காரணத்தாலே உடனடியாக இந்த அவைக்கு, உங்கள் மூலம் இந்த நாட்டிற்கு தகவலைத் தந்து கொண்டிருக்கிறார். இடையிலே யாரோ ஒரு அலுவலர் சங்கத்தைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்த ஒரு குற்றச்

சாட்டை, மறுப்பைத் தெரிவித்திருக்கிறார்கள் என்ற கருத்தை வைத்துக்கொண்டு அந்த அலுவலர்கள் பிரிவிற்காக வாதாடுகிறார்களா அல்லது அந்தத்தவறைக்கண்டிக்கிற வகையிலே பேசுகின்றார்களா என்பது தெரிந்தால் நல்லது. தவறுகள் நடந்திருக்கின்றன என்ற தகவல் கிடைத்த உடனே, இப்பொழுது நான் சொல்கிறேன், 12 மணி நேரத்திற்குள் மதுரை, தஞ்சாவூர் மற்றும் வேறு இடங்களில் இருந்து எல்லாம் உயர் வனத்துறை அதிகாரிகளைக்கொண்டு கிட்டத்தட்ட 3, 4 பிரிவினர்களைக்கொண்டு அந்தப் பகுதியிலே, போடிநாயக்கனூர், தேனி, கம்பம் போன்ற பகுதிகளிலே இருக்கின்ற அத்தனை மரக்கடைகளும் சோதனை இடப்பட்டன. அதற்குப் பிறகு, அது எப்படி நடந்தது என்ற ஆரிஜினைக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகுதான் வனத்துறையிலேயிருந்து வரவில்லை, ரெவின்யூ புறம்போக்கு நிலத்திலேயிருந்து, அல்லது ரெவின்யூ நிலத்திலேயிருந்து முறையாக ஏலம் போட்டுக் காண்பிக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிந்தது. அதற்கான சான்றுகள் இருக்கின்றன. ஏலம் போட்டதிலே முறைகேடுகள் நடந்து இருக்கின்றன என்பதும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஏலம் போடுவதற்கு முன்னாலே வனத்துறையிடமிருந்து இந்த மரத்திற்கான மதிப்பீட்டை பெற்றிருக்க வேண்டும். அப்படி பெற்றுக்கொள்ளாமலே ஏலம் போட்டிருக்கிறார்கள். ஏலம் போட்டதற்கு பிறகு நான் ஏலம் எடுத்து விட்டேன் என்று தாசில்தார் அல்லது மற்ற அதிகாரிகள் சர்டிபிகேட் கொடுத்தபிறகு வனத்துறையினில் இருக்கிறவர்கள் அந்த கூப்பு பர்மிட்டை கொடுத்து ஆகவேண்டும். ஆனால் இதில் யார் ஏலம் போட்டார்கள், யார் கூப்பு பர்மிட் கொடுத்தார்கள் என்பது பிரச்சினை இல்லை. மிக விலை உயர்ந்த மரங்கள் அது வெட்டப்படக் கூடாது. மலைச் சரிவிலே இருக்கிற மரங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் அந்த மரங்கள் வெட்டப்படுகின்றன என்ற தகவல் அரசாங்கத்திற்கு வந்தவுடன் அதன் மீது மாவட்ட ஆட்சித்தலைவர், மற்றும் வனத்துறை அதிகாரிகள் சேர்ந்து நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அது இன்றைக்கு இரகசியமாக விசாரணை நடந்துகொண்டிருக்கிறது. நீங்கள் சட்ட மன்றத்தில் இந்த பிரச்சினையை வைத்து விட்ட காரணத்தினால் நான் இது விஷயங்களை சொல்லியிருக்கிறேன். அதிலே சம்பந்தப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் எந்த துறையைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் கடுமையாக தண்டிக்கப்படயிருக்கிறாகள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இரவு 6–10

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கிற மாவட்டத்திலே நமக்கு சொந்தமான பல லட்சக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள மரங்கள் வெட்டப்பட்டன என்ற ஆதங்கத்திலே தான் பேசிக் கொண்டிருக்கிறேன். தவறு நடைபெறக்கூடாது. முறைகேடுகள் நடைபெறக்கூடாது.....





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தக்க நடவடிக்கைக எடுக்கப்படும் என்றும் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்றும் சொன்ன பிறகு அதை விடுத்து வேறு சப்ஜெக்டுக்கு போங்கள்.

**திரு என். எஸ். வி. சித்தன்:** அரசாங்கம் எடுத்திருக்கிற நடவடிக்கை ஏதோ ஒப்புக்காக இல்லாத வகையில் முழுமையாக எல்லா பிரச்சனைகளையும் ஒட்டுமொத்தமாக இருக்கிற வகையில் நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கு விசாரணை வைப்பதற்கு தயாராக இருக்குமானால் பல உண்மைகள் வெளியே வரும். இப்படி விசாரணை இருக்குமானால் இது மாதிரியான தவறுகள் இனிமேல் நடைபெறாது தடுக்கலாம். மர வெட்டுகள் நடந்துகொண்டிருந்தால் தமிழ்நாட்டில் அப்புறம் எப்படி மழை பொழியும்? ஒரு மரம் வைத்து ஒரு தோப்பை அழித்தால். ஆகையால் இதில் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும். ஒப்புக்காக யார் மீதாவது ஒருவர் மீது நடவடிக்கை எடுக்கும் முயற்சியாக இருக்கக்கூடாது என்று சொல்லி மாண்புமிகு மேதகு ஆளுநர் அவர்களால் படிக்கப்பட்ட உரை எங்களுக்கும், தமிழக மக்களுக்கும் திருப்தி அளிப்பதாக இல்லை என்று வலியுறுத்தி கூறி உரையை முடிக்கிறேன்.

***திரு. சேலம் மு. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக ஆளுநர் அவர்களால் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது ஆட்சி கட்சியின் சார்பாக பேச வாய்ப்பு அளித்தமைக் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். 1967-ம் ஆண்டு தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு தமிழகம் தொழிற் துறையில் ஏற்றங்கள் பெறாததற்கு யார் காரணம் என்பதை மாண்புமிகு நம்முடைய பாரத மாதாவின் புத்திரர்களாகிய காங்கிரஸ்காரர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நான் அவர்களை சிந்திக்க வேண்டுகிறேன். அவர்களை நிந்திக்க வேண்டும் என்பதற்காக கருத்தை எடுத்து வைக்கவில்லை. அவர்கள் சிந்திக்க மறுப்பதற்கு மட்டும் அல்லாமல் பிரச்சனைகளை சந்திக்கவும் அஞ்சுகிறார்கள், என்பதை நாங்கள் இங்கே ஆணித்தரமாக கூற கடமைப்பட்டிருக்கிறேன். 1967-ம் ஆண்டுக்குப் பிறகு தமிழகம் தொழிற்துறையில் கடந்த 16 ஆண்டு காலமாக புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்பதை அவர்களால் மறுக்க முடியுமா அல்லது மறைக்க முடியுமா என்பதை நான் கேட்டுக்கொள்கிறேன்.

நாடு விடுதலை அடைந்து 35 ஆண்டுகளுக்கு பிறகு 1967 லிருந்து 1983க்குப் பிறகு இன்றைக்கு தமிழகத்தில் மத்திய அரசு தொழில் துறையில் எத்தனை கோடி ரூபாய் முதலீடு செய்திருக்கிறது என்பதை உங்களால் கூற முடியுமா? 1967க்கு பிறகு சேலம் இரும்பு ஆலை கொண்டு வருவதாக வாக்குறுதி கொடுத்து அந்த இரும்பு ஆலையை கொண்டுவராமல் அதற்கு பிறகு பெல்லின் ஒரு விரிவாக்க திட்டத்தை வட ஆற்காடு மாவட்டத்தில் ராணிப்பேட்டை பகுதியில் ஒரு சிறியதொழிற்சாலை அமைப்பதாக

மத்திய அரசு குறிப்பிட்டிருக்கிறது. 1967க்குப் பிறகு சேலம் இரும்பு ஆலை 150 கோடி ரூபாய், பிறகு பெல்லின் விரிவாக்கத்திற்கு ஒரு 25 கோடி ரூபாய் ஆக 175 கோடி ரூபாய் தான் மைய அரசு கடந்த 16 ஆண்டு காலமாக ஒதுக்கீடு செய்திருக்கிறது என்பதை நீங்கள் மறுக்க முடியுமா? ஆனால் அதே நேரத்தில் குஜராத் மாநிலத்தில் பரோடா நகரத்தில் பெட்ரோலியம் காம்ப்ளக்ஸ் என்று ஒரு நிறுவனத்தை ஏற்படுத்தி அதில் மைய அரசு ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்திருக்கிறார்கள். இது என்ன மாற்றாந்தாய் மனப்பான்மை இல்லையா? அப்படி சொன்னால் உங்களுக்கு கோபம் வருகிறது. இன்றைக்கு தமிழகத்தின் நலன்களை நாங்கள் சுட்டிக்காட்டி அதை தட்டிக்கேட்கக் கூடிய நேரத்தில் தமிழக நலன்களை கட்டிக்காக்க வேண்டிய நீங்கள் நம்முடைய நலன்களையும் உரிமைகளையும் வெட்டி சாய்க்கக்கூடிய முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டுக்கொண்டிருக்கிறீர்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

1947 ஆம் ஆண்டு இந்தியா பாகிஸ்தான் இரண்டு நாடுகளும் பிரிந்த நேரத்திலே இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே இருந்த நதி நீர்ப் பிரச்சினையில் உடனடியாக தீர்வு கண்ட மைய அரசு பங்களாதேஷுக்கும் இந்தியாவிற்கும் இடையே இருந்த நதி நீர்ப் பிரச்சினையில் தீர்வுகண்ட மைய அரசு ஏன் இரண்டு மாநிலங்களுக்கு இடையேயுள்ள காவிரி நீர்ப் பிரச்சினையை உடனடியாகத் தீர்த்து வைக்காமல் இருக்கிறது? அதனுடைய மர்மம் என்ன? இது மாற்றாந்தாய் மனப்பான்மை இல்லையா என்று கேட்டால் அதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். இந்த நாட்டிலே சமதர்மத்தை கொண்டுவர வேண்டுமென்று சொல்கிறார்கள். மேலும் செல்வம் ஒரு இடத்தில் குவியக்கூடாது என்றும் அந்த செல்வத்தை நாடு முழுவதும் பரவலாக்க வேண்டுமென்றும் சொன்னார்கள். அதே நேரத்திலே இந்த ஆட்சியிலே மக்களுக்குக் கிடைக்கவேண்டிய நியாயங்களைக் கொடுக்காமல் மைய அரசு அதிகாரத்தை கையிலே வைத்துக் கொண்டு எதற்கெடுத்தாலும் மாநிலங்களை மிரட்டிக்கொண்டு இருக்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது உங்களால். எல்லா மாநிலங்களையும் ஒரே மாதிரியாக நடத்த வேண்டும், பாகுபாடு காட்டமாட்டோம் என்றும் அரசியல் காரணத்திற்காக எந்த மாநிலத்திற்கும் குறுக்கீடாக இருக்காது என்று எல்லாம் பாரதப் பிரதமர் அடிக்கடி கூறிக்கொண்டே வந்தார்.

1965 ஆம் ஆண்டு சேலம் இரும்பாலை கொண்டுவரப் போவதாகச் சொல்லி அதற்காக 3600 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருந்தது. அதற்காக 3 ஆயிரம் குடும்பங்களை அந்த இடத்திலிருந்து வெளியேற்றினார்கள். ஆனால் இரும்பாலையா கொண்டுவந்தார்கள்? பிறகு உருக்காலை வருவதாகச் சொன்னார்கள் உருக்காலை வந்திருக்கிறததா? இரும்பாலைக்குப் பதிலாக கரும்பாலைதான் வந்திருக்கிறது. உருக்காலைக்குப் பதிலாக உருட்டாலைதான் வந்திருக்கிறது. அங்கே தகடுகளை உருட்டிக் கொண்டு இருக்கிறார்கள். சேலத்திலே இரும்பாலை வரவேண்டுமென்று பாரதப் பிரதமர் அடிக்கல் நாட்டினார்கள்....



திரு. ரா. பெரியசாமி: நண்பர் 1967 ஆம் ஆண்டுக்கு முன்னால் எந்தக் கட்சியில் இருந்தார், இப்போது எந்தக் கட்சியில் இருக்கிறார் அதற்கு முதலிலே விளக்கம் சொன்னால் நன்றாக இருக்கும்.

திரு எஸ். சிவராமன்: துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு மாநில அரசைப் புறக்கணிக்கிறது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். சேலம் இரும்பாலை வரவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் அதே நேரத்திலே அதற்காக 750 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். கேள்வியும் நானே. பதிலும் நானே என்று பேசுகிறார்கள். சேலம் இரும்பாலைக்குப் பதிலாக கரும்பாலை வந்து இருக்கிறது என்கிறார்கள். உருக்காலைக்குப் பதிலாக உருட்டாலை வந்து இருக்கிறது என்கிறார்கள். ஏதோ ஒரு ஆலை ஏற்படுத்தியிருக்கிறார்களா இல்லையா?

திரு. சேலம். மு. ஆறுமுகம்: ஆலைக்குப் பதிலாக நல்ல சாலை அமைத்திருக்கிறார்கள். பாலையாக இருந்த நிலத்திலே சாலை அமைத்து இருக்கிறார்கள். உங்கள் காலத்திலே ஆலை ஏற்பட முடியுமா? 1965 ஆம் ஆண்டு பாரதப் பிரதமர் சேலத்திலே அடிக்கல் நாட்டினார்கள். தமிழகத்திலே தென்னகத்திலே இரண்டு இரும்பாலைகள் வரும் என்றும் ஒன்று ஆந்திராவிலுள்ள விசாகப்பட்டினத்திலும் இன்னொன்று தமிழ்கத்திலே உள்ள சேலத்திலும் அமைக்கப்படுமென்று சொன்னார்கள்.

(இரவு 6.20)

அடிக்கல் நாட்டினார்கள். தேர்தலின்போது வாக்குறுதி கொடுத்தார்கள். ஆனால் விசாகப்பட்டினத்தில் இன்று இரும்பாலை அமைத்திருக்கிறார்கள். தமிழகத்தில் சேலத்தில் இரும்பாலை அமைக்கவில்லை. என்ன காரணம்? இன்று கூறுகிறார்கள். சேலம் இரும்பில் 35% தான் இரும்புத் தாது இருக்கிறது, ஆகவே அது இலாபசரமாக இருக்காது என்று நான் அவர்களை பார்த்து சொல்கிறேன். இராணுவ மந்திரியாக இருக்கும் வெங்கட்ராமன் அவர்கள் தமிழகத்தினுடைய தொழில் அமைச்சராக இருக்கக் கூடிய நேரத்திலே எத்தனை முறை சேலத்திலிருந்து இரும்புத் தாதுவை எடுத்துக்கொண்டு ஜப்பான் நாட்டிற்கும் மற்ற மேலை நாடுகளுக்கும் சென்று நீண்ட பரிசோதனைக்குப் பிறகு சேலத்தில்

[திரு. மு. சேலம் ஆறுமுகம்]

கிடைக்கும் இரும்புத் தாதுவைக்கொண்டு இலாபகரமாக தொழிற்சாலை அமைக்க முடியும் என்று கண்டறிந்தும், பிறகு இந்திய அரசால் தஸ்தூர் கம்பெனி என்ற அமைப்பிடம் அந்த இரும்புத் தாதுவை கொண்டு தொழிற்சாலை அமைக்க முடியுமா என்பதை ஆராயும்படி சொல்லி, பல ஆண்டுகள் ஆராய்ச்சிக்கு பிறகுதான் பிரதமர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். இது என்ன ஏமாற்று வித்தையா? மக்களை ஏமாற்றி ஓட்டு வாங்கவா? அதைத்தான் நீங்கள் ஆந்திராவிலும், கர்நாடகாவிலும் செய்தீர்கள்.

திரு. கே. எஸ். ஞானசெரிப்: துணைத் தலைவர் அவர்களே, சேலம் இரும்பாலை ஆரம்பித்து இப்போது வேலை நடந்து கொண்டிருக்கிறதே?

திரு சேலம் மு. ஆறுமுகம் : காங்கிரஸ் கட்சித்தலைவர் தவறான தகவலை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இரும்பாலை கஞ்சமலையில் அப்படியே இருக்கிறது. மத்திய சர்க்காருக்கு மிகவும் கஞ்சத்தனம் என்று தான் சொல்வேன். எவர்சில்வர் தகடை கொண்டு வந்து இலேசான தகடாக உருட்டிக் கொண்டிருக்கிறார்கள். அது ஒரு ரோலிங் மில். அப்படி இருக்கும் போது இரும்பாலை என்று சொல்வீது மக்க ள திசை திருப்பக் கூடிய காரியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்: இன்றைக்கு ஏறக்குறைய 35 சதவீதம் உள்ள இரும்பு தாதுவைக் கொண்டு இலாபகரமாக தொழிற்சாலை துவங்க முடியும் என்று வெளிநாட்டினர் கண்டறிந்த பின்பும் ஏன் அதை ஆரம்பிக்காமல் இருக்கிறீர்கள்? இன்று ஜப்பான் நாட்டிலே 15 சதவீதம் இரும்பு தாதுவைக்கொண்டு சிறந்த தொழிற்சாலை ஆரம்பிக்க முடியும் என்று வல்லுநர்கள் அங்கே கூறுகிறார்கள். ஆனால் தஸ்தூர் கமிட்டியினுடைய அறிக்கையை வைத்துக் கொண்டே பிரதமர் அவர்கள் அடிக்கல் நாட்டிவிட்டு இன்றைக்கு அடிக்கல் கூட காணாமல் போகிற அளவிற்கு உங்களுடைய அடிச்சுவட்டை பின்பற்றிக்கொண்டே போகிறீர்களே இது நியாயம்தானா என்று உங்களை கேட்க கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. எஸ். இளையபெருமாள்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அடிக்கல் நாட்டிவிட்டு செய்யவில்லை என்று அவர்கள் சொன்னார்கள். குற்றச்சாட்டாக சொன்னாலும் சரி, மத்திய அரசு கவனம் செலுத்தவில்லை என்று சொன்னாலும் சரி நான் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் தஸ்தூர் கமிட்டி கொடுத்த ரிப்போர்ட் பிரகாரம் அங்கே உள்ள இரும்பாலைக்கு வேண்டிய தாதுப்பொருள் அந்த மலையில் இல்லை என்பதை மாநில அரசாங்கமே ஒப்புக்கொண்டு. மேற்கொண்டு அதை எப்படி வளம் பெற்றதாகச் செய்ய முடியும் என்ற நிலையில் இருப்பதாக நான் கருதுகிறேன். அந்த உண்மை உறுப்பினருக்குத் தெரியுமா என்று கேட்கிறேன்.



ஆளுநர் உரை—விவாதம்

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: துணைத்தலைவர் அவர்களே, இதையேதிரும்பத் திரும்பபேசிக்கொண்டிருக்கிறோம் மாண்புமிகு உறுப்பினர் அவைக்கு தவறான செய்தியை தரக் கூடாது என்பதாலேசொல்றன். அந்த பகுதியிலே கிடைக்கிற இரும்பிலேயிருக்கிற அயர்ன்ஓரில் உள்ள அயர்ன் கன்டென்ட் 35சதவீதம். அதில் துவங்க முடியாது என்று சொல்லப்படுகிறது. ஏற்கெனவே கொடுத்த ரிப்போர்ட்டிலே அடிக்கல் நாட்டுகிற போது செய்ய முடியும் என்று அந்த உத்தரவாதத்துடன்தான் வந்தது. இன்றைக்கு டைரக்ட் ரிடக்ஷன் மெதட் என்று சொல்லி அயல்நாட்டிலே 10 சதவீதம் இரும்பு கன்டென்ட் இருந்தாலும் கூட அதிலிருந்து இரும்பு தயாரிக்கலாம் என்று நிருபித்திருக்கிறார்கள். 35 சதவீதம் இருக்கிறபோது இரும்பாலை வெற்றிகரமாக நிறுவ முடியும் என்று எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிற நிலை இருக்கிறது முடியாது என்று அவர்கள் சொல்கிறார்கள். மாநில அரசு அதை ஏற்றுக்கொள்ளவில்லை. மாநில அரசு மத்திய அரசை தொடர்ந்து ஸ்டீல் ரோலிங் மில் அமைக்கப்பட்டிருந்தாலும், வருங்காலத்தில் முழுமையான இரும்பாலை வரவேண்டும் என்று வற்புறுத்திக் கொண்டிருக்கிறது.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, 1971-ஆம் ஆண்டு தமிழகத்தில் சட்டமன்றத் தேர்தல் நடைபெறக்கூடிய காலத்தில், நம்முடைய மாண்புமிகு, இன்றைய சபாநாயகர் அவர்கள், அன்றைக்கு, நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த நேரத்தில், பாரதப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்களை அழைத்து வந்து, அந்தச் சேலம் உருக்காலைக்கு அடிக்கல் நாட்டினார்கள். அப்பொழுது, அந்த ஆலை இயங்கும் என்ற தஸ்தூர் கம்பெனியின் அறிக்கையின் அடிப்படையில்தான் அடிக்கல் நாட்டப்பட்டது. அப்பொழுதுகூட, சேலத்திற்கு இரும்புக் கனி வந்துவிட்டது என்று சேலத்து மாங்கனியை, பாரதப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி கையிலே கொடுப்பது போன்ற படங்கள் எல்லாம் பத்திரிகைகளிலே வந்த செய்தியை அவர்கள் மறந்து விட்டார்கள்போலும்.

இன்றைக்குச் சத்துணவுத் திட்டத்தைப்பற்றி குறை கூறுகிறார்கள். காரணம், 'வந்தே மாதரம் என்போம், எங்கள் மாநிலத்தாயை வணங்குதும் என்போம்' என்றார்கள், நம்முடைய பாரத புத்திரர்கள். அவர்களைக் கேட்டுக் கொள்வேன், இன்றைக்கு நம்முடைய மாநிலத்தாய், தமிழ்த்தாய், கடுமையான வறட்சியின் காரணமாக, தண்ணீர் பற்றாக்குறை காரணமாக, மின்சாரப் பற்றாக்குறையின்காரணமாக, கண்ணீர் வடிக்கின்றாள். அந்தக் கண்ணீரைத் துடைக்க, உங்களுடைய பங்கு என்ன என்று நான் கேட்கிறேன், இன்றைக்கு அரிசி கேட்டால், மத்திய அரசு கொடுக்க மறுக்கிறது. காவிரி ஆற்றிலிருந்து தண்ணீரைத் திறந்துவிடு என்று மாநில அரசு சொன்னால், மைய அரசு வாயை மூடிக் கொண்டிருக்கிறது. ஆனால், தமிழகத்திலேயிருந்து சென்ற

[திரு சேலம் மு. ஆறுமுகம்]

வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் அரிசியை நாங்கள் கொடுப்போம், தண்ணீர் திறந்துவிட ஏற்பாடு செய்வோம் என்று சொன்னார்கள். அன்றைக்கும் அப்படித்தான் சொன்னார்கள். சர்க்கரை விலையை இறக்குவோம் என்றார்கள். சர்க்கரை விலையை இறக்வில்லை. நம்முடைய புரட்சி தலைவரின் சர்க்காரைத்தான் இறக்கினார்கள் அன்றைக்கு. ஆனால், இன்றைக்கு அந்த அமைச்சரைத்தான் இறக்கிவிட்டீர்கள். விலைவாசியை நீங்கள் இறக்வில்லை. நீங்களா விலைவாசியை இறக்கக்கூடியவர்கள் இந்தியாவிலுள்ள 22 மாநிலங்களில், மக்களுடைய ஆதரவைப் பெற்ற ஒரே தலைவர் 'Popular Ch ef Minis er' புரட்சி தலைவர் என்பதை இந்த நாடு மட்டும் அல்ல, உலகமே நன்றாக அறியும். உங்களுடைய முதல்வர்கள் போனால், பின்னால், 500 பேர்கள்கூடப் போவதில்லை. புரட்சித் தலைவர் நின்றாலே அது பெரிய பொதுக் கூட்டம்; நடந்தாலே அது மாபெரும் ஊர்வலம்; பேசினால் மாநாடு என்பதுதானே தமிழகம் கடந்த காலத்தில் படைத்த சாதனை? இதைக்கண்டு வேதனைப்படக்கூடிய காங்கிரஸ்காரர்களைக் கேட்டுக் கொள்வேன், புரட்சித் தலைவருடைய செல்வாக்கை உங்களால் குறைக்க முடியாது; அவருடைய செல்வாக்கை உங்களால் குலைக்கவும் முடியாது. திட்டமிட்டே இன்றைக்கு இந்த நாட்டிலே பஞ்சத்தை ஏற்படுத்தலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். வறட்சி வந்தால்தான் இங்கே ஒரு புரட்சி ஏற்படும் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் புரட்சிக்கே தலைவர் புரட்சித் தலைவர் என்பதை நீங்கள் அறியாமல் இருக்கிறீர்கள் என்பதை வேதனையோடு சொல்லிக்கொள்ள நான் ஆசைப்படுகிறேன். ஆகவே, காங்கிரஸ் நண்பர்களை நான் கேட்டுக்கொள்வேன், கடந்த காலத்தில்' நீங்கள் செய்த தவறின் காரணமாக, கர்நாடகத்திலே இருந்து அன்றைக்குத் தண்ணீர் கொடுத்திருந்தால், கர்நாடக மக்கள் உங்களைப் புறக்கணித்து விடுவார்கள், தேர்தலிலே தோற்கடித்து விடுவார்கள் என்று அஞ்சினார்கள். தண்ணீரைக் கொடுக்க மறுத்தீர்கள். இன்றைக்குத் தோற்றுவிட்டீர்களே, இப்பொழுது கொடுக்க வேண்டாமா? ஆந்திராவிலே உங்களுடைய நிலை என்ன? 35 ஆண்டு காலமாக, ஏகபோக ஆட்சி நடத்தினீர்களே, யாராவது கேட்டார்களா? எதிர்ப்பு இருந்ததா? ஏன் இந்த அவலநிலை? ஜனநாயகம் என்பது உங்களுடைய காலத்திலே கேலிக்கூத்தாகி விட்டது. ஜனநாயகம் உங்களைப் பார்த்து சிரிக்கின்றது. ஜனநாயகக் குரலை ஒடித்துவிட்டீர்கள். ஜனநாயகம் மூச்சுக்கூட விடமுடியாமல் திணறிக் கொண்டிருக்கிறது. கடந்த 35 ஆண்டுகாலமாக. இன்றைக்கு ஆந்திர மக்கள் தைரியமாக எழுந்திருக்கிறார்கள். அங்கே ஒரு பிரம்மா விஸ்வருபம் எடுத்திருக்கிறார், அவரை உங்கள் யாராலும் மறுக்க முடியாது. இன்றைக்குத் தேசிய நீரோட்டம்,



'National Ground Water'

(சிரிப்பு) இன்றைக்குத் தேசிய நீரோட்டம் வற்றிவிட்டது. 1967லே தமிழகத்தில் வற்றியது. இப்பொழுது அண்டை மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகாவிலே வற்றிவிட்டது. இன்றைக்கு, கேரளா, பாண்டிச்சேரியிலும் தேசிய நீரோட்டம் வற்ற ஆரம்பித்துள்ளது.

The 'National Ground Water' is very dry!! உண்மையான நீரோட்டம் வற்றிவிட்டு, ஆழ்துளை கிணறு போட்டு, ஜாய்ன்ட் செக்டாரிலே நீங்கள் தண்ணீரைக் குடித்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆகவே, இன்றைக்கு, காங்கிரஸ் அன்பர்களுடைய, அவர்களுடைய மக்கள் விரோத, ஜனநாயக விரோத கொள்கையின் காரணமாக மக்கள் அவர்களை, விந்தியத்திற்கு வடக்கே துரத்திவிட்டார்கள். இனி விந்தியத்திற்குத் தெற்கே உங்களால் எட்டிக்கூடப் பார்க்க முடியாது. மீண்டும் 100 ஆண்டுக் காலமானாலும் காங்கிரஸ்காரர்கள் தமிழகத்தை ஆளமுடியாது. திராவிடப் பாரம்பரியம் தான் இந்த நாட்டைத் தொடர்ந்து இனி இந்த நாட்டை ஆள முடியும் என்று சுட்டிக்காட்டி சேலத்தில் மருத்துவக் கல்லூரி ஏற்படுத்த வேண்டுமென்றும், சேலம் ஆத்தூருக்கு மேட்டூர் குடிதண்ணீர் திட்டத்தை உடனே அமுல்படுத்த வேண்டுமென்றும், சேலத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து நிலவரியை ரத்து செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன், நன்றி.

(இரவு 6–30)

*திரு. மு. ஜான் வின்சென்ட்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி செலுத்தும் தீர்மானத்தின்மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆளுநர் உரையில் சத்துணவுத் திட்டத்தைப்பற்றி கூறியிருப்பதைக் குறித்து நான் பாராட்டுகிறேன். கிராமங்களிலும், நகர்ப்புறங்களிலும் கஷ்டப்படும் ஏழை மக்களின் துயரைத் துடைக்கும் வகையில் இரண்டு வயது முதல் நான்கு வயது வரையுள்ள 23 இலட்சம் குழந்தைகளுக்கும், ஐந்து வயது முதல் ஒன்பது வயது வரையுள்ள 42 இலட்சம் குழந்தைகளுக்கும் சத்துணவுத் திட்டத்தை நல்லமுறையில் நடத்திக் கொடுக்கும் புரட்சித் தலைவரவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதனால் கிராமப்புறங்களிலும், நகரப்புறங்களிலும் உள்ள அனைத்து ஏழை மக்களுக்கும் இன்றைக்குப் புரட்சித் தலைவரவர்களை மிகவும் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் பிற மாநில முதலமைச்சர்களும், மத்திய அமைச்சரவையும் சத்துணவுத் திட்டத்தை மிகவும் பாராட்டினாலும் மத்திய அரசு குறிப்பிடக்கூடிய அளவிற்குத் தமிழகத்திற்கு அரிசியைக் கொடுக்க மறுக்கிறது. காரணம், தமிழக அரசுக்கும், புரட்சித் தலைவருக்கும் மக்கள் மத்தியிலே கெட்ட பெயர்

உண்டுபண்ண வேண்டுமென்ற ஒரே எண்ணத்தால்தான் அரிசி கொடுக்க மறுப்பதாக இன்றைக்கு மக்கள் மத்தியிலே அனைவருடைய இதயங்களிலேயும் உள்ள கருத்தாக இருக்கிறது. உண்மையும் அதுவேயாகும்.

சத்துணவுத் திட்டத்தை நடத்துகின்ற ஆசிரியர்கள், தமிழகத்திலே உள்ளவர்கள், இந்தச் சத்துணவுத் திட்டத்தை நாங்கள் நடத்த முடியாது என்று சொன்னார்கள். உடனடியாகப் புரட்சித் தலைவரவர்கள், 33,500 பேர்களுக்கு வேலை கொடுப்பதாகச் சொல்லி தேர்வு நடத்திய பிறகு அதே ஆசிரியர்கள் நாங்கள் மீண்டும் அதைச் செய்கிறோம் என்று சொன்ன நேரத்தில், தமிழகத்திலே சட்டமன்றத்திலே விளக்கமாகச் சொன்னார்கள், ஜனவரி 31-ம் தேதிக்குள் 33,500 பேர்களை நாங்கள் நியமனம் செய்து விடுவோம் என்று சொன்னார்கள்.

காவிரித் தண்ணீரைத் தமிழகத்திற்குக் கொடுக்கக் கூடாது என்றும், ஆந்திராவிலே போதுமான அரிசி இருந்தாலும் அன்றைய ஆந்திர முதல்வர் காங்கிரஸ்காரராக இருந்ததால் மத்திய அரசானது அவர்களது செல்வாக்கைப் பயன்படுத்தி காவிரி நீர் கொடுப்பதை நிறுத்தினார்கள், அதேபோல அரிசி கொடுப்பதை நிறுத்தினார்கள். ஆனால் இன்றைய ஆந்திராவின் முதலமைச்சர், மரியாதைக்குரிய திரு. என். டி. ராமராவ் அவர்கள் 40,000 டன் அரிசி கொடுப்பதாக வாக்குறுதி கொடுத்ததை இங்கே மாண்புமிகு அமைச்சரவர்கள் சட்டமன்றத்திலே கூறினார்கள்.

தென்மேற்குப் பருவக்காற்று மழை பொய்த்துவிட்டது; வடகிழக்குப் பருவகாற்று மழையும் பொய்த்து விட்ட நேரத்தில் ஒன்றைக் கூறுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். நெல்லை மாவட்டத்தில் பல ஆண்டுக்காலமாக திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்த காலத்தில், 1973 ஆம் ஆண்டில் பச்சையாறு திட்டத்திற்கு கலைஞர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பெற்றது. 1980-81-ல் பாராளுமன்றத்தில் சில கருத்துகளைப் பேசிய எங்கள் நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த திருச்செந்தூர் பாராளுமன்ற உறுப்பினர், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒருவர் மிகவும் தவறான செய்தியைக் கொடுத்தார்கள். பொது மேடைகளிலேயும், மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலேயும் அவர் சொன்னார், புரட்சித் தலைவரவர்களும், தமிழக அரசிலிருக்கின்ற அதிகாரிகளும் பச்சையாறு திட்டத்தை நிறைவேற்றாமல் விட்டு விட்டதாகச் சொன்னார்கள். நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கின்றேன். மாண்புமிகு திருச்செந்தூர் பாராளுமன்ற உறுப்பினர் பாராளுமன்றத்திலே பேசுவதற்குப் பயந்துகொண்டு இங்கே வந்து மாவட்டவளர்ச்சி மன்றக் கூட்டத்திலே பேசுகிறார்கள். மத்திய அரசிலிருந்து அனுப்பப்பட்ட திட்டக் கமிஷன் ஒரு கருத்தை வலியுறுத்தியது. தமிழக



அரசு பச்சையாறு திட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று சொன்ன நேரத்தில், அமெரிக்கர்கள் இங்கே ஆய்வு நடத்திகளக்காடு மலையில் சிங்க வால் குரங்குகள் இருப்பதாகச் சொன்னதன் பேரில் இந்தத் திட்டத்தை மத்திய அரசு கைவிட வேண்டுமென்று திட்டக் கமிஷன் வலியுறுத்தியது. ஆனால் உண்மைக்குப் புறம்பான வகையில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திருச்செந்தூர் பாராளுமன்ற உறுப்பினரவர்கள் தமிழக அரசையும், தமிழக அதிகாரிகளையும், மரியாதைக்குரிய இதய தெய்வம் புரட்சித் தலைவரவர்களையும் பற்றித் தவறான கருத்துக்களை மக்கள் மத்தியிலே பரப்ப வேண்டுமென்ற எண்ணத்தில் திட்டக் கமிஷனால் கைவிடப்பட்ட அந்தத் திட்டத்தை எங்கள் மத்திய அமைச்சரவை, எங்கள் பாரதப் பிரதமர் கைவிட்டு விட்டார்கள் என்று சொல்வதற்குப் பயந்துபோய் மக்களைத் திசை திருப்பும் வகையில் தமிழக அரசுக்கு விரோதமான கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பச்சையாறு திட்டத்தை தமிழக அரசு கொண்டுவர வேண்டுகிறேன்.

கொடுமுடி ஆறு திட்டம் 30 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்ட திட்டம், அங்கு மூன்றாண்டுகளுக்குத் தண்ணீர் பிடிப்பு எப்படி இருக்கிறது என்பதைப் பார்த்தபிறகுதான் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முடியும் என்று கடந்த சட்டமன்றக் கூட்டத்தில் மரியாதைக்குரிய நீர்ப்பாசனத் துறை அமைச்சரவர்கள் கூறினார்கள். மூன்றாண்டுகளாகத் தண்ணீர் பிடிப்பு நல்லமுறையில் இருப்பதால் அந்தக் கொடுமுடி ஆற்றுத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து, வறட்சிக்காக 190 கோடி ரூபாய் வேண்டுமென்று தமிழகத்திலேயிருந்து மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். ஒன்றை நான் சொல்ல வேண்டும். நெல்லை மாவட்டத்திலே கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக மிகவும் வறட்சியான நிலைமை இருக்கிறது. ஆனால் அங்கே மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் குறிப்பெடுத்து அனுப்பும் நேரத்தில் சில பகுதிகளில் பச்சையாறு தண்ணீர் பாய்ந்து விளையும் சில பகுதிகள், மணிமுத்தாறு பாசன விளைச்சல் பகுதி என்பதாக கணக்கெடுக்கின்றநேரத்தில் விளைச்சல் கணக்கிட்டிருக்கிறார்கள். ஆனால் அங்கே இருக்கும் எல்லா பகுதி எடுத்திருக்கிறார்கள். ஆனால் அங்கே பயிர்கள் சாவியாகிவிட்டன. எனவே இராதாபுரம், நாங்குநேரி இரண்டு தாலுக்காக்களை, வறட்சிப் பகுதிகளாக அறிவித்து அதற்கு கணிசமான தொகையை ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்வித் துறையைப் பொறுத்தமட்டில் அனைத்து மாநிலங்களும் நம்மைப் பாராட்டுகின்றன. மரியாதைக்குரிய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஏராளமான [illegible]

கழகங்களை அமைத்து, தமிழகத்துக் தனி பல்கலைக் கழகம் அமைத்து சிறப்பைக் கொடுத்துள்ளார்கள். அதேபோல ஹையர் செகண்டரி பயிலும் மாணவர்களுக்கு உடனடியாக வேலை கிடைக்கும் அளவில் தொழிற்கல்வியும் அளிக்கப்படுவதை மற்ற மாநிலங்கள் நம்மைப் பாராட்டக்கூடிய அளவில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு செயல்படுகின்றது. இதைத் தாங்க முடியாமல் காங்கிரஸார் பேசுகிறார்கள்.

அடுத்துத் தன்னிறைவுத் திட்டத்தைப் பற்றி குறை கூறுகிறார்கள். தன்னிறைவுத் திட்டத்தை அனைத்துக் கிராமங்களுக்குச் சென்று பொது மக்களிடத்திலே கேட்டால் முழு நிலைமையை அறிய முடியும். மக்கள் சொல்கிறார்கள். காங்கிரஸ் ஆட்சி காலத்திலும், தி.மு.க. ஆட்சிக் காலத்திலும் இல்லாத அளவுக்கு நல்ல ரோடுகளும், சாலைகளும் போடப்பட்டன. பாலங்கள் கட்டப்பட்டன. பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன என்பதை மக்கள் பாராட்டுகிறார்கள்.

ஆளுநர் உரையில் சாலை மேம்பாட்டுக்காக 10 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். அந்தப் பத்து கோடி ரூபாயில் கிராமப்புற சாலையில் போடப்பட்ட ரோடுகளை முழுவதும் தார் ரோடாகப் போட்டால், அடிக்கடி செலவு செய்யவேண்டிய பராமரிப்புச் செலவுகள் மிச்சமாகும். கிராம மக்களுக்கும் அது உதவியாக இருக்கும்.

ஆளுநர் உரையில்பல இடங்களில் தொழிலைத்தொடங்குவது குறித்து குறிப்பிட்டிருக்கிறார்கள். பரிந்துரை செய்து மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் அங்கே காலதாமதம் ஏற்படுவதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் கேட்டுக் கொள்வேன், குறிப்பாக நெல்லை மாவட்டத்தில் விவசாயப் பெருங்குடி மக்கள் மிக அதிகமாக இருக்கிறார்கள். தொழிற் சாலைகள் அதிகமாக இல்லை. குறிப்பாக நாங்குநேரி வட்டம் தொழிலிலே பின்தங்கிய வட்டமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே வரவிருக்கின்ற நூற்பாலையும் சிமென்ட் தொழிற் சாலையும் நாங்குநேரி, வள்ளியூர் பகுதிக்குக் கிடைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சுற்றுலா வளர்ச்சி பற்றி குறிப்பிட்டு. சுமார் 80 கோடி ரூபாய் மத்திய அரசிடம் கேட்கப்பட்டிருக்கிறது. சுற்றுலாபற்றி கூறுகின்ற நேரத்தில் பெரிய பெரிய இடங்களில் தான் நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதே நேரத்தில் சிறிய பகுதியாக இருந்தாலும், நாங்குநேரி பகுதியில் உள்ள திருக்கரன்குடி மலையில் உள்ள நம்பிக்கோவில் பகுதிக்கு லட்சக் கணக்கான மக்கள் கூடுகின்ற இடமாக இருப்பதால் அதை சுற்றுலா மையமாக ஆக்கவேண்டும். அதேபோல களக்காடு மலைப்பகுதியில் உள்ள செங்காத்தேரி பகுதியில் மக்கள் ஏராள மாக கூடுகின்றார்கள். இயற்கையாகவே வளம் மிக்க பகுதியாக



இருப்பதால் அதை நல்லமுறையில் சுற்றுலா மையமாக ஏற்படுத்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து இந்தியைப்பற்றி கூறுகிற நேரத்தில் குறிப்பாக இந்தியை திணிக்கின்ற நிலை மத்திய அரசு கடைபிடிப்பது வருந்தத்தக்கது. மக்களுக்குத் தேவையான மின்சாரம், காவிரி நீர் பிரச்னை, உணவுக்கு தேவையான அரிசி முதலியவைகள் தொழிற்சாலைகளுக்கான அனுமதி போன்றவைகளில் எல்லாம் அக்கறை காட்டாமல் இந்தியை திணிப்பதில் முழு அக்கறை காட்டுகிறது மத்திய அரசு. மக்கள் கஷ்டப்படுகிற நேரத்தில் எந்தவிதமான உதவியும் இல்லை. அதைவிடுத்து இந்தியை திணிப்பதில் மிக வேகமாக இருக்கிறது. அதனால்தான் மக்கள் மத்திய அரசிற்கு பாடம் கற்பித்தார்கள். கர்நாடகாவில், ஆந்திராவில் தமிழ்நாட்டில் பெரியகுளம் தொகுதியில்; அடுத்து திருச்செந்தூரில் பாடம் கற்பிக்க காத்திருக்கிறார்கள். ஏனென்றால் மக்கள் மனதிலே இடமில்லாத ஒரு கட்சியாக காங்கிரஸ் கட்சி இன்றைக்கு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

தேசிய ஒருமைப்பாடு பற்றி கூறுகிறார்கள். எந்த அளவிலே ஒருமைப்பாடு? தண்ணீர் கொடுப்பதிலே இந்த ஒருமை கர்நாடகத்திலே வலியுறுத்தவில்லையே. அரிசி கொடுப்பாட்டை ஆந்திர முதலமைச்சரை வலியுறுத்த பதிலே முன்னாள் இருந்த ஆந்திர முதலமைச்சரை வலியுறுத்த காரணத் வில்லையே. மாற்றுக்கட்சி முதலமைச்சர் இருக்கிற காரணத் தாலேஅங்கே அம்மையாருடைய சொல் எடுபடவில்லை. இப்படிப் பட்டவைகளை நாம் போக்கியாக வேண்டும். தமிழக அரசு மின்சாரம் கொடுக்கவில்லை என்றெல்லாம் சொல்கிறார்கள். நான் கேட்டுக்கொள்கிறேன். தகுதியான நல்ல நிலக்கரியை கொடுக்க முன்வரவில்லை மத்திய அரசு. போக்குவரத்திற்கு கப்பல் வாங்க அனுமதி கொடுக்கவில்லை. அவர்களை கேட்டால் நாங்கள் வாங்கி அனுப்புகிறோம் என்றார்கள். அவர்கள் நிலக்கரியை அனுப்புகிற நேரத்தில் இங்கேயுள்ள விவசாயிகள் சாகும் நிலையிலே தான் இருப்பார்கள். அதற்கு முழுபொறுப்பை மத்திய காங்கிரஸ் ஆட்சி ஏற்றுக்கொள்ள வேண்டுமே ஒழிய தமிழக அரசு அல்ல.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை).

(இரவு 6-40.)

ஆகையால் விவசாயிகள் பிரச்சனையை நல்ல முறையில் சீர்தூக்கிப் பார்க்கின்ற ஒரே அரசு இன்றைய புரட்சித் தலைவர் அரசு. விவசாயிகள் பிரச்னைகள், குடிநீர்ப் பிரச்சினை பற்றிச் சொல்ல வேண்டும். குடிதண்ணீர்ப் பிரச்னை யிலே திருச்செந்தூர் பாராளுமன்ற உறுப்பினர், காங்கிரஸ்

கட்சியைச் சேர்ந்தவர் சொல்லியிருக்கின்றார். ஒரிஸ்ஸா மாநிலம் 55 கோடி ரூபாய் பெற்றது மத்திய அரசிலேயிருந்து. அதே போல அஸ்ஸாம் மாநிலம் 65 கோடி பெற்றது மத்திய அரசிலேயிருந்து. ஆனால் தமிழகம் ஒன்றுமே பெறவில்லை என்று சொல்கிறார்கள். நான் காங்கிரஸ் பிரமுகர்களைக் கேட்டுக் கொள்வேன். தமிழகத்திலே பல கோடிக்கணக்கான ரூபாய்களை குடிநீருக்காக சலவு செய்தார்கள். ஆனால் செலவு செய்த இடத்திலே சில இடங்களிலே ஆழ்குழாய் அமைத்தும் ஆழமான கிணறுகளை அமைத்தும் தண்ணீர் கிடைக்கவில்லை. சில பகுதியிலே போர் போட்ட நிலத்திலே நல்ல தண்ணீர் கிடைத்தது. 3 மாதங்களுக்கு பின்னால், தண்ணீர் கெட்டு விட்டது. சில இடங்களிலே 120 முதல் 300 அடி வரை கூட தண்ணீர் கிடைத்தது. அது உப்புத் தண்ணீராக இருந்தது. ஆனாலும்கூட அனைத்து கிராமங்களுக்கும் நல்லமுறையிலே குடி தண்ணீர் கிடைத்த அரசு புரட்சித் தலைவர் அரசு என்பதை மக்கள் மறந்துவிடவில்லை. ஆனால் காங்கிரஸ்காரர்கள் மறந்து விட்டார்கள். மறந்துவிடுவார்கள். தேர்தல் வருகின்ற நேரத்திலே அதிலும் குறிப்பாக திருச்செந்தூர் தேர்தல் வருகின்றது. இதிலே எப்படியாவது அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை, இந்த அரசுக்கு விரோதமாக பல காரியங்களை எடுத்துச் சொல்லவேண்டுமென்ற காரணத்தால் மத்திய அரசை மறைத்து, மத்திய அரசு செய்கின்ற** மறைக்கப் பார்க்கின்றார்கள். ஆனால் மத்திய அரசு செய்கின்ற **காங்கிரஸ்காரர்கள் மறைத்தாலும், மறுத்தாலும், இங்கே இருக்கின்ற மக்கள், தமிழக மக்கள் எதையுமே நம்புவதாக இல்லை. இங்கே இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள், இருக்கின்ற ஆசிரியர்கள், இருக்கின்ற மாணவியர்கள், மாணவர்கள், அனைத்து ஏழை விவசாயப் பெருங்குடி மக்கள் அத்துணை பேரும் பாராட்டுகின்றார்கள். தமிழகத்திலே நடை பெறுகின்ற புரட்சித் தலைவர் அரசு ஏழை எளியவர்களின் அரசு. இங்கே இருக்கிற ஏழைக்குழந்தைகளுக்காக சத்துணவு கொடுக்கின்ற அரசு என்று பாராட்டுகிறார்கள். இப்படிப்பட்ட நல்ல அரசை நான் பாராட்டுவதுடன், எனது நெல்லை மாவட்ட மக்கள் மிகவும் பாராட்டுகின்ற காரணத்தால் அத்துணை மக்கள் மத்தியிலே, அத்துணை மக்களின் இதயத்திலே குடியிருக்கின்ற ஒரே தலைவர், உத்தமத் தலைவர், எங்கள் தலைவர், இதய தெய்வம், புரட்சித் தலைவர் அவர்கள் அரசு வாழ்க வேண்டுமென்றும், வளரவேண்டுமென்றும் கூறி வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

திரு. எல். இளையபெருமாள்: மாற்றுத் தலைவர் அவர்களே, மத்திய அரசு செய்யவில்லை என்று சொல்லலாம். ஆனால் மத்திய அரசு** என்ற வார்த்தை அவைக்குறிப்பிலே இருந்து நீக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

---

**மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. க. பாலசுப்பிரமணியன்). **என்று இருந்தால் அதைக் குறிப்பேட்டிலே இருந்து நீக்கிவிடலாம்.

திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களால் சமர்ப்பிக்கப் பட்டு இருக்கின்ற இந்த அறிக்கையின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பல கருத்துக்களை கூற நான் விரும்புகிறேன். இங்கே பேசுகின்ற ஆளும் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் தமிழகத்தில் நடைபெறுகின்ற சத்துணவு திட்டத்தைப்பற்றி வெகுவாக இங்கே கருத்துக்களை சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். நாங்கள் இந்த சத்துணவுத் திட்டத்தை வறுக்கவில்லை என்று சொன்னாலும், இந்த திட்டத்தை நிறைவேற்றுவதாலே தமிழகத்திலே தர்மருடைய ஆட்சி நடைபெறுகிறது, அல்லது எல்லாப் பிரச்னைகளும் தீர்ந்துவிட்டது என்று இங்கே மிகப்பெரிய விளம்பரம் செய்து கொண்டு இருக்கிறார்கள். நான் இந்த மாமன்றத்தின் மூலம் தமிழகத்தில் இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய மிகப் பெரிய வறட்சி மின்சார பற்றாக்குறை, காவிரி நீர்ப் பிரச்னை, இவைகளையெல்லாம் தள்ளிவிட்டு இந்த ஆளுநர் உரையிலேகூட ஏறத்தாழ 5, 6 பக்கங்களை இந்த சத்துணவு திட்டம் ஆட் கொண்டிருக்கிறது. இந்த திட்டத்தை பொறுத்தமட்டில் ஏழைக் குழந்தைகள் சாப்பிடுகிறார்கள் என்பது உண்மையாக ஒருபக்கம் இருந்தாலும் கூட இந்த திட்டம் இன்றைக்கு தமிழகத்திலே ஏழ்மையை ஒழிக்குமா என்பதுதான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் தொடுக்கின்ற கேள்வி. இன்றைக்கு தமிழகத்திலே மிகப் பெரிய உணவுப் பற்றாக்குறை. இந்த அறிக்கையில்கூட நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். கடந்த இரண்டு ஆண்டுகாலமாக தமிழகத்தில் பல்வேறு நிலைமைகள். உணவு சரியாக விளையவில்லை என்பதை நீங்களே அறிக்கையில் ஒத்துக் கொண்டிருக்கிறீர்கள். மத்திய அரசு இன்றைக்கு நமக்குத் தேவையான அரிசியைக் கொடுக்கவில்லை என்று இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இன்றைக்கு மத்திய அரசாங்கத்தில்இருக்கக்கூடியவர்கள் ஒரு கருத்து சொல்கிறார்கள். கடந்த ஆண்டுகளிலே தமிழகத்தை ஆளுகின்ற அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக அரசு அங்கே அதிகமாக விளைச்சல் இருந்த காலங்களிலே மத்திய அரசிலே இருக்கின்ற சென்ட்ரல் போர்ட் என்று சொல்லக்கூடிய அந்த மத்திய நிறுவனத்திற்கு இதுவரை இவர்கள் உணவுப் பொருள் கொடுக்க வில்லை என்ற குற்றச்சாட்டை சொல்லுகிறார்கள்.

---

**மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1983 ஜனவரி 31] [திரு. மு. அப்பாதுரை]

ஆகவே, இங்கே அதிகமாக விளைந்த நேரத்தில் அந்த விவசாயிகளைக் காப்பாற்றக்கூடிய நிலையில் உணவுக்கொள்கையை, கொள்முதல் கொள்கையை கடைபிடித்து, நமக்குத் தேவையானது போக மீதமுள்ளவற்றை மத்திய அரசுக்குக் கொடுக்கத் தவறியதன் விளைவாகத்தான் இன்றைக்கு நம்மைப் பார்த்து மத்திய சர்க்கார் சொல்கிறது, நீங்கள் எங்களுக்குக் கொடுக்கவில்லை, ஆகவே, நாங்கள் கொடுப்பதைப் பற்றி யோசிக்கிறோம் என்ற கருத்தைச் சொல்லிக் கொண்டு இருக்கிறது.

இதே மன்றத்தில் கடந்த ஆண்டு பேசுகிறபோது எங்கள் கட்சி ஒரு கருத்தைச் சொன்னது. தமிழகத்தை ஆண்டு வரும் அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உணவுக் கொள்கையில் மாபெரும் தவறு செய்கிறது என்று சொன்னோம். உடனடியாக இங்கே இருந்த நம்முடைய உணவு அமைச்சர் நாவலர் அவர்கள் சொன்னார்கள். 'மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சபையில் தவறான தகவலைத் தந்து கொண்டு இருக்கிறார்கள்' என்று என் பேச்சின் போது குறுக்கிட்டுச் சொன்னார்கள். இன்று நான் கேட்கிறேன். ஆட்சியாளர்களைப் பார்த்து இந்த ஆண்டு வறட்சி நிலைமையேற்பட்டு இருந்தாலும் கூட, சென்ற ஆண்டே அறுவடை நேரங்களில் தமிழ்நாடு அரசாங்கம் ஒரு நிலையான உணவுக்கொள்கையை எடுத்து, உற்பத்தி செய்த நேரத்திலேயே விவசாயிகளிடமிருந்து அரசுக்குத் தேவையான நெல்லைக் கொள்முதல் செய்து இருந்தால் இந்த நிலைமையைச்சற்று சமாளித்து இருக்கலாம். நாங்கள் சொன்னதை நீங்கள் கேட்கவில்லை. அது மட்டுமல்ல, இந்த நிலையேற்படும் என்று கடந்த ஆண்டே நீங்கள் சிந்தித்துப் பார்த்திருக்க வேண்டும். வடகிழக்குப் பருவமழை பொய்த்துவிட்டது. சென்ற ஆண்டு ஏற்கனவே மழை பெய்யவில்லை என்று தெரிந்து இருந்தும் கூட தஞ்சையில் நீங்கள் நிலையான ஒரு கொள்கையைக் கடைபிடித்து, அந்த விவசாயிகளையும் காப்பாற்றி இருக்கலாம். தமிழக மக்களையும் காப்பாற்றியிருக்கலாம். அப்படிப்பட்ட ஒரு உணவுக்கொள்கையை இந்த அரசு கடைபிடிக்கத் தவறி விட்டது.

அது மட்டுமல்ல, உணவுப் பங்கீட்டைக் கூட சீரான முறையில் சரியான முறையில் நீங்கள் செய்யவில்லை. இன்றைக்கு மிகப்பெரிய உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகளைப் போக்குவதற்கு இந்த அரசாங்கம் எப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறது என்பதைக் கூட இதிலே சொல்லப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



1983 ஜனவரி 31] [திரு. மு. அப்பாதுரை]

இந்த ஆளுநர் அறிக்கையில் சத்துணவுத் திட்டத்தைப் பற்றி பாராட்டியிருக்கிறீர்கள். நான் கேட்கிறேன். இங்கே கூட இந்த அவையில் பல்வேறு உறுப்பினர்கள் பேசினார்கள். நான் என்னுடைய சட்டமன்றத் தொகுதியில் பல்வேறு இடங்களுக்குச் சென்று பார்த்து இருக்கிறேன். இங்கே இருக்கும் மாண்புமிகு கைத்தறி அமைச்சர் அவர்கள் அதற்குச் சாட்சியாக இருக்கிறார்கள். நாங்கள் பார்த்த சத்துணவு மையத்தில் எப்படிப்பட்ட சத்துணவு பரிமாறப்பட்டது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்த்த சாட்சியாக இருக்கிறார்கள். அந்த அளவிற்கு இந்தத் திட்டம் சிறந்த திட்டமாக இருந்தாலும், இது ஏழை எளிய மக்களைச் சென்று சேர்கிறது என்று இருந்தாலும், தமிழகத்தில் உள்ள ஏழைகளை வாழவைக்கிறது என்று சொன்னாலும், இது ஏழைகளை ஏழையாகவே என்றைக்கும் வளர்க்கும் ஒரு திட்டம் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்கிறேன்.

காவிரி நீர் பிரச்னை பற்றி இங்கே காலையில் பேசுகிறபோது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் ஆதாரங்களோடு புள்ளிவிவரங்களைச் சொன்னார்கள். இந்த நிலைமைக்கு இன்றைக்கு இருக்கும் ஆளும் கட்சி காரணமா, ஆண்ட கட்சி காரணமா என்பதைப் பற்றி நமக்குக் கவலை யில்லை. இந்தப் பிரச்னை விரைவில் தீர்க்கப்படவேண்டியது இன்றியமையாததாகும். ஆனால் இது காலதாமதமாவதற்கு இன்றைக்கு மத்தியில் இருக்கும் திருமதி இந்திரா காந்தி அவர்களின் காங்கிரஸ் கட்சிதான் பொறுப்பு, அவர்கள்தான் இதில் தலையிட்டு, இந்தப் பிரச்னையை விரைவாகத் தீர்க்கத் தவறி விட்டார்கள். தமிழக மக்களை, தமிழக விவசாயிகளை காப்பாற்றத் தவறிவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டை இந்த மாமன்றத்தின் மூலமாக நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் இங்கே தன்னிறைவுத் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட அதற்கு இங்கே விளக்கம் சொன்னார்கள். அந்தப் பணிகள் மூன்று கட்டமாகப் பிரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகிறது என்றும், முதல் இரண்டு கட்ட வேலைகள் முடிந்துவிட்டன என்றும், மூன்றாவது கட்ட வேலைகள் கூட 70% முடிந்து விட்டது என்றும் சொன்னார்கள். தன்னிறைவுத் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்ட நேரத்திலேயே நாங்கள் சொன்னோம். ஓராண்டு காலத்தில் இந்தத் திட்டம் நிறைவேற்ற முடியாது. அதற்குப் போதுமான அதிகாரிகள் இல்லை, வாகனங்கள் கிடையாது என்று நாங்கள் சுட்டிக்காட்டியபோது, அந்த அதிகாரிகளை நீங்கள் சோம்பேறிகளாக ஆக்குவதற்கு இப்படிச் சொல்கிறீர்களா என்று கேட்டார்கள். நான் தெளிவாகச் சொல்லிக் கொள்கிறேன் என்னுடைய கருத்து, இரண்டு கட்டப் பணிகள் தன்னிறைவுத் திட்டத்தில் முடிந்து விட்டது என்று சொன்

னாலும், தன்னிறைவுத் திட்டத்திற்கு நீங்கள் என்ன விளக்கம் கொடுத்தீர்களோ அது நிறைவேறவில்லை. தன்னிறைவுத் திட்டத்தின் மூலம், குடிநீர் வசதி, சாலை வசதி, மருத்துவவசதி, பள்ளிக்கூட வசதி ஆகியவை செய்யப்படும் என்று சொன்னீர்கள். நான் உங்களைப் பார்த்துக் கேட்கிறேன். இன்று தன்னிறைவுத் திட்டம் முடிந்து விட்டது என்று சொல்கிறீர்களே, உங்களைப் பார்த்துக் கேட்கிறேன். தமிழகத்தில் 80% மேற்பட்ட கிராமங்களில் இன்றைக்குக் கூட குடிநீர் இல்லை. நீங்கள் காரணம் சொல்லலாம், இப்போது வறட்சிநிலைமையால் நீர் கிடைக்கவில்லை என்று. இந்த வறட்சி நிலையிலும் அந்த மக்களைக் காப்பாற்றுவதற்குத் தானே ஏறத்தாழ 180 கோடி ரூபாய் செலவு செய்தீர்கள். நீங்கள் போட்ட ஆழ்குழாய் கிணறுகள், சாலைகள், பாலங்கள் ஆகியவை எல்லாம், அதற்கு நிறைவு விழா நடைபெறும் முன்பே இடிந்து விழுந்து இருக்கின்றன என்று எங்களைப்போன்ற பொறுப்புள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் சொன்னால், இந்த அரசாங்கத்தில் எங்களுக்கே பாதுகாப்பு இல்லை. மிரட்டு

(இரவு 6-50)

கிறார்கள். உங்களை ஒழித்துக்கட்டுவோம் என்று சொல்கிறார்கள். சட்ட மன்ற உறுப்பினருக்கு பகிரங்கமாக கடிதம் எழுதுகின்ற நிலைமை இங்கே இருந்து கொண்டிருக்கிறது. இந்தக் கருத்துக்களைச் சொல்லும்போது ஏதோ உயிருக்குப் பயந்துகொண்டு உங்களிடம் புகலிடம் கேட்கிறோம் என்று எண்ண வேண்டாம். இதே தமிழ்நாட்டில்தான் உங்களுடைய ஆட்சியிலே எங்கள் பாராளுமன்ற உறுப்பினர் முருகையன் அவர்கள் கொலை செய்யப்பட்டார்கள். இப்படிப்பட்ட கொலைகளைக் கண்டு அஞ்சுவதல்ல கம்யூனிஸ்ட் கட்சி.

நாட்டிலே நடைபெறுவதை தைரியமாக எடுத்துச் சொல்கிறோம். கொள்ளை போகும்போது கொள்ளை போகிறது என்று எடுத்துச் சொல்கிறோம். அதைச் சொல்லக்கூடாதா? தன்னிறைவுத் திட்டம் முடிந்துவிட்டது. மூன்றாவது கட்ட வேலை இன்னும் முடியவில்லை; முடியும் நிலையில் இருக்கிறது என்று சொன்னார்கள். எங்கள் தொகுதியிலே தன்னிறைவுத் திட்டப் பணிகள் சரியாக நடைபெறவில்லை. பணியை செய்ய சிமிண்ட் கிடையாது. தண்ணீர் வசதி கிடையாது, போக்குவரத்துக்குச் சாலை வசதி கிடையாது. அங்கே தன்னிறைவுத் திட்டம் தள்ளாடிக்கொண்டிருக்கிறது என்று நம்பத்தகுந்த அதிகாரிகளே சொல்கிறார்கள். இதுதான் தன்னிறைவுத் திட்டம்.

இன்றைக்கு தமிழ்நாட்டிலே மின்சார வெட்டு வந்திருக்கிறது. ஆனால் தன்னிறைவுத் திட்டம் தொடங்கப்பட்ட காலத்தில் மின்சார வெட்டு இல்லை. தன்னிறைவுத் திட்டத்



திலேயே இவ்வளவு சீர்கேடுகள் என்றால் மற்றவை எப்படி இருக்கும்? இதற்கு நல்லமுறையிலே ஏதாவது கண்காணிப்பு உண்டா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது இங்கே இல்லை. அவர்கள் இருந்தால் எங்கே தவறு நடந்தது, கோடிட்டுக் காட்டுங்கள் என்று சொல்லுவார்கள். இந்தத் திட்டங்கள் எப்படி அலங்கோலமாக காட்சியளிக்கின்றன என்பதை நான் கோடிட்டுக் காட்டுகிறேன். தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம். நம்முடைய அமைச்சர் அவர்களுடைய பக்கத்துத் தொகுதி. அங்கே ஒரு பாலம் கட்டிக்கொண்டிருக்கும்போதே பெய்த மழையில் போய்விட்டது. சின்ன மழை தான். அதற்கே தாக்குப்பிடிக்கவில்லை. என்னுடைய தொகுதியிலே இப்படிப்பட்ட பணிகள் 10 இடங்களிலே நடைபெற்றதை படம்பிடித்து மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே காட்டினேன். தன்னிறைவுத் திட்டம் அங்கே எப்படி நிறைவேறுகிறது என்பதை எடுத்துக்காட்டினேன். ஆக, 180 கோடி ரூபாய் இந்த தன்னிறைவுத் திட்டம் என்ற பெயரால் தமிழ்நாட்டிலே சிலருடைய பைகளை தன்னிறைவு செய்திருக்கிறது என்று நான் குற்றஞ்சாட்டுகிறேன்.

மின்சார வெட்டினால் தொழில் பாதிக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். தேசிய நீரோட்டம் என்ற கருத்தைச் சொல்கிறார்கள். அதை ஆதரிக்கிறோம். ஆனால்....

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்களுக்கு கொலை மிரட்டல் வந்ததுபற்றி சட்டமன்றத்தில் கேட்கப் பட்டது. அது மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. எனவே இதையும், ஏற்கெனவே நாடாளுமன்ற உறுப்பினர் முருகையன் அவர்கள் கொலை செய்யப்பட்டதையும் இணைத்து, ஏதோ அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இதிலே தொடர்பு இருப்பதைப்போல கருதி, அந்த இரண்டையும் ஒன்றாக இணைத்து குற்றம் சுமத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. அப்பாதுரை: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல யார் கொலை செய்தார்கள் என்று நான் கருத்து தெரிவிக்கவில்லை. உங்கள் ஆட்சியிலேதான் பாராளுமன்ற உறுப்பினர் கொலை செய்யப் பட்டார் என்று குறிப்பிட்டேன்.

இன்றைக்கு மின்சார வெட்டு 100 சதவீதம் என்று சொல்கிறார்கள். இதைவிட மின்சாரமே இல்லை என்று அறிவித்து விடலாம். இங்கே தொழில்கள் தொடங்கப்படவில்லை; மத்திய அரசு மாற்றான்தாய் மனப்பான்மையோடு நடந்துகொள்கிறது என்று சொல்கிறார்கள். ஏற்கெனவே இன்றைக்கு தமிழ்நாட்டில்

இருக்கக்கூடிய தொழில்களை காப்பாற்றுவதற்காகவாவது மின்சாரத்தை உற்பத்தி செய்து, சீர் செய்து, அதற்கு உரிய நடவடிக்கை எடுக்க தமிழக அரசின் கொள்கை என்ன?

கடந்த 15 ஆண்டுகளாக, உங்கள் பாஷையிலே சொல்லப் போனால், அண்ணாவின் தம்பிகள் இந்த நாட்டை ஆண்டிருக் கிறீர்கள். நான் இன்றைக்கு இருக்கிற ஆட்சியை மட்டும் குறை சொல்லவில்லை; முன்பு ஆண்டவர்களையும் சேர்த்துச் சொல் கிறேன். தமிழ்நாட்டிலே அண்ணாவின் தலைமையில் ஆட்சி நடைபெற்றால் இங்கே பொதுவுடமைப் பூங்கா பூத்துக் குலுங்கும் என்று சொன்னீர்களே. கடந்த 15 ஆண்டு காலமாக நீங்கள் தானே ஆட்சி செய்கிறீர்கள். என்ன காரணத்தினால் இன்றைக்கு தமிழ்நாட்டிலே இருக்கிற தொழில்கள் எல்லாம் வடமாநிலங்களுக்கு போய்க் கொண்டிருக்கின்றன? இதைப்பற்றி ஆராய்ந்தீர்களா?

தொழில்களுக்கு முக்கியமாக மின்சாரம் தேவைப்படுகிறது. இந்த மின்சாரத்தை உற்பத்திச் செய்ய, தட்டுப்பாட்டைப் போக்க என்ன நடவடிக்கை வைத்திருக்கிறீர்கள்? இங்கே 15 தினங்களாக முழுமையாக மின்சார வெட்டு. அதன்பிறகு திடீரென்று வருகிறது ஜப்பான் ஜெனரேட்டர். மக்களுக்கு இதிலே ஒரு சந்தேகம் ஏற்படுகிறது. இந்த இரண்டுக்கும் ஏதோ ஒரு தொடர்பு இருக்குமோ என்ற சந்தேகம் எழுந்திருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு நிலையில்தான் இன்றைக்கு தமிழ்நாடு இருக்கிறது.

இன்னொன்று. நெல்லை மாவட்டத்தில் என்னுடைய தொகுதி மிகவும் பின்தங்கிய பகுதி. ஆனால் வீரம் விளைந்த பூமி அது. வீரபாண்டிய கட்டபொம்மன், வ. உ. சி., இன்னும் பல தேசியத் தலைவர்கள் பிறந்த மண் அது. அங்கே தொழில்கள் இல்லாதது மட்டுமல்ல; குடிநீரும் இல்லை. மாண்புமிகு அமைச்சர் வீரப்பன் அவர்கள் சொன்னார்கள், இந்த மாமன்றத்திலே டெல்லியிலே 'தண்ணீர் தண்ணீர்' என்ற படத்தை தடை செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். நான் இங்கே கேட் கிறேன். (குறுக்கீடு) என்னுடைய தொகுதியிலேதான் அந்த 'தண்ணீர் தண்ணீர்' என்ற படம் எடுக்கப்பட்டது. இன்றைக்கு அங்கே தாழையூத்து, தன்னூத்து என்று சொல்லக்கூடிய அந்தப் பகுதியிலேதான் அருமை சகோதரி சரிதா அவர்கள் குடம் தூக்கி தண்ணீர் எடுத்து வரும் காட்சி படமாக்கப்பட்டது.

இங்கே வீரகாரகன்பட்டியில் 15 அல்லது 20 லட்சம் ரூபாய் செலவில் கூட்டுக் குடிநீர் திட்டம் அமுல் ஆக்குவதற்காக எடுக்கப் பட்டுவிட்டது. ஆனால் இதுவரைக்கும் அந்த கிராமங்களுக்கு தண்ணீர் செல்லவில்லை. காரணத்தைக் கேட்டால், அது வன இலாகா என்று சொல்லுகிறார்கள். வன இலாகாவை கேட்டால் நாங்கள் கொடுக்கமாட்டோம் என்று சொல்லுகிறார்கள், நாங்கள் சாலை போடுவதற்கும், மின்சார கம்பிகளை நடுவதற்கும் நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்று சொல்லுகிற வன இலாகா, காடுகளை, மரங்களை வெட்டுவதற்கு மட்டும் அனுமதி கொடுக்கிறார்கள். யார் அந்த அனுமதியைக் கொடுக் கிறார்களோ, அது ஆட்சியாளர்களுக்குத்தான் வெளிச்சம்.



ஆனால் இன்றைக்கு 20 லட்சம் ரூபாய் செலவு செய்து, இவ்வளவு பெரிய கடுமையான சூழ்நிலையில் இங்கே அந்த திட்டத்தை கொண்டு வந்தபிறகும், அந்த மக்களுக்கு தண்ணீர் கொடுப்பதற்கு இந்த ஆட்சியால் ஒரு ஆண்டு ஆகியும் கூட முடியவில்லை. கடைசியாக நான் மருத்துவத்தைப் பற்றி ஒரு கருத்தைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் ஹண்டே அவர்கள் மிகச் சிறந்த பாராளுமன்றவாதி என்று இங்கே கருத்துக்கள் சொல்லப் படுகிறது. 3 மாதகாலம் ஆகிவிட்டது. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள தலைமை மருத்துவமனையில் உள்ள ஆபரேஷன் தியேட்டர் மூடப்பட்டு. அது தூத்துக்குடியில் இருக் கிறது. காரணம் விஷக் கிருமிகள் பரவிவிட்டது. இறுதியாக அங்கே ஆபரேஷன் செய்யப்பட்ட நபர், அங்கேயே மரணம் அடைந்து விட்டார்.

மாவட்ட தலைமை மருத்துவமனையில் இந்த நிலைமை இன்றைக்கு எந்த அரசு மருத்துவ மனைகளுக்குச் சென்றாலும் அங்கே மருந்து கிடையாது என்ற நிலைமைதான். நீங்கள் சட்ட மன்ற உறுப்பினர்கள்—உங்களிடத்தில் சொன்னால், நீங்கள் மன்றத்தில் சொல்வீர்கள். ஆகவே உங்களுடைய பேஷன்டை—நோயாளியை நாங்கள் குணப்படுத்த வேண்டும் என்று சொன் னால், தயவுசெய்து தெரியாமலாவது மருந்துகளை வாங்கித் தாருங்கள் என்று கேட்கக்கூடிய அவல நிலை இருக்கிறது. இது தான் ஏழைகளின் அரசா? பணக்காரர்கள் வசதி படைத்தவர்கள், பங்களாக்களிலே வாழ்கிறவர்கள், மிகப் பெரிய மருத்துவ மனைகளுக்குச் சென்று வசதியாக சிகிச்சைப் பெற முடியும். ஆனால் எத்தனையோ கோடி மக்கள்—நல்ல இதயங்கள் பாராட்டுவார்கள் என்று சொல்லுகிறார்கள்—அந்தக் கோடானு கோடி மக்கள் இன்றைக்கு மருத்துவ வசதிகளை அனுபவிக்க முடியாமல் இருக்கிறார்கள். அதை தடுத்து ஒரு மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு (மணியடிக்கபபட்டது) அந்த மக்களுக்கு மருத்துவ வசதிகளைக் கொடுப்பதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக, வறட்சி நிவாரண வேலைகள் எடுக்கப்படும் போது, எப்போதும் போல குளங்களை மண் வெட்டுவதற்கு எல்லாம் காண்டிராக்டுகளை எடுக்காமல், குளம், கண்மாய்களை முழுமையாக மராமத்து செய்ய வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

*திரு. த. வீராசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது பேச வாய்ப்பு தந்தமைக்கு முதற்கண் என்னுடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். தீது உள்ளம் கொண்டதீயவர்களின் சூழ்ச்சியால், கொடிய வறட்சியால் வாடி வதங்கும் வறியவர்களின் வாழ்க்கைக்கு வழி காட்டும் முறையில், வறட்சியால் வறுமையால் எங்கே செல்வோம் என்று ஏங்கும் ஏழை எளியவர்களுக்கு நம்பிக்கையூட்டும் நட்சத்திரமாக, வாரி வழங்கும் பாரி வள்ளல் ஆட்சியில், உறுபசி போக்கும் அமுத சுரபியாக மேதகு ஆளுநருடைய உரை அமைந்திருக்கிறது என்பதை மனதார பாராட்டி வாழ்த்தி வரவேற்கிறேன்.

''இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து

கெடுக உலகு இயற்றியான்'' என்று வள்ளுவர் கூறினார்.

தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜெகத்தினை அழித்திடுவோம் என்று பாரதி சொன்னார். இப்படிப்பட்ட கருத்துக்கள். 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நம்முடைய தமிழகத்திலே சொல்லப்பட்டிருந்தாலும், இப்படிப்பட்ட கருத்துக்கள் ஏட்டிலே, பட்டி மன்றங்களிலே வாதிடப்பட்டு வந்தனவே ஒழிய மக்களுக்கு பயன்பட்டதா என்று கேட்டால் நிச்சயமாக இல்லை என்று நான் கூறுவேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை

ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள், பொன் மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழகத்தினுடைய ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகுதான், அன்று வள்ளுவன் சொன்ன, பாரதியார் சொன்ன அந்தக் கருத்துக்கள், இன்று இங்கே குழந்தைகள் சத்துணவு திட்டத்தின் மூலமாக நாட்டிலே நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் இந்தத் திட்டத்திலே உள்ள குறைகளை, குறிப்பாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் குறைபாடுகளையும் குற்றச்சாட்டுகளையும் மட்டுமே எடுத்துச் சொன்னார்கள்.

(இரவு 7-00)

ஆனால் அண்ணா வழி வந்த புரட்சித் தலைவர் அவர்கள் குற்றச்சாட்டுகளையும், குறைபாடுகளையும் சொல்கின்றபோது அவற்றைக் கவனிக்கத் தவறுவதில்லை. அவற்றிற்குச் செவி சாய்த்து அந்தக் குறைபாடுகளை நீக்குவதிலே கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் சொல்லப்படுகின்ற குற்றச்சாட்டுகள் உண்மையின் அடிப்படையில் அமைந்ததுதானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆனால் எப்படிப்பட்ட



நல்ல திட்டங்களைக் கொண்டு வந்தாலும் அவற்றைக் குறை சொல்லவேண்டும் என்ற குறுகிய நோக்கத்தோடு மாண்புமிகு எதிர்க் கட்சி நண்பர்கள் செயல்படுவது நிச்சயமாகத் தவறானது. அதை மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதை மட்டும் இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இறைவனின் சிரிப்பிலே ஏழையைக் காப்போம் என்ற அந்த அடிப்படையினை மாற்றி ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம் என்றார் அண்ணா. அந்த வழியிலே செயலாற்றுகின்றவர் புரட்சித் தலைவர் அவர்கள். அவர்களை இன்று தமிழக மக்கள் பட்டி, தொட்டிகளில் எல்லாம் பாராட்டி வரவேற்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*** ***

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரும்பத் திரும்ப இந்தப் பிரச்னையைப் பற்றிப் பேசவேண்டாம். இதைப்பற்றி ஏற்கனவே ஒரு முடிவு செய்தாகிவிட்டது. ஆகவே, இது சம்பந்தமாகப் பேசிய அனைத்தையும், திரு. ரகுமான்கான் பேசியது உள்பட நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. த. வீராசாமி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னைக்குள் நான் செல்லவில்லை. ஆனால், காவிரி நீர் பங்கீடுப் பிரச்னை இன்று மட்டுமல்ல, நெடு நாட்களாக இருந்துவரும் பிரச்னை என்பதை இந்த நேரத்திலே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் பிரச்னை எப்போதோ தீர்க்கப்பட வேண்டிய பிரச்னை; ஆனால், இன்னும் தீர்க்கப்படாமல் இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இன்று மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவர் அவர்கள் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டுவந்து, ஏழை எளிய வறிய 65 இலட்சம் குழந்தைகள் நல்ல சத்துணவை அருந்தி, அறிவு வளர்ச்சி பெற்று, சமுதாயத்தில் நல்லதொரு இளைஞர்களாக உருவாகின்ற நிலையை உருவாக்கியிருக்கின்றார்கள். அது மட்டுமல்ல. இன்று தமிழகத்திலே, குறிப்பாக கிராமப்புறங்களிலே தாய்மார்கள், கைம்பெண்கள், ஆதரவற்றவர்கள் வேலை வாய்ப்பு பெறுகின்ற வகையில், 1.40 இலட்சம் பேர்கள் வேலை வாய்ப்பைப் பெற்றிருக்கின்ற இந்தத் திட்டத்தை பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல. இன்று தமிழகத்திலே இருக்கக் கூடிய 33,700 பள்ளிகளில் இன்று குறளமுது ஆசிரியர்கள் நியமிக்க இருக்கின்றார்கள். இது உள்ளபடியே வரவேற்கத் தகுந்தது. இங்கே நாட்டிலே இன்று இருக்கின்ற வறட்சியைப் பற்றிச் சொன்னார்கள். இன்று தமிழகத்திலே இருக்கின்ற வறட்சி, உண்மையிலேயே இயற்கையான வறட்சியா அல்லது உருவாக்கப்பட்ட வறட்சியா என்பதை இந்த மன்றத்திலே கேட்க ஆசைப்படுகிறேன். இன்று நம்முடைய தமிழ்நாட்டில், குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தில் நாம் கேட்ட அளவிற்கு காவிரியிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டிருந்தால் நிச்சயமாக, தஞ்சை மாவட்டத்தில் நெல் நன்கு உற்பத்தியாகி இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட ஆசைப் படுகிறேன்.

தமிழகம் பஞ்சம் போனால், தஞ்சைக்குச் செல்வார்கள். ஆனால், தஞ்சையே பஞ்சமானால், எங்கு போவது என்று கேட்க ஆசைப்படுகிறேன். எனவே, மத்திய அரசு தவறியதன் காரணமாக, அன்று கர்நாடக அரசின் முதலமைச்சர் தண்ணீர் தர மறுத்ததன் காரணமாக, தமிழகம் இன்று ஒரு பாலைவனமாக காட்சியளிக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஏற்கனவே இதைப் பற்றி பேசியாகி விட்டது. இதைப்பற்றி மேலும் பேசி, பிரச்னையைக் கெடுத்து விடாதீர்கள். தவறாக மற்றவர்கள் புரிந்து கொள்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டு விடும். ஆகவே, இதைப்பற்றி மேலும் பேச வேண்டாம். வேறு சப்ஜக்டைப் பற்றிப் பேசுங்கள்.

திரு. த. வீராசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு உண்மை நிலையை எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். இன்று தஞ்சை மாவட்டம், வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த மாவட்டத்திலே உள்ள நெற் பயிர்களைக் காப்பதற்கு ஓராயிரம் ஆழ் குழாய் கிணறுகளைத் தோண்டுவதற்கு ரூ. 1.5 கோடி



ஒதுக்கியிருப்பதை நான் உள்ளபடியே வரவேற்கிறேன்: பாராட்டுகிறேன். ஆனால், அந்தப் பணி இன்று தஞ்சை மாவட்டத்தினுடைய ஒரு சில வட்டங்களில்தான் மேற்கொள்ளப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பணியை இன்று குறிப்பாக, மேற்குத் தஞ்சையில் ஆழ் குழாய் கிணறுகளைப் போடுகின்ற நிலைமையை உருவாக்கி தஞ்சை மாவட்டத்து மக்களை இந்த வறட்சியிலிருந்து காப்பாற்ற வேண்டுமென்று தங்கள் மூலம் கேட்டுக் கொள்கிறேன்.

(இரவு 7-10)

அதற்கு மேலாக நம்முடைய தமிழக அரசு இன்றைய தமிழகத்தினுடைய வறட்சி நிலைமைக்கு 190 கோடி ரூபாய் வேண்டும் என்று மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்பியிருக்கிறது. நான் ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். 1981-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் இதே மாதிரி வறட்சி ஏற்பட்ட நேரத்தில் தமிழக அரசு ஒரு அறிக்கை தயாரித்து 48 கோடி ரூபாய் வேண்டும் என்று அனுப்பியது. ஆனால் தமிழக அரசு அந்த வறட்சி பணிகளை மேற்கொண்ட நேரத்தில் அதனுடைய செலவு 54 கோடி ரூபாயாக உயர்ந்தது. ஆனால் மத்திய அரசு கொடுத்தது 6½ கோடி ரூபாய் தான் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே இங்கே பேசிய குறிப்பாக இந்திய தேசிய காங்கிரஸ் நண்பர்கள் கேளுங்கள் கொடுக்கப்படும் போராடி பெறுங்கள் என்று சொன்னார்கள். நீங்களும் எங்களோடு சேர்ந்து வருகின்ற வறட்சி பணிகளை தமிழகத்தில் சிறப்பாக நடப்பதற்கு நீங்கள் அதிகமான தொகையை வாங்கித் தர கடமைப்பட்டிருக்கிறீர்கள் என்பதை இந்த நேரத்தில் கூறிக் கொள்கிறேன்.

இங்கே பேசியவர்கள் எங்களை மொழி வெறியர்கள் என்று சொன்னார்கள். இன்னும் எங்களுக்கு வெறி வரவில்லை. தமிழ் மேல் பற்றுதான் வருகிறது. வடக்கே இருப்பவர்கள் இந்தி வெறியர்களாக இருப்பது போல் நாங்களும் வெறி கொள்ள ஆரம்பித்தால் நாங்கள் எங்கே செல்வோம் என்பது எங்களுக்கு தெரியாது என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

நாட்டின் தேசிய மொழி 14 என்று சொல்கிறார்கள். தேசிய மொழிகள் என்று சொல்கிற நேரத்தில் இந்த இந்திய நாட்டில் இருக்கக்கூடிய மத்திய அரசில் இருக்கக்கூடியவர்கள் எல்லா மொழி வளர்ச்சிக்கும் சம வாய்ப்பு அளிக்கவேண்டும். ஆனால் அதற்கு மாறாக இன்று இந்தி மொழி வளர்வதற்கு அதிகமான பணம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்தி திணிக்கப் படுவது இந்த நாட்டில் இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன். ரயில்வேயிலும், போஸ்டலிலும் பிற துறைகளிலும் இந்தி மொழி படித்தால்தான் பதவி உயர்வு, பண

படிஉயர்வு என்ற முறையில் அறிக்கைகள் வருகிறது, உத்திரவுகள் வருகிறது என்பது நாம் எல்லாம் அறிந்த ஒன்று. அப்படிப்பட்ட நிலைமையை போக்கவேண்டும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை நான் இங்கே கூற கடமைப்பட்டிருக்கிறேன். ஆங்கிலம் அந்நிய மொழியாக இருந்தாலும் இந்திய நாட்டிலுள்ள ஆங்கிலோ இந்தியர்கள் ஆங்கிலத்தை தாய் மொழியாக கொண்டிருக்கிறார்கள். எனவே ஆங்கிலம் இந்திய தேசிய மொழிகளில் ஒன்றாக இருக்கவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள், என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

அண்ணா அவர்கள் சொன்னார்கள் ஒரு பெரிய பூனை செல்வதற்கு சுவற்றிலே ஒரு பெரிய ஓட்டை போட்டிருக்கும் போது குட்டி செல்வதற்கு வேறு ஓட்டைகள் தேவையா என்று கேட்டார்கள். உலக மொழியாக ஆங்கிலம் இருக்கிறது. அந்த மொழி இந்திய துணைக் கண்டத்தின் இணைப்பு மொழியாக இருக்கவேண்டும். கட்டாயமாக இந்தி மொழியை இணைப்பு மொழியாக நீங்கள் கொண்டு வந்தால் நீங்கள் சொல்வது போல் வெறியர்களாக ஆவதற்கு எங்களுக்கு அதிக காலம் ஆகாது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். நாட்டிலுள்ள 14 மொழிகளும் வளம் பெற்று, இலக்கியம் பெற்று, இலக்கணம் பெற்று நாட்டின் இணைப்பு மொழியாக மாறுகிற சூழ்நிலை உருவாக வேண்டும். அதற்கு மாறாக நடவடிக்கை இருக்குமானால் நிச்சயமாக மாண்புமிகு காங்கிரஸ் கட்சியை சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்வது போல் நாங்கள் வெறியர்களாக மாறுவதற்கு நாள் தூரத்தில் இல்லை என்பதை இந்த நேரத்தில் கூறி இந்த அரசினுடைய இரு மொழிக் கொள்கையை வரவேற்று அமை கிறேன். நன்றி. வணக்கம்.

* திரு. ஏ. சாகுல் ஹமீது : இந்தப் பேரவையின் மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சார்பில் ஆளுநர் உரை பற்றி பேச வாய்ப்பு அளித்தமைக்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். கடைய நல்லூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுத்த காரணத்தால் இன்றைக்கு கடைசியில் பேச வாய்ப்பு கிடைத்து இருக்கிறதோ! இன்றைக்கு சத்துணவுத் திட்டத்தைப் பற்றி எல்லாம் இங்கே எல்லா உறுப்பினர்களும் பேசுகிறபோது நானும் ஒருசில கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன். அன்றாடம் லட்சக்கணக்கான உயிரோடு சம்பந்தப்பட்ட பிரச்சினை இது. ஆக உயிரோடு சம்பந்தப்பட்ட பிரச்சனையில் இந்த திட்டம் எவ்வளவு செம்மையாக நடத்தினால் நலமாக இருக்கும் என்பதை சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். சத்துணவுத் திட்டத்தை எங்கள் இயக்கத்தின் சார்பில் வரவேற்கிறேன்.



ஆனால் அதே நேரத்தில் நல்ல முறையில் செயல்படுத்த
வேண்டும். நாட்டு மக்களின் குழந்தைகளும் பயன்பெற
வேண்டும் என்ற நல்ல கருத்தினை வைக்க விரும்புகிறேன்.

இந்தத் திட்டம் முன்னாள் மதிய உணவுத் திட்டத்தின் மறு
பிறவிதான். சொல்லவேண்டுமானால் இது கலர் பிலிம் என்று
எடுத்துக் கொள்ளலாம். இன்றைக்கு மாணவர்கள் கல்வி கற்க
முடியாத சூழ்நிலை, ஒரு அறிவு மந்தமான சூழ்நிலை வந்து
விடுமோ என்ற காரணத்தினாலே ஆசிரியர்களை அந்தப் பொறுப்பி
விருந்து மாற்றியமைக்கக்கூடிய ஏற்பாடுகளைச் செய்ய
வேண்டும், சத்துணவு போடும் பணியிலிருந்து அவர்களை
விடுவித்து வேறு ஆட்களை அதற்காக நியமிக்கவேண்டுமென்ற
பலருடைய கருத்தோடு சேர்த்து என்னுடைய கருத்தாகவும்
அதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆசிரியர்கள் சமையலில்
ஈடுபட்டு, மாணவர்கள் அதை சாப்பிட்டுவிட்டு தூங்கிவிடுவார்
களானால் இந்த நாட்டிலே எப்படி வருங்காலத்து மன்னர்
களாக அவர்கள் இருக்கமுடியும் என்பதை எண்ணிப் பார்க்க
வேண்டும், ஆகவே அந்தப் பொறுப்பிலிருந்து ஆசிரியர்களை
மாற்றியமையுங்கள், அந்தக் குறையை நீக்கித்தாருங்கள் என்று
கேட்டுக் கொள்கிறேன். லட்சக்கணக்கான உயிர்களோடு
சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இருக்கிறது இன்று வாழ
வைக்கும் திட்டம் உங்களை ஆள வைக்கும் திட்டம். சரியாக
நிறைவேற்றாவிட்டால் அதுவே தாழ வைக்கும் திட்டமாக மாறி
விடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாலசேவிகாக்கள் நியமனத்தைப் பொறுத்தவரையிலே
அந்தந்தப் பகுதியிலே உள்ள மக்களுக்கு முதலிடம் கொடுக்க
வேண்டுமென்று இருக்கிறது. என் தொகுதியிலே உள்ளவர்
களுக்கு அப்படிக் கொடுக்கப்படவில்லை. அரசியல் காரணங்
களினால் வேறு ஆட்களுக்கு இடம் கொடுத்திருக்கிறார்கள்.
அதை கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்வித் துறையைப்பற்றி ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டு
இருக்கிறது. வெளிநாட்டினர் நம்முடைய கல்வியைப் பாராட்டி
னார்கள் என்று இருக்கிறதே தவிர இந்த நாட்டிலே கல்வி
எப்படி இருக்கிறது என்ற குறிப்பைத் தரவில்லை. ஆசிரியர்
களுக்கு முதல் தேதி சம்பளம் வருவதில்லை, முதல்தேதி அவர்
களுக்குச் சம்பளம் கிடைக்கச் செய்யவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

நான் சார்ந்திருக்கின்ற சிறுபான்மையோர் சமுதாயத்தின்
சார்பாகவும், எங்கள் இயக்கத்தின் சார்பாகவும் நான் ஒரு
கருத்தை இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்
கிறேன். கிறித்துவ சமுதாயம், முஸ்லீம் சமுதாயம் நடத்து
கின்ற கல்வி நிறுவனங்களுக்கு உரிய பாதுகாப்பு தரப்பட
வில்லை. கடந்த மூன்று நான்கு ஆண்டுகளாக 46 கல்வி
நிலையங்களுக்கு அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால்

மானியம் தரப்படவில்லை. கடந்த 2 மாதங்களில் 18 கல்வி நிலையங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் மானியம் தரப்படுவதில் 2 கல்வி நிலையங்களுக்கு மட்டும் மானியம் தரப்பட்டிருக்கிறது. ஏன் இந்த பாரபட்சம் காட்டப் படுகிறது என்று கேட்க விரும்புகிறேன். 18 நிலையங்களுக்கு அனுமதியளிக்கப்பட்டும் 2 நிலையங்களுக்கு மட்டுமே மானியம் தருகிறீர்கள் என்றால் மைனாரிட்டி சமுதாயத்திற்கு இது பார பட்சம் காட்டுவதில்லையா? என்று கேட்க விரும்புகிறேன்.

அடுத்து ஒரு முக்கியமான பிரச்சினை. பரிட்சை நாள் அறிவிக்கப்பட்டுவிட்டது. ஆனால் பக்ரீத் பெருநாள் வருகிறது, முஸ்லீம் மாணவர்கள் பரிட்சை எழுதமுடியுமா? ஆகவே ஒரு நாள் தள்ளிவையுங்கள் என்று சொன்னோம், ஆனால் அதற்கு மறுத்துவிட்டீர்கள். எங்களுடைய முஸ்லீம் மாணவர்கள் எல்லாம் பெருநாள் கொண்டாட முடியாத நிலைமை ஏற்பட்டு விட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் பாரதி விழாவிற்காக பரிட்சையை மாற்றிவைத்திருக்கிறீர்கள் என்றால் ஏன் எங்களுக்கு மட்டும் இந்த பாரபட்சம் என்று கேட்க விரும்புகிறேன். கல்வியமைச்சர் அவர்கள் மேலவை யிலே ஒரு கருத்தை கூறியிருக்கிறார்கள். 50 சதவீதம் மைனாரிட்டி மக்கள் படிக்கிற சிறுபான்மை கல்வி நிலையங்கள் மட்டும் சிறுபான்மை கல்வி நிலையங்களாக கருத வேண்டும் என்கிறீர்கள். 80 சதவிகித சிறுபான்மையோர் பணி யாற்ற வேண்டும் என்கிறீர்கள். ஆனால் நீங்களே ஒரு உத்திரவைப் போட்டிருக்கிறீர்கள். கல்லூரியில் இத்தனை சதவீதம் பிற சமுதாய மாணவர்கள் அனுமதிக்கப்பட வேண்டு மென்று. ஒன்று 50 சதவீதம் என்பதை நீங்கள் நிறைவேற்ற விரும்பினால் அந்த உத்திரவை வாபஸ் வாங்குங்கள் அல்லது இருக்கிற நிலைமையை தொடர அனுமதியுங்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இரவு 7-20)

குடும்பத்தில் ஒருவருக்கு வேலைவாய்ப்பு தரப்படும் என்று கடந்த 3 ஆண்டுகளாகச் சொல்லப்பட்டு வந்தது இப்போது ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இதற்கு முன்பு சர்வீஸ் கமிஷன் மூலமாக கிராம அதிகாரிகள் தேர்வு செய்யப்பட்டது என்ன ஆயிற்று? எந்த நிலையில் இருக்கிறது? அதைப்போலவே போலீஸ் துறையில் வாலிபர்கள் வேலைக்காக தேர்ந்தெடுக்கப்பெற்றது எந்த நிலையில் இருக்கிறது? ஆனால் இப்போது சொல்கிறீர்கள் குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை வாய்ப்புத் தரப்படும் என்று. பல தொழிற்சாலைகளில் கதவடைப்பு செய்யப்பட்டிருக்கிற, வேலை நீக்கம் செய்யப் பட்டிருக்கிற தொழிலாளர்கள் பரிதவிக்கிறார்களே அவர் களுடைய நிலை என்ன? சிந்தித்து பார்க்க வேண்டும். விடுகி...



அறிக்கை குழப்பம் இல்லாமல் இருக்க வேண்டும். குடும்பத்திலே ஒருவருக்கு வேலை வாய்ப்பு என்று சொல்கிறீர்கள். ஆனால் முன்னால் தேர்வு பெற்றவர்களுக்கு முதலில் வேலைவாய்ப்பு தர வேண்டும்.

அடுத்து தன்னிறைவு திட்டம். இதை அமல்படுத்துவதில் தான் எத்தனை குறைபாடுகள்; செய்யப்பட்ட பணிகள் ஒரு ஆறு மாத காலத்திற்காவது தாக்கு பிடிக்கிறதா என்றால் இல்லை. என்னுடைய தொகுதியில் ஒரு சின்ன பாலத்தை கட்டினார்கள். கட்டி மூன்றாவது மாதத்திலேயே மழையில் அடித்துப் போய் விட்டது. அது தன்னிறைவு திட்டமா? அல்லது தங்களை நிறைத்துக் கொள்கிற திட்டமா? தெரிய வில்லை.

அடுத்து ஆதி திராவிட முன்னேற்றம் என்று ஆளுநர் அறிக்கையில் பார்த்தேன். செய்தித் தாள்களில் முழு பக்க விளம்பரங்கள் தந்துள்ளதைப் பார்க்கிறேன். அவர்களுக்கு அதை செய்கிறோம், இதை செய்கிறோம் என்று விளம்பரத் திலே அழகாக சொல்லப்படுகிறது. சொன்னபடி வீட்டு மனை கொடுக்கப்பட்டதா? குடிநீர் கொடுக்கப்பட்டதா? சாலை வசதி செய்யப்பட்டதா? என்றால் இல்லை. என்னுடைய கடைய நல்லூர் தொகுதியில், கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வலசை என்ற கிராமத்தில் ஆதி திராவிடர்கள் வாழும் பகுதிக்கு ஊராட்சி கிணற்றிலிருந்து பைப் லைன்கள் தண்ணீருக் காக போட்டார்கள். கனெக்ஷன் கொடுக்கிற சமயத்தில் அங்கிருந்த வேறு சில சமுதாய மக்கள் அதை தடுத்து விட்டார்கள். இன்றைக்கு வரையில் ஆதி திராவிட மக்களுக்கு தண்ணீர் கிடைக்கவில்லை. அதேபோல வீட்டு மனை கொடுப் பதற்காக அங்கு ஊர் மேல் அழகியன் என்ற கிராமத்தில் மூன்று ஆண்டுகளாக மனுக்கள் போட்டும் ஆதி திராவிட மக்களுக்கு மனைப்பட்டா வழங்கப்படவில்லை. ஆகவே விளம்பரம் மட்டும் செய்தால் போதாது. அதனை செயல்முறைக்கு கொண்டு வரவேண்டும். ஆதி திராவிட மக்களின் முன்னேற்றத் திற்கு அவர்களின் வாழ்வு உயரவேண்டும் என்று நினைக்கும் போது நீங்கள் என்னுடைய தொகுதியில் ஆதிதிராவிட மக்களுக் காக ஒரு பஞ்சாலை உருவாக்கி தாருங்கள். அந்த மக்களுக்காக ஒரு ஆட்டுப் பண்ணையை உருவாக்கித் தாருங்கள் என்று என் தொகுதி ஆதி திராவிட மக்கள் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

பின்தங்கியோர் நலன் என்று ஆளுநர் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. சிறுபான்மை சமுதாயங்களான முஸ்லீம், கிறிஸ்த்துவ சமுதாயங்கள் எந்த வகையில் உயர்வு பெற்றிருக்கின்றன. பின்தங்கியவர்களுக்காக 50 சதவீதம் வேலை வாய்ப்பு என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு சமுதாயங்களும் பெற்றிருக்கிற வேலைவாய்ப்பு

எவ்வளவு என்று கணக்கிட்டு சொல்ல முடியுமா? என்றால் கிடைக்காது, ஆகவே அவர்களுக்கு உரிய வேலை வாய்ப்பு தரப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து சத்துணவுத் திட்டத்தில் ஏறக்குறைய ஒரு லட்சத்து 40 ஆயிரம் பேர்களை நியமித்தோம் என்று சொன்னீர்கள். இவர்களில் சிறுபான்மை சமுதாயத்தை சேர்ந்தவர்கள் எத்தனை பேர்கள் வேலை வாய்ப்பினை பெற்றிருக்கிறார்கள்? 50 சதவீதம் என்று சொல்லி விடுகிறீர்களே தவிர மைனாரிட்டி மக்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்படுகிறதா என்றால் இல்லை. ஆகவே 50 சதவீதம் என்பதை நீக்கிவிட்டு ஜனத்தொகை விகிதாச்சாரப்படி வேலை வாய்ப்பு தரப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையில் தமிழகத்தில் அமைதிச் சூழ்நிலை வளர வேண்டும், வகுப்பு கலவரங்கள் இல்லாமல் மக்கள் அமைதியாக வாழ வேண்டும் என்ற அறிக்கை இருக்கும் என்று எதிர் பார்த்தேன். (மணியடிக்கப்பெற்றது) துணைத்தலைவர் அவர்களே, எனக்காக வாதாட இந்த மன்றத்தில் வேறு உறுப்பினர் எவரும் இல்லை. நான் ஒருவன் தான் ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு என்று இருக்கிறேன். ஆகவே இன்னும் சிறிது நேரம் அனுமதிக்கவேண்டும். இன்றைக்கு தமிழகம் அமைதிப் பூங்காவாக இல்லாமல் அல்லோலப்பட்டு இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். சிறு பான்மை சமுதாயங்களுக்கு எதிராக துவேஷ பிரச்சாரங்கள் ஆங்காங்கு பேசப்படுகின்றன. இந்துக்கள் கடையில்தான் சாமான்கள் வாங்க வேண்டுமென்று போஸ்டர்கள் ஒட்டப் படுகின்றன. இது நியாயம் தானா? நாங்கள் இந்த நாட்டு மக்கள் இல்லையா? நாங்களும் உங்களோடு பிறந்தவர்கள் இல்லையா? நாங்கள் அந்நிய நாட்டவர்களா? இந்த நாட்டிலே பிறந்து, இந்த நாட்டிலே வாழ்ந்து, இந்த நாட்டிலே மடியக் கூடியவர்கள் இல்லையா நாங்கள்? எங்கள் கடையில் சாமான்கள் வாங்க வேண்டாம் என்று அப்படி சொல்வது முறையா? அப்படி ஒரு இயக்கம் நடக்கிறது என்றால் அந்த இயக்கத்தை கண்டிக்க வேண்டியது அத்தனை சமுதாயத் தினுடைய கடமை இல்லையா? இந்து முண்ணணி என்ற பெயரால் மேடை போட்டு ஊருக்கு ஊர் பேசுகிறார்கள். அந்த நிலை வளர வேண்டாம். அடுத்த வீட்டிலே வாழ்கிற உறவு சொல்லி வாழ்கிற சமுதாயங்களின் மீது விசமப் பிரச்சாரங்களை தூண்டுகிற இந்த நிலை தமிழகத்திலே வளர வேண்டாம்; மேற்கொண்டு வளர்க்க இடமளிக்க வேண்டாம், அதற்குத் தக்க நடவடிக்கை எடுங்கள் என்று எங்களுடைய சமுதாயத்தின் சார்பாக நான் கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக, ஞானரதம் என்ற பெயரால் புளியங்குடியிலே கலவரத்தை நடத்திவிட்டு, இப்பொழுது புத்தாநத்தத்திலே வந்து அங்கு கலவரத்தை விளைவித்துக்





கொண்டிருக்கிறார்கள் என்றால், அதனுடைய நிலையை நீங்கள் எண்ணிப் பார்த்தால், அந்த ஞானரதத்தின் காரணமாக வன்முறை ஏற்படுகிறது. அது ஏற்படாமல் தடுப்பதற்கு அரசு முன்வந்து மைனாரிட்டி சமுதாயத்தினருக்கு நம்பிக்கையையும் அவர்களுக்குப் பாதுகாப்பும் அதே நேரத்தில் ஆதிதிராவிடர் களுக்கும் பாதுகாப்பும் தரும்படி நான் அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு, இஸ்லாமிய அறநிலையங்களுக்கு மசூதி புதுப் பிக்க—செப்பனிட இரண்டாண்டு மானியமளிக்க ரூ. 1 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று ஆளுநர் உரையில் பார்த்தேன். அதை நான் வரவேற்கிறேன். ஆனால், அதே நேரத்தில், இதிலே தெளிவில்லை, குழப்பமாகயிருக்கிறது. மசூதிகள் செப்பனிடப்படும், புதுப்பிக்கப்படும் என்று இருக்கிறது. ஏற்கனவே, வக்ப் வாரியத்தின் வருமானம் மூலமாக, இது வரைக்கும் மசூதிகளை புதுப்பிக்கப் பணம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது இதில் சொல்லப் பட்டிருக்கிற பணம், நீங்கள் கொடுக்கிற பணமா? அல்லது, வக்ப் வாரியம் தான் கொடுப்பதை நிறுத்திவிட்டு அரசே கொடுக்கப்போகிறதா என்று தெரியவில்லை ஆகவே, நீங்கள் இந்த ரூ. 1 கோடி மானியம், மசூதிகளைப் புதுப்பிப்பதற்கு ஒதுக்கப்படும் அந்தப் பணம் வக்ப் வாரியத் தினுடைய வருமானத்திலிருந்து கொடுக்கப்படவிருக்கிறதா, அல்லது மாநில அரசே அந்தத் தொகையை தானே கொடுக்கப் போகிறதா என்பது குறித்து விளக்கியிருந்தால் நல்லது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு மசூதிகளைப் புதுப்பிப்பதற்காகப் பணம் ஒதுக்கப்படுகிற அதே நேரத்திலே, இஸ்லாமிய சமுதாயத்து மக்கள் 500, 600 பேர்கள் வாழ்கின்ற பகுதியிலே, தங்களுடைய பட்டா நிலத்திலே, சொந்தமாகக் கிரயம் வாங்கிய நிலத்திலே, புறம்போக்கு நிலத்திலே இல்லை, வழியிலே இருக்கிற நிலத்திலே இல்லை. சொந்த இடத்திலே, கிரயம் வாங்கி, அங்கே மசூதி கட்ட வேண்டுமென்று மனு கொடுத்து 1½ ஆண்டுகள் ஆகின்றன. இன்னும் அந்த மக்களுக்கு இறைவனை வணங்கக் கூட அனுமதி கிடைக்கவில்லை. தயவு செய்து அரசு இஸ்லாமியர்களுடைய உரிமைகளிலே குறுக்கிடாமல், அவர் களுடைய உரிமைகளைப் பறிக்காமல், பாதுகாக்கவேண்டும். இஸ்லாமியர்கள் அவ்வாறு எண்ணக்கூடிய அளவுக்கு இன்றைக்கு ஆட்சிமுறை இருக்கிறதா? இஸ்லாமியர்களுக்கு, மைனாரிட்டி சமுதாயத்தினருக்கு முதலுரிமை தாருங்கள் என்று அந்தச் சமுதாயத்தினரின் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்திலே, ஆளுநர் உரையிலே, விவசாயக் கூலி பற்றி எந்த விவரமும் இல்லை. பீடித் தொழிலாளர்கள், தோல் பதனிடும் தொழிலாளர்கள், நெசவுத் தொழிலாளர்கள்

பற்றியும் ஆளுநர் உரையிலே இல்லை. இன்றைக்கு நூல் விலை விஷம் போல ஏறிவிட்டது. கைத்தறி நெசவாளர்கள் நூல் விலை ஏற்றத்தின் காரணமாக தொழிலின்றி தவிக்கிறார்கள். நூல் இல்லாத காரணத்தால், எத்தனையோ தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, அந்தத் தொழிலாளர்களுக்கு நூல் குறைந்த விலையிலே கிடைக்க அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், (மணியடிக்கப்பெற்றது),

இந்த நாட்டிலே வறட்சி. குடி தண்ணீர் இல்லை. இராட்சதக் கிணறுகள் போட்டோம் என்றீர்கள், எதிர்பார்த்த தண்ணீர் இல்லை. இராட்சதச் செலவுதான் ஏற்பட்டிருக்கிறது என்று புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. நில வறட்சி, கழனிகளெல்லாம் காய்கின்றன, பயிர்கள் வாடுகின்றன, 'காவிரி, கிருஷ்ணா' என்று கூப்பிடுகிறீர்கள், தண்ணீர் வரவில்லை, ஆனால், காவிரி என்று சொன்னால், வேறு தண்ணீரைப் பற்றி பாடுகிறார்கள். காவிரி என்றாலே, காவேரின்னா, காவேரின்னு பாடுகின்ற போக்கு உள்ளது. பத்து மணி என்றால் பத்மனி, பத்மனி எங்கே என்று பக்கம் பக்கம் பார்க்கிற நிலைதான் இருக்கிறது. அந்த அளவுக்கு மக்கள் நிலை இருக்கிற காரணத்தினால்தான் தமிழகத்திலே இந்த மாதிரி தவறான செயல்கள் நடப்பதற்கு மக்கள் அனுமதித்திருக்கிறார்கள். ஆகவேதான் இதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மணியடிக்கப் பெற்றது).

மின்சாரம் இல்லாமல் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். தொழில்கள் பாதிக்கப்படுகின்றன; தொழிலாளர்கள் பாதிக்கப் படுகின்றனர்; சிமென்ட் ஆலைகள் பாதிக்கப்படுகின்றன. இன்றைக்குத் தண்ணீர் இல்லாமல், கல்லூரிகளை மூடிவிட்டார்கள், மருத்துவ மனைகளுக்குத் தண்ணீர் கிடையாது. இதற்கு என்ன காரணம் என்பதைப் பார்க்கவேண்டும். (மணி அடிக்கப் பெற்று அடுத்த உறுப்பினர் அழைக்கப்பெற்றார்).

(இரவு 7-30)

திரு. பெ. திருமாறன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறிக் கொள்கிறேன். ஆளுநர் உரையானது தமிழகத்திலே ஏற்பட்டிருக்கின்ற அத்தனை திட்டங்களையும் பற்றியும், நடக்கவிருக்கின்ற அத்தனை திட்டங்களையும், தன்னிறைவுத் திட்டம், சத்துணவுத் திட்டம் இன்னும் மற்ற திட்டங்களைப் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறும் வகையில் அமைந்திருக்கிறது. அதற்காக என்னுடைய வரவேற்பை நான் உரித்தாக்கிக் கொள்கிறேன்.



காலையிலே பேசிய திராவிட முன்னேற்றக் கழக மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் ஆளுநர் உரையானது ஊமையாகவும், நொண்டியாகவும், கண் குருடானதாகவும் அமைந்திருக்கிறது என்று கூறினார்கள். ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கா விட்டாலும், ஆளுநர் உரையில் கூறப்பட்டுள்ள அந்தத் திட்டங்களை வரவேற்காவிட்டாலும், ஆளுநர் உரையில் குறை கூறிக்கொண்டிருந்தார்கள். கிராமத்திலே சொல்லுவார்கள், ''காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள்'' என்று. அந்த வகையிலே உறுப்பினருடைய பேச்சு அமைந்திருக்கிறது.

''தனி மனிதனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்'' என்று பாரதியார் பாடியதற்கிணங்க, இந்தத் தமிழகத்தில் ஏழை எளிய மக்களுக்கு, முதியோர்களுக்கு இந்தச் சத்துணவு வழங்கும் திட்டமாக நமது புரட்சித் தலைவரவர்கள் புனிதமான திட்டத்தை ஏற்படுத்தி நாட்டிலே உள்ள மக்களுடைய நற்பெயரைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தைக் குறித்து அந்த மக்களுடைய பிரதிநிதியாக உள்ள நாங்களெல்லாம் பாராட்டிக் கொண்டிருக்கிறோம். சாதாரணமாக எந்தவொரு தனி மனிதனுக்கும் எந்தச் சங்கமுமே அமைப்பதில்லை; அதைப்போல முதிர்ந்த ஏழை எளிய பெரியவர்களுக்காக ஒரு சங்கம் அமைப்பதில்லை. நாட்டில் சங்கம் அமைப்பது என்பது தொழிலாளர்களுக்கும், பட்டதாரிகளுக்கும், அரசு அலுவலர்களுக்கும் பல சங்கங்கள் உண்டு. ஆனால் ஏழை எளியவர்களுக்கு, அந்த முதியவர்களுக்கு எந்தச் சங்கமுமே இல்லை. அந்த அடிப்படையில் தமிழக முதல்வரவர்கள் இந்த மக்கள்பால் அன்பு கொண்டு ஏழைகளின் வயிற்றுப் பசியைப் போக்குகின்ற அந்தப் புனிதமான திட்டத்தைப் புரட்சித் தலைவரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் திட்டம் சீரிய முறையிலே நடந்து கொண்டிருக்கிறது.

எந்த மாநிலமும் கண்டிராத வகையிலே தமிழகத்திலே தன்னிறைவுத் திட்டம் நடந்து கொண்டிருக்கிறது; நடந்து முடிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தன்னிறைவுத் திட்டம் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், நான் ஊராட்சி மன்ற உறுப்பினராக பத்தாண்டுக் காலமாகப் பணியாற்றியவன் என்ற முறையில் சொல்ல விரும்புகிறேன். ஊராட்சி ஒன்றியத்திற்கு அரசினால் ஒரு ஆண்டுக்கு இரண்டு இலட்சம் அல்லது மூன்று இலட்சம் ரூபாய் வரை தான் நிதி ஒதுக்குவார்கள். அதிலேதான் பள்ளிக்கூடம் கட்டவேண்டும், பாலம் அமைக்க வேண்டும், ரோடு போட வேண்டும், தாய் சேய் நல விடுதி அமைக்க வேண்டும். ஆனால் இந்த அரசு ஒரு ஆண்டுக்கு 30 இலட்சம் ரூபாய், 40 இலட்சம் ரூபாய் என்று நிதி ஒதுக்கி அத்தனை திட்டங்களையும் நிறைவேற்றும் அளவிற்கு இந்தத் திட்டங்கள் செயல்படுகின்றன. நான் பத்தாண்டுக் காலம் ஊராட்சி மன்றத் தலைவராக இருந்த நேரத்தில் ஒரு பள்ளிக்கூடம் வாங்க முடியாது நிதிப் பற்றாக் குறையினால். குறைந்தபட்சம் ஒரு பள்ளிக்கூடம் கட்டி

யிருப்போம், ஒரு பாலம் அமைத்திருப்போம், ஒரு ரோடு போட்டிருப்போம். ஆனால் இப்பொழுது எல்லாக் கிராமங்களிலேயும் எல்லாத் திட்டங்களும் நிறைவேறக் கூடிய அளவிற்கு இந்தத் திட்டங்கள் அமைந்துள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே ஏறக்குறைய பத்து பாலங்கள் இருக்கின்றன என்றால் ஒவ்வொரு இலட்சம் ரூபாய் பாலத்திற்கு என்று ஹைவேஸ் திட்டத்திலே போட்டால் 20 இலட்சம் 30 இலட்சம் ரூபாய் என்று போடுவார்கள். ஆனால் அந்தத் திட்டத்தைத் தன்னிறைவுத் திட்டத்தில் ஒவ்வொரு இலட்சம் ரூபாய் அளவில் பத்துப் பாலங்கள் முடிக்கப்பட்டிருக்கின்றன. அந்த அளவிற்குத் தன்னிறைவுத் திட்டம் மிக முக்கியமான சாலச் சிறந்த திட்டமாக இருக்கிறது.

காலையிலே பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திருமதி யசோதா அம்மையார் அவர்கள் சொன்னார்கள் மாற்றாந்தாய் மனப்போக்கில் எதிர்க்கட்சி உறுப்பினருடைய தொகுதிக்குப் பணம் தன்னிறைவுத் திட்டத்தில் குறைத்து ஒதுக்கப்பட்டுள்ளது என்று சொன்னார்கள். எந்த ஒன்றியத்திற்கும் நிதியை குறைத்து ஒதுக்கவில்லை. எல்லா ஒன்றியங்களுக்கும் சமமாக ஒதுக்கப்படுகிறதேயொழிய மாற்றாந்தாய் மனப்போக்கு புரட்சித் தலைவருக்கு எப்பொழுதும் இல்லை, இனியும் இல்லை.

எதிர்க்கட்சி என்றாலும் ஆளும்கட்சி என்றாலும் மக்கள், பொதுமக்கள் என்றுதான் கருதுகிறார்களே ஒழிய, சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் எதிர்கட்சியில் இருக்கிறார் என்று சொல்லி, அந்தத் தொகுதியைப் புறக்கணித்து எங்களுடைய புரட்சித் தலைவர் எந்த காலத்திலும் ஒதுக்கமாட்டார் என்பதை ஞாபகப் படுத்துகிறேன். அதே நேரத்தில் இதற்கு முன்பு இருந்த முதலமைச்சர், பெரியவர் காமராஜ் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் செல்வாக்குப் படைத்த பகுதிகளிலே எல்லாம் எந்த அரசியல் திட்டமும் அங்கே செயல்படாமல் இருந்ததை நாம் அத்தனை பேர்களும் அறிவோம். அதேபோல் இதற்கு முன்னால் இருந்த முதலமைச்சர் அவர்களும், தனக்குப் பிடிக்காமல் இருந்த சட்ட மன்றத் தொகுதி உறுப்பினர்களின் பகுதிக்கு எந்த திட்டமும் இருக்குமாறு பார்த்துக் கொண்டதையும் நான் என் கண் முன்னே பார்த்தவன்.

அந்த வகையிலே புரட்சித் தலைவர் அவர்கள் கட்சிப் பாகுபாடு இன்றி, அது சத்துணவு திட்டமாக இருந்தாலும், தன்னிறைவுத் திட்டமாக இருந்தாலும்; குடிதண்ணீர் பிரச்சினையாக இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினர்கள் யார் என்று பார்க்கமாட்டார். பொதுமக்களைத்தான் பார்ப்பார். அங்கே



உள்ள மக்கள் எல்லாம் நம்முடைய மககள் நம்முடைய அரசு மக்கள் என்றுதான் பார்ப்பாரே ஒழிய, மற்றப் பாகுபாடுகளைப் பார்க்கமாட்டார். ஆனால் எதிர்கட்சி உறுப்பினர்கள் போய் தொகுதியிலே குறை சொல்வார்கள், நான் எதிர்கட்சி உறுப்பினராக இருக்கின்ற காரணத்தினால் நான் எது சொன்னாலும் நடக்காது என்று சொல்லி மக்களைத் திசை திருப்புகிறார்கள். ஆனால் மக்கள் இப்போது விழித்துக் கொண்டிருக்கிறார்கள் எந்தத் திட்டத்தையும் நமக்காக வேண்டி, தொகுதியைப் பார்த்து ஒதுக்கமாட்டார், மக்களைப் பார்த்து திட்டம் போடுவார். எல்லாப் பகுதிக்கும் திட்டம் போடுவார் என்ற நம்பிக்கையை புரட்சித் தலைவர் மீது பொது மக்கள் வைத்திருக்கிறார்களேயொழிய, வேறல்ல.

என்னுடைய ஆலங்குடி தொகுதியைப் பொறுத்தமட்டில் 40 லட்சம் ரூபாய் தன்னிறைவுத் திட்டத்திற்காக ஒதுக்கப் பட்டது. சென்ற ஆண்டு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தன்னிறைவுத் திட்டம் முடிக்கப்பட்ட பகுதிகளில், குறைகள் இருந்தால் எடுத்துச் சொல்லுங்கள், மேலும் நிதி தருகிறேன் என்று சொன்னார். அந்த அடிப்படையில் ஒரு கிராமத்திற்கு ஒரு திட்டம் என்ற வகையில் 12 லட்சம் ரூபாய்க்கு திட்டமிட்டு, அதற்கு அனுமதி பெற்று வேலை முடியும் தறுவாயில் இருக்கிறது. கூடுதலாக ரூ. 12 லட்சம் இந்த அரசு கொடுத்திருக்கிறது. ஆகவே சட்டமன்ற உறுப்பினர்கள் விட்டுப் போன வேலைகளுக்கு விவரம் கொடுங்கள், நாங்கள் நிதி தருகிறோம் என்று சென்ற பட்ஜெட் கூட்டத்தில் உள்ளாட்சித் துறை அமைச்சர் சொன்னதன் பேரில் நான் இந்தத் திட்டத்தைக் கொடுத்து நிதி பெற்றேன். ஆனால் மற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் பொதுமக்களிடம் குறைகளைச் சொல்லுகிறார்களே ஒழிய, திட்டத்தை அரசிடம் கொடுத்துப் பணம் வாங்கி, உரிய நன்மைகளை மக்களுக்கு செய்வதில்லை. அந்த வகையிலே இந்த அரசு நல்ல பல திட்டங்களை செய்தாலும், எத்தனை பிரச்சினைகள் வந்தாலும், எத்தனை போராட்டங்கள் வந்தாலும் அதை சமாளித்து மக்களுக்கு நன்மை செய்கின்றது.

இதற்கு முன்னால் இருந்த முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு சங்கத் தலைவர்களை மட்டும் அழைத்து இரண்டு பேரும் பேசி பிரச்னையை முடிப்பார். ஆனால் நம் முதலமைச்சர் அவர்களோ அந்த சங்க நிர்வாகிகளை அழைத்து, கோரிக்கைகள் கொடுங்கள் எங்களால் முடிந்ததைச் செய்கிறோம் என்று பேச்சு வார்த்தை நடத்தி பல போராட்டங்களை பேச்சுவார்த்தையின் மூலமாகவே வெற்றி கொண்டவர். அந்த அளவுக்கு புரட்சித் தலைவர் முன்னாலே எந்தப் போராட்டமும் நிலைக்காது என்று சொல்லி, போராட்டம் நடத்தாமலேயே சில கோரிக்கைகள் வைக்கப்பட்டு வெற்றி அடைந்தார்கள். எதிர்கட்சி தொழிற் சங்கமாக இருந்தாலும் தமிழக முதலமைச்சரை அணுகினால்

அந்தத் திட்டத்தைப் பெறலாம் என்ற அந்த நோக்கோடு அவர்கள் புரட்சித் தலைவரை நேரடியாக அணுகி அத்தனைத் திட்டங்களையும் கேட்கிறார்கள் என்று கூறிக்கொள்கிறேன்.

கடைசியாக என்னுடைய புதுக்கோட்டை மாவட்டம் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றது. அங்கே பல அமைச்சர்கள் பல பகுதிகளை சுற்றிப் பார்த்து இருக்கிறார்கள். வறட்சியினுடைய நிலைமை அமைச்சர்களுக்கு நன்கு தெரியும். ஆகவே புதுக்கோட்டை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக ஆக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். புதுக்கோட்டை மாவட்டத்திற்கு எல்லா வசதிகளையும் இந்த அரசு வந்துதான் செய்திருக்கிறது. பல தொழில்கள் துவங்குவது, யூனியன்களைப் பிரிப்பது, புதுக்கோட்டை மாவட்டத்திற்கு தலைமை அலுவலகம், திருச்சியிலே இருந்து பிரித்துக் கொண்டு வந்திருக்கிறது. இப்படிப்பட்ட அத்தனை திட்டங்களையும் புதுக்கோட்டையில் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்று கூறிக்கொண்டு, கடந்த இரண்டு ஆண்டு காலமாக அங்கே கடுமையான வறட்சி இருப்பதால், தமிழக அரசு அளிக்கும் நிதியோடு மத்திய அரசின் நிதியையும் அந்த மாவட்டத்திற்கு ஒதுக்கிக், குறிப்பாக என்னுடைய ஆலங்குடி தொகுதிக்கு அதிக நிதி உதவி அளிக்கவேண்டும் என்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

(இரவு 7.40)

திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களை தெரிவிக்க விழைகிறேன். இந்த ஆண்டு சட்டமன்றம் துவங்குகின்ற நேரத்திலே நமக்கு மிகப் பெரிய அபாயங்கள் ஏற்கனவே வந்துவிட்டன. புதிய அபாயங்கள் வந்திருக்கின்றன என்பதை விளக்குகின்ற வகையில் இந்த மன்றத்திலே நாம் கூடியிருக்கின்றோம். முதல் அபாயம் மழை பெய்யாததாலே ஏற்பட்ட வறட்சி. அடுத்த அபாயம் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட மின்சாரத் தட்டுப்பாடு, மின்சாரப் பற்றாக்குறை. இறுதியாக வந்திருக்கிற மிகப் பெரிய அபாயம் கர்நாடகத்தினுடைய முதல் அமைச்சர் தமிழக மக்களுக்கு என்னுடைய ஆழ்ந்த அனுதாபம் என்று சொன்ன ஓர் காரியம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: காலையிலே அதைப் பற்றி பேசி முடிந்துவிட்டது. அது வேண்டாம்.

திரு. ஜே. எஸ். இராசு: ஆக, இப்படிப்பட்ட மிகப் பெரிய அபாயங்கள் எதிர்நோக்கி இருக்கின்ற இந்தக் காலகட்டத்தில், அடுத்த வாரங்களில் அல்லது அடுத்த மாதங்களில் வருகின்ற



பருவமழை ஆரம்பிக்கின்ற வரை தமிழகத்தினுடைய சமுதாய வாழ்வும், பொருளாதார வாழ்வும் மிகப் பெரிய கடுமையான சோதனைக்கு ஆளாகி இருக்கிறது என்பதை நாம் நிச்சயமாக தெரிந்துகொண்டு இருக்கிறோம். நாட்டு மக்களும் புரிந்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட மிகப் பெரிய சோதனையான கட்டத்திலே இங்கே கவர்னர் பெருமானால் வாசிக்கப்பட்ட உரை இதற்குத் தகுந்த தீர்வினைக் காண்பதற்கு ஏதுவாக அமையவில்லை. வழக்கமான ஒரு உரையாக இருக்கிறது என்பதை நான் மெத்த வருத்தத்தோடு இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்பட்டிருக்கின்ற வறட்சி சாதாரணமானது அல்ல. வேடந்தாங்களில்கூட பறவைகள் வந்துபோகவில்லை. வந்த சில பறவைகளும் ஓடிவிட்டன என்று செய்திகள் தருகிறார்கள். அங்கே மீதம் இருப்பது குரங்குகள்தான். இது டார்வின் தியரிப்படி நாமும் இங்கே இருக்கிறோம். குரங்குகளும் இடம் பெயராமலே இருக்கிறதே தவிர நல்ல நிலைமையிலே நம்மைவிட பறவைகள் புத்திசாலித்தனமாக பறந்து சென்றுவிட்டன. வேடந்தாங்கள் ஏரி ஒரு சொட்டு தண்ணீர்கூட இல்லாமல் இருக்கிறது என்பதை பத்திரிகையிலே தெரிவிக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல. தமிழகத்திலே, தென் ஆர்க்காடு, வட ஆற்காடு, செங்கற்பட்டு, தர்மபுரி, ராமநாதபுரம், திருச்சி, புதுக்கோட்டை போன்ற பல்வேறு மாவட்டங்களில் மழையில்லாத காரணத்தால் மின்சாரத் தட்டுப்பாடு நூற்றுக்கு நூறு கொண்டு வந்ததன் காரணமாக பாசனத்திற்கு வேண்டிய விளை நிலங்கள் எல்லாம் இன்றைக்கு மேய்ச்சல் தரைகளாக ஆகியிருக்கின்றது என்ற செய்தி வந்திருக்கிறது. பத்திரிக்கை சரியாக சொன்னதைப் போல விளையாட்டுத் திடலாக மாறிக் கொண்டு வருகிற காட்சி இன்றைக்கு தமிழகம் அனுபவித்துக் கொண்டு வருகிறது. இந்தச் சூழ்நிலையில் இந்த மன்றத்திலே அதைப் பற்றியெல்லாம் மிகச் சரியான விமர்சனங்கள் வரும், மிகச் சரியான ஆலோசனைகள் வரும் ஆளுநர் உரையிலே என்று எதிர்பார்த்த நாங்கள் நிரம்பவும் ஏமாற்றப்பட்டிருக்கிறோம். நண்பர்கள் சொன்னதைப் போல, உறுப்பினர்கள் சொன்னதைப் போல சத்துணவுத் திட்டம் பற்றித் தான் மிக அதிகமாக இங்கே விவாதிக்கப்பட்டது. புனிதமான சத்துணவு திட்டம் மௌனப் புரட்சியை அது உண்டாக்கியிருக்கிறது, இது ஒரு அட்சயப் பாத்திரம் என்றெல்லாம்கூட இங்கே பேசினார்கள். அட்சயப் பாத்திரம் என்றால் மூன்று வேளையும் சோறு கிடைக்க வேண்டும். அது ஒருவேளை போட்டுவிட்டு, காலையிலேயும் மாலையிலேயும் பட்டினி போடாது. அட்சயப் பாத்திரத்தைப் பற்றிச் சொல்கிற நேரத்தில் அதனுடைய தன்மையைப் புரிந்து கொண்டு சொல்லியிருக்கவேண்டும். ஆக அது அட்சயப் பாத்திரம் அல்ல. பாரதியாரை வேறு இழுத்துக் கொள்கிறார்கள். எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்களிலிருந்து எல்லோரும் பேசினார்கள். என்னுடைய வீராசாமி கூடப் பேசினார்கள். என்ன பேசினார்கள். தனி ஒருவனுக்கு

உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம் என்று பாரதியார் சொல்லிவிட்டார். வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும் இங்கு வாழும் மனிதர்க்கு எல்லாம் என்று பாரதியார் சொல்லிவிட்டார். ஆகவே சோறு போடுகிறோம் என்று சொல்கிறார்கள். பாரதியார் பாடிய பாட்டை தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்று தான் நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன். அல்லது பரிதாபப்படுகிறேன். தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம் என்று பாரதியார் கடுமையாகப் பேசியது, அல்லது வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும் இங்கு வாழும் மனிதர்க்கு எல்லாம் என்று பாரதியார் பாடியது, அரசாங்கமே அடுப்பு மூட்டி, அரசாங்கத்தினுடைய பணத்தை எடுத்து எல்லோருக்கும் சமைத்துப் போடுங்கள் என்ற பொருள் அல்ல. அது மிகத் தவறான பொருள். தனி மனிதனுடைய வாழ்க்கையில் வளர்ச்சிவேண்டும். நிலப்பங்கீடு அவனுக்கு நல்லமுறையில் உருவாக்கவேண்டும். நிலம் சொந்தமாக்கப்படவேண்டும், தொழில் வளரவேண்டும். அதன் மூலம் வேலைவாய்ப்புப் பெறவேண்டும். வேலைவாய்ப்புப பெற்றால் அவனுக்கு தனக்குத் தானே சுயமாக வருமானம் வரும். வருமானம் வந்தாலே அவனுடைய வயிறு நிரம்பும். அப்படி நிரப்பிக் காட்டுவது ஒரு அரசின் கடமை என்று பாரதியார் அவர்கள் பாடினார்களே தவிர அரசே எல்லோருக்கும் சோறு ஆக்கிப்போடவேண்டும், எல்லோரும் அதைச் சாப்பிடவேண்டும் என்று சொல்லவில்லை. ஆகவே, தயவுசெய்து நீங்கள் பாரதியாரை கேலி செய்ய வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறைகளே சொல்லக்கூடாதா, சொல்லலாம். ஒரு திரைப் படம் பார்த்தால் விமர்சனம் செய்கிறோம். ஒரு புத்தகத்தைப் படித்தால் விமர்சனம் செய்கிறோம். அதைப்போல் ஆளுநர் உரை என்பது இந்த நாட்டின் சகல வாழ்வுக்கும் எடுத்துக் காட்டாக இருக்கும் ஒரு சிறு நூல். அதைப் பற்றி நாம் விமர்சிக்கலாமா என்றால் விமர்சிக்கலாம். அப்படி விமர்சிக்கிற போது, குறைகள் சொல்லலாமா என்றால், சொல்லலாம். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தச் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வருகிறபோது சொன்னார்கள். 'இந்தச் சத்துணவுத் திட்டத்தில் குறைகள் ஏற்படலாம்' இது முதலமைச்சர் அவர்கள் சொன்ன 'டெக்ஸ்ட்' ஏனென்றால் மனிதர்கள் எல்லாம் மகாத்மாக்கள் அல்ல. ஆண்டவன் தவிர அனைத்து மனிதர்களும் குறைபாடு உள்ளவர்களே. ஆகவே, மக்கள் குழு கண்காணிக்கும் என்று சொன்னார்கள். அப்படிச் சொன்னதால் தான் நாங்கள் கண்காணித்து குறைகளைச் சொல்கிறோம்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: துணைத் தலைவர் அவர்களே, வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும். இங்கு வாழும் மனிதருக்கு எல்லாம், தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம் என்று பாரதியார் பாடல்களைச்



சொல்லி, அதனை இந்த அரசு தவறாகப் புரிந்துகொண்டு, சோறு போடுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். தமிழக அரசின் சார்பில் இப்படிப் பட்ட சத்துணவுத் திட்டம், குழந்தைகளுக்குச் சோறு போடுவது தவறு என்று மிக ஆணித்தரமாக வாதிட்டுக்கொண்டு இருக்கிறார்கள். நன்றி. இதிலே தவறு நடைபெறுகிறது என்பதும், நடக்கலாம் என்பதும் கொண்டு வருகிறபோதே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள் என்பதைச் சுட்டிக்காட்டிப் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். நான் அவரிடமிருந்து அறிந்து கொள்ள விரும்புவது, இப்போது என்ன சொல்கிறீர்கள், இந்தத் திட்டம் தொடர்ந்து இருக்கவேண்டும் என்று சொல்கிறீர்களா அல்லது இதிலே உள்ள தவறுகள் நீங்க வேண்டும் என்று சொல்கிறீர்களா?

திரு. ஜே. எஸ். இராசு: துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் இந்த மன்றத்தில் அறிவிக்கப்பட்ட நேரத்திலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்தத் திட்டத்தை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். அதேநேரத்தில் இந்தத் திட்டம் நடைபெறுகிற நேரத்தில், நடைமுறைப்படுத்துகிற நேரத்தில் குறைபாடுகள் ஏற்படலாம், ஊழல்கள் ஏற்படலாம், அப்படி ஏற்படாமல் நீங்கள் பாதுகாத்துக்கொள்வது நிர்வாகத்தின் கடமை என்று எச்சரித்து ஒரு யோசனையும் சொன்னார்கள். யோசனை சொல்லவில்லை, என்று ஆளும்கட்சி நண்பர்கள் சொன்னார்கள்.

ஒரு உருப்படியான யோசனை சொன்னார். இந்தத் திட்டத்திலே ஊழல்கள் நடைபெறலாம். ஆகவே, 45 காசு ஒரு குழந்தைக்கு என்று ஒதுக்குவதைவிட மேலும் 5 காசு சேர்த்துப் போட்டு, 50 பைசாவை அந்தக் குழந்தையைப் பெற்ற தாயிடமே கொடுத்துவிடுங்கள், ஏனென்றால் பெற்ற தாயைவிட மற்ற தாய், உற்ற தாயாக இருக்க முடியாது என்று சொன்னார்கள். அந்த யோசனையை நீங்கள் கேட்கவில்லை. அப்படிக் கேட்காததால், மாண்புமிகு அமைச்சர் கோமதி சாட்சியாக இன்று அந்த பால்வாடிகளில், பள்ளிக்கூடங்களில், சோறு போடும் இடங்களில் எல்லாம் சத்துணவுத் திட்டத்தில் எவ்வளவு தவறுகள் ஏற்பட்டு இருக்கின்றன என்பதைத் திருச்சியிலே, புதூரிலே சமூக நல அமைச்சர் அவர்கள் பார்த்துவிட்டு வந்து இருக்கிறார்கள். சிலரை சஸ்பென்ட் செய்து இருக்கிறார்கள். சத்துணவு கொடுப்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நேரிலே பார்த்தேன். விசாரித்தேன். சத்துணவு மாணவர்களுக்கு இல்லை, சமைப்பவர்களுக்குத்தான். அங்கே மாணவர்களுக்கு சோறு, குழப்பு தனி. அது ரொம்ப சீப். சுவையில்லை. நல்ல சுவையுள்ள சத்துணவு சமைப்பவர்களுக்குத் தான். நேரில் பார்த்தேன், விசாரித்தேன். அக்கம்பக்கத்திலே சொல்கிறார்கள். தரமான சாப்பாடு போடப்படவில்லை, போதுமான அளவு போடப்படவில்லை. இது கோமதி

அம்மையார் அவர்களின் ஸ்டேட்மென்ட். சரியான சாப்பாடு இல்லை. போதுமானதாகவும் இல்லை. தரமானதாகவும் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள்.

அவர் மட்டுமல்ல. துவக்க காலத்திலேயே திருநெல்வேலி கலெக்டர் சொல்லிவிட்டார். தென்னாற்காடு கலெக்டர் சொல்லிவிட்டார். ஆகவே, எல்லோருமே சொன்ன பிறகும் கூட நீங்கள் திட்டத்தை அமல்படுத்துகிறீர்கள். ஆனால் எதிர்பார்த்த அளவிற்கு இந்தத் திட்டத்தின் பயன் குழந்தைகளுக்குப் போய்ச் சேரவில்லை. இடைத்தரகர்களுக்குத்தான் போய் இருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் கோமதி சீனிவாசன் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் சத்துணவுத் திட்ட மையத்தில் போடப்படும் உணவு ஆசிரியர்களுக்கு என்றும், குழந்தைகளுக்குப் போய்ச் சேரவில்லை என்றும் சொல்லவில்லை. அவர்கள் பல இடங்களுக்குச் சுற்றுப்பயணம் செய்து, ஓவ்வொரு மையமாகப் பார்வையிடுகிற போது, எங்கோ ஒரு இடத்தில் தவறு நடந்தது என்பதைச் சுட்டிக்காட்டி, அந்தத் தவறு களையப்படவேண்டும் என்று சொன்னார்கள். அதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 'நான் சர்வாதிகாரியாக இருந்தால், இந்தத் திட்டத்திலே மனிதாபமானமற்ற முறையில் தவறு செய்பவர்களை தூக்கில் கூட போடுவேன்' என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இத்தகைய திட்டங்களில் மனிதாபிமானமற்ற முறையில் நடந்துகொள்கிற வகையில் மக்கள் இருக்கிறார்களே என்று கண்டிப்பதற்காக அவர்கள் சொன்னதை, எங்கோ ஒரு இடத்தில் தவறு நடந்து இருக்கிறது என்று சொன்னதை வைத்துக்கொண்டு, அதையே ஒரு சாக்காக வைத்துக் கொண்டு, தமிழ்நாடு முழுவதும் அப்படி நடைபெறுகிறது என்று சொல்வது தவறு என்பது என்னுடைய வாதமாகும்.

(இரவு 7.50)

திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, அண்ணா அவர்கள் ஒரு முறை சொன்னார்கள். ''என்னை எல்லோரும் கூட்டத்திற்குக் கூப்பிடுகிறார்கள், பகவான்கூட 10 அவதாரம்தான் எடுத்தார். அதற்குமேல் எடுக்க முடியவில்லை'' என்று சொன்னார்கள். அதைப் போல. மாண்புமிகு அமைச்சர் கோமதி அவர்கள் பகவான் அல்ல. எல்லா இடங்களிலும் அவர்கள் சென்று பார்வையிட முடியாது. ''ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்'' என்று சொல்வார்கள் அதைப் போன்று ஒரு இடத்தில் காணப்படுகிற தவறு மற்ற இடங்களிலும் இருக்கும் என்பது தவறாகாது. இன்னும் இதிலே பல்வேறு சம்பவங்களை எடுத்துச் சொல்ல வேண்டியிருந்தாலும் நேரம் இல்லாத காரணத்தால் நான் வேறு பிரச்னைக்குச் செல்கிறேன்.



மாண்புமிகு திரு. எஸ் திருநாவுக்கரசு; துணைத் தலைவரவர்களே, சமைப்பதற்கு ஆட்கள் இப்போதுதான் போடப்படுகிறார்கள். இதுவரையில் தாங்கள்தான் பார்த்துக்கொண்டிருந்தோம் என்று ஆசிரியர்கள் சொன்னார்கள் என்றால், இந்தத் தவறுகளுக்கு எல்லாம் பொறுப்பேற்றிருந்தது ஆசியர்கள் தான் என்று மாண்புமிகு உறுப்பினர் ராஜு அவர்கள்தான் என்று கூறுகிறார்களா?

திரு. ஜே. எஸ். இராசு: இதுபற்றி மிகப்பெரும் விவாதத்திற்குக்கூட நான் தயாராக இருக்கிறேன். பெரிய ஊழல்களைப் பற்றி நான் இப்போது குறிப்பிடவில்லை. ஒரு சிறிய ஊழலை மட்டும் குறிப்பிடுகிறேன். எனது வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு பால்வாடி இருக்கிறது. 125 பேர்கள் சாங்ஷன்ட் ஸ்ட்ரெங்த். ஆனால் அங்கே சாப்பிடுவது 25 பேர்கள்தான். 125 பேர்கள் சாப்பிடுவதாக கணக்கு எழுதி பலர் அங்கே கொள்ளையடிக்கிறார்கள். இதுபற்று நான் பஞ்சாயத்து யூனியனிலும் சொல்லியிருக்கிறேன். அதிகாரிகளிடமும் சொல்லியிருக்கிறேன். நான் அதிகாரிகள் மீது பொதுவாக குற்றச்சாட்டு சொல்லி பழக்கமில்லை. வேண்டுமானால் நீண்ட விவாதம் நடத்தத் தயாராக இருக்கிறேன்.

அடுத்து மின்சாரம். இப்போது வறட்சி, மழை இல்லை; கரி இல்லை, நல்ல நிலக்கரி வரவில்லை, சாம்பல் கலந்து வருகிறது; கல் கலந்து வருகிறது; வாகன் கிடைக்கவில்லை; தூத்துக்குடியில் 'பெல்' நிறுவனத்தார் தயாரித்த உறுப்புகள் சரியாக இயங்கவில்லை என்று இன்றைக்குப் பேசுகிறார்கள். அதே நேரத்தில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் உங்களுடைய மேலான கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். உங்கள் அனுமதியோடு தினமணி பத்திரிகையில் வந்த செய்தியைப் படிக்கிறேன்.

''தூத்துக்குடி அனல் மின் நிலையம் சிறப்பாகச் செயல்படுவதாக தனக்குப் பாராட்டு தெரிவிக்கப்பட்டபோது அப்பாராட்டு தனக்கு மட்டும் உரியதல்ல, அந்த மின் உற்பத்தி நிலையத்திற்கு தரமான நிலக்கரியை விநியோகம் செய்தவர்கள், ஆலைக்கான சாதனங்களை வழங்கியவர்கள், உரிய நேரத்தில் மூலப் பொருட்களை கொண்டுவந்து சேர்த்தவர்கள் உள்ளிட்ட அனைத்து மத்திய-மாநிலத் துறையினரும் பாராட்டுக்குரியவர்கள் என்று தான் குறிப்பிட்டதாக மின்துறை அமைச்சர், கெழுதகை நண்பர் பண்ருட்டி அவர்கள் டிசம்பர் 4-ந் தேதி பேசியிருக்கிறார்கள்.

அன்றைக்கு எந்தவிதமான குறைபாட்டையும் சொல்லவில்லை. வாகன் கிடைக்கவில்லை என்று சொல்லவில்லை; சாம்பல் கலந்திருக்கிறது என்று சொல்லவில்லை; கல் கலந்திருக்கிறது என்று சொல்லவில்லை. இது டிசம்பர் 4-ந் தேதி

மினிஸ்டருடைய ஸ்டேட்மெண்ட். ஆனால் தட்டுப்பாடு வந்த ஒரு வாரத்தில் நிலக்கரியில் சாம்பல், கல் கலந்திருக்கிறது, வாகன் கிடைக்கவில்லை, உறுப்பு வேலை செய்யவில்லை, ரயில் நிறுவனம் தவறு செய்து விட்டது என்று சொல்கிறார்கள். ஒரு வாரத்தில் எப்படி இந்த நிலை வரும்? டிசம்பர் 4-ல் எல்லாம் ஒழுங்காக இருந்தது என்கிறார்; டிசம்பர் 15-ல் கரி சரியில்லை, கல் கலந்தது, சாம்பல் என்று சொல்கிறார் தட்டுப்பாடு வந்தவுடன். இன்றைக்கு ஆளும் கட்சியினர் சொல்வது தவறாக இருக்கும் அல்லது அமைச்சர் பண்ருட்டியார் சொன்னது தவறாக இருக்கும் என்று சொல்லலாம். ஆனால் எது உண்மை என்பதை இந்த நாட்டு மக்கள் கண்டுபிடிக்க தவறமாட்டார்கள் என்பதை மட்டும் தவறமாட்டார்கள்.

தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் காலனிகளில் அவர்களுடைய தெருக்களுக்கும் மின் இணைப்பு கொடுத்துவிட்டோம் என்று சொல்கிறார்கள்; அறிக்கையும் இருக்கிறது. சம்பந்தப்பட்ட அமைச்சர் இங்கே இல்லாவிட்டாலும் மதிப்பிற்குரிய தொழில்துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள்; மதிப்பிற்குரிய எஸ். என். ஆர். அவர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியும். பல்வேறு கிராமங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் காலனிகளில் இன்றும் விளக்குகள் போடப்படவில்லை, கம்பங்கள் நடப்படவில்லை. ஆனால் எல்லாம் முடிந்துவிட்டது என்ற ஒரு தவறான செய்தியை இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

என்னுடைய தொகுதியில்கூட தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் காலனிகளில் விளக்குகள் இல்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் பாளையம் என்று ஒரு கிராமம். அது தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் கிராமம். மின்சாரம் வழங்க வேண்டுமென்று நீண்டகாலமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். சுமார் 15 வருடங்கள் ஆகிவிட்டன. அதற்குரிய பணம் எல்லாம் கட்டியாகி விட்டது. ஆனால் இன்றைக்கும் மின்சாரம் வழங்கப்படவில்லை. ஆகவே, அரசாங்கத்தின் கணக்குத் தவறானது. அருள்கூர்ந்து, தாழ்த்தப்பட்ட மக்கள் எல்லோருக்கும், அந்த மக்கள் வசிக்கும் எல்லா காலனிகளுக்கும் உடனடியாக மின்சாரம் வழங்க தேவையான எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். நம்முடைய நிர்வாகத்தில் இருக்கிற சில கோளாறுகள்—அதை நான் ஊழல் என்று சொல்லவில்லை—தவறுகள் நடக்க வேண்டுமென்று மேலிடத்தில் யாரும் நினைப்பதில்லை. நம்மை அறியாமலேயே தவறுகள் நடக்கிறது. தன்னிறைவுத் திட்டமாக இருந்தாலும் சரி, வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டமாக இருந்தாலும் சரி, அங்கே ஊழல் நடந்துவிடுகிறது. ஊழல் என்றவுடன் பயந்து விட வேண்டாம்



மனிதனாகப் பிறந்த யாரும் மகாத்மா அல்ல. ஆண்டவன் தான் ஊழல் இல்லாமல் இருக்க முடியும். அதனாலேயே தவறுகள் நடக்கின்றன. நாங்கள் பார்க்கிறோம். மகாஞ்சம் பேர் வேண்டுமானால் சொல்லாமல் இருக்கலாம். ஒரு ஊழலை மட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன். இது ஒன்றும் சீரியஸான விஷயம் அல்ல. ஆனால் அவைகளை கவனித்து களைய வேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறேன்.

பெரம்பலூர் தொகுதியில் பெரம்பலூர் ஒன்றியத்தில் சேர்ந்த எரும்பலூரில் தேசீய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தில் எஸ்டிமேட்டில் குறிப்பிட்ட அளவுக்கு பள்ளிக் கட்டிடம் கட்ட சிமெண்ட் உபயோகப்படுத்தப்படவில்லை. மிகக் குறைந்த அளவுக்கு மட்டுமே சிமெண்ட் பயன்படுத்தப்பட்டுள்ளது கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அந்தக் கட்டிட வேலையில் வேலை செய்ததாக உள்ள பெயர் பட்டியல்களில் உள்ள அனைத்துப் பெயர்களும் கற்பனை-போலியானவை. இதற்குத் தான் மஸ்டர் ரோல் என்று சொல்வார்கள்—ஊழல். போலி கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட பள்ளிகளில் சிமெண்ட் தரக்குறைவாக உள்ளது, கலவை தரக்குறைவாக உள்ளது என்று குறிப்பிட்டு அதை லேபரட்டரிக்கு அனுப்ப வேண்டும் என்று பி.டி.ஓ.விடம் சொல்லியிருக்கிறோம். மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் சொல்லியிருக்கிறோம். நடவடிக்கை எடுத்தார்களா இல்லையா என்பது தெரியாது.

இன்னொரு செய்தி, கரும்பலூர், ஈத்தனை, ஈச்சம்பட்டி' மூலக்காடு காலனி கோனேரிப்பாளை, செங்குளம் ஆகிய கிராமங்களில் என்.ஆர்.டி.பி. திட்டத்தில் செய்யப்பட்ட பணிகளுக்கான பெயர்கள் அனைத்தும் போலியானவை. அதை நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன்—சாட்சியாக என்குயரி வைத்தால், அதற்கு ஒரு விடிவான என்குயரி வைக்க வேண்டும். அதைப் போல தாழ்த்தப்பட்ட மக்களுக்காக நிலப்பட்டா மனைப் பட்டா தரவேண்டும். கேள்வி நேரத்திலேகூட பேசப்பட்டது. 100 கணக்கில் மனுக்கள் கிராமங்களிலேயிருந்து தலைமை செயலகத்திற்கு கலெக்டர் பரிந்துரை செய்து அனுப்பியிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் நிச்சயமாக அரசாங்கம் பரிசிலனை செய்து வீடு இல்லாத ஏழை எளிய தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டுவதற்கு மனைகள் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த ஆளுநர் உரைமீது என்னுடைய கருத்துக்களை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் ஆளுநர் உரையின் மீது எனக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு தலைவர் அவர்களுக்கும், எங்கள் கட்சியினுடைய தலைவர்களுக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றையதினம் ஆளுநர் உரையைப் பார்க்கிற போது சுமார் 7 பக்கங்களுக்கு சத்துணவுத் திட்டத்தைப்பற்றி

மிக விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சத்துணவு பற்றிய பல குறைகளையும் குறள்களையும் இங்கேயுள்ள நண்பர்கள் எல்லாம் எடுத்துச் சொன்னார்கள், நானும் என்னுடைய ஒருசில விளக்கத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் தமிழகத்தைப் பொறுத்தவரையில் வறுமைக் கோட்டிற்குக்கீழே இருக்கிற ஏழை எளிய மக்கள் ஒருவேளை உணவு கூட இல்லாமல் இருக்கிறார்கள் என்கிற காரணத்திற்காக நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த சத்துணவு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால் இந்த ஏழை எளிய மக்கள் இவ்வாறு ஒருவேளை உணவு கூட இல்லாமல் இருப்பதற்கு என்ன அடிப்படைக் காரணம்? அதை நாம் ஆராய வேண்டும். அவர்களிடம் பொருளாதாரம் இல்லை. பொருளாதாரம் இல்லை என்ற காரணத்தால் உணவுகளை வழங்கிக் கொண்டிருக்கிறோம். அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது. அவர்களுடைய பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு நாம் என்ன செய்யவேண்டும் என்ற முறையில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லை. அத்துடன் தமிழகத்தில் மட்டுமா ஏழை எளிய மக்கள் இருக்கிறார்கள். மற்ற மாநிலங்களிலேயும் அவர்கள் இருக்கிறார்கள்.

உதாரணத்திற்கு சொல்ல வேண்டும் என்று சொன்னால் இன்றைய தினம் அரியானா, பஞ்சாப் போன்ற மாநிலங்களில் எல்லாம் ஏழை எளியவர்கள் இருக்கிறார்கள். 100 க்கு 70 சதவீதத்தினர் இருப்பதாக பஞ்சாப் மாநில முதல்வர் தர்பாராசிங் அவர்களைச் சந்தித்த போது சொன்னார்கள். அதற்காக என்ன மாற்று ஏற்பாடு செய்திருக்கிறீர்கள் என்று கேட்டோம். அதற்கு அவர்கள் இந்த 100க்கு 70 சதவீத மக்களுக்காக புதியதாக ஒரு மாற்றுத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். பொருளாதாரம் இல்லாத காரணத்தால் அவர்களுடைய வாழ்க்கை மேம்பாடு அடையவில்லை. அவர்களுடைய வாழ்க்கை மேம்பாடு அடைய வேண்டும் என்ற காரணத்திற்காகத்தான் 60 கோடி ரூபாயை நாங்கள் ஒதுக்கியிருக்கிறோம் என்று சொன்னார்கள். அதை என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்டதற்கு, அவர்களுக்கு அரசாங்கத்தின் மூலமாக சிறு சிறு தொழில்கள் உற்பத்தி செய்வதற்கு கடனாக பண உதவி கொடுக்கப்போகிறோம் என்று சொன்னார்கள்; அதற்கு வட்டி எத்தனை சதவீதம் என்று கேட்டால், வட்டி இல்லாத கடனாக அவர்களுக்கு வழங்கியிருக்கிறோம். அவர்கள் தொழிலை துவங்கியதற்குப் பிறகு, உற்பத்தி செய்து, அவைகளை மார்க்கெட்டில் கொண்டு வந்து விற்பனை செய்ததற்குப் பிறகு, அந்தக் கடனை திரும்ப வாங்கிக் கொள்வோம் என்று சொல்லி அவர்கள் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.



அது போன்று நம் மாநிலத்திலேயும் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருந்தால் மாநிலத்திலே இருக்கக்கூடிய ஏழை எளிய மக்கள், வறுமை கோட்டிற்குக் கீழே இருக்கக்கூடிய மக்களின் பொருளாதாரம் மேம்பாடு அடைய முடியும். பொருளாதாரம் மேம்பட்டால் அவர்களால் தேவையான உணவுப் பொருள்களையோ மற்றப் பொருள்களையோ வாங்க முடியும். அதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆனால் மாறாக இன்றைய தினம் விலைவாசி விஷம் போல் ஏறிக்கொண்டிருக்கிற இந்தக் காலத்தில் 112 கோடி ரூபாய் செலவில் இந்த சத்துணவு திட்டத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். இவ்வளவு கோடி ரூபாயை ஒதுக்கி நாம் உண்மையில் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதையும் சற்று நினைத்துப் பார்க்க வேண்டும்.

(இரவு 8-00)

ஆகவே இன்றைக்கு ஏழை எளிய மக்களின் அடிப்படை உரிமையைத் தரவேண்டும் என்று சொன்னால் நாம் பல கோடி ரூபாயினை சோத்துக்காகச் செலவு செய்து கொண்டிருக்கிறோம். ஆனால் அதே நேரத்தில் அவர்களைச் சோம்பேறிகளாக ஆக்குவதற்குரிய நிலைமையினை ஏற்படுத்தியிருக்கிறோம். நான் சத்துணவுத் திட்டத்தினை வரவேற்கிறேன். ஆனால் இருக்கின்ற நிலைமைகளை மாற்றியமைக்க வேண்டும்.

அடுத்து இன்றைக்கு தமிழகத்தில் இருக்கக்கூடிய ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அத்தனைபேரும் மத்திய அரசினைத் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள். தாக்குவதைப் பற்றிக் கவலை இல்லை. இதுவரை இல்லாத வீரம் இப்போது மட்டும் எப்படி வந்தது? பக்கத்திலே உங்களுக்கு துணை சேர்ந்துவிட்டது என்றவுடன் உங்களுக்கு வீரம் வந்துவிட்டது. கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே அப்படித் தாக்கிப் பேசி இருந்தால் பரவாயில்லை. ஆனால் தட்டினால் கிடைக்கும் என்று சொல்வது போன்று தட்டுங்கள் கிடைக்கக்கூடும்.

தொழில் துறையிலே பல தொழிற்சாலைகளைப் போட திட்டமிடவேண்டும். அந்தமாதிரி திட்டமிடாமல் நீங்கள் மத்தியரசைப் பார்த்து மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடக்கின்றது என்று சொன்னீர்கள். என்னுடைய சின்னசேலம் தொகுதியிலே கள்ளக்குறிச்சியிலே 1976 ஆம் ஆண்டு மிசா சட்டம் இருந்தபோது அங்கே கல்வராயன் மலைப் பகுதியிலே இருக்கக்கூடிய ஆதிவாசிகளை கொத்தடிமைப் பிடியிலிருந்து விடுவித்தார்கள். இங்கே உற்பத்தி செய்யக்கூடிய கடுக்காய்களை எல்லாம் தனியார்கள் வாங்கி கல்கத்தாவிற்கு ஏற்றுமதி செய்கிறார்கள். ஆகவே அந்தக் கடுக்காயினைப் பயன்படுத்தி அங்கே ஒரு சாயத் தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டும் என்றும் அங்குள்ள மக்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்க வேண்டும்

என்ற எண்ணத்தில் அன்றையதினம் உள்ள மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த திரு. ஏ. எஸ். பத்மநாபன் அவர்கள் தாக்கீதுகளை அரசுக்கு அனுப்பினார். அவ்வாறு அதற்குரிய புள்ளி விவரங்கள் எல்லாம் கொடுக்கப்பட்டன அதிகாரிகளால். ஆனால் இன்று வரையில் அதாவது 1976 ஆம் ஆண்டிலிருந்து இப்போது 1982 ஆம் ஆண்டு முடிந்துவிட்டதற்குப் பிறகும் கிட்டத்தட்ட 6 ஆண்டுகள் ஆகியும்கூட அந்தக் கடுக்காய்த் தொழிற்சாலை என்ன ஆனது என்று தெரியவில்லை. ஆனால் அமைச்சரிடம் கேட்டபோது ஊராட்சி ஒன்றியப் பொது நிதியினை வைத்து அது ஆரம்பிக்கப்படும் என்று சொன்னார்கள். அதுபற்றி நான் சட்டமன்றக் கூட்டத்திலே கூட தெரிவித்திருக்கிறேன். ஆனால் இதுவரையில் இந்தத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படவில்லை. எங்கள் பகுதியில் கிடைக்கக்கூடிய மூலப் பொருளான மரவள்ளிக் கிழங்கை வைத்து குளுக்கோஸ் தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டும் என்று சட்ட மன்றத்தில் கூறியுள்ளேன். இதனால் விவசாயிகள், பொது மக்கள், தொழிலாளர்கள், பயன் அடைவார்கள் என்றும் கூறியுள்ளேன். ஆரம்பிக்க திட்டம் தீட்டவில்லை என்று கூறிக்கொள்கிறேன்.

அடுத்து விழுப்புரத்திலே தமிழ்நாட்டிலே உள்ள அனைத்து நெல்லையும் கொள்முதல் செய்கின்ற வகையிலே ஒரு பெரிய ராட்சத மில் ஆரம்பிக்கப்படுவதாக இருந்தது 10 கோடி ரூபாயிலே ஆனால் அந்த நிலைமையினை மாற்றி அதனைச் சீர்காழியிலே கொண்டுபோய் அமைக்கின்ற நிலைமையினைப் பார்க்கின்றபோது நாங்கள் எல்லாம் காங்கிரஸ் கட்சியினைச் சேர்ந்தவர்களாக இருப்பதா எங்களுடைய தொகுதியிலே நிறைவேற்றாமல் வேறு இடத்திற்குக் கொண்டுபோய் நிறைவேற்றுகிறீர்கள் என்று தோன்றுகிறது, எனவே நீங்கள்தான் இப்போது மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடந்துகொள்வதாகத் தெரிகிறது.

இன்று காலையிலே பேசிய சட்டமன்ற உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் ஊராட்சி ஒன்றியங்களிலே தன்னிறைவுத் திட்டம் செயல் படுத்தப்பட்டபோது அங்கே ஒதுக்கப்பட்ட நிதி மாற்றாந்தாய் மனப்பான்மையோடு மற்ற எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களின் தொகுதிகளில் குறைத்துக் கொடுக்கப் பட்டிருக்கின்றது என்று சொன்னார்கள்.

கிராம நெடுஞ்சாலைத் திட்டத்தினைப் பொறுத்தவரையிலே மத்திய அரசிடம் நீங்கள் ஒரு கிலோ மீட்டருக்கு 2 இலட்சம் ரூபாய் கேட்கிறீர்கள். ஆனால் மற்ற மாநிலத்தினர் 4 இலட்சம் ரூபாய் ஒரு கிலோ மீட்டருக்குக் கேட்கிறார்கள் அவ்வாறு கேட்பதற்குத் தகுந்தபடி அவர்கள் நிதி ஒதுக்குகிறார்கள். எனவே நீங்கள் கேட்டதுதானே மத்திய அரசிடமிருந்து கிடைக்கும். அந்த நிதி உலக வங்கியிலிருந்து பெறப்பட்டு கொடுக்கப்படுகின்ற நிதி. இந்தியாவிலே உள்ள மற்ற மாநிலங்களின் அதிகாரிகளைக் கூப்பிட்டுப் பேசுகிறபோது ஒரு கிலோ மீட்டருக்கு எவ்வளவு தொகை வேண்டும் என்று கேட்டால் அவர்கள் 4 இலட்சம் ரூபாய் வேண்டும் என்று கேட்கிறார்கள். ஆனால் நம்முடைய அதிகாரிகள் 2½ இலட்சம் ரூபாய் ஒரு கிலோ மீட்டருக்குக் கொடுத்தால் போதும் என்று சொல்கிறார்கள்.

அரியானா, பஞ்சாப் மாநிலங்களிலே உள்ள அதிகாரிகள் ஒரு கிலோ மீட்டர் தார் ரோடு போடுவதற்கு 4 இலட்சம் ரூபாய் வேண்டுமென்று கேட்கிறபோது, தமிழகத்திலே இருக்கின்ற அதிகாரிகள் 2 இலட்சம் போதுமென்று சொல்லுகிறார்கள். அவர்கள் கேட்பது 4 இலட்சம்; ஆனால் இவர்கள் கேட்பது 2 இலட்சம்; ஆகவே, அவரவர்கள் கேட்பதை வைத்துத்தான் நிதி ஒதுக்கப்படுகிறது. அதைவிடுத்து, மாற்றான்தாய் மனப்பான்மை காட்டப்படுகிறது, எங்களுக்கு அதிக நிதி ஒதுக்கப்படவில்லை என்று சொல்வது எப்படிப் பொருந்தும்? நீங்கள் கொடுக்கக் கூடிய புள்ளிவிவரங்களை வைத்துத்தான், விலைவாசிகளை வைத்துத்தான் அங்கே அவர்கள் நிதியைக் கொடுக்கிறார்கள்.

அதோடு, இன்றையதினம் இஸ்லாமிய வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு வக்ப் போர்டிலே இருந்து கோவிலுக்கு நிதி உதவி கொடுக்கப்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அது வரவேற்கத்தகுந்தது. ஆனால், இன்றைக்கு தமிழகத்திலே அன்றாடம் விளக்கு ஏற்றுவதற்குக்கூட காசு இல்லாமல், ஏழை எளிய மக்கள் அந்தக் கோவில்களுக்குச் சென்று தரிசனம் செய்ய முடியாத நிலை இருக்கிறது, இதுபோன்ற கோவில்களுக்கு பொது நிதியிலிருந்து அரசாங்கம் நிதி ஒதுக்கவேண்டும். அப்படி ஒதுக்கினால்தான், அந்தக் கோவில்களின் நிர்வாகம் நடைபெறும். கோவில்களில் விளக்கு எரியும்; ஆகவே, அரசாங்கம் இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மலைவாழ் மக்கள் இருக்கக்கூடிய கல்ராயன் பகுதியிலே ஏழை எளிய மக்கள் போராட்டத்தை நடத்தியிருக்கிறார்கள். அந்தப் போராட்டம் நடத்தியதன் நோக்கமே, அரசாங்கம் அவர்களுக்கென போடப்பட்ட திட்டங்களை நிறைவேற்றவில்லை; அதனால் தங்களுக்கு அதன் பலன் சரியாக கிடைப்பதற்குப் பதிலாக, அதிகாரிகளுக்கு சென்று விடுகிறது என்று அந்த அதிகாரிகள் அலுவலகத்திற்கு முன்பு போராட்டத்தை நடத்தியிருக்கிறார்கள். அவர்களுக்கு இன்னும் நிவாரணம் கிடைக்கவில்லை.

அடுத்து, அங்கே விளைகின்ற கடுக்காயை சொசைடி மூலம் கொள்முதல் செய்தார்கள். ஆனால், இன்று தனி நபர் மூலம் அதிகம் கொள்முதல் செய்கிறார்கள். சொசைடியின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டபோது, அவர்களுக்கு நல்ல விலை

கிடைத்தது. இன்று தனி நபர்கள் கொள்முதல் செய்வதால் அவர்களுக்கு சரியான விலை கிடைக்கவில்லை. இதனால் அங்கே உள்ள மலைவாழ் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அரிசன மக்கள் குடியிருப்பிற்காக, வீட்டு மனைகள் கொடுக்கப்பட்டு, அரசாங்கத்திலே இருந்து அவர்களுக்கு ரூ. 3,000 உதவித் தொகையாக கொடுக்கப்படுகிறது. அதிலே ரூ. 2,000 வட்டியில்லாக் கடனாகக் கொடுக்கப்படுகிறது. ரூ. 1,000 மானியமாகக் கொடுக்கப்படுகிறது. எங்கள் பகுதியிலே கிராமீயக் கூட்டுறவு சங்க அதிகாரிகள் இதைக் கொடுக்கிறார்கள். இந்த ஏழை அரிசன மக்கள் மான்யமாக ரூ. 1,000 பெற வேண்டு மென்றால், ரூ. 750 அந்த அதிகாரிகளுக்கே சென்று விடுகிறது. இந்த போக்குவரத்திற்கு வேறு செலவிட வேண்டியிருக்கிறது. இந்த நிலைமைகள் எல்லாம் அங்கேயிருக்கின்றன. இவைகளை யெல்லாம் மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, நில வள மேம்பாட்டுத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். நில வள மேம்பாட்டுத் திட்டத்தில், அங்கே யிருக்கிற நிலங்களை சர்வேயர் அளக்கின்றபோது, அவர்கள் சொந்தமாக எவ்வளவு நிலம் வைத்திருக்கிறார்கள், அவர்கள் அனுபவத்தில் எவ்வளவு நிலங்களை வைத்திருக்கிறார்கள், எவ்வளவு வரப்பைப் போட்டிருக்கிறார்கள் என்பதை வைத்துத் தான், அங்கே நில வள மேம்பாட்டுத் திட்டத்தை அமுல்படுத்து கிறார்கள். அதற்குப் பிறகு, ஒருவர் எனக்கு அந்த நிலம் சொந்தம் என்று சொன்னால், அதற்கு அவர்கள் ஒரு மனு கொடுக்கவேண்டும். அப்படி கொடுக்கின்றபோது, அதையும் சேர்த்து விடுகிறார்கள். அப்படிச் செய்வதை தனிப் பட்டாவாக செய்யவேண்டும். ஆனால், அதைவிடுத்து, கூட்டுப் பட்டாவாக சேர்த்து விடுகிறார்கள். ஆகவே, இந்த நில வள மேம்பாட்டுத் திட்டத்திலே கூட்டுப் பட்டாவைக் கொண்டு வரக்கூடாது என்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் முடியுங்கள். மணி 8-க்கு மேலாகி விட்டது. நாளை காலை மீண்டும் 8 மணிக்கு வர வேண்டும்.

திரு. எஸ். சிவராமன்: அத்தோடு மத்திய அரசிடத்திலே அதிகாரங்கள் குவிக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்கிறோம். ஆனால், தமிழகத்திலே அரசு பொறுப்பிலே இருக்கின்ற ஊராட்சி அதிகாரிகளுக்கெல்லாம், அவர்கள் நிர்வாகம் செய்வதற்கு வேண்டிய அதிகாரத்தை கொடுக்கவில்லை. அதை மனதிலே வைத்துத்தான், கிராம ராஜ்யம்தான் ராம ராஜ்யம் என்று ஜவகர்லால் நேரு அவர்கள் ஊராட்சி ஒன்றியங்களை அமைத்தார்கள். ஆனால் அவர்களுக்கு அந்த அதிகாரம்



கொடுக்கப்படவில்லை. அதனால், அந்த கிராமத்திலுள்ள ஏழை எளிய மக்களுக்கு எந்தவித நன்மையும் கிடைக்கவில்லை என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த முறையை மாற்றியாக வேண்டும்.

இன்றையதினம் கவர்னர் உரையிலே கூர்ந்து பார்த்தால், அதிலே உப்பும் இல்லை, சப்பும் இல்லை என்று சொல்லிக்கொண்டு அதிலே உருப்படியான திட்டம் எதுவுமில்லை என்று சொல்லிக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

(இரவு 8.10)

*திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நான் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைய தினம் நமது தமிழகம் வரலாறு காணாத வறட்சியில் நிற்கிறது என்பதை நாம் அனைவரும் ஒத்துக்கொண்ட ஒன்று. ஆளுங்கட்சியாக இருந்தாலும், எதிர்க் கட்சிகளாக இருந்தாலும் எவ்வளவு தான் பேசினாலும் கடைசியில் வறட்சியும் அவர்களுக்கு அவர்கள் தொகுதியில் இருக்கக்கூடிய தேவைகளையும் சொல்லாமல் எந்த உறுப்பினரும் இந்த அவையில் பேசவில்லை என்பதை நீங்கள் நினைவு கூறவேண்டும். இன்றைக்கு தமிழ்நாட்டில் 20 அம்ச திட்டம் வந்தது. தன்னிறைவு திட்டம் வந்தது. தேசிய வேலைவாய்ப்புத் திட்டம் வந்தது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் வந்தது. கடைசியில் இப்போது சத்துணவுத் திட்டம் வந்திருக்கிறது. அவ்வளவு திட்டங்கள் வந்தும் இந்த நாட்டில் இருக்கக்கூடிய மக்களில் நூற்றுக்கு 57 பேரை வறுமைக்கோட்டிற்கு கீழே நிறுத்தி யிருக்கிறீர்கள். மத்திய அரசு திட்டமானாலும், மாநில அரசு திட்டமானாலும் முழுமையாக மக்களுக்குப் போய்ச் சேரவில்லை என்பதை நீங்கள் இந்த நேரத்தில் கவனிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நாம் எல்லாம் இங்கே இந்தப் பணிகளை முடித்துவிட்டு இன்னும் 4, 5 நாட்களுக்குப் பிறகு நம் ஊருக்குப் போகும்போது தெரியும். அங்கே தண்ணீர் இருக்காது, மாடுகள் மேய்வதற்கு புல் கிடையாது. இது மட்டும் அல்ல, இன்னும் விலைவாசி இன்றைக்கு பயங்கரமாக ஏறியிருக்கிறது. அரிசி விலை 5 ரூபாய்க்கு விற்கிறது. ராகி விலை 1 படி 4 ரூபாய்க்கு விற்கிறது. எந்தக் காலத்தில் ராகி விலை 4 ரூபாய்க்கு விற்று இருக்கிறது? இந்தக் கொடுமையை நாம் எங்கே போய் சொல்வது? இன்றைக்கு வறட்சியைப்பற்றி நாங்கள் கடிதம் எழுதிவிட்டோம். 190 கோடி ரூபாய் கேட்டு நாங்கள் கடிதம் எழுதிவிட்டோம் என்று மெத்தனமாக இருப்பது நல்லது அல்ல. இதனால் தொடர்ந்து ஆட்சி செய்ய முடியாது. ஏன் என்றால் நமக்கு ஏற்கனவே அனுபவம் இருக்கிறது. சென்ற ஆண்டு கூட சில மாவட்டங்களில் வறட்சி வந்தது. 169 கோடி ரூபாய் கேட்டீர்கள். ஆனால் எவ்வளவு கொடுத்தார்கள்? வெறும்

46 கோடி ரூபாய் தான். இன்றைக்கு 190 கோடி ரூபாய் கேட்டு காகிதத்தில் எழுதிவிட்டால் அந்த இந்திரா காந்தி அவர்கள் கொடுக்கமாட்டார்கள். நீங்கள் ஆளுநர் உரையை மத்திய அரசை தாஜா பண்ணும் வகையில் தாக்கல் செய்திருக்கிறீர்கள். அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களின் மனதில் இருக்கக்கூடிய எண்ணங்களை பிரதிபலிப்பதாக இந்த ஆளுநர் உரை அமையவில்லை. இதைத் தான் நாம் கடந்த 3, 4 நாட்களாக பார்த்துக்கொண்டு இருக்கிறோம். நீங்கள் உடனடியாக தமிழகம் முழுவதும் வறட்சி என்று அறிவிக்கவேண்டும். அறிவிக்காவிட்டால் எப்படி மத்திய அரசு உதவி கொடுக்கும்? நீங்கள் வறட்சி என்று அறிவிக்காமல் இந்த மாவட்டத்திற்கு 30 இலட்சம், அந்த மாவட்டத்திற்கு 60 லட்சம் என்று சொல்லி மழுப்புவதன் மூலம் சமாளிக்கலாம் என்று நினைக்கிறீர்கள். இது மக்களை ஏமாற்றக்கூடிய ஒரு நிலமை ஆகும். வறட்சி என்று அறிவித்து, விவசாயிகள் 6, 7 ஆண்டுகளாக வாங்கிய கடனை கட்டமுடியாமல் கடனும், வட்டியும், வட்டிக்கு மேல் வட்டியும் சேர்ந்து இன்றைக்கு எவ்வளவு என்று பல பேருக்கு தெரியாமல் இருக்கிறது. நான் கூட கடன் வாங்கியிருக்கிறேன். 5,000 ரூபாய் வாங்கி 5 வருடங்கள் ஆகிறது. இப்போது எவ்வளவு என்று கேட்டால் 8,000—9,000 கட்டவேண்டும் என்று சொல்கிறார்கள். சாதாரண விவசாயிகளின் கடன்களை முழுவதையும் ரத்து செய்ய வேண்டும்.

இன்றைக்கு விவசாயிகளுக்கு கரும்பு, நெல்லுக்கு கட்டுப்படியான விலையைப் பற்றி ஒரு வார்த்தை கூட இந்த உரையில் நீங்கள் ஏன் சொல்லவில்லை? மத்திய அரசுக்கு விலை நிர்ணயம் பற்றி சொன்னோம் என்றோ அதை அவர்கள் மறுத்தார்கள் என்றோ ஒரு வார்த்தை கூட இந்த உரையில் இல்லை. உரத்தின் விலையையும், ரயில்வேயின் கட்டணத்தையும், சிமெண்டு விலையையும் இரும்பின் விலையையும் ஏற்றிவிட்டார்கள்., அதைப்பற்றி ஒரு வார்த்தை கூட இந்த உரையில் நீங்கள் ஏன் சொல்லவில்லை? இந்திரா காந்தியுடன் பகை வந்துவிடும், மத்திய அரசுடன் பகை வந்துவிடும் என்ற எண்ணத்தில் நீங்கள் தாஜா செய்கிறீர்கள். இந்த நாட்டின் துரதிருஷ்டம் 2 பெரிய கட்சிகளும் இந்திரா காந்தியை ஆதரிக்கும் கட்சிகள். ஆகையால் இங்கே இந்த நிலைமை. எங்களுக்கு கீழ் இருக்கக்கூடிய கட்சிகள் மத்திய அரசை விமர்சிக்கக்கூடிய நிலையில் இருக்கிறது....

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, எங்களைப் பொறுத்த வரையில் இந்திரா அம்மையாரை ஆதரிப்பதும் எதிர்ப்பதும் கொள்கையின் அடிப்படையில் தான். அவசரநிலை பிரகடனம் செய்தபோது இந்திரா அம்மையாரை எதிர்த்தோம். இந்தி திணிக்கப்படும் போது எதிர்த்தோம். அதே நேரத்தில் சில நியாயமான கொள்கையின் அடிப்படையில் ஆதரிக்கிறோம். கண்களை மூடிக்கொண்டு நாங்கள் ஆதரிக்கவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



திரு. என். பழனிவேல் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நீங்கள் இந்திரா காந்தியை ஆதரிப்பதும், எதிர்ப்பதும் கொள்கை அடிப்படையில் என்று சொல்லலாம். ஆனால் இன்றைக்கு மத்திய ஆட்சியில் இருக்கக்கூடிய துணைச் சபாநாயகர் உங்கள் கட்சியை சேர்ந்தவர். பாண்டிசேரியில் நீங்களும் இந்திரா காங்கிரஸும் கூட்டு சேர்ந்து மந்திரி சபை அமைத்து ஆட்சி நடத்துகிறீர்கள்....

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, புதுவையிலே கூட்டணி மந்திரிசபை இருக்கிறது என்றும் துணைச் சபாநாயகர் உங்கள் கட்சியைச் சேர்ந்தவர் இருக்கிறார் என்றும் சொன்னார்கள். மேற்கு வங்கத்திலே கூட — நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன் — அவர்களுடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பார்டி கூட்டணி வைத்திருந்தார்கள். அவர்கள் இடதுசாரியா வலதுசாரியா என்று பார்க்காமல் கொள்கை முரண்பாடுபட்டவர்களோடு கூட கூட்டணி வைத்திருக்கிறார்கள். அப்படியானால் அவர்களோடு ஐக்கியமாகிவிட்டார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் அதற்குள்ளே போக விரும்பவில்லை. நிலைமையைச் சொன்னேன். உங்களுக்கும் நமக்கும் வாதம் வேண்டியதில்லை. நாட்டினுடைய நிலைமை அப்படி இருக்கிறது மத்திய சர்க்கார் சாதகமாக இல்லாமலிருந்தும் தட்டிக்கேட்க மாட்டேன் என்கிறீர்கள், அதைத்தான் சொன்னேனே தவிர வேறு உங்கள் பேரில் ஒன்றும் சொல்லவில்லை. இன்றைக்கு அரிசி கிலோ 5 ரூபாய் விற்றுக் கொண்டிருந்தும் கூட கேரளாவிற்கு தமிழ்நாட்டிலிருந்து மிகப்பெரிய அளவிற்கு கடத்தப்படுகிறது என்ற தகவல் வந்திருக்கிறது. தினமும் விளவங்கோடு பகுதியிலிருந்து கேரளாவுக்கு 10 லாரிகள் முதல் 50 வரை இப்போது போவதாகத் தகவல் வந்திருக்கிறது. மின்சாரத்தைப் பொறுத்த வரையிலே நம்முடைய மாநிலம் பாதிப்பிலே இருக்கிறது. கேரளத்திலிருந்து வாங்கித்தான் கதையை நடத்த வேண்டியிருக்கிறது. நேற்றைய தினம் கேரள மின்சார அமைச்சர் சொல்லியிருக்கிறார். இங்கே உற்பத்தியாகக் கூடிய சிமிண்ட் முழுவதையும் கேரளாவிற்குக் கொடுத்துவிடவேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிட்ட அளவுக்கு மின்சாரம் கொடுக்க வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்கள். இங்கே இப்போது சிமிண்ட் இல்லாத நிலையில் வேலைகள் எல்லாம் ஸ்தம்பித்துப் போயிருக்கின்றன. குடிநீர் வடிகால் வேலைகளும் ஊராட்சி ஒன்றியங்களிலே நடைபெறுகின்ற தன்னிறைவுத் திட்ட வேலைகளும் சிமண்ட் கிடைக்காத காரணத்தால் ஸ்தம்பித்துப் போயிருக்கின்றது. எடுத்த வேலைகளை காண்ட்ராக்டர்கள் அப்படியே போட்டிருக்கிறார்கள். 10, 15 மூட்டை சிமிண்ட் கூட வாங்கமுடியாத நிலைமை இருக்கிறது. மேலும் உள்ளாட்சித் தேர்தலைப் பொறுத்தவரையில் அமைச்சர் அவர்கள் சொல்லிக்

கொண்டே இருக்கிறார்கள். கடந்த 13, 14 ஆண்டுகளாக நடத்தப்படவில்லை. அனைத்திந்திய அண்ணா தி.மு.க. தேர்ந்தெடுக்கப்பட்டு 5 ஆண்டுகள் ஆகிவிட்டன. தேர்தல் என்று அறிவிக்கப்பட்டு நாமினேஷன் எல்லாம் கொடுத்தாகி விட்டது. ஆனால் தேர்தல் நடத்தப்படவில்லை. தேர்தல் நடத்தப்படும் என்று இந்த அறிக்கையிலே சொல்லப்படவில்லை. தேர்தல் நடத்தாததின் காரணமாக நாட்டிலே குப்பை அப்படியே கிடக்கிறது, டிட்ச் எல்லாம் கிடக்கிறது, கக்கூஸ் எல்லாம் கிடக்கிறது, கூப்பிடுடா எம்.எல்.ஏ.வை என்று மக்கள் சொல்கிறார்கள்; அந்த நிலைமைகளை எடுத்துச்சொல்ல எங்களைத்தான் கூப்பிடுகிறார்கள். ஆகவே இந்த ஆண்டாவது தேர்தல் நடத்த வேண்டும், இல்லையென்றால் நமக்கு அழகல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னைப் பல்கலைக் கழகக் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் 5 வது செமஸ்டர் பரிட்சை எழுதி தேர்வு முடிவுகள் வரவில்லை. இதன் காரணத்தினால் அவர்கள் மேல் படிப்புக்குச் செல்ல முடியவில் ல. யாரிடம் போய்ச் சொல்வது என்று தெரியவில்லை. ரிஜிஸ்திராரிடம் போய்ச் சொன்னால் உங்கள் வேலையைப் பாருங்கள் என்று சொல்கிறார்களாம். இதை அரசாங்கம் கவனிக்கவேண்டும்.

என்னுடைய தொகுதியிலே பாலாறு, பரந்தலாறு அணைகட்டுத் திட்டத்திற்கு 6 ஆண்டுகளுக்கு முன்னால் திறப்பு விழா நடத்தப் பட்டது. இன்னும் பாசனத்திற்கு தண்ணீர் விடவில்லை. அந்த அணையை ஒட்டியிருக்கின்ற 15,000, 16,000 ஏக்கருக்கு தண்ணீர் வரவில்லை. பாசனம் பெறக்கூடிய 30 ஆயிரம் ஏக்கர் இருந்தாலும் வடிகால் வெட்டியும் தண்ணீர் திறக்காமல் இருக்கிறது. கேட்டால் பணம் இல்லை என்கிறார்கள், வேலை இன்னும் குறை இருக்கிறது என்று சொல்கிறார்கள்.

(இரவு 8–20)

முடிந்த அளவிற்காவது தண்ணீர் எடுத்துவிட்டால் விவசாயி களுக்கு உதவிகரமாக இருக்கும். அதையும் செய்யாமல் இருக்கிறீர்கள்.

அடுத்து நான் ஒன்றை சொல்கிறேன். அரிசனங்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் மிகவும் ஸ்தம்பித்த நிலையில் இருக்கிறது. நில ஆர்ஜிதம் செய்தால் கோர்ட்டிற்கு போகிறார்கள். நேற்று கூட அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 401 வழக்குகள் கோர்ட்டிலே இருப்பதாகச் சொன்னார்கள். இந்த நிலை இருந்தால் தாழ்த்தப்பட்ட ஏழை மக்களுக்கு என்றைக்கு நிலத்தை எடுத்துக் கொடுக்கப் போகிறோம்? அதை இந்த அறிக்கையில் சொல்லவில்லை. தமிழகத்திற்கு ஒன்பது மாத காலமாக அரிசி அனுப்பவில்லை என்று சொல்கிறீர்கள்



அதெல்லாம் மிகவும் எதார்த்தமான உண்மை. நாங்களும் ஒப்புக்கொள்கிறோம். ஆனால் உங்களுடைய அறிக்கையில் அதை ஏன் சொல்லவில்லை. (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 1–2–1983 அன்று காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 8.21 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

—எதுவுமில்லை—

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

15. பொதுப்பணித் துறை முன்னாள் தலைமைப் பொறியாளர் திரு. மணவாளன் அவர்கள் மீது எழுப்பப் பெற்றுள்ள உரிமை மீறல் பிரச்சினை பற்றிய உரிமைக் குழுவின் அறிக்கை.

16. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 6-9-1982 முதல் 10-9-1982 முடிய உள்ள நடவடிக்கைகளின் சுருக்கக் குறிப்பு.

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம் சென்னை-600 008. 135913

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS, IN MADRAS CITY.

1 Account Test. Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 84C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

## IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tirchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46D, ld Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A. Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Center, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

## IN OTHER STATES.

1 Jain Book Agency. New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications. Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagohi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-11.

---

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEPARTMENT PUBLISHED UNDER RULES 303 AND 306 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES (CORRECTED UPTO 5TH NOVEMBER 1979) AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.